161979



சவுலினுடைய பார்வையில் இந்தக் கலிலேயாக்கடல் மகா பாசாங்குக் காரனாகிய இயேசு சுற்றித்திரிந்த இடமாய் முன்னே தோன்றினது. இப்பொழுதோ அது தம் புதிய எஜமானன் அடிக்கடி பிரயாணம் பண்ணித் திருவுபதேசம் பண்ணியருளிய புண்ணிய பூமியாகத் தோன்றினது.

சமாரியாவையும் யூதேயாநாட்டு மலைகளையும் தாண்டித் தெற்கே வந்தார். எருசலேமின் மதில்களைக் கண்ணுற்றார். இம்மதில்களில் இருந்துதான் ஸ்தேவான் கல்லெறியுண்டு கொலைசெய்யப்படுவதை இவர் முன்னே பார்த்துக்கொண்டிருந்தது. ரபிகளுக்கு மத்தியில் கமாலியேல் சாஸ்திரி மகிமையாய் உட்கார்ந்திருந்த ஸ்தானமாகிய தேவாலயத்தின் உப்பரிகைகளும் இவருக்குமுன் எழும்பின. பக்தி வைராக்கியமுள்ள யூதர்களுக்குள்ளே தாம் எழுப்பிவிட்ட மூர்க்கா வேசம் இப்பொழுது தமக்கு விரோதமாகவே திரும்பிக்கொள்ளும் என்பது சவுலுக்கு நன்றாய்த்தெரியும். ஆனால் நசரேயராகிய சீஷர்கள் தம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்று சவுல் நினைக்கவில்லை. ஆயினும் அவர் எதிர்பார்த்ததற்கு விரோதமாக இது நடந்தது.

[illegible]கோய்கள் சவுலுக்குப் பயப்பட்டது இயல்புதானே. சவுலி யாத வன்குணமும் அவர் சீஷர்மேல் கொண்டிருந்த மூர்க்கவெறியும் போகும் [illegible]க்குத் தெரிந்தவைகளே. 'இந்தச் சவுல் நமது வகுப்பைச் சவுல்[illegible]ட்டதாகச் சொல்லுகிறான். தான் ஞானஸ்நானம் பெற்றுப் கொ[illegible]வியைத் தனக்குள் உடைய ஒரு சீஷனாக இருப்பதால் புறமாய்த்[illegible]த்தோடு சேர்ந்துகொள்ளும்படி நம்மைக் கேட்கிறான். ஆன்று [illegible]துவும் ஒரு தந்திரமாய் இருக்கமாட்டாதோ? நமது ஜீவியத்தை வேவுபார்த்து நம்மை நிர்மூலம்பண்ணுகிறதற்கு ரூபகாரம் கண்டு பிடிக்கும்படி சவுல் செய்கிற தந்திரமாய் இருக்கமாட்டாதோ இது?' இப்படிப்பட்ட சந்தேகங்கள் சீஷர்களுக்குள்ளே எழும்பின. ஆகை யால் அவர்கள் சவுலோடு நெருங்கவில்லை. அவரைப்பற்றி அவர்க ளுக்குப் பயம் அதிகம். பரிசேயர் அவரைக் கைவிட்டுவிட்டார்கள். நசரேயரும் அவரைச் சேராதுநின்றார்கள். தமது எஜமானனாகிய கிறிஸ்து ஒருகாலத்தில் நின்றதுபோல, சவுலும் இப்பொழுது தன்னந் தனியே நின்றார்.

சீப்புரு தீவாராகிய யூதர் ஒருவர் எருசலேமில் இருந்தார். அதிக சாமர்த்தியமும் பொறுமையும் உள்ளவர். சவுலிலும் வயதில் முதிர்ந்த வர். அவர் பெயர் பர்ணபா. நசரேயமதத்தில் அவர் மிக்க அபிமான முடையவராகையால், அவர் தமது சொந்த நிலமெல்லாவற்றையும் விற்று ஏழைகளாயிருந்த சீஷர்களுக்கு உதவிசெய்யும்படி அதன் கிரயத்தைப் பொதுப்பணத்தோடு சேர்த்துவிட்டவர். எருசலே

விருந்த மற்ற ரசரேயர்களிலும் விசாலமுள்ள எண்ணங்கள் உள்ளவர். ஆகையால் பர்ணபா சவுலினிடத்துக்குப் போய் அவரோடு பேசினர். சவுல் உண்மையாகவே இயேசுவின் சீஷனுய்விட்டார் என்பதில் ஐயம் ஒன்றுமில்லை என்ற இப்பேச்சின் மூலமாகப் பர்ணபா தன் முய் உணர்ந்தபடியால் அவர் அவரைப் பேதருவினிடத்துக்கும் மற்ற அப்போஸ்தலரிடத்துக்கும் கூட்டிக்கொண்டு போனர்.

அவர்களிற் சிலர் சவுலைச்சுற்றிலும் நின்றகொண்டும் வேறுசிலர் உட்கார்ந்துகொண்டும் பிரகாசமுள்ள முகத்தோடு சவுல் தங்களுக்குத் தமது விருத்தாந்தத்தைச் சொல்லக் கேட்டார்கள். தமஸ்கு வுக்குப் போகிறவழியில் இயேசு தம்மோடு பேசினதும், தாம் தமஸ் குவிலே இயேசுவைக்குறித்துப் பேசினதும், யூதர்கள் தம்மைப் பிடித்துக் கொல்லும்படி பதிவிருந்ததுமான இப்படிப்பட்ட விஷயங் களை யெல்லாம் அவர் அவர்களுக்குச் சொன்னர். பேதரு, யோவான், யாக்கோபு முதலியவர்கள் சவுல் பேசுகிறதைக் கேட்டபொழுது, அவருடைய முகக்குறிப்பினலும் கண்ணின் தோற்றத்தாலும் தொனி விசேஷத்தாலும் அவர் இயேசுவின் அடியார் என்பதை அறிந்து கொண்டார்கள்.

ரோமர்களுக்குள் சிலர்களுடைய அடிமைகளுக்குச் சூடுபோட்டிருக்கும். இது அவர்கள் இன்னின்ன எஜமா குரியவர்கள் என்பதற்கு அறிகுறி. இதைப்பற்றிச் சந்தே பவே மாட்டாது. அதுபோலவே சவுலும் இயேசுவுக்கு என்பதற்கு அவர் முகக்குறியும் சொல்லுமே சாட்சி. இ தும் யாதொரு ஐயமுமில்லை. 'இயேசுக்கிறிஸ்து கா அச்சடையாளங்களை என் சரீரத்தில் தரித்துக்கொண்டிருக்கிறேன்' என்று அவரே பிற்காலத்தில் சொன்னர்.

தமக்குத் தண்பம் உண்டாகுமே என்ற நினைத்துச் சவுல் சும்மா இருந்துவிடவில்லை. ஸ்தேவானுக்கு விரோதமாகத் தாம் எழுப்பி விட்ட அதே ஜனங்களிடத்தில் போக்குவரவு செய்தார். ஸ்தேவா னுக்கு விரோதமாகத் தாம் தர்க்கம்பண்ணின ஸ்தலமாகிய ஜெபா லயங்களுக்குள் அவர் இப்பொழுது பிரவேசித்து இயேசுவுக்காக வெகு சாமர்த்தியமாய்ப் பேசினர். இதைக் கேட்டவர்கள் முதலா வது ஆச்சரியப்பட்டார்கள். அப்பால் அவர்களுடைய ஆச்சரியம் கோபமாகவும், கோபம் பகையும் மூர்க்கமுமாகவும் மாறினது. மூர்க் காவேசங்கொண்ட யூதர்கள் சவுலை அந்தரங்கமாய்ப் பிடித்துச் சிறைச் சாலையில் அடைத்துவைக்கவும், அவரைக் கொலைசெய்யவும் ஆலோ சனைசெய்து அப்படியே தீர்மானமும் பண்ணினர்கள். அவர்களில் யாரோ ஒருவன், ஒருவேளை சவுலினுடைய பழைய சகபாடிகளில்

ஒருவன், தேவாலயத்தில் இவர்கள் சவுலைக் கொலைசெய்கிறதற்குச் சதியாலோசனை செய்கிறதை அறிந்து, சவுலினுடைய ஜீவன் அபா யத்திலிருக்கிறது என்பதைச் சீஷர்களுக்கு அறிவித்தான்.

இப்பொழுது என்ன செய்வது? சீமோன், பர்ணபா, சவுல் என் பவர்களும் வேறு சிலரும் கூடி ஆலோசனை செய்தார்கள். சிரியா வின் தலைநகரியாகிய தமஸ்குபட்டணமும் பலஸ்தீனுவின் தலைநகரி யாகிய எருசலேமும் இப்பொழுது சவுலுக்கு விரோதமாய் அடை பட்டுப்போயின. கலைஞானியாகிய சவுல், சாதாரண கிராமவாசி களோடு பேசுகிறதற்குப் பேதருவைப்போல தகுதியுடையவரல்ல. ஆகையால் சிறிதுகாலம் அவர் அந்த நாட்டைவிட்டு வெளியேசெல்ல வேண்டும். தரிசுபட்டணத்துக்கு அவர் போவது நல்லது என்ற தீர்மானித்தார்கள்.

இந்தத் தீர்மானத்துக்கு அவர்கள் வந்தவுடனே தாங்களும் சவு லோடு கொஞ்சதூரம் பிரயாணம் பண்ணுகிறதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தார்கள். தங்களுடைய தோல் துருத்திகளையும் சாப்பாட்டுப்பைகளையும் நிரப்பிக்கொண்டு, தங்கள் அங்கிகளையும் தடிகளையும் எடுத்துக்கொண்டார்கள். ஒருவரும் தங்களைக் கவனி யாதவண்ணம் அவர்கள் சவுலைக் கூட்டிக்கொண்டு, தமஸ்குவுக்குப் போகும் வாசலைக் கடந்து வடக்கு ரஸ்தாவில் சென்றனர். இவ்வாறு சவுல் இரண்டாந்தரம் தமது சத்துருக்கள் கையினின்று தப்பினர்.

கொஞ்சதூரம் வடக்கு நோக்கிச்சென்ற ரஸ்தாவானது இடது புறமாய்த் திரும்பி கடற்கரைக்குநேரே சென்றது. ஒரு சத்திரத்தில் அன்று மத்தியானம் தங்கினர்கள். ஐம்பது மைல்தூரம் இவர்கள் கடந்து, வழிநெடுக இனிவருங்காலத்தில் தாங்கள் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றியே பேசிக்கொண்டு சென்றார்கள். அவர்கள் மலை நாட்டிலிருந்து இறங்கிப் பெரியகடல் மேற்கே பிரகாசித்துக்கொண் டிருக்கிறதைக் கண்டவுடன் பர்ணபா தமது கையைச் சவுலின்தோள் மேல் வைத்துத் தாங்கள் இருவரும் சுவிசேஷ ஊழியத்தின் பொரு ட்டு அக்கடலில் பிரயாணஞ்செய்து செல்லும்படியான காலம் நிச் சயமாகவே வரும் என்ற கூறியிருப்பார்.

மேட்டுப்பாங்கான நிலத்தில் ஏரோது ராஜா கட்டின பளிங்கு ஆலயம் தங்களுக்கு முன் எழும்புகிறதைப் பவுலும் அவருடைய சிநேகிதர்களும் கண்டார்கள். இதுதான் செசரியா பட்டணம், பலஸ்தீனு நாட்டில் ரோம ராஜாங்கத்தின் இராஜதானி. இப்பட்ட ணத்துத் துறைமுகத்துக்குப் பக்கத்தில் சவுல் தங்கினர்.

Life Vacant and Life Filled

Four Bible Studies

காலி ஜீவியமும், நிரப்பப்பட்ட ஜீவியமும்

(தொடர்ச்சி)

II. கடவுள் மனுஷருடைய ஜீவியத்தை நிரப்புவது.

எபேசியர் 3^{14-19} சவனமாய் வாசிப்போமாக. 'வேண்டிக்கொள்ளுகிறேன்' (19-ம் வச.) வெறுமையான நமது ஜீவியம் நிரப்பப்படுவதில் வேண்டுதலே சாதாரணமான ஆரம்பம். நாமாவது நமக்காக மற்றவர்களாவது பிரார்த்தனை செய்வார்கள். 'உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டும்' (19-ம் வச.) நீங்கள் உங்கள் புண்ணியத்தால் சம்பாதிக்கவேண்டும் என்பது அல்ல. நாம் பிரயாசப்படவேண்டியது அவசியமாயினும், நம்முடைய பிரயாசமல்ல, கடவுளின் அநுக்கிரகமே முக்கியம். கடவுள் எபேசியருக்கு எவைகளை அநுக்கிரகம் பண்ணவேண்டும் என்று பவுல் வேண்டிக்கொள்ளுகிறார்? ஒவ்வொன்றாகப் பார்க்கக்கடவோம்.

(a) வல்லமையான பலத்தை அவர்களுக்காகக் கேட்கிறார். எதில் பலம் வேண்டும்? (16-ம் வச.) நம்முடைய உள்ளான மனுஷன் அடிக்கடி பலமானதை விரும்பும். அதற்குக் குறைவு நல்ல விருப்பமல்ல, பலமே. பவுல் அனுபவத்தில் அதைத் தெளிவாயறிந்திருந்தார் (ரோம. 7^{22-24}). எதினால் பலம் வரவேண்டும்? (16-ம் வச.) கடவுளுடைய ஆவி கொடுக்கிற வரங்களில் ஒன்று என்னவென்றால், பலமான உள்ளம் பலப்படுகிறது. திருக்கமான மனது பெறுகிறது, ஜெயமுள்ள புதுச்சக்தி ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. பெரிய பரிசுத்தவான்களுக்கு மாத்திரமல்ல, சாதாரணமான கிறிஸ்தவர்களுக்கும் இது தெரியவரவேண்டும் என்பது பவுலின் கருத்து. (எபே. 5^{18} வாசித்துச் சிந்திக்க.) மதுபான வெறி தேவலமாயிருந்தாலும், பவுல் அதை ஆவியினால் நிறைகிறதற்குத் திருஷ்டாந்தமாக உபயோகிக்கிறார். குடிவெறியாயிருக்கிறவன் தன்னை மறந்து ஒரு பொய்ப்பலத்தையும் சந்தோஷத்தையும் உணருகிறபடியே, கிறிஸ்தவன் ஆவியினால் மெய்ப்பலத்தையும் சந்தோஷத்தையும் பெற்றுக் கொண்டு சந்தோஷப்படுவான்.

(b) விசுவாசத்தால் கிறிஸ்து அவர்களுடைய இருதயங்களில் வாசம்பண்ணுவது. லூக். 11-ல் நாம் உவமையில் கண்ட அந்த நிலைமைக்கும் இந்த நிலைமைக்கும் எவ்வளவு வித்தியாசம். இந்த

ஜீவியமாகிய வீடு காலியல்ல, இதற்குக் குடித்தனமுண்டு, பிசாசுக்கு இடமில்லை. கிறிஸ்துதான் இந்த வீட்டில் குடிகொண்டிருக்கிறார் என்ற அறிந்த பிசாசு கிட்டவரத் துணிவானா?

கிறிஸ்து என்னை இகழாமல் என் நெஞ்சில் வாசம்பண்ணுவாரா? விசுவாசித்தால் வாசம்பண்ணுவார். (17-ம் வச.) எவ்வளவு பலமாய் அவரை நம்புவோமோ, அவ்வளவு பரிபூரணமாய் அவர் வந்து நம்முடைய ஜீவியங்களை நிரப்புவார். அப்போது நமது ஜீவியம் பூரண ஜீவியமுமே. 'அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்' (கொலோ. 2^{10}).

(c) அன்பே அவர்கள் ஜீவனுடைய வேரும் அஸ்திபாரமுமாய் இருக்கவேண்டுமென்று கேட்கிறார். (17-ம் வச.) மரம் வேரிலும் வீடு அஸ்திபாரத்திலும் ஊன்றியிருக்கிறதுபோல, மெய்க்கிறிஸ்தவன் அன்பில் ஊன்றிநிற்கிறான். நம்முடைய ஜீவியத்தின்கீழ் என்ன உண்டு? எதிலிருந்து வளருஞ் சக்தியை உட்கொள்ளுகிறோம்? எதின்மேல் நாம் எல்லாவற்றையும் கட்டுகிறோம்? கிறிஸ்தவர்கள் ஆழமும் ஜீவனுமுள்ள அன்பிலிருந்தே வளரவேண்டும் என்பதும், அசைக்கக்கூடாத பலமான அன்பிலே நிலைக்கவேண்டுமென்பதும் பவுலுடைய கருத்து. வார்த்தைக்கும் நினைவுக்கும் செய்கைக்கும் கீழே அன்பு எப்போதும் ஆதாரமாக இருக்கவேண்டும்.

(d) அறிவுக்கெட்டாத கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ளுவது. (18-ம் வச.) கிறிஸ்து நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை அறிவதற்கு வல்லமைவேண்டும். பலவீனக் கிறிஸ்தவன் இதை அறியமாட்டான்; இதை அறிந்தால் அவன் எப்படிப் பலவீனனாயிருக்கக்கூடும்? அந்தப் பாடம் படித்து முடித்தேன் என்று யாராலும் சொல்லக்கூடாது. கடல்போன்ற அன்பின் சில துளிகளை மாத்திரம் இதுவரைக்கும் அறிந்துகொண்டோம். ஜீவகால முழுவதிலும் மறுமையிலும் நாம் எப்போதும் கிறிஸ்துவின் அன்பைப் புதிதாகக் கண்டுபிடித்துக்கொண்டிருப்போம். துன்பம் வரும்போது அந்த அன்பு நின்றுவிட்டது என்று நினைப்போமா? (ரோம. 8^{35} பார்க்க.)

(e) தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படுவது. பவுல் ஆவியின் மலைச்சிகரத்தில் நின்று இவ்வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவைகளின் அர்த்தம் கிட்டநுட்பமாய் விளங்குவது கஷ்டம். பரிபூரணமுள்ள மனிதன் எப்படி இருக்கவேண்டும் என்று கடவுளுடைய எண்ணத்தின்படி நீங்கள் பரிபூரணராய் இருப்பீர்களாக என்பது ஒரு சாஸ்திரியாருடைய பொழிப்புரை. ஒன்று நமக்கு மெத்தத் தெளிவாயிருக்கிறதல்லவா? கிறிஸ்தவனாயிருப்பது அதிக

சாதாரணம் என்று நாம் நினைத்தது தப்பிதம். கிறிஸ்தவ ஜீவியம் உயர உயரச் சென்று, கண்ணுக்கு எட்டாத தூரத்துக்கு ஏறி, கடவுளுடைய பரிபூரணத்தைச் சேரும் மட்டும் நிற்கமாட்டாது. அங்கே போய்ச் சேரும்போது, அது நிறையப்பட்ட ஜீவியம்.

நாம் இதை எல்லாம் வாசிக்கும்போது, 'இதெல்லாம் கோத்தி யான வார்த்தைகள், இது எங்கள் அநுபவத்தில் உண்மையல்ல' என்று சொல்லுவோமா? பெரிய பரிசுத்தவான்களுக்கு இப்படி நேரிட்டாலும், எங்களுக்கோ இது நேரிடாது என்று நினைக்கி றோமா? அப்படியானால், பவுல் எப்படிப்பட்டவர்களினிமித்தம் இவைகளை எல்லாம் வேண்டுகிறார் என்று $4^{25,26,28,29}$ இல் பார்க்கக் கடவோம்.

இந்த ஜனங்கள் பொய்சொல்லக் கூடியவர்கள், கோபத்தில் பாவஞ்செய்யக்கூடியவர்கள், திருடக்கூடியவர்கள், கெட்டவார்த்தை பேசக்கூடியவர்கள். இப்படிப்பட்டவர்கள் உள்ளான மனுஷனில் பலப்படக்கூடும். கிறிஸ்துவை அவர்கள் நம்பும்போது, அவர்க ளுடைய இருதயங்களில் வாசம்பண்ணுவார். அவர்கள் அன்பில் வேரூன்றிக் கிறிஸ்துவின் அளவற்ற அன்பை அறிந்துகொள்ள வல் லவர்களாகலாம். அவர்களும் பரிபூரணராகலாம்.

நாமே இதை நமக்காகவும் நம்முடைய சிநேகிதருக்காகவும் கேட் கிறதற்குத் தடை என்ன?

பிரார்த்தனை. யேசுகிறிஸ்துவின் பிதாவே, உம்முடைய ஆவி யால் எங்கள் உள்ளான மனுஷனைப் பலப்படுத்தும். கிறிஸ்து எங்கள் இருதயங்களில் வாசமாயிருப்பாராக! நாங்கள் அன்பில் வேரூன்றி, சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னவை என்று உணருவோமாக. அறிவுக்கெட்டாத அந்த அன்பை நாங்கள் அறிந்து கொள்ள வல்லவர்களாகி, உம்முடைய சகல பரிபூரணத்தாலும் நிறை யப்படும்படி அநுக்கிரகஞ்செய்யும். ஆமென்.

III. ஊழியம் நிறைந்த ஜீவியம்

வெறுமையான ஜீவியத்துக்கிருக்கிற அபாயத்தை முதல் நாளில் கண்டோம். மற்றவர்களுக்கு எவ்வளவு உதவி தேவையாயிருக்கிற தென்று யோசித்தால், நாம் வெறும் ஜீவியம் பண்ணுவது அசாத்தியம். காலம்போக்கத் தெரியாதவர்கள் தங்கள் உடன்மனிதருடைய கஷ் டங்களைக் கவனியாதவர்களே.

தம்மைப் பின்பற்றுகிறவர்கள் ஒரு வேலை, கிரியை, செய்ய வேண்டுமென்பது நமது ஆண்டவருடைய கருத்து. எவ்வளவு வேலை,

எப்படிப்பட்ட வேலை? யோவா. 14^{12} வாசித்துப் பதில் சொல் லுக. இயேசு செய்த கிரியைகள், எவை, எவ்வளவு? 13-ம் வசனத் துக்கும் 12-ம் வசனத்துக்குமுள்ள சம்பந்தத்தைக் கவனிக்க. எதைச் செய்கிறதினால் பெரிய கிரியைகளை முடிப்போம்? அவைகளைச் செய்தால் யார் மகிமைப்படுவார்?

இது வேறே விதமாய் யோவா. 15^{8}-ல் சொல்லியிருக்கிறது. தச்சன் ஒரு மேசை செய்கிறதற்கும் மரம் கனிகொடுக்கிறதற்கும் வித்தியாசம் என்ன? நம்முடைய கிரியைகள் ஒருவேளை செயற்கை; நாம் கொடுக்கும் கனியோ இயற்கை. ஆண்டவருடைய ஆவி நமக் குள் இருக்கும்போது நல்ல கிரியைகளைச் செய்யாமலிருக்க முடி யாது. பவுலைத் திருஷ்டாந்தமாக வைத்து, ஊழியத்தைப்பற்றி அவ ரிடத்தில் கொஞ்சம் கற்றுக்கொள்ளக்கடவோம். ரோம. 15^{18}-யும் ஒரு நேசப்படத்தையும் பார்க்க. எவ்வளவு வேலையைச் செய்து முடித்தார்! இது யோவா. 14^{12}-க்கு நல்ல வியாக்கியானமல்லவா? 2 தெச. 3^{8}, 2 கொரி. $11^{27,28,29}$ முதலிய சில வாக்கியங்களைச் சித் தித்து, பவுல் அப்போஸ்தலர் ஒருநாளைக் கழித்தது எப்படி என்று யோசிக்க. ஜெபம் பண்ணுவதில் அவர் செலவழித்த நேரத்தை மறக்கக்கூடாது. ரோம. 1^{9}, எபே. 1^{16} முதலிய அநேக இடங் களைப் பார்க்க. அவருடைய ஜீவியத்தில் வெறுமையான நேரம் கிடையாது.

இப்படி இடைவிடாமல் ஊழியஞ்செய்யவும் பிரார்த்திக்கவும் அவரை ஏவின சக்தி என்ன? பிரசங்கம் பண்ணுகிறது பிரியம் என்பதா? பிரயாணம் பண்ணுவது பவுலுக்குச் சந்தோஷமானதினாலா, ஆறுகளால் வந்த மோசங்களையும், கள்ளரால் வந்த மோசங் களையும், பட்டணங்களில் உண்டான மோசங்களையும், வனாந்தரத் தில் உண்டான மோசங்களையும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களையும் சகித்தார்? (2 கொரி. 11^{26}.) அதினாலே அல்ல. 2 கொரி. 5^{14}-ஐப் பார்த்தால் பவுலை ஏவினது என்னவென்று பார்ப்போம். கிறிஸ்து காட்டின அன்பு அவரை நெருக்கினது. இயேசு சிலுவையில் காட்டின அன்பு கண்ணுக்கு முன்பாக இருக் கும்போது பவுலால் சும்மா இருக்க முடியவில்லை. அது அவரைக் கட்டாயப்படுத்தினது. சுவிசேஷங் கூறுதிருந்தால் பவுலுக்கு ஐயோ. (1 கொரி. 9^{16}.) தம் உடன்மனிதருடைய கஷ்டங்களைக் கவனித்ததால் பவுல் சுவிசேஷங்கூறவில்லை. அவர்களுக்குக் கஷ்ட மிருந்தது மெய்யாயினும் அதல்ல முக்கியமாய்ப் பவுலை நெருக்கி னது. நம்மையும் நம்முடைய உடன்தேசத்தாருடைய கஷ்டங்கள் எவ்வளவும், கிறிஸ்துவின் அன்பே முதல்முதல் நெருக்கினால் நம்

முடைய ஊழியம் மரணபரியந்தம் நிற்காமல் நடக்கும். இவ்வளவு பெரிய ஊழியஞ் செய்கிறதற்கு ஞானமும் தேகபலனும் அடிக்கடி பணமும் தேவை. அந்தப் பெரிய பிரயாணங்களைப் பணமில்லாமல் பண்ணியிருக்கமாட்டார்.- எனக்குப் பணமில்லை என்று சொல்லி அவர் அவசியமான ஏதோ ஒரு வேலையைச் செய்யாமல் விட்டதாக வாசிக்கிறோமா? அதற்கு நேர்விரோதமாய் 2 கொரி. 9^8 பார்க்க. 'எல்லாவற்றிலும்,' 'எப்பொழுதும்,' 'சம்பூரணம்,' 'சகலவித,' 'பெருக' என்கிற வார்த்தைகளை விசேஷமாய்க் கவனிக்க. இதிலிருந்து நாம் இன்றைக்குக் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமில்லையா? கிறிஸ்துவுக்கென்று ஒரு வேலையைச் செய்யும்போது, அதற்கு வேண்டிய பணத்தையும் சகாயத்தையும் முதல்முதல் ஆண்டவரிடத்தில் கேட்கிறோமா? நமக்கு வேண்டியதெல்லாம் அவரிடத்தில் இருக்கிறது.

பலனைப்பற்றி அவருக்கு என்ன நம்பிக்கை? 1 தீமோ. 4^{10} பார்க்க. ஜீவனுள்ள தேவன் இரட்சகராயிருக்கிறபடியால், கிறிஸ்துவுக்கென்று நாம் செய்யும் வேலை இரட்சிப்பாகிய பலனைத் தராமல் போகமுடியாது. அப்படியே 1 கொரி. 15^{58}-ஐ வாசித்து, 'ஆகையால்' என்ற பதத்துக்கு அங்கே அர்த்தம் என்னவென்று முழு அதிகாரத்திலிருந்தும் கண்டுபிடிக்க. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார், ஆகையால் கர்த்தருக்குள் நாம் படும் பிரயாசம் விருதாவாயிராது. நன்மை செய்வதில் மற்றவர்கள் சோர்ந்துபோனாலும் (2 தெச. 3^{13}), கிறிஸ்து எழுந்துவிட்டார் என்று அறிந்து பவுல் எப்போதும் கர்த்தருடைய கிருபையில் உறுதியுள்ளவராகவும் பெருகுகிறவராகவுமிருந்தார்.

பிரார்த்தனை. ஆண்டவரே, இதுமட்டும் நாங்கள் அற்ப கனி கொடுத்ததற்காக எங்களை மன்னியும். கிறிஸ்துவின் அன்பைக் காட்டி எங்களை ஊழியத்துக்குக் கட்டாயப்படுத்தி, நாங்கள் செய்யவேண்டிய அந்த ஊழியத்துக்கு அவசியமான எத்தனங்களைத் தாரும். உயிர்த்தெழுந்த இரட்சகரோடு நாங்கள் உடன்வேலையாட்களாகிப் பலனுள்ள பணிவிடை செய்யும்படி அருள்புரியும். கடைசியில் நாங்கள் நல்ல போராட்டத்தைப் போராடினபிறகு, எங்களுக்கு நீதியின் கிரீடத்தைத் தந்தருளும். ஆமென்.

IV. நிறைந்த ஜீவியத்தில் உண்டாகும் சில பலன்கள்.

1. மனசு நிரப்பப்படுவது. பிலிப். 4^8 பார்க்க. இவைகளை எல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தால், கெட்ட நினைவுகளுக்கு என்ன இடமுண்டு? கெட்ட நினைவுகளைத் தடுத்தலதற்கு இதுவே உத்தம வழி. கெட்ட நினைவுகளைக் குறித்து லூத்தர் சொன்ன ஒரு நல்ல

வார்த்தையை ஞாபகத்தில் வைக்கக்கடவோம். பட்சிகள் தலைக்கு மேலே பறக்காதபடி அவைகளைத் தடுக்கமுடியாவிடினும் அவைகளைத் தன் தலைமயிரில் கூண்டுகட்டுகிறதற்கு இடங்கொடுக்கவேண்டியே அவசியமில்லை. அழகியவைகளை நாம் சிந்திக்கச் சிந்திக்க, கடையாக அசங்கியமானவைகளைச் சிந்திக்க முடியாதவர்களாவோம். மனதில் வசிக்கும் உண்மைகள், அங்கேயுள்ள பொய்களை எல்லாம் மனதிலிருந்து தள்ளும். தத்துவ சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், சரித்திர சாஸ்திரம் எல்லாம் இவ்வாக்கியத்தில் அடங்குமல்லவா? கிறிஸ்து வசிக்கும் மனதுக்கு இவைகளெல்லாம் அலங்காரமாக இருக்கக்கூடும். கிறிஸ்தவன் மற்றவர்களைக்காட்டிலும் சிந்திக்கிறவனாயிருக்கவேண்டும். அவனுக்குத்தான் சிந்திக்கவேண்டிய எவ்வளவோ பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது!

2. தனக்குத் தேவையானதைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைதல். 23-ம் சங்கீதம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு அருமையான பொருளுள்ளதாயினும், கிறிஸ்துவிலிருந்து புது ஜீவனைப் பெற்றுக்கொண்டவனுக்கே அதின் அருமை நன்றாய்த் தெரியும். யெகோவா என் மேய்ப்பர், எனக்குக் குறைவில்லை என்று கிறிஸ்தவன் பூரண அர்த்தத்தோடு சொல்லுவான். மறுபடியும் பவுலண்டைபோய் இதைக் கற்றுக்கொள்ளலாம். 'எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது.' (பிலிப். $4^{18,19}$ கவனமாய் வாசிக்க.) பவுல் இதை எழுதினபோது எங்கே இருந்தார்? யார் உதவி அனுப்பியிருந்தார்கள்? அதை அவர் எதற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார்? 'நான் திருப்தியடைந்திருக்கிறேன்' என்பதைக் கவனிக்க. எப்பாப்பிரோதித்து பவுலண்டை சில லட்சம் ரூபாய் கொண்டுவந்திருந்தானா? பவுல் தனக்காகக் கேட்கிறது அதிகமல்ல, அன்னவஸ்திரந்தானே. திருப்தியடைவதற்கு இரண்டு வழியுண்டு. இன்னும் அதிகமதிகமான பொருளைப் பெற்றுக்கொள்ளலாம், அல்லது சிலவேளை நமக்கு வேண்டுமென்று நாம் கேட்கிறதைக் குறைக்கலாம். பவுலுக்கு எது வாஸ்தவமாய் அவசியமோ, அதெல்லாம் அவருக்கு வந்தது. அப்படியே ஒவ்வொரு விசுவாசிக்கும் வரும். உங்களுக்கு இஷ்டமான ஒவ்வொன்றையும் கொடுப்பார் என்று 19-ம் வாக்கியத்தில் எழுதியிருக்கிறதா? உங்கள் தரைவையெல்லாம் நிறைவாக்குவார். பிலிப்பியர் இதற்குமுன் செய்ததை மறக்கக்கூடாது. (18-ம் வச.) கடவுள் சகல குறைவுகளையும் நிறைவாக்கக் கூடியவர் என்று பவுல் என் இவ்வளவு உறுதியாய் நம்புகிறார்? (19-ம் வச. பார்க்க.) கிறிஸ்துவைக் கொடுக்கக்கூடிய ஐசுவரியமுள்ளவர் மற்றச் சகல சாதாரணமான நன்மைகளையும் இலேசாய்க் கொடுப்பார்.

பவுல் நம்மைப்போல ஏழையாயினும், தான் ஏழை, ஏழை என்று துக்கிக்கிறதற்குப் பதிலாய், அளவில்லாத பொக்கிஷத்தின் சாவி தனக்குக் கையில் கொடுக்கப்பட்டதாக உணர்ந்தார்.

3. பரிசுத்த ஜீவியத்தில் விர்த்தியாதல். ஒரு கூட்டல் கணக்கை 2 பேது. 1[5,6] இல் பார்க்க. ஜாக்கிரதை, விசுவாசம்; தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு, இவைகளையெல்லாம் நம்முடைய நடக்கையில் கூட்டவேண்டும். நம்முடைய சொந்த ஜாக்கிரதையால் பிரயாசப் பட்டுக் கூட்டவேண்டுமென்று முதலில் தோன்றினாலும், 3-ம் வசனத்தை வாசித்து இக்காரியத்தின் மற்றப் பாகத்தைப் பார்க்க. ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் ஆண்டவர் நமக்கு இலவசமாய்க் கொடுத்தருளினபடியாலேதான் நாம் இவைகளைப் பெற்றுக்கொண்டு நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள ஜாக்கிரதையோடும் விசுவாசத்தோடும் பிரயாசப்படவேண்டும். கடவுளுடைய ஈவுகளெல்லாம் அப்படித்தான். அவர் தாராளமாய்க் கொடுக்கிறார். நாமோ நம்பிப் பிரயாசப்படாவிட்டால் அவைகளைப்பெற்றுக்கொள்ளமாட்டோம்.

4. பரிபூரண ஜீவன். கொலோ. 2[9,10] சிந்தித்து இந்த வேத பாடங்களை முடிக்கக்கடவோம். கிறிஸ்துவுக்குள்ளேயே தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் வாசமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளேயே நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். வேறே யாரையாவது எதையாவது சோக்கினால், உனக்கு அநேகுறையான ஜீவன். நிறைந்த ஜீவன், திருப்திகொடுக்கிற ஜீவன், எப்போதும் விர்த்தியாகிற ஜீவன், அவருக்குள் மாத்திரம் கிடைக்கும். 'அவருக்குள்' என்பதின் அர்த்தம் அனுபவத்தில் உனக்குத் தெரியுமா?

பிரார்த்தனை. பிதாவே, எங்கள் மனதை அறிவீர். உள்ளத்திலிருந்து இயற்கையாய்ச் சுரக்கும் தீமையான காரியங்களை இயேசுநாதர் சொல்லியிருக்கிறாரே. அவைகளுக்குப் பதிலாக எங்களுக்குள் அழகும் பரிசுத்தமுமான நினைவுகள் உண்டாகத்தக்கதாக உம்முடைய ஆவியால் எங்களை நிரப்பியருளும்.

சகல நன்மைகளையும் ஈகிறவரே, எங்களுக்குப் பல குறைவுகளுண்டு. அவைகளை நிறைவாக்கி எங்கள் ஆத்துமாக்கள் திருப்தியடையச் செய்யும்.

எங்களுக்குள் நல்ல கிரியையை ஆரம்பித்தவரே, நாங்கள் ஒவ்வொருநாளிலும் பரிசுத்தத்தில் விர்த்தியடையத்தக்கதாக, கிறிஸ்துவின் நாள்மட்டும் ஓயாமல் அதை நடப்பித்தருளும். ஆமென்.

A New Translation of I Timothy

By the Revds. F. Kingsbury, L. P. Larsen, and G. E. Phillips

I திமோத்தேயு

ஒரு புது மொழிபெயர்ப்பு

(தொடர்ச்சி)

3-ம் அதிகாரம்

1. இம்மொழி நம்பத்தக்கதே. மேற்பார்த்தலை ஒருவன் நாடினால், அவன் நற்றொழிலை விரும்புகிறான். மேற்பார்ப்பான் வசையில்லாதவனும், ஒரே ஒரு மனைவியை உடையவனும், வெறியாதவனும், தன்னடக்கமும் கண்ணியமுமுள்ளவனும், விருந்தினரை உபசரிக்கிறவனும் கற்பிக்குந் திறமுடையவனுமாயிருக்கக்கடவன். மதுபானப்பிரியனும் பண ஆசை இல்லாதவனுமாய் இருத்தல்வேண்டும். எல்லாவற்றிலும் மரியாதையுள்ளவனுய்த் தன் பிள்ளைகளை அடங்கிநடக்கச் செய்து, தன் வீட்டாரைச் செம்மையாய் நடத்தல்வேண்டும். ஒருவன் தன் வீட்டாரை நடத்தத் தெரியாவிடில், கடவுளது சபையை எப்படிக் கவனிப்பான்? பேயடைந்த தீர்ப்பைத் தானும் அடையாதபடி அவன் சபையில் புதிதாய்ச் சேர்ந்தவனாயிருக்கலாகாது. மேலும் அவன் பழிச்சொல்லுக்கு ஆளாகி, பேயின் வலையில் விழாதபடி, நல்லவனென்று புறம்பேயுள்ளவர்களது சாட்சி பெற்றிருத்தல்வேண்டும்.

8. அப்படியே டீக்கன்மார் மரியாதையுள்ளவர்களும், மாறுபடப் பேசாதவர்களும், மதுவை அதிகமாய் அருந்தாதவர்களும், அநியாய லாபம் தேடாதவர்களும், கள்ளமில்லா நெஞ்சில் நம்பிக்கையின் இரகசியத்தைப் பற்றினவர்களுமாய் இருத்தல் வேண்டும். அன்றியும் இவர்கள் முதலில் பரீட்சிக்கப்படக்கடவர்கள். குற்றமற்றவர்கள் என்று விளங்கினால், டீக்கன் வேலை செய்யக்கடவர்கள். அப்படியே [டீக்கன் வேலை செய்யும்] பெண்களும் மரியாதையுள்ளவர்களும், அவதூறு செய்யாதவர்களும், வெறியாதவர்

களும், எவ்விஷயத்திலும் நம்பத்தக்கவர்களுமாயிருத்தல் வேண்டும். டீக்கன்மார் ஒரே ஒரு மனைவியை யுடையவர்களும், பிள்ளைகளையும், சொந்த வீட்டாரையும் செம்மையாய் நடத்துகிறவர்களாயு மிருத்தல்வேண்டும். டீக்கன்மாராய் நற்பணி செய்தவர்களுக்குக் கிடைக்கும் பலன், நன்னிலையும், கிறிஸ்து யேசுவில் உள்ள நம்பிக்கையில் பெரும் துணிவுமாம்.

The Preparation of Sermon

By the Rev. H. Spencer, B.A.

பிரசங்கமுறை

(தொடர்ச்சி)

நாம் வெகு சாதாரணமாய்ப் போகும் கிராமங்களில் மாதந்தோறும் சென்று பிரசங்கிக்கக்கூடாமல், இரண்டொரு மாதத்தில் ஒரு தடவை மாத்திரம் போய்ப் பிரசங்கிக்க சமயம் வாய்க்கலாம். இவ்வித சமயத்திலுங்கூட போவதற்குமுன்னே போதிக்கவேண்டிய பொருளைத் தெரிந்து நன்றாய் அறிந்துகொண்டு செல்லவேண்டும். சில சந்தர்ப்பங்களில் நாம் கிரமத்தை அனுசரிக்கவேண்டியதாய் இருந்தாலும், தெரிந்துகொண்ட விஷயத்தை விட்டுவிட்டு ஜனங்களுடைய ஸ்திதிக்கு ஏற்றதான வேறொரு பொருளை எடுத்துப் பேசும்படியான திறமை வாய்ந்தவர்களாயிருக்கவேண்டும். ஜனங்கள் கும்பாய்ச் சேரும் பட்சத்தில் ஆயத்தப்படுத்தியிருக்கிற பிரசங்கத்தைச் செய்யவேண்டும். கொஞ்சம்பேர் மாத்திரம் கூடியிருக்குஞ் சமயத்தில் அவர்களோடு சம்பாஷித்து சமயோசிதமாய்ப் பேசவேண்டும். பிரசங்கம் செய்வதினால் உண்டாகிற பிரயோஜனத்தைப் பார்க்கிலும் சம்பாஷணை செய்வதினாலுண்டாகிற பிரயோஜனம் மிகுதியே. இப்படிப்பட்ட சம்பாஷணை செய்வது சுளுவானது என்றெண்ணக்கூடாது. ஜனங்களுடைய மனசில் ஒருவிதமான சந்தேகமிருக்கிறது வாஸ்தவமே. இவர்கள் சம்பாஷிக்கும்படியாய் வராமல், பிரசங்கம் செய்யும்படிக்கே வந்திருக்கிறார்கள் என்கிற எண்ணம் அவர்கள் மனசில் இருக்கிறதுண்டு. சிநேகிதராகவும் நம்முடைய நன்மைக்காகவும் வந்திருக்கிறார்கள் என்கிற ஆலோசனையைப் பிறப்பிக்கிற மேரையாய் அவர்களோடு பேசவேண்டும். முன்னொரு காலத்தில் உபதேசியார் ஒருவர், ஒரு கிராமத்துக்குப்போய் பிரசங்கஞ்செய்து வரவேண்டு

மென்று நடந்துபோகையில் தன் கையில் ஒரு வலையை எடுத்துக் கொண்டு போகிற ஒரு செம்படவனைப் பார்த்து, 'ஏன் ஐயா, எங்கே போகிறீர்?' என்று வினவ, அதற்கு அந்தப் பறவன், 'நான் வலை வீசி மீன்பிடிக்கப் போகிறேன்' என்று மறுமொழிகொடுக்க, உபதேசியார், 'நல்லது ஐயா, மீன்களை மோசஞ்செய்து பிடித்துக்கொள்வது உமது அலுவல். ஆனால் நம்மைச்சுற்றி வலை வீசி நம்மைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென்று பிரயத்தனஞ் செய்பவன் யார்?' என்று கேள்விகேட்டார். அதற்கு அவன், 'தேவன்தான் அவர்' என்று விடைகொடுத்தான். உபதேசியார், 'அல்ல அப்பா, தேவன் நம்மை அப்படிப் பிடித்துக்கொள்ளுகிறதில்லை. நம்மை வஞ்சித்துப் பிடித்துக்கொள்வதற்குப் பிரயத்தனஞ் செய்கிறவர் தேவனல்ல, பிசாசு' என்று சொன்னதற்கு, அந்தப் பறவன், 'ஆம் ஐயா, பிசாசுதான்' என்று ஒத்துக்கொண்டான். அந்தப் பறவன் மனதில் எந்த அபிப்பிராயமிருந்ததினால் தேவன் என்று மொழிபகர்ந்தான்? இவர் தேவன் விஷயமாய்ப் பேசுகிறவர் என்று எண்ணி, உபதேசியார் கேட்ட கேள்விக்கு கவனம் வைக்காமல், சும்மா தேவன் என்று விடையளித்தான். இவ்வித சம்பாஷணையினால் உண்டாகிற பலன் அற்பமானது. ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை மனப்பூர்வமாயும் பூரண எழுப்புதலாயும் எடுத்துக் காட்டும்படி நாம் அவர்களோடு சிநேகங்கொண்டு அவர்களிடத்தில் சம்பாஷிப்பதினால் நம்முடைய பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்கிற ஆவல் அவர்கள் மனசில் உண்டாகலாம்.

இச்சிறந்த ஊழியத்துக்கு நாம் நம்மை ஆயத்தஞ்செய்வது எப்படி யென்று கேட்போமானால், நாம் கூறியறிவிக்கவேண்டிய போதனைகளும், ஜனங்கள் முன்னேகொண்டிருக்கிற வேறே மார்க்கங்களின் கொள்கைகளும் என்னவென்று நமக்கு வெகு பரிஷ்காரமாய்த் தெரிந்திருக்கவேண்டும். இதுவுமன்றி, நாம் இடைவிடாமல் பரிசுத்தாவியானவரோடுகூட அந்நியோந்நியமாயிருந்து, நாம் அந்தப் போதனைகளை விவரித்துப் போதிக்கவேண்டிய முறைகளை அவர் நமக்குக் காட்டிக்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்தவர்களுக்குப் பிரசங்கஞ் செய்வதில் இதர மதஸ்தருக்கு நாம் விவரிக்கத்தக்க விஷயங்களை பிரஸ்தாபிப்பதுமல்லாமல், இன்னும் அநேக விஷயங்களை விவரிக்கவேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்தவர்களல்லாத கூட்டங்களில் கிறிஸ்தவ மதத்துக்குச் சம்பந்தமான முக்கிய போதனைகளைப் பிரசித்தப்படுத்துவதுமன்றி இன்னும் அநேக சாதாரண போதனைகளைச் சாற்றவேண்டிய அவசியமில்லை. இந்துக்கள் முதலான வெவ்வேறு மார்க்கத்தாருக்கு சுவிசேஷத்தைக் கூறி

யறிவிப்பதில் வீட்டைக் கட்டவேண்டுமென்ற அஸ்திபாரத்தைப் போடுவோரைப்போல் அல்லது அதைப் போடுவதற்கு முன்னே வாணந்தோண்டி கடைக்காலிடுபவரைப்போல் நம்முடைய உத்தி யோகத்தைச் செய்கிறோம். கிறிஸ்தவ சபையிலாகட்டும் அல்லது நாம் அதே சுவிசேஷத்தை கூறியறிவிக்கிறதிலாகட்டும் வீட்டின் மேற்கூரையைக் கட்டுகிறவர்களாயிருக்கிறோம். ஆகையால் அவர்களிடத்திலும் இவர்களிடத்திலும் நாம் செய்கிற வேலை ஒன்றாயிருப்பினும் அதைச் செய்கிற முறையில் சில வித்தியாசங்கள் இருக்கின்றன.

பிரசங்கிகளில் அநேகர் தாங்கள் இருக்கும் ஊரின் சிறுசிறு கிறிஸ்தவ சபையில் வாரந்தோறும் ஆராதனை நடத்தி பிரசங்கஞ் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இந்த ஊழியம் அற்பமானது, ஜனங்கள் கூட்டம் கொஞ்சம், முதலில் ஆலோசனை செய்யாமல் வந்து ஆராதனை காலத்தில் மனதுக்குவந்த வார்த்தைகளைச் சொல்லலாமென்று அபிப்பிராயமுள்ளவர்களாய் இருக்கலாகாது. இந்த ஊழியமே மிக முக்கியமானது. அவ்வூரில் முதலில் தேவனுடைய பட்டினத்தைக் கட்டுவதில் ஒழுங்குசெய்யவேண்டிய காணவிதமான வேலைகளில் இது விசேஷமானது. ஆதலால் யோசனையின்றியும் பிரயாசமின்றியும் பிரசங்கஞ் செய்யலாமென்று யாராகிலும் நினைக்கலாகாது.

ஒய்வுநாள் ஆராதனையில் சொல்லவேண்டிய பிரசங்கத்தின் விஷயத்தை சில நாட்களுக்கு முன்னதாகவே தெரிந்துகொள்வீர்களாக. சத்தியவேதம் முதலானப் புஸ்தகங்களைப் படிக்கையில் இன்னின்ன விஷயங்களைக் குறித்துப் பிரசங்கிக்கவேண்டும் என்கிற ஆலோசனை யுண்டாவதுண்டு. அக்காலத்தில் மனசுக்கு வருகிற சங்கதிகளை உடனே நானே எழுதிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், அவைகள் மறந்துபோம். மனதிலே படத்தக்க விஷயங்களையும், வேத வசனங்களின் வியாக்கியானங்களுக்குச் சம்பந்தமான யோசனைகளையும், அபிப்பிராயங்களையும் எழுதிவைத்துக்கொள்ளுவதற்கு ஒரு புஸ்தகம் எப்போதும் கூடவைத்துக்கொள்ளவேண்டும். அதிலிருக்கிற விஷயம் புஸ்தகத்தில் மாத்திரமல்ல, மனதிலுமிருக்கிறபடியால் அவைகளுக்குறுகூலமான கவனஞ்செய்வதற்கும், பிரசங்கம் எழுதி வாசிப்பதற்கும் மிக உதவியாயிருக்கும்.

C. L. S. PRESS, MADRAS—1918

No. 141. 1 FEB 1918 பெப்ருவரி 1918

வேதியர் விளக்கு

• The Things Behind, and the Things Before

By Mr. S. Kandiah Pillai

பின்னுளவைகளை மறந்து முன்னுளவைகளை
நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன்
அழைத்த பரம அழைப்பின் பந்த
யப் பொருளுக்காக இலக்கை
நோக்கித் தொடருகிறேன்
பிலி. 3[13-14]

தனது பின்னுளவைகள் முன்னுளவைகள் எவை எவையென அப்போஸ்தலன் பிலி. 3-ம் அதிகாரத்தால் நன்கு விளக்குகிறார். அதில் அவர் தனக்குப் பின்னுளவைகள் எனத் தள்ளியவைகளையும், முன்னுளவைகள் என நாடித் தேடியவைகளையும் எடுத்துக்காட்டிப் பிலிப்பு பட்டணத்தின் சகோதரரை உற்சாகப்படுத்தியதாக நாம் வாசிக்கிறோம். அவர் தமது குடிப்பிறப்பு, கல்வி, முற்கிய வைராக்கியம், நியாயப்பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாமை முதலியவைகளை முன்பாக நிறுத்தி எண்ண, பயில, மகிழ விரும்பவில்லை என்றும், அவைகள் பிரதானமற்றனவென்றும், பின்னுக எறிந்து விடக் கூடியனவென்றும் எடுத்துரைக்கின்றார். அவர் முன்பாக நின்றுகொண்டிருந்தனவெல்லாம், கிறிஸ்துவும் அவரால் அடையக் கூடிய சிறந்த ஆதாயங்களுந்தான். கிறிஸ்துவை நோக்கி ஓடுதல் தான். பரிசுத்த அப்போஸ்தலனின் இலக்காக இருந்தமையை இந்த அதிகாரத்திலுல் நன்றாய் அறியக்கூடியதாகின்றது.

கிறிஸ்தவர்கள், பவுல் அப்போஸ்தலன் தனது கிறிஸ்த ஜீவியத்தைக் குப்பை என எண்ணிப் பின்னுக ஒதுக்கிய விஷயங்களைத் தாங்களும் நீக்கவேண்டியதென்ற எண்ணவுங்கூடும். ஆனால் கல்வி ஒழுக்கம் முதலிய பாவமல்லாத காரியங்கள்கூடத் தனது பரிசுத்த ஜீவியத்தைப் பழுதாக்குவனவாம் என்ற எண்ணி அவைகளின்

பெருமைகளில் சிக்கிக்கொள்ள விருப்பமில்லாத அப்போஸ்தலன அவைகளை நீக்கிவிடலாமேயன்றி அவர் குப்பையென வீசிய கல்வி, வைராக்கியம் சுயநீதி முதலியனவற்றை—இவைகள் நம்மிடம் இல்லாதனவாகையால்—நாம் நீக்கிவிடுதல் எவ்வாறு?

ஆதலால் கிறிஸ்தவர்கள் ஆகிய நம் எல்லாருக்கும் பொருந்தவும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கும் ஒருவாறு ஏற்கவும் தக்கதாகப் பின்னுனவைகள் முன்னுனவைகள் எவை எவை எனச் சிறிதாராய்வாம். மறந்து, நாடி, என்பதின் கருத்தும் எம் தியானத்தில் இருக்கட்டும். மறந்து என்றவுடன் அப்படிச் செய்வது இலகு என அநேகர் எண்ணுகின்றனர். ஒரு விஷயத்திற் பயிற்சி இருக்கும் வரையும் நாம் அதை மறக்கமுடியாது. ஆதலால் நாம் மறக்கவேண்டியவைகள் எவைகளோ அவைகளில் பயிற்சியே கூடாது. ஆனால் சில விஷயங்களை நாம் மறக்கவேகூடாது. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அப்போஸ்தலனின் கருத்து முன்னடந்தனவற்றை யெல்லாம் மறத்தல் என்றதல்ல. நாடி என்பது விரும்பித்தேடி எனப்பொருள் கொள்ளும், அல்லது அடைய முயற்சித்தல் எனினுமாம்.

எல்லா ஆண்மகோடிகளும் மறக்கவேண்டிய பின்னுனவைகள் தன்னயம், அபிதானமானவை, நான் என்பது என்னும் மூன்றுமே என்றும், இவைகளில் தன்னயத்தைப் பின்னுக்குக் கடமைப்பயிற்சியும், பிதானமல்லாதனவற்றை மறக்க மெய்யுணர்வும், நானென்பதை அழிக்கக் கிறிஸ்துவும் வேண்டுமெனவும் சுவிசேடமும், பக்தர் வாக்கியங்களும் நமக்குப் போதிக்கின்றன. இவைகளின் பலன் கிறிஸ்துவோடிருத்தல்தான். நமக்கு முன்னுனவைகள்—கிறிஸ்தவ கடமைகளிற் பழகல், மெய்யுணர்வு, கிறிஸ்துவோடிருத்தல் என்பன தான்.

I. பின்னுன தன்னயத்தை ஒழித்து முன்னுன கடமைப்பயிற்சியில் பயில்தல்.—

கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யவேண்டிய சில கடமைகளை நமது கடவுள் மனுடனுக இருந்தபோது வெளிப்படையாகப் போதித்தும் நடந்தும் காட்டியிருக்கிறார். ஒரு முறை இரண்டு முறையோடு நிறுத்திவிட அவர் கற்பிக்கவில்லை. அவர் குறித்த கடமைகள் தன்னயத்தை நீக்கக்கூடியனவென்று புத்தியுள்ள எந்த மனுஷனும் சொல்லுவான். ஏழு முறையல்ல எழுழுபது முறை மன்னி. பணப்பையையாவது கோலையாவது கொண்டுபோகவேண்டாம். உங்களைச் சிநேகிக்கிறவர்களை நீங்கள் நேசிப்பீர்களானுல் பிரயோசனம் யாது? கேட்கிறவனுக்குக் கொடு. இவைகள் நமது சுவாமியின்

திருவாக்கு. இவைகளினுல் மன்னித்தல், கூலிக்கல்ல சுவாமிக்குத் தொண்டுசெய்தல், பதில் கருதாது வேலைபுரிதல், கஷ்டப்படுபவர்களை ஆற்றுதல் என்பன நமது கடமைகள் என்று காணப்படுகிறது. நமது கடமைகளினுல் நாம் சந்தோஷப்படவேண்டுமேயன்றி நாம் புரிந்த நற்செயல்களினுல் வரும் இடையூறுகளினுல் நாம் துக்கப்படக் கூடாதென்பதும் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்திப் பலவித தீமையான மொழிகளை உங்கள்பேரில் பொய்யாகச் சொல்லுவார்களானுல் பாக்கியவான்களாக இருப்பீர்கள் என்ற திருவாக்கும் அவரின் பிள்ளைகளுக்கு ஆறுதல். இன்னும் தன்னயத்தைப்போலக் கொடியபாவம் வேறொன்றுமில்லை. மனுஷ அவதாரமெடுத்த கடவுள் அடைந்த பாடுகளுக்கெல்லாம் காரணம் யூதஜனங்களின் தன்னயம் தான். அற்புதநாதர் நன்மைசெய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தாரேயன்றி யூதருக்கென்ன கெடுதிபுரிந்தார்? ஆனுல் அவர் செய்தவை யூதரின் தன்னயத்தை யழிப்பதாக இருந்தது. அதனுற்றுன் அவர்கள் சிறி அவருக்குக் கொடுமைகள் செய்தார்கள். நமது வீட்டிலும் காட்டிலும் நாம் கவனித்தால் தன்னயத்தின் கெடுதியைக் காணலாம். மிகச்சிறிய காரியங்களில் தொடங்கி இப்போது நடக்கிற ஐரோப்பிய யுத்த மீறுகள் தன்னயத்தின் பெறுபேறுகள்தான். எமது சுயநேசத்தை யழிக்க நாம் விரும்புகையில் நமது கடமைகளை நாமறிந்து அவைகளைத் தினந்தினம் செய்து பழகிவரவேண்டியது. அந்தப் பயிற்சி காலத்தில் இன்பத்தரும். பூர்வ சபைப்பிதாக்கள் அடைந்த இன்பம் இதுதான். தமது ஜீவனையும் பெரிதாயெண்ணுத கடமைகளை அவர்கள் புரிந்தாரன்றே? 'ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினுல் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வரக்கடவன்' என்றதின் பொருள் தன்னயத்தை ஒழிக்கப் புரியும் கடமைப்பாட்டைக் காட்டுகின்றது.

Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by Pandit J. S. Masillamany

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

(தொடர்ச்சி)

சவுல் தரிசுபட்டணத்துக்குப் போகிற கப்பல் ஒன்றை இத்தத் தறைமுகத்தில் கண்டு, அதிலேறித் தமது ஜனன நகரத்துக்குச்

செல்லும்படி ஒழுங்குபண்ணிக்கொண்டார். சிறிதுநேரத்துக்குள்ளே சுக்கான்கயிறுகள் அவிழ்க்கப்பட்டன. கப்பல் தண்டுவலித்துத் துறைமுகத்தைக் கடந்து கடலுக்குட் சென்றது. பாய் விரிக்கப்பட்டது. கப்பலும் வடக்குநோக்கிச் சென்று தாலமிப்பட்டணம், நீரு, சீதோன் என்னும் துறைமுகங்களைக் கடந்து தரிசுவுக்கு நேரே சென்றது.

இதற்குமுன்னே கடைசியாய்ச் சவுல் இங்கு பிரயாணம் பண்ணியபொழுது அவர் உலகத்தின் சகல ஞானப் பயிற்சியடையும் வித்தியார்த்தியாயிருந்தார். நியாயசாஸ்திரியாகவேண்டும் என்பது அவருடைய நோக்கம். ஆனால் இப்பொழுதோ, எருசலேமிலுள்ள தங்கள் வருப்புக்கு இவரை விடிவெள்ளி என்று முன்னே நினைத்த மனிதருடைய மூர்க்காவேசத்துக்குத் தப்பி ஓடுகிறார். ஆயினும் தான் ஏறிச்சென்ற கப்பல் எப்படி அமரிக்கையோடு சென்றதோ அவ்வண்ணமே சவுலுடைய மனமும் கலக்கமற்றிருந்தது. ஏனெனில் தாம் யாருக்கு உடைமையோ, தம்மை யார் ஆட்கொண்டாரோ அந்த அதிசன சிநேகிதரிடத்தினின்று தன்பமானாலும் தாமமானாலும் ஒன்றும் அவரைப் பிரிக்கமுடியாது. கடைசியாகத் தாம் பிறந்து வளர்ந்த சமபூமியைக் கப்பலிலிருந்து கண்டார். அதற்கப்புறத்தில் மலைக் கொடுமுடிகள் காணப்பட்டன. அவர்களுக்கு நேரே நதியின் முகத்துவாரம் இருந்தது. நதியின் ஜலமும் சமுத்திர ஜலமும் சங்கமமாகிற அம்முகத்துவாரத்துள் கப்பல் சென்றபொழுது, தடுப்புக்காரர் தங்கள் ஸ்தானத்துக்குப் போகும்படி ஒரு கட்டளையிடப்பட்டது. இவர்கள் தடுப்பை எதித்துத் தண்டுவலித்துச் சிதினு (Cydnus) நதிக்கு எதிரேறிச் சென்றார்கள். அப்பால் இந்நதி வரித்துறைமுகம் என்ற துறைமுகத்துட் சென்றது. இது சவுலுக்கு நன்றாய்த் தெரிந்த இடம்.

கப்பல் துறைமுகம் வந்து சேர்ந்தவுடனே சவுல் கரையேறி தரிசுபட்டணத்துக்குட் சென்றார். இவரை வாழ்த்தி உபசரிக்கிறதற்கு இவருடைய தாயாவது தகப்பனாவது உயிருடன் இருந்தார்களோ இல்லையோ என்பது நமக்குத் தெரியாது. வைராக்கியமுள்ள பரிசேயராகிய இவருடைய தகப்பனார் உயிரோடிருந்தால் தமது மகன் இப்புது உபதேசத்தை ஏற்றுக்கொண்டதினிமித்தம் மெத்தத் திகிலடைந்திருப்பார் என்பதுமாத்திரம் நிச்சயம். இதைப்பற்றி நாம் நிச்சயமாய் ஒன்றும் சொல்ல எதுவில்லாவிட்டாலும், இவருடைய தகப்பனார் இவர்மேல் கோபாவேசங்கொண்டு இவருக்குத் தனது சொத்துக்களில் யாதொன்றும் கொடாமல் தனது வீட்டைவிட்டுத் தூரத்திவிட்டார் என்று நினைக்கிறதற்குச் சில நியாயங்கள் உண்டு.

சவுலினுடைய தகப்பனார் இப்படிச் செய்திருந்தால் இது சவு

லுக்கு மெத்த வருத்தமாயிருந்திருக்கும். ஆயினும் இது சவுல் எதிர்பாராத காரியம் அல்ல. சவுல் நுண்ணிய உணர்ச்சியுடையவர். அவர் தகப்பனாருடைய கோபம் சவுக்கடியைப்போல அவருக்கு உறைத்திருக்கும். ஆயினும் அவருடைய வாய் இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கையில், அவருடைய கரம் கூடாரம் செய்துகொண்டிருக்கக்கூடும். சேமத்திலும் பட்டினியிலும், தனத்திலும் தரித்திரத்திலும், மனரம்மியமாயிருக்கும் இரகசியத்தை அவர் கற்றுக்கொண்டார்.

'என்னைப் பலப்படுத்துகிறவருக்குள் நான் எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்' என்று அவர் சொன்னார்.

A Legend of Service

By Miss Clegg

ஊழியத்தைப் பற்றிய புராணம்

ஒருநாள் வானத்தின் ராஜா தம்முடைய தேவதூதர்கள் பூலோகத்திலே செய்த ஊழியத்தைக்குறித்த சமாசாரத்தைக் கேட்கும்படி மனதாயிருந்தார்.

இவர்களில் சிலர் திவ்விய அன்பின் நதி இவ்வுலகத்தில் எவ்வளவு தாமதமாய் ஓடுகிறதென்று கண்டு அதிக அநுதாபத்தோடு வந்தார்கள், இன்னும் சிலர் அதின் ஓரத்திலிருக்கிற செழிப்புள்ள இடங்களும் அழகான புஷ்பங்களுமாகிய இலட்சணங்களையும் கண்டு மிகுந்த சந்தோஷத்தோடு வந்தார்கள். இப்படியிருக்க, இவையாதானுகிய அஸ்மியேல் தனியே வந்து, அதிக ஊக்கத்தோடு இந்தச் செய்தியைப் பின்வருமாறு எஜமானருக்கு அறிவித்தான்.

'ஆண்டவரே, நகரத்தில் உம்முடைய பரிசுத்த நாமத்தின் ஊழியக்காரராகிய மூன்றுபேரைக் கண்டுபிடித்தேன். இவர்கள் மனுஷர்களில் நற்கீர்த்தியுள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஒருவன் அதிக ஞானமுள்ளவன், அவன் ஓயாமல் வானங்களைப் பார்த்து மேலான காரியங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்கிறான். இன்னும் ஒருவன் சொல் சாதுரியமுள்ளவன், ஆனபடியினால் மனுஷர் அதிக சந்தோஷத்தோடு அவனுடைய உபதேசத்தைக் கேட்கிறார்கள். மற்றவன் யாதொரு விசேஷித்த வல்லமையில்லாதவனுயிருந்தாலும் நன்மை செய்கிறதினாலே மனுஷரின் அன்பைப் பெற்றுக்கொண்டிருக்கிறான். இம்மூன்றுபேர் அங்கே வாசம்பண்ணுகிறதினாலே அந்நகரம் அதிக பாக்கியமுள்ளதுதான், ஆனால் இவர்களில் யார் உம்மை அதிகமாய் நேசிக்கிறானென்று நான் அறிய விரும்புகிறேன்.'

அதற்கு மனுஷர்களுடைய இருதயங்களைப் புஸ்தகத்தைப்போல வாசிக்கிற வானத்தின் இராஜா :

'ஒவ்வொரு ஆத்துமாவின் இரகசியங்களை வாசிக்கிறேன்; யார் என்னை அதிகமாய் நேசிக்கிறனென்று நன்றாய் அறிந்திருக்கிறேன்; ஆனால் ஒவ்வொரு ஜீவியத்தில் இஷ்டத்தின்படி புதிதான காரியங்களை எழுதுகிறதற்கு இடங்களிருக்கின்றன. இவைகளை நான் காளுக்குநாள் வாசித்து, என்னுடைய வழிகளைக் கற்கும்படி ஏங்கும்படி இருதயங்களைக் காத்துநிற்கிறேன். நீ அந்த நகரத்துக்குப் போய், அங்கே என்னைச் சேவிக்கிற அம்மூன்று பேருக்கும் இந்த வார்த்தையைச் சொல்.

'நீ வனாந்தரத்தைக் கடந்து அப்பக்கத்திலிருக்கிற குடிசைகளுக்குப் போ. அங்கே நீ எனக்காகச் செய்யவேண்டிய ஒரு ஊழியம் உனக்குக் குறிக்கப்படும் என்று எஜமானர் சொல்லுகிறார் என்று சொல். 'ஆனால் அந்த ஊழியம் இன்னதென்று நான் இப்போது சொல்லவில்லை. இந்த வர்த்தமானம் சொல்லி, அவர்களைச் சோதித்து, நன்றாய் உத்தரவுசொல்லுகிறவனுக்குக் கிரீடத்தைக் கொடு' என்று சொன்னார்.

தேவதூதன் மறுமொழி சொல்லாமல் ஆண்டவரின் கட்டளையைக் கேட்டு அங்கேயே புறப்பட்டு நகரத்திற் பிரவேசித்தான்.

முதலாவது அவன் தேவாலயத்துக்குப் போனான். அது பரிசுத்தராளாயிருந்தபடியினால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் போதகருடைய வார்த்தைகளைக் கேட்கும்படி ஆவலோடு வந்தார்கள். எல்லாரும் பேசாமலிருக்க வாக்குவல்லன் தன்னுடைய வல்லமையை அறிந்தவனும், தான் சொல்லப்போகிறதை ஆயத்தம் பண்ணினவனும், தைரியமுள்ள முகமுள்ளவனும், பிரகாசமுள்ள கண்களையுடையவனுமாய் வந்தான். அவன் மௌனமான ஜெபத்தில் நிற்கும்போது தேவதூதனுடைய கை அவன் தோளில் தொட உணர்ந்தான்.

'எஜமானர் உன்னை வனாந்தரத்தைக் கடந்து அப்பக்கத்திலிருக்கிற குடிசைகளில் தமக்காக ஊழியம் செய்யும்படி சொல்லுகிறார்' என்னும் வார்த்தையைக் கேட்டு அவன் பயமுள்ள முகத்தைக் காட்டி சிறிதுநேரம் பேசாமலிருந்து, பிற்பாடு 'என்' என்று கேட்டான்.

அதற்கு மறுமொழி ஒன்றுமில்லை. தேவதூதன் பெருமூச்சுவிட்டுப் போய்விட்டான்.

ஞானப்பிரகாசம் தாழ்மையான வீட்டிலே வாசம்பண்ணி, பரிசுத்தமுள்ள காரியங்களில் ஆராய்ச்சி செய்து வருஷத்துக்கு வருஷம்

அதிக அமைதலோடு ஜீவித்தான். அவன் ஆழமான ஆலோசனையில் அமிழ்ந்தி அதிக சகிப்புடன் பிரயாசப்பட்டு, சத்தியத்திற்காக ஞானங்கொண்ட கனமான உடற்பை சேவுபண்ணினான்.

பூரணமாக இன்னும் ஒரே நூல் தேவையாயிருந்தபோது அஸ்மியேல் வந்து அவனுடைய கையைத்தொட்டு அவன் நண்மையாய்ப் பண்ணின ஆலோசனையின் நூலைப் பிரித்து, அதிக சாந்தத்துடன் பேசி, நீர் ஆலோசனை பண்ணுகிறவரே உன்னை வனாந்தரத்தைக் கடந்து அப்பக்கத்திலிருக்கிற குடிசைகளில் நமக்கு ஊழியம் செய்யும்படி சொல்லுகிறார் என்றான்.

திக்கத்துடனும் ஆச்சரியத்துடனும் ஞானப்பிரகாசம் தன் மனசின்மையான கண்களை ஏறெடுத்தான். அவனுடைய உடைபட்ட ஆலோசனையையும் இந்த அற்புதமான அழைப்பையும், அந்த அபாயமான வனாந்தரத்தையும், அவன் தனிமையாய்ப் போகவேண்டிய அந்த நீண்ட பயணத்தையும், தன்னுடைய பெலவீனத்தையும் நினைத்து பயந்தான். இது எல்லாவற்றையும் சந்தேகத்துடன் பார்த்து எப்படியென்று முறுமுறுத்தான்.

அஸ்மியேலோ உற்சாகம் கெட்டவனைப் போகப் புறப்பட்டு நான் அறியேனென்ற குளிர்ச்சியான சத்தத்தோடு சொன்னான்.

இப்போதே அவன் வாடுகிற நம்பிக்கையுடன் போய் தேவன் தன்னைப் பேசவேண்டிய மூன்றும் ஆளைத் தேடினான்.

அவன் இருபது அடி போகுமுன் தேவதாசன் சந்தோஷமுகமுள்ளவனும், நீவிரப்படித்துகிறவனும் அந்தத் தெருவழியாய் வருகிறதைக் கண்டான். இவன் தன் ஊழியத்தை விளையாட்டைப் போலெண்ணி அது நாளுக்கு நாள் அதிகரிக்கிறதைக் கண்டு சந்தோஷப்பட்டான்.

தேவதூதன் கையை உயர்த்தி இவனை நிற்பாட்டி, தாமதமில்லாமல் ஆண்டவரின் கட்டளையைச் சொல்வானானான் :

'நீர், இங்கே சேவிக்கிறவரே உன்னை வனாந்தரத்தைக் கடந்து அங்கே நிற்கும் குடிசைகளில் தமக்கு ஊழியஞ்செய்யும்படி சொல்லுகிறார்' என்றான்.

அஸ்மியேல் இன்னொரு மூச்சுவிடுமுன் தேவதாசன் ஆவலுடன், எப்போவென்று பிரதியுத்தரம் கொடுத்தான்.

உன்னான சந்தோஷத்தினாலே அந்த தேவதூதனுடைய முகம் பிரகாசித்து, அவனைச் சூழப் பரம ஒளி எரிந்தது. அவன் சென்னி மேலிருந்த பொன் கிரீடத்தை அவன் எடுத்து தேவதாசனிடம் கொடுத்து, இட்போ என்றுசொன்னான். எனென்றால் எஜமானரினால் சோதிக்கப்பட்டு அவரை அதிகமாய் நேசிக்கிறவன் நீர்தான் என்று

காண்கிறேன். அவர் கட்டளையிடும்போது என் அல்லது எப்படி யென்று கேட்க எங்களுக்குப் பங்கில்லை—அவர்தான் காரணத்தை அறிந்திருக்கிறார். அவருடைய வித்திகள் ஞானமும் நீதியுமுடையவை களாய் இருக்கின்றன. வான இராஜாவைச் சேவிக்கிறவர்கள் முழு நம்பிக்கையுடன் ஊழியஞ்செய்யவேண்டும்.

The Preparation of Sermons

By the Rev. H. Spencer, B.A.

பிரசங்க முறை

(தொடர்ச்சி)

எந்த விஷயத்தைக்குறித்துப் பிரசங்கஞ்செய்யவேண்டுமென்கிற மலைப்பு இருக்குமானால் இரண்டு காரியங்களைக் கவனிக்கவேண்டும்: (1) பிரசங்கி ஜனங்களின் ஸ்திதிக்குத்தகுந்த விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும், (2) தன் மனசுக்குப்பட்டு தனக்கு எழுப்புதலை யுண்டாக்குகிற விஷயத்தையே தெரிந்துகொள்வது தகுதி.

முதலாவது, தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்போருடைய ஸ்திதி என்னவென்ற ஆலோசித்துக்கொண்டு, விவரித்துக் காட்ட வேண்டிய விஷயத்தைத் தெரிந்துகொள்ளத்தக்கது. அவர்கள் கிறிஸ் தவர்கள் என்ற எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ் துவை உண்மையாய் நம்பியிருக்கிறார்களோ? தங்கள் பாவங்கள் நிவி ர்த்தியாகி நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறார்கள் என்னும் அறிவு அவர்களுக்குண்டாயிருக்கிறதோ? பரிசுத்தாவியானவர் யாரென்றும், அவர் நடப்பிக்கிற வேலை என்னவென்றும் அனுபவசாட்சியினால் அவர்கள் அறிந்திருக்கிறார்களோ? (அப். $19^{1,2}$) என்று இவ்வித மான விசாரணைகளைச் செய்து, தகுந்த போதனைகளைச் செய்வது தக் கது. கிறிஸ்தவர்கள் அனுபவிக்கவேண்டிய எல்லா வாக்குகள், செய்ய வேண்டிய எல்லா ஊழியங்கள், மகிமையடைவோம் என்கிற நிச்ச யம் இவை முதலானவைகள் இத்தன்மையையுடையது என்ற விவரித் துரைக்கவேண்டும் (அப். $20^{20,21}$). கிறிஸ்தவ சபை என்றால் என்ன? அதற்கும் நமக்கும் இருக்கிற அந்நியோந்நியமென்றால் என்ன? கிறிஸ்தவ ஊழியத்தைச் செய்யவேண்டிய விதம் என்ன? இவ்வித கேள்விகளுக்கு உத்தரவுகொடுக்கத்தக்கதாய் பிரசங்கஞ் செய்யவேண் டியவர்களாயிருக்கிறோம். சத்தியவேதத்தின் அநேக பாகங்களைப் படித்து கிரந்தகர்த்தாக்கள் உபயோகித்திருக்கிற திருஷ்டாந்தங்களை கவனித்துப்பார்க்கையில் நாம் இந்த ஊழியத்தை இலக்கில்லாதவர்

களாயும் நிமமில்லாதவர்களாயும் செய்யக்கூடாதென்று அறிந்து கொள்ளுகிறோம். வீடுகட்டுவோர், சமுசாரிகள், மேய்ப்பர்கள், உபாத் தியார், கம்மாளர் முதலானவர்கள் தங்கள் தங்கள் உத்தியோகம் என்ன வென்று அறிந்துகொண்டு தகுந்த நிமத்தை அனுசரித்து அத் தொழில்கள் பூரணப்படும்படியாய் எவ்வாறு பிரயாசப்படுகிறார்களோ அவ்வாறே போதகரும் பிரசங்கிகளுமாகிய நாம் நம்முடைய கனமான உத்தியோகத்தை நிறைவேற்றவேண்டும். (1 கொரி. $3^{6,14}$, 1^{-3}; $5^{1,2}$.)

இரண்டாவது, நம்மைக் கேட்போர் ஸ்திதிக்கு அனுகூலமான விஷயங்கள் அநேகமாயிருக்கின்றன. அவைகளில் விவரிக்கவேண் டிய விஷயத்தைத் தெரிந்துகொள்வது எப்படி? நாம் ஒரு விஷயத் தைத் தெரிந்துகொள்வதற்குமுன், நாம் நம்மைத் தெரிந்துகொள்வது உத்தமவிஷயம். நாம் முந்தின ஒய்வுநாளின் ஆராதனையின் கூட்டத் தைக்குறித்து ஆலோசனை செய்கையில், அப்போதப்போது ஏதாவ தொரு வேதவசனம் மனசில் வந்து, நாம் எத்தனை வேறே வசனங் களைத் தியானித்தாலும் அது வந்துவந்து என்னைக்குறித்துப் பிரஸ் தாபஞ் செய்வீராக என்று சொல்வதுபோலாகிறது. அப்படிப்பட்ட காலத்தில் அந்த வசனத்தின்மேலேயே பிரசங்கம் செய்யவேண்டு மென்று சந்தேகமில்லாமல் தீர்மானிக்கவேண்டும்.

நாம் யாதொரு பிரயாசமுமில்லாமலிருந்தால், திடீரென்று வசன மும் விஷயமும் கிடைக்குமென்று நினைக்கலாகாது. தேவன் 'என் னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன்' (ஏசா 65^{1}) என்று சொல்வதில் நாம் அபூர்வமாய்ச் செய்கிற ஊழியத்தைத் தெரிவித் திருக்கிறார். தேடுகிறவர்களுக்குக் காணப்படுவது என்கிற வாக்கியத் தில் தேவன் தமது ஊழியத்தைச் சாதாரணமாய்ச் செய்கிற ஒழுங்கு தெளிவாகிறது. இயேசு இரண்டு உவமைகளைச் சொன்னதில், ஒருவன் சமுசாரித்தொழிலைச் செய்கையில் நிலத்தில் புதைக்கப் பட்ட நிதியத்தைக் கண்டெடுத்தான் என்றும், இரண்டாவதில் முத் துகளைத் தேடுகிற ஒரு வியாபாரி உத்தமமான முத்தைக் கண்டான் என்றும் விவரித்தார்; அதேவிதமாய் சத்தியவேதத்தில், புதைக்கப் பட்டிருக்கிற முத்துகளை நாம் தேடும்போது உத்தமமான முத்து தென்படுவதுண்டு. 'அப்போதப்போது நாம் வேறே தொழிலைச் செய்கையில் அங்குமிங்கும் திரிந்தலையும்போதாவது, வியாபாரஞ் செய்யும்போதாவது, நமது சிநேகிதரோடு சம்பாஷிக்கும்போதாவது வேறே வேறே விதமான நிகழ்ந்தங்களிலாகிலும் நாம் போதிக்க வேண்டிய விஷயம் மனசிலே புறப்படுவதுண்டு. தேவன் அவை களைக் கொடுப்பது நிஜமே. ஆயினும் தேடாமல் குருடரைப்போல சும்மா இருப்பவர்களுக்கு அவர் கொடுப்பதில்லையே.

தேவன் நமக்கு வேதவசனமொன்றை கொடுத்தபின் நாம் அதைப் பிரசங்கஞ் செய்யுமுறை யென்ன? தேவன் நமக்கு அவ்வசனத்தை நிசமாகக் கொடுத்திருந்தால் நாம் பிரசங்கஞ் செய்யவேண்டிய முறையை அவரே காட்டுவாரென்று நம்பவேண்டும். ஆனால் நாம் தக்கபடி பிரயாசப்பட்டு தியானிப்பதிலேயே அவர் தமது திவ்விய சகாயத்தைக் கொடுப்பார். சில சங்கதிகளை மறந்துபோகலாகாது. அவை எவையென்றால், ஒரு வேதவசனத்தை அல்லது ஒரு பாகத்தை விவரிப்பதிலே சத்தியவேதத்தையும் அதை விவரிக்கிற வேறே வியாக்கியானங்களையும் வாசித்து அந்த வசனத்தை எழுதினவன் என்ன அர்த்தத்தை அறிவிக்க விரும்பி எழுதினான் என்று அறிந்துகொண்டு அந்த அபிப்பிராயத்தையே பிரசங்கத்தினால் தெரிவிக்கவேண்டும். நம்முடைய சொந்த அபிப்பிராயங்களில் சத்தியவேதத்தில் பரிசுத்த ஆவியானவர் வெளியிடுகிற அபிப்பிராயங்களை வெளியிடவேண்டுமென்று தேவன் போதக ஊழியத்தை நம்முடைய வசத்தில் கொடுத்திருக்கிறார். எந்தெந்த சொல்லைகளை விவரிக்கவேண்டுமென்று நன்றாய்த் தெரிந்துகொண்டு அவைகளுக்கு அனுகூலமான போதனைகளையும் திருஷ்டாந்தங்களையும் சொல்லி, கேட்கிறவர்கள் செய்யவேண்டிய கடமைகளை தெரிவுரைத்துப் போதிக்கவேண்டும். நாம் பிரசங்கத்தில் சொல்லுகிற போதனைகள் அதிகமாயிருக்குமானால் ஜனங்கள் ஆயாசப்பட்டு சலனியாமற் போவார்கள். அவர்களுக்கு இருக்கிற அறிவுக்குத்தக்கபிரகாரம் அனுகூலிக்கப் பிரசங்கிக்கவேண்டும். இன்னும் பிரசங்கியானவன் தனக்குத் தென்படுகிற போதனையைச் செய்தபின் இன்னும் சமயமிருக்கும்பட்சத்தில் காலத்தைப்போக்க சும்மா பேசிக்கொண்டிருப்பதை நிறுத்திவிடவேண்டும். சுருக்கமான பிரசங்கத்தை ஜனங்கள் ஆசையோடு கேட்பார்கள்.

நாம் தெரிந்திருக்கிற வேதவசனத்தை விவரித்து, அதின் அர்த்தத்தைத் தெரிவிக்கவேண்டியது மாத்திரமல்ல, நம்முடைய பிரசங்கத்தைக் கேட்கிற ஜனங்கள் நம்முடைய போதனையைக் கேட்டு நாம் எடுத்துரைக்கும் கடமைகளைக் கைக்கொண்டு நடப்போம் என்று வாக்குக் கொடுக்கும்படி செய்யவேண்டுமென்பதும் நம்மேல் விழுந்திருக்கிற உத்தரவாதமாம். கிறிஸ்துவின் 'காமத்தில் நாம் மனுஷரைக் கேட்டுக்கொள்ளுகிறவர்களாயிருக்கவேண்டும். பிரசங்கத்தைக் கேட்கிற ஒவ்வொருவனும் போதகர் என் விஷயத்திலேயே இந்தப் பிரசங்கத்தைச் செய்திருக்கிறார். நான் அவர் போதித்த வசனத்தின்படி செய்வேன்' என்று நிர்ணயஞ்செய்துகொள்ளத்தக்கதாகப் பிரசங்கம் செய்யவேண்டும். இப்படிப் பிரசங்கித்தால்மாத்திரம் நம்முடைய ஊழியத்திற்குப் பலனுண்டாகும்.

பிரசங்க விஷயத்தையும் முறையையும் விஸ்தாரமாக விவரித்திருக்கிறேன். இப்போது பிரசங்கத்தின் இலக்கையும் பலத்தையும் குறித்து ஆலோசிக்கவேண்டியதாயிருக்கிறது.

முன்றாவது, பிரசங்கத்தின் இலக்கு இந்தக் காரியத்தை ஆரம்பிப் பதில் கொலோ. 1[24-29] வசனங்களை எழுதி, இவ்வசனங்களில் எழுதியிருக்கிற போதனைக்குச் சரியாக பிரஸ்தாபிக்கவேண்டும் என்பதாகத் தீர்மானிக்கவேண்டும். அந்த வசனங்களைப் பார்ப்போமானால், ஒவ்வொரு மனிதனுக்கும் புத்தி சொல்லிக்கொண்டும் ஒவ்வொருவனுக்கும் பூரண ஞானத்தில் உபதேசித்துக்கொண்டும், ஒவ்வொரு வனையும் கிறிஸ்துவினிடத்தில் பக்திபூர்வமாய் தேவனுக்குமுன் நிறுத்தவேண்டுமென்பதே பிரசங்கத்தின் குறியாயிருக்கவேண்டும். பவுல் தான் புறஜாதியாருக்கும் பேதுரு யூதருக்கும் சுவிசேஷத்தைக் கூறவேண்டுமென்ற கட்டளையுண்டாயிற்றென்று சொல்லியிருந்தாலும், தான் யூதருக்கும் பேதுரு புறஜாதியாருக்கும் அந்த சுவிசேஷத்தைக் கூறப்படாதென்கிற எண்ணம் அவனில் இருக்கவில்லை. சுவிசேஷம் தேவன் எல்லாருக்காகவும் ஏற்படுத்தியிருக்கிற இரட்சண்ணியத்தைத் தெரிவிக்கிற செய்தியாயிருக்கிறபடியால் அதைக் கூறுகிறவர்கள் எல்லாருக்கும் அறிவிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். சுவிசேஷத்தைக் கேளாதவன் ஒருவனுமில்லாமலிருக்கும்படி பிரசங்கிகளாகிய நமக்கு ஒழிவு கொஞ்சமுமிராதபடி பிரசங்கிக்கவேண்டும். ஒவ்வொருவனும் கிறிஸ்துவில் பூரணப்படும் வரைக்கும் நாம் நம்முடைய வேலைகளை விடாமல் செய்யவேண்டும். ஆதலால் உபதேசியொருவன் பிரசங்கிக்கையில் தனக்கிஷ்டமான தன் ஆத்தும ஸ்திதியையடுத்த சங்கதிகளைமாத்திரம் எடுத்துரைப்பானேயானால் தான் நோக்கிய இலக்கை அடையமாட்டான். தன் பிரசங்கத்தைக் கேட்கும் ஜனங்களின் திறமை எப்பேர்ப்பட்டதென்று அறிந்துகொள்வதற்குப் பிரயாசப்பட்டு, அறிவில்லாதவர்களுக்குப் போதித்து, பலவீனரைப் பலப்படுத்தி, குற்றவாளிகளை எச்சரித்து சன்மார்க்கத்தில் நடத்தி, கல்ல பழக்கமுள்ளவர்களை உற்சாகப்படுத்தி யாவருக்கும் தகுந்த சகாயத்தைக் கொடுப்பதினால், தன் ஊழியத்தை நிறைவேற்றுகிறான். வெவ்வேறு வகுப்புகளுள்ள ஊழியத்தைச் செய்வதற்காக தேவன் தமது அடியாருக்கு வெவ்வேறு வரங்களை யருளிச்செய்திருக்கிறார் (ரோம. 12[6-8]). ஆனாலும் தேவ ஊழியன் ஒவ்வொருவனும் தன்னைலானவரை வெவ்வேறு ஊழியத்தைச் செய்யப் பிரயத்தனிக்கிறதில் ஆசையுள்ளவனாயிருக்கவேண்டும்.

பவுல் இங்கே புத்திசொல்லிக்கொண்டும் உபதேசித்துக்கொண்டுமிருந்தான் என்று சொல்வதில் இந்த இரண்டு விதங்களாய் சுவி

சேஷத்தைக் கூறவேண்டுமேயன்றி வேறே எந்த விதத்தாலும் கூற வேண்டிய அவசியமில்லை என்ற எண்ணவில்லை. தானே இந்த ஊழியத்தைப் பலவிதமாய்ச் செய்தான் என்பதைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறான். 'நான் வெகு கஷ்டத்தோடும் கண்ணீரோடும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துகொண்டிருந்தேன், நான் உங்களுக்குப் பிரியமானதையெல்லாம் சொல்வதற்கு சபைதோறும் வீடுகள் தோறும் உபதேசிக்கப் பின்வாங்காமல், யூதரும் கிரேக்கரும் தேவனிடமாய்த் திரும்பவேண்டும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கவேண்டுமென்றும் கண்டிப்பாய்ப் பிரசங்கித்தேன்' என்ற எபேசு சபையாரின் மூப்பருக்குப் போதித்தானல்லவா (அப். 20[19-21])? அப்படியே நாமும் சபையின் கூட்டங்களிலேயும் கிறிஸ்தவர்களின் வீடுகளிலேயும் அந்தியமதஸ்தரின் மத்தியிலேயும் உபதேசிக்கிறதிலும் உபகாரஞ் செய்கிறதிலும் நல்ல மாதிரியைக் காட்டுகிறதினால் இந்த ஒரே ஊழியத்தில் காலத்தைக் கழிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒவ்வொரு மனுஷனும் கிறிஸ்துவில் பூரணமாக வேண்டுமென்பதே நம்முடைய நோக்கமாயிருக்கிறது. ஜனங்கள் கிறிஸ்துவைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது நிஜம். அவர்கள் அவரைத் தெரிந்துகொண்டபின் அவரிலேயே அவர்கள் நிலைத்திருக்கவேண்டும், அவரும் அவர்களில் தங்கவேண்டும். இந்த நோக்கம் நிறைவேறும்வரையிலும் நாம் அவ்வளவு கஷ்டத்தோடு அவர்களோப் போதித்தும், பரிபாலித்தும், நடத்தியும், ஜெபித்தும் வரவேண்டும். பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் சொல்லியிருக்கிறதாவது: 'என் சின்னபிள்ளைகளே, கிறிஸ்துவின் சாயல் உங்களில் உண்டாகும் வரைக்கும் உங்களுக்காகத் திரும்பவும் பிரசவவேதனைப் படுகிறேன்' நாம் நம்முடைய சபைக்காக எவ்வளவு சிந்தையுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதை நாமே நம்மைப் பரீட்சிப்போமாக.

நம்முடைய ஊழியத்தினால் பூரணத்தையடைந்த ஜனங்களே நாம் தேவன்முன் நிறுத்தவேண்டும். பாடசாலையில் வேலைசெய்கிற உபாத்தியார் அப்போதப்போது தன்னிடத்தில் படிக்கிற பிள்ளைகளைப் பரீட்சிக்கிறதுமல்லாமல் மற்றவர்கள் செய்கிற பரீட்சைக்கும் அவர்களே அனுப்புவாரல்லவா? ஜனங்கள் அந்தப் பரீட்சையின் பலனையறிந்து கொண்டு, உபாத்தியார் ஊழியம் பலனுள்ளது என்றும் பலனற்றதென்றுஞ் சொல்வார்களல்லவா? வருங்காலத்தில் தேவ ஊழியராகிய நாம் யாவரும் அவருடைய நியாயாசனத்துக்குமுன் நிற்கவேண்டும். நம்முடைய வேலையின்மூலமாய் பூரணமானவர்களே அழைத்துக்கொண்டு அங்கே நிற்கிற பாக்கியம் நமக்கு இருக்குமானால் நமக்குண்டாகும் ஆனந்தத்துக்கு அளவிருக்கமாட்டாதே. நம்மோடு அப்

பேர்க்கொத்தவன் ஒருவனும் இல்லாதபட்சத்தில், நம்முடைய கதி என்ன?. நாம் தேவஊழியர் என்று நினைத்துக்கொள்வது எவ்வளவு மேலான பாக்கியம்! சரிதான். ஆனால் தேவஊழியராகிய நாம் யாவரும் அவருக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

Two Sermon Illustrations

இரண்டு பிரசங்க திருஷ்டாந்தங்கள்

(a) தேவனும் நானும். ஒருநான் சாயங்காலம் ஒரு சிறு பெண் தன் தகப்பனது தோட்டத்திற்குட்சென்ற வினோயாடிக்கொண்டிருந்தது. அப்பொழுது தற்செயலாய் அங்கு ஒரு ஆலமரவிதையைக் கண்டு, அதைத் தன் கையிலெடுத்து, 'ஆலமரவிதையே, நீ இதோ காண்கிற பெரிய ஆலமரத்தைப்போல் வளர்ந்து, பலவிதபட்சிகள் உன் கிளைகளில் கூடுகட்டவும், பெரிய சேனைகள் உன் நிழலிலே வந்து தங்குந் தக்கதாய் வளரக்கூடுமோ?' என்று கேட்டது. உடனே அந்த ஆலமரவிதை சிறுபெண்ணைப் பார்த்து, 'தேவனும் நானும்' என்றது. மெய்யாகவே, தேவன் தகுந்தகாலத்தில் மழையை வருவிக்கப்பண்ணி, சத்துருக்களின் கையினின்று காத்துவருவாரானால், அந்தச் சிறிய விதை ஒரு பெரிய ஆலமரமாய் வளர்ந்து, பலவித சன்மைகளுக்கும் காரணமாயிருக்கும்.

கிறிஸ்துவின் ஊழியக்காரன், கிறிஸ்துவில் வேருன்றி வளரும் போது பலருக்கு சன்மையுண்பெண்ணி நித்தியவழியைத் தப்பிப் போனவர்களுக்குக் காட்டுவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

(b) போதனையைவிட சாதனையே சிறந்தது. அசிசி என்னும் இடத்திலுள்ள பிரான்ஸிஸ் (St. Francis of Assisi) என்பவர் ஒருநாள் தமது சீஷரில் ஒருவரைப் பிரசங்கம்பண்ணும்படி அழைத்து, சுற்றுப்புறத்திலுள்ள கிராமத்துக்குப் போனார். அக்கிராமத்திலுள்ள ஜனங்கள் இவ்விருவரையும் மிகவும் கூர்மையாய்ப் பார்த்தார்கள். பிரான்ஸிஸ் ஓரிடத்திலும் நிற்காமல், கிராமத்தின் வீதிவழியாய்க் கடந்துபோனார். சீஷனுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. இருவரும் ஒருவரோடொருவர் பேசாமல் தங்களுடைய மடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். மடத்துக்குள் வந்ததும் பிரான்ஸிஸ் சீஷனைப்பார்த்து 'நாம் பிரசங்கம் பண்ணியாயிற்று' என்றார். சீஷன் மிகவும் பிரமிப்போடு, 'போதகரே, நாம் ஜனங்களுக்கு உபதேசிக்கவில்லையே' என்றான். உடனே பிரான்ஸிஸ் அவனைநோக்கி, 'நாம் கிராமத்தின் வழியாய்ப் போகும்போது பலர் நம்மைப் பார்த்தார்கள். பார்க்கும் போது நாம் வணங்கும் கிறிஸ்துவைப்பற்றிச் சிந்தித்தார்கள்.

அதுவே சிறந்தது. நாம் அவர்களிடத்திற் பேசுவதைப்பார்க்கிலும் மிகவும் பலமாய் நமது ஜீவியம் அவர்கள் மனதில் ஆழமாய்ப் பதிந்தது' என்று கூறினார்.

'This Year also'

By Mr. J. A. Jacob

'ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்'

லூக் 13[8]

அவன் ஒரு ஜாக்கிரதையுள்ள எஜமான். அவன் தனது தோட்டத்தில் கனிதரும் விருக்ஷங்களை நட்டு, அவை தனக்கு சந்தோஷமுண்டாக்கவும், பார்ப்பவர்களுக்கு களிப்புண்டாக்கவும் வைத்திருந்தான். பற்பல விருக்ஷங்கள் நின்றன. எல்லாம் கனிதரும் விருக்ஷங்கள். ஆனால் அவைகளில் ஒரு விருக்ஷம் மூன்று வருஷங்களாய்க் கனி கொடுக்கவில்லை. எஜமானுக்கு மிகுந்த மனவருத்தமுண்டாயிற்று. அவ்விருக்ஷம் கனிகொடாமற்போனது மாத்திரமல்ல, நிலத்தையும் கெடுத்துப்போட்டது. அவ்விருக்ஷம் நின்ற விடத்தில் வேறொரு விருக்ஷம் நின்றிருக்குமானால் அது கனி கொடுத்திருக்கும். அதுவோ பூமியின் சாரத்தை எடுத்துக் கொண்டு, கனி கொடாமல் நின்றது. எஜமான் தோட்டக்காரனை நோக்கி, 'இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடிவருகிறேன், ஒன்றையும் காணவில்லை, இதை வெட்டிப் போடு, இது நிலத்தையும் என் கெடுக்கிறது' என்றான். தோட்டக்காரன் மாறுத்தரமாக, 'ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன். கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப்போடலாம்' என்று சொன்னான்.

நாம் எல்லாரும் தேவனுடைய தோட்டத்தின் விருக்ஷங்கள். நாம் கனிகொடுக்கும் விருக்ஷங்களாயிருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இவ்வுலகத்தின் சிலாக்கிய பாக்கியங்களைக் கடவுள் நமக்கு அளிக்கும்போது நாம் அவைகளால் கடவுளுக்குகந்த ஜீவிகளாயிருந்து அவருக்குக் கனிகொடுக்க வேண்டுமென்பதே அவருடைய சித்தம். அடிக்கடி நம்மிடத்தில் கனிகளுண்டா என்று பார்க்கிறார், ஆனால் காணோம். நமது ஜீவியத்தைச் சோதித்துப்பார்ப்போம். நாம் கனி கொடுக்கிற விருக்ஷங்களோ, அல்லது வெறும் இலைகளுள்ள விருக்ஷங்களோ? கடந்த வருஷத்தின் ஜீவியத்தைக் கவனிப்போம்.

நமது தனி ஜீவியம், குடும்ப ஜீவியம், சபை ஜீவியம், இவைகள் எப்படிப்பட்டன?

நமக்கு ஓர் எச்சரிப்பின் சத்தமுண்டாகிறது. அது தேவனுடைய நீதியின் சத்தம். 'இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் என் கெடுக்கிறது'—இச்சத்தத்தை நாம் கேட்கிறோமோ? மதியீனமான ஐசுவரியவான் சொன்னதுபோல நமது மனதைத் தேற்றிக் கொண்டிருக்கிறோமோ? நம்முடைய குடும்பத்தில், கடந்த வருஷத்தில் மரணம் வாயில்லை, ஒருவேளை நாம் ஐரோப்பாவிலிருந்தால் நாம் கலங்கிக்கொண்டிருப்போம். இங்கே நாம் சமாதானமாயிருப்பதால் நாம் அசதியாயிருப்போமோ? நமக்கு எச்சரிப்பின் சத்தம் உண்டாகிறது: 'இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் என் கெடுக்கிறது.'

ஆனால் இன்னும் ஒரு வருஷம் வைக்கப்பட்டிருக்கிறோம். இது தவணையின் காலம். கிறிஸ்து நமக்காகப் பரிந்துபேசி, நமக்காகக் கிருபையாய் இன்னொரு ஆண்டைத் தந்திருக்கிறார். கிருபையின் சத்தத்தை நாம் கேட்கிறோம்: 'இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன். கனி கொடுத்தால் சரி, கனி கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப் போடலாம்.'

நாம் இதுவரை கனிகொடாமலிருந்தோமானால், இனிமேலாவது கனிகொடுப்போமாக. 'நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய்' என்ற அந்த கெட்டகுமாரன் சொன்னவண்ணம், நாமும் சொல்லுவோம்; ஒரு புதிய ஜீவியத்தைச் செய்வோம். கிறிஸ்து நமக்கு ஒரு புதிய ஜீவியத்தைத் தரச் சித்தமாயிருக்கிறார். 'நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன்' என்ற சொல்லுகிறார். நாம் நமது ஜீவியத்தை அவருக்குமுன் பிரதிஷ்டை செய்வோமாக. செடியாகிய அவரிலே நாம் கொடியாக ஒட்டப்படுவோமாயின் மெய்யாகவே நாம் நல்ல கனி கொடுப்பவர்களாய் ஜீவிப்போம். 'ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்.'

A Zemindar's Testimony to Christ

ஒரு ஜமீன்தாரி கிறிஸ்துவுக்குப் புரிந்த சாட்சியம்

1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் 5-ம் 6-ம் தேதிகளில் புது இந்தியா (New India) என்னும் பத்திரிகையில் ராஜா எம். புஜங்கராவு

பகதூர் (Rajah M. Bhujanga Row Bahadur) மிகவும் கவனிக்கத் தக்கதான சில வார்த்தைகளே எழுதினர். இந்நாட்களில் சுய அரசாட்சிக்கென்ற பல வகுப்பார் பல ஆலோசனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாலோசனைகள் எவை என்ற அவர் ஒவ்வொன்றாகச் சொல்லி, ஒவ்வொன்றிலும் இருக்கும் குணங்களையும் குற்றங்களையும் எடுத்துக் காட்டி, கடைசியாக இந்தியா தேசம் இவ்வாறாக நல்ல ஸ்திதிக்கு வரும் என்ற நம்பமுடியாதான்றும், அது நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமென்றால் இந்தியர் இப்போது கிறிஸ்துவை எற்றுக்கொள்ளவேண்டும் என்றும் பின்வரும் வார்த்தைகளில் உறுதியாகச் சொன்னர்.

'ஐரோப்பா கண்டத்துத் தேசங்கள் முன்னொரு காலத்தில் வெகு தாழ்ந்ததும் கேவலமுமான நிலைமையில் இருந்தன. கிறிஸ்து மதம் அங்கே பிரவேசித்தபோது அவைகள் பிராகாசமடைந்து, பெரிதாகி, சற்சிருக்கு வந்தன. ஜப்பான் தேசத்துக்குக் கிறிஸ்து வந்தபிறகு கொஞ்சகாலத்துக்குள் அத்தேசம் முதற்றரமான தேசமாய்விட்டது. சீனு தேசம் மெத்த அறிவீனமாயிருந்து, தன் பெண்களுக்கு ஒடுக்கின பாதங்களைக் கொடுத்திருந்தபோதிலும், இயேசு அத்தேசத்தைத் தமது ஆவியால் ஆசீர்வதித்தவுடன் சீனு தேசத்துக்கும் வெளிச்சம் வந்தது. கொரீயா (Corea) சிறிதுகாலத்துக்குள் அழகான தீவாக மாறிப்போயிற்று. உள்ளதை இல்லதென்ற சொல்வதால் பயனில்லை. தேச சரித்திரங்களை வாசிக்கிறவன் தனக்காகத் தானே தெளிவாய்ப் பார்க்கிறது என்னவெனில், எத்தனையோ தேசங்களை ஆழ்ந்த தாழ்வி லிருந்து தூக்கி எடுத்த நாகரீகத்தின் முழுமேன்மைக்கும் உயர்த்தி யிருக்கின்றது எதுவெனில், இயேசுகிறிஸ்துநாதரின் சிறந்தபோதனை யும் சாதனையுமே. இப்படியிருக்க, என் உடன்தேசத்தாரே, இந்தியாவின் ஜனங்களுக்கு ஜனசமூகத்துக்கடுத்த விஷயங்களிலும் இராஜ்ய பரிபாலனத்துக்கடுத்த விஷயங்களிலும் தற்காலத்துள்ள கேவலமும் தாழ்வுமான ஸ்திதியை கவனித்து, நான் உங்களுக்குத் தணிந்துசொல்லும் ஆலோசனை யாதெனில், கிறிஸ்துவை உங்களுக்குச் சொந்த இரட்சகராக எற்றுக்கொண்டு, ஜாதியினுண்டான அநியாயத்திலிருந்தும், இராஜ்யத்தில் உண்டான கேட்டிலிருந்தும் அந்தகாரத்திலிருந்தும் உங்களையும் உங்கள் தேசத்தையும் விடுவித்து, நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவர்மூலமாகவே ஒழிய உங்கள் ஜனம் சீருக்கு வராது. ஜனம் சீருக்கு வராவிட்டால் இராஜ்யத்துக்கடுத்த விஷயங்களில் இரட்சிப்பில்லை.'

C. L. S. PRESS, MADRAS—1918

No. 142. மார்ச்சு 1918

வேதியர் விளக்கு

Editorial Notes

பத்திராதிபர் குறிப்புகள்

நமது பங்கீரிகை. சிலகாளுக்கு முன்னி நமது பத்திரிகையை வாங்குகிற சிலரிடத்தில் ஒரு காகிதத்தை எழுதியனுப்பினேம். வேதியர் விளக்கைப் பிரசுரிக்கிறது இக்காட்களில் இலேசல்ல. C. L. S. I. சங்கத்துக்கு இதினிமித்தம் பணாவந்டமுண்டு. இதில் எழுதுகிறவர்கள் சொற்பப் பெயர்தான். அதேகர் வாசிக்கிறார்களோ என்பது தெரியவில்லை என்ற இவ்விதமாய் எழுதி, இப்பத்திரிகை உண்மையாகப் பிரயோஜனமாயிருக்கிறதா, என்பதைக் குறித்து அபிப்பிராயங்களைக் கேட்டோம். பதில் அனுப்பின எல்லாருக்கும் நாங்கள் மிகவும் நன்றியறிதலைச் சொல்லவேண்டும். அதேக ஊழியருக்கு இப்பத்திரிகை பிரயோஜனமாயிருக்கிறதென்றும், எப்படியாவது அதை இன்னும் நடத்தவேண்டுமென்றும் தெரிவித்து, எங்களை அதிகமாய் உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். இப்போது புதிய தைரியத்தோடு இந்த வேலை செய்யக்கூடும். மேலும், சில முக்கியமான விஷயங்களின்பேரில் எழுதுவோம் என்ற நான இடங்களிலுள்ளவர்கள் வாக்கு கொடுத்திருக்கிறார்கள். நிசாமங்களில் ஆண்டவருடைய வேலை செய்கிறவர்கள் வேதியர் விளக்கு மூலம் உதவிபெறுவார்கள் என்ற நம்பிச் சந்தோஷப்படுகிறோம். ஆண்டவரைப்பற்றிய நற்செய்தி கிறிஸ்தவர்களுக்குள்ளும் புறமதஸ்தருக்குள்ளும் தொனிக்கவேண்டுமென்பதை எங்கள் வாஞ்சை. ஆண்டவர் அதற்கென்ற நமது பத்திரிகையை உபயோகித்து, எழுதுகிறவர்களையும் வாசிக்கிறவர்களையும் ஆவியால் நிரப்புவாராக.

இந்தச் சஞ்சிகையில் 'பாவமன்னிப்பு' என்கிற பொருளின்பேரில் சில வேதவாசிப்புப் பாடல்களை அச்சிட ஆரம்பிக்கிறோம். இவைகள் இங்கிலாந்திலுள்ள இரண்டு ஆங்கியோரால் இயற்றப்பட்டவை. கிலெக் (Clegg) அம்மாளால் நமது தேசத்துக்குத் தக்கபடி மாற்

றப்பட்டு தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளைக் கருத்தாய் வாசிக்கிறவர்களுக்கு நன்மையுண்டாகும் என்பதற்கு ஐயமில்லை.

நமது பத்திரிகையில் ஏன் நடக்கிற சமாசாரங்களைக் கொடுக்கக் கூடாது என்று சிலர் கேட்டிருக்கிறார்கள். பத்திரிகையை வாசிப்போர் அநேக மிஷன்களையும் சபைகளையும் சேர்ந்திருக்கிறபடியால் சிலர் பிரீதியோடு வாசிக்கிற சமாசாரங்களை மற்றவர்கள் கவனிக்க மாட்டார்கள். ஆயினும் பொதுவாக எல்லாருக்கும் பிரயோஜனப் படக்கூடிய சமாசாரங்களைக் கொடுக்கப் பிரயாசப்படுவோம். விசேஷமாய் யுத்தத்தைப்பற்றிச் சில முக்கியமான சமாசாரங்களை எழுதும்படி இனி ஏற்பாடு பண்ணுவோம்.

A Preaching Tour in Jaffna

By Mr. Samuel Muthiah

பெங்களூர் வேதசாஸ்திரக் கலாசாலையின் ஆசிரியரும் மாணவரும் யாழ்ப்பாணத்திற் செய்த சுவிசேஷ வேலை

இலங்கைத்தீவின் வடமாகாணத்திற்கு யாழ்ப்பாணம் என்று பெயர். தென்னை, கமுகு, வாழை முதலிய மூவகை விருட்சங்களாற் செழிப்புற்றிருக்கும் இந்நாட்டில் அமெரிக்கன், உவெஸ்லியன், ஆங்கிலிக்கன் என்ற மூன்று மிஷன்களும் ஐக்கியமாய் வேலைசெய்கின்றன. இம்மூன்று மிஷன்களையும் சேர்ந்த சபைகள், பெங்களூர் வேதசாஸ்திர கல்லூரியின் ஆசிரியரையும் மாணவரையும் தங்கள் நடுவிலும் புறமதஸ்தரின் மத்தியிலும் ஊழியஞ்செய்யும் நோக்கமாய் அழைத்தார்கள். அவ்வழைப்புக் கிசைந்து சென்ற 1917-ம் ௵ டிசெம்பர் ௴ 27௳ புறப்பட்டு 29௳ யாழ்ப்பாண தேசம் போய்ச் சேர்ந்தோம். எங்களுக்கு நேர்ந்த செலவின் பெரும் பாகத்தை அச்சபைகளே கொடுத்து உதவிபுரிந்தன. கனம் கிங்ஸ்பரி தேசிகரும் ஆறு மாணவரும் பருத்தித்துறை, கட்டவேலி, அல்வா, நெல்லியடி, கற்கோவளம், புத்தூர், ஆவரங்கால், சிறுப்புட்டி, வேலணை, பூங்குடிதீவு, காரைதீவு, உடுத்துரை முதலிய இடங்களிலும், கனம் பிலிப்ஸ் தேசிகரும் நான்கு மாணவரும் நாவாலி, மானிப்பாய், சாவகச்சேரி, அளவெட்டி, உடுவில், தெல்லிப்பழை முதலிய இடங்களிலும் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் இந்துக்கள் நடுவிலும் திருப்பணி செய்தோம்.

நாலு நாட்களாக நாவாலியில் நடந்த எழுப்புதல் கூட்டங்களில் கிறிஸ்தவர்களைச் சுவிசேஷ வேலைக்கு எழுப்பிவிடும் நோக்கமாய் 'பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' (அப். 1[8]) என்ற வாக்கியத்தின்பேரில் பிரசங்கித்தோம். சுற்றுக் கிராமங்களிலிருந்து கிறிஸ்தவர்கள் இக்கூட்டங்களுக்கு ஆவலாய் வந்தார்கள். கடைசிநாளில் நடந்த கூட்டத்தில் ஆண்களும் பெண்களும் இந்நாட்களில் தாங்களடைந்த ஆசீர்வாதங்களைக்குறித்துச் சாட்சி கொடுத்ததுமன்றி இப்புது வருஷத்தில் முன்னிலும் அதிகமாக தேவமகிமைக்கென்று உழைப்பதாக வாக்குக் கொடுத்தார்கள். நாங்கள் இலங்கையைவிட்டு இந்தியாவுக்கு வந்தபின் அவர்கள் எங்களுக்கு எழுதின கடிதங்கள் மூலமாகத் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றிவருகிறதாக அறிந்து சந்தோஷப்படுகிறோம். நாவாலியில் எங்களை மிகவும் அன்பாய்த் தங்கள் வீட்டில் ஏற்றுக் கொண்டு உபசரித்துக் கூட்டங்களில் அதிக உதவிபுரிந்த ஸ்ரீமான் உவில்லியம் மேதரவர்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

நாங்கள் போன எல்லா ஊர்களிலும் கிறிஸ்தவர்களுக்கு ஆலயத்திலும் வீடுகளிலும் பிரசங்கித்துப் புத்திசொல்லி அவர்களோடு ஜெபித்தோம். இந்துக்கள் வீடுகளையும் சந்தித்து அவர்களோடும் கிறிஸ்துவின் இரட்சண்ய மகத்துவங்களைப்பற்றிச் சம்பாஷித்தோம். கிறிஸ்த, இந்துப் பள்ளிக்கூடங்களுக்குப் போய்ப் பிள்ளைகளுக்கு தேகாப்பியாசம் நடத்தி, பாலருக்கேற்ற பாட்டுகளைப் படிப்பித்துச் சன்மார்க்க போதனைகளடங்கிய கதைகளும் சொன்னோம்.

கல்விமான்களான இந்துக்களுக்கு ஒவ்வொருநாளிரவிலும் பிரசாரணங்கள் செய்யப்பட்டன. கனம் பிலிப்ஸ் தேசிகரும் அவர் பகுதியாரும் 'வேண்டுவன வினவல்,' 'கடவுளின் திருவுருக்காட்சி,' 'அடியார் அநுபவம்' என்ற பொருட்களின்பேரில் உபந்நியாசித்தார்கள். கனம் கிங்ஸ்பரி தேசிகர் 'மலபரிபாகம்,' 'குருபரலட்சணம்,' 'முக்திலட்சணம்,' 'தடுத்தாட்கொண்ட சரிதம்,' 'புத்தர் சரித்திரம்' என்ற விஷயங்களில் உபந்நியாசம் செய்தார். ஆங்காங்குள்ள குருமாரும் சபையாரும் ஊழியத்தில் எங்களுக்கு உதவியாயிருந்தார்கள்.

இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் யாழ்ப்பாண தேசத்தில் புறம்பான விஷயங்களில் அதிக வித்தியாசங்களில்லை. ஒரே வீட்டிலேயே புருஷன் இந்துவாயிருக்கலாம், மனைவி கிறிஸ்தவளாயிருக்கலாம். ஒரே குடும்பத்திலுள்ள பல அவயவங்கள் தத்தமக்குப் பிரியமான மதத்தை யனுசரிக்க ஒருவாறு சுயாதீனமுண்டு. இந்நிலைமையில் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின்

உண்மையுள்ள சாட்சிகளாயிருந்து மற்றவர்களை ஆதாயம்பண்ணப் போதிய இடமுண்டு. ஆனால் பெலவீனக் கிறிஸ்தவர்கள் இந்துக்களின் பழக்க வழக்கங்களை யனுசரித்து விசுவாசத்தை விட்டு வழி விலகிப்போகவும் இடமுண்டு.

கிறிஸ்தவர்களிற் பெரும்பான்மையோர் வேளாள வருணத்தவர். இந்துக்களைப்போல் கிறிஸ்தவர்கள் ஜாதி வித்தியாசம் பார்க்கின்றனர். தாழ்ந்த ஜாதியாருக்குக் கிறிஸ்தவ சபையில் சம சிலாக்கியங்கள் மிகவும் குறைவு. இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவர்களுக்குள் வியாபித்திருக்கும் இத்தீமை எப்போ நீங்குமோ அப்போதான் நமது சபைகள் புதுப் பெலனடைந்து வாழ்வடையும்.

யாழ்ப்பாணத்துச் சபையாரிடமிருந்து நாம் படிக்கவேண்டிய அநேக பாடங்களுண்டு. அத்தேசத்திலுள்ள சபைகள் பெரும்பாலும் சுய ஆதரிப்புள்ளவை. புதுச் சபைகளை ஸ்தாபிப்பதற்கும், ஆலயங்களைக் கட்டுவதற்கும், போதகரை ஆதரிப்பதற்கும் உதாரத்துவமாகப் பொருளுதவி செய்கிறார்கள். ஆலயத்தில் அவர்கள் பக்திவினயமாய்த் தேவனை ஆராதிக்கும் விதம் யாவரும் பின்பற்றத்தக்கது.

இரண்டு வாரங்களாக நாங்கள் செய்த ஊழியம் எங்களுக்கும் மிகவும் பிரயோஜனமாயிருந்தது. கிறிஸ்துவுக்காகச் சாட்சி கொடுப்பதைவிட சிலாக்கியமான ஊழியம் இவ்வுலகத்தில் வேறில்லையென்பதை எங்கள் அநுபவத்திற் கண்டுகொண்டோம்.

The Things Behind, and the Things Before

By Mr. S. Kandiah Pillai

பின்னானவைகளும் முன்னானவைகளும்

(தொடர்ச்சி)

பிலி. 3[12-14]

II. அபிரயோசனமானவைகளை நீக்க மெய்யுணர்வை முன்வைக்கவேண்டும்.—

தன்னயத்தை நம்மைவிட்டு நீக்கியபின் நம்மைப் பரிசோதித்துப் பார்த்தால் நம்மிடத்தில் உபயோகமற்ற சில காரியங்கள் இருக்கவும் காண்போம். இவ்விஷயங்கள் நமது சிறந்த கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறைக்கும் ஏதுக்களாகவும் வரும். இதனாற்றான் பவுல் அப்போஸ்தலன் அவைகளை நீக்கத் தெண்டித்தார். நமக்குத் தேவையானவையென நாம் எண்ணுகிறவைகள்தானும் கெடுதியை உண்டாக்குகின்

றன. அபிரதானமானவை எவையெவை எனத் தொகுத்துச் சொல்லுதல் எளிதல்ல. கடவுள் உண்மை இது, பொய் இது எனக் காட்டியவைகளிலிருந்து நமது இதயத்தெழும் உண்மையானது இதை நமக்கு வெளிப்படுத்தும்.

'மையாடுகண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையுஞ்செந்தி
ஐயா நின்மாயை உருவெளித்தோற்ற மகிலத்துள்ளே
மெய்யாய் இருந்தது நாட்செல்ல நாட்செல்ல வெட்டவெறும்
பொய்யாப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போனதுவே'

என்பது ஓர் இந்து ஞானியின் உணர்ச்சி. நமது வேதமோ இதினும் சிறக்கப் போதிக்கின்றது. 'வானமும் பூமியும் அழிந்து போம்' எனவும், 'மனுஷன் வெளியின் புஷ்பத்தைப்போலப் பூக்கிறான்' எனவும், 'நம்மை மண்ணென்று நினைவுகூருகிறார்' எனவும் வாசிக்கிறோம். எவை நிலையில்லாது அழிகின்றனவோ, அவைதான் பிரதானமற்றன. அவைதான் நாம் பின்னானவைகள் என ஒதுக்கும் கழிவுபொருள். நமது உடம்புக்கு நாம் எவ்வளவு செய்கின்றோம்! அது அழியும்பொருளென்றுதானே நமக்குத் தெரியும். மெய்யுணர்வு நம்மில் இருக்குமானால் எங்களில் அநேகர் உடம்பிலும் பார்க்க ஆன்மாவைப் பற்றிக்கொள்வார்கள். அழிவில்லாத, என்றும் நிலைக்கும் தன்மையுடைய, வஸ்துவையும் கடவுளையும் அறிவதே மெய்யறிவு. அல்லது தன்னை அறியும் அறிவு தலையறிவு. அந்த அறிவு தலைவனையும் அறிவிக்கும்.

எங்களைக் கிறிஸ்துவை விட்டுப் பிரிக்கும் எதுவும் அபிரதானமானவையே. ஒருமுறை நம் ஆண்டவர் சீஷர்களை நோக்கி, 'இவையெல்லாம் உங்களுக்கு வேண்டுமென்று பரமபிதா அறிவார்' என்றும் 'அவற்றைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டியதில்லை' என்றும் சொன்னார். தினந்தினம் தேவையான உடை உணவுதானும் எமது சத்துருக்களாகக் கூடும். அவற்றைத் தந்த கடவுளின் கருத்திற்கியையப் பாவியாதிருந்தால் நம்மை அவைகள் கெடுக்கும். சுகமும் கல்வியும் திறமையும்கூட எத்தனை மனுஷரைப் பாவத்தில் விழப்பண்ணின? இதற்குதாரணம் நமது வேதத்திலும் காணலாம்.

திரட்டிப்பார்க்கில் நமது உலக சீவியத்துக்கு அவசியமில்லாத பொருள்களை நாம் பின்னாக்கவேண்டுமென்றும், உலக சீவியத்திற்குத் தேவையானவைகளை நாம் பின்னாக்கி ஆண்டு நடத்தவேண்டுமென்றும் காண்போம். சத்தியத்தைக் குறித்துப் போதிக்கவும் அதை நிலைநிறுத்தவும் தேவன் மனுடனாக இங்கே தோன்றினார். அவராற் கிடைத்த சீவனுள்ள மெய்யுணர்வுதான் இன்றைக்கு உலகமெங்

கும் நிறைந்துகொண்டிருக்கின்றது. அந்த உணர்வுதான் எம்மை வழிநடத்திக்கொண்டிருக்கின்றது. எல்லாவற்றையும் விட்டுப் பின் பற்றிவா என்ற வாக்கியம் அழியும்பொருளையும், மெய்யுணர்வு என்னும் ஒளியையும் அறிந்தவர்களுக்குத்தான் சொல்லப்படுகின்றது. எமக்கு முன்னுள்ள மெய் உணர்வு, பிரதானமற்ற பொருள்களைப் பின்னுக்கும்.

III: "நான்" என்பதைப் பின்னுக்குக் கிறிஸ்து முன்னுக வர வேண்டும்.

தன்னயம், உபயோகமற்றவைகள் எம்மைவிட்டு நீங்கினாலும் இன்னும் நாம் அதிகமாகப் பயப்படக்கூடிய ஒரு தற்குணம் நம்மோடிருக்கும். இரட்சகரின் கடமைகளைச்செய்து மெய்யுணர்வடைந்தாலும் அந்தத் தற்குணம் காணப்படும். 'நான் செய்தேன்,' 'நான் அறிவேன்,' 'நான்' என அது வெளிநாடும். எனக்குரியது, எனது, என்பன இருக்கும்போது 'நான்' அவ்வளவு விறுவிறுப்பாய் இராது. எனைநத் தேட முயற்சிக்கும் நான் தன்னையும் வேளாவேளைகளில் காட்டாத காத்துறையும். தன்னயம், அபிமோசனமானவை எனப்படும் 'எனது' எம்மைவிட்டு நீக்கிவிட நான் என்பது களைநீக்கிய நெல்லைப்போல வளரப்பார்க்கும். அந்த நான் என்பதை அடக்காமல் விட்டோமெனில், பேதருவைப்போல மறுதலிக்கவும் வேண்டிவரும். அவன் 'தனது' எல்லாவற்றையும் விட்டபிறகு வளர்ந்துவந்த 'நான்' என்பதுதான் அந்தப் பெரிய விழுதலுக்குக் காரணமாகவந்தது. பவுல் அப்போஸ்தலன் ஞான சீவியத்தில் வளர வளர தன்னிடத்திருந்த நான் என்பதைக் கண்டார். அதை மடக்கத்தக்க கருவியை அதாவது கிறிஸ்துவை அதன்மூன் வைத்ததினால் 'நான்' என்பது அவர் பிற்சீவியத்திற் குறைந்து குறைந்து ஈற்றில் இல்லாமற்போயிற்று.

அழகும் குணமும் கல்வியும் செல்வமும் நிறைந்த ஓர் கன்னிகை தேசசட்டத்தின்படி பிராயமாகிறபோது தான் நினைத்தபடி நடக்கத் தக்க சுதந்தரம் உண்டாகின்றது. உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் இது ஒத்துக்கொள்ளப்படும். ஆனால் அந்தக் கன்னிகை ஒரு கணவனின்கீழ் மனைவியாக எப்போது கட்டப்படுகிறாளோ, அந்த நிமிஷம் அவள்தான் தன் எண்ணப்படி ஒன்றும் செய்ய இயலாதவள் ஆகின்றாள். 20,000 ரூபா சொத்துடைய ஒரு கன்னிகை விவாகமானதின்பின் புருஷனுடைய அனுமதியில்லாமல் தன்னுடைய சாதனங்களை 20 ரூபாய்க்கும் ஈடுவைக்கவும் முடியாது. தன் எண்ணப்படி ஒரு பொருத்தம் செய்யவோ, புருஷன் எண்ணமின்றித் தனது பொருளைப் பிள்ளைகளுக்குத் தானும் பங்கிடவோ முடியாது. இப்

படி இருக்கும் தான் விவாகமின்றி இருக்க எந்தப்பெண் விரும்புவாள்? ஒரு பெண்பிள்ளை தன் எண்ணப்படி தனது சீவியத்தை நன்றாக முடிக்க இயலாதென்றே உலகம் எண்ணி இந்தப் பிரமாணத்தை நிலைநிறுத்தி இருக்கிறது. ஆனால் தாங்கள் எங்களை நம்பிச் சீவிக்கமுடியுமோ? எமக்கு ஒரு பரமநாயகர் இருந்தால் எல்லாம் அவர் செய்வார். நான் என்பது நாயகனுக்குமுன் தோன்றாது. கிறிஸ்து எனக்கு நாயகனில், 'நான்' என்பது அவர்முன் இல்லாமற்போகும். அவர் எமது பிறந்த பத்தாவாக இருக்கட்டும். ஒரு அடியான் சொன்னதுபோல நாங்கள் 'உமது அடிமை' என்று சொல்லுவோம். கிறிஸ்துவை நாம் மணந்தால் எமது சுயாதீனித்தம் இல்லாதபோகும். அதாவது 'நான்' என்பது அழியும்.

அவரின் அன்பு எங்களைச் சந்தோஷிப்பிக்கும். தனது உடைமைகளையும், நான் என்ற எண்ணத்தையும் மறந்து உண்மையான மனைவி தன் கணவனை எவ்வாறு பொருந்தி ஆனந்திப்பாளோ, புருஷனுக்குப் புரியவேண்டிய கடமைகளைப் புரிவதில் எவ்வளவு பெருமகிழ்கொள்வாளோ, தனது அன்பனின் சமூகத்தை எவ்வளவு இன்பமென்று நினைப்பாளோ, அதைப்போலவே நாமும் நம்மை மறந்து இயேசுபெருமானின் பத்தினிகளாக இருப்போம். அவரும் எம்மை உண்மையாக நேசித்து ஆறுதல் தந்து, எமக்குத் தேவையானவைகளை யெல்லாம் அளித்து, பெருமையாகத் தனது மனைவியை வைத்திருக்கும் கணவன்போல வைத்திருப்பார்.

எம்மிடத்தில் முன்னுக்கு கடமையும், மெய்யுணர்வும், கிறிஸ்துவும் இருந்து இன்பந்தரும். தன்னயம் முதலிய பின்னுனவைகள் பறந்தோடும். நாம் கிறிஸ்துவோடிருப்போம்.

The Preparation of Sermons

By the Rev. H. Spencer, B.A.

பிரசங்கமுறை

(தொடர்ச்சி)

நாலாவது, பிரசங்கத்தின் பலன். பவுல் தன் சுவிசேஷத்தைக் கூறுவதில் தனக்கு முன்வைத்திருக்கிற குறியையும், படும் பிரயாசத்தையும் விவரித்ததற்குப்பிறகு, தான் எந்த பலத்தினால் அந்த வேலையைச் செய்துவருகிறேன் என்று எழுதியிருக்கிறான். எப்படியென்றால், அப்படி நிறுத்தும்படி என்னில் பலமாய்க் கிரியை செய்கிற

அவருடைய எவதலுக்குச் சரியாய்ப் போராடிக்கொண்டும் பிரயாசப்பட்டுக்கொண்டுமிருக்கிறேன் என்கிறான். இந்தக் கனமான வேலையைச் செய்வதில் இந்த ஒரே நோக்கம் நம்மில் இருக்கவேண்டும். நம்முடைய பலத்தினாலுமல்ல, சக்தியினாலுமல்ல, தேவனுடைய ஆவியானவருடைய பலத்தினாலேயே சுவிசேஷத்தைக் கூறும் ஊழியம் நடந்தேறுகிறது. இந்த நோக்கம் இருப்பதால் நமக்குத் தைரியமும் எச்சரிக்கையுமுண்டாகிறது. தேவன் தம்மை இந்த ஊழியத்திற்கென்று அழைத்திருக்கிறார் என்று நம்புகிற பவனும் தன் புத்தியையும் சக்தியையும் கடன் என்று பாவித்து வேலையை விடவேண்டிய அவசியமிருக்காது. தேவன் தமது ஊழியத்தைச் செய்ய அழைத்த யாவருக்கும் வேண்டிய சாமர்த்தியத்தைக் கொடுக்கிறவராயிருக்கிறார். அந்த சாமர்த்தியம் மனுஷருக்குள் குறைந்து போகும் சாமர்த்தியமல்ல, அது என்றென்றுமுள்ள தேவனுடைய சாமர்த்தியமே. இந்த பலமான எவதலே உண்டாக்கியிருக்கிற வேலை எதென்றால் அது கிறிஸ்துவை மரித்தோரிடத்திலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையே. (எபே. 1[19].) தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லையே. அவர் தமது வல்லமையை நமக்கருளுவதால் நமக்கும் கூடாதகாரியம் ஒன்றுமில்லை.

நாம் ஊழியஞ்செய்வதற்காக இந்த எவதல் நமக்கு வருகிறது என்று நினைக்கலாகாது. அதற்கு அனுசாரமாய் நாம் போராடிக் கொண்டு பிரயாசப்படுகிறவர்களாயிருக்கவேண்டும். இந்த விஷயத்தை விஸ்தாரமாய் விவரிக்க அவசியமில்லை. இதைப் படிக்கும் ஒவ்வொரு பிரசங்கியும் இவைகளே மனதில் வைத்து நான் தேவனோடு உடன்ஊழியனாயிருக்கிறேனென்று எண்ணி வினயத்தோடும் தைரியத்தோடும் நற்பலனடையும் விதமாய் தன்னூழியத்தைச் செய்து ஒருபாகத்தில் நம்பிக்கையுள்ள ஊழியர்களுக்குண்டாகும் கிரீடத்தை யடையவேண்டுமென்று கோரி இவைகளே எழுதுகிறேன்.

(முடிவு.)

The Forgiveness of Sins

(Studies for Seven Weeks. Adapted from the English by Miss Clegg.)

1-ம் கிழமை. பாவமன்னிப்பின் ஆச்சரியம்

நாளாந்தர வாசிப்பும் தியானமும்

1-ம் நாள். லூக். 7[36-45].

தண்ணீரில்லை, தைலமில்லை, முத்தமில்லை, மரியாதையில்லை..... .....இல்லை. இதிலே விடப்பட்டிருக்கிற சொல்லு என்ன? இது பெரிய பாவமா? சீமோன் அதை உணராமலிருந்தான். இதிலுலே அவனுடைய பாவம் சிறியதா? அல்லது பெரியதா?

2-ம் நாள். வெளி. 1[4-6].

'நீதன் யேசெனே நேசிக்கிறரெனல் நித்தமாச்சரியம்' (14-ம் கீர்த்தனை). இந்த கீர்த்தனையைப் பாட எவிவிட்டது என்ன? (§ 1.)

3-ம் நாள். சங். 130.

மகா மன்னிப்பைப்பற்றிய சில வேதவசனங்களே எடு. இவ்வசனங்கள் எப்படி நமக்கு உதவியைக் கொடுக்கும்? (§ 1.)

4-ம் நாள். எபே. 3[8-12].

ஆச்சரியத்தைக் காட்டுகிற சில பாட்டுகளைத் தெரிந்துகொள். இவைகளில் கிறிஸ்தவர்கள் என்னத்தைக்குறித்து ஆச்சரியப்படுகிறார்கள்? (§ 1.)

5-ம் நாள். 2[11-18].

'நான் மன்னிக்கிறேன், ஆனால் நான் மறக்கவேமாட்டேன்.'

'நான் மன்னிக்கிறேன், ஆனால் நான் அவன் வீட்டுக்குப் போகமாட்டேன்.'

'நான் மன்னிக்கிறேன், ஆனால் இது கடைசிமுறை.'

இப்படிப் பேசினவர்கள் மெய்யாய் மன்னித்துவிட்டார்களா? உங்கள் உதாரணங்களைச் சொல்லுக. (§ 3.)

6-ம் நாள். 1 யோவா. 3[1-3].

தேவன் மன்னிக்கும்போது அது பூரணமான மன்னிப்பு. இதை உன் பிள்ளைக்கு விளங்கப்படுத்துகிறவிதமாய் விளங்கப்படுத்து. (§ 4.)

7-ம் நாள். வெளி. 5.

சம்பந்தம் எவ்வளவு உறுதியாயிருக்கிறதோ, திரும்ப ஐக்கியப்படுதல் அவ்வளவு உண்மையும் பூரணமுமாயிருக்கவேண்டும். குறைவான மன்னிப்பை என் பொறுக்கமுடியாது? (§ 4.)

1. இங்கிலாந்து, பிரான்சு முதலிய தேசங்களில் கட்டப்பட்டிருக்கிற தேவாலயங்களில் அநேகர், அதிக விஸ்தாரமும், மகா உயரமும், மெத்த அலங்காரமுமாய்க் கட்டப்பட்டிருக்கிறதினாலே, அவைகளில் உட்பிரவேசிக்கும்போது நாம் எவ்வளவு அற்பமும், முக்கியமின்மையுமுள்ளவர்களென்று உணர்ந்து, அதிக பக்திபூர்வகமான பயத்தோடே பலிபீடத்தண்டைச் சேருகிறோம். இப்படிதான் தேவன் எக்கன் ஆத்துமாவின் புகலிடமாகவும், மகிழ்ச்சியாகவும் கட்டின இரட்சண்ய பலிபீடத்தை நாம் சேரும்போது ஆச்சரியத்தினாலும், கன்றியறிதலினாலும் நிரப்பப்பட்டிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்து கொடுக்கும் மன்னிப்பு எவ்வளவு பெரியதென்று நினைக்கும்போது நாம் அபாத்திரரென்று உணர்ந்து தாழ்த்தப்படுகிறோமென்று தேவபக்தியுள்ளவர்கள் சொல்லுவார்கள்.

'வேதத்தாச்சியம் வெகுவாய்த் தோணுகிலும்
காதன் யேசென்னை நேசித்தசெய்தி யெக்காளுமாச்சரியம்.'

நாம் இயேசுகிறிஸ்துவில் கண்ட பாவமன்னிப்பைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் எங்கள் இருதயம் கொழுந்துவிட்டெரியவேண்டும்.

2. எங்களுடைய கிறிஸ்தவ ஜீவியம் எவ்வளவு ஆழமாயும் தேறினதாயும் இருக்கிறதோ, இந்தப் பெரிய ஈவுக்காக நாம் உணருகிற கன்றியறிதல் அவ்வளவு அனல்கொண்டதாயிருக்கும். கிறிஸ்தவ ஜீவியத்தின் துவக்கத்தில் ஆழமான பாவ உணர்ச்சி எல்லாருக்கும் இராது. தேவன் தமது ஞானமுன்னை சித்தத்தின்படி இந்த ஈவைத் தருகிறார். என் ஆத்துமா தாங்கக்கூடிய அளவில் என் உன்னான பாவத்தை எனக்கு உணர்த்தியருளும் என்கிற ஒரு பாட்டிருக்கிறது. முதலில் தேவன் காண்கிறவிதமாய் நாங்கள் பாவத்தைக் காணக்கூடியவர்களாயிருந்தால் முற்றும் தைரியவீனப்பட்டவர்களாயிருப்போம்.

'பத்து வருஷகாலமாய் நான் தேவனைச் சேவித்தபிற்பாடுதான்; புதிய பார்வையோடு அவரைக் கண்டேன், அற்கோமே என்னை மன்னிக்கிறதற்குத் தேவன் கொடுத்த விலை எவ்வளவு பெரியதென்று உணரத்துவக்கினேன்' என்று தேவனை நெடுங்காலமாய்ச் சேவித்த ஒருவன் சொன்னான். இயேசுவானவரோடுகூட நெடுங்காலமாய்ப் பயணம் பண்ணினவர்கள் போகப் போகத் தங்களுடைய சொந்த அபாத்திரத்தையும், இரட்சகர் தங்களுக்கு மன்னிப்புண்டாக்கும்படி காட்டின பெரிய இரக்கத்தையும் இன்னும் அதிகம் அதிகமாய் உணருகிறார்கள். இதை மனதில் வைத்துக்கொண்டு, பாவம் இன்னதென்றும், பரிசுத்தம் இன்னதென்றும் நாம் இன்னும் தெரியாதவர்களாயிருக்கிறோமென்று நினைத்து, பாவமன்னிப்பு அற்பமான காரி

யமும், இலேசான காரியமுமென்று மதியாமல், தேவன் எங்களுக்கு மன்னிக்கக் கடன்பட்டவரென்று எண்ணுமல், அது அவருடைய பெரிய தயவு என்று எண்ணுவோம். கிறிஸ்தவ ஜீவியம் இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியசம்பந்தம். பாவமன்னிப்பு என்னும் ஈவைப் பெற்றுக்கொள்ளுகிறதினாலே மாத்திரம் இந்த திவ்விய சிநேகிதத்தில் பிரவேசிக்கிறோம். 'பாவமன்னிப்புண்டென்று விசுவாசிக்கிறேன்' என்று சொல்லுகிறோம். இதின் கருத்து என்னவென்றால், தேவன் தம்முடைய ஐக்கியசம்பந்தத்தில் எங்களை ஏற்றுக்கொள்ளுகிறார். இந்த நோக்கத்துக்காக அவர் தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நமக்காக அவரை ஒப்புக்கொடுத்தார். இதைவிட வேறொன்றும் முடியாது.

இது இப்படியிருக்க, தேவன் இயேசுகிறிஸ்துவிலே செய்த பலியல்லாமல் பாவமன்னிப்பு நீதிவிஷயமான காரியமல்லவென்று காண்கிறோம். எங்களுடைய அபாத்திரமான ஜீவியத்தையும் கிறிஸ்துவின் பரிசுத்தத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து, தவறி விழுகிறவர்களாகிய எங்களுக்கு அவர் கிட்டிச்சேர்ந்து, எங்களை நேசித்து, நாடோறும் எங்களோடு வாசம்பண்ணுகிற அவருடைய மகாதயவை உணர்வது எங்களிலே அதிக ஆச்சரியம் உண்டாக்கவேண்டியது.

கிறிஸ்தவ ஜீவியத்தில் வளருகிறதற்கு நாம் இயேசுகிறிஸ்துவில் வைக்கும் அன்பு பெருகவேண்டும்; பாவமன்னிப்பு எங்களிலே ஆச்சரியத்தையும் பயத்தையும் உண்டாக்குகிறதால் ஒழிய அன்பு வளராமாட்டாதென்று எங்கள் ஆண்டவர் தாமே எங்களுக்குப் போதிக்கிறார். (லூக். 7[16.45].)

3. தேவன் மன்னிக்கும்போது அவர் வாக்கினால் மாத்திரம் மன்னிக்கிறவரல்ல. உன்னுடைய கடன் தீர்ந்தது, இனி உனக்கும் எனக்கும் காரியமில்லையென்று அவர் சொல்லமாட்டார். அவரிடத்திலும் என்னிடத்திலுமிருந்த ஐக்கிய சமபந்தத்தை நான் என் பாவத்தினால் கெடுத்தேன்; இப்போதோ அவர் என்னைத் திரும்பவும் தம்மோடுகூட இணைத்திருக்கிறார். 'நான் மன்னிக்கிறேன் ஆனால் முன்பிருந்த மாதிரி நான் அவனோடு இருக்கக்கூடாது,' 'நான் மன்னிக்கிறேன் ஆனால் இனி அவனோடு பேசமாட்டேன்,' இவ்விதமாய்ப் பேசுகிறவர்கள் மன்னிப்பின் தன்மையைக் கொஞ்சமும் அறியாதிருக்கிறார்கள். மன்னிப்பு என்னவென்றால் முன்பிருந்த சம்பந்ததற்கு ஒருவனைத் திரும்பக்கொண்டுவருதல். சம்பந்தம் எவ்வளவு உறுதியாயிருக்கிறதோ, திரும்ப ஐக்கியப்படுத்தல் அவ்வளவு உறுதியாயிருக்கும். எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த என் வண்ணானை மன்னித்து, மறுபடியும் என்னுடைய வேலையை

அவனுக்குக் கொடுக்கிறதாலல் நான் அவனைப் பூரணமாய் மன்னித்துவிடுகிறேன். பூரணமாய் மன்னிக்கிறதிலுலே அவனை என் சிநேகிதனுக்கிக்கொள்ளமாட்டேன். ஆனல் என்னுடைய அருமையான சிநேகிதன் துரோகஞ்செய்து என் உத்தியோகத்தையும் குடும்பத்தையும் கெடுக்கிருனுகில், அவனை மன்னிக்க இன்னும் எவ்வளவு பிரயாசமான காரியம்! எங்களுடைய சிநேகம் அத்தரங்கமும் அருமையுமாயிருந்தபடியினல் திரும்ப ஐக்கியப்படித்தல் இருவருக்கும் பிரயாசமாயிருக்கும். அவ்விருவருக்குள்ளிருந்த பூரண கம்பிக்கையைத் திரும்பவும் ஸ்தாபிக்கக்கூடாதென்று சிலர் சொல்லுவார்கள். மெய்யாய் நாங்கள் இருவரும் எங்களுடைய பழைய சிநேகிதத்தை ஸ்தாபிக்கவேண்டுமானல் அதிக தொல்லையும் மனவருத்தமும் அனுபவிக்கவேண்டியவர்களா யிருப்போமே. என்னுடைய வண்ணனைப்பார்க்கிலும் என்னுடைய சிநேகிதனை மன்னிப்பது அதிகப் பிரயாசம்.

4. இப்படி இருக்க தேவன் எங்களை மன்னிப்பது எவ்வளவு அதிசயம். எங்கள் ஆண்மா தேவனோடுகூட அவ்வளவு நெருங்கி ஜீவிக்கக்கூடியதாயிருக்கிறபடியினலும் எங்கள் உத்தம சிநேகிதரைப் பார்க்கிலும் அவர் எங்களுக்குக் கிட்டியிருக்கிறபடியினலும் அவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்கு உண்டாக்கின மன்னிப்பைப் போல வேறொன்றுமில்லை. சம்பந்தம் இவ்வளவு அத்தரங்கமாயிருக்கிறபடியினல், பிரிவினையிருந்தால் இருபக்கத்திலுண்டாகும் வருத்தம் அதிகம் இருக்கும்; திரும்ப ஐக்கியப்படித்தல் உண்மையும் பூரணமுமாய் இருக்கவேண்டும். தேவன் பாதிமன்னிப்பைக் கொடுக்கச் சித்தமுள்ளவரல்ல. தமது பிள்ளைகளை அடிமைகளாக அவர் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அவர் மன்னித்துவிட்டார், முற்றுய் மன்னித்துவிட்டார். தன் மடியிலே தூங்குகிற பிள்ளையோடு மாதா எவ்வளவு சமாதானமுள்ளவளாயிருக்கிருளோ தேவன் எங்களோடு அவ்வளவு சமாதானமுள்ளவராயிருக்கிறார்.

தேவன் மனுஷர் மன்னிக்கிறவிதமாய் மன்னியாமல் உதாரகுணமாயும், விஸ்தாரமாயும், பூரணமாயும் மன்னிக்கிறவராயிருக்கிறபடியினலும், அவர் எங்களுக்குக் காட்டுகிற அந்த திவ்விய சிநேகிதமும் ஐக்கியமும் ஒழிந்துபோகாமல் நித்தியத்திற்கு நிலைநிற்கக்கூடியதாயிருக்கிறபடியினலும் அதிலே யாதொரு கம்பிக்கையீனம் அல்லது விரோதம் பொறுக்கமுடியாது. இயேசுகிறிஸ்துவினுலே தேவனோடு நாம் அனுபவிக்கிற இந்தச் சம்பந்தம் மனுஷருக்குள்ளிருக்கிற ஒவ்வொரு ஐக்கியத்துக்கும் மேலானது. அதிலே தேவன் தமது பிள்ளைகளோடு பேசி தமது மனதை அவர்களுக்குத் தெரிவிக்கிறார்.

அவர்களும் அவரை அறிந்தும் அவரை சேவித்துமிருக்கிறார்கள். கெட்டவர்களாகிய எங்களை இந்தப் பெரிய சிநேகிதத்தில் ஏற்றுக் கொள்ளும்படி தேவன் கண்டெடுத்த வழி எங்கள் எண்ணத்திற்கு எட்டாததாயிருக்குமே.

2-ம் கிழமை. பாவமன்னிப்பு கடினமானது

நானாந்தர வாசிப்பும் தியானமும்

1-ம் நாள்— லூக். 15[11-32].

நியாயாதிபதி குற்றவாளியை மன்னிக்கிறார்; தகப்பன் குமாரனை மன்னிக்கிறார். நியாயாதிபதியும் தகப்பனுமாகிய இவ்விருவருக்கு இது என்னவாய் முடியும்? ஒரு வசனத்திலே சொல்லு. இவர்களுடைய மன்னிப்பை ஒப்பிட்டுப்பார்க்கில் தேவனுடைய மன்னிப்பு இன்னும் அதிகம் என்று சொல்லக்கூடுமா? (§ 5.)

2-ம் நாள். சங். 103.

தேவன் எப்போதும் அன்பு காட்டுகிறுரென்று சொல்லக்கூடுமா? தேவன் எப்போதும் மன்னிக்கிறுரென்று சொல்லக்கூடுமா? உன் உதாரணங்களைச் சொல்லு. (§ 6, 7.)

3-ம் நாள். மாற். 2[1-12].

எங்கள் ஆண்டவர் தாம் பாவங்களை மன்னிக்கக்கூடியவர் என்று சொன்ன சில சமயங்களைச் சொல்லு. (§ 8.)

4-ம் நாள். மத். 26[20-28].

இவ்வசனங்களை வாசிக்கும்போது பாவமன்னிப்பு ஒரு இலேசான காரியமல்லவென்று காண்கிறோம். அது பெரிய விலையினல் வாங்கப்பட்டது. தேவன் இந்த விலையைக் கொடுக்காமல் அதைச் செய்யக்கூடாதா? ஆம் என்றுசொன்னல் ஏன் என்று சொல்லு. (§ 8.)

5-ம் நாள். மத். 6[12,14,15]; லூக். 11[3]; மாற். 11[25].

நீ அறிந்த அல்லது வாசித்த பெரிய மன்னிப்பைப்பற்றிய சமயங்களைச் சொல்லு. (§ 10.)

6-ம் நாள். லூக். 23[34, 39-43].

இந்த தகப்பன் மகனுக்கு எழுதக்கூடியவிதமாய் ஒரு கடிதத்தை எழுது. (§ 10.)

7-ம் நாள். மத். 5[44-48].

கிறிஸ்தவர்கள் காளுக்குநாள் மன்னிக்கப்படவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆனல் எங்கள் கிறிஸ்தவ ஜீவியத்துக்கு அஸ்திபாரமாக ஒரேதரம் பெற்றுக்கொள்ளவேண்டிய ஒரு மன்னிப்புண்டு. (யோவா. 13[9-10].) இந்த மன்னிப்பைப்பற்றி நீ அறிந்ததைச் சொல்லு. அதை எவ்விதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறோம்? (§ 5.)

5. இயேசுகிறிஸ்துவின் போதனையை நாம் பார்த்தால் தேவன் எங்களை மன்னிக்கிறவிதம் நாம் முற்றுமாய் அறியக்கூடாதிருந்தும், அதைப்பற்றி கொஞ்சம் அறியலாம். அவர் மனுஷருக்குரிய உதாரணங்களைக்கொண்டு எங்களுக்குப் படிப்பிக்கிறார். 'எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்' என்ற ஜெபம்பண்ணும்படி போதிக்கிறார். தேவன் மன்னிக்கிறவிதம் நாம் அறிய விரும்பினால் பெற்றார் பிள்ளைகளை நடத்துகிறவிதத்தைப் பார்க்கலாம் என்று சொல்லுகிறார். தூர தேசத்திலிருக்கிற இராஜா ஒருவனை இழந்துபோன உத்தியோகத்தில் திரும்பவும் ஏற்படுத்துகிறதுபோல, அல்லது நியாயாதிபதி குற்றவாளியைத் தண்டியாமல் விடுகிறதுபோல தேவன் மன்னிக்கிறவரல்ல. கெட்டகுமாரனின் கதையை வாசிக்கும்போது பரமபிதாவின் தன்னிஷ்டமான அன்பையும், கெட்டுப்போன பாவிகளைத் தேடவும் இரட்சிக்கவும் அவருடைய பெரிய ஆசையும், இழந்துபோன குமாரனைப் புதிய ஜீவியத்திலும் சகவாசத்திலும் ஏற்றுக்கொள்ளுகிற விதத்தையும் காண்கிறோம். இந்த மன்னிப்பு பாவஞ் செய்தவன் காத்திருக்கக்கூடாத விதமாய் விஸ்தாரமும் உதாரமுமானது. இந்தத் தயாளமானவிதமாய் ஒருவர் மன்னிக்கக்கண்டால் மனிதரின் அகலமில்லாத இருதயம் தடுமாறிப்போகிறது. தேவனுடைய அன்புக்கு எல்லையில்லை; அவருடைய மன்னிப்பு பூரணமுள்ளது.

6. சிலர் இந்த உவமையை எடுத்து பாவமன்னிப்பு பிரயாசமான காரியமல்லவென்று சொல்லுகிறார்கள். தேவன் பூரண அன்போடு உலகத்தை ஆண்டுநடத்துகிறார் என்று சொல்லி, குறைவற்ற அன்பு இருந்தால் எப்போதும், எல்லா நிலைபரத்திலும், யாதொரு எல்லையில்லாமல் மன்னிக்கிறதில்லையா வென்று கேட்கிறார்கள். உத்தம அன்பின் சுபாவம் மன்னிக்கிற சுபாவம், முதல் மனஸ்தாபப்பட வேண்டுமென்கிற அன்பு நம்பிக்கையில்லாத, பூரணமில்லாத அன்பு என்கிறார்கள். தேவன் பூரண அன்புள்ளவர், சருவ வல்லமையுள்ளவர், ஆனபடியினால் அவர் எப்போதும் மன்னிக்கிறவராயிருக்கிறார் என்கிறார்கள். 'தேவன் மன்னிப்பார்! அவர் மன்னிக்கத்தான் வேண்டும். மன்னிப்பது அவருடையவேலை' என்று ஒருவன் சொன்னான்.

7. இதைக்கொஞ்சம் பார்ப்போமாக. இந்த உவமையைத் திருப்பிப் பார்த்தால் தகப்பன் நெடுங்காலமாய் மனம் சோர்ந்து, தளர்ந்து நிற்கவேண்டியதாயிருந்தார். சமயம் கிடைக்கும் வரைக்கும் மன்னிக்கக்கூடாதவராயிருந்தார். அவர் மகனை நேசியாத வேளையில்லை; அவர் மகனை மன்னிக்கக்கூடாத வேளையிருந்தது. அன்பும் மன்னிப்பும் சரி என்று அநேகர் எண்ணுகிறார்கள். இது பிழை. அன்பு தன்னிஷ்டமாயுள்ளது, எல்லையில்லாதது, சம்பூரணமுள்ளது, நிபந்தனையில்லாதது. மன்னிப்போ அப்படியல்ல. மகன் தாயின் அன்பைக் கெடுக்கக்கூடாது, ஆனால் கூச்சமில்லாமல் கெட்ட வழி

களில் நடக்கிறதினாலே அவனுக்கும் அவளுக்குமிருந்த ஐக்கியத்தைக் கெடித்து, மன்னிக்கிறதற்குத் தடைபண்ணுகிறான். அவன் இப்படி நடக்கும் மட்டும் மன்னிப்பு வெறுமையாயிருக்கும் அல்லது அயோக்கியமாயிருக்கும். அன்பு எப்போதும் மன்னிக்க ஆயத்தமுள்ளதாயிருக்கிறது, எப்போதும் மன்னிக்க ஆசைப்படுகிறது. ஆனாலும் எல்லா குற்றங்களையும் பொறுக்கிறவன் செய்கிறவனுடைய பாவத்தில் பங்குள்ளவனாகிறான். ஒருவனை உண்மையாய் நேசிக்கிறோமானால் அவனுடைய மேலான நன்மைக்காய் விரும்புவோம். மனஸ்தாபப்படாமல் அவனை மன்னிக்கிறோமானால் அவனைக் கெடுக்கிறதோடு எங்களுடைய அன்பைக் கீழாக்குகிறோம்.

8. இதுவுமல்லாமல் பாவமன்னிப்பைக்குறித்து அறியக்கூடிய எல்லாவற்றையும் என்கன் ஆண்டவர் இந்த உவமையில் சொல்லவில்லை. எல்லாவற்றையும் ஒருமுறையில் படிப்பிக்கக்கூடாதென்று அறிந்தார். அவருடைய முழு உபதேசத்தைப் பார்த்தால் தன் மூலமாய்ப் பாவமன்னிப்புண்டென்று போதித்தார் என்று காண்கிறோம். பாவங்களை மன்னிக்கத் தாம் அதிகாரமுள்ளவரென்று திரும்பவும் திரும்பவும் சொல்லுகிறார். இது தேவபக்தியுள்ள யூதர்களுக்கு தேவதூஷணம்போலத் தோன்றினது. இயேசுகிறிஸ்து தேவமன்னிப்பின் அவதாரம். இதைக் கூறுவதினாலே பாவஞ்செய்த மனுஷரைப் பிதாவின் சமுகத்திற்கு நடத்தினார். அவர்தான் தேவனுடைய இரக்கத்தக்கு உத்தரவாதம்.

கடைசி இராப்போஜன வேளையில் மிக அருத்தமான விதமாய் இந்த உண்மையை உரைக்கிறார். நீதி ஒழுக்கமுள்ளவர்கள் தங்கள் ஜீவியத்தை எண்ணிப்பார்க்கிற அந்த பயங்கரமான வேளையில் இந்த மனுஷன் பாவியின் இருதயத்தை உடைத்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுக்கக்கூடியவர் நானே என்று சொல்லுகிறார். இயேசுவின் சுத்தம், இயேசுவின் பெலம், இயேசுவின் அன்பு, இதைவிட பாவத்தை மேற்கொண்டு, மனுஷரை இரட்சிக்கக்கூடியது வேறு ஒன்றுமில்லை. அங்கே, அந்த சிலுவைமரத்தில் எங்களுடைய மனதுக்கு ஆறுதலைக் காண்கிறோம். அங்கேதான் எங்கள் எல்லா நியாயத்தின் இலக்கு. அந்த வழியினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறோமானால் அது எங்களாலே விளங்கிக்கொள்ள கடின விஷயமென்று காண்கிறோம்.

9. அதின் கருத்தென்ன? தேவன் என் இந்த விலையைக் கொடுக்கவேண்டியவராயிருந்தார்?

ஒரு தேவபக்தியுள்ள தகப்பன் ஒரு இராத்திரி, வீட்டிலே காத்துக்கொண்டிருந்தான். நடுராத்திரியில் அவனுடைய மகன் வெறிகொண்டவனாய் வீட்டுக்கு வந்தான். இந்த கல்லொழுக்கமுள்ள

குடும்பத்தில் ஒருவன் இப்படி செய்வது அற்பமான காரியமல்ல. தகப்பன் ஒன்றும் பேசாமல் மகனைப் படுக்கப்பண்ணி, இராமுழுதும் வீழித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தான். முந்தி கவனியாத சில சம்பவங்களை நினைவுகூர்ந்தான். இது முதலாம் தப்பிதமில்லை யென்று இப்போ காண்கிறான். அவனுடைய மகன் கெட்ட வழி களில் அகப்பட்டான் என்று நினைக்க நியாயங்களுண்டு. அந்த இரா தன்னுடைய வீடு முற்றாய் வீழ்ந்ததுபோல அவனுக்குத் தோன் றினது. இப்போ அவனுக்கு ஒரே ஒரு எண்ணமிருக்கிறது—'என் மகனை நான் எப்படி இரட்சிக்கக்கூடும்?'

10. இந்த தகப்பன் என்ன செய்யக்கூடும்? மன்னிக்கலாமா? மன்னிக்கிறதற்கு விரும்புகிறான்; ஆனால் இதுவே அவன் செய்யக் கூடாதது. மகனுடைய குற்றங்களையும் இந்த வீழுதலையும் மறந்து, மூன்னைவிதமாய் அவனை நம்பி அவனோடு சிநேகமாயிருக்க விரும்பு கிறான். மகனின் பக்கத்தில் நின்று புதிய ஜீவியத்தில் அவனுக்கு உதவிசெய்ய ஆசைப்படுகிறான். ஆனாலும் மகன் தகப்பன் காண்கிற விதமாய்த் தன் பாவத்தை உணர்ந்து வெறுக்கிறானென்றிய மன்னிப்ப தெப்படி? மகன் வெடுவெடுப்பானவனும், எதிர்பேசுகிறவனும், வீண்சாட்டு சொல்லுகிறவனும் இருந்தால் எப்படி? அல்லது குற்ற மில்லாதவனைப்போல இருந்த மாதிரி இருப்போமென்கிறவனுக்குத் தகப்பன் தன்னைப்போல நீதியும் ஒழுக்கமுமானதைக் கீழ்ப்படுத்த விரும்புகிறானானால் எப்படி? இந்த அவமானத்திற்குத் தகப்பன் அடங் கக்கூடாது. அப்படி செய்தால் தன்னை அவமானப்படுத்தி, மகனின் நீதியைக் கெடுக்கிறதோடு, எல்லாவற்றையும் பார்க்கிற இஸ்ரவேல் மக னின் கன்மை நீமைக்கடுத்த எண்ணத்தைக் குழப்புகிறான். பின்னை அவன் என்ன செய்யக்கூடும்? பலமுறையும் காத்திருந்து ஜெபம் பண்ணுகிறதை யல்லாமல் வேறொன்றும் செய்யமுடியாது. இது எங்களைச் சிந்திக்கப்பண்ணுகிறது. பாவமன்னிப்பு நாம் எண்ணின படி இலேசான காரியமா? தகப்பன் கொடுக்க விரும்புகிற மன் னிப்பு கடன்தீர்த்தலல்ல, தண்டியாமல் விடுகிறதுமல்ல. மகனை ஒருவரையொருவர் அறிகிற புதிய ஜீவியத்திலும் அன்பான சிநே கிதத்திலும் எற்றுக்கொள்ள ஆசைப்படுகிறான். வேறெந்த விதமான மன்னிப்பும் வீணும் வெறுமையுமாயிருக்கும். இப்பேர்ப்பட்ட மன் னிப்புண்டாகும்படி இருவருக்கும் நிபந்தனைகள் அவசரம். மன் னிக்கப்பட்டவனின் பக்கத்தில் ஏதோ வேண்டும், மன்னிக்கிறவரின் பக்கத்தில் ஏதோ வேண்டும். இந்த நிபந்தனைகள் ஒரு சொல்லாய்ச் சொன்னால் ஒருபக்கத்தில் மனந்திரும்புதல் மற்றபக்கத்தில் சுய வெறுப்பு.

C. L. S. PRESS, MADRAS—1918

No. 143. ஏப்ரல் 1918

வேதியர் விளக்கு

8-APR 1918

The Religious Situation in Jaffna

By the Rev. J. S. Mather

யாழ்ப்பாணத்தின் தற்கால மார்க்க நிலையும் இந்திய கிறிஸ்த சபைக்கு வரும் அழைப்பும்

யாழ்ப்பாணத்தின் மார்க்கநிலை கடந்த 50 வருஷங்களுக்குள் அதிக மாறுதலடைந்திருக்கக் காணலாம். இம்மாறுதலுக்கு அநேக காரணங்களுள. இவைகளுள் விசேஷமானவை மூன்று: (1) கல் விச்சாலைகளின் செல்வாக்கு. தற்காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள விசேஷ இந்துப் பிரபுக்களுள் 100-க்கு 99 வீதம் கிறிஸ்த பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலுமே படித்தவர்களாயிருக்கக் கவனிக் கிறோம். இவ்விடங்களில் இவர்கள் மனசிலுண்டான கிறிஸ்தவ எண் ணங்களும் அபிப்பிராயங்களும் யாழ்ப்பாணத்தின் மார்க்கநிலையை அதிக மாறுதலுக்குட்படுத்திற்று. (2) கிறிஸ்தவர்கள் புறமதஸ்தருடன் அநேக விஷயங்களில் வித்தியாசம் காட்டாது ஒருமித்து வாழ்தல். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவர்கள், இந்துக்களுடன் வித்தியாசமின்றி ஒருமித்து வாழ்ந்துவருகிறார்கள். விவாக கொண்டாட்டங்களில், துக்க காலங்களில், ஒன்றுகூடி போசனம் செய்வதில், யாதொரு மதபேத மின்றி சகோதரர்போல் வாழ்ந்துவருகிறார்கள். இவைகளால் சபைக்கு நஷ்டமுமுண்டு, நயங்களும் அநேகம். கிறிஸ்தவர்களின் கொள்கை களும் ஜீவியமும், புறமதஸ்தர்களின் மார்க்கநிலையை மாற்றிவிட்டது. (3) சுவிசேஷப் பிரபல்ய வேலை. துண்டுப் புத்தகங்கள் மூலமாயும்,

உதயதாரகை எனும் மிஷன் பத்திரிகையில் கிரமமாய் எழுதப்பட்டு வரும் விஷயங்கள் மூலமாயும், ஒவ்வொரு கிராமச்சபையும் அக்கிராமத்திலுள்ள இந்துக்களை அழைத்து மிஷன் பள்ளிக்கூடங்களில் நடத்திவரும் சுவிசேஷக்கூட்டங்கள் மூலமாயும், கிறிஸ்தவ சத்தியங்கள் அநேகருடைய மனங்களில் ஆழமாய்ப் பதிந்திருக்கின்றன. இச் சத்தியங்களுக்கு எதிர்மறையானவைகள் யாவும் மாறுதலடைந்திருக்கின்றன.

ஒரு நூற்றாண்டாக மூன்று பெரிய மிஷன் சங்கங்கள் யாழ்ப்பாணத்தில் செய்த வேலையின் பலனாகவும், இக்காலத்தில் இங்கே சிந்தப்பட்ட கிறிஸ்த இரத்தத்தினாலும், நிலம் பெரிய விளைச்சலுக்கு ஆயத்தமாயிருக்கிறது. இந்நாட்டின் தற்கால மார்க்கநிலை, இங்குள்ள கிறிஸ்த சபைக்கும், தென் இந்தியாவிலுள்ள கிறிஸ்த சபைக்கும், கர்த்தர் அனுப்பும் அழைப்பின் சத்தமாயிருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் தற்கால மார்க்கநிலை எவ்விஷயங்களில் மாறுதலடைந்திருக்கிறது?

1. கடவுளைப்பற்றிய அபிப்பிராயம். கடவுள் ஒரு பொல்லாத போலீஸ்காரன் என்ற எண்ணம் பலருக்குள், 50 வருஷங்களுக்கு முன் அதிக ஆழமாய் வேர்விட்டு இருந்தது. அரசாட்சியாரின் சட்டங்களுக்கு மாறாய் வண்டிலை விரைவாய்ச் செலுத்தும் வண்டிக்காரன் போலீஸ்காரனின் கறுப்புச்சட்டையைக் கண்டவுடன், வேறு வேஷம்போட்டு தெரியைக் குறைத்து செல்வதுபோல், நமது நாட்டில் வசித்தவர்கள் பல ஆண்டுகளாக குறித்த இடங்களில் மாத்திரம் கடவுளின் சமுகத்தை உணர்ந்து தலையைக் குட்டியும், கைகளைக் குவித்தும் வணக்கம்செய்து அவ்விடங்களைவிட்டுப் பெயர்ந்த பின் அதே கைகளால் அரிதியை நடப்பித்து, கடவுள் ஒரு போலீஸ்காரன் என்ற எண்ணத்தை வெளியிட்டார்கள். தற்காலத்தில், புறமதத்தவர்களில் அநேகருள் இக்கீழான எண்ணங்கள் மாறிவிட்டன. கடவுள், நாம் பயந்து நடுங்கி, லஞ்சம் கொடுத்துப் பிரியப்படுத்தும் ஒருவர் அல்ல. ஆனால் அவர், நாம் எவ்வளவு ஈனராயிருந்தபோதிலும், நம்மை நேசித்து, நம்மோடு உறவாட ஆசித்துக்கொண்டிருக்கும் பிதா மனம் உள்ள அப்பா என்ற எண்ணம், முன் ஒருபோதுமிராதவண்ணம் அநேகருக்குள் இக்காலத்தில் உண்டாயிருக்கக் காணலாம். வைக்கோலில் பட்ட நெருப்புப்பொறிபோல் அதிதீவிரமாய் இவ்வெண்ணம் நம் நாட்டில் பரம்பிவருகிறது. இங்நிலை சபைக்குக் கிடைக்கும் ஓர் பெரும் நற்தருணம்.

2. வீண்பக்தியிலுள்ள நம்பிக்கை. ஐம்பது வருஷங்களுக்கு முன் எத்தனை ஆயிரமான பேர்கள் பல்லிச்சாத்திரம் அரசாண்டது!

எத்தனைபேர் வண்ணனின் மூட்டைக்கும், அம்பட்டனின் பைக்கும் அடிமைகளாயிருந்தார்கள்! எத்தனை வகையான ஜீவனற்ற பொருட்களுக்கு நமது தேசத்தார் பயந்து ஜீவித்தார்கள்! இன்று அப்படியல்ல. பெரிய மாறுதல் உண்டானது. வீண்பக்தி யாழ்ப்பாணத்தில் வேரோடு ஆட்டி அசைக்கப்பட்டு இருக்கிறது. இவ்விதமான நம்பிக்கைகளில் வீண்பக்தி வைத்திருப்பது அறிவீனம் என்று எங்கும் உணரப்பட்டிருக்கிறது. இது கிறிஸ்த சபைக்கு ஒரு உசித தருணம்!

3. மார்க்க காரியங்களில் புது ஆவல். 'நான் பிடித்ததே சரி, மற்றதெல்லாம் பிழை' என்ற எண்ணம் மாறிவிட்டது. எங்கும் சத்தியம் உண்டு என்ற எண்ணமும், பிற மதங்களைத் தள்ளிவிடாது ஆராய்ந்து படிக்கவேண்டுமென்ற ஆவலும், கிறிஸ்தவர்களுக்குள் இருப்பதுபோல, மற மார்க்கத்தவர்களுக்குள்ளும் இப்போ அதிகமாய்க் காண்கிறோம். இங்குமங்கும் பரிசுத்த வேதத்தை ஒழுங்காய்ப் படிக்கிற அநேகர் இருக்கிறார்கள். கிறிஸ்த காரியங்களைப்பற்றி அறிய ஆவலாய்ப் பலர் நல்ல கேள்விகள் கேட்கிறார்கள். இதுவும் சபைக்கு ஒரு நற்தருணமே!

4. இயேசுவைப்பற்றிய விளக்கம். இயேசுநாதரின் ஜீவியத்தைப்பற்றி இருந்த பல தர்க்கவிஷயங்கள் இப்போ விளக்கத்துக்கு வந்திருக்கின்றன. அவருடைய தாயாரைப்பற்றிய, பிறப்பைப்பற்றிய, அற்புதங்களைப்பற்றிய பல கேள்விகள் இப்போ கேட்கப்படுவது அரிது. இயேசு ஒரு பெரிய சற்குரு என்று படித்த இந்துக்கள் யாவரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இயேசுவே நாம் பின்பற்ற வேண்டிய முன்மாதிரியென்று சென்ற மாசம் நடந்த விசேஷ இந்து கூட்டங்களிலும் பேசப்பட்டன. யாழ்ப்பாணத்தில், சில மாதங்களின் முன், 'இயேசு' என்ற விஷயத்தில் ஒரு இந்து பத்திராதிபர் தம் பத்திரிகையில் எழுதிய அழகான வியாசம், இந்நாடு முழுவதும் இயேசுவைப்பற்றிய எண்ணத்தில் எப்படியிருக்கிறது என்று நன்றாய்க் காட்டுகின்றது.

இவ்வாறு பலகாரியங்களில் யாழ்ப்பாணம் தற்காலத்தில் விசேஷ மாறுதலடைந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தின் தற்கால மார்க்கநிலை, இந்நாட்டிலுள்ள சபைக்கும், இந்திய கிறிஸ்த சபைக்கும் ஒரு பெரும் அழைப்பின் சத்தமாயிருக்கிறது.

யாழ்ப்பாண சபைக்கும், இந்திய சபைக்குமிடையில் கூடிய ஐக்கியம் அவசியம். கூடிய ஐக்கியமின்றி, யாழ்ப்பாணம் பெற்றிருக்கும் சிலாக்கியமான தற்கால மார்க்கநிலையைச் சரியாய்ப் பிரயோகப்படுத்த முடியாது. இந்தியாவே, உதவிசெய்வீர்களா? யாழ்ப்பாணத்தின் செல்வம், சுயாதீன ஆவி, அறிவு முதலியவை இந்தியாவுக்கு யாழ்ப்

பாணம் கொடுக்கக்கூடிய சில உதவிகளாம். இந்தியா யாழ்ப்பாணத்துக்குக் கொடுக்கவைத்திருக்கும் நன்மைகளும் அநேகமிருக்கின்றன. ஐக்கியத்திற்கு இருக்கும் தடைகள் நீக்கப்படவேண்டும்.

இன்னொன்று, இந்தியாவிலுள்ள மிசேஷ தொண்டர்களே அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு, இந்தியா அனுப்புதல் அவசியம். யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்ள ஆயத்தம், கொடுக்கவும் ஆயத்தம். இந்தியாவிலுள்ள கிறிஸ்த தொண்டர்களே, எங்களுக்கு உதவிசெய்யுங்கள். இங்கும் சில பக்தருண்டு. அவர்களையும் உங்கள் தேவைக்குத் தக்கதாக அழைத்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவர்களுக்குள்ளும் மறு மதத்தவர்களுக்குள்ளும் உள்ள ஐக்கியம், இந்திய சபைக்கு ஒரு மிசேஷ அழைப்பேயாம். கிறிஸ்தவ சபை ஒருபக்கத்தில் நில்லாது, மறுகூட்டத்தவர்களுடன் சேர்ந்து இந்தியாவின் உயர்ச்சிக்காக முயற்சிசெய்ய வேண்டும். இந்தியாவுக்கு உதவிபுரியும்பொழுது இந்திய சபை தனக்கே உதவிசெய்கிறது, மற்றவர்களையும் கவர்ந்துகொள்ளுகிறது. கிறிஸ்தவ சத்தியங்கள் மறுபேருக்குள் செல்லுகின்றன. இவ்விதமே பெரிய காரியங்களுக்கு இவ் ஐக்கியம் வேராகிறது.

Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by Pandit J. S. Masillamany

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

(தொடர்ச்சி)

10–ம் அத்தியாயம்

கிழதேயத்தாசி

ஏழு வருஷங்களுக்குப் பிறகு ஒருநாள் தர்சு பட்டணத்துக்கு ஒருவர் வந்தார். தாம் தெருக்களில் சந்தித்தவர்களுடைய முகங்களைக் கூர்மையாய் உற்றுப்பார்த்துக்கொண்டு சென்றார். இவர் ஒரு பிரயாணி. தர்சு பட்டணத்துக்குப் புதிதாய் வந்தவர். ஆனால் உலகத்தின்

பற்பல பாகங்களிலிருந்தும் பற்பல ஜாதியார் இப்பட்டணத்துக்குப் போக்கும் வரவுமாயிருந்தபடியால் இவரைப்போலவே அப்பட்டணத்துக்கு வந்திருந்தவர்கள் அநேகர். இவர் யூதர்களைச் சந்தித்தபோது அவர்களிடம் சில விஷயங்களை விசாரித்தார். சவுல் வசித்துக்கொண்டிருந்த வீட்டை அவர்கள் அவருக்குக் காட்டினார்கள். சவுல் இவரைப் பார்த்தபொழுது சற்றே கவனமாய் உற்றுப்பார்த்து அப்புறம் திடீரென்று குதித்தெழுந்து 'பர்னபா' என்று பேர் சொல்லி யழைத்து அவரை ஆசனத்திலிருத்தி உபசரித்தார்.

இந்தப் பர்னபா சீப்புருதேவர். சிறந்த யூதர். இவரைப்பற்றி முன்னே வாசித்திருக்கிறோம். இவர்தான் சில வருஷங்களுக்குமுன்னே தமது நிலங்களையும் காணியாட்சிகளையும் விற்று எருசலேமிலே அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தவர். ப்வுல் தமஸ்கு பட்டணத்திலிருந்து எருசலேம் பட்டணத்துக்கு வந்தே தம்மை ஏற்றுக்கொள்வாரின்றி யிருந்தகாலத்தில் சவுலுடைய கரத்தைப் பிடித்து அவரை அப்போஸ்தலரிடம் அழைத்துக்கொண்டுபோய்ச் சிநேகஞ்செய்து வைத்தவர் இவரே.

பர்னபா கொஞ்சம் இளைப்பாறி ஸ்நானஞ்செய்தபிறகு, இவ்விரு கூட்டாளிகளும் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள். தாம் தர்சு பட்டணத்துக்கு வந்த காரணத்தைப் பர்னபா சொல்லச் சொல்ல, சவுல் அதை மெத்த ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்.

பர்னபா சொல்லுகிறார்: 'நான் சிரியாநாட்டு அந்தியோகியாப் பட்டணத்திலிருந்து வருகிறேன். ஆச்சரியமான காரியங்கள் அங்கே நடக்கின்றன. நான் எருசலேம் பட்டணத்திலிருந்தபோது, அந்தியோகியாவிலிருந்து சிலர் வந்து ஒரு விநோத விஷயத்தைக்குறித்துப் பேசினார்கள். அதாவது சீப்புருதேவிலிருந்தும் வட ஆப்பிரிக்காவிலிருந்தும் வந்த சகோதரர் யூதர்களுக்குமட்டுமே பிரசங்கியாமல் கிரேக்கர்களுக்கும் பிரசங்கிக்கிறதாகவும், கிரேக்கரில் அநேகர் வெண்சலவைக்கல்லினாலும் தந்தத்தினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட தங்கள் விக்கிரகங்களை ஒழித்துவிட்டு மனந்திரும்பிச் சீஷர்களாகிவிட்டதாகவும் சொன்னார்கள். ஆகையால் நான் புறப்பட்டு அந்தியோகியாவரைக்கும் நடந்துசென்று அவர்களைச் சந்தித்து விசுவாசத்தில் சகல வல்லமையோடும் உறுதியாயிருக்கும்படி அவர்களுக்குச் சொன்னேன். ஆனாலும் இவர்களுடைய தொகை அதிகமாயிருக்கிறபடியால் இந்த மார்க்கத்தைப்பற்றி அவர்களுக்கு அவசியமான விஷயங்களை உபதேசிக்க என்னால் கூடவில்லை. வழியையும் சத்தியத்தையும்பற்றி உபதேசம் பெறவேண்டியவர்கள் இன்னும் எத்தனையோ பெயர் இருக்கிறார்கள். ஆகையால் நீரும் என்னோடு சேர்ந்து எனக்கு உதவிசெய்

யும்படி உம்மைக் கேட்கிறதற்குத்தான் வந்தேன்; நீர் வருகிறீரா? என்று கேட்டார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் சவுலுடைய உள்ளம் குதூகலத்தால் துள்ளியது. ஏழு வருஷமாகத் தாம் அமைதியாகத் தர்சு பட்டணத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஊழியஞ்செய்து வந்த காலத்திலெல்லாம் தன் செவிகளில் தொனித்துக்கொண்டிருந்த பெரிய அழைப்பு இதுதானே.

உடனே சவுல் தமது பாயைச் சுருட்டினார். தம் அங்கியை மடித்தார். தம் தடியையும் தண்ணீர்ப் பையையும் சாமான் பொட்டணத்தையும் எடுத்துக்கொண்டார். பர்னபாவோடு அந்தியோகியாவுக்குப் போகிறதற்கு உடனே பயணப்பட்டார். எந்த வழியாய் அவர்கள் போனார்களென்று நாம் திட்டமாய்ச் சொல்ல இயலாது. தர்சு பட்டணத்திலிருந்து அந்தியோகியாப் பட்டணத்துக்குக் கடல்மார்க்கமாகவும் போகலாம், கரைமார்க்கமாகவும் போகலாம். கடல்மார்க்கமாய்ப் போனால் அவர்கள் செலுக்கியா துறைமுகத்தில் இறங்கி அங்கேயிருந்து பதினாறு மைல் நடந்து சென்றிருப்பார்கள். தரைமார்க்கமாகச் சென்றிருந்தால் மகா அலெக்சாந்தர், ஜெனரல் போன் முதலிய ஜெயவீரர்கள் தங்கள் சைனியங்களோடு சென்ற ராஜபாதை வழியாய்ச் சென்றிருப்பார்கள். பட்டணத்துக்குச் சமீபிக்கையில் சவுலுடைய முகமும் கண்களும் மகிழ்ச்சியினால் பிரகாசித்தன. யார் பொருட்டு அவர் மரிக்கிறதற்கும் ஆயத்தமாயிருந்தாரோ, யாருக்குள் பிழைக்கிறதைத் தமக்குப் பெருமையாக நினைத்தாரோ, அந்தப் பெருமானின் திருச் சேவையின் நிமித்தமே இப்போது இவர் தம் தோழராகிய பர்னபாவுடன் இப்பட்டணத்தை நோக்கிச் சென்றார். இப்பட்டணம் பூர்வ உலகத்தில் அதிவிசேஷமான மூன்று பட்டணங்களில் ஒன்று. சவுலினுடைய விசேஷமான முயற்சிகளுக்கு இதுவே ஆரம்பமாகையால் சவுலினுடைய மனம் களிகூர்ந்தது ஆச்சரியமல்லவே.

அவர்கள் வழிநெடுக நடந்து சென்றபொழுது பர்னபா சவுலைப் பார்த்து சொல்லுகிறார்: 'நாம் அந்தியோகியாவில் செய்யவேண்டிய வேலை அத்தனை இலேசல்ல. இந்தக் கிரேக்கர்களிடத்தில் ஆவி இருக்கிறது. அவர்கள் இந்த வழியில் நடக்கிறார்கள். ஆனால் சகோதாருக்குள் வைராக்கியமுள்ளவர்களான யூதர்கள் (விசேஷமாய் எருசலேமிலிருந்து வந்தவர்கள்) இவ்விதமாய்ப் புதிதாய் ஸ்தாபிப்பை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் முன்னே விருத்தசேதனம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் செய்யக்கூடாது என்று நான் சொல்லுகிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?' என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்குச் சவுல், ஆம் என்று பதில்சொன்னாரோ அல்ல

என்று பதில் சொன்னாரோ என்பது ஒருவேளை நமக்கு அத்தனை விசேஷமானதாகத் தோன்றாது. பர்னபா அந்தியோகியாவுக்கு வரும்படி அழைத்ததற்குச் சவுல் நான் மாட்டேன் என்று மறுத்துச் சொல்லியிருப்பாரானால் உலகசரித்திரம் முழுவதும் வித்தியாசமாய் இருந்திருக்கும். நமது தேசமும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கமாட்டாது. வைராக்கியமுடையவர்களான யூதர்களோடு சவுல் சேர்ந்திருப்பாரென்றால் இயேசுகிறிஸ்துவினுடைய அடியார் யூகமார்க்கத்தின் ஓர் உட்பிரிவாகவே இருந்திருப்பார்கள்.

சவுலினுடைய உத்தரம் என்ன? இதற்குப் பிந்தியகாலத்தில் அவர் எழுதியவற்றினின்று கீழ்வரும் விதமாகச் சொல்லியிருப்பார் என்று நினைக்கலாம். 'இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷம் யூதருக்கும் கிரேக்கருக்கும் இரக்ஷிப்புக்கேதுவான வல்லமை. மனுஷர் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்பதல்ல, ஒவ்வொருவரும் தம்தம் முழுச் சரீரத்தையும் தேவ ஆவியின் ஆலயமாக அவருக்குப் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்பதே விசேஷித்த காரியம்' என்று சொல்லியிருப்பார்.

தங்களுக்குமுன் இருந்த பெரிய வேலையைப்பற்றி இவ்விதமாகப் பேசிக்கொண்டே பர்னபாவும் அவருடைய இளங்கூட்டாளியாகிய சவுலும் அந்தியோகியாப் பட்டணத்துக்குக் கிட்ட வந்துவிட்டார்கள். அப்பட்டணத்து மதில்கள் அவர்களுமுன் தோன்றின. சுகந்தவிருக்ஷங்கள் அடர்ந்த அழகிய தோப்புக்களைக் கடந்து தெற்குமுகமாய்த் திரும்பி, ஓரண்டஸ் நதியின்மேற் கட்டப்பட்டிருந்த பாலத்தின்மேல் நடந்து பட்டணத்து மதிலின் வாசல் வழியாய்ப் பிரவேசித்து அங்ஙகரத்தின் உட்புறத்தை அடைந்தார்கள்.

பட்டணத்தின் நடுவிலே அக்காலத்து உலகத்திலிருந்த தெருக்களிலெல்லாம் அதிகம் பிரக்கியாதி பெற்றிருந்த ஓர் தெருநெடுகப் போனார்கள். அத்தெரு கீழ்மேல் நாலு மைல் நீளம். பிரகாசமான வெண் சலவைக்கற்றூண்கள் இருமருங்கும் ஒரே தொடராக நிற்கப்பெற்றது. இது எரோது ராஜனால் கட்டப்பட்டது. அடிமைகளால் சுமக்கப்பட்டதும் வெயிலும் தெருத்தூசியும் படாதபடி இருமருங்கும் அழகிய திரைகள் தொங்கப்பெற்றதுமான ஆடம்பல்லக்குகளில் ஏறி வருகிற ஸ்திரீகளோ அத்தெருவில் இவர்கள் கண்டார்கள். சீப்புரு தீவிலிருந்து அத்திப்பழங்களையும், கிரேக்கு தேசத்திலிருந்து சித்திரவேலையமைந்த பண்டங்களையும், வட ஆபிரிக்காவின் கல்வி ஸ்தானங்களிலிருந்து புஸ்தகங்களையும், சாயந்தோய்ப்பதில் உலகப்பிரசித்திபெற்ற நீருபட்டணத்திலிருந்து இரத்தாம்பரங்களையும் சுமந்துகொண்டுவருகிற சோவேறு

கழுதைக் கூட்டங்களையும், பெர்சியா தேசத்துப் பட்டு ஜவுளிகளையும் பேரீச்சம்பழங்களையும் எற்றிக்கொண்டு ஐபிராத்து நதிக்கப்பாலுள்ள மணல் வளந்தரத்திலிருந்து அதிகக் களைப்போடு வருகிற ஒட்டக வியாபாரக்கூட்டத்தை இத்தெருவில் சந்தித்தன.

பட்டணத்தின் நடுமத்தியிலே அரமனைவீதியும் எரோதின் வெண் பளிங்குவீதியும் ஒன்றையொன்று சந்தித்த இடத்திலே ஒரு சதுர மைதானம் இருந்தது. இங்கே ரோமர்கள் வணங்கிவந்த அப்பொல் லோவின் அழகிய சிலை ஒன்று நின்றது.

கடைசியாகச் சவுல் பர்னபாவினுடைய வீட்டுக்கு வந்தபோது, 'இதோ தர்சுபட்டணத்தாராகிய சவுல்' என்று பர்னபா மற்றச் சகோதரரைப் பார்த்துச் சொன்னார்.

சகோதரருக்குள் தலைமையாயிருந்தவர்கள்—கருநிறச் சிமியோன், வட ஆபிரிக்காவிலுள்ள சிரேனேபட்டணத்தாளுகிய லூகி, ஏரோது வின் இனத்தாளுகிய மகளுவின் முதலியவர்கள் இப்புதிய இளங்கூட் டாளியைச் சந்திக்கும்படி ஒன்றுகூடிவந்தார்கள். அவர்கள் யாவரும் சவுலுக்கு உபசாரமொழி கூறி எற்றுக்கொண்டார்கள். சவுல் அத்தனை வளர்த்தியும் அழகும் உடையவரல்லாவிட்டாலும், தங்கள் பழைய சிநேகிதரான பர்னபாவைவிட அதிகப் பேச்சுவல்லமையுடையவர் என்பதைச் சீக்கிரம் கண்டுகொண்டார்கள். ஆனால் சவுல் சற்றே படபடப்புள்ளவர். தம் தோழராகிய பர்னபாவைப்போல் இன்னும் அத்தனை ஸ்திரமும் அனுபவஞானமும் அடையவில்லை. மற்றவர் களைக் கூர்மையாய் உற்றுப்பார்த்துப் பேசும்பொழுது அவருடைய பார்வை எவ்வளவு வல்லமையாய்த் தோன்றினது என்பதை அவர்கள் கவனித்தார்கள்.

The Saivite Religion

By Pandit J. S. Masillamany, B.D.

சைவசமயசார சங்கிரகம்

பரத கண்டமாகிய நமது இந்தியா தேசத்திலே அநேகவிதமான பாஷைகளும் ஜாதிகளும் இருக்கின்றதுபோலவே, மதங்களும் அநே கம். இம்மதங்களின் உட்பிரிவுகளுக்கோ கணக்கில்லை. இதுபற்றி யன்றே 'திகழ்கின்ற சமயமும் அனந்தம்' என்றார் தாயுமானவரும். இவ்விதமாய் கணக்கிறந்துகிடக்கும் இச்சமயங்களைப்பற்றிக் கிறிஸ்தவ ஊழியக்காரர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமோ அல்லது அது அத்

தனை அவசியமில்லையோ என்பதைப்பற்றி கிறிஸ்துமதத் தலைவர்களுக் குள்ளே அபிப்பிராய பேதமுண்டு ஒரு சாரார் அவ்வித அறிவும் ஆராய்ச்சியும் கிறிஸ்தவ தேவ ஊழியர்களுக்கு அவசியமன்று, பொய் ஷார்க்கங்களாகிய பரசமயப் படுகுழிகளைத் தேடி அவற்றுள் இறங்கி இறங்கி ஆராய்ச்சிசெய்வதில் தங்கள் காலத்தை வீணேகழியாமல், கிறிஸ்துமத சத்தியங்களை நேரே பிரசங்கிக்கவேண்டும் என்பது இவர் கள் கோட்பாடு. இக்கோட்பாட்டையுடையவர்கள் சிறுபான்மையோர். இவர்களுடைய தொகை வருஷத்துக்கு வருஷம் குறைந்துகொண்டே வருகின்றது.

இக்கோட்பாட்டுக்கு நேர்விரோதமாக வேறொரு சாரார் புறமதங் களைப்பற்றிய அறிவும் ஆராய்ச்சியும் கிறிஸ்தவ பிரசங்கிகளுக்கு இன் றியமையாத அவசியம் என்றும் புறமதங்களைப்பற்றிய அறிவு இல்லாத தேவ ஊழியக்காரர் பரசமயிகளுக்குள் அத்தனை சித்தியான ஊழியம் நடத்தமுடியாதென்றும் கூறுவர். இவ்வித கோட்பாடுடையவர்கள் பெரும்பான்மையோர். இவர்களுடைய தொகை வருஷத்துக்கு வரு ஷம் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றது. ஐரோப்பியர்களும் உயர் தரக் கல்விகற்ற இந்தியர்களும் இக்கோட்பாடுடையவர்களே. புறமதங் களைப்பற்றிப் போதிய அறிவு கிறிஸ்தவர்களுக்கு இருப்பது இன்றி யமையாத அவசியம் என்னும் இக்கோட்பாட்டை யுடையவர்களின் தொகை அதிகமாயிருப்பினும் இவர்கள் இவ்வாறு கூறுகின்றதற்குள்ள காரணங்கள் பலவேறு வகைப்படும். புறமதங்களினுடைய குற்றங் குறைகளைக் கண்டு அவற்றைக் கண்டிப்பதே இவ்வித ஆராய்ச்சியின் நோக்கம் என்று சிலர் கூறுவர். இது பரசமய கண்டனம் எனப் பெயர் பெறும். சுமார் மூப்பது வருஷங்களுக்குமுன் கிறிஸ்தவ வேதசாஸ்திர சாலைகளில் பிரதியாய்ப் பிரயோகிக்கப்பட்டுவந்த சமய பரிட்சை என்னும் நூலும் காலஞ்சென்ற வித்வான் கிருஷ்ணபிள்ளை இயற்றிய ரக்ஷணிய சமய நிர்ணய ப்ரபந்தமும் இவ்வகுப்பைச் சேர்ந் தன. 'பரசமய கண்டனம் நமது வேலையுமல்ல. நாம் புறமதங்களைப் படிப்பதின் நோக்கம் அம்மதங்களின் விசேஷ போதனைகள் இன்ன என்றும் அச்சமயிகளின் ஆத்மவாஞ்சைகள் இன்னவென்றும் அறிந்து அவ்வித ஆத்மவாஞ்சைகளைக் கிறிஸ்துநாதருடைய திவ்யோபதேசம் எவ்வாறு திருப்திசெய்கின்றது என்பதை உணர்த்தும்பொருட்டே நாம் புறமதங்களைக் கற்கவேண்டும்' என்பர் இன்னொரு சாரார். வேறொரு சாராரோ, நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துநாதர் மூலமாய்த் தமது மகா மகோன்னதமான வெளிப்படுத்தலை அருளிச்செய்த அதே கட வுள் புறமதங்களிலும் தம்மை ஒருவாறு வெளிப்படுத்தியிருக்கிறார் என்றும், இவ்வெளிப்பாடுகள் கிறிஸ்துவின் ஒப்புயர்வற்ற வெளிப்படுத்

தலைவிட எத்னை குறையுடையவைகளாய் இருந்தாலும் இவற்றிலும் தேவஞானத்தையும் தேவநடத்துதலையும் நாம் காணக்கூடுமாகையால், இந்நோக்கத்தோடேயே நாம் புறசமயங்களைக் கற்கவேண்டும் என்றும் கூறுவர். மேற்கூறிய மூவகை நோக்கங்களேயன்றி வேறு பல நோக்கங்களும் சிலரிடத்தில் உண்டு. விரிவஞ்சி இவற்றைக் கூறாது விடுத்தோம்.

இந்நோக்கங்களுள் எது சிறந்தது எது தாழ்ந்தது என்று நாம் கூற வரவில்லை. இவை ஒவ்வொன்றிலும் ஒரு விசேஷ மூலசத்தியம் அடங்கியிருக்கின்றது என்றே நாம் கூறுவோம். இவர்களுடைய நோக்கங்கள் எத்தனை பேதப்பட்டாலும் ஒருவிஷயத்தில் இவர்கள் யாவரும் ஏகமனதுடையவர்கள். அதாவது கிறிஸ்தவ தேவஊழியக்காரர்களுக்கு புறமதங்களைப்பற்றிய அறிவு இன்றியமையாத அவசியம் என்பதே.

கிருஷிசத்தொழிலாளியாகிய ஒருவன் விதையின் தன்மையைப் பற்றி நன்றாய் அறிந்திருப்பதோடுகூட அவ்விதையானது விதைக்கப்பட வேண்டிய நிலத்தின் தன்மையைப்பற்றியும் நன்றாய் அறிந்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கின்றதுபோலவே, கிறிஸ்தவ தேவஊழியக்காரர்களும் கிறிஸ்துமத சித்தாந்தத்தை நன்றாய் அறிந்திருப்பதோடு, கிறிஸ்துமத சுவிசேஷ வித்தைப்பெறும் நிலமாகிய பாசமயங்களின் தன்மையையும் அறிந்திருக்கவேண்டுவது அத்தியாவசியம். ஆயினும் காரியங்களை உள்ளபடியே ஆராய்ச்சிசெய்து பார்க்கும்பொழுது ஹிந்து மார்க்கத்தைப்பற்றிப் போதிய அறிவுள்ள கிறிஸ்தவ தேவஊழியக்காரருடைய தொகை வெகு சொற்பம் என்பதைக் காண்கிறோம். இது மெத்த விசனமான காரியம். சில சமயங்களில் ஒரு ஐரோப்பிய மிஷனெரிக்கு இவ்விஷயத்தைப்பற்றி யிருக்கும் அறிவில் அரைவாசிகூட கிறிஸ்துமதப் பிரசங்கிகளுக்கு இல்லை. இக்குறையை நீக்கும் பொருட்டே தற்கால கிறிஸ்தவ வேதசாஸ்திர சாலைகளில் மதச்சரித்திரம், சமய சித்தாந்தம் முதலிய சாஸ்திரங்கள் கட்டாய பாடமாக ஏற்பட்டிருக்கின்றன. இச்சஞ்சிகையில் முதல் சைவசமயசாரசங்கிரகம் என்னும் பெயர்பூண்ட இவ்விஷயத்தைப்பற்றி நாம் எழுதத்துணிந்ததும் இக்காரணம் பற்றியே.

நமது தேசத்திலுள்ளவர்களில் பெரும்பான்மையோர் கிராமவாசிகள். இவர்களுடைய மதம் இன்னதென வரையறுத்துக் கூறுவது கூடாதகாரியம். இதை ஒருவகைப் பேய்வணக்கம் என்று சிலர் கூறுவர். சில பாமர தெய்வங்களும் இவர்களுக்கு உண்டு. ஆயினும் இவ்வணக்கம் ஹிந்துமார்க்கம் அல்ல என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இவ்வணக்கத்தைப்பற்றிய நூல்கள் ஒன்றுமே

கிடையாது. இதை ஒழித்துவிட்டால், மூவகை மதங்கள் ஹிந்துக்களுடைய மனதைக் கவர்ந்துகொண்டிருக்கின்றன என்று கூறலாம். அவை,

1. வேதாந்தம், அல்லது அத்துவைதம்.
2. வைஷ்ணவம்.
3. சைவம்.

இம்மூன்று மார்க்கங்களுள் ஒன்றைப்பற்றியாவது கிறிஸ்தவ தேவ ஊழியக்காரர்களுக்குப் போதிய அறிவு இருக்கவேண்டும். இவற்றுள் ஒரு மார்க்கத்தைப்பற்றி நன்றாய் அறிந்தவர்கள் மற்ற இரண்டையும் லேசாய் விளங்கிக்கொள்ளலாம். இம்மூன்றனுள் வேதாந்தம் மிகுதியாய் சமஸ்கிருத சார்புடையது. அதற்குரிய நூல்களெல்லாம் சமஸ்கிருத பாஷையிலுள்ளன, அல்லது அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு. லேசாய் விளங்கக்கூடிய நூல்கள் தமிழில் அநேகம் இல்லை. இங்கிலீஷில் பல நூல்கள் உண்டு. ஆகவே உயர்தர ஆங்கிலக்கல்வியாவது சமஸ்கிருத ஞானமாவது இல்லாதவர்கள் வேதாந்தசாஸ்திரத்தை அறிந்துகொள்ளுவது வெகுகஷ்டம். ஆகலால் வைஷ்ணவம், சைவம் என்னும் இருசமயங்களுள் ஏதாவது ஒன்றைப்பற்றி நன்றாய் அறிந்திருப்பது நலம்.

இவற்றுள் நாம் இங்கு எடுத்துக்கொண்டது சைவசமயம். தென்னிந்தியாவில் அதிகப் பிரபலியமாய் இருப்பது சைவசமயமே. மேலும் சைவ சமயத்துக்கு மூலாதாரமான நூல்களெல்லாம் தமிழிலேயேயுள்ளன; அன்றியும் சைவசமயத்துக்கும் கிறிஸ்துமதத்துக்கும் பல ஒற்றுமைகளும் உண்டு. இம்மூன்று காரணங்கள் பற்றியே நாம் சைவசமயத்தைத் தெரிந்துகொண்டது.

The Forgiveness of Sins

பாவ மன்னிப்பு

(Studies for Seven Weeks. Adapted from the English by Miss Clegg.)

3-ம் கிழமை. பாவமன்னிப்புக்குரிய நியமங்கள்

மனந்திரும்புதல்

நாளாந்தர வாசிப்பும் தியானமும்

1-ம் நாள். லூக். 18[9-14].

மனந்திரும்புதலாவதென்ன? (§ 11.) 'நாம் உணராமல் செய்கிற பாவங்கள்தான் கெட்டவைகள்' என்று ஒருவன் சொல்லுகிறான். 'நாம் உணராமல் செய்கிறதானால் அது பாவமில்லை' என்று இன்னொருவன் சொல்லுகிறான். இதைப்பற்றி கொஞ்சம் சிந்தித்து எது நியாயமென்று சொல்லு. (§ 13.)

2-ம் நாள். 1 யோவா. 1[5-10].

'என்னிலே கூடியளவு செய்கிறேனானால் என்னிலே குற்றமில்லை' என்று ஒருவன் சொன்னான். இதைச் சோதித்துப் பார். (§ 14.)

3-ம் நாள். 1 யோவா. 2[1-6].

முதல் கிறிஸ்தவர்கள் இருதய கடினத்தைப்பற்றி எச்சரிக்கையாயிருந்தார்கள். புதிய ஏற்பாட்டிலே இதைப்பற்றி என்னத்தை வாசிக்கிறோம்? (§ 14.)

4-ம் நாள். 1 யோவா. 2[7-11].

'என் ஆண்மா தாங்கக்கூடியளவில் என் உள்ளான பாவத்தை எனக்குக் காட்டும்' என்கிற ஒரு பாட்டு இருக்கிறது. தாங்குகிறதற்கு அதிகமாய் எங்களுக்குக் காட்டினால் என்ன சம்பவிக்கும்? (§ 15.)

5-ம் நாள். 1 யோவா. 2[12-17].

'எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்.' எங்கள் பாவங்கள் இன்னவையென்று சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோமா? இடைக்கிடை அவைகளை எழுதிப்பார்த்தால் எங்களுக்கு உதவியாயிருக்குமா? (§ 15.)

6-ம் நாள். மாற். 1[14-15]; லூக். 1[76-79]; 3[6].

'நாங்கள் உப்முடைய பிரமாணங்களை மீறினோம்; ஆனால் வழக்கத்துக்கு மிஞ்சி அல்ல.' 'செய்யக்கூடாதவைகளைச் செய்துவந்தோம்; இன்னும் செய்யப்போகிறோமென்பது நிச்சயம்.' 'செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டோம்; ஆனால் அது எங்கள் குற்றமல்ல.' மனுஷர் இவ்விதமாய் ஜெபம்பண்ணக் கேட்கிறோமென்று ஒரு தேவதூதன் தேவனுக்குத் தெரிவித்தான். இப்படி ஜெபம்பண்ணினதைப்பற்றி ஒருவனுக்கும் நினைப்பில்லை. நமக்குத் தெரியாமல் இப்படி ஜெபம்பண்ணக்கூடுமா? எப்படி அறிந்து கொள்ளலாம்? (§ 15.)

7-ம் நாள். சங். 51.

'நாங்கள் செய்த அக்கிரமங்களை நினைத்து, வியாகுலப்பட்டு, மனப்பூர்வமாய் துக்கித்து, மிக விசாரமாய் மனஸ்தாபப்படுகிறோம்.' மெய்யாய் இவ்விதமாய் மனஸ்தாபப்படுகிறோமா? இல்லையானால் உண்மையான மனஸ்தாபத்தை உணர நாம் என்ன உதவிகளைத் தேடலாம்? (§ 16.)

11. பாவத்தில் விழுந்த ஆத்துமாவை அதின் முன்னிலைக்குக் கொண்டுவருகிறதற்கு மனந்திரும்புதல் தேவை என்று கண்டோம். நீதியுள்ள தகப்பன் என்னவிதமான மனந்திரும்புதலை, குற்றம் செய்த மகனில் காணவிரும்புவான்? அவன் 'நான் தண்டிக்கப்படுகிறேன்' என்று சொல்லி சந்தோஷத்துடன் பழையவிதமாய் நடக்கிறதானால் அது போதுமா? இரண்டு மூன்று காரியங்கள் அவசியமல்லவா?

(i) மகன் தன் பாவத்தை உணர்ந்து மெய்யாய்த் துக்கப்படுகிறானென்று அந்தத் தகப்பன் அறியவிரும்புவான். (ii) மகன் தன் பாவத்தை வெறுத்து அதை முற்றாய் விட்டுவிடுகிறானென்று அறியவிரும்புவான். (iii) மகன் தன் பாவத்தினால் ஏற்பட்ட தீமைகளை உணர்ந்து, அவைகளின் நஷ்டத்திற்குப் பதில் செலுத்த வகை தேடுகிறானென்று கண்டு சந்தோஷப்படுவான்.

இந்த மூன்று நியமங்களின் வெளிச்சத்தில் பாவமன்னிப்பைப் பார்ப்போமாக.

12. (i) பாவ உணர்ச்சி. நாம் நம் பாவத்தை இருக்கிறபடி அறிந்துகொண்டு, மெய்யாய்த் துக்கப்படவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவன் காண்கிறவிதமாய் நாம் நம் பாவத்தைக் காணவேண்டுமென்று அவர் கேட்டால் அது நியாயமாயிருக்கும், ஏனென்றால் அவர் இருக்கிறபடி காண்கிறார். ஆனால் நாம் கொஞ்

சம் சிந்தித்துப்பார்த்தால் இது நம்மாலே எலாதென்ற காண் கிறோம்.

பாவஞ்செய்தவன் பாவத்தின் தோஷத்தை அறிந்துகொள்ளக் கூடாதவனுயிருக்கிறான். எல்லாப் பாவமும் ஆத்துமாவின் கண்ணைக் குருடாக்குகிற தன்மையுள்ளது. 'யூதாஸ் உடனே புறப்பட்டுப் போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.' ஒருவன் பாவஞ் செய்யும்படி போகும்போதெல்லாம் அவன் இருட்டுக்குள் போகி றான், தனிமையாயும் போகிறான். பரிசுத்தமானது மனுஷனைக் குரு டாக்குகிற பாவமென்ற எழுதப்படுகிறது. 'தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இரு வானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்ற அறியாதிருக்கிறான். (1 யோவா. 2¹¹.) காண விருப்பமில்லாதவன் விரைவில் காணக்கூடாத இடத்துக்கு வருவான். 'குருடரின் தேசம்' என்று ஒரு கதை இருக்கிறது. அத்தேசத் திலுள்ளவர்கள் அநேக தூற்றண்டுகளாய்க் காணக்கூடாதவர்களா யிருந்தபடியினல், ஒருவருக்கும் பார்வையிருக்கிறதென்ற நம்பினர் களில்லை. இன்னெரு தேசத்திலிருந்து ஒருவன் வந்து தான் காண்கிற காரியங்களைக்குறித்துப் பேசினபோது 'அவனை கிறுக்கித்து அவனைத் துன்பப்படுத்தினர்கள். குருடரின் தேசம் இவ்வுலகம். எனென்ற கேட்டால், தெளிவாய்க்காணக்கூடிய ஒருவர் நம்மிடத்தில் வந்தபோது அவர் சிலுவையில் அறையப்பட்டார். மனுஷரின் இரு தயங்களைக் குருடாக்குகிற காரணம் அவர்கள் ஒயாமல் திரும்ப வும் திரும்பவும் செய்கிற பாவமே.

13. தாசேமுன்னவன் அதைப்பற்றி உணராமலிருக்கிறான். கண்டைபிடிக்கிறவன் தன்னிலே குற்றமல்ல, மற்றவர்களில் குற்ற மிருக்கிறதென்று எண்ணுகிறான். பழிவாங்குகிறவன் நீதியின்படி மாத்திரம் செய்ய விரும்புகிறேனென்று சொல்லுவான். கோப முன்னவன் அல்லது மனதிருப்தியில்லாதவன் தனக்குள்ளே குறை யிருக்கிறதென்று சிந்திக்கமாட்டான். நம் சிநேகிதரிலே நாம் எவ்வளவு பழக்கமாயிருக்கிறோமோ அவ்வளவாய் அவனை அறிந்து கொள்ளுவோம். ஒரு இடத்தில் எவ்வளவு காலமாய் வாசம்பண்ணு கிறோமோ அவ்வளவாய் அதை அறிந்துகொள்ளுகிறோம். நம் வேலையில் எவ்வளவு பழக்கமாயிருக்கிறோமோ அவ்வளவாய் அதின் தன்மையை அறிந்துகொள்ளுகிறோம். பாவமோ அப்படியல்ல, நாம் அதோடு எவ்வளவு பழக்கமாயிருக்கிறோமோ அவ்வளவாய் அதை அறிந்துகொள்ளக்கூடாதவர்களாய் இருக்கிறோம். பாவிகள் பாவத் தைப்பற்றித் தீர்க்கக்கூடாதவர்களாயிருக்கிறார்கள், 'எனென்றால்

அவர்கள் அதைக் காணவில்லை. ஒயாமல் பாவஞ்செய்கிறதினுலே எங்கள் மனச்சாட்சியையும், எங்கள் நல்லறிவையும் கெடுக்கிறோம். பாவம் நமக்கு எவ்வளவு பழக்கமாயிருக்கிறதோ, அவ்வளவாய் அதைக் காணக்கூடாத குருடராய்ப் போனோம். இதிலே பயப்படத்தக்க விதமாய்த் தேவனுடைய நீதியான ஒழுங்கைக் காண்கிறோம்.

14. ஒருவன் அயோக்கியமானதைச் செய்கிறான், அல்லது அசுத்த எண்ணங்கொள்ளுகிறனென்ற வைத்துக்கொள்ளுவோம். முதல் முறை அது அவனுக்குப் பயமாயிருக்கும்; மற்ற முறை அந்தப் பாவம் அவனுக்கு அவ்வளவு அருவருப்பாய்த் தோன்றமாட் டாது. முதல் முறை அவனுடைய மனச்சாட்சி பெலவீனப்பட்டது; இப்பொழுது திரும்ப செய்கிறான். எனென்றால் பாவமானது நம் மிலே பயத்தையும் வெறுப்பையும் உண்டாக்கும் வரைக்கும் தற் காக்கப்படுகிறோம், அதைத் திரும்பத் திரும்பப் பார்க்கிறதினுலே அதின் அகோரத்தைத் தெரியாமல் பயமில்லாமல் செய்கிறோம். இப்படிச் செய்கிறவர்கள், 'ஒரு மனுஷன் என்னசெய்யலாம்?' 'நான் அந்தவிதமாய் உண்டாக்கப்பட்டேன்.' 'அது என் குணம்' என்று சொல்லுகிறார்கள். பணத்தை அக்கிரமமாய் உபயோகஞ்செய்து தங்களுடைய சிநேகிதர்களையும் உடனெத்த உத்தியோகஸ்தர்களை யும் கெடுத்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்படும் போது, வழக்கமாய் அவர்களில் என்னத்தைக் காண்கிறோம்? தாங் கள் செய்த பாவத்துக்காக மனஸ்தாபப்படாமல், தற்செயலாய் இந்த நிலைமைக்கு வந்தோமென்றும், அநியாயமாய் நடத்தப்பட்டிருக் கிறோமென்றும், தங்கள் சிநேகிதர்கள் நம்பிக்கையற்றவர்களென்றும் சொல்லி தங்களைத் தாங்களே பரிதபிப்பார்கள். இந்த விதமான மனம் அருவருப்புண்டாக்கினலும் எங்கள் எல்லாரையும் ஆண்டு கொள்ளுகிற பிரமாணத்துக்கு அத்தாட்சியாயிருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். சில பாவக்களினுல் உண்டாகும் இருதய கடினம் நமக்கு அருவருப்பாயிருந்தாலும், தேவனுடைய பரிசுத்த பார்வையில் நாம் எல்லாரும் அந்த ஸ்திதியிலிருக்கிறோம்.

15. மனந்திரும்புதலுக்கு முதல்முதல் அவசியமான இந்தப் பாவ உணர்ச்சியை மறபடியும் சம்பாதிப்பதெப்படி? 'உன் மனச்சாட்சியை நம்பு' என்ற சிலர் சொல்லுவார்கள், 'அது உன் இருதயத்திலே பேசுகிற தேவனுடைய சத்தம்.' மனச்சாட்சிதான் பெலவீனப்பட் டது. மனச்சாட்சி எவ்வளவு தெளிந்ததாயிருந்தாலும் சில வேளை களில் பேசாமலிருக்கும், அதை முற்றும் நம்பினுல் தவறிப்போ வோம். பாவஞ் செய்யச்செய்ய அது பேசாமலிருக்கிறது. இந்த உள்ளான மௌனம்தான் நம்மைச் சந்தேகிக்கப்பண்ணவேண்டி

யது. 'மனச்சாட்சியானது இருதயத்தில் பேசுகிற தேவனுடைய சத்தம்' எனப்படுகிறது. அது 'ஆத்துமாவின் கண்' என்றும் சொல்லக்கூடும். ஆத்துமாவின் கண் குருடாய்ப் போகக்கூடியது. பாவமானது. செய்யவேண்டிய காரியமென்ற நினைக்கிறதுண்டு. கடன் வந்தப் பாவத்தை விட்டுவிடவேண்டுமென்று அயலாரிடத்தில் கேட்டால், பலமுறையும் நாம் கவனியாததும், பாவமென்று மதியாததுமான காரியத்தைப்பற்றிச் சொல்லுவார்களென்ற காண்போம். நாம் கொஞ்சம் சிந்தித்துப்பார்த்தால் மனச்சாட்சி பேசாமலிருக்க நாம் நம்முடைய மனதில் வழக்கமாய் இடம்கொடுக்கிற பாவங்கள் அநேகம் உண்டென்று காண்கிறோம். ஏதோ ஒரு சின்ன நயத்துக்காக அல்லது சந்தோஷத்துக்காக நிஜம் தப்பிப்போவது, எண்ணத்திலேயாவது செய்கையிலேயாவது சுத்தமானதை விட்டுவிடுவது, வெடுவெடுப்பான குணம், மற்றவர்களோடு சம்பந்தம் கொள்ளமாட்டாத பெருமை, தேவஊழியம் செய்யாத சோம்பு, மற்றவர்களே நெருக்குகிற தீமைகளைப் பொறுத்தல், நாம் நெருக்கப்பட்டால் வேகமான கோபம் முதலிய இந்தக் காரியங்களில் நாம் எவ்வளவு இலேசாய் இணங்குகிறோமென்ற சிந்தித்தால், நம்முடைய எஜமானர், 'உனக்கும் எனக்கும் என்ன?' என்ற சொல்லக் கேட்கிறப்போல் இருக்கிறது. வரவர பாவமன்னிப்பு நமக்கு அதிகக் கஷ்டமாகத் தோன்றுகிறதே. மனந்திரும்புதல் அவசியமென்ற கண்டோம், மெய்யான மனந்திரும்புதலே உண்டாக்கும் முதலாம் விஷயம் நமக்கில்லை என்று இப்போ காண்கிறோம், எனென்றால் நம்முடைய பாவங்கள் நம்முடைய மனதின்கண்ணைக் குருடாக்கின. பாவங்களுக்காக நம்மில் மெய்யான துக்கத்தை உண்டாக்கக்கூடிய ஏதோ ஒரு காரியம் அல்லது ஒரு ஆள் வேண்டும். நம்முடைய மனந்திரும்புதலே ஏற்றுக்கொள்ளுகிற தேவன் மாத்திரமல்ல, நம்மில் மனந்திரும்புதலுண்டாக்கக்கூடிய தேவன் நமக்கு வேண்டும். பயப்படத்தக்க விதமாய் நம்முடைய பாவத்தின் தோஷத்தை நமக்குக் காண்பிக்கக்கூடிய ஒருவர் வேண்டும்.

C. L. S. PRESS, MADRAS—1918

No. 144.

மே 1918
8-MAY 13

வேதியர் விண்ணப்பம்

The Preacher and his Bible

By Mr. I. D. Barnabas

பிரசங்கியும் வேதாகமமும்

(இது பெங்களூரில் ஒரு கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.)

எனக்குப் பேசும்படியாகக் கொடுத்தபொருள் முக்கியமானதாலும் பக்தியிலும் அநுபவத்திலும் முதிர்ந்த நீங்கள் பேசக்கேட்க விரும்பியும் நான் சுருக்கமாகவே பேச யோசிக்கிறேன்.

இன்று நாம் கலந்து சிந்தித்துக்கொள்ளும்படி குறித்தபொருள் 'அருள்வேதமும் பிரசங்கியும்' என்பதே. நமக்கு இருக்கும் சிறிது நிமிஷங்களுக்குள் இந்தப் பொருளின் எல்லாப் பாகங்களையும் அறிந்துகொள்ளமுடியாது. நாம் கவனிக்கும்படி மூன்று குறிப்புகளே மாத்திரம் சொல்லுகிறேன் :—வேதாகமத்தைப்பற்றி—

(1) பிரசங்கியின் சரியான எண்ணம்.

சரியுபயோகம் (2) ,, சரியான தனியுபயோகம்

(3) ,, சரியான பகிரங்க அல்லது பிரசங்கப்பீட உபயோகம்.

(1) பிரசங்கி வேதாகமத்தைக்குறித்த சரியான எண்ணங்கொண்டிருக்கவேண்டும். அதைக்குறித்து எண்ணவேண்டிய பிரகாரமாய் எண்ணவேண்டும்.

நம்முடைய வேதத்தைப்பற்றி, மகம்மதியர் கோரானைப்பற்றி எண்ணுவதுபோல், பரலோகத்தில் தேவவிரலால் எழுதப்பெற்று தேவதூதனால் பூலோகத்திற்கு வந்தது என்று எண்ணுகிறவர்கள் நமக்குள் இல்லையென நம்புகிறேன்.

வேதாகமத்தை மந்திரப்புஸ்தகம் என்று எண்ணுகிறவர்களின் தொகையும் சுருங்குகிறதென்றெண்ணத் துணிகிறேன்.

அவ்வாறே தேவன் வார்த்தை வார்த்தையாகச் சொல்ல பக்தர்கள் எழுதினர்கள் என்றெண்ணுவதும் தேவமகிமையைக் குறைப்பதாகவே தோன்றுகிறது.

வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. கிறிஸ்தவர்களெல்லாரும் இதை ஒப்புக்கொள்கிறோம். ஆயினும் தேவஆவி எப்படி எவினார்? வேதபுஸ்தகத்தின் பற்பல ஆக்கியோன்களும் ஒரேமுறையாகவும் ஒரே அளவாகவும் எவப்பட்டார்களோ, அன்றி பற்பல விதமாகவும் வெவ்வேறு அளவாகவும் எவப்பட்டார்களோ என்றும் கவனமாய் வாசித்தால் பலமுறை தெரியவரும். யாத். 20[1], 25[1]; 2 சாமு. 23; எரே. 1[1]; எசே. 1; தானி. 7[1]; 9[21]; ஆமோ. 1[1]; வெளி. 1[1]. இவைகளிலெல்லாம் கர்த்தருடைய வசனம் வெவ்வேறு முறையாக வந்த போதிலும், தேவவசனந்தான் என அவர்களுக்குத் தெரிந்தபோதிலும் இன்ன நிலைமையில்தான், அல்லது இன்னவிதமாய்த்தான் என்று திட்டமாய் ஒருவரும் நமக்குத் தெரிவிக்கவில்லை.

இதில் பிரசங்கிகளாகிய நாம் ஆராய்ந்து அறியவேண்டியவை அனந்தம்.

வார்த்தை வார்த்தையாய்ச் சொல்ல பக்தர்கள் எழுதினர்கள் என்று ஒரு சாரார் சாதிக்க, வேறு சிலர் வேதபுஸ்தக ஆக்கியோன்கள் தங்கள் கிரந்தங்களை எழுதும்போது தங்கள் சொந்தபுத்தி மறந்து பாவசப்பட்டு, தங்கள் தத்துவங்கள், பயிற்சி, கல்வித்தேர்ச்சி எல்லாம் மறந்த நிலையினராகி முழுவதும் ஆவியினால் நடத்தப்பட்டு சொற்பிழை கருத்துப்பிழை இல்லாமல் எழுதினர்கள். அக்கிரந்த கர்த்தாக்களனைவரும் ஒரே அளவும் மேரையுமாய் எவப்பட்டார்கள் என்றும் அவர்கள் எதாவது தப்பிதமாய் எழுதினர்கள் என்று நினைப்பதும் பேசுவதும் கல்விப்பெருமையும் அகந்தையும் பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவமும் என்கிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்களே அருளாகமத்தையும் கிரந்தகர்த்தாக்களையும் பற்றி இவ்விதநம்பிக்கையை நிலைநிறுத்திவிட்டால் நம்முடைய விசுவாசமும் மார்க்கமும் கெட்டுப்போய்விடும் என்று பயப்படுகிறார்கள். பிரசங்கிகளாகிய நமக்குள்ளும் இப்படிப்பட்ட எண்ணம் இருப்பதுண்டு. ஆனால் நாம் வேதத்தைக் கருத்தாய் வாசித்து நாமாய்க் கண்டுபிடித்த அபிப்பிராயமல்ல இது. நாமே நம்முடைய வாசிப்பினலும் உழைப்பினலும் உண்டாக்கிக்கொள்ளாத அபிப்பிராயம். 'கற்றுக்கொடுத்த சொல்லும் கட்டிக்கொடுத்த சோறும்போல்' கடைவழிக்காகாது. நாம் சிறுபிராயத்தில் கற்ற அபிப்பிராயத்தையும் நமக்கு மற்றவர்கள் சொன்னவைகளையுமே நமக்கு மேற்கோளாக

வைத்துக்கொள்ளாமல் நாமே முயன்று உழன்று நம்முடைய அபிப்பிராயத்தை நமதாக்கிக்கொள்வதுதான் புருஷலக்ஷணம். 'நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன் .... புருஷனனபோதோ குழந்தைக்கு ஏற்றவைகளை ஒழித்துவிட்டேன்' என்றதுபோல நாமும் நம்முடைய சபைகளும் வளரவேண்டுமன்றோ? அப்படியானால் நாமே வேதத்தைப் பங்கு பங்காகவும், புஸ்தகம் புஸ்தகமாகவும், முழுவேதாகமமாகவும் கருத்தூன்றி வாசிக்கவேண்டும். இப்படிக் கருத்தாய் வாசிக்குங்கால் பலவிதமான கேள்விகள் நமக்குள் எழும்பும். நம்முடைய திறமையை இப்படிப்பட்ட கேள்வி கேட்பதால் காட்டவேண்டுமென்றல்ல, தாமாகவே கருத்தாய் வாசித்தால் நமக்கு வருகின்றன. இரண்டொரு திருஷ்டாந்தங்களைக்கொண்டு என் கருத்தை விளக்குகிறேன். இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்கள் மிகுத்துக்கிடக்கின்ற பஞ்சாகமத்திலிருந்து ஒன்றும் எடுக்காமல் திட்டமான சரித்திராகமத்திலிருந்து ஒரு சங்கதியைக் கவனிப்போம். 2 சாமு. 24[1]ல் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின் மேல் மூண்டது. இஸ்ரவேல் யூதா என்பவர்களை லக்கம்பார் என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்ல எவப்பட்டான் என்றும், அதாவது கர்த்தர் தாவீதை லக்கம் பார்த்துப் பெருமைகொள்ளத் தூண்டினர் என்றும், 1 நாளா. 21[1] லோ சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி இஸ்ரவேலைத் தொகையிடுவதற்குத் தாவீதை எவிவிட்டான் என்றும் எழுதுகிறார்கள். இந்த இருவரில் யார் தேவாவியால் எழுதினர்கள்? இருவரும் தேவாவியால் எவப்பட்டார்களாயின் ஒரேவிஷயத்தைப்பற்றி எழுதும்போது இப்படிப்பட்ட ஒன்றுக்கொன்று எதிரிடையான விதமாய் எழுதக் காரணம் யாது என்று கருத்தாய் வாசிக்கிற யாருக்கும் அறிய ஆசை வருமல்லவா? இந்த ஆசை தப்பிதமா? அல்லவென்றால் அறிவுப் பெருமையா? அல்லவென்றே நினைக்கிறேன். என்னைக்கேட்டால் கருத்தாய் வேதம் வாசிக்கும் சபையார் எழும்பி இப்படிப்பட்ட வித்தியாசங்களைக் கண்டு மலையமுன்னும் அல்லது அவர்கள் நாம் எதிர்பாராத கேள்விகளைக் கேட்டு நம்மைத் திகைக்கப்பண்ணுமுன்னும் நாமே முந்திக்கொண்டு இப்படிப்பட்ட வித்தியாசங்களுக்குச் சமாதானம் கண்டுகொள்ளவேண்டாமா? இதற்குப் பதிலாக இப்படிப்பட்ட புத்தியுள்ள கேள்விகளைக் கேட்டுத் தங்கள் சமாதானங்களை நமக்குச் சொல்லும்போது நாம் எவ்விதமாய் ஏற்றுக்கொள்ளுகிறோம்? முன்காலத்தில் உலகத்தைப் புரட்டினவர்கள் என்ற ஆதிச்சபைக்கு விரோதமாய் அக்காலத்தார் எழும்பினதுபோல் நாமும் எழும்புவோமா? வீணை

பயப்படுகிறேமல்லவா? இப்படிப்பட்ட புத்தியான கேள்வி கேட்கிறவர்களே, இவர்கள் வேதத்தைக் கெடுக்கப் பார்க்கிறார்கள். ஐயோ, இவர்கள் நம்முடைய வேதத்தையும், விசுவாசத்தையும் கிறிஸ்துமார்க்கத்தையும் கெடுக்க வந்துவிட்டார்களே என்று பேசுகிறேமல்லவா? எத்தனை அற்பவிசுவாசிகள் நாம்! அத்தனை சுளுவில் ஆண்டவர் அருளிய வேதத்தைக் கெடுக்கக்கூடுமா? கூடுமானலும் அவர் காக்காவிட்டால் நாம் காக்கக்கூடுமா? இருபுறமும் கருக்குள்ள இந்தப் பட்டயத்தையா கெடுத்துவிடுவார்கள்? கருத்தாய் வாசித்து ஆராயாத நாம்தான் அதைக் கெடுத்துவிடுவோம், அதைத் திருப்பிடிக்கச் செய்யக்கூடும். ஆராய்கிறவர்களோ அதைக் கருக்காக்கி இருதயங்களை ஊடுருவச் செய்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டில் ஒன்று பார்த்தோம். புதிய ஏற்பாட்டிலும் இரண்டொன்று பார்ப்போம். மத். 7[11]ல் பொல்லாதவர்களாயெ நீங்கள் ..... நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா என்றும், லூக். 11[13]ல் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா என்றும் எழுதுகிறார்கள். இந்த இரண்டில் இயேசு சொன்னது எது என்று அறியவிரும்புவது அக்கிரமமா? பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவமா! புடமிடுவதினாலே சுத்தப்பொன் கெடாமல் மாற்று உயருவதுபோலவே நம் முடைய வேதமும் இப்படிப்பட்ட விசாரணைகளாலும் குறையாமல் மாற்று உயர்ந்துவருகிறதே. மத். 27[9] ஐப் பார்ப்போம். இங்கே சொல்லியிருக்கிற தீர்க்கதரிசனம் எரேமியாத் தீர்க்கதரிசனப் புஸ்தகத்தில் காணப்படாமல் சகரியாவின் தீர்க்கதரிசனத்தில் காணப்படுகிறதே. இந்தப் பிழை எப்படி வந்தது என்று பயபக்தியோடு விசாரிக்கிறேன். இதுவும் பாதகமோ? கேள்வியினால் அறிவு உண்டாகுமல்லவா? மாற். 4[10-13] வாசியுங்கள். 'அவர்கள் குணப்படாதபடிக்கும் பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும் .... இப்படி (உவமைகளாகச்) சொல்லப்படுகிறது.'

இயேசுபெருமானின் உவமைகளின் நோக்கம் பொதுவாய் இதுதானே! அவர் சத்தியத்தை மறைக்கத்தான் வந்தாரோ என்றும் கேட்க வெட்கப்படுகிறேன். பரலோக ராஜ்யத்துக்கடுத்த அநேக சத்தியங்கள் உவமைகளாலேயே தெளிவாகின்றனவன்றே? இப்படியிருக்க இயேசுரட்சகரின் மனுஷாவதாரத்தின் நோக்கத்திற்கும் அவருடைய உவமைகளின் நோக்கத்திற்கும் நேர் எதிரிடையான இந்தக் கொடிய வார்த்தைகள் என் இரட்சகரின் வார்த்தைகள் தானே? இவைகள் அவருடைய ஜீவியத்திற்கும் தன்மைக்கும் விரோதமான வார்த்தைகளாயிருக்க இந்தக் கொடிய வார்த்தைகள்

தான் நம் ரட்சகரின் வார்த்தைகள் என்று நான் நம்புவதைப் பார்க்கிலும் இந்த விஷயமாக அவர் பேசின வார்த்தைகளைத் தப்பிதமாய் விளங்கிக்கொண்டார்கள். தப்பிதமாய் எழுதியிருக்கிறார்கள் என்று எண்ணுவதே எனக்கு எளிது. சுவிசேஷகன் வேண்டுமென்று தப்பிதமாய் எழுதவில்லை. தனக்கே அவர் சொன்னது விளங்காமல் இப்படி எழுதினான் என்று நினைத்தால் அதினால் நம் ரட்சகர் மேல் உள்ள அபிமானமும் அன்பும் நமக்கு அதிகமாகிறதோ குறைகிறதே? கிறிஸ்துவின் லக்ஷணத்தைக் குறைப்போமோ அல்லது சுவிசேஷகன் ஏதோ பிழை செய்ததாக நினைப்போமோ? நான் என்ன செய்வேன் என்பது எனக்குத் தெரியும்.

நான்கு சுவிசேஷகரும் ஒரே கிறிஸ்துவை ஒரேவிதமாய்க் காட்டுகிறார்களோ? ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோக்கத்தை மனதிற்கொண்டு தங்களுடைய வியாக்கியானம் அல்லது தியானத்தைக் கலந்து எழுதுகிறார்களென்பதற்கையமுண்டோ? ஆகவே வேதாகமத்தின் கிரந்தகர்த்தாக்கள் மனிதர்தானென்றும் அவர்களும் கடவுளைப்பற்றிய தப்பபிப்பிராயம், சுயவியாக்கியானம், கவலையீனம் அல்லது ஞாபகப்பிழை, தப்பிதமாய் விளங்கிக்கொள்ளல் முதலியவைகளுக்கு நீங்கலில்லாவிட்டாலும் தேவ ஆவியால் எவப்பட்டே எழுதினார்களென்று நம்பத் தடையில்லை. மூலபாஷையிலிருந்து மொழிபெயர்ப்பதிலும் எத்தனையோ பிழைகள் விழக்கூடியதே.

பிரசங்கிகளாகிய நாம் அருளாகமத்தைக் கருத்தாய் வாசித்துச் சரியான அபிப்பிராயங்கொண்டு அதற்கேற்றபடி போதியாதபடியால் தான் நம்முடைய சபையாரும் நம் வேதத்தை எண்ணவேண்டிய தற்கு மிஞ்சியோ குறைந்தோ எண்ணி, இக்காலத்தில் பலவிதமான தப்புப்போதனையைச் சொல்லுகிறவர்களுடைய வலையில் லேசாய்ச் சிக்கிக்கொள்ளுகிறார்களன்றே?

(2) வேதாகமத்தைப்பற்றிய அபிப்பிராயம் மகா முக்கியமானதால் இவ்வளவுதூரம் சொல்லிவிட்டேன்.

இனிப் பிரசங்கியையும் வேதாகமத் தனி உபயோகத்தையும் பற்றிப் பார்ப்போம்.

மேலே நான் சொன்னபடி அருளாகமத்தின் கஷ்டங்களையும் சந்தேகங்களையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்திச் சமாதானம் கண்டுபிடித்துப் படிப்பதே வேதாகமவிஷயத்தில் நம் அறிவை விர்த்தி செய்யப் படிப்பதாகும். எப்போதும் இவ்விதமாகவே படிப்போமானால் வேதாகமத்தில் நம் அறிவு பெருகும். நம்முடைய ஆத்துமாவோ அன்றுடக ஆகாரமற்று மெலியும். ஆகையால் நம்மொவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட படிப்புக்குப் பிரத்தியேகமான

நேரமும் நம்முடைய ஆத்துமாவுக்குப் பிரயோஜனமான வாசிப்புக்கும் தியானத்திற்கும் வணக்கத்திற்கும் பிரத்தியேகமான நேரமும் அத்தியந்த அவசியம். இரண்டு வாசிப்பும் கலந்திருந்தால் ஒன்றையும் சரியாய்ச் செய்துகொள்ளமாட்டோம். நம் சொந்த ஆத்துமப் பிரயோஜனத்திற்கும் தியானத்திற்கும் ஜெபத்திற்கும் செலவழிக்கும் நேரம் வீண் நேரமல்ல. இதற்குத் தடைவராதபடி பொழுது விடிகிறதற்கு முன்னுள்ள நேரத்தை நியமித்துக்கொள்வது நலமாயிருக்கும். எனென்றால் சாதாரணமாய் போதகன்மாரிடம் பகலில் எந்த நேரத்திலும் எவரும் வருவர். மேலும் அருளாகமத்திலிருந்து அன்றன்றுள்ள அப்பத்தை உட்கொண்டு வேலைக்குப் போவது எவ்வளவு உதவியாயிருக்கும்.

நாம் தனியாக நம்முடைய ஆத்தும ஆகாரத்தைத் தேடி வேதம் வாசிக்கும்போதே, இந்த வசனம் இன்னாருக்குச் சொல்லத்தகும், இது இன்னாரின் ஜீவியத்திற்குச் சரி, இந்த வசனம் அவருக்குச் சரியான எச்சரிப்பாயிருக்கும், இது பிரசங்கத்திற்கேற்ற வசனம், இதிலிருந்து இன்னின்ன பிரிவுகள் செய்யலாம் என்று நம்முடைய ஆத்துமாவிற்கு ஆகாரம் செல்லவிடாவண்ணம் சோதனை வரும். அதற்கு அதிக விழிப்பாய் வாசிக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவிற்குச் சரியான ஆகாரமில்லாமல் மெலியுமானால் அதின் மூலமாக நம்முடைய சபையாரையும் புஷ்டியுண்டாக்கும் ஆகாரமில்லாமல் மெலியச்செய்ய இது சாத்தானின் சூழ்ச்சி. பிரசங்கி வேதவசனத்தில் ஊறினவனாயிருக்கவேண்டும். ஊறுகாய் நன்றாய் ஊறினபின் போசனத்திற்கு உருசிதருவதுபோல நம்முடைய பேச்சு, நினைவு, நடபடிக்கை, ஜீவியம் எல்லாம் வேதவசனத்தால் சாரமேற்றப்பட்டிருந்தால் நம்முடைய போதனையும் பிரசங்கமும் நம்முடைய சபையாருக்கு எவ்வளவு உருசியாயிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

தற்காலத்துப் பிரசங்கிமாருக்கு வேதம் வாசிக்கும்போதே திக்குகிறதும் பிரசங்கத்தினிடையில் இரண்டொரு வசனங்களைக்கூடப் பிழையின்றிச் சொல்லத்தெரியாமல் படுகிற பாடும் எவ்வளவு பரிதாபம்!

(3) பிரசங்கியும் அருள்வேதப் பகிரங்க உபயோகமும். எந்தச் சமயத்திலும் வேடிக்கையாக வேதவசனங்களை உபயோகிக்கலாகாது. இது மற்றவர்களும் கைக்கொள்ளவேண்டிய விதிதானுமிலும் பிரசங்கி இதை அதிகக் கண்டிப்பாய்க் கைக்கொள்ளவேண்டும்.

பலமுறைகளில் பிரசங்க வாக்கியமும் பிரசங்கமும் கொஞ்சமாவது சம்பந்தமில்லாமலே இருக்கின்றன. இப்படிப் பிரசங்கிக்

கிறவர்கள் சாத்திரத்திற்கும் சடங்குக்கும்போல் ஒரு வாக்கியத்தை எடுக்கிறார்களே தவிர அந்த வசனத்திலிருந்து பிரசங்கிக்கவேண்டுமென்பதை மறந்துவிடுகிறார்கள். வசனம் தெரிந்துகொண்டால் அதின்மேல் பிரசங்கிப்போமாக. பிரசங்கிகளில் அநேகர் ஒரு வசனத்தை எடுத்தால் அந்த வசனத்திலிருந்து தங்கள் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் தியானங்கள் வருகின்றனவோ அவைகளை எடுத்து வீசுகிறார்களேயன்றி, ஆக்கியோனின் கருத்தென்ன, வேதத்தில் என்ன சந்தர்ப்பத்தில் இந்த வார்த்தைகளை ஆக்கியோன் உபயோகிக்கிறார், முன் பின் சம்பந்தம் என்ன என்ற இப்படிப்பட்ட விசாரணைகள் செய்வது தங்களுக்கடுத்ததல்ல சபையாருக்கும் அது அவசியமல்ல என்பதுபோல பக்கமாய் விலகிப்போகிறார்கள். வசனத்தை எடுத்து அது வரும் சந்தர்ப்பம் சொல்லி ஆக்கியோனின் கருத்தை விஸ்தரிக்க முயன்றால் வசனத்தைப் பிரசங்கிக்கிறோம். மற்றப்படி வசனத்தை எடுத்துக்கொண்டு தலைப்பு பிரசங்கிக்கிறோம் என்பதை அறியோமாக. நாம் சொல்ல விரும்புகிறவைகளையெல்லாம் அந்த வசனத்தில் கொளுவவைத்து அந்த வசனத்தின்மேல் சுமக்கக்கூடாத பாரத்தைச் சுமத்துகிறோம். வேதம் வாசிக்கத் தெரியாதவர்களும் வேதம் வாசிக்கக்கூடாதவர்களும் வேதம் வாசிக்க மனமற்றவர்களும் சபையில் இருக்கிறார்களென்பதை மறந்து போகாமல், பிரியமற்றவர்கள் பிரியப்பட்டு வாசிக்கவும் வாசிக்கக்கூடாதவர்களும் பிரயாசப்பட்டு வாசிக்கவும் செய்யத்தக்கதாக அவர்கள் மனதையும் கருத்தையும் கவரத்தக்கதாக தேவ வசனத்தை அவர்களுக்குப் பிரசங்கிக்கவேண்டியது பிரசங்கியின்மேல் விழுந்த பெரிய உத்தரவாதம். இந்த உத்தரவாதத்தைச் சரியாய் நிறைவேற்ற விரும்பும் பிரசங்கி வேதத்தைக் கருத்தாய் வாசித்து அதைப்பற்றிச் சரியான எண்ணமுள்ளவனாயிருந்து அதிலிருந்து தனக்குரிய அன்றாட ஆகாரத்தை உட்கொள்வதனால் பெலனடைந்து வல்லமையாய் வசனத்தைப் பிரசங்கிப்பான். அப்படியானால் பிரசங்கியும் வளருவான், சபையும் வளரும், வசனமும் பிரபல்யமாகும். தேவனுக்கு மகிமையுண்டாகும். இந்த முக்கிய பொருளின்மேல் அனுபவம் முதிர்ந்த நீங்களும் பேசுவீர்களென்று நம்பி இத்துடன் முடிக்கிறேன்.

Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by Pandit J. S. Masillamany

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

(தொடர்ச்சி)

ரோமாபுரியின் வெண்சலவைக்கற் தெருநெடுகச் சவுல் போன போது, விலையுயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்திருந்த ஜனங்கள் பட்டணத்தின் மேற்குவாசல் மூலமாய்ப் போகிறதைக் கண்டார். இதுதான் டாப்லிவாசல் என்று அவருக்குச் சொன்னார்கள்.

அவர் அந்த வாசல் வழியாய்க் கடந்து வெளியே வந்தபொழுது ஓர் அகன்ற ரஸ்தாவுக்கு வந்தார். அழகிய முன் முற்றங்களை யுடைய ரோம வீடுகள் அந்த ரஸ்தாவின் இருமருங்கும் இருந்தன. இம்முற்றங்களில் நின்ற நீர்நிலைக் குழாய்கள் கொப்பளித்துக்கொண் டிருந்த தண்ணீர் சித்திரவேலை செய்யப்பெற்ற அழகிய உருவங் களின் வாயிலிருந்து பளிங்குத் தொட்டிகளில் விழுந்துகொண்டிருந் தது. இந்த அகன்ற ரஸ்தாவினின்று பிரிந்த சில கிளைப்பாதைகள் பத்துமைல் தூரம் விஸ்தாரமாய்ப் பரவியிருந்த மரம் அடர்ந்த காடு களுக்குச் சென்றன. இக்காடுகளில், ஒரு திறந்த மைதானத்தில் வெண்சலவைக் கற்களாற் கட்டப்பட்ட கோயில் ஒன்று இருந்தது. இக்கோயிலில் ஒளியின் தேவதையாகிய அப்பொல்லொவின் மகத் துவமான சொரூபம் ஓர் சுவர்ண கும்பத்திலிருந்து திராக்ஷரசத்தை ஊற்றிக்கொண்டிருக்கிற வடிவமாய் இருந்தது.

இங்கேயுள்ள நீரில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுடைய வெள் ளுடம்பு ஜலத்தை எற்றித் தெறிக்கச்செய்து, சூரியவெளிச்சத்தாலும் பசும் நிழலாலும். பலவர்ணம் பெற்றிருந்த ஜலத்தின் மேற்பரப்பைச் சலசலவெனக் கலக்கி அலைபுரண்டோடும்படி செய்தது. இதெல் லாம் வெகு அலங்காரமாய்த்தான் இருந்தது. அப்படியிருந்தும் அந்த வெண்சலவைக்கற் நிலையைச் சூழ இருந்து அதை ஆராதிக்க வந்தவர்களைச் சவுல் பார்த்து அவர்களுடைய வீண்ட உதடுகளையும் தளர்ந்த முகங்களையும் கண்டு, அவர்களுடைய கடைக்கண் பார் வைகளையும் அசத்தச் செய்கைகளையும் கவனித்து, அந்த ஆரா தனை முழுவதும் அப்பட்டணத்து ஜீவியத்தைப் போலவே ஒரு நச்சுப் பொய்கையின் அழகிய மேற்பரப்பைப்போல் இருக்கிறது

என்று நிர்மானித்தார். கிழக்குத் தேசத்தாருக்கு இயல்பான வீண் பொழுதுபோக்கும், கிரேக்கர்களுடைய அலங்காரப் பிரீதியும், ரோமர்களுடைய பலாபீஷ்டமும் ஒன்றுகக் கலந்து இவ்வித ஆலயங்களுக்கடுத்த திருவிழாக்களை மிருகத்தன்மையுடைய பல கிரியைக் கேடுகளுக்கு நிலைக்களமாக்கின.

சவுல் அந்த சோலைகளுக்கு ஊடே நடந்து திரும்பவும் அந்தி யோகியாப் பட்டணத்துக்குள் பிரவேசித்தபொழுது இந்த சூரியப் பிரகாசச் சமவெளியில் விஸ்தாரமான பட்டண முழுவதிலும் ஒவ் வொருவரும் தாம் தாம் சம்பாதிக்கக்கூடிய பணம் அனைத்தையும் சம்பாதித்து அப்பால் அதைத் தமது சிற்றின்பத்தின்பொருட்டே செலவிட்டதைக் கண்டார். அந்தியோன அரசி என்றும் அலங்கார அந்தியோகியா என்றும் இப்பட்டணத்துக்குப் பிரதிநாமம் கிடைத் தது சரியே.

அந்தியோகியாப் பட்டணத்தாருக்கு வேடிக்கை விநோதங்கள் முதலிய பந்தய விளையாட்டுக்கள் மெத்தப் பிரியம். ஆயினும் அவர் களுடைய சரீரம் அதிக நெகிழ்ந்தனவும் தளர்ந்தனவுமாய் இருந்த படியால் அவர்களே இந்த விளையாட்டுக்களில் நேரே பங்கு பெற வில்லை. ஒருவரை யொருவர் கொல்லுகிறதையும் சிங்கத்தோடு சண்டையிடுகிறதையும் தாங்கள் கண்டு நேத்திரானந்தம் அடையும் பொருட்டு இப்பட்டணத்தார் பந்தய யுத்தவீரர்களான மல்லுக்காரர் களையும் சிலம்பக்காரர்களையும் வாடகைக்கு அமர்த்துவார்கள். ஸ்திரிவந்தரான பட்டணவாசிகளை அடிமைகள் பல்லக்குகளில் ஏற்றிப் பந்தய மைதானத்துக்குச் சுமந்துகொண்டுபோய், அவர்கள் அங்கே உட்கார்ந்தபிறகு அவர்களுக்கு விசிறிக்கொண்டிருப்பார்கள். இவர்களோ அங்கே உட்கார்ந்து, குதிரைவீரர்கள் தங்கள் குதிரை கள் தூரை தள்ளத் தள்ள அவற்றைச் சவுக்கால் அடித்துப் பந்தய வட்டத்தைச் சுற்றிப் பறந்துகொண்டுவருகிறதைப் பார்த்துக்கொண் டிருப்பார்கள்.

சவுல் தெருநெடுக வந்தபொழுது ஒரு சிறு பையன் ஒரு கலசத் தில் எண்ணெயையும் ஒரு படி கோதுமையையும் எடுத்துக்கொண்டு ஒரு சிறு ஆலயத்துக்குப் போய், அங்கே இவற்றை அப்பொல்லொ வின் விக்கிரகத்துக்குப் பலியாகப் படைக்கிறதைப் பார்த்தார். அந்தி யோகியாப் பட்டணத்தார் வணங்கிவந்த அப்பொல்லொவின் சிலை மிகவும் அலங்காரமுள்ளது. அப்பொல்லொவின் புராண சரிதை கேட்கிறதற்கு இன்பமானது. ஆனால் ஒரு பையன் தன் ஜீவியத் தைச் சுத்தமாய்க் காத்துக்கொள்ளுகிறதற்கு அப்பொல்லொவின் சரித்திரம் உதவியாய் இராது. அந்தப் பையனைப் பூரண புருஷத்து

வத்தில் வளரச்செய்யக்கூடியவரும், ஜீவனும் வல்லமையும் உள்ள வருமான தமது மகாவீரரைக்குறித்து அவனுக்குச் சொல்லும்படி சவுல் விரும்பினார்.

தமக்குமுன் அந்தத் தெருநெடுகப் போக்குவரவு செய்த ஜனங்களைச் சவுல் கவனித்துப் பார்த்தார். சிலர் விநோதப் பிரியர், சிலர் பரிகாசப் பிரியர், சிலர் ஆவியில் தாகமுடையவர். யூத ஜெப்பாலயங்களே யொட்டியிருந்த பள்ளிக்கூடங்களில் படித்துவருகிற கருநிற முடியையுடைய யூதப் பையன்களும், கைல் கதிப் பள்ளத்தாக்கிலிருந்து வந்த கரியநிற நீக்ரோவரும், மஞ்சள்நிற எகிப்தியரும், உலக முழுவதையும் ஜெயிக்கவேண்டும் என்னும் கர்வத்தாலேயே முழுவதும் பிணிப்புண்ட ரோமரும், வியாபார விஷயத்தில் வெகு சாமர்த்தியமுடையவர்களான கிரேக்கர்களும், சூரிய வெப்பத்தால் கருகிய நிறத்தையுடைய வனாந்தரவாசிகளான அராபியர்களுமான சகலரையும் சவுல் அந்தத் தெருவில் கவனித்துப் பார்த்தார்.

இவர்களுடைய முகங்களைச் சவுல் பார்த்தபொழுது இவர்களுடைய தேசம் பாஷை நிறம் நடையுடை பாவனை முதலிய விஷயங்களில் எத்தனை பேதம் இருப்பினும் கடவுளைத் தடவியாயினும் அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆத்திரம் இவர்களெல்லாருக்குள்ளும் இருக்கிறதை அவர் அறிந்தார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி தமது சுயஜனங்களாகிய யூதர்களுக்குமட்டும் உரியதல்ல என்பதைச் சவுல் இதற்கு முன்னமே அறிந்திருந்தார். அந்தியோகியாப் பட்டணத்திலேயே கிறிஸ்துவை வணங்கின கிரேக்களுடைய தீத்துவும் வேறு அநேகரும் இருந்தார்கள். பல பேதங்களையுடையவர்களான இந்த ஜனங்கள் ஒரே யொரு பொதுக்கட்டுக்குள் இருந்தார்கள் என்பதை அந்தியோகியாப் பட்டணத்தாரும் அறிந்துகொண்டார்கள். இவர்கள் எல்லாரும் ஒரு ஜாதியையாவது குலத்தையாவது சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால் இவர்களெல்லாம் தங்களுக்குள் வசித்த இயேசுகிறிஸ்து என்னும் புருஷோத்தமனுடைய ஓர் புதிய தேவனை வணங்கிவந்தார்களென்று அவர்களுக்குத் தெரியவந்தது.

சவுலும் பர்னபாவும் தெருநெடுகப் போகும்பொழுது ஜனக்கூட்டங்களிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் பார்த்து இவர்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்.

இப்படி அந்தியோகியாவிலே நசரேயர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் உண்டாயிற்று.

Illustrations for Preaching to Hindus

By A. Samuel

திருவ்டாந்தங்கள்

1. பரமயோக்கியரும் பாவியும்

அநேக அவசர காரியமாய் ஐந்துபேர் ஒரு ஊருக்குப் புறப்பட்டார்கள். எவ்வளவுக்குச் சீக்கிரமாய்ப் போக விரும்பினார்களோ அவ்வளவுக்குத் தடையுண்டானது. இடைவழியிற் சென்று கொண்டிருக்கும்போது மழை ஏராளமாய்ப் பெய்து ஆறு பெருகிவிட்டது. ஆற்றைக் கடந்துசெல்ல முடியாமைபற்றி ஐந்து மனிதரும் அக்காட்டிலிருந்த கல்மடமொன்றிற்குட் புகுந்தார்கள். அவர்களுக்குள் ஒரு தர்க்கமுண்டானது. அதாவது, நம்மில் ஒருவன் பஞ்சமாபாதகன், அவன் மரித்தால்லன்றி இடையூறு நீங்காது. ஆகையால் முதலாவது ஒருவன் இம்மண்டபத்தைவிட்டு வெளியே போகவேண்டும். அவன் பொல்லாதவனுயிருந்தால் இடி அவன் தலைமேல் விழுந்து சாகட்டும். இல்லாவிட்டால் இரண்டாவது மனுஷன் போகவேண்டும். அப்படியே ஒருவர்பின்னொருவராகப் போகத் தீர்மானித்தார்கள். முதலாவது மனிதன் மற்ற நால்வரையும் பார்த்து, 'நிநேகிதரே! நான் மிக்க யோக்கியன், நான் ஒருவருக்கும் அநியாயம் செய்ததில்லை, ஆகையால் நான் முதலிற் போவேனெனத் துணிந்து சென்றான். இடி அவன் தலைமேல் விழவில்லை. இங்ஙனம் முதல் நாலுபேர் போனார்கள். நாலு மனிதர் மேலும் இடி விழாததால் இவர்கள் தங்களைப் பரம யோக்கியரென வெண்ணிக்கொண்டார்கள். இனிமேல் ஐந்தாவது மனிதன் போகவேண்டும். அவன் கதறி, 'ஐயோ! நான்தான் பஞ்சமாபாதகன். நான் புரிந்த பாவத்துக்குக் கணக்கில்லை. தெய்வமே! என்னை இரட்சித்தருளும்' என்று அழுதான். எனைய நால்வரும் அவனைப்பார்த்து, 'அப்பா, நீ இப்பொழுது போகவேண்டும். மாட்டேனென்றாலும் முடியாது. நாங்கள் உன்னை விடோம்' எனக்கூறி அவனைக் கதறக்கதறவென்றிழுத்து வெளியே நிறுத்திவிட்டு உட்புகுந்து கொண்டார்கள். அவனை ஒட்டம்பிடித்தான். பின் நடந்த காரியம் என்னவென்றறிய விரும்புவீர்கள். மண்டபத்துக்குள்ளிருந்த நாலு பேரும் ஒரேசமயத்தில் மடியும்படி இடி மண்டபத்தைத் தாக்க அக்கல்மண்டபமே அக்கன்மிகளுக்குக் கல்லறையாயிற்று. ஓடின வன் உயிர்தப்பிப் பிழைத்தான்.

பரிசேயன் சொன்னதுபோல், 'ஆண்டவரே, நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காராகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததற்காக உம்மைத் துதிக்கிறேன்' என்று ஒருவரும் சொல்லாதிருப்போமாக. 'தேவன் ஒருவரைத் தவிர நல்லவன் ஒருவனுமில்லை.' ஆகையால் 'தேவனே, பாவியாகிய என்மேல் இருபையாயிரும்' என்று கெஞ்சுவோமாக.

'ஓடுவதெங்கே யொளிப்பதெங்கே பாதகனேன்
கேடுவந்து மூடக் கெடுவேனே, தேடுவதார்
தாபரமார் தாயகமார் சார்பார்தானின்னையன்றி
ஆபரன்மைந்தா சரண்டைந்தாள்.'

பதகீர், வெண் 241.

2. ஆட்டுக்காக உயிரைக்கொடுத்த ஆயன்

திருநெல்வேலி ஜில்லாவின் மேற்பாகத்தில் கடையம் என்றொரு கிராமமுண்டு. திருநெல்வேலி ஜில்லாவின் கீழ்ப்பாகத்திலுள்ள இடையர்கள் கடையத்துக்குச் சமீபத்திலுள்ள மலைச்சாரலில் தங்கள் ஆடுகளைக் கொண்டுவந்து சில மாசங்கள் அங்கே தங்கியிருந்து மேய்த்துக்கொண்டு தங்கள் தங்களூர்களுக்குத் திரும்பிப் போவது வழக்கம். ஒருநாள் ஒரு மந்தையிலிருந்த ஆடு ஒன்றைப் புலி பிடித்துக்கொண்டது. உடனே ஆட்டுக்குச் சொந்தக்காரனாகிய மேய்ப்பன் சத்தமிட்டலறிக்கொண்டு நெருங்கிவந்து ஆட்டைத் தப்புவிக்க முயன்றான். இவனைக் கண்டவுடனே புலி ஆட்டைப் பிடித்திருந்த பிடியை விட்டு இடையனைப் பிடித்து முறித்துக் கொன்றுவிட்டது. ஆடு தப்பினது. கூடவந்திருந்த மேய்ப்பர்கள் இவனுடைய ஆடுகளைப் பத்திரமாய் ஊர்கொண்டு சேர்த்தார்கள். 'நல்லமேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். கூலிக்காரன் கூலிக்காக வேலைசெய்கிறானுகையால் ஓடிப்போகிறான்.' யோவா. $10^{11,12}$.

The Forgiveness of Sins

பாவ மன்னிப்பு

(Studies for Seven Weeks. Adapted from the English by Miss Clegg.)

4-ம் கிழமை. பாவமன்னிப்புக்குரிய நியமங்கள்

மனந்திரும்புதல்

நாளாந்தர வாசிப்பும் தியானமும்

1-ம் நாள். எபே. 6^{1-3}; ரோம. 6^{12-23}.

நாம் நம்முடைய பாவத்தை அறிக்கையிடுகிறோம். ஆனால் அப்பாவம் நமக்கு வழக்கமாயிருப்பதால் அதை விட்டுவிட நம்மாலே ஏலாது. நாம் என்ன செய்யவேண்டும்? (§ 17.)

2-ம் நாள். ரோம. 7^{7-24}.

இயேசுகிறிஸ்துவை அறியுமுன் பவுலின் அனுபவம் இதுதான். இது நம்முடைய அனுபவமா? அப்படியானால் 25-ம் வசனத்தை எப்போ சொல்லப்போகிறோம்? (§ 18.)

3-ம் நாள். எபே. 4^{17-24}.

குடிகாரனை நோக்கி 'நீ இவ்வளவு பாடுபட்டபின் திரும்பத் திரும்பக் குடிக்கிறதெப்படி' என்று கேட்டால், அவன் எப்படி விளங்கப்படுத்தக்கூடும்? அவன் எதிரிடையாக 'நீ இவ்வளவு பாடுபட்டபின் நீ திரும்பத்திரும்பச் செய்கிற ஒரு பாவமில்லையா' என்று நம்மிடத்தில் கேட்டால், நாம் எப்படி விளங்கப்படுத்தக்கூடும்? (§ 18.)

4-ம் நாள். எபே. 4^{25}—5^{6}.

கபடம், பொய், தரோகம் செய்த ஒருவன் மனஸ்தாபப்பட்டு தன் சிநேகிதனிடத்தில் தன் குற்றங்களை அறிக்கையிட்டு, நன்றாய் நடக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அந்த சிநேகிதன் அவனை முந்தின நிலையில் ஏற்றுக்கொள்ளச் சந்தேகப்படும்பொழுது, 'நான் உண்மையாய்க் குணப்பட்டேனென்று நீர் நம்பவில்லையா?' என்று கேட்கிறான். சிநேகிதன் 'இல்லை, அதினிமித்தமல்ல' என்று சொல்லுகிறான். பின்னே காரணம் என்ன? தேவன் நம்மைக்குறித்து இப்படி நினைக்க நியாயங்களுண்டா? (§ 19.)

6-ம் நாள். லூக். 19^{1-10}.

மனஸ்தாபப்பட்ட ஒருவன் 'என் பாவத்தினால் மற்றவர்களுக்குச் செய்த தீமையை நான் நிறுத்தக்கூடாததினால் எனக்கு ஆறுதலில்லை' என்று சொன்னான். அவனுக்கு உதவியாக நீ என்ன சொல்லக்கூடும்? (§ 22.)

7-ம் நாள். ரோம. 3$^{21-26}$.

இவ்வசனங்கள் முந்தின கேள்விகளை எப்படி விளங்கப்படுத்துகின்றன? (§ 23.)

17. (ii) நாம் பாவத்தை வெறுத்து அதை முற்றுமாய் விட்டுவிட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். முதலாம் தடை நீக்கப்பட்டதென்று வைத்துக்கொள்ளுவோம். ஒரு மனுஷன் தன் பாவத்தை உணர்ந்து, சுத்தம்பண்ணுகிற தூக்கத்திலுல் நிறைந்தவனுயிருக்கும் போது விஷயம் முடிகிறதில்லை. அவன் தன் பாவத்தை விட்டுவிட வேண்டும். முதலில் இது இலேசான காரியமாய்த் தோன்றும். எனென்றால் நாம் நம்முடைய பாவத்தை உணருகிற வெட்கத்திலே அதை எப்படிச் செய்யவந்தோமென்று நம்பவும், அல்லது திரும்பச் செய்வோமென்று நம்பவும் கூடாதவர்களாயிருக்கிறோம். இப்படிச் சிந்திக்கிறதினுலே நமக்குச் சம்பவித்ததை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளாமலிருக்கிறோம். பாவமானது இலேசாய்த் தீர்க்கக்கூடிய ஒரு வெளியான தோஷமல்ல. அதின் பலன் என்றைக்கும் கலையாததாயிருக்கிறது. நாம் செய்யும் பாவமுள்ள செய்கைகள் நம்முடைய ஜீவியத்திலே தாக்காமல் தனித்த செய்கைகள் அல்ல. அவைகள் நம்மைக் கட்டும் வழக்கச் சங்கிலியின் வளையங்களாயிருக்கின்றன. நம்முடைய கேள்வி என்னவென்றால், அந்த சங்கிலி எப்படி உடைக்கக்கூடும்? ஒரு பாட்டிலே குடியன் ஒருவன் ஒவ்வொரு புதிய குற்றஞ் செய்த போது 'இத்தமுறை எண்ணமாட்டேன்' என்று பகிடியாகச் சொல்லித் தன் பிழையைப் பொறுத்துக்கொண்டான். அவன் எண்ணுதிருந்தாலும், தேவனும் எண்ணுதிருந்தாலும் அது எண்ணப்படுகிறது. அவனுடைய தசைநார்களும் நரம்புகளும் அதை எண்ணி மற்றச்சோதனை வரும்போது அதை அவனுக்கு விரோதமாய்ப் பாவிக்கும்.

18. பாவத்தினின்று விடுதலையாக்குகிறதற்கு ஒரு மனுஷன் தன்னிடத்திலிருந்து விடுதலையாக்கப்படவேண்டும். பாவஞ்செய்தவன் தன் பாவத்தை உணர்ந்து, அதை இருக்கிறபடி தெளிந்த கண்ணோடு காணும் போது, அது தன்னிலே பாகமாய் வந்ததென்று காண்பது அவனுக்கு விசனமே. வெளியான ஒரு வருத்தம், ஒரு நோய், ஒரு பாரம், ஒரு கடன் இருந்தால் விடுதலைபெறலாம். தான் ஆனதிலிருந்து விடுதலை பெறுவதெப்படி?

19. இதினுலே நம்மிடத்திலிருந்து விடுதலையாக்கக்கூடிய ஒருவர் வேண்டுமென்று காண்கிறோம். நாம் சுமக்கிற பாரத்திலிருந்து மாத்திரமல்ல, நாம் செய்த குற்றத்திலிருந்து மாத்திரமல்ல, நம்முடைய மாம்சத்தில் பங்காய் வந்த அந்த தீமையான வழக்கத்திலிருந்து நம்மை விடுதலை ஆக்கக்கூடிய ஒருவர் வேண்டும்.

20. (iii) நமது பாவத்தினுல் ஏற்பட்ட தீமைகளை உணர்ந்து அவைகளின் நஷ்டத்திற்குப் பதில் செலுத்த வகைதேடுவதே. தன் பாவத்தை உணர்ந்து, அதைத் தள்ளிப்போட்டவன் அதற்குப் பதில்செலுத்த அவாவாயிருப்பான். தான் செய்த குற்றத்தை மறக்கவேண்டுமென்கிற ஒரு விதமான மனந்திரும்புதல் உண்டு. உற்றுப்பார்க்கில் அவ்விதமான மனம் தான் செய்த குற்றத்தில் நிலைநிற்கிறதென்று காண்போம். ஒருவன் மன்னிப்பைப்பெற்று, மற்றவர்கள் தான் செய்த பாவத்தின் பாடனுபவிக்குவிட்டால், மற்றவர்களை நினையாமல் சொந்த நயத்தைத் தேடின முந்தின குணத்தில் நிற்கிறான். இதுவே அவன் மனஸ்தாபப்படவேண்டியது. தன்னை ஆண்டுகொள்ளுகிற வழக்கத்தைச் செல்வமாய் வைத்துக்கொண்டு, வெளியான கிரியைக்காக மனஸ்தாபப்படுகிறான். மெய்யான மனந்திரும்புதலுக்கும் இதற்கும் எவ்வளவுதூரம்! பாவத்தின் பலன் மிகதூரத்துக்குப் பரம்புகிறதாயிருக்கிறதே. அந்தப் பலனை நாம் எண்ணவும், தொடர்ந்துபிடிக்கவும், பழுதுபார்க்கவும் கூடாதவர்களாயிருக்கிறோம். இந்த எண்ணம் தேவபக்தியுள்ள மனுஷனின் மனதைக் குற்றப்படுத்துகிறதே. செய்த நஷ்டத்திற்குப் பதில் கொடுக்கவும் அல்லது பழுதுபார்க்கவும் கூடுமானுல் கொஞ்ச அளவில் அவர்கள் மனதுக்கு ஆறுதலாயிருக்கும். போன காலத்திலே ஒருவனுடைய தூங்குகிற மனச்சாட்சி ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டு நாளத்தனையாகத் திரும்பக்கொடுத்ததுபோல சிலவேளை கொடுக்கலாம். அப்படிக்கொடுத்தாலும் தான்உண்டாக்கின வறுமைக்காகவும் வியாகுலத்துக்காகவும் இது போதாததாயிருந்திருக்கலாம். பெரும்பாலும் மற்றவர்களுக்குச் சரியான பதில் செலுத்தக்கூடாதவர்களாயிருக்கிறோம். செய்த கிரியையின் பிரயோஜனம் பின்னுக்குத் திருப்பக்கூடாததாயிருக்கிறது. பாவத்தை உணர்ந்த மனதுக்கு இது அதிக வேதனையுள்ள எண்ணமே.

21. போன நூற்றாண்டில் சீர்மைதேசத்திலே படங்களை எழுத கெட்டித்தனமான சில வாலிபர் இருந்தார்கள். அவர்கள் பழைய வழக்கங்களையும் ஒழுங்குகளையும் விட்டுவிட்டோமென்று தங்களை மேன்மைபாராட்டினர்கள். அவர்களுக்கு நீதி ஒழுக்கமாவதும் மார்க்க ஒழுக்கமாவதும் இல்லை. அவர்களுடைய வேலையின் செல்வாக்கு அதிகமேயிருந்தது. ஆனுல் அவர்களில் ஒருவன் வருத்தப்படும் பொழுது இதை உணரவந்தான். அவன் குணப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டான். அவன் மரணவேளைக்கு வந்தபோது அவனுக்கு ஆறுதலில்லை. இப்பொழுதே அவன் செய்தது அவனுக்கு அதிக பயங்கரமாய்த் தோன்றினது. அவனுடைய சிநேகிதன் ஒருவனுக்குப் பரிதாபப்படத்தக்க விதமாய் ஒரு காகிதத்தை எழுதினுன். அதாவது, 'நாம் எழுதின எல்லா தூர்த்தமான படங்களையும் புஸ்தகங்களையும் நீர் அழிக்கவேண்டுமென்று எல்லாப் பரிசுத்தமான காரியங்களின்பேரில்

உன்னை மன்றாடிக் கேட்கிறேன். இதை இன்னுனிடம் காட்டி அவனையும் அப்படிச் செய்யப் பிரார்த்திக்கவேண்டும். பரிசுத்தமுள்ளவரின் பேரில் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்—எல்லா அசுத்தமான படங்களையும் அழித்துப்போடவேண்டும்.' இதற்கு கையோப்பம் எழுதி, 'என்னுடைய மரணவேதனையில் எழுதுகிறேன்' என்று எழுதினுன். அதிலே மெய்யாய் மனஸ்தாபப்பட்ட ஒரு ஆன்மா பேசினது. ஆனுல் அவன் எழுதின புஸ்தகத்தின் பிரதிகள் எல்லாம் அழிக்கப்படக்கூடாது. ஒரு தீமையான புஸ்தகம் உலகத்தில் பரம்பக் கொடுத்தால் அது தன் தீமையான வேலை செய்யும். அதை எழுதினவன் மனஸ்தாபப்பட்டாலும் அதைத் திரும்ப அழைக்கவும் அல்லது அதினுலே செய்கிற தீமையைச் செய்யாமல் நிறுத்தவும் கூடாதே.

22. ஒரு தீமையான புஸ்தகத்தைப்போல வேறெந்த கெட்டசெய்கையும் இருக்கிறது. அது திரும்ப அழைக்கப்படக்கூடாது. 'கட்டவுளும் செய்யக்கூடாத காரியம் ஒன்றுண்டு; செய்ததைச் செய்யாததாக மாற்றக்கூடாதே' என்கிற ஒரு கிரேக்கு பழமொழி இருக்கிறது. அநியாயஞ் செய்தவனுக்குப் பதில் செலுத்தவேண்டுமென்கிற எடுபடக்கூடாத ஆசை மனுஷனுடைய இருதயத்திலிருந்தால் அதெப்படி நிறைவேறும்? உடனுத்த மனுஷனுக்குச் சரியாய்ப் பதில் செலுத்துவது நம்மாலே கூடாத காரியம்போலத் தோன்றுகிறது. நாம் செய்கிற ஒவ்வொரு பாவமும் தேவனுக்கு விரோதமானுல் அவருக்குச் செய்த அநியாயத்துக்கு எப்படி பதில் செலுத்துவோம்? அவரிடம் நாம் கொண்டுவரக்கூடியது அந்த ஆசையல்லாமல் வேறொன்றுமில்லை. இது எவ்வளவு குறைவான காரியமாயிருக்கிறது!

23. இந்த விஷயம் இன்னும் பெரிதாய்த் தோன்றுகிறது. நாம் நம்முடைய பாவங்களை உணரக்கூடுமானுல், நம்முடைய மாம்சத்தில் வாசம்பண்ணுகிற தீமையினின்று நாம் விடுதலையாக்கப்படக்கூடுமானுல், நம்முடைய பாவத்தினுல் வந்த பலனைத் தொடர்ந்துபிடிக்கக் கூடாதவர்களாயிருக்கிறோம். நாம் செய்த தீமைக்குப் பதில் செலுத்த வேண்டுமென்கிறதும், அப்படிச் செய்யாவிட்டால் அதின் தோஷம் என்றைக்கும் நம்மிலே பிடிக்குமென்கிறதும் நம்மைப் பயப்படுத்தக் கூடிய எண்ணமாயிருக்கிறதே. பாவத்தின் பலனை நீக்கி, நாம் செய்யக்கூடாத இந்தக் கடினமான விஷயத்தை தம்மேல் ஏற்றுக்கொள்ள எங்கள் பரமபிதாவுக்கு ஒரு வழி இருந்ததா?

24. பாவமன்னிப்புக்கு வேண்டிய இந்த முதலாம் நியமத்தைப் பற்றி நாம் சிந்திக்கச் சிந்திக்க அது அதிக கடினமும் பிரயாசமுமாய்த் தோன்றுகிறது. நாம் மனந்திரும்பாவிட்டால் தேவன் மன்னிக்கக் கூடாதே. மனந்திரும்புகிற விதம் நமக்குத் தெரியாதே!

C. L. S. PRESS, MADRAS—1918

வேதியர் விளக்கு

10 JUN1918

An Illustration used by Sadhu Sunder Singh

வட இந்தியாவிலுள்ள ஒரு விநோத புஷ்பம்

சாது சுந்தர்சிங், ரெயில்வேஸ்டேஷனில், ரெயில்வண்டிக்காகக் காத்துக்கொண்டிருக்கும்போது தன்னைச் சூழ்ந்துநின்ற பலவகையான ஜனங்களோடு மார்க்கசம்பாஷணை செய்துகொண்டிருக்கையில், தாடியுள்ளவரும் கழுத்தில் ஜெபமணிகள் அணிந்தவருமான பூஜாசாரிபோன்ற ஒரு ஸ்திரீ, சாதுவைப்பார்த்து, 'என்னை ஒரு பாசம் மூடிக்கொண்டிருக்கிறது, அதிலிருந்து நான் விடுதலையடைய எனக்கு வழி சொல்லவேணும்' என்று கேட்டார்.

அதற்கு சாது சுந்தர்சிங், 'வட இந்தியாவில் ஒரு புஷ்பத்தைப் பார்த்திருக்கிறேன். அது மிகவும் துர்நாற்றமுள்ளது. அது பகலில் சூரியவெளிச்சம் இருக்கும்போதெல்லாம் மலராமல், மூடிக்கொண்டிருந்து, இரவு வந்தவுடன் மலருகிறது. அப்புஷ்பம் சூரிய வெளிச்சத்தில் விரியுமானுல், சூரியன் அதன் துர்நாற்றத்தை நீக்கிவிடும். பகலில் மலராமல் சந்திரோதயத்தில் மலருவதால், சந்திரன் அதன் துர்நாற்றத்தை நீக்குகிறதில்லை. அப்படியே, நீரும் என்னைப் பார்ப்பதில் பிரயோஜனமில்லை, கடவுளை நோக்கும்' என்று சமயோசிதமாய்ச் சொன்ன மறுமொழி அந்த ஸ்திரீயின் மனதில் பட்டிருக்கவேணும்.

அல்லாமலும், பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டுவந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்.

அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்:

மனுஷரே, என் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு, வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் .... என்றார்கள். அப். 14[15-15].

Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by the Rev. J. S. Masillamany, B.D.

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

(தொடர்ச்சி)

11-ம் அத்தியாயம்

புறதேச அழைப்பு

அந்தியோகியா பட்டணத்திலே யிருந்த ஓர் குளிர்ந்த இருண்ட அறையிலே பர்னபாவும், சவுலும், வேறு சில சிநேகிதரும் அந்நாளின் வேலையை முடித்தவர்களாய்த் தங்கள் ராத்திரிச் சாப்பாட்டுக்காக கூடிவந்திருந்தார்கள்.

இவர்கள் மிக்க களைப்பாயிருந்தனர். ஆயினும் தாங்கள் அதிகமாய் விரும்பின ஒரு வேலையை ஒருநாள் முழுவதும் கஷ்டப்பட்டுச் செய்வதினால் அந்நாளின் கடைசியில் உண்டாகிற மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் அவர்கள் உணர்ந்தார்கள், ஆனால் ஒரு காரியம் குறைவாயிருந்தது. இயேசு அந்நாளில் அங்கேயிருந்து அவர்கள் அந்நாளில் செய்த வேலையைப்பற்றி 'சிநேகிதரே நன்றாய்ச் செய்தீர்கள்' என்றுமட்டும் சொல்லக்கூடுமானால் எவ்வளவு திருப்தியாயிருக்கும்.

இயேசு சிலுவையில் அறையப்படுகிறதற்கு முந்தின நாள் தம் முடைய சிநேகிதரோடு இராப்போஜனம் அருந்தினார் என்று பேதுரு முதலியவர்கள் பர்னபா எருசலேமிலிருந்தபோது சொல்லியிருந்தார்கள். இராப்போஜனகாலத்தில் அவர் அப்பத்தைப் பிட்டு, திராட்சரசத்தைப் பாத்திரத்திலிருந்து வார்த்து, 'என்னை நினைவு

கூரும்படி இதைச் செய்யுங்கள்' என்று சொன்னார். அவர் தங்களை விட்டுப்போவதைப்பற்றி அவர்களுடைய இருதயம் மனமடிவடைந்ததாக அவர்களுடைய முகக்குறிகளால் அவர் அறிந்தபோது அவர்களை அவர் ஆறுதல்படுத்தினார்.

'உலகம் இனி என்னைக் காணமாட்டாது. ஆனால் நீங்கள் என்னைக் காண்பீர்கள்' என்றார்.

இவ்விதமாக அந்தியோகியா பட்டணத்திலே கர்த்தருடைய திருவிருந்தில் பர்னபாவும், சவுலும், மற்றவர்களும் மெல்லிய அப்பங்களைப் பிட்டு, தணிக்கைகளை ஒருவருக்கொருவர் கொடுத்து பாத்திரத்தை ஒருவர் கையிலிருந்து ஒருவர் கைக்கு மேசையைச் சுற்றிலும் மாறச்செய்து, இவ்விதமாய் இயேசுகிறிஸ்துவை நினைவு கூர்ந்தார்கள். அவர்கள் இதைச் செய்து அவரைக்குறித்துப் பேசின போது அவருடைய பிரசன்னம் அங்கே அவர்களுடன் இருந்தது என்பதை அவர்கள் அறிந்துணர்ந்தார்கள்.

தங்களுடைய அன்றுடக வேலையின் கடுமையினால் ஒருவரோடொருவர் கோபங்கொண்டார்களென்றால், கர்த்தருடைய திருவிருந்து காலத்திலே தங்கள் கோபத்தை ஆற்றி, மறுபடியும் சிநேகிதராவார்கள். இதன்றி தூர இடங்களிலேயிருந்த தங்கள் சிநேகிதர்களில் வேறு அநேகர் இதேசமயத்தில் பொதுவான மேசையைச் சுற்றி உட்கார்ந்து அப்பத்தைப் பிட்டுத் திராட்சரசத்தைப் பானம்பண்ணிக்கொண்டிருப்பார்கள் என்பதையும் நினைவுகூர்ந்தார்கள்.

இவர்களுடைய கூட்டாளிகளில் சிலர் எருசலேமில் இருந்தார்கள். அநேகர் அத்தேசத்திலிருந்த கிராமங்களில் வசித்தார்கள். கலிலேயாக்கடல் ஓரத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த சிலர் அம்மீன் வலைகளினால் தங்கள் கையிலுண்டான அழுக்கைக் கழுவிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்கள். வேறு சிலர் சீதோன்பட்டணத்து ஜனநெருக்கடியான துறைமுகத்திலுள்ள கப்பல்களிலும், தீருபட்டணத்து ரத்தாம்பர சாயப்பட்டரைகளிலுமிருந்து தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். இவர்களுடைய உடன் கிறிஸ்தவர்களில் அநேகர் கடலுக்கு அக்கரையிலிருந்தார்கள். இவர்களில் சிலர் சீப்புரு என்ற அழகிய தீவின் அத்திப்பழத்தோட்டங்களிலிருந்தும் மற்றவர்கள் தர்சுபட்டணத்துக்கு அப்பாலுள்ள மலைச்சாரல்களில் வெள்ளாட்டுக் கடாக்களை மேய்ப்பதை விட்டுவிட்டும் தங்கள் வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

இப்படியாகச் சவுலும், பர்னபாவும், மற்றவர்களும் அந்தியோகியாவிலே இராப்போஜனம் பண்ணும்போது இந்தச் சகோதரர்

எங்கேயிருந்தாலும் அவர்கள் எல்லாருக்கும் நன்மையளிக்கும்படியாகக் கடவுளை நோக்கிப் பிரார்த்தனைபண்ணினார்கள். அவர்கள் செய்த பிரார்த்தனையாவது: 'நாங்கள் பிட்கிற இந்த அப்பமானது முன்னே தானியமாக மலைகளின்மேல் சிதறப்பட்டு அப்புறம் ஒன்றாகச் சேர்க்கப்பட்டதுபோல, உம்முடைய சபையானது பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உம்முடைய மார்க்கத்தில் ஒன்றாய்ச் சேர்க்கப்படுவதாக. மகிமையும் வல்லமையும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் உமக்கே உண்டாவதாக' என்றார்.

ஒருநாள் சில சகோதரர் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்கள் யாவரும் கலாப்படைந்தவர்களாயும் அழுக்குப்படிந்தவர்களாயும் இருந்தார்கள். இவர்கள் எல்லாரும் பலஸ்தீனா, சீரியா நாடுகளின் மூலமாய்ப் பிரயாணம்பண்ணி, அந்தியோகியாவுக்கு வந்தார்கள். இவர்களுக்குள் அகபு என்னும் பெயருடைய ஒருவன் இருந்தான். இவனுக்கு வரும்காரியத்தைத் தெரிவிக்கும் வரம் இருந்தது. இவன் மற்றவர்களைப் பார்த்து, 'ஒரு பெரிய பஞ்சம் வரப்போகிறது. யூதாவிலுள்ள நமது சகோதரர் பட்டினியாயிருப்பார்கள்' என்றான்.

என்ன செய்கிறது? இவர்கள் அந்தியோகியாவில் இருந்து கொண்டு தங்கள் சிநேகிதர் பசியால் சாகிறதைக் காணமுடியாதே! ஆகையால் பஞ்சகாலத்தில் அவர்களுக்கு ஆகாரம் வாங்கத்தக்கதாக கொஞ்சப் பணமுதல் சேர்க்கவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். ஆகவே சீஷர்கள் யாவரும் தங்கள் தங்கள் வருமானத்திலிருந்து கொஞ்சம் பிரத்தியேகப்படுத்திவைத்தார்கள். ஒவ்வொருவனும் தன்னால் இயன்றதைக் கொடுத்தான். இந்தப் பணம் யூதர்களுக்கு அனுப்பவேண்டும். மேலும் அந்தியோகியாவிலிருந்த யூதர்களைப்போலவே அப்பட்டணத்து கிரேக்கர்களும் பண உதவி செய்தார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷராகிவிட்ட இவர்களுக்கு யூதருக்கும் கிரேக்கருக்கும் இடையிலிருந்த தடுப்புச்சுவர் தகர்க்கப்பட்டுப்போயிற்றல்லவோ?

போதிய பணம் சேகரிக்கப்பட்டபொழுது அதைப் பர்னபா, சவுல் என்பவர்கள் கையில் கொடுத்தார்கள். பாலிய கிரேக்கனாகிய தீத்துவும் அவர்களுக்கு உதவி செய்யும்படியாக அவர்களோடு அனுப்பப்பட்டான். இரண்டு யூதர்களோடு ஒரு கிரேக்க கிறிஸ்தவன் செல்லும் இவ்விஷயமானது எருசலேம் பட்டணத்திலேயிருந்த யூதக்கிறிஸ்தவர்கள் இன்னும் அறிந்துகொள்ளாத ஒரு காரியத்தை அவர்கள் அறிந்துகொள்ளுவதற்கு உதவியாயிருக்கும், அதாவது கிறிஸ்தவனாகிறதற்கு ஒருவன் யூதனாயிருக்கவேண்டுவது அவசியமில்லை என்பதே.

அப்பணத்துக்கு அவர்கள் தானியத்தையும் சீப்புருநாட்டு அத்திப்பழங்களையும் பேரீச்சம்பழத்தையும் வாங்கித் தங்கள் மூட்டைகளோடு எருசலேமைநோக்கிப் புறப்பட்டார்கள். இவர்கள் ஓரன்டிஸ் நதியில் தண்டுவலித்துச்சென்று செலுக்கியா துறைமுகத்தை அடையலாம், அல்லது அதுவரைக்கும் ரஸ்தா வழியாக வரலாம். அப்புறம் கப்பல் ஏறி, கரை ஓரமாய்ச் சென்று, செசரியா பட்டணத்து துறைமுகத்துக்கு வரலாம். கடைசியாக சவுல் எருசலேம் பட்டணத்தை தூரத்திலேயிருந்து கண்டார். தான் உயிர் பிழைக்கும்பொருட்டு ஒன்பது வருஷங்களுக்கு முன்னே விட்டோடின பட்டணமாகிய இதற்கு இப்போது திரும்பிவருவது அவருக்கு வெகு விகற்பமாய்த் தோன்றினது. முன்னே தங்களைத் துன்பப்படுத்திய இவன் இப்போது ஒரு சிநேகிதனைப்போல பாசாங்குபண்ணுகிறான் என்று சீஷர்கள் எண்ணி அவனை ஏற்றுக்கொள்ள மனதற்றவர்களாயிருந்த விஷயம் இப்போது அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. இப்பொழுதோ ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு அவர் தம்மைப்பற்றி அவ்வளவு பயப்பட்ட அதே ஜனங்களிடத்திற்கு அவர்களுடைய ஜீவனுக்கு அத்தியாவசியமாயிருந்த ஆகாரத்தை அவர்களுக்காகவும் அவர்கள் பையன்களுக்காகவும் பெண்களுக்காகவும் கொண்டுவந்தார். கமாலியேல் என்ற யூத நியாயசாஸ்திரியினிடம் கல்விகற்றுத் தேறியவராய் தாமிருந்தாலும், கிறிஸ்தவர்களல்லாத யூதசகோதரர் தன் பேச்சைக் கேட்கச்செய்யவும் கூடாதவராயிருந்ததைக் கண்டபோது அவர் மிகவும் விசனப்பட்டார். முன்னே சவுல் பரிசேயர்களுடைய நம்பிக்கையாயிருந்த விஷயமே இப்போது அவர்களை அதிகக் கோபம் மூட்டினது.

'மித்துரு தரோகம்பண்ணி எங்களைக் காட்டிக்கொடுத்த கட்சி மாறியாகிய இவன் தன் கள்ளத்தரிசனங்களையும் இயேசுவைப்பற்றிய தேவதூஷணங்களையும் சபிக்கப்பட்ட சிலுவையில் தான் பெருமைபாராட்டுவதாக இவன் சொல்லுகிற பேச்சையும் கேட்கிறதற்காகவா நாங்கள் வரவேண்டும்? ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டோம்' என்று சொல்லி, அருவருப்போடும் கோபத்தோடும் தூப்பினார்கள்.

What have I Done?

By the Rev. G. P. George

நான் என்ன செய்தேன்?

புத்தி சித்தமுள்ள எந்த மனுஷனும் 'நான் என்ன செய்தேன்?' என்கிற இந்த விசேஷித்த கேள்வியைக் காலாகாலங்களில் கேட்கிறான். வருஷமுடிவிலே ஓர் வியாபாரி தனது வியாபாரத்தின் கணக்கு வழக்குகளைச் சோதித்து, தனக்கு லாபம் கிடைத்ததோ அல்லது நஷ்டம் நேரிட்டதோ என்று அறிய லிரும்புகிறான். இதைப்பற்றித் திட்டமாய் அறிந்து லாபமிருக்கிறதாகத் தெரிந்தால், சந்தோஷமடைகிறான்; நஷ்டம் வற்படுகிறதாகக் கண்டாலோ, விசனமுற்று, முன்னிலும் ஜாக்கிரதையாகத் தன் வியாபாரத்தின் மேல் கண்ணுங்கருத்துமாயிருக்கத் தீர்மானிக்கிறான்.

அவ்விதமாகவே ஒரு சமுசாரியும் அநுப்புக்காலங்களில் தன் நஞ்சைபுஞ்சைகளின் விளைவைக் கண்டு, தனக்கு எற்பட்ட அழிவு செலவு போக தனக்குக் கிடைத்த ஆசாயம் இன்னதென்று அறிந்து கொள்ளுகிறான்.

கலாசாலையில் கல்விகற்றுவரும் மாணாக்கனும் சமயா சமயங்களில் தன் தேர்ச்சியைக்குறித்துப் பரிசோதித்து தனது கடமையை எப்படிச் செய்துவருகிறான் என்று ஆராய்ந்துணருகிறான் அல்லவா?

இவ்வண்ணமே பற்பல அலுவல்களில் பிரவேசித்திருக்கிற யாவரும், தங்களுடைய காரியாதிகளைக் காலத்துக்குக்காலம் பரிசோதனைசெய்து 'நான் என்ன செய்தேன்?' என்று திட்டமாய் அறிகிறார்கள்.

இவற்றிற்கெல்லாம் மிக்கப் பிரதானமாக மானிடர் அறிந்துணர்ந்து தற்பரிசோதனை செய்யவேண்டிய ஓர் விஷயமுண்டு. அது யாதெனில் தேவதாபத்தியே. இவ்விஷயத்தில் 'நான் என்ன செய்தேன்?' என்பதைத் திட்டமாய் அறியவேண்டுமாயின், பின்வருமாறு சில கேள்விகளைக் கேட்பதவசியம்.

நான் என்னைப்போல் என் பிறனை நேசிக்கிறேனோ? எனக்கும் என் அயல்வீட்டானுக்கும் மனஸ்தாபம் உண்டோ? அப்படியிருக்கும்பட்சத்தில் நான் அதற்குக் காரணனோ? திருமறை கூறுகிறதுபோல், கண்ட சகோதரன்மேல் அன்புகூராதவன் காணாத கடவுளின்மேல் அன்புகூருவது எப்படி? திக்கற்றவர்களுக்கும் அநாதைகளுக்கும் துக்கசாகரத்தில் மூழ்கியிருப்போருக்கும் சகாயம் புரிய எனக்கு வாஞ்சையுண்டா? கடவுளின்மேல் பூரணபக்தியுடையவனாய் இருக்கிறேனோ? இவ்வுலகில் கடவுளது திருச்சித்தமே என் பாக்கியமாக இருந்துவருகிறதா?

இவ்வகை வினாக்களுக்கு உண்மைமனதோடு நாம் மறுமொழி கூற எத்தனிக்கும்போது நமது குறைவுள்ள நிலைமை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நமக்குத் தெரியவரும். பூர்வீகத்திலிருந்த ஓர் பக்தன் தன் நிலைமையை இவ்விதமாய் ஆராய்ந்துணர்ந்தவனாக 'என் அக்கிரமங்களும் பாவங்களும் எத்தனை! என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும்' என்கிறான். 'என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது' என்று வேறொரு பக்தன் அங்கலாய்க்கிறான். நமது வாயிலிருந்து பொய்யும் தூஷணபேச்சும் புறப்படுகிறதில்லையா? நமது உள்ளத்திலிருந்து தூர்இச்சைகளும், பேராசையும், பெருமையும், பொறாமையும் ஆகிய தீயகுபாவங்கள் உண்டாகிறதில்லையா?

இவ்விதமான நமது கேடுபாடுள்ள நிலைமை நிவிர்த்தியாகும்படி நாம் நாடித்தேடவேண்டிய வழி யாது? நமது பாவங்களை நமக்கு உணர்த்தவும், பாவவிமோசனம் அளிக்கவும், நன்னெறியில் நடக்க நமக்குச் சகாயம்புரியவும் வல்லவரான ஓர் சற்குருவை நாம் சரணமடையவேண்டும்.

குரு நமது பாவநிர்ப்பந்த நிலைமையை நமக்கு எடுத்துக்காட்டுவதினால் மாத்திரம் நாம் கற்கதி பெறமுடியாது. வைத்தியனொருவன் ஒரு பிணியாளியினுடைய வியாதி இன்னதென்றுமட்டும் கூறுவதினால் நோய் ஆரோக்கியமாகாது; ஏற்ற ஔடதமும் கொடுத்தால்தான் பிணி நீங்கும். சிறையில் அடைபட்டிருக்கும் ஓர் கைதியை நோக்கி, 'நீ விடுதலைபெற்றாய்' என்று சொல்வதுடன், அவனுடைய விலங்குகைக் கழற்றி, சிறைச்சாலைக்கு வெளியே கொண்டுவரவும் வேண்டும்.

இவ்வாறே பாவவியாதியிலும் பாவக்கட்டிலும் கிடந்து தவிக்கிற நம்மை மீட்டு, இரக்கத்தை அருளி, தான் செய்த புண்ணியத்தினாலே நமது நீலினைகளைப் போக்கும் சற்குரு ஒருவர் உண்டு. பாவிகளின் பாவங்களை நீக்கி அவர்களை ரட்சிக்கும்படி கடவுளால் நியமிக்கப்பட்டவர் என்று அர்த்தங்கொள்ளும் நாமகரணத்தையுடைய இயேசுகிறிஸ்து பகவானே அவர். அவர்மீது பக்திவைத்து தன் பாவத்தை அறிக்கைசெய்கிற எவனையும் அவர் ஏற்றுக்கொள்வார். அவர் அருளிச்செய்த நல்லுபதேசங்களை ஏற்றுக்கொண்டு அதின்

படி நடக்கப் பிரயாசப்படுகிற எவனையும் அவர் அங்கிகரித்து, பாவ பாசத்திலிருந்து விடுதலைசெய்து, சன்மார்க்க நெறியைக் கடைப் பிடித்தொழுகும்படியான சக்தியை அளிப்பார். ஆகவே அவர்மீது பக்திவைக்கிறவர்கள் தேவதாபக்தி விஷயமாக 'நான் என்ன செய்தேன்?' என்னும் கேள்வியைக் கேட்கும்போது தங்களிடம் காணப் படும் குற்றம் குறைவுகளை அவருடைய கிருபாகடாட்சத்தால் நிவர்த்திசெய்துகொள்வதுடன், அவர் இலவசமாக ஈந்தருளும் வரப்பிரசாதத்தினால் தீவினையின்மேல் ஜெயம்பெற்று தேவதாபக்தி யில் வளர்ந்தோங்கி ஆத்மீக க்ஷேமமடைவார்கள்.

The Saivite Religion

By the Rev. J. S. Masillamany, B.D.

சைவசமயசார சங்கிரகம்

(தொடர்ச்சி)

நமது முறை.

சைவ சமயத்தை என்ன முறையில் ஆராய்ச்சி செய்யப்போகி றோம் என்பதைப்பற்றிச் சில குறிப்புகள் சொல்லுவது பிரயோஜன மாய் இருக்கும் என்று நம்புகிறோம். சைவசித்தாந்தம் என்பது மெத்த விரிவான உபதேசம். ஆகவே அம்மார்க்கத்தின் விசேஷ அம்சங்களைமட்டுமே நாம் பார்க்கமுடியும். இதுபற்றித்தான் இவ் வியாசத்துக்கு 'சைவசமயசார சங்கிரகம்' என்று பெயரிட்டோம்.

இம்மார்க்கத்தைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யும்பொழுது இத னுடைய உற்பத்தியைப்பற்றியாவது வளர்ச்சியைப்பற்றியாவது நாம் படிக்கமாட்டோம். இந்தியாவின் பூர்வகுடிகள் அனுசரித்துவந்த பாமரமதங்களுக்கும் சைவசமயத்துக்கும் சம்பந்தம் என்ன என்ப தைப்பற்றியும், சைவசமயத்தின் என்னென்ன பாகங்கள் ஆரியமத சம்பந்தமானது என்னென்ன பாகங்கள் பாமரமத சம்பந்தமானது என்பதைப்பற்றியும் நாம் படிக்கமாட்டோம். இதைச் சுருக்கமாய்ச் சொன்னால் நாம் இங்கு படிக்க எடுத்துக்கொண்ட விஷயம் சைவ சமயச் சரித்திரம் அல்ல. இவ்வித சரித்திர முறையாக இம்மார்க் கத்தை ஆராய்ச்சிசெய்யக்கூடுமானால் அது மெத்த உசிதம் என்ப தற்கு ஐயமில்லை. ஆயினும் அவ்வித சரித்திர ஆராய்ச்சிக்கேற்ற சாதனங்களும் வசதிகளும் இன்னும் ஏற்படவில்லை. ஆகவே சரித் திரப் போக்காக இம்மார்க்கத்தை நாம் படியாமல் சைவசமயத்துக்கு இன்றியமையாத நூல்களாகிய பன்னிரு திருமுறைகளும் பதி

ஞன்கு சித்தாந்த சாஸ்திரங்களும் எழுதி முற்றுப்பெற்ற காலத்தில் அம்மதம் உள்ளவாறே அதை ஆராய்ச்சிசெய்வோம்.

இவ்வாறு நாம் சைவசமயத்தை ஆராய்ச்சி செய்யும்பொழுது அதை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளுவோம். அவை, உபதேசம், அனுஷ்டானம், ஆகமம் என்பன. உபதேசம் என்னும் முதற்பிரிவினுள் சைவசமயத்தின் மூலோபதேசங்கள் என்ன வென்று பார்ப்போம். கிறிஸ்தவ பதிஞானசாஸ்திர சித்தாந்தத்தில் நாலு விஷயங்கள் விசேஷமாய்க் கூறப்படும். அவை கடவுள், மனிதன், பாவம் (உலகம்), ரக்ஷிப்பு என்பன. சைவசித்தாந்தத்தில் கூறப்படுகின்றவைகளும் இந்த நாலு விஷயங்களே. இவை அச் சித்தாந்தத்தில் பதி, பசு, பாசம், முக்தி என்று கூறப்படும். அனுஷ் டானம் என்னும் இரண்டாவது பிரிவினுள் சைவசமயிகள் அனு சரிக்கவேண்டிய இயம நியமானுஷ்டானங்களைப்பற்றிப் படிப் போம். ஆகமம் என்னும் மூன்றும் பிரிவினுள் சைவசமயத்துக்கு ஆதாரமாகக் கூறப்படும் சமஸ்கிருதநூல்களைப்பற்றியும் தமிழ்நூல் களைப்பற்றியும் சிறிது ஆராய்ச்சிசெய்வோம். ஆகவே நாம் இனி படிக்கும் விஷயங்கள் கீழ்வருவனவாகும்.

I. **சைவசமய உபதேசம்.**
   1. பதி. (கடவுளைப்பற்றி.)
   2. பசு. (ஆன்மாவைப்பற்றி.)
   3. பாசம். (பாவம், உலகம் இவற்றைப்பற்றி.)
   4. முக்தி. (இரக்ஷிப்பைப்பற்றி.)

II. **சைவசமய இயம நியமானுஷ்டானங்கள்.**

III. **சைவசமய ஆகமங்கள்.**
   1. சமஸ்கிருதத்தில் உள்ளன.
   2. தமிழில் உள்ளன.

(இன்னும் வரும்.)

The Boldness of Jesus (a Bible Study)

By the Rev. J. S. Mather

இயேசுவின் அஞ்சாநெஞ்சு

I. இயேசு தமது உபதேசத்தில் அஞ்சாநெஞ்சராய் விளங்கினார்.

அவர் பேசினவைகளைக் கேட்டவர்கள் சொன்னது, 'அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை'

(யோவா. 7^{46}) ; 'இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப் பட்டது?' (மாற். 1^{27}). பூர்வத்தாரின் போதனைகளுக்கு மாறுக, அல்லது அக்காலத்தில் அதிகமான ஜனங்களுக்குள்ளிருந்த கொள்கைகளுக்கு விரோதமாக தாம் சொல்லவேண்டிய சத்தியங்களிருக்கில் அவைகளைச் சொல்லாமல் அவர் விடவில்லை. உதாரணமாக :—

1. ஆறும் கட்டளை : மத். 5^{21-22}.
2. ஏழாம் கட்டளை : மத். 5^{27-28}.
3. தன் மனைவியைத் தள்ளிவிடல் : மத். 5^{31-32}.
4. ஆணையிடல் : மத். 5^{33-34}.
5. பதிலுக்குப் பதில் செய்தல் : மத். 5^{38-39}.
6. சத்துருவைப் பகைத்தல் : மத். 5^{43-44}.

இத்திருவசனங்களில், பூர்வ கொள்கைகளுக்கு மாறுகப் புதிய சத்தியங்களை 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்று அதிகாரத்துடனும், அவைகளாலுண்டாகக்கூடிய எதிரிடைகளைப் பறுவாய் பண்ணுத அஞ்சாநெஞ்சுடனும், இயேசு போதிப்பதைக் கவனிக்கிறோம்.

குறிப்பு. தேவ ஊழியக்காரன், தன் உபதேசங்களில் தன் எஜமானைப்போலிருப்பது அவன்மேலிருக்கும் உத்தரவாதம். தன் சபையின் மூப்பருக்கு விருப்பமாயிராதென்று, அவன் சொல்ல வேண்டிய எச்சரிப்பை, கண்டிப்பை, அல்லது அழைப்பை அடக்கி வைப்பது தகாது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் இராஜாக்களின் பாவங்களைக் கண்டிக்கவும் அஞ்சாநெஞ்சராயிருந்தார்கள். அப்படியே யோவான்ஸ்நானனும் இருந்தானென்றும், அதினிமித்தம் தன் உயிரைக் கொடுத்தானென்றும் சுவிசேஷங்களில் காண்கிறோம். இந்த ஆவி உன்னில் இல்லாவிட்டால், அதற்கு நியாயம் என்னவென்று நீ ஆராயவேண்டுமல்லவா?

11. இயேசு தமது சாதனையிலும் அஞ்சாநெஞ்சராய் விளங்கினார்.

யோவா. 11^{7-8} இல் சீஷர், 'ரபீ, இப்பொழுதுதான் யூதர் உம்மைக் கல்லெறியத்தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா' என்று சொல்வதையும், இயேசுவோ தமக்கு வரக்கூடிய எதிரிடைகளைக் கவனியாமல், பிதாவின் மகிமைக்கானவைகளைச் செய்யும்படி யூதேயாவுக்குப் போவதையும் காண்கிறோம்.

1. ஓய்வுநாளில் அற்புதங்களைச் செய்தார். மத். 12^{9-13} காண்க. இது யூதருக்கு அதிக கோபத்தையுண்டாக்கும் செய்கை. என்றாலும் அவர் சத்தியத்தை நடப்பித்தார்.

2. ஆலயத்தில் விற்கிறவர்களைத் துரத்திவிட்டார். மத். 21^{12-13}. இதுவும் அதிக் கோபத்தையும் கலகத்தையும் உண்டாக்கக்கூடியது. என்றாலும் அவர் அஞ்சாநெஞ்சராய்ச் சரியென்பதைச் செய்தார்.

3. சீஷர் பயிர்களைக் கொய்துசாப்பிட இடங்கொடுத்தார். மத். 12^{1-2}, நியாயப்பிரமாணங்களுக்கும், தேசவழமைக்கும் மாறாய் இது யூதர் யாவருக்கும் இருந்தது. இதற்கு மாறாய்ப்போக இயேசு அஞ்சவில்லை.

4. பாவிகளைக் கண்டிக்க அவர் பயப்படவில்லை. மத். 23^{13-33} பார்க்க. பாவிகளாயிருந்தும் பரிசுத்த வேஷம் போட்டிருந்தவர்களை, 'உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே' (23^{27}) என்று தைரியமாய் எச்சரித்தார்.

5. சத்தியம் பாரம்பரியத்துக்கு மாறுக இருக்கினும், சத்தியத்தையே நடப்பித்தார்.

யோவா. 4-ம் அதிகாரத்தில், சமாரிய ஸ்திரீயுடன் சம்பாஷிப்பதும், அவளிடம் தண்ணீர் கேட்பதும் பாரம்பரியத்துக்கு மாறுனவை. எல்லா வித்தியாசங்களுக்கு மேலாக, அவளும் தேவனுடைய பிள்ளையென்பது அவர் யாதொரு வித்தியாசமும் காட்டாதிருக்கச் செய்தது.

மாற். 7^{1-8} இல் சீஷர் கைகழுவாமற் சாப்பிடல் பாரம்பரியத்துக்கு மாறுயிருந்தாலும், சீஷருக்காக இயேசு நியாயஞ் சொல்வதைப் பார்க்கிறோம்.

லூக். 5^{29-10} இல் பாரம்பரியத்துக்கு விரோதமாய் அவரும் சீஷரும், 'பாவிகள்' என்ற ஜாதியாரோடு புசிப்பதைக் காண்கிறோம். லூக். 15^{1-2}.

6. கெத்செமனே தோட்டத்தில், சத்துராதிகளைச் சந்திக்கும் விதத்தில் அஞ்சாநெஞ்சராகக் காண்பித்தார்.

குறிப்பு. ஒரு வழக்கம், தேசத்தில் அதிககாலமாய் இருந்திருந்தினிமித்தம், அது சரியென்று இயேசு ஏற்றுக்கொள்ளவில்லை. அல்லது, ஒரு சத்தியம் அதிகமான ஜனங்களுக்குச் சரியாய்த் தோற்றினதினிமித்தம் அதில் ஒரு தப்பிதமுமில்லை என்று அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படியே, நமது சபைகளிலும் தேசத்திலுமுள்ள வழக்கங்கள் அநேக வருஷப் பயிர்களாயிருப்பதால், அவைகளைச் சரியென்று ஒப்புக்கொண்டு அமைதியாயிராது, நமது கிறிஸ்த சத்தியங்களுக்கும் அனுபவத்துக்கும் யுக்திக்கும் அவை மாறுயிருக்கில் அவைகளுக்கு எதிராய் இயேசுவைப்போல் ஜீவிப்பதும் பேசுவதும் நமது உத்தரவாதம்.

III. இயேசுவின் அஞ்சாநெஞ்சிற்கு இரகசியம் என்ன?

1. பிதாவால் ஒரு குறித்த நோக்கத்துடன் இவ்வுலகிற்கு தான் அனுப்பப்பட்டதாக இயேசுவுக்கு ஒரு நிச்சயமுண்டு.

சமாரியாவின் கிணற்றண்டையில் (யோவா. 4[4]), பிறவிக் குருடனுடைய சம்பவத்தில் (யோவா. 9[4]), தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் (யோவா. 17[3].) இயேசு இந்த நிச்சயத்தை வெளிப்படுத்தினார். பிதா என்னை அனுப்பியிருக்கிறார், ஆகையால் பயமில்லை என்று சொல்லிக்கொண்டு இயேசு முன்னே போனார்.

2. தீமை ஜெயிக்கமுடியாதென்ற நிச்சயம் அவருக்கு உண்டு. நீதி ஜெயிக்கும், தேவனுடைய பக்கத்திலிருக்கிறவன் வெற்றியடைகிற பக்கத்திலிருக்கிறான் என்ற நிச்சயம் அவருக்குள் இருந்தது. ஆகையால், இருளாய் யாவுமிருக்கும்பொழுதும் அவர் அஞ்சாநெஞ்சராய் ஜெயக்கீதம் பாடிக்கொண்டு தம் கடமைகளைச் செய்தார்.

3. ஆசாரங்களில் அல்ல, இருதயத்திலேயே பாவம், பரிசுத்தம் உண்டு என்று அவர் நன்றாய் அறிவார். ஆகையால் ஆசாரங்களைக் கவனியாதவிட அவர் அஞ்சவில்லை.

4. பிதாவின் சித்தத்தை முன் அறிந்து, அவர் அதற்கிசைய தன் சீவியத்தை நடத்தினார். 'இது தப்பிதமாயிருக்குமோ?' என்று அவர் தன் செய்கைகளைக் குறித்து மயப்பட்டுக் கலங்கவில்லை. ஒன்றைச் செய்யுமுன்னமே, பிதாவின் சித்தம் என்ன என்று அறிந்து கொள்வார். உதாரணமாக:—பன்னிருவரைத் தெரியுமுன், இராமுழுவதும் ஜெபத்தில் தரித்திருந்து பிதாவின் சித்தத்தை அறிந்தார்.

குறிப்பு. தேவனுடைய பிள்ளை சரியைச் செய்யவும், தப்பிதத்துக்கு எதிராய் எழுந்து பிரகாசிக்கவும் பெலனைப் பெற்றுக்கொள்வது கூடியகாரியம். நான் தேவனுடைய பிள்ளையென்ற நிச்சயமிருக்கில், அதுவே பெலனுமிருக்கும். பிதா என்னோடு இருக்கவாக்குப்பண்ணியிருக்கிறார் (லூக். 21[14-18]; மத். 28[20]). ஆகையால் என்னதான் வந்தாலும் நான் அஞ்சேன், என் வேலையைச் செய்வேன் என்று தேவனுடைய பிள்ளை எப்பொழுதும் பாடலாம்.

அப். 4[13] காண்க. ஆதிச் சீஷர் எவ்வளவு தைரியமாய் இருந்தார்கள். அவர்கள் ஒன்றிற்கும் பயப்படவில்லை. மறியல், சவுக்கு, வாள், அதிகாரிகளின் பயமுறுத்தல் யாதொன்றும் அவர்களின் தைரியத்தைக் குறைக்கவில்லை; அஞ்சாநெஞ்சராய் தங்கள் கடமைகளில் ஜாக்கிரதையாயிருந்தார்கள். தேவ ஊழியர் இன்றைக்கும் தங்கள் சாட்சிகளிலும், உபத்திரவங்களிலும், எதிரிடைகளின் நெருக்கத்திலும், தைரியமீனங்களின் மத்தியிலும், தங்கள் எஜமான் இயேசு வைப்போல் அஞ்சாநெஞ்சராய் சரியைச் செய்யவேண்டுமல்லவா?

The Forgiveness of Sins

பாவ மன்னிப்பு

(Studies for Seven Weeks. Adapted from the English by Miss Clegg.)

5-ம் கிழமை பாவமன்னிப்புக்குரிய நியமங்கள் சுயவெறுப்பு

காளாக்கர வாசிப்பும் தியானமும்

1-ம் நாள். லூக். 15[1-7].

வருத்தப்படாமலும், விலைகொடாமலும், பாரமில்லாமலும் கொடுக்கக்கூடிய மன்னிப்பில்லை. இருபக்கத்திலும் ஏதேனுமொன்று இருக்கவேண்டும். பாவஞ்செய்தவன் மனவருத்தப்பட்டு மனந்திரும்பவேண்டும். மன்னிக்கிறவன் தன் பெரிய அன்பினால் மற்றவனுடைய பாவத்தைச் சுமந்து, அவனோடு இக்கியம்பண்ணுவதினாலே அவனைக் குணப்படுத்தவேண்டுமென்று காண்கிறோம். இதைப்பற்றிச் சிந்தித்து, எவ்விதமாய் ஜெபம்பண்ணக்கூடும்? (§ 25.)

2-ம் நாள். அ.செ. 5[34-6], 10-12.

இப்போப்பட்ட மன்னிப்பைக் குறித்து நாம் என்ன நினைக்கிறோம்? இது நம்மிலே எவ்விதமான உணர்ச்சியுண்டாக்கும்? (§ 26.)

3-ம் நாள். யோவா. 10[1-18].

'அவன் தன் பாவத்தை அறிக்கையிட்டால் நான் மன்னிப்பேன்.' அன்பு இப்படி காத்திருக்கக்கூடுமோ? வேறென்னத்தைச் செய்யக்கூடும்? (§ 27.)

4-ம் நாள். யோவா. 8[1-11].

மனுஷர் இவ்வளவு உணர்ச்சியற்றவர்களென்று இயேசு கண்டு, வெட்கத்தினிமித்தம் குனிந்து தரையிலே எழுதினாரென்று சிலர் சொல்லுவார்கள். நீர் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்? தற்காலத்திலே இப்படிச் சம்பவிக்கிறதுண்டா? (§ 27.)

5-ம் நாள். 1 பேது. 1[15-19].

ரோமவேதக்காரர் காசுக்காக 'மன்னிப்பு பத்திரங்களை' விற்கிறார்கள். இது என்ன கூடாத வழக்கமாயிருக்கிறது? (§ 27).

6-ம் நாள். ஓசி. 11[1-4,8]; யோவா. 10[11].

'அவர் என்னைப் பார்த்தார்' இது எப்போப்பட்ட பார்வை? இதிலே விசனம், நிந்தனை, கோபம் இருந்திருக்கக்கூடும். அப்படியிருந்தால் இதே பலன் கொடுக்குமா? சுவிசேஷத்திலே எழுதின ஒரு பார்வையைக்குறித்து வாசி. (§ 27.)

7-ம் நாள். லூக். 22[39-44]; 23[26-48].

பாவமன்னிப்புக்குரிய மனந்திரும்புதல் உண்டாக்கக்கூடிய விதம் ஒன்றே, அதென்ன? (§ 28.)

25. இதுவரைக்கும் மன்னிக்கப்படவேண்டியவனுக்குரிய நியமங்களைக் கவனித்தோம். ஆனாலும் மன்னிக்கிறவரின் பக்கத்தில் நியமங்களுண்டு. அவைகளை சுயவெறுப்பு என்னும் ஆழ்மான சொல்லால் உரைக்கலாம். மனுஷீக சம்பந்தங்களில் வருத்தப்படாமலும், வீலைகொடாமலும், பாரமில்லாமலும் கொடுக்கக்கூடிய மன்னிப்பில்லை. இருபக்கத்திலும் ஏதேனுமொன்று வேண்டும். பாவஞ்செய்தவன் மனவருத்தத்தோடு மனந்திரும்பவேண்டும். மன்னிக்கிறவன் தன் பெரிய அன்பினால் மற்றவனுடைய பாவத்தைச் சுமந்து, அவனோடு ஐக்கியம் பண்ணுவதினாலே அவனைக் குணப்படுத்தப் பார்க்கவேண்டும்.

தகப்பனானவன் கெட்டமகனை மன்னித்துவிட்டால், அது அனுதாபத்தினாலும் வருத்தத்தினாலும் உண்டானாலொழிய அந்த மன்னிப்பு அநீதியாயிருக்கும். மகனை முந்தின நிலைமைக்குக் கொண்டுவரும்படி அன்பினால் செய்யக்கூடிய எல்லாவிதமான உபாயங்களைத் தேடி எடுப்பார். சிலர் தொந்தரவுபண்ணுதபடிக்கு உல்லாசமாய் எல்லாவிதமான குற்றங்களையும் மன்னிக்கிறார்கள். இப்படிச் செய்வதினாலே பாவத்தின் தோஷத்தையும், அதற்குத் தொடர்ந்துவருகிற தீமைகளையும் உணராமலிருக்கிறார்கள். அன்புள்ள தகப்பனோ மகனைத்தானே இரட்சிக்க விரும்பி, அவனைத் தன் உள்ளான மனதுக்கும்; மேலான ஜீவியத்துக்கும், ஐக்கிய சம்பந்தத்துக்கும், சுத்த இன்பங்களுக்கும் கொண்டுவரப் பார்க்கிறார். இந்தவிதமான அன்பு வேதனைப்படுகிறது. இவ்வேதனையை நீக்க ஒரேவழி உண்டு; மகனுடைய பாவமாவது தகப்பனுடைய அன்பாவது ஜயவேண்டும். அப்பாவத்தை நீக்குவதற்காக தகப்பன் என்னத்தையும் செய்வார், என்னத்தையும் கொடுப்பார், என்னத்தையும் பாடனுபவிக்கச் சம்மதிப்பார்.

26. ஒரு விதவைக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். மூத்தவன் தூரத்திலிருந்த ஒரு பட்டணத்துக்கு வேலைக்குப் போனான். அங்கே அயோக்கியமானதைச் செய்தபினாலே அவன் காவலில் வைக்கப்பட்டான். விடுதலையான பிற்பாடு, சொந்த ஊருக்குப்போக வெட்கப்பட்டு, பட்டணத்தில் நின்றான். அவனுடைய தாய் என்னசெய்தாள்? தன் வீட்டை வாடகைக்குக் கொடுத்து, தனக்குரியதை எல்லாம் விற்று, தனக்கு அருமையாயிருந்த தோட்டத்தை மற்றவர்களின் கையில் ஒப்புக்கொடுத்து, தான் பிறந்து வளர்ந்த இடத்தையும், நேசமுள்ள புருஷனைப் புதைத்த இடத்தையும், இனத்தார், சிநேகிதர் முதலிய எல்லாரையும் விட்டு இளையமகனைக் கூட்டிக்கொண்டு, தனக்குத் தெரியாத அந்த அன்னிய பட்டணத்தில் மகனோடு வாசம்பண்ணும்படி போனாள். காவலில் வைக்கப்பட்டும் குணப்படாத அவன் தன்னை விட்டுவிடக்கூடாத தன் தாயின் பொறுமையினாலும் அன்பினாலும் குணப்பட்டான். ஒரு பெரிய வீலையைக் கொடுத்து அவனுக்காகப் பாவமன்னிப்பைச் சம்பாதித்தாள்.

27. நீதியுள்ள ஒருவன் பாவஞ்செய்தவனில் அன்புவைக்கிறதானால் அவன் பலவிதமான பாடனுபவிக்கவேண்டும். தீமைக்கு விரோதமாக மற்றவனுடைய இருதயத்தில் உண்டாகும் யுத்தத்தில் இவன் அவனுடைய பக்கத்தில் நிற்கிறான்; அவன் சோதிக்கப்படும்போது அவனோடு அனுதாபங்கொள்ளுகிறான்; தன் அன்பின்நிமித்தம் தன்னை மற்றவனுடைய இடத்திலே வைக்கிறான். காணுமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் மேய்ப்பன் தேடிப்போகிறான், குடும்ப ஜீவியத்தில் மற்றவர்களுக்காகப் பாடனுபவிக்கிற இந்த அன்பின் வீதியைக் காணும்போது முதலில் இது பெரிய அநியாயமென்று எண்ணுகிறோம். மற்றவனுடைய பாவத்தினிமித்தம் இன்னொரு மனுஷனுடைய, மனுஷியாவது வருத்தத்தையும், கவலையையும், வெட்கத்தையும் சுமந்து ஜீவிக்கவேண்டுமென்பது பொறுக்கமுடியாத காரியம் என்று சொல்லுகிறோம். அவனைத் தள்ளிவிட்டு, அவனுக்காகக் கவலைப்படாமலிருத்தல் நியாயமென்று சொல்லுகிறோம். ஆனால் தன்னுடைய வருத்தத்திலும் வெட்கத்திலும் பங்குபெறுகிற இந்த விடாத அன்பைக் காண்கிறதினாலேதான், பாவஞ்செய்தவன் இரட்சிக்கப்படக்கூடும். வேறெந்தப்பொருளும் செய்யக்கூடாததை அன்பு செய்கிறது. 'ஆம், என் தகப்பனிடம் சொன்னேன்' என்று ஒரு வாலிபன் சொன்னான். 'அவர் ஒன்றும் பேசவில்லை, அவர் என்னைப் பார்த்தார். அது முதற்கொண்டே நான் நரகத்திலிருக்கிறேன். அவருடைய மனக்கவலையைக் காண என்னால் முடியாதே.' இந்தக் கதை இதோடு முடிகிறதில்லை. தகப்பனுடைய பார்வையில் அவர்களிருவருக்குள்ளிருந்த அன்பைக் கண்டான். பிறகு தேவனுடைய முகத்தைப் பார்த்து, அதிலிருக்கிற அன்பைப் பார்க்கிறதினாலே அவனுடைய பாவம் கொல்லப்பட்டது.

28. மெய்யான அன்பு மீட்டுக்கொள்ளக்கூடிய தன்மையுள்ளது. அன்பு சொந்தநயத்தைத் தேடாமல், தான் நேசிக்கிறவனுக்காக வருத்தப்படவும் பாரஞ்சுமக்கவும் ஆயத்தமாயிருக்கிறது. நாம் அறிந்திருக்கிறபடி இவ்வுலகத்தில் மனுஷர் ஒயாமல் தேவனைவிட்டு, பாவத்தில் விழுந்துபோகிறார்கள். மேலான அன்பு இப்படிப்பட்டவனை இரட்சிக்க, தனக்கு வருகிற நஷ்டத்தைக் கவனியாமல், தன்னை வெறுத்து, பிரயாசப்படும். மகனானவன் தன் தாயைவிட்டு, நீதியான யுத்தத்தில் போராடும்படி போனால், தாய் மகனின் உயிர் காப்பாற்றப்படவேண்டுமென்று பிரார்த்திப்பாள். ஆயினும் மரணத்தைவிட பயங்கரமான ஒன்று இருக்கிறதென்று நினைந்து, அவனுடைய ஆத்துமா சுத்தமாய்க் காப்பாற்றப்படவேண்டுமென்று அவள் அதிக ஆசையோடு பிரார்த்திப்பாள். அவள் யோசித்துக்கொண்ட நிலையை அவன் விட்டு, பாவத்திலும் கேட்டிலும் விழுந்தால், அவளுடைய அன்பு என்னவிதமாய் வருத்தப்படும்! அவனைத் திரும்பவும் தேவனிடம் கொண்டுவரும்படி அவளுடைய இருதயத்தில் அவனைக்குறித்து எவ்வளவாய்ப் பாடுபட்டு, எத்தனையோ வேதனையுள்ள பயணம் பண்ணுவாளே!

நான் உயர மலையில் தூக்கப்பட்டாலும்,
என் தாயே, என் தாயே,
உம்முடைய அன்பென்னைத் தொடர்ந்துவரும்,
என் தாயே, என் தாயே.
நான் தாழ்ந்துபோனாலும் கடல் ஆழத்திலே,
என் தாயே, என் தாயே,
உமது கண்ணீர் வரும் என்னிடத்திலே,
என் தாயே, என் தாயே.
நான் உடல் ஆவியில் கெட்டுப்போனாலும்,
என் தாயே, என் தாயே,
உமது ஜெபத்தால் குணமாவேன்,
என் தாயே, என் தாயே.

இதின் கருத்து யாதெனில், பாவம் நிறைந்த இவ்வுலகத்தில் உண்மையான அன்பே மனுஷனை மீட்டுக்கொள்ளுகிற தன்மையுள்ளது, மேலான அன்பு கிறிஸ்துவின் அன்பைப்போல தான் நேசிக்கிறவனைத் திரும்பவும் தேவனிடம் கொண்டுவரும்.

29. இத்திருஷ்டாந்தங்கள் திவ்விய மன்னிப்பை விளங்கப்படுத்தப் போதாததாயிருந்தாலும், அவைகள் நாம் உணரக்கூடிய உண்மையும் அருமையுமுள்ளவைகளாய் இருக்கின்றனவே, நம்முடைய கண்களை இன்னும் மேலானவைகளுக்கு எதெடுக்கப்பண்ணுகின்றன.

C. L. S. PRESS, MADRAS—1918

No. 146. ஜூலை 1918

வேதியர் விளக்கு

Sermons in Rhyme

By Mr. M. Samuel

இரட்சண்ய அம்மானை

(இதில் சிருஷ்டிகர் வணக்கம்; மதுபானத்தின் மயக்கம்; வியாபாரத்தின் கொடுமை; சிற்றின்பத்தின் சிறுமை; பரலோக ப்ராப்திக்கு வழி என்ற ஐந்து பொருட்கள் அடங்கியுள்ளன.)

1. சிருஷ்டிகர் வணக்கம்

1. சிந்துநதியின் பேரால் சிறப்பான பேர்தரித்த
இந்தியாவின் ஜனமே இறையோனைக் கைதொழுவீர்.
2. அன்னையிற்றுக் கருவில் அற்புதமாய்க் காத்துவந்து
இந்நிலத்திலே யுதிக்கச் செய்தவரைக் கைதொழுவீர்.
3. தாயின்கரு வமைத்த தயாபரனைத் தேடாமல்
பேயின்வலை பலதில் பிடிபட் டலைவதென்ன?
4. பெற்றோர் பிறவியுடன் பெண்டிரும் பிள்ளைகளும்
உற்றார்மற்றோரை யுமக் கீந்தவரைக் கைதொழுவீர்.
5. வையகமும் வானகமும் வரிசையுடனே படைத்த
வல்லவரை நன்மனதாய் வையகத்தில் போற்றிடுவீர்.
6. வையகத்தில் வல்லவரை நல்மனதாய்ப் போற்றிசெய்தால்
மெய்யகத்திலே வசித்து மேன்மையுமக் கீந்திடுவார்.
7. வானம் மழைபொழிய வையகமெல்லாஞ் செழிக்க
தான மளித்துவரும் தயாளுவையே போற்றிடுவீர்.

2. மதுபானத்தின் மயக்கம்

1. பட்டணத்து வீதியுடன் பட்டிதொட்டி வீடுகளில்
திட்டமுடன் நஞ்சமுதைத் திரளா யருந்துவதேன்.
2. நஞ்சமுதை யுண்டுலகில் நாட்கழிப்பீ ராலுக்கால்
நெஞ்சதிலே சஞ்சலங்கள் நிலையாய்க் குடியிருக்கும்.

3. மதபானத்தின் வெறியால் மயங்கித் திகைப்பதுடன்
மதபானத்தின் பலனால் மரணத்துள் ளாவீரே.

4. ஊரில் பெரியோரே உற்ற அறிவாளிகளே
சிரில்லாப் பானமதைச் சீயென் றிகழ்ந்திடுவீர்.

5. பணத்தைச் செலவழித்து பாவமதைக் கட்டிவைத்து
குணங்குலத்தையுங் கெடுத்து குடிகே டடைவதென்ன?

6. மதுபானத்தால் மயங்கி மகிமையெல்லாம் கெட்டழிந்து
மதபானக்கார னென்று மற்றவர்கள் சொல்வதென்ன?

7. நஞ்சதனைத் தஞ்சமென்று நெஞ்சமதில் எண்ணமுற்றால்
கொஞ்சமல்லவே சிறுமை குவலயத்தி லெந்நாளும்.

8. இந்தச் சிறுமையினை டிவ்வுலகில் நாட்கழித்தால்
பந்தத் துயாடைந்து பாழ்நரகில் பங்கடைவீர்.

9. பாழ்நரகில் செல்லாமல் பயங்கரத்துள் ளாகாமல்
ஊழ்ழுழி வாழ்ந்திருக்க ஒருபரனைக் கைதொழுவீர்.

3. வியாபாரத்தின் கோடுமை

1. மேதினியோர் வீதிகளில் மேன்மையுற்ற செல்வமுண்டு
காசினியோரை மினுக்கும் கணக்கில்லா ஆடையுண்டு.

2. ஆடை அலங்காரம் ஆபரணம் மெத்தவுண்டு
ஆடவரும் மாதர்களும் அலங்கிருதம் செய்வதுண்டு.

3. ஆடைவிற்கும் அன்பர்களே ஆதாயம் கிட்டவென்று
அன்பான வார்த்தைகளால் அபகரித்தீர் காசுகளை.

4. நம்பர்த் துணிகாட்டி நல்வார்த்தை யாலிழுத்து
கள்ளத் துணியளித்துக் காசுகளைக் கொள்ளையிட்டீர்.

5. களையில்லா நல்வியாவாம் கடுகுநற் சீரகத்தில்
களையைக் கலந்ததனைக் கள்ளத் தராசிட்டீர்.

6. கள்ளத் தராசதுவும் கடவுளுக்குத் தூரமல்லோ
வெள்ளை மனதோடே வியாபாரம் செய்திடுங்கள்.

7. கள்ளமற்ற வெள்ளைமனம் கர்த்தருக்கு நற்பிரியம்
விள்ளரிய பாக்கியத்தை விண்ணுலகில் கண்டடைவீர்.

(இன்னும் வரும்.)

Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by the Rev. J. S. Masillamany, B.D.

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

11-ம் அத்தியாயம்

புறதேச அழைப்பு

(தொடர்ச்சி)

சவுல் தேவாலயத்தின் அழகிய பிராகாரங்களில் இருந்தபொழுதுதான், தனக்கு விரோதிகள் எவ்வளவு ஸ்திரமாயிருந்தார்கள் என்பதை உணர்ந்தார். தாம் முன்னே கல்விகற்ற இடங்களுக்கு அருகில் உலாவினபோது அங்கே கூட்டம் கூட்டமாயிருந்த வாலிபமாணாக்கர் இவரைப் பரிகாசக்கண்களோடு பார்த்து, குசுகுசென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டதை இவர் கண்டபோதும் தமது பழைய கலாசாலைக்கு தாம் அன்னியனாகிவிட்டதை கண்டபோதும், இவருடைய இருதயம் வேதனை அடைந்தது.

தேவாலயத்துப் பிராகாரங்களில் சவுல் வானத்தை அண்ணாந்து பார்த்து ஜெபம்பண்ணினார். அந்த வேளையில் அநேக வருஷங்களுக்கு முன்னே நடந்ததுபோலவே ஒரு தரிசனமும் சத்தமும் கேட்டது. 'நீ யூதர்களைவிட்டுப் புறஜாதிகளிடத்திற்கு எனது மிஷனெரியாகப் போகும்படி நான் உன்னை அழைத்திருக்கிறேன்' என்றது அச்சத்தம். எருசலேமிலே பர்னபாவின் இனத்தானாகிய மாற்கு என்பவனுடைய வீட்டில் சவுல் தங்கியிருந்திருக்கலாம். யோவான் மாற்கு எருசலேமிலிருந்து உலகத்தின் மற்றபாகங்களுக்குப் போகிறதற்கு ஆவலாயிருந்தான். ஆகவே பஞ்சத்தினால் கஷ்டப்பட்ட ஜனங்களுக்கு ஆகாரம் கொடுக்கிறதாகிய தர்ம ஊழியத்தை நிறைவேற்றினபிறகு, யோவான் மாற்கு பர்னபாவோடும் சவுலோடும் வடக்குமுகமாய் அந்தியோகியாவை நோக்கிப் புறப்பட்டான். தன் சிற்றப்பனாகிய பர்னபாவைப்போலவே யோவான் மாற்குவும் அநேகமாய் சீப்புரு நாட்டானாயிருக்கவேண்டும்.

அவர்கள் வடக்கு முகமாய் நடந்து சென்றபொழுது சவுல் தேவாலயத்திலே கண்ட தரிசனத்தைப்பற்றி அவனும் பர்னபாவும் பேசிக்கொண்டே போனார்கள். புறஜாதியாரிடத்திற்கு என் மிஷ

னெரியாகப் போவதற்கு நான் உன்னை அழைத்திருக்கிறேன் என்று அன்று தரிசனத்தில் ஒரு சத்தம் சொன்னதல்லவோ? சவுல் தன் சொந்த ஜனத்தை விட்டுவிட்டு புறஜாதிகளிடத்திற்குப் போகவேண்டும். இப்படிச் செய்வதால் என்னென்ன காரியங்களோ நேரிடலாம். சவுலும் பர்னபாவும் இதைப்பற்றி ஆலோசித்தபொழுது என்னென்ன காரியங்களைப்பற்றியோ மனோபாவனையாகப் பேசிக் கொண்டார்கள்.

கடைசியாக அவர்கள் 'அஞ்ஞான அரசி' என்ற அந்தியோகியா பட்டணத்துக்குள் வந்து, சிமியோன், மனாயீன், லூசி முதலியவர்களுக்கு எருசலேம் பட்டணத்துச் சமாசாரங்களை எல்லாம் சொன்னார்கள். தான் புறஜாதியாரிடத்திற்குப் போகவேண்டும் என்று சொன்ன அந்தச் சத்தத்தைப்பற்றிச் சவுல் அவர்களிடம் பேசினார். அவர்கள் இப்படி ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, பிறகு மௌனமாய்க் காத்திருந்தபொழுது தங்களுக்குள் சிலரை அவர்கள் சுவிசேஷத்தைப் பரம்பச்செய்யும்பொருட்டு தூரதேசங்களுக்கு அனுப்பவேண்டும் என்று அவர்கள் எல்லாரும் காணத்தக்கதாக ஆவியானவர் அவர்களை நடத்தினார்.

அவர்கள் தங்களுக்குள் அதிகச் சிறந்தவர்களாய் இருந்தவர்களைத் தங்கள் சொந்த இடத்திலேயே வைத்துக்கொள்ளக்கூடாதே. அவமதிக்கப்பட்ட நசரேய கூட்டத்தாராகிய இவர்கள் இக்காலத்து உலகத்துள் இருந்த இரண்டு ஆச்சரியமான காரியங்களைச் சந்திக்கும்படி தங்கள் முதல் மிஷனெரிகளை அனுப்பினார்கள். இவ்விரண்டு காரியங்களும் என்னவென்றால், எபிரேய ஜனங்களின் மார்க்கமும் ரோமை ராஜ்யத்தின் வல்லமையுமே. புறநாடுகளில் செய்யப்படவேண்டிய வேலைக்கு சிறந்த அறிவும், உயர்ந்த படிப்பும், பூரண அனுபவமும் அவசியமாயிருந்தது. காரியங்களை நடத்துவதில் சாமர்த்தியமுடையவனான பர்னபாவும் சர்வகலாசாலையில் கற்றுத்தேர்ந்த சவுலும் இவர்களிடத்திலிருந்து தூரதேசங்களுக்குச் செல்லவேண்டும்.

அவர்கள் எல்லாரும் ஒன்றாய்க்கூடி ஜெபம்பண்ணினார்கள். அப்புறம் கிறிஸ்தவர்கள் பர்னபா, பவுல் என்பவர்களின் சிரசின் மேல் தங்கள் கைகளை வைத்தார்கள். இந்த மிஷனெரிகள் தங்கள் ஆள்களாக வெளியேறிச் சென்றார்கள் என்பதை இது காட்டியது.

அந்த நாள் இராத்திரி தரையின்மேல் விரிக்கப்பட்டிருந்த தன் படுக்கையின்மேல் சவுல் படுத்தபொழுது அடுத்தநாள் காலை தான் ஓர் புதுப்பயணம் செய்யவேண்டுமென்பதை அறிந்திருந்தார். பசியும் தாகமுமடைந்து நகைத்துக் குட்டப்பட்டு, வாசஸ்தலம் ஒன்று

மில்லாமல், தன் சொந்தக் கைகளினாலே வேலைசெய்து இவ்விதமாய்த் தான் கஷ்டப்படவேண்டிய ஒரு நீண்ட பிரயாணத்தை அடுத்த நாள் காலையில் துவக்கவேண்டுமென்பது பவுலுக்குத் தெரியாது. கடல்கள், மலைகள், விரிவான சமபூமிகள், ஜனநெருக்கடியான பட்டணங்கள் ஆகிய இவற்றையெல்லாம் கடந்து கடந்து தம் மரணம்வரைக்கும் முடிவடையாத பிரயாணத்தை இப்பொழுது பவுல் துவக்கினார்.

2-ம் புத்தகம்

முன்நோக்கிச் செல்லல்

12-ம் அத்தியாயம்

தீவுச் சம்பவங்கள்

161979

வசந்தகாலத்து மந்தமாருதமானது வெகு திவ்யமாய் வீசிக் கொண்டிருந்தது. சவுலும் அவருடைய கூட்டாளிகளும் பிரயாணம்பண்ணின கப்பல் மகாசமுத்திரத்தின்பேரில் செலுத்தியா துறைமுகத்திலிருந்து மேற்குநோக்கி அழகாய்ச் சென்றுகொண்டிருந்தது. இக்கப்பலானது மேற்குமுகமாய்ச் சென்றுகொண்டிருக்கும்பொழுது வேறு அநேக கப்பல்கள் எதிர்முகமாய்ச் சீப்புருதீவிலிருந்து அந்தியோகியா பட்டணத்துக்குச் சென்றுகொண்டிருந்தன. இவைகள் மெத்த விரைவாய் ஓடுகின்றவை, அதிக உயரமானவை. இவற்றுள் சில சீப்புருதீவின் செம்புவர்க்கத்தை ஏற்றிக் கொண்டு பெனிக்கேயா நாட்டுக்கு நேராய் கிழக்குமுகமாய் ஓடின.

இவை இப்படியிருக்க பர்னபா தன் ஜென்ம ஸ்தலத்தைப் பவுலுக்குக் காட்டும்படி ஆவல்கொண்டு, சாலமி பட்டணத்தை நோக்கிப் பார்க்கும்படி அவருக்குச் சொன்னார். இப்படியாக இக்கூட்டாளிகள் கப்பலின்மேல் நின்று கடலுக்கு அப்பாலே தங்கள் கண்களை ஏறெடுத்து நோக்கிக்கொண்டிருந்தார்கள். தாங்கள் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி அவர்கள் பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்களோடு கூடச்சென்ற இளையவனாகிய யோவான் மாற்கு என்பவன் இவர்களுக்குப் பின்னாலே மௌனமாய் நின்றுகொண்டிருந்தான்.

முதலாவது அவர்கள் கடலுக்குள் நீட்டிக்கொண்டிருக்கிற கர்பரஸ் என்ற நீண்ட தீபகற்பத்தைக் கண்டார்கள். சீக்கிரத்திலே அவர்கள் இதற்கடுத்துள்ள கன்மலைகளண்டை வந்தார்கள். சாலமி பட்டணத்துக்கு வடக்கே கடலுக்குமேலே எழும்புகின்ற இக்கன்மலைச்சிகரங்களானவை சாலமி பட்டணத்தையும் அதின் துறைமுகத்தையும் சின்ன ஆசியாவிலிருந்து வருகிற புயல்காற்றானது

அழித்துவிடாதபடி காக்கின்றது. இவைகளுக்கெல்லாம் அப்பால் அப்பட்டணத்தின் மதில்களையும் ஒரு பெரிய ஆலயத்தின் மேல் கோப்பையும் பர்னபாவும் சவுலும் கண்டார்கள். அப்புறம் கப்பல் சாலமி பட்டணத்துப் பெரிய துறைமுகத்துள் சென்றது. ஆப்பிரிக்கா, கிரேக்கு, ரோமை, தீரு, செலூக்கியா முதலிய பல இடங்களிலிருந்து வந்திருந்த கப்பல் கூட்டங்களுள் இந்தக் கப்பலும் சேர்ந்துகொண்டது. பாய் சுருட்டப்பட்டு, கப்பல் நிலைகொண்டவுடனே பர்னபா கரையில் குதித்தான். அவனுடைய பந்துக்களும் அவனுடைய சிறு பிராயமுதல் அவனை அறிந்திருந்த சாலமி பட்டணத்து மனுஷர்களும் அவனை வாழ்த்தினார்கள். அவன் அவர்களுக்குத் தன் கூட்டாளியாகிய சவுலை அறிமுகப்படுத்தினான். இவர்களுக்குள் கிறிஸ்தவர்களாயிருந்தவர்கள் (இதற்குள்ளே கிறிஸ்து மார்க்கம் இங்கே பரம்பியாயிற்று) இயேசுகிறிஸ்துவுக்குப் பின் சென்றவர்களை கொடுமையாய்த் துன்பப்படுத்தினவராகிய இவர் இப்போது அவருடைய ராஜ்யத்தில் ஒரு விசேஷ அப்போஸ்தலனாக வந்ததைக்குறித்து மிக்க ஆச்சரியப்பட்டு அவரை வெகு வினோத வேடிக்கையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பற்பல ஜாதியைச் சேர்ந்த மாலுமிகளையும் துறைமுகத்தில் வீண் பொழுது போக்கிக்கொண்டிருக்கிற சோம்பேறிகளையும் பழங்களைக் கூடைகளில் வைத்துப் பக்தோபஸ்தாய்க் கட்டுகிறவர்களையும், சாமான்களை ஏற்றுதல் இறக்குதல் முதலிய வேலைகளைச் செய்கிற கூலி ஆள்களையும் கடந்து, பர்னபா சவுலைத் தன் பந்துக்களில் ஒருவருடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுவந்தான். தாங்கள் சீப்புரு தீவிலே செய்யவேண்டிய காரியங்களைக்குறித்து இவர்கள் இங்கே ஆலோசனைபண்ணினார்கள்.

ரோமர்களுடைய நகரமாகிய இப்பட்டணத்திலே சவுல் பர்னபாவுடனே ஜெபஆலயங்கள்தோறும் சென்று அவர்கள் வெகுகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த மேசியாவின் வருகையைப்பற்றி அவர்களிடத்தில் பேசுவார். சவுலுக்கு அதிக சகஜமாயிருந்த அநேக காரியத்தை இங்கே அவர் கண்டார். சாலமி பட்டணமும் ஒரு ரோமை நகர். தர்சு, அந்தியோகியா என்னும் பட்டணங்களைப் போலவே இதுவும் மலைத்தொடர்களைத் தூரத்திலே உடைய ஓர் பெரிய சமபூமியில் நின்றது.

அந்தியோகியா, தர்சு என்னும் பட்டணங்களில் இருந்ததுபோலவே சாலமி பட்டணத்திலும் பளிங்கு கற்களினால் கட்டப்பட்ட தேவாலயங்களைச் சவுல் கண்டார். இந்த ஆலயங்களின் பரிபூரண அலங்காரமானது கிரேக்கர்களுடைய சிற்பசாஸ்திர ஞானத்தையும்

தொழில் திறமையையும் வெளிப்படுத்தினது. அவர் பட்டணத்தின் மதின்மேல் நின்றபொழுது சமபூமியிலே வில்மச்சுக் கண்மடல்களை உடைய் நீண்ட ரோமை சாலகங்களைக் கண்டார். தாம் முன்னே உழைத்தவைகளும் இனிமேல் உழைக்கப்போகின்றவைகளுமாகிய வேறு அநேக பட்டணங்களில்—உதாரணமாக லீஸ்திரா, இக்கோனியா, எபேசு, அத்தேனே, கொரிந்து என்னும் பட்டணங்களில்—இருந்தபடியே இங்கேயும் ரோம போர்ச்சேவகர்கள் வெண்கல தலைச்சீராவையும் அகன்ற பட்டயத்தையும் கேடகத்தையும் தரித்துக்கொண்டு பாராவுக்குச் செல்லும்பொழுது அவர்களுடைய காலடி சத்தத்தை நன்றாய்க் கேட்கலாம்.

அப்படியிருந்தும் சாலமி பட்டணத்திலும் மற்றெல்லாப் பட்டணங்களிலும் தான் விபரமாகத் தெரிந்துகொள்ள முடியாத ஒரு விநோத விஷயத்தைக் கண்டார். இவ்விஷயத்தை இவரால் விவரிக்கமுடியவில்லை. இது கிரேக்க தேசத்தைச் சேர்ந்ததுமல்ல. முக்காடிடப்பட்டு மௌனியாயிருக்கிற ஒருவனால் நடத்தப்பட்டு சமபூமியை மெதுவாய்க் கடந்துவருகிற ஒட்டகக்கூட்டங்களில் அவர் இவ்விஷயத்தைக் கண்டார். ஒலிவ மரங்களுக்கு இடையிலுள்ள நிலத்தை மரக்கலப்பைகளைக் கொண்டு உழுகிற மௌனமான காளைகளையும் அசைவாட்டம் யாதுமின்றி தரையில் கமலாசனமிட்டு உட்கார்ந்து தியானம் செய்துகொண்டிருக்கிற சிலரையும் அவர் கவனித்தபோதும் இவ்விஷயமானது அவருடைய மனதுக்கு வந்தது.

இது கீழைத்தேசங்களின் ஆவியே. ரோமையைப்போல பெரிய ரஸ்தாக்களை உண்டாக்குவது கீழதேசங்களால் முடியாது. சிறந்த தண்ணீர் சாலகங்களை நிருமிக்கிறதும் கீழதேசங்களால் முடியாது. சிறந்த பளிங்கு நாடகசாலைகளில் நடிக்கப்படத்தக்கதாக சோபோகிலிஸ் முதலிய நாடகாசிரியர்கள் இயற்றிய அலங்காரமான நாடகங்களை இயற்றுவதும் கீழதேசங்களால் முடியாது. சிசரோ முதலியவர்களைப் போன்றவர்கள் ரோமை மகா சங்கங்களிலிருந்து சரமாரியாய்ப் பொழியும் மகா மகா சாதுரியப் பிரசங்கங்களைச் செய்வதும் கிழக்குத்தேசங்களால் முடியாது. ரதப்பந்தயங்களிலும், மல்லயுத்தங்களிலும் கிரேக்கர், ரோமர் முதலியவர்கள் மிதமிஞ்சிய கவனம் செலுத்துவதைப் பார்த்து கீழ்த்திசையானது வெகு ஆச்சரியமடைந்து மௌனமாய் நோக்கிக்கொண்டிருந்தது. கீழ்த்திசையின் தளர்ச்சியையும் உற்சாகக் குறைவையும்பற்றி ரோமாபுரி அதை இகழ்ச்சிபண்ணிற்று. கிரேக்கு தேசமானது தனது வித்வ சிரோமணிகளினிமித்தம் கர்வம்கொண்டு கீழைத்தேசங்களில் இவற்றுக்குச்

சமமானது ஒன்றுமே இல்லை என்று எண்ணியது. ஆயினும் ரோமை யைச்சேர்ந்த சாலமி பட்டணத்திலுள்ள கிரேக்க தேவாலயத்தின் கடைசித்தூண் வரிசைகள் விழுந்து அழிந்து மண்ணால் மூடப்பட்ட போதும், கிரேக்கு தேசத்தின் மகா மகா உன்னதமான நாடகசாலை யானது காட்டுப்புஷ்பங்கள் வளரும் மண்மேடாய் மாறினகாலத்தி லும், முக்காடிடப்பட்ட ஆளினால் நடத்தப்பட்ட கீழ்தேசத்து ஒட் டகமானது சீப்புரு தீவுக்கு ஊடே சென்றுகொண்டிருக்கும். கீழைத்திசை எப்போதும் மேலே நிற்கும். ரோமருடைய ராஜாங்க வல்லமையை பவுலினுடைய மனதானது எவ்வளவோ வியந்து கொண்டாலும் அவருடைய சமயோஜித ஞானமும் சிறந்த சாதுரிய மும் கிரேக்கருடைய பேச்சுவல்லமைக்கு மேற்பட்டிருந்தாலும் அவருடைய இருதயமானது பெருமையாய்க் காரியங்களை நிதா னித்து உணர்ந்து மிக்க ஆழமானவற்றைத் தேடுகின்ற கீழ்தேசத்து இருதயமே. இதுவே பவுலினுடைய விசேஷத்துவத்துக்கு ஓர் காரணம்.

The Three Pools of Water

மூன்று குளங்கள்

ஒரு காலத்திலே சகோதரர் மூவர் ஓர் ராஜ தலைநகரிக்குப் போகும்படி பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தம் செய்தார்கள். அவர்கள் தொலைதூரப் பயணம் செய்யவேண்டியிருந்தபடியால், இருட்டாகுமுன் ராஜதலைநகர் போய்ச்சேர விரும்பி, அதிகாலை யில் புறப்பட்டார்கள். இப்படி வழிநடந்து போகையில் வெயில் ஏறஏற சூரியனின் கிரணங்கை அதிகரித்திருந்தால் இவர்களுக்குத் தாகம் உண்டாயிற்று. தாகசாந்தி செய்யும்படி தண்ணீருக்காகப் பல திக்கு களிலும் தேடியும் ஜலம் தென்படவில்லை. அவ்வாறு தேடி அலைந்து ஒரிடத்துக்கு வரவே அங்கேயிருந்த மூன்று குளங்களைக் கண்டார் கள்.

முதலாம் குளம் பூர்வீகமானதாயும் மிக விஸ்தீரணமுள்ளதாயும் இருந்தது. அந்தக் குளத்தைச் சுற்றிலும் ஜனங்கள் இறங்கித் தண் ணீர் மொள்ளத்தக்கதாக படிகள் வெட்டப்பட்டிருந்தது. கோவிற் பூசாரிகளும் குருக்களுமான அநேகர் அந்தப் படிகளின்மேல் நின்றுகொண்டு, தங்களிடம் காணிக்கை செலுத்துகிறவர்களுக்கு அக்குளத்தின் தண்ணீரைக் கொடுப்பதற்காகக் காத்துக்கொண்டிருந் தார்கள்.

சகோதரர் மூவரும் இக்குளத்தைக் கிட்டினவுடனே அதின் பக் கத்திலே இருந்த ஒரு தோப்பையும், அத்தோப்பிலிருந்த அசுத்தங்கள் நிறைந்துள்ள ஓர் பள்ளத்தாக்கையும், அந்தப் பள்ளத்தாக்கில் ஊறுகிற அசுத்தமான ஜலம் அந்தக்குளத்தில் பாய்வதையும்கண்டார்கள். ஆகை யால் அதின் ஜலம் விஷமுள்ளதாயிருக்கவேண்டுமென்றும் அந்த ஜலத்தைப் பானம்பண்ணுகிறவர்கள் சுரவியாதியினால் பீடிக்கப் படுவார்களென்றும் இந்த சகோதரர் அறிந்து அங்கே போகவில்லை.

அதைவிட்டு இரண்டாம் குளத்துக்கு அவர்கள் வந்தபோது அந் தக் குளமும் முந்தினதைப்போல அதிபூர்வீக குளமாயிராவிடினும், அது வெகுகாலத்துக்கு முன்னமே வெட்டப்பட்டதாய் இருக்க வேண்டுமென்று கண்டார்கள். மேலும் அதற்குச் செல்லும் பாதை வெகு எளிதாயிருந்தது. எவ்வித ஜாதிபேதமுமின்றி யாவரும் அங்கு போக சிலாக்கியமிருந்தது. ஆயினும் அக்குளத்தின் ஜலம் உப்பாயிருந்தது. அந்த உப்புத்தண்ணீரை பானம்செய்கிறவன் ராஜாவின் தலைநகர் போய்ச்சேர சக்தியற்றவனாய் இருப்பான். இதை அறிந்த அந்தச் சகோதரர் மூவரும் அதையும் விட்டு விலகிச் சென்று மூன்றாம் குளத்துக்கு வந்தார்கள்.

மூன்றாம் குளமானது முன் பார்த்த முதலாம் குளத்தைப்போல பூர்வீகமானதல்ல. அதற்குப் போகும் பாதை நெருக்கமும் கஷ்ட முமானது. அதின் ஜலத்தைப் பருக விரும்புவோர் அந்தப் பாதை யின் மூலமாய்த்தான் அரும் பிரயாசத்துடன் போகவேண்டும். குருக்களுக்காவது கோவிற்பூசாரிகளுக்காவது அந்தத் தண்ணீரை எவருக்கும் கொடுக்க அதிகாரம் இல்லை. அவனவன் தானே அதில் இறங்கி தனக்காக ஜலத்தைப் பானம்பண்ணவேண்டும். அந்தக் கஷ்டமான பாதையிற் செல்லுகிறவர்களோ, அந்தக் குளத்தின் தண் ணீர் மிகவும் ஆரோக்கியமானதென்றும், ஜீவத்தண்ணீர் என்றும் கண்டுகொள்வார்கள். ஆகவே அந்த சகோதரர் மூவரும் அதின் தண்ணீரைப் பானம்பண்ணி, புது பெலத்தையும் தைரியத்தையும் அடைந்து மீண்டும் பிரயாணம்செய்து சூரியன் அஸ்தமிக்கையில் ராஜதலைநகரம் சேர்ந்தார்கள்.

இந்த உவமையில் அடங்கிய போதனை என்னவென்றால், அந்த மூன்று சகோதரரைப்போலவே இவ்வுலகிலுள்ள ஜனங்களெல்லா ரும் பிராமணராயினும் பறையராயினும், ஐசுவரியவான்களாயினும் தரித்திரராயினும், கல்விமான்களாயினும் பேதைகளாயினும், யாவ ரும் ஏக சகோதரராய் இருக்கிறார்கள். மேலும் அந்த சகோதரரைப் போலவே நாமெல்லாரும் மோட்சபட்டணம் போய்த் தேவசமூ கத்தைத் தரிசிக்க இவ்வுலகத்திலே பிரயாணிகளாயிருக்கிறோம்.

அச்சகோதரர் பிரயாணக் கஷ்டத்தினால் சோர்ந்துபோய்த் தண்ணீரை ஆவலாய்த் தேடினார்கள். அப்படியே பற்பல பாஷைகளில் தண்ணீர், பாணி, வாட்டர், நீலு என்று அழைக்கப்படுகிற ஜலமானது நமக்கு அத்தியந்த அவசியம்.

ஆனால் அசுத்தஜலமாவது உப்புஜலமாவது நமக்கு உதவாது. அதைப் பானம்பண்ணுவதினால் வியாதியும் பலவீனமும் நேரிடும் அல்லவா? சுத்தஜலமே நமக்குத் தேவை.

அவ்வண்ணமே நம்மனைவருக்கும் முக்திவழியைக் காட்டும் மெய் அறிவு அவசியம். அந்த சகோதரர் முதல் இரண்டு குளங்களையும் விட்டுவிட்டு சுத்தஜலமிருந்த மூன்றாம் குளத்தில் போய் தாகசாந்தி செய்ததுபோலவே, நாம் வீணான உபதேசங்களையெல்லாம் விட்டு, முக்திவழியைக்குறித்து மெய் அறிவைக் காட்டுகிற உத்தம உபதேசத்தை நாடித்தேடுவது அவசியம். நல்ல குளத்தின் சுத்த ஜலத்தைப்போலவே உலகரட்சகராகிய இயேசுபகவானின் சிறந்த உபதேசத்தில் முக்தி அடையத்தக்க மெய் அறிவு அடங்கியிருக்கிறது. பாவவிமோசனம் அடையும்படி பரிசுத்த சற்குருவாகிய இயேசுகிறிஸ்துவின்பேரில் நாம் முழுபக்தி வைக்கவேண்டுமென்பதே அந்த மெய் உபதேசத்தின் சுருக்கம்.

அந்தப் பகவான் இவ்வுலகில் மானிட அவதாரமெடுத்து, தரித்திரராகி, பற்பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து, சத்துருக்களின் கையில் அகப்பட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து, மூன்றாம் நாளில் உயிரோடெழுந்தார். இவ்விதமாய் உலகத்தார் யாவருக்காகவும் தம்மைப் பிராணதியாகம் செய்து அளவற்ற புண்ணியத்தைச் சம்பாதித்தார். இரக்கம் நிறைந்த அவர்மேல் நாம் பக்திவைத்து, அவர் திருவாய் மலர்ந்தருளிய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, அவர் காண்பித்த முன்மாதிரியைக் கடைப்பிடித்தொழுகினால், அவர் நம்மீது இரக்கம் வைத்து, தாம் செய்த பிராயச்சித்தத்திலே நாம் பங்கு பெறும்படி அருள்புரிந்து இவ்விதமாக பாவிகளாகிய நமக்குப் பாவவிமோசனத்தைத் தந்தருளுவார்.

ஆதலால் அவர் அருளின ஞான உபதேசமாகிய ஜீவதண்ணீரை நாம் உட்கொண்டு, அவருடைய தொண்டர்களாகி, அவர் இலவசமாக நந்தருளும் முக்திபாக்கியத்தை அடைவோமாக.

The Forgiveness of Sins

பாவ மன்னிப்பு

(Studies for Seven Weeks. Adapted from the English by Miss Clegg.)

6-ம் கிழமை. பாவமன்னிப்புண்டாக்கும் சீவ வழி

நாளாந்தர வாசிப்பும் தியானமும்

1-ம் நாள். 1 யோவா. 2^{1-6}.

மனுஷரின் இருதயங்களில் பாவ உணர்ச்சி உண்டாக்கி, அவர்கள் பாவத்தை மேற்கொள்ளும்படி, இயேசுகிறிஸ்து நமக்காக உண்டாக்கின மன்னிப்பைப்போன்ற உதவி வேறொன்றில்லை. இது உன்னுடைய அனுபவமா? இது எப்படி என்று சொல்லக்கூடுமா? (§ 30.)

2-ம் நாள். 2 கொரி. 5^{14}—6^{2}.

பாவமன்னிப்பின் விதத்தைச் சரியாய் விளங்கிக்கொள்ளக்கூடாத நாம், நம்மை இயேசுவின் பாதத்தில் விட்டுவிடும்போது, நாம் செய்யக்கூடாததை அவர் நம்மில் செய்கிறாரென்று காண்கிறோம். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (§ 31.)

3-ம் நாள். ரோம. 8^{1-11}.

பாவத்துக்காக மெய்மனஸ்தாபப்படக்கூடாமலும், பாவத்தை விட்டுவிடக்கூடாமலும், பாவத்தினால் வரும் தீமையை நீக்கக்கூடாமலுமிருந்த நம்மைத் தேவன் தம்மோடு ஒப்புரவாக்கின விதத்தைக் காட்டுகிற ஒரு வேதவசனத்தை அல்லது ஒரு கீதத்தை எண்ணிக்கொள். (§ 31.)

4-ம் நாள். ரோம. 8^{12-17}.

நாம் உணரக்கூடாத இந்த 'கடினமான விஷயம்' எவ்விதமாய் இயேசுவினிடத்தில் விட்டுவிடலாம்? நீ அப்படி செய்தபோது அவர் உன்னிலே என்ன செய்தார்? (§ 31.)

5-ம் நாள். ரோம. 8^{31-39}.

'இப்போதென் ஆன்மா நிலையாய் தரிக்கும் நிலத்தைக்கண்டேன்' (கீதம் 113). இக்கீதத்தைக் கவனமாய் வாசித்து அதிலிருக்கிற தேவனுடைய இரக்கத்தைப்பற்றிய காரியங்களை எண்ணிக்கொள். (§ 31.)

6–ம் நாள். 1 யோவா. 4[8-21].

இதிலே பாவமன்னிப்பின் ஆரம்பமும் முடிவும் காண்கிறோம். அதென்ன?

7–ம் நாள். 1 கொரி. 13; 1 யோவா. 3[16].

'உடைபட்ட மலையே!' (கீதம் 335); 'இரத்தம் பாயும் ஊற்றுண்டு' (கீதம் 111).

இக்கீதங்களைப் பாடும்போது, தேவனுடைய நீதியை நிறைவேற்றி, நமக்குச் சமாதானத்தைக் கொடுக்கக்கூடிய ஒன்றிருக்கிறதென்று உணருகிறோம். அதென்ன? (§ 31.)

30. தேவன் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவிலுண்டாக்கின சிலுவழியைக்குறித்து நாம் இம்மட்டும் அதிகமாய்ப் பேசினதில்லை. ஆனாலும் அந்த வழி எப்பொழுதும் நம் மனதிலிருந்திருக்கவேண்டும். மனுஷீக திருஷ்டாந்தங்கள் மூலமாய் இந்த விஷயத்துக்கு வந்தோம். இத்திருஷ்டாந்தங்கள் நம்மை சிலுவையண்டைக் கொண்டுவருகிறதென்று காண்கிறோம். மனுஷருக்குள்ளே பெரிய மன்னிப்பு காணப்படும்போதெல்லாம் அது மனந்திரும்புதலும் சுய வெறுப்புமாகிய இந்த இரண்டு நியமங்களில் தங்குகிறதென்று காண்கிறோம். இவைகள் கொஞ்ச தயவினாலே நீக்கக்கூடியவைகளல்ல. அவைகள் அந்த நிலைக்குத் தக்கதாயிருக்கின்றன. இவைகளில்லாமல் மன்னிப்பு உண்மையல்ல, அப்படி மன்னிப்பு கொடுக்கப்பட்டால் அது பொய், இரட்சிக்கக்கூடியது அல்ல, கெடுக்கக்கூடியதாயிருக்கும்; பாவத்தின் முடிவு அல்ல, அதற்கு இணங்கி, இன்னும் செய்ய இடங்கொடுக்கிறதாயிருக்கும். நாம் மனுஷருக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து, மனந்திரும்புவது அதிக கடினமும் பிரயாசமுமான விஷயமென்று கண்டோம். தேவனுக்கும் நமக்கும் இருக்கும் சம்பந்தத்தை ஆராய்ந்தாலோ 'தேவனுக்கேற்ற மனந்திரும்புதல்' நம்மாலே செய்யக்கூடாத காரியமென்று காண்கிறோம். நாம் செய்த பாவத்தைத் தக்கபடி உணரவும், மெய்யாய்த் தீர்க்கவும் கூடாதவர்களாயிருக்கிறோம்; நம்மில் ஒரு பங்கு ஆகிவிட்ட பாவத்தை விட்டுவிடக்கூடாதவர்களாய் இருக்கிறோம்; நாம் செய்த பாவத்தினால் வந்த தீமையை அளந்துபார்க்கக்கூடாதவர்களாயிருக்கிறோம்; தெளிவாய்க் கண்டாலும் சரியாய் பதில்செலுத்தக்கூடாதவர்களாயிருக்கிறோம். இதெல்லாம் அறிந்து தைரியமற்றுப்போய், நாம் செய்யக்கூடாத இந்த கடினமான விஷயத்தில் நிற்கிறோம். அவ்விஷயம் இயேசுகிறிஸ்துவின் சிலுவையில் நீக்கப்படுகிறது. நாம் விளங்கிக்கொள்ளக்கூடாத இந்த விஷயம் இயேசு நமக்காகச் செய்கிறார். 'நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்' என்று அவர் சொல்லியிருக்கிறார். இது நமக்குப் போதியதாயிருக்கவேண்டும்.

31. ஆகையினால் நாம் உணரக்கூடாத இந்த கடினமான விஷயத்தை நாம் கிறிஸ்துவினால் விளங்கிக்கொண்டோமென்று சொல்லாமல், அவரண்டை விட்டுவிட்டோமென்று சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். அவரண்டைமாத்திரம் இதை விட்டுவிடத் துணிவோம். நம்முடைய பாவங்களோடுகூட நம்மையே அவரிடத்தில் விட்டுவிடுகிறதினாலே மாத்திரம் நமக்குச் சமாதானமுண்டு. சிலுவையில் அறையப்பட்ட அவர் நம்முடைய பாவத்தை உள்ளபடி காண்கிறார், மனுஷர் செய்யக்கூடிய தீமைகளை அறிந்திருக்கிறார். பெரிய கிரயத்திற்கு வாங்கின மன்னிப்பை நாம் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் நியாயமாய்ப் பெற்றுக்கொள்ளக்கூடாத சமாதானத்தை அவரிடத்திலிருந்தே பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் அபாத்திரரென்றுணரும்போது அவருடைய ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். இப்படியிருக்க நாம் அவருடைய வாக்கை நம்புகிறோமானால், அவர் காண்கிறவிதமாய் நம்முடைய பாவத்தை நமக்குக் காட்டி, அதை முற்றாய் விட்டுவிடுகிற விதத்தையும் நமக்குக் காண்பிப்பார். நாம் இப்படி அவரை நம்பினவுடனே நம்முடைய விசுவாசம் தப்பல்லவென்று காண்கிறோம். மனுஷனுடைய இருதயத்திலே மெய்யான மனந்திரும்புதலே உண்டாக்க, சிலுவையைப்போன்ற வேறொரு வல்லமையில்லையென்று நிச்சயிக்கிறோம். அந்த பரிசுத்தமுள்ள மனுஷன் தன் கைகளைச் சிலுவையில் நீட்டி, தலையைச் சாய்த்து, மரித்தநாள் துவங்கி, அந்த இடத்திலேதான் மனுஷர் தங்களை அறிந்துகொள்ளக்கூடிய மனதைக் கொடுக்கிற தேவவல்லமையைக் கண்டிருக்கிறார்கள். அங்கே தான் பாவத்தின் தோஷத்தை அறிந்துகொள்ளுகிறார்கள். அங்கேதான் நம்மிலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்களாய் 'அவருடைய பாடுகளின் ஐக்கியத்தில்' பங்குபெற்று, உலகத்தை மீட்டுக்கொள்ளுகிற அவருடைய மகா ஊழியத்தில் மனுஷராகிய நமக்குப் பங்கைக் கொடுக்கிறாரென்று காண்கிறோம்.

அந்த மகா ஒப்புக்கொடுத்தலைப் பார்க்கும்போது
'நீர் சிலுவையிலே
சுமந்த பாரத்தை
என் ஆன்மா பார்த்தவுடனே
காணும் என் தோஷத்தை.' (கீதம் 333. 21. 4.)

அங்கேதான், 'லோகசெல்வம் மாயமென,
தள்ளுவேனே அகங்காரம்.' (கீதம் 332. 21. 1.)

7-ம் கிழமை. சிலுவையண்டை பாவ மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுதல்

நாளாந்தர வாசிப்பும் தியானமும்

1-ம் நாள். எபே. 1^{3-7}.

இயேசுவானவரைச் சிலுவையில் அறைந்தது என்ன? அவர் ஏன் தம்மை இரட்சிக்கக்கூடாதவராயிருந்தார்? இதிலுலே அவருடைய அன்பைப்பற்றி என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்? (§ 32.)

2-ம் நாள். கொலோ. 1^{12-14}.

'மோட்ச பிரயாணம்' என்னும் புஸ்தகத்தில் கிறிஸ்தியான் சிலுவையண்டை என்னத்தை இழந்தான்? என்னத்தைப் பெற்றுக் கொண்டான்? (§ 33.)

3-ம் நாள். ரோம. 8^{31-39}.

கிறிஸ்தியான் பெற்றுக்கொண்டவைகளின் கருத்தென்ன? (§ 33.)

4-ம் நாள். 1 கொரி. 11^{23-26}. மத். 26^{26-28}.

கர்த்தருடைய இராப்போஜனத்தில் நாம் பெற்றுக்கொள்ளுகிற அப்பமும் திராட்சாரசமும் அடையாளங்களாயிருக்கின்றன. ஆனால் அவைகள் கர்த்தருடைய கட்டளையின்படி நம்முடைய கையில் கொடுக்கப்பட்டிருந்தால், அவைகள் குறிக்கும் ஆவிக்குரிய நிஜங்கள் நமக்குக்கூடக் கொடுக்கப்படும். கிறிஸ்தவர்களாகிய நாம் இராப்போஜனத்தில் என்னத்தைப் பெற்றுக்கொள்ளக் காத்திருக்கலாம்? (§ 33.)

5-ம் நாள். எபி. 2.

பாவநிவாரணத்தைக்குறித்து வாக்குவாதம் பண்ணினார்கள். 'நீ ஏன் அறிய விரும்புகிறாய்' என்று ஒருவன் கேட்டான். அது கேட்கக்கூடிய ஒரு கேள்வியா? அதற்கு மறுமொழி சொல்ல விரும்பினால் தங்களிடத்தில் என்னத்தைக் கேட்கவேண்டும்? (§ 33.)

6-ம் நாள். எபி. 4^{14}—5^{10}.

'நாம் மன்னிக்கப்பட்டோமென்று எல்லாரும் நம்புகிறோம்' என்று சொன்ன ஒருவனுக்கு தோமா எழுதினதாவது, 'தேவனுடைய மன்னிப்பைப்பற்றிக் கருத்தாய் நினைக்கும்போது, அதை நம்ப முடியாது, அவ்வளவு அதிசயமான மன்னிப்பு நிச்சயமானால் நான்.....' அவனுடைய கடிதத்தை நீ எப்படி முடிப்பாய்? (§ 33.)

7-ம் நாள். கலா. 2^{20}.

'இப்பெரிய மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு நான் அதற்கு விரோதமாய்க் குற்றம் செய்வேனென்று அஞ்சி, அதை ஏற்றுக்கொள்ள பயப்படுகிறேன்' என்று 'அச்சஞ்சன்' சொன்னான்.

அவனோடு தியானமாய்ப் பேசி நாம் எல்லாரும் இதைப்பற்றி என்ன செய்யவேண்டுமென்று கண்டெடுத்துக்கொள். (§ 34.)

32. இயேசுகிறிஸ்து சிலுவையில் அனுபவித்த மரணத்தினாலே நாம் தேவனுடைய மனதை அறிந்துகொள்ளுகிறோம். இதுதான் அதின் முக்கியமான கருத்து. அந்த ஒரே கிரியையிலே தேவன் பாவத்தைப் பார்க்கிற விதத்தையும், அவர் பாவிகள்மேல் வைத்திருக்கிற அன்பையும் காண்பிக்கிறார். வேறெந்த வழியினாலும் நாம் அதை உணரக்கூடாதவர்களாயிருந்தோம். ஆணிகள், முள்ளுகள், சாட்டிகள் இவைகளினாலே அல்ல; பகை, நிந்தனை, கொடுமை, இவைகளினாலே குத்துண்டவராய், மனுஷர் செய்ய விரும்பினதை அவர் அனுபவித்து, 'நான் ஒருபோதும் உங்களைக் கைவிடுவதுமில்லை, விட்டுவிடுவதுமில்லை' என்று சிலுவையிலிருந்து கூறினவராயிருந்தார். அவர்கள் தங்களால் ஆனமட்டும் அவரைத் துன்பப்படுத்தினார்கள், அவருடைய கடைசி வார்த்தைகளோ பகையல்ல, மன்னிப்பைப்பற்றிப் பேசுகின்றன. அன்புதான் அவரை அந்த நிலைக்குக் கொண்டுவந்தது. நம்மை விட்டுவிட அவருக்கு மனமிருந்தால் தன்னைத் திருப்தியாக்கக்கூடியவராயிருப்பார். நம்மில் எந்தக் கேடுள்ளவனையும் தன் பாவத்தோடு விட்டுவிடக்கூடாதவராயிருந்தபடியினால் தன்னை இரட்சித்துக்கொள்ளக் கூடாதவராயிருந்தார். அவருடைய மரணத்தில் நம்மை விட்டுவிட மாட்டாத அன்பைக் காண்கிறோம். சிலுவையிலிருந்தே அந்த அதிசயமான வாக்கைக் கேட்கிறோம்.

33. இந்த வார்த்தைகளினாலே சிலுவையின் இரகசியத்தின் ஓரத்தைமாத்திரம் தொடுகிறோம். அது நம்முடைய அறிவுக்கெட்டாததாயிருக்கிறது. அவ்விடத்திலே தேவன் நம்மோடு பேசி, நம்மை மன்னித்து, நம்மைத் தம்மோடு ஐக்கியம்பண்ணுவதற்கு அழைத்திருக்கிறாரென்று மாத்திரம் அறிந்திருக்கிறோம். கிறிஸ்துமார்க்கம் விசுவாசிக்கவேண்டிய ஒரு போதனைமாத்திரமல்ல, கைக்கொள்ளவேண்டிய ஒரு பிரமாணம் மாத்திரமல்ல, அது அன்பின் யார்க்கமாகவே யிருக்கிறது. அதில் போதனையிருக்கிறது, பிரமாணங்களுமிருக்கின்றன. ஆனால் அதின் முக்கியமென்னவென்றால்—இரண்டு கள்ளர் நடுவில் சிலுவையில் அறைபட்ட இயேசுகிறிஸ்துவே. தேவன் தமது குமாரனின் மரணத்தில் நம்மோடு பேசியிருக்கிறாரென்று நமக்குத் தெரியும். பாவமன்னிப்பு இன்னதென்று அறியக்கூடிய இடத்தை நமக்குக் காட்டியிருக்கிறார். அவ்விடத்திலே இலவசமும், பூரணமுமான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறோம், அவ்விடத்திலே யாதொரு பிரிவினையில்லாத ஐக்கியத்தைக் கண்டெடுக்கிறோம். அவ்விடத்திலே எல்லாம் புதிதாக்கப்படுகிறது. இந்த மன்னிப்போ இரத்தத்தினால் வாங்கப்பட்டது; அதிலே சுத்தம்பண்ணுகிற அன்பின் அக்கினி கொழுந்து

விட்டொழிகிறது; என்றைக்கும் நம்முடைய அறிவுக்கெட்டாதது அதிலே சீவிக்கிறதைக் காண்கிறோம்.

'அன்பினகலம் நீளமுயர மாழமறிந்தவ ருண்டோ?
அளவிடக்கூடாதுன் னன்பை
இன்ப இயேசுவே.' (16-ம் கீர்த்தனை.)

இயேசுவின் சிலுவை நம்முடைய அறிவுக்குத்தக்கது அல்ல, அது நம்முடைய ஆன்மாவின் தேவைக்குத்தக்கது. நாம் அதை விளக்கிக் கொள்ளப் பிரயாசப்படுவதும் அதைக்குறித்து ஆலோசனைசெய்வதும் மிகவும் கல்லது. ஆனால் கூர்மையாய்க் கண்டறிகிறதைப்பார்க்கிலும் அதினாலே இரட்சிக்கப்படுவதும், ஆராய்ச்சிசெய்கிறதைப்பார்க்கிலும் அதின் வல்லமையை அறிவதும் விசேஷம். அதின் வல்லமைக்குக் கீழ்ப்படியாமல், சிலுவையின் மேலான கருத்தை அறிந்துகொள்ளப் பார்க்கிறவர்களுக்கு அதின் இரகசியம் திறக்கப்படவில்லை என்று கண்டுகொள்வார்கள். மீட்கப்பட்டவர்கள்மாத்திரம் சிலுவையின் இரகசியத்தைச் சொல்லக்கூடும். 'சிலுவையைப்பற்றிய உபதேசம்கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனுயிருக்கிறது' என்று சாட்சி சொல்லுகிறார்கள்.

34. அந்த மன்னிப்பை ஏற்றுக்கொண்டு அதில் சந்தோஷப்படுகிறதினாலே, சொல்லத்தெரியாத இனிமையான ஐக்கிய சம்பந்தத்துக்கு அஸ்திபாரத்தை வைக்கிறோம். அந்த நித்திய சிநேகம் நாம் செய்த பாவத்திற்குப் படும் தண்டனையிலிருந்து நம்மை விடுதலையாக்கி, உலகத்தை மேற்கொள்ளக்கூடிய வெற்றியடைகிற சுபாவத்தை நமக்குத் தருகின்றது. நம்முடைய சொந்த ஆன்மாவைப்பற்றிய அதிகமான கவலை அதினாலே நீக்கப்படுகிறது. அது நம்முடைய மனச்சாட்சிக்கு ஆறுதல், ஏனென்றால் 'அவர் நம்முடைய பாவங்களை நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு நீதியும் உண்மையுமுள்ளவராயிருக்கிறார்' என்று நமக்கு நிச்சயப்படுத்துகிறது. 'பரியுள்ள ஆத்துமாவை நன்மையிலே திருப்தியாக்குகிறது.' நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்று மாத்திரமல்ல, நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று சாட்சி கொடுக்கிறது. இதிலும் அதிகமானதைக் கேட்கக்கூடுமா? இவ்வளவாய்க் கொடுத்தவர் 'கிறிஸ்துவோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?'

'இந்த நன்மைகள் பெற்றோரின்
மகிழ்வை யார் சொல்வார்?
இயேசுவின் அன்பைக் கண்டோரின்
இன்பை மற்றோர் காணார்.' (கீதம் 322.)

C. L. S. PRESS, MADRAS—1918

No. 147. ஆகஸ்டு 1918

வேதியர் விளக்கு

Sermons in Rhyme

By Mr. M. Samuel

இரட்சண்ய அம்மானை

(தொடர்ச்சி)

4. சிற்றின்பத்தின் சிறுமை

1. பரத்தையர்மேல் ஆசைகொண்டு பறந்துநிற்கும் நேசர்களே
பரத்தையரின் மோசமதைப் பகர்ந்திடுவேன் கேளீரோ?
2. வாசலதி லுட்கார்ந்து வழிமறித்து வாலிபரை
தோஷமதி லுட்படுத்தித் தொலைத்திடுவாள் தூர்த்தையவள்.
3. காசு பறிக்கவென்று கரிசனையாய்க் காத்திருந்து
கூசாமல் வாலிபரைக் கொலைபாதகம் புரிவாள்.
4. மெய்யை மிகமினுக்கி மேதினியோரைப் பிடித்து
ஐயோ நாசில் அமிழ்த்திடுவாள் அன்னவளே.
5. கும்பி வளர்க்கவென்று குடிஜனங்களைக் கெடுத்து
கும்பிதனில் வீழக் கொலைபாதகம் புரிவாள்.
6. தேன்கூடு போலொழுகும் சிற்றின்ப வார்த்தைகளால்
வான்போகும் ஆத்துமத்தை வழுவிவிழச் செய்திடுவாள்.
7. எட்டியிலையுங் கசப்பே இருபுறமும் கூர்மையுள்ள
பட்டயத்திலுங் கொடியாள் பாய்ந்தருவிக் கொல்வாளே.
8. பாதாள வல்லடிக்குப் பாதை அவளேதான்
வேதாளத் தோடுன்னை வெந்தழியச் செய்திடுவாள்.
9. வாவென் றழைத்து வருந்திமிக வார்த்தைசொல்லி
ஜீவன்தனைக் கெடுத்துச் சிறுமைக்குள் ளாக்கிடுவாள்.
10. முகத்தின் அழகுகெட முழுவதுமாய் வேருக்கி
அகத்தை யழுக்காக்கி அருள்மாறச் செய்திடுவாள்.
11. வேசித்தனம் பிரிய வெறுங்கைய ளாகிவிட
மாசுபடுந் தீநரக வேதனையைக் கூட்டிடுவாள்.
12. வேசித்தனத்தாலே விண் மறந்து போனுக்கால்
ஆசிக்கும் அம்பரத்துக் காளாக மாட்டாயே.

5. பரலோக ப்ராப்திக்கு வழி

1. பரலோகம் கிட்டுதற்குப் பாவமதையே ஒழுத்துப்
பரித்திருந்து வந்தவர்தம் பாதம் பிடித்திடுவீர்.

2. பரத்திருக்கும் வேந்தனவர் படைத்த சிருஷ்டிகர்தாம்
நரப்புலனர் பாவமதை நசிக்கும்படி யுதித்தார்.

3. படியுதித்த இரட்சகரைப் பார்த்தறிய ஆசையுற்றால்
வடிசத்ய வேதமதை வாங்கிப் படித்திடுவீர்.

4. படியுதித்த இரட்சகரின் பாடுகளின் புண்ணியத்தால்
அடியெடுத்து வைத்துநல்ல கதியடைய லாகுமய்யா.

5. அற்புதமாய் மெய்ப்பாலர் ஆதரையில் வந்துதித்து
பொற்பதத்தைக் கண்டடையப் போதனைகள் செய்தாரே.

6. குஷ்ட ரோகிகட்கும் கொடிதான நோயர்கட்கும்
இஷ்டமுடன் நன்மைசெய்து இடறல் ஒழித்தனரே.

7. கூன்குருடு கொண்டிகட்குக் குணமளித்துத் தற்பாலர்
மான்கள் குதித்தடையும் மகிழ்ச்சியுறச் செய்தாரே.

8. பேய்பிடித்த தோஷிகட்குப் பேயோட்டி யுயிர்ஈத்து
மாய்ந்தார் மறுபடியும் மண்வாழச் செய்தாரே.

9. பாவ மனத்தவர்க்கும் பாருலகில் நன்மைசெய்து
பாவம் தொலைக்கவந்த பண்டிதன்தா மென்றுரே.

10. பாவ மனத்தோரே பாவமதைத் தள்ளிவிட்டால்
பரலோக ராஜ்யத்தில் பங்குருள்வே னென்றுரே.

11. பாவப் பாரஞ்சுமந்து பரிதபிக்கும் பாவிகளைக்
கூவி யழைக்கவந்த குருநாத னென்றுரே.

12. என்னிடத்திலே வருவோன் எப்பாவி யானாலும்
அங்கியனுய்த் தள்ளி அகற்றிவிடே னென்றுரே.

13. இவ்விதமாய்க் கூவிநின்ற இன்னிசையின் வார்த்தையுடன்
தம்முயிரையு நமக்காய் தாரணியில் தந்துவிட்டார்.

14. பாதகரசம் மாத்தர்கள்மேல் புரிதாபம் கொண்டதுடன்
பாதகர்க்காய் வேண்டிப் பரனே பிணையானார்.

15. தேவத்திரு நீதியதும் தீயர்கள்மேல் சாயாமல்
தேவத்திரு வடிவே தீயர்கட்காய்ப் பாடுபட்டார்.

16. ஆகாத பாவிகள்மேல் ஆக்கினையைக் கூறாமல்
சாவாமை யுற்றதெய்வம் சாவை அநுபவித்தார்.

17. ஐம்புலத்தால் மாந்தர்செய்த ஆகாமியம் போக்க
ஐம்புலத்தால் பாடுபட்டு ஆருயிரைத் தர்மீந்தார்.

18. கொல்கதா வென்றதோரு கொடிதான மேடுதனில்
நல்மன்தாய் நம்மேசு நமக்காகப் பாடுபட்டார்.

19. கால்கரங்கள் ஆணிதைக்கக் கடுமுடி சிரஞ்சூட்ட
பால்மதலைத் தாயைவிடப் பாதகர்க்காய்ப் பாடுபட்டார்.

20. ஈட்டியினல் சேவகன்தான் இறையோன் விலாவதிலே
கூட்டித் துளைக்கக் கொடிதான பாடுபட்டார்.

21. இவ்விதமாய்ப் பாடுபட்டே இறைவன்தம் ஜீவன்விட்டு
எவ்விதமும் பாவிகளை யீடேற்ற ஆசைகொண்டார்.

22. நல்மனதாய் இரட்சகரின் நைந்த சடலமதை
கல்லறையிலே யடக்கக் கதித்துயிர்த்தார் மூன்றும்நாள்.

23. உயிர்த்தெழுந்து நாற்பதுநாள் உல்கில் வசித்ததுடன்
உரித்தான் சாட்சியிட உன்னத்தார் தம்சேஷ்ருக்கு.

24. மண்டலத்தில் நாற்பதுநாள் மைந்தருக்குக் காட்சிதந்து
விண்டலத்தில் சென்றார் விரைவுடனே மேகமதில்.

25. இன்னமொரு கால்மதில் இமையோர் குழாம்சூழ
இங்கிலத்திலே யுதித்து இகத்தை நடுத்தீர்ப்பார்.

26. மரியா மனுமக்களுடன் மண்ணுலகில் மாய்ந்தோரைச்
சரியாய் நடுத்தீர்க்கச் சுவாமி யெழுப்பிடுவார்.

27. எண்ணடங்காச் சேனைகளும் யேசுவின் சமுகமதில்
கண்ணடங்காக் காட்சியுடன் கணக்குக் கொடுப்பாரே.

28. அங்காளில் பத்தரெல்லாம் ஆனந்தங் கொள்ளுமென்பார்.
மூன்ஞளில் கேளாதோர் மோசத்துள் ளாகுமென்பார்.

29. அங்காளில் கூவி அலறித் தவிக்காமல்
இங்காளில் இயேசுவையே இருதயத்தில் சிந்தைசெய்வீர்.

30. இங்காளில் கூறுகிறேன் இறையோன் கிறிஸ்துவையே
அங்காளில் மாட்சியுற இங்காளில் சிகதொழுவீர்.

31. இத்தனையும் நிச்சயமே எளிதென் றெண்ணுதேயும்
அத்தனையும் நம்பிவிட்டால் அம்பரத்தில் வாழ்வடைவீர்.

முற்றிற்று.

Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by the Rev. J. S. Masillamany, B.D.

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

2-ம் புத்தகம்

முன்நோக்கிச் செல்லல்

12-ம் அத்தியாயம்

தீவுச் சம்பவங்கள்

(தொடர்ச்சி)

இப்படிப் பர்னபாவும் சவுலும் ஜனங்களோடு கிரேக்கபாஷையில் பேசிக்கொண்டு, சாலமி பட்டணத்திலிருந்து சமபூமியை ஊடறுத்துச் சென்றார்கள். கிரேக்க கல்வியையும் நாகரீகத்தையும் ஏற்றுக்கொண்டு, ரோம ராஜ்யமெங்கும் பரவியிருந்த யூதர்கள் மிகுதியாய்க் கிரேக்குபாஷையையே பேசிவந்தபடியால் இவர்கள் அவர்களுக்கு இப்பாஷையிலேயே போதகம் பண்ணினார்கள். இக்காலத்தில் தரை எல்லாம் பசும் பயிர், செடி, கொடிகளால் நிறைந்திருந்தது. அவர்கள் இத்தீவின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரைக்கும் நடந்துசென்றார்கள். வெள்ளாட்டுக் கடாக்கள் குதித்துத் துள்ளித்திரிகிற சில மலைகளின்மேல் ஏறினார்கள். நீளமான சில பள்ளத்தாக்குகளில் இறங்கி கடற்கரை ஓரத்திலுள்ள மீன்பிடிகாரப் பட்டினங்களுக்குச் செல்லுவார்கள். செந்நிறமான இம்மலைப்பாரிசங்களில் உள்ள செம்புச்சுரங்கங்களிலிருந்து சில மனுஷர் செம்பு வர்க்கத்தைத் தோண்டி எடுப்பதைக் கண்டார்கள். சீப்புருதீவு செம்புக்காக உலகமெங்கும் அதிகம் பிரசித்திபெற்றிருந்தது. பல சமயங்களில் அவர்கள் அத்திமரங்களும் ஒலிவமரங்களும் அடங்கிய தோப்புக்களுக்கு ஊடே செல்லுவார்கள்.

அவர்களுக்கு வலதுபக்கத்தில் ஒரு பிரமாண்டமான மலைச்சிகரம் எழும்பினது. இதன்மேலிருந்த பனிக்கட்டி இப்போது உருகிக்கொண்டிருந்தது. இச்சிகரத்திற்கு ஒலிம்பஸ் முடி என்று பெயர். தேவர்கள் ஆலோசனை முதலியவை செய்கிறதற்கு இவ்விடத்தில் தான் கூடிவந்தார்கள் என்று பலர் எண்ணினார்கள். அதிக வெப்பமாயிருந்த நடுப்பகல் நேரத்தில் முல்யோரங்களில் அவர்கள் தங்கள்

சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, மகாசமுத்திரமான தீரத்திலே பிரகாசித்துக்கொண்டிருப்பதையும் அக்கடலுக்கு அப்பாலே மேடக்கேயுள்ள உலகத்தின் கடையாந்தரத்தில் தௌரஸ் பர்வதங்களின் வெள்ளைச்சிகரங்கள் தோன்றுவதையும் அவர்கள் பார்க்கக்கூடும்.

சீப்புருதீவிலுள்ள சர்வ ஜனங்களுக்கும் தெரிந்ததும் அவர்களில் அநேகர் நம்பினதுமான ஒரு புராணக்கதையைப் பர்னபா பவுலுக்குச் சொல்லியிருப்பான். அதாவது இந்த இடத்திலே அலைகளின் நுரையினின்று ஒரு தேவதை ஜெனித்தாள். அவள் பேர் அப்ரோதீத்து. அவள் ஒரு கிளிஞ்சில் மூலமாய் கரைக்கு வந்து அக்காலமுதல் சீப்புருதீவிலேயே இருக்கிறாள். அவளே காதலுக்கும் சௌந்தரத்துக்கும் தேவி. இதுவே புராணக்கதை.

ஓர் மலைச்சிகரத்தில் இரண்டு கழுகுகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. பள்ளத்தாக்கிலே அநேக இராஜாளிகள் இரைதேடிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து திரிந்தன. இப்படிச் சவுலும் பர்னபாவும் மலைகளைக் கடந்து சென்று ஒரு பெரிய பள்ளத்தாக்கில் இறங்கினார்கள். இப்பள்ளத்தாக்கானது தேவதைகளின் நாடகசாலையைப்போல வெகு மனோகரமாயிருந்தது. தண்ணீர் ஓடுகிற சத்தமும் யாரோ தனித்த ஓர் இடைப்பையன் தன் வெள்ளாடுகளைக் கூப்பிடுகிற சத்தமும் அல்லாமல் வேறெவ்விதச் சத்தமுமில்லாமல் எல்லாம் மிக மௌனமாயிருந்தது.

பாப்போ பட்டணத்துக்கு நேரே செல்லுகிற தாழ்ந்த பீடபூமியின் மேல் இப்போ அவர்கள் நின்றார்கள். அப்ரோதீத்துவின் ஆலயத்தில் அத்தேவதையைப் பணிந்துகொள்ளும்படி ஜனங்கள் வருவதை அவர்கள் கண்டார்கள். அந்தியோகியா பட்டணத்திலே வெளிச்சத்தின் தேவனுடைய அப்பொல்லோ வணங்கப்படுகிறது சவுலின் ஞாபகத்துக்கு வந்தது. சீப்புருதீவாகிய இந்த இடத்திலேயோ அன்புக்கும் அழகுக்கும் தேவியாகிய அப்ரோதீத்து வணங்கப்படுகிறாள். அப்போது பவுல் ஆவியில் அனல்கொண்டு உண்மையான ஒரு தெய்வத்தைப்பற்றி அவர்களுக்குச் சொல்ல விரும்பினார். இவரே உண்மையாய் வெளிச்சத்துக்கும் அன்புக்கும் கடவுள். அப்பொல்லோ, அப்ரோதீத்து என்னும் தேவதைகளின் புராண சரித்திரங்களில் கூறப்படும் அசுத்தமும் துரோகமும் இவரிடத்தில் இல்லை. இவர் பரிசுத்தமுள்ளவர். தம்முடைய வார்த்தை தவறுதலவர். இதற்குப்பின் நாம் பார்க்கப்போகிறபடி, அதரிசனமான கடவுளை குருட்டுத்தனமாய் தடவியாகிலும் காணும்படி முயற்சிக்கிற புறமதஸ்தர்களைப் பவுல் ஒருபோதும் தூஷித்துத் தாக்குகிறதில்லை. ஆயினும் சர்வ

வல்லமையுள்ள கடவுளைப் பளிங்கினுள்ளும், மரத்தினுள்ளும், உலோகத்தினுள்ளும் அடக்கிவைக்கின்ற விக்கிரக ஆராதனையைப் பவுல் எதிர்த்துத் தாக்கினார். மதசார்பான சகல தந்திர மந்திரோபாயங்களையும் அவர் அருவருத்தார். பர்னபாவும் சவுலும் பட்டணத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தபொழுது ராஜாங்க ஸ்தானமும் அத்தீவின் ரோமத்தலைநகரியுமாகிய அந்நகரத்துக்கு ரஸ்தாவின் வழியாய்ப் போக்கும்வரவுமாயிருந்த ஜனங்களைக் கண்டார்கள். ரோம போர்ச்சேவகரும் அடிமைகளால் பல்லக்குகளில் சுமந்துகொண்டு போகப்பட்ட காம்பீரமான ரோமதுரைசாணிகளும் பட்டணத்தை நோக்கிச் செல்லுகிற நேர்பாதையும், கோட்டை கொத்தளங்களும், ரோம அதிபதியின் அரமனையும், ஆகிய இவை எல்லாம் தாங்கள் பாப்போ பட்டணத்துக்குச் சமீபித்துவிட்டதை அவர்களுக்குத் தெரிவித்தன. அவர்கள் பட்டணத்து வாசல்வழியாய் அதின் மதில்களுக்கு உட்புறத்திலுள்ள தெருக்களில் சென்றார்கள். இங்கே அத்தீவின் வேறெந்த பாகத்தைக் காட்டிலும் அதிகமான ரோமர்களைக் கண்டார்கள். இதுவே ரோமராஜாங்க ஸ்தானம். ரோம அதிபதியாகிய செர்கியு பவுல் இங்கேதான் வாசம்பண்ணினான். பர்னபாவும் சவுலும் இத்தீவின் மற்றப் பட்டணங்களில் தாங்கள் செய்ததுபோலவே இங்கேயும் திராட்சக்கொடி; இலை, கனிகள் சித்திரிக்கப்பட்ட வாசல்வழியாய் எபிசெய ஜெபஆலயத்துக்குள் சென்றார்கள். சீப்புருதீவானும் அங்குள்ள யுதர்களுக்கு அறிமுகமுள்ளவனுமாயிருந்த பர்னபா, தன் இளங்கூட்டாளியாகிய சவுலைப் பற்றி அவர்களுக்குக் கூறினார். அப்பால் சவுல் அவர்களைப் பார்த்து இப்போது மேசியா வந்துவிட்டார் என்பதும், இயேசு என்னும் பேர்கொண்ட தமது புத்திரன் மூலமாய் கர்த்தர் இப்போது பேசுகிறார் என்பதுமாகிய செய்தியை அறிவித்தார். இந்த மகா செய்தியைக் கூறும்படிக்குத்தான் இவர்கள் பிரயாணம்பண்ணியது.

சவுல் எழுந்துநின்று வெகு வைராக்கியத்தோடும் உலகத்தின் ஜாதிகளுடைய சரித்திர சார்பான மகா சாதுரியமான நியாயதோரணைகளோடும் தன் பிரசங்கத்தை ஆரம்பித்தார். இவருடைய பிரசங்கமானது ஒரு சேனபதி தன் எதிரிக்கு விரோதமாகத் தன் குதிரைப் பட்டாளத்தைச் செல்லவிட்டு அவனுடு மும்முரசண்டை தொடுத்ததுபோல் இருந்தது. ஒன்று சவுலுக்கு விரோதமாகப் போராட வேண்டும், அல்லது அவருடைய நியாயங்கள் உண்மையென்று ஒப்புக்கொள்ளவேண்டும். அவரை அலட்சியம் செய்யமாத்திரம் ஒருவராலும் கூடாது. குளிர்ந்த நிழல்கொண்ட ஜெபஆலயங்களிலிருந்து ஜனங்கள் உஷ்ணமான தெருக்களுக்கு வெளியேறிச்

சென்றபொழுது அவர்கள் இந்த நூதனமான உபதேசத்தைக்குறித்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். கிழக்குத்திய தேசங்களின் நூதன கோட்பாடுகளையும் கிரேக்குதேசத்தின் ஆழ்ந்ததத்துவ சாஸ்திரத்தையும் குறித்துப் பேசுகிற அநேக மதபோதகர்கள் பாப்போ பட்டணத்துக்கு அடிக்கடி வந்திருந்தார்கள். அவர்கள் சொல்லுகிறதெல்லாம் கேட்கிறதற்கு இன்பமாயிருந்தது. ஆனால் இந்த செய்தி முந்தின எல்லாவற்றையும்விட அதிக விசேஷமானது. ஏனெனில் கடவுள் தம்மை அடைகிறதற்குரிய வழியை இப்பொழுது முதல் முதலாக சம்பூரணமாய் வெளிப்படுத்தினதாக சவுல் சொன்னது வாஸ்தவமாயிருக்குமானால் அவர்கள் எல்லாருடைய ஜீவியமும் எவ்வளவோ மாறுதலுக்கு உரியவையாயின.

இந்த நூதனமான மதபோதகர்களைப்பற்றிய கதையானது அப்பட்டணத்தில் சிறிது சிறிதாய்ப் பரவியது. ரோம அதிபதியாகிய செர்கியு பவுலினுடைய சேவகர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டார்கள். மற்ற ரோம அதிபதிகளைப்போலல்லாமல், தத்துவசாஸ்திர விஷயங்களில் மிகவும் சிரத்தையுள்ள தங்கள் எஜமானாகிய செர்கியு பவுலுக்கு இப்படிப்பட்ட உபதேசங்களைக் கேட்பது மெத்த பிரீதி என்பது அவர்களுக்குத் தெரியும்.

அதிபதி தன் சேவகரைப் பார்த்து 'நீங்கள் அந்த மனுஷரிடத்திற்கு ஆள் அனுப்பி அவர்கள் வந்து என்னிடத்தில் இவைகளைப் பற்றிப் பேசும்படி அவர்களைக் கேளுங்கள்' என்று சொன்னான்.

இந்த அழைப்பானது ஒரு இராஜகட்டளையாகவும் இருந்தது.

பர்னபாவும் சவுலும் அவ்வாறே வந்தார்கள். நீர்நிலைக் குழாய்களின்மூலமாய்த் தண்ணீர் தெளிக்கப்பட்டு மிகக்குளிர்ச்சியாயிருந்த உள்முற்றத்தைக் கடந்து ரோம அதிபதிக்குமுன் சென்றார்கள். அதிபதியைச்சூழ அரமனை பிரபுக்களும் அரசசேவகரும் இருந்தார்கள். இவர்களுள் கருநிற மயிர்உடைய யூதனொருவன் இருந்தான். இவன் பெயர் பர்இயேசு. இப்பெயருக்கு இரட்சகரின் புத்திரன் என்று அர்த்தம். இவன் ஒரு மாயவித்தைக்காரன். இரகசியமான மந்திரவித்தைகளும் நக்ஷத்திராதி வானஜோதிகள் கொண்டுவரும் காரியங்களை அறியும் ஜோதிடசாஸ்திரமும் தனக்குத் தெரிவதாகப் பாசாங்கு பண்ணினவன். ஆச்சரியமான காரியங்களைச் செய்து மற்றவர்களுடைய சித்தத்தைத் தன் சித்தத்துக்கு அடங்கப்பண்ணும் திறமை உடையவன். மத்தியதரைக்கடலைச் சூழவிருந்த ரோம ராஜ்யமெங்குமுள்ள சர்வ பட்டணங்களிலும் இந்தச் சூனியவித்தைக்காரனைப்போன்ற அநேக மனிதர் இருந்தார்கள். மந்திர வித்தையில் தங்களுக்கு இருந்த திறமையினால் இவர்கள் மனிதருடைய

மனசைத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டார்கள். உதாரணமாக, ஒரு பெரிய ரோமசேனபதி இவ்வித இழிவான மாயவித்தைக்கு இணங்கி குறிசொல்லுகிற ஒரு ஸ்திரீயினுடைய ஆலோசனையின் படி தன் யுத்தத்தையும் அதின் படையெழுச்சிகளையும் நடத்திவந்தான். பர்இயேசு என்ற இந்த மாயவித்தைக்காரனும் சொகியு பவுலினுடைய அரமனையிலே தங்கி சீப்புருதீவனைத்திலும் சர்வாதிகாரம் செலுத்திவந்த இந்த அதிபதியின்பேரில் தனது வல்லமையைச் செலுத்த முயற்சித்துவந்தான். தன்னைப்போலவே யூதஜாதியானான இவ்விருவரும் அச்சபாமண்டபத்தின் பளிங்கு தளவரிசையின்மேல் நடந்து சொகியு பவுலினிடம் வந்தபோது பர்இயேசு அவர்களை மிக கவனமாய் உற்றுப்பார்த்தான். ஆயினும் பிரயாணிகளாகிய இவர்கள் ரோம அதிபதியின் அரமனையில் தனக்கிருந்த வல்லமைக்குத் தடையாவார்கள் என்று அவன் ஒருபோதும் நினைக்கவே இல்லை. சொகியுபவுல் பர்னபாவையும் சவுலையும் பார்த்து 'மற்றவர்கள் மூலமாய் உங்களுடைய உபதேசத்தைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் இப்பொழுது உங்களிடத்திலிருந்தே அதைப்பற்றி நேராய் அறியவிரும்புகிறேன்' என்று சொன்னான்.

அப்போது சவுல் நிமிர்ந்து நின்றான். இப்படிப்பட்ட ஒரு தருணம் முன் ஒருபோதும் சவுலுக்குக் கிடைத்ததில்லை. முன்னே இவன் யூதரிடத்தில் பேசுகிற ஓர் யூதன். சீப்புருதீவு முழுவதிலும் பர்னபாவே முதன்மையாய் நின்று சகலத்தையும் நடத்தினான். கடற்கரையோரங்களிலும் மலையடிவாரங்களிலும் உள்ள பட்டணங்கள்தோறும் அவர்கள் சென்றபோது பர்னபாவே சவுலை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினான். இப்படியிருக்க இன்றைக்கு எல்லாம் மாறிவிட்டது. இன்றைக்குச் சவுல் ஒரு ரோமனிடத்தில் பேச நிற்கிறார். சவுல் எந்த ராஜ்யத்தின் ஒரு பிரஜையாக இருந்தாரோ அந்த ராஜ்யத்தின் மகா வல்லமைக்கு சீப்புருதீவனைத்திலும் பிரதிநிதியாக இருந்த ரோம அதிபதிக்கு முன்பாக ரோமனுகிய சவுல் பேச நிற்கிறார்.

சவுல்? சவுலா? அல்ல. இப்போது இவர் யூதனுகிய சவுலல்ல, ரோமனுகிய பவுல். இந்த ரோம அதிபதிக்கு இருந்த அதே பெயர் தனக்கும் இருந்தது. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் தன்மையைப்பற்றிய புதிய அறிவை பவுல் சொகியுபவுலுக்குச் சொன்னார். கடலேச்சூழ இருந்த ரோம ராஜ்யத்து பெரிய நகரங்களிலுள்ள அறிவாளர் யாவரும் பிரயோகித்துவந்த கிரேக்குபாஷையில் சர்வயூதகார ஞானத்தோடும் இதைப் பேசினார்.

The Backward and the Forward Look

(One Difference between Hinduism and Christianity)

பின்நோக்கமும் முன்நோக்கமும்

நமக்கு நல்லகாலம் எப்போதாவது வரக்கூடுமா? இப்பொழுது நாம் உலகத்தையாவது, நமது தேசத்தாரையாவது, நமது சொந்த நெஞ்சையாவது பார்த்தால் நமக்குத் திருப்தி இருக்க முடியாது. உலகத்தைப் பார்த்தால், கொடிய யுத்தத்தினால் வரும் உயிர் நஷ்டமும் பொருள்நஷ்டமும் இவ்வளவு அவ்வளவு அல்ல. நம் முடைய உடன்தேசத்தாரைப் பார்த்தால், ஜாதிபேதங்கள், கட்சிகள், குழந்தை விவாகங்கள், விதவைகளுக்கு ஏற்படும் அநியாயங்கள் முதலியவைகளைப் பார்த்துப் புலம்புகிறோம். சொந்த நெஞ்சை ஆராய்ந்துபார்த்தாலோ, அது எல்லாவற்றிலும் கேடான நிலைமையில் இருக்கிறது. இதற்காகவா பகவான் நம்மைப் பிறப்பித்தார்? 'என் செய்வான் தோன்றினேனே' என்று கவிஞனைப்போல அதைரியப்பட்டுக் கேட்கிறோம்.

நமக்கு நல்லகாலம் எப்போதாவது வரக்கூடுமா? உலகத்திலுள்ள தேசத்தாரெல்லாரும் ஒருவரையொருவர் அறிந்து, சகோதர நேசத்தோடு பாவித்து, நிலையுள்ள சமாதானம் பாராட்டும் காலம் வருமா? ஜனசமுதாய ஜீவியத்தில் இப்போது எழைகளை ஒடுக்குகிற அநியாயங்கள் ஒழிந்துபோகுமா? தனியாட்களாகிய நாம் பாவத்தை எல்லாம் விட்டுப் பரிசுத்தராகிக் கடவுளோடு ஐக்கியப்படுவோமா?

இந்துமதமும் கிறிஸ்துமதமும் இதைப்பற்றி வெவ்வேறுவிதமாய்ப் பேசும். இந்துமதம் சொல்லுகிறது யாதெனில், 'நீ விரும்புகிற அந்த நல்லகாலம் ஆதியிலிருந்த காலம், இனி வராது. நாலு யுகங்களில் நாம் இப்போது கடைசியான யுகத்தில் இருக்கிறோம். கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்கிற இந்த நாலு யுகங்கள் உண்டு. நாம் பிறந்தது கலியுகமானதினால் இந்தத் தீமைகளை எல்லாம் அனுபவித்தித்தான் தீரவேண்டும்.'

இந்த எண்ணம் மனதில் இருந்தால், நாம் தைரியத்தோடு இருந்து எந்த விஷயத்திலாவது புரோகதியடைவது அசாத்தியம். பின்னுக்குப் பார்த்து முன்னுக்கு நடக்கமுடியுமா? இது கலியுகம் என்றால், இக்காலத்தில் நமது தேசத்தார் தேசத்தின் பொது நன்மைகளை விரும்பி பல நல்ல முயற்சிகளைச் செய்வது என்ன பிரயோஜனம்?

இந்துக்கள் இந்தப் போதனையை மறந்துதான் புது இந்தியாவுக்காக உழைக்கவேண்டும்.

கிறிஸ்துமதமோ முன்னேக்கமுள்ள மதம். நல்லகாலம் வரும், கடவுள் கடவுளாயிருக்கிறதினாலே, கடவுள் அதற்கு வாக்குக் கொடுத்ததினாலே, கடவுள் உலகத்தின்மேல் இறங்கி மனுஷவதார மாய் வந்ததினாலே. நாம் தற்காலத்துத் தீமைகளை எவ்வளவு தெளிவாய்க் கண்டு துக்கித்தாலும், நல்லகாலம் வரும் என்று நிச்சயித்திருக்கிறோம். அந்த நல்லகாலத்துக்குப் புதிய ஏற்பாட்டில் 'தேவனுடைய ராஜ்யம்' என்று பெயர். இயேசு பூலோகத்தில் பரிபூரண ஜீவியம் பண்ணின காலத்தில், அவருடைய ஒரே மானிட ஜீவியத்தில் அந்த நல்ல காலம் உலகத்துக்கு வந்துவிட்டது. அவருடையவர்கள் அவருடைய சிந்தையை எம்மட்டுக்குப் பெற்றுக் கொண்டார்களோ, அம்மட்டுக்கு அந்த நல்ல காலம் வந்தது. அநேகருடைய ஆத்துமாவில் நல்ல காலம் ஒரு பெரிய அளவில் வந்திருக்கிறது. எதோ ஒரு காலத்தில் அது பூரணமாக வந்து உலகத்தைப் பரலோகம்போல் ஆக்கும்.

ஆனாலும் சிலர் ஒரு ஆட்சேபனை சொல்லுவார்கள். ஆதியாகமப் புஸ்தகத்தில் ஏதேன் தோட்டத்தைப்பற்றி எழுதியிருக்கிறதினாலே, நாம் இந்துக்களைப்போலப் பின்னுக்குப் பார்த்து நடக்கிறவர்கள்தானே என்பார்கள். ஏதேன் தோட்டத்தைப்பற்றி வேதம் சொல்லுகிறதைக் கவனமாய் வாசிக்கிறவர்கள் அப்படிப் பேசமாட்டார்கள். ஏதேன் தோட்டத்தில் நாம் காண்கிறது பரிபூரண ஜீவியமல்ல, மனுஷ ஜாதியின் குழந்தைப்பருவமே. ஆதாம் எவாளுக்கு நன்மைக்கும் தீமைக்குமுள்ள வித்தியாசம் தெரியாது. பாவம், பரிசுத்தம், இரண்டையும் அறியாமலிருக்கிறார்கள். அவர்களுக்குச் சில சுகங்கள் இருந்தபோதிலும், அவர்கள் இருந்த நிலைமை நமக்கு ஒருநாளும் மாதிரியாகாது. கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் நன்மை தீமைக்குள்ள வித்தியாசத்தை அவர்கள் கெட்டவிதமாய்க் கற்றுக்கொண்டு அப்படியே மனுஷ ஜாதிக்குப் பாவத்தின் பலனைச் சாபமாகக் கொடுத்ததை அங்கே வாசிக்கிறோம். ஆதியாகம புஸ்தகத்தை விட்டு, வெளிப்படுத்தின விசேஷத்தின் முடிவைப் பார்க்கக் கடவோம். பரிசுத்த நகரம் எவ்வளவு அழகாக வருணித்திருக்கிறது! அந்தப் பரிசுத்த நகரம் மோட்சமல்ல, எனென்றால் அது பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு இறங்கிவருகிறது. அதிலிருக்கிற மரங்களின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். அந்தப் புது எருசலேம் உலகத்துக்கு எதோ ஒரு காலத்தில் வரப்போகிற நிலைமையைக் குறிக்கிறது. 'பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முன்னின்வைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.'

கிறிஸ்து மதம் நம்மைத் தைரியப்படுத்துகின்ற மதம். நாம் நம்முடைய சொந்த முயற்சிகளால் செய்யக்கூடியது சொற்பமாயினும், கடவுளே அதை உபயோகித்துத் தம்முடைய ராஜ்யத்தைப் பூலோகத்தில் ஸ்தாபிப்பார். நாம் அல்ல, அவரே சகலத்தையும் புதிதாக்குவார். ஆதியிலிருந்த கிரேதாயுகத்தைப் பார்த்துப் புலம்பாமல், இனி நாம் காணப்போகிற புது எருசலேமைத் தரிசித்து ஆனந்திப்போமாக. அதைரியப்பட்டுப்போன உலகத்துக்கு இந்த நற்செய்தி கூறுவோம். முன்னுக்குப் பார்த்துப் பலமாய் நடப்போம். சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: 'இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்.'

Temperance Texts from Tiruvalluvar

கள்ளுண்ணாமை

திருவள்ளுவனையனார் தமது அரியதிருக்குறளில் கள்ளுண்ணாமையைப்பற்றி பின் வருமாறு எழுதியுள்ளார்:

1. உட்கப்படாஅ ரொளி யிழப்ப ரெஞ்ஞான்றுங்
   கட்காதல் கொண்டொழுகு வார்.

கருத்து:—கள்ளின்மேற் காதல் செய்தொழுகுமாசர் எஞ்ஞான்றும் பகைவரானஞ்சப்படார்; அதுவே யன்றி முன்னெய்தி நின்ற ஒளியினையு மிழப்பர்.

2. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
   னெண்ணப்பட வேண்டா தார்.

கரு:—அறிவுடையராயினார் அஃதிலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணுதொழிக; அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின் நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க.

3. ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

கரு :—பாது செய்யினும் உவக்குந்தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்; ஆனபின், குற்றம் யாதும் பொறாத சான்றோர் முன்பு களித்தல் அவர்க்கியாதாம்!

4. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப்பெருங் குற்றத் தார்க்கு.

கரு :—கள்ளென்று சொல்லப்படுகின்ற யாவருமிகழும் மிக்க குற்றத்தினை யுடையாரை, நாணென்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கஞ்சி அவர்க்கெதிர் முகமாகாள்.

5. கையறியாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

கரு :—ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளாற்றனக்கு மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல், அவன் பழவினைப்பயனாய செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாகவுடைத்து.

6. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

கரு :—உறங்கினார் செத்தாரின் வேறாதலுடையரேனும், அக்காலத் தறிவின்மையான் வேறெனப்படார்; அவ்வாறே கள்ளுண்பார் நஞ்சுண்பாரின் வேறாதலுடையரேனும், எக்காலத்து மறிவின்மையான் வேறெனப்படார் அவர்தாமே யாவர்.

7. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

கரு :—கள்ளை மறைந்துண்டு அக்களிப்பாற்றம் மறிவுதளர்வார்; உள்ளூர் வாழ்பவரான் உண்ணிகழ்கின்றதுயத் துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர்.

8. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

கரு :—மறைந்துண்டுவைத்து யான் கள்ளுண்டறியேனென்று உண்ணாதபொழுது தம்மொழுக்கங் கூறுதலை யொழிக; அவ்வுண்ட பொழுதே பிறரறியின் இழுக்காமென்று முன்னெஞ்சத்தொளித்த குற்றமும் முன்னையளவின் மிக்கு வெளிப்படுதலான்.

9. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கரு :—கள்ளுண்டு களித்தானொருவனை இஃதாகாதென்று பிறனொருவன் காரணங் காட்டித் தெளிவித்தல், நீருண் மூழ்கினானொருவனைப் பிறனொருவன் விளக்கினால் நாடுதலையொக்கும்.

10. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

கரு :—கள்ளுண்பானொருவன் தான் அஃதுண்ணாது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே; காணுங்கால் தானுண்டபொழுது உளதாஞ் சோர்வினை அவன் சோர்வால் அதுவு மிற்றென்று கருதான்போலும்.

(*Temperance News*)

Hindu Objections to Christianity

By the Rev. M. P. Arulappen

இந்துக்கள் கேட்கும் கேள்விகள்

இந்துக்களுக்குப் பிரசங்கிக்கப்போகிறவன் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டுமா என்பதைப்பற்றி யோசித்தால் சொல்லவேண்டுமென்றும் சொல்லக்கூடாதென்றும் விடை பகரவேண்டும்.

பதில் சொல்லவேண்டுமென்று நாம் சொன்னாலும் அவர்கள் போடும் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லக்கூடுமென்று நினைக்கத்தகாது. கிறிஸ்துமார்க்கத்தில் புத்தியின் கிரகிப்புக்கு மேலானதும் விசுவாசத்தால்மட்டும் அறியப்படுவதுமான இரகசியங்கள் உண்டு. ஆகிலும் புத்தியையும் அநுபவத்தையும் ஒட்டி நம்மாலியன்ற அளவு பதில் சொல்லவேண்டும். பிரசங்கத்தினிடையில் ஒருவன் போடுங்கேள்வி சிலவேளைகளில் நாம் பேசும் விஷயத்தையொட்டியிருக்கும் அல்லது பேசும் விஷயத்தோடு கொஞ்சமும் சம்பந்தமற்றதாயிருக்கும். எப்படியிருந்தாலும் உடனே பதில் சொல்வதோ பிந்திச் சொல்வதோ என்பதைச் சற்று யோசிக்க வேண்டும்.

நாம் பேசும் விஷயத்தில் கேட்போரில் பெரும்பாலர் மனம் பற்றிக் கவனிக்கிறதாயிருந்தால் குறுக்கிட்ட கேள்விக்குப் பதில்

சொல்லாமல் நாம் எடுத்த விஷயத்தைத் தொடர்ந்து முடிக்கவேண்டும். அப்படிக்கின்றிக் கேட்போரில் பலர் கவனம் சிதறியிருந்தால் அப்போது குறுக்கிட்ட அக்கேள்வியைப் பிடித்து அதை யாதாரமாக்கிச் சொல்லவேண்டியதைச் சொல்லவேண்டும். சில சமயங்களில் இந்துக்கள் நம்மைக் கேள்விகேட்க நாம் இடங்கொடாமையாலும் நம்மைப் புரளிபண்ணிக் கைதட்ட ஏதுவுண்டாகும்.

வெளிப்பிரசங்கம் செய்கையில் நமக்குப் போடப்படும் கேள்விகள், அவற்றைப் போடும் மனுஷரின் அறிவுக்குத்தக்கவாறு வித்தியாசப்படும். அவற்றைப் பல வகுப்புகளாக்கலாம்.

முரட்டுக் கேள்விகள்

கேள்வி. கடவுளைக் கண்டதார்?

உத்தரவு. என் பாட்டனுடைய பாட்டனை நான் கண்டதில்லை, ஆகிலும் அவரிருந்தாரென்று நம்புகிறேன். எனக்கு இருக்கிற உயிரை நான் கண்டதில்லை; புத்தியைக் கண்டதில்லை; காற்றைக் கண்டதில்லை; ஆகிலும் அநுமானத்தால் இவை உண்டென்று நம்புகிறேன். அதுபோலக் கடவுளுண்டென்றும் அவர் சிருஷ்டிப் பொருள்களால் நம்பலாம்.

கே. சம்பளத்துக்காக ஏன் கத்திக்கொண்டிருக்கிறாய்?

உத். கச்சேரியில் மேஸ்திரட், க்லெக்டர், தாசில் இவர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டுதான் வேலைசெய்கிறார்கள். அதினால் அவர்கள் செய்கிற தீர்ப்புச் செல்லாதா? சம்பளம் வாங்குகிறேனோ வாங்கவில்லையோ அது உனக்கு முக்கியமல்ல. நான் சொல்லுகிற சேதி முக்கியம். சம்பளம் பெறும் ஒரு சேவகன் ஒரு சம்மன் கொண்டுவருகிறான். நீ சம்பளத்துக்கு வந்தாய், உன் சம்மனை நான் வாங்கமாட்டேன் என்று யாராவது சொல்வார்களா?

கே. கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தானேவரும், உங்கள் மார்க்கம் நிஜமாயிருந்தால் எல்லாரும் தானே வருவார்கள். ஏன் தெருத்தெருவாய் அலைகிறீர்கள்?

உத். நல்ல காரியமெல்லாம் தெருவில் வந்து நிற்கும். பாலோ பால், தயிரோ தயிர் என்று விற்கிறார்கள். கள்ளோ கள் என்று விற்பாரில்லை. பிள்ளைகளுக்குக் கெட்ட பேச்சுகளும் நினைவுகளும் தானாய் வரும். நல்ல காரியத்தைப் போதிக்கவோ உபாத்தியாயர் வேண்டும். எறும்புக்குத் தித்திப்பு இன்னதென்று தெரிகிறதினால் அது இருக்கிற இடத்தைத் தேடிப்போகும். மனுஷருக்கோ பாவமிருக்கிற இடத்தைத் தேடிப்போகிற குணமிருக்கிறதே யன்றிப்

பரிசுத்தத்தை நாடுங்குணமில்லை. ஆகையால்தான் பரிசுத்த மார்க்கத்தைத் தெருத்தெருவாய்ப் போதிக்கவேண்டியிருக்கிறது.

கே. உன் மார்க்கத்துக்கு வந்தால் என்ன கொடுப்பாய்?

உத். பணங்காசுமட்டுமே பொருளல்ல; அது செல்வப்பொருள். அதிலுஞ் சிறந்தது கல்விப்பொருள்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

பணத்தைவிடக் கல்விமேல், கல்வியைவிடக் கடவுளுடைய அருள் மேல்.

செல்வத்துட்செல்வம் அருட்செல்வம்
அச்செல்வம் செல்வத்துளெல்லாந்தலை.

கிறிஸ்து மார்க்கத்தில் கடவுளுடைய அருளாகிய செல்வங் கிடைக்கும். அது கிடைத்தால் உலகத்தில் நாம் ஞானமுள்ளவர்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும், பாக்கியமுள்ளவர்களாகவும் பிழைக்கலாம். சாகையில் சந்தோஷமாய்ச் சாகலாம். மறுமையில் சதா நித்தம் அவரோடு வாழலாம்.

கே. எங்க சாமியை நம்பி நெருப்பி லிறங்குறேன். நீ இறங்கு பார்ப்போம்.

உத். நெருப்பிலிறங்குவதினாலும் நீர்மேல் நடப்பதினாலும் ஒருவன் கும்பிடும் சாமி மெய்ச்சாமி ஆகாது. எப்படியென்றால் வெள்ளைக்காரர் ஆகாசத்தில் பறக்கிறார்கள், தந்திவழியாய்ப் பேசுகிறார்கள்; எவ்வளவோ அற்புதம் செய்கிறார்கள்; அப்போ அவர்கள் சாமி மெய்ச்சாமி என்னவேண்டும். வேடிக்கை காட்டுவதல்ல, மனுஷனைப் பரிசுத்தமாக்குவதே மெய்க்கடவுளுடைய இலக்ஷணம்.

கே. சாமி எங்களை இப்படிப் படைத்தார், உங்களை அப்படிப் படைத்தார். உங்களுக்கு உங்கவழி, எங்களுக்கு எங்கவழி.

உத். சாமி ஒருவனைப் படைக்கும்போது இவன் திருடனாயிருக்கவேண்டும். இவன் நல்லவனாயிருக்கவேண்டும். இவன் கல்லுச்சாமியைக் கும்பிட்டு நரகத்துக்குப் போகவேண்டும் என்று புள்ளிபோடுவதில்லை. அவனவன் விவேகத்தினால் நல்லவழி கண்டு அதில் நடப்பது அவன் கடமை. சோளச்சோறே தின்ற ஒருவனுக்கு நெல்லஞ்சோறு கிடைத்தால் வேண்டாமென்பானா? பாட்டன் காலத்தில் காலால் நடந்தவர்கள் இப்போது ரெயில் வண்டி, மோட்டார் வண்டி ஏறுவதில்லையா? முந்திச் சக்கிமுக்கிதட்டி

நெருப்பு மூட்டின நம்ம பாட்டி இப்போது நெருப்புக்குச்சியைச் சரக்கென்று கிழிப்பதில்லேயா?

கே. கடைசியில் பார்த்தால் எல்லாம் ஒன்றுதான். நீங்கள் பொன் என்கிறீர்கள், நாங்கள் தங்கம் என்கிறோம். நீங்கள் கிறிஸ்து என்கிறீர்கள் நாங்கள் கிருஷ்ணன் என்கிறோம்.

உத். வித்தியாசம் பேர்மட்டில் இருந்தால் நாங்கள் உங்களுக்குப் பிரசங்கிக்க வேண்டியதில்லே. கிருஷ்ண பகவானுக்கும் கிறிஸ்துபகவானுக்கும் உள்ள நடக்கை வித்தியாசம், இரவுக்கும் பகலுக்குமுள்ள அவ்வளவு பெரிது. நீங்கள் கிறீஸ்துவின் சரித்திரத்தை வாசித்துப்பாருங்கள். அப்போது வித்தியாசம் விளங்கும்.

கே. உங்கள் மார்க்கம் நேற்று வந்ததுதானே. எங்கள் மார்க்கம் புராதனமானது.

உத். மண் எண்ணெய் நெருப்புக்குச்சி சிலவருஷங்களுக்கு முன் வந்ததாயிருந்தும் அதனால் அதை வேண்டாமென்பாரில்லே. எது நல்லதோ அது கிடைத்ததும் அதை உபயோகித்தலே புத்தி. மேலும் ஒரு காரியம் பழசாயிருப்பதால் அது சரியென்னவும் படாது. கொலே, களவு, கள், காமம் இவை வெகு பழமையான வைகளானதால் இவைகளே நல்லதென்பாருண்டா? அல்லாமலும் கிறிஸ்து சமயம் நமது நமது நாட்டுக்குப் புதிதானதும் அதற்கு முன்னும் உலகத்திலிருந்தது. ரெயில்வண்டி, மோட்டார்வண்டி நமது நாட்டுக்கு வருமுன்னும் வெள்ளேக்காரர் நாட்டிலிருந்தது, அதினாலிப்போது அதை வேண்டாமென்பாருண்டோ?

கே. உனக்கு உன் மதம் பெரிது, எனக்கு என் மதம் பெரிது. உன் வேலேயைப் பார்.

உத். அதில் ஒரு நியாயம் உண்டு; காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சென்பது மெய். ஆகிலும் மாற்றுக்கு நில்லாதது பொன்னாகாதே. நீ கல்லே வைத்துக்கொண்டு பொன், பொன் என்றால் காரியமென்ன? பொன்னானால் பிரகாசம் வேண்டும்; களிம்பிருக்கப்படாது, எடை இருக்கவேண்டும். உறைத்தால் மாற்றிருக்க வேண்டும், வீலபோகவேண்டும். இதெல்லாம் இல்லாதது பொன்னல்லவே. இதுபோலவே மதமானால் மெய்க்கடவுளே அறிவிக்கவேண்டும்; மனதைப் பரிசுத்தமாக்கும் "சக்தியுள்ளதாயிருக்கவேண்டும்; இம்மையிலும் சாகும்போதும் மறுமையிலும் நம்மைப் பாக்கியசாலிகளாக்கவேண்டும். இப்படியெல்லாம் செய்த மார்க்கம் கலைக்குதவாத மார்க்கந்தான்.

(*Arunodayam*)

C. L. S. PRESS, MADRAS—1918

No. 148. செப்டெம்பர் 1918

வேதியர் விளக்கு

13 SEP 1918

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

12-ம் அத்தியாயம்

தீவைச் சம்பவங்கள்

(தொடர்ச்சி)

பவுல் எதைப்பற்றிப் பேசினார்? இதைக்குறித்து நாம் திட்டமாய் ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால் கடவுளுடைய குணசிலத்தைப் பற்றியும் அவர் மனிதரை நடத்தின விதத்தைப்பற்றியும், பவுல் பிரசங்கித்ததாக சொல்லியபவுல் கேள்விப்பட்டிருந்தபடியால் பவுல் அப்போஸ்தலன் பிற்காலத்தில் எழுதிய நிருபம் ஒன்று கூறுகிற நியாயங்களேயும் உபதேசங்களேயும் இங்கு கூறியிருப்பார் என்று நினேக்க இடமுண்டு. அவை வருமாறு:

'வானத்திலும் பூமியிலும் நாம் காண்கிறவைகளும் காணப்படாதவைகளுமான சர்வ சிருஷ்டிகளும் ராஜாக்களுடைய சர்வ அதிகாரங்களும் அதிசனமான சகல சத்துவங்களும் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவர் தமது தன்மை அனேத்தையும் இயேசுகிறிஸ்து என்ற ஒருவருடைய ஜீவியத்தில் ஊற்றியிருக்கின்றார். இந்த இயேசுகிறிஸ்துவே அந்தகாரத்தின் வல்லமையினின்று நம்மை இரட்சித்து ஒளியின் பாதைகளில் நம்மை நடத்துகிறார். காணப்படாத சகல சத்துவங்களுக்கும் இவரே தலேவர். மந்திரவாதிகள் பிரயோகிக்கிற அந்தகார சத்துவங்களுக்கு மேற்பட்டவர். சர்வ ஞானமும் சகல அறிவும் அவருக்குள்ளேயே இருக்கிறது. ஆவிக்குரிய விஷயங்களேப்பற்றி பாசாங்குகளினால் ஒருவரும் உங்களே மோசம்போகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். கடவுளுடைய சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே இருக்கிறது. நாம் அவருக்குள் ஜீவித்திருந்தால் கீழ்ப்படியாமையின் பிள்ளேகள்மேல் தேவகோபாக்கினேயைக் கொண்டுவருகிற அசுத்தம், இழிவான ஆதாயவிருப்பம், பொல்லாத ஆசை முதலியவற்றை நித்தக் கொல்லுவோம். கோபம், மூர்க்கம், பொல்லாப்பு, புறங்கூறுதல்

முதலிய சகலமும் இப்பொழுதே நீக்கிவிடுங்கள். மேலானவை களே இப்பொழுது நாடுகின்றோம். எனெனில் நமது ஜீவியம் இயேசுகிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைந்திருக்கிறது' என்று கூறியிருப்பார்.

இந்த புது மதபோதகனுடைய அதிசிறந்த பிரசங்கத்தைக் கேட் கிறதற்கு செர்கியுபவுல் மிக்க ஆவலாய் முன்னுக்குச் சாய்ந்து கொண்டான். இந்த ரோம அதிபதி அதிக புத்தியும் நியாய சக்தி யும் உள்ளவன். தனக்குமுன் நின்ற இந்தப் பவுல் அதிக விசால மும் தாணிவும் உள்ளதுமான மனதை உடையவன் என்பதை அறிந் தான். இவருடைய செய்தி எப்படியிருந்தது என்று கேட்டால் பர் இயேசு என்ற அந்த மாயவித்தைக்காரனுடைய அர்த்தயாம மந் திரவித்தையாகிய இருண்ட புகைக்குப்பின் எழுந்த மகா கெம்பீர சூரியபிரகாசத்தைப்போல் இருந்தது. பர் இயேசு, பவுல் சொல்லு கிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

இந்தப் பர் இயேசு,-ஞானியாகிய எலிமா என்னும் நாமத்தைத் தனக்குத்தானே கர்வமாய் இட்டுக்கொண்டவன். இவன் செர்கியு பவுலை உற்றுப்பார்த்து பவுலினுடைய உபதேசத்தின்மேல் இவன் பிரியப்பட்டான் என்பதைக் கவனித்தபோது அவனுடைய முக நாடி வேறுபட்டது. அவனுடைய கண்கள் கோபாவேஷம் கொண் டது. தனது வல்லமை எல்லாம் நஷ்டமடையப்போகிறதே, தன் செல்வாக்கு எல்லாம் அற்றுப்போகப்போகிறதே என்பதை நினைத் தக் கலங்கினான். பவுலின் போதனைக்கு ரோம அதிபதி இணங்கி விட்டால் எலிமாவின் காரியங்கள் எல்லாம் முடிவடைந்துவிடும். ஆகையால் இந்த மந்திரவித்தைக்காரன் சற்று முன்வந்து செர்கியு பவுலினுடைய மனதைக் கலைக்கிறதற்குப் பிரயாசப்பட்டான். பவுல் உடனே ஆவியில் வைராக்கியம் கொண்டு 'பிசாசின் மகனே, நீதிக் கெல்லாம் பகைஞனே, எல்லாக் கபடும் பொல்லாங்கும் நிறைந்த வனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓய மாட்டாயோ, இதோ இப்பொழுதே கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது. சிலகாலம் சூரியனைக் காணுமல் நீ குருடனுயிருப் பாய்' என்று சொன்னர். உடனே மந்திரவாதியாகிய எலிமா குருடனுகிவிட்டான். அவனுடைய கைகளால் அவன் தடவுகின் றதையும் அவனுடைய கண்கள் வீணுக அங்கும் இங்கும் திரும்பு கின்றதையும் அவர்கள் கண்டார்கள். அங்கிருந்த யாரோ ஒருவன் அவனுடைய கையைப்பிடித்து வெளியே கூட்டிக்கொண்டுபோ னன். இப்படியாகப் பவுல் தனது புதுவேலையில் ஜெயங்கொண் டார். செர்கியுபவுலினுடைய மனதையும் ஆவியையும் மயக்கப்

பிரயாசப்பட்ட இந்த மந்திரவித்தைக்காரனுடைய செல்வாக்கு எத் தனை மோசமானது என்பதைப் பவுல் கண்டார்.

தனது முதலாம் யுத்தத்தில் பவுல் மந்திரவித்தையைத் தோற் கடித்து கிறிஸ்துவினுடைய உத்தம போர்வீரனுக்கு உரிய வீரத் தரிசனத்தை ரோம அதிபதியானவன் காணும்படி செய்தார்.

13-ம் அத்தியாயம்

தாழ்நிலையினின்று மலைப்பிரதேசம் சென்றது

ஒருநாள் காலையில் பவுலும் பர்னபாவும் யோவான் மாற்கும் பாப்போ பட்டணத்தின் கீழ்த்திசையிலிருக்கின்ற துறைமுகத்துக்கு நடந்துவந்தார்கள். இத்துறைமுகத்தில் சில சிறு கப்பல்கள் அசைந் தாடிக்கொண்டு நின்றன. இக்கப்பல்களில் ஒன்றனது மேற்தட்டி லிருந்தவர்கள், அது பாய்விரித்தோடுவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தார்கள். இம்மூன்று பிரயாணிகளும் கப்பலில் ஏறினர்கள். மாலுமிகள் நங்கூரத்தை உயர இழுத்தார்கள். கப்பல் துறைமுகவாசல் கடந்து கடலிற்சென்றது. துறைமுகத்துக்கு வெளியே இருந்த மிக்க அபாயம் விளைக்கும் பாறையை வளைந்து சுற்றி விலகிச்சென்று வடமேற்றிசையை நோக்கிக் கப்பல் சென் றது. இரவும் பகலுமாக கப்பல் தண்டுவலித்துச் சென்றது. சிலிசி யாவுக்கு மேற்கேயிருக்கிற பம்பிலியா நாட்டுக் கடற்கரையிலே உள்ள பெர்கேபட்டணத்தை நோக்கி இக்கப்பல் சென்றது. கடற் காற்று வசதியாயிருந்ததால் விடியற்காலத்தில் இக்கப்பல் அத்தாலியா வளைகுடாக்கடலில் போய்ச்சேரும். விடியற்காலத்துப் பனி நீங் கினவுடனே தௌரஸ் பர்வதங்களின் சிகரங்களைச் சமபூமிக்கு அப்புறத்தே பவுல் காணக்கூடும். அந்த விரிகுடாக்கடலின் மத்தி யிலே கெஸ்ட்ரஸ் என்ற நதி சங்கமமானது. தர்சு பட்டணத் தைப்போலவே பெர்கே பட்டணமும் நதியின் முகத்துவாரத்தில் இராமல் சில மைல் தூரத்துக்கு மேலேயிருந்தது. கப்பல் அந் நதிக்கு எதிர்முகமாகச் செல்லும்பொழுது மாலுமிகள் திருப்புகளை இறக்கித் தண்டுவலித்தார்கள். இப்படி ஒருமணி நேரம் தண்டு வலித்தபின் அவர்கள் பெர்கேபட்டணத்துத் துறைமுகத்தை அடைந் தார்கள்.

பவுலும் அவருடைய கூட்டாளிகளும் இப்பட்டணத்துக்கு வந்த காலத்தில் இப்பட்டணத்து நாடகசாலைகளிலும் கூட ஒருவரு மில்லை. எனெனில் அக்காலத்தில் பெர்கேபட்டணத்தார் தங்கள் பட்டணத்தை விட்டுவிட்டுப் பக்கத்திலுள்ள மலைகளுக்குப் போய்

விட்டார்கள். தர்சுபட்டணத்திலும் கூட கோடைகாலத்தில் ஜனங்கள் இப்படிச் செய்யும் வழக்கம் உண்டு என்பது இப்போது பவுலின் ஞாபகத்துக்கு வந்தது. பெர்கேபட்டணத்தாருக்கு மலைகள் மிகப் பிரியம். மலைக்குப் பின்புறத்திலே தேவதைகளின் தேவ்டைக்காரியான தியானுஸுக்கென்று ஒரு அழகிய ஆலயத்தைக் கட்டியிருந்தார்கள்.

பவுல் கடலிலிருந்து பம்பிலியாநாட்டுக் கடற்கரையின் உஷ்ணத்தைச் சகிக்கவேண்டியிருந்தது. சாயந்தரத்தில் மஞ்சுமூட்டம் எழும்பினது. கொசுக்களும் ஈக்களும் எங்குபார்த்தாலும் இரைந்து கொண்டிருந்தன. சதுப்புநிலங்களில் தவளைகள் ஓயாமல் கத்திக் கொண்டேயிருந்தன. உஷ்ணம் தணியவும் ஒருவித விஷக்காற்று வீசினது. அங்கிதரித்திருந்த பவுலினுடைய சரீரமும் இக்காற்றினால் குளிர்கொண்டது.

வடக்கே அதிக உயரமாய் ஆகாசத்தை அளாவிநின்ற தௌரஸ் மலைத்தொடர், வடக்கேயிருந்து வீசிக்கொண்டிருந்த மனோரம்மியமும் சுத்தமுமான காற்றைத் தென்திசைக்கு வராதபடி தடுத்துப்போட்டது. சதுப்புநிலங்களிலுள்ள காய்ச்சல் பவுலைத் தொடர்ந்தது. பவுல் காய்ச்சல் வியாதியால் வருத்தப்பட்டார். இந்த இடத்திலிருந்த காய்ச்சலின் கொடூரம் மத்தியதரைக்கடலைச் சுற்றியுள்ள வேறெந்த இடத்திலும் கிடையாது. பெர்கேபட்டணமாகிய இந்த இடத்திற்தான் பவுல் காய்ச்சலாற் பீடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அவர் செய்யவேண்டிய தென்ன? காய்ச்சல் நாடாகிய பம்பிலியாதேசத்தில் தங்கியிருப்பதனால் ஜுரரோயின் கொடுமைகளுக்கு இரையாவதே யன்றித் தாம் அவ்விடத்தில் யாதொரு அனுகூலமான வேலையும் செய்யவே முடியாது. அப்படியானால் என்ன செய்கிறது? திரும்பிப்போய்விடலாம் என்றாலோ, பவுல் பர்னபா என்பவர்களுடைய மனதிற்கு இந்த எண்ணம் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர்களுக்கு முன்னே செங்குத்தான பர்வதத் தொடர்கள் இருந்தன. அவைகளுக்கு அப்புறத்தில் ரோம பட்டணங்களையும் ரோம ரஸ்தாவையும் உடையதும் சிறந்த சுத்தவாயு உடையதுமான பெரிய பீடபூமி இருந்தது.

பவுல் சீப்புருதீவிலே செர்கியுபவுல் என்னும் அதிபதியைக் குணப்படுத்தினபொழுது ரோமை வல்லமையைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தார். அப்படியானால் அநேவிதமான வேலையில் என் இன்னும் முன்னேறிச் செல்லலாகாது? இதைக்குறித்து அவர்கள் ஆலோசனைபண்ணித் தங்களுக்கு எதிரிலிருக்கும் அவ் வேலையில் பிரவேசிக்கத் தீர்மானித்தார்கள். யோவான் மாற்கு அவ்

வேலையிலுள்ள மோசத்துக்குப் பயந்து பின்னிட்டுத் திரும்பிச் சீரியா தேசத்துக்குக் கப்பல் ஏறிச் சென்றார்.

பவுலும் பர்னபாவும் பர்வதத்தின் அடியிலுள்ள சிறு மலைகளண்டைக்கு வந்தார்கள். பவுல் ஒரு கழுதையின்மேல் ஏறிச் சவாரி செய்தார். சில சமயங்களில் நடந்துபோகவும் பிரயாசப்படுவார். அடிக்கடி அவர் மலைகளிலுள்ள நீர்நிலைகளண்டை தங்கி அத்தண்ணீரை அள்ளிச்சாப்பிட்டுக் களைப்பாறுவார். அவர் தமது பாதங்களைக் கன்மலையில் மிதித்து தேவதாரு விருட்சங்கள் நிறைந்த மலைப் பிரதேசத்தைச் சேர்ந்த சுத்தவாயுவை உட்கொண்டபொழுது அவருக்குச் சிறிதுசிறிதாய்ப் புத்தியிர் உண்டானது. அவருடைய கால்கள் பெலன்கொண்டு, கண்கள் பிரகாசமடைந்தன. காய்ச்சலின் அபாயத்தை அவர்கள் ஒழித்துவிட்டார்கள். ஆனால் கள்ளர்களால் வரக்கூடிய மோசம் ஒன்று அவர்களுக்குமுன் இருந்தது. பிசிதிய மலைப்பிரதேசங்களிலே உள்ள காடுகளில் தேவதாரு விருட்சங்களுக்குக் கீழேயிருந்த மலைக்குகைகளிலே அநேக கொடிய கள்ளர்கள் ஒளித்திருந்தார்கள். இத்திருடர்கள் மலைச்சார்புகளில் பதிவிருந்து, தருணம் வாய்க்கும்போது வெள்ளாடுகளைப்போலக் குதித்தெழுந்து அதற்குமேல் நிலங்களிலுள்ள பட்டணங்களுக்குச் செல்லும் பாதைகள் வழியாய்ப் பாய்ந்து அவர்களை வழிப்பறிசெய்து கொள்ளையடிப்பார்கள்.

Translation of the Bible into Tamil

By the Rev. L. P. Larsen

வேத மொழிபெயர்ப்பு

தமிழ்ப் பாஷையில் வழங்கும் வேத மொழிபெயர்ப்புக்களைத் திருத்துவது அவசியம் என்று சொல்லுகிறவர்கள், மொழிபெயர்ப்பைச் செய்வதாவது திருத்துவதாவது இலேசிலே நடப்பிக்கும் காரியம் என்று நினைக்கமாட்டார்கள்.

ஒரு வேத மொழிபெயர்ப்பை வாசித்து வாசித்துப் பழகின கிறிஸ்தவர்களில் அநேகர் புதிய மொழிபெயர்ப்பு வேண்டாம் என்று இருப்பார்கள். வேதத்தில் கண்டு பழகின சொற்களும் வாக்கியங்களும் உத்தம பொருளோடு சம்பந்தப்பட்டதினால் நடை பதம் வாக்கியங்களும் உத்தமம் என்று அநேகர் நினைக்கிறது ஆச்சரியமா? அப்படி நினைக்கிறவர்கள் வேதத்தில் பழகின நடை பதம் வாக்கியங்களையும் மாற்றவேண்டாம் என்று ஆட்சேபிப்பார்கள். இது

எப்பாஷைக்காரருக்குள்ளும் வரும் ஆட்சேபனை. 'ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான்' என்று இரட்சகர் சொன்னது இதற்கும் பொருந்தும்.

மொழிபெயர்ப்பைத் திருத்துபவர்கள் வாசிக்கிறவர்களைத் திருப்தி படுத்துவது எப்படிக் கஷ்டமோ அப்படி திருத்துகிறவர்கள் தாங்களே திருப்திபடுவதும் கஷ்டம். மூலபாஷையிலுள்ள அர்த்தமும் அலங்காரமும் மொழிபெயர்ப்பை வாசிக்கிறவர்களுக்குத் தெளிவாகும்படி எழுதுவது காரியம். இது சுலுவான வேலையல்ல. மற்றவர்கள் செய்த வேலையில் குறைவைக் காண்கிறது வேறு, அதே வேலையைக் குறைவில்லாமல் செய்கிறது வேறு. குறைவில்லாத படிக்கு மொழிபெயர்ப்பைத் திருத்துவது அசாத்தியம் என்று இரு பாஷைகளையும் நன்றாய் அறிந்தவர்கள் சொல்லுவார்கள்.

இப்படியிருக்கத் தமிழ் வேத மொழிபெயர்ப்பை மாற்றுவதேன் என்று கேட்கிறவர்களுக்குத் தமிழ்பாஷைக்காரர் தெய்வ சத்தியத்தை அறிவதற்குத் தடையான குறைவுகள் வேத மொழிபெயர்ப்பில் உண்டு, அந்தக் குறைவுகளை நீக்க முயற்சியெடுக்கிறது நமது கடமை என்பதே விடை.

அப்பேர்ப்பட்ட குறைவுகள் உண்டோவென்று சமுசயிக்கிறவர்கள் சிலர் அல்ல. வேத மொழிபெயர்ப்பு கிறிஸ்தவர்களுக்கே செய்யப்படுகிறது என்றும் தமிழ்க் கிறிஸ்தவர்களோவெனில் தமிழ் மொழிபெயர்ப்பில் தடையான குறைவுகளைக் காண்பதில்லை என்றும் சாதித்துத் தமிழ் வேத மொழிபெயர்ப்பைத் திருத்தும்படியான ஏற்பாடுகளும் முயற்சிகளும் அனாவசியம் என்று இருக்கிறார்கள்.

தமிழ் மொழிபெயர்ப்பைத் திருத்துவது அவசியம் என்கிறதற்கு எல்லாருக்கும் விளங்கும் விசேஷித்த நியாயங்கள் மூன்றே.

1. சில வாக்கியங்களில் மூலபாஷையில் உள்ள அர்த்தம் தமிழில் காணுதபடிக்கு மொழிபெயர்ப்பு தவறிப்போயிற்று. இதற்கு மத்தேயு ஏழாம் அதிகாரத்தின் இருபத்தோராம் வசனம் ஒரு உதாரணம். இங்கிலீஷ் மொழிபெயர்ப்பை ஒத்துப்பார்த்தால் தமிழில் உள்ள தப்பு விளங்கும். இவ்வகையான வாக்கியங்கள் அநேகம் இல்லை என்றாலும் உள்ளவைகளைப் பரீட்சித்துத் திருத்துவது அவசியம் என்கிறதற்கு ஆட்சேபனை சொல்லுகிறவர் ஒருவரும் இருக்க மாட்டார்.

2. தமிழ் வேத மொழிபெயர்ப்பிலுள்ள பாஷை நடைக்கும் தமிழர் எழுதின புத்தகங்களில் காணும் நடைக்கும் அதிக வித்தியாசம்.

3. மத போதனைக்கு ஆதாரமான அநேக பதங்கள் தமிழ் பாஷைக்காரருக்குத் தெளிவான அர்த்தமுள்ளவைகள் அல்ல.

இரண்டாம் விஷயத்தையும் மூன்றாம் விஷயத்தையும் விரித்துரைக்கப்போகிறோம். அப்படிச் செய்வதோடுகூட வேத மொழிபெயர்ப்பு கிறிஸ்தவர்களுக்குத் திருப்திகரமானால் போதுமோ என்கிற விஷயத்தையும் கொஞ்சம் விசாரித்து யோசிக்கிறது அவசியமாகும்.

(இன்னும் வரும்)

The Story of a Mother

Or 'God's Will is Best'

Translated from Hans Andersen's stories by Mrs. C. E. Phillips

ஒரு தாயின் சரித்திரம்

'அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்.' சங். 106[15].

'சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.' மத். 26[39].

ஒரு தாய் ஒருநாள் தன் வியாதியுள்ள பிள்ளையின் பக்கத்திலே உட்கார்ந்திருந்தாள். பிள்ளையைப்பற்றி அவளுக்குச் சொல்லிமுடியாத கவலையும் துக்கமும் இருந்தது.

பிள்ளை கண்மூடிக்கொண்டு சில சில வேளைகளில் பெருமூச்சுவிட்டது. அது அப்படி மூச்சுவிட்டபொழுது தாய் கண்ணீரோடு அதினுடைய முகத்தை உற்றுப்பார்த்தாள். யாரோ கதவைத் தட்டின சத்தம் கேட்டது. விருத்தாப்பியமுள்ள ஒரு மனுஷன் உள்ளே வந்தான். அவனைப் பார்த்தவுடனே அவன் அதிக ஏழை என்று தெரிந்தது. ஒரு குதிரைக்கம்பளி கட்டியிருந்தான். எங்கும் ஹிமம் என்னும் பனியும் நீர்க்கட்டியும் இருந்ததினாலே அது குளிருக்கு அதிக அவசியம். குளிர்காற்று அடித்து ஒரு கூரியகத்தியைப் போல ஜனங்களுடைய முகங்களின்மேல் விழுந்தது. அந்த ஏழைக் கிழவன் குளிரினாலே நடுங்கினான்.

பிள்ளை கொஞ்சநேரம் தூங்கினதென்று தாய் பார்த்து எழுந்து அந்த ஏழைக்குக் காப்பி காய்ச்சிக்கொடுத்தாள். அந்தக் கிழவன் பிள்ளையின் தொட்டிலை ஆட்டினான். காப்பி காய்ச்சிக்கொடுத்தபின் தாய் மறுபடியும் பிள்ளை அண்டையில் உட்கார்ந்து அதினுடைய

சிறு கையைப் பிடித்து அந்த மனுஷனைப் பார்த்து 'ஐயா! என் பிள்ளை என்னைவிட்டுப் போய்விடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இரக்கமுள்ள கடவுள் அவனை என்னைவிட்டு எடுக்கமாட்டார்' என்றாள். அந்த மனுஷன்தானே இயமன் என்று அந்தத் தாய்க்குத் தெரியாது. அவள் அப்படிக் கேட்டதற்கு இயமன் சைகை காட்டினான். ஆனால் அதின் அர்த்தம் தாய்க்குத் தெரியவில்லை. மறுபடியும் அழுது கண்மூடினாள். அப்பொழுது மூன்று நாட்களாக அவளுக்குத் தூக்கமில்லாததினால் நித்திரை மயக்கம் வந்தது. சற்று தூங்கினாள். தீடீரென்று நடுங்கி விழித்து அறையைச் சுற்றிப்பார்த்தாள். கிழவனில்லை பிள்ளையுமில்லை என்று கண்டு அந்த ஏழைத்தாய் பிள்ளையினுடைய பெயரைக் கூப்பிட்டு வெளியே ஓடினாள். நீண்டதும் கறுப்புநிறமுள்ளதுமான வஸ்திரங்களைத் தரித்த ஒரு ஸ்திரீ இருட்டிலேயும் உறைந்த மழையிலேயும் உட்கார்ந்திருந்ததைக் கண்டாள். அந்த ஸ்திரீ தாயைப் பார்த்து 'உன் வீட்டுக்கு வந்தவன் இயமன். உன்னுடைய பிள்ளையை அவன் கொண்டுபோய்விட்டான். காற்றைப்போல வேகமாய் ஓடுகிறான். அவன் கொண்டு போகிறவர்களைத் திரும்பக் கொண்டு வர மாட்டான்' என்றாள். 'அவன் போன வழி எது என்று சொன்னால் போதும். எப்படியாவது நான் அவனைக் கண்டுபிடிப்பேன்' என்று தாய் சொன்னாள். 'வழி எனக்குத் தெரியும். ஆனால் நான் அதைச் சொல்லவேண்டுமென்றால் நீ உன் பிள்ளைக்குப் பாடிக்காட்டின பாட்டெல்லாம் எனக்குப் பாடிக்காட்டவேண்டும், அப்பாட்டுக்கள் எனக்கு நிரம்பப்பிரியம். என் பெயர் இருள்' என்று கறுப்பு உடுப்பணிந்த அந்த ஸ்திரீ சொன்னாள். 'நான் பாடுவேன். ஒவ்வொரு பாட்டையும் நான் பாடுவேன். ஆனால் இப்பொழுது என்னைத் தாமதப்படுத்தவேண்டாம். என் பிள்ளையை நான் கண்டுபிடிக்கவேண்டும்' என்று தாய் சொன்னாள். இதைக் கேட்டு அந்த ஸ்திரீ பேசாதிருந்தாள். அப்பொழுது அந்தத் தாய் தன் மார்பை அடித்து அதிகக் கண்ணீரோடு அந்தப் பாட்டுக்களைப் பாடத் தொடங்கினாள். அவள் பாடினபிறகு இருளம்மாள் 'வலது பக்கமாய்த் திரும்பி அங்கேயிருக்கிற காட்டுக்குள்ளே போ. இயமன் உன் குழந்தையை அங்கே கொண்டுபோகக் கண்டேன்' என்றாள். தாய் காட்டுக்குள்ளே போய் நாற்சந்தி ஒன்றைக் கண்டு எந்த வழியாகப் போகவேண்டுமென்று தெரியாமல் அங்குள்ள ஒரு முட்செடியைப் பார்த்து வழிகேட்டாள்.

அக்காலம் வறளைப் பருவமாய் இருந்தபடியினாலே அந்த முட்செடியிற் பூக்களாவது இலைகளாவதில்லை. குளிரினால் எல்லாம்

உதிர்ந்துபோயிருந்தது. தாய் கேட்டதற்கு அது 'நான் குளிரினால் சாகிறேன். நீ என்னை உன் மார்பில் அணைத்துக்கொண்டு எனக்கு அனலைக் கொடுத்தால்தான் இயமன் போனவழியைச் சொல்லுவேன்' என்றது. அப்பொழுது அந்தத் தாய் அந்த முட்செடியைக் கெட்டியாய் மார்பில் அணைத்துக்கொண்டாள். முட்கள் இரத்தம் வரும்படி அவளைக் குத்தின. செடியோ தாயின் இருதயத்திலிருந்து வந்த அனலினால் துளிர்த்து மலர்த்தது. அப்பொழுது அந்த முட்செடி வழிகாட்டினது. அதற்குப் பிற்பாடு தாய் ஒரு பெரிய குளத்தண்டை வந்தாள். அதைத் தாண்டிப்போகப் படவு தேடினாள். ஆனால் படவு அகப்படவில்லை. வேறே வழி தோன்றுமல் தாய் அக்குளத்தின் தண்ணீர் எல்லாவற்றையும் குடிக்கப் பிரயாசப்பட்டாள். அது மனுஷராலே கூடாத காரியம். ஆயினும் தன் பிள்ளை மேலே இருந்த ஆசையினாலும் அதைப்பற்றிய விசனத்தினாலும் 'எனக்கு உதவிசெய்யக் கடவுள் ஓர் அற்புதத்தைச் செய்து இந்தத் தண்ணீரைக் குடிக்கச் சக்தியைக் கொடுப்பார்' என்று ஓர் யோசனை தாய்க்கு உண்டானது, அதைக்கண்ட அக்குளம் :—'இந்த வேலை உன்னால் ஆகாது. நாம் ஒரு ஒப்பந்தம் செய்தால் நல்லது. முத்துக்கள் எனக்கு அதிகப் பிரியம். உன்னுடைய கண்களைப் பார்த்தால் அவைகள் விலையுயர்ந்த முத்துக்களைப்போலத் தோன்றுகின்றன. உன் கண்கள் என் ஜலத்திலே விழுமட்டும் நீ கண்ணீர் விடுவாயானால் இயமனுடைய தோட்டத்துக்கு வழிகாட்டுவேன். அத் தோட்டத்திலே இயமன் செடிகளையும் மரங்களையும் வளர்க்கிறான். அதிலுள்ள ஒவ்வொரு செடியும் மரமும் ஒரு மனுஷ ஜீவன்' என்றது. 'என் பிள்ளையைக் கண்டுபிடிக்க என் உயிரைக்கூடக் கொடுப்பேன்' என்று சொல்லித் தாய் கண்ணீர்விட விட கடைசியிலே அவள் இரண்டு கண்களும் குளத்திலே விழுந்து இரண்டு விலையுயர்ந்த முத்துக்கள் ஆயின.

அப்பொழுது அக்குளம் அவளைத் தூக்கி அக்கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது. அங்கே விஸ்தாரமுள்ள ஒரு தோட்டமிருந்தது. ஆனால் அந்த ஏழைத் தாய் அந்தத் தோட்டத்தைப் பார்க்கவில்லை. அவளுடைய கண்கள் குளத்திலே இருந்தன 'இயமன் எங்கே? என் பிள்ளை எங்கே?' என்று புலம்பினாள். அங்கே செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்த வயது சென்ற ஒரு ஸ்திரீ 'இயமன் இன்னும் வரவில்லை. இங்கே வர யார் வழிகாட்டினது? யார் உதவிசெய்தது?' என்று கேட்டாள். அதற்கு அவள் 'கடவுள் ஒத்தாசைசெய்தார், அவர் இரக்கமுள்ளவர். என் சிறு பிள்ளையை எங்கே கண்டுபிடிப்பேன்?'

என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ 'உன் பிள்ளை யார் என்று எனக்குத் தெரியாது. நீ கண் தெரியாதவள். இன்றைக்கு அநேக செடிகளும் மரங்களும் வாடிப்போயிருக்கின்றன. இயமன் வந்து அவைகளைப் பிடுங்கிப் பரலோகத்தில் நடுவான். இங்கேயுள்ள ஒவ்வொரு மரமும் புஷ்பமும் ஒவ்வொரு ஜீவாத்துமாவென்று உனக்குத் தெரியும் அல்லவா? இந்த மரங்களும் புஷ்பங்களும் சாதாரண மரங்களைப்போலவும் புஷ்பங்களைப்போலவும் தோன்றினும் அவைகளுக்குத் துடிக்கின்ற இருதயங்கள் உண்டு. ஒருவேளை நீ உன் பிள்ளையின் செடியினது இருதயத்தின் துடிப்பைக் கேட்டால், அது உனக்குத் தெரியும். ஆனால் நீ செய்யவேண்டியதை நான் சொன்னால் நீ எனக்கு என்ன கொடுப்பாய்?' என்றாள். 'கொடுக்க என்னிடத்தில் ஒன்றுமில்லை, ஆனால் உனக்காக உலகத்தின் எல்லைகள் வரையும் போவேன். என்ன செய்யச்சொன்னாலும் செய்வேன்' என்று விசனத்திலே மூழ்கின அந்த எழைத்தாய் சொன்னாள். 'நீ எங்கும் போக அவசியமில்லை. உன் கரிய தலைமயிரை எனக்குக் கொடுத்தால் போதும்' என்று அந்த விருத்தாப்பியமுள்ள ஸ்திரீ சொன்னாள். அதற்குத் தாய் 'வெகு சந்தோஷத்தோடு கொடுக்கிறேன்' என்று சொல்லித் தன் அழகிய தலைமயிரைக் கொடுத்து அதற்குப் பதிலாக அந்த ஸ்திரீயின் நரைத்த மயிரைப் பெற்றுக்கொண்டாள். அப்பொழுது இருவரும் இயமனுடைய தோட்டத்தில் பிரவேசித்தார்கள். அங்கே எல்லாவிதச் செடிகளும் புஷ்பங்களும் மரங்களும் ராஜமாய் முளைத்திருந்தன. உயர்ந்த தெங்கு பனை ஈந்து முதலிய விருக்ஷங்களும் வாழை மரங்களும் இருந்தன. அவைகளின் அடியிலே நல்ல வாசனையுள்ள புல் பூண்டுகளும் காணப்பட்டன. ஒவ்வொரு செடியும் புஷ்பமும் பூலோகத்திலுள்ள ஒரு மனுஷ ஜீவனைக் குறித்தது. ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் இருந்தது. உலகம் எங்குமுள்ள ஒவ்வொரு மனுஷனையும் குறிக்க ஒவ்வொரு செடி இருந்தது.

தூக்கமுள்ள இந்தத் தாய் ஒவ்வொரு செடியண்டைபோய் அதின் இருதயத்துடிப்பை உற்றுக்கேட்டாள். ஒரு கோடி செடிகளுக்குள்ளே தன் சொந்த பிள்ளையின் செடியைக் கண்டுபிடித்து 'இதுதான் என் அருமைப்பிள்ளை! என் கண்மணி!' என்று கண்ணீரோடு சொன்னாள். அவள் காட்டின செடி வாடிப்போயிருந்த ஒரு லீலிச் செடி. 'அந்தச் செடியைத் தொடாதே, இங்கே இரு. இயமன் இப்போது வருவான். அவன் வரும்பொழுது உன்னுடைய பிள்ளையை உனக்குத் திரும்பக்கொடுக்காவிட்டால் நீ இன்னொரு பிள்ளையின் செடியைப் பிடுங்கிக்கொண்டுபோவதாக அவனைப் பயமுறுத்து.

அப்படிச்செய்தால் அவன் பயப்படுவான். எனென்றால் ஒவ்வொரு செடியைப்பற்றியும் அவன் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். கடவுள் உத்தரவு கொடுத்தால்தான் அவன் செடிகளைப் பிடுங்கக்கூடும்' என்று அந்த ஸ்திரீ சொன்னாள். அகோரமான கொடிய காற்று அத்தோட்டத்திலே அடித்தது. அதினாலே இயமன் வந்ததாகக் கண் தெரியாத அந்தத் தாய் அறிந்துகொண்டாள். இயமன் அவளைப் பார்த்து, 'இங்கே வர வழி எப்படி உனக்குத் தெரிந்தது? நீ எப்படி எனக்கு முன்னமே வந்தாய்?' என்று கேட்டான். 'என் பிள்ளையைக் கண்டுபிடிக்க எனக்கு இருக்கிற ஆவலினாலே எல்லாக் கஷ்டங்களையும் அபாயங்களையும் மேற்கொண்டு வந்தேன்' என்றாள்.

அப்பொழுது இயமன் அவளுடைய பிள்ளையின் செடியைப் பிடுங்கத் தன் கையை நீட்டினான். தாய் அவன் அதைத் தொடாத படிக்கு அந்தச் செடியைத் தன் கையால் மறைத்தாள். அப்பொழுது இயமன் அவளுடைய கைமேலே வீழ்ந்தான். உடனே கை சக்தியற்றுப்போயிற்று. 'நீ என்னை மேற்கொள்ள முடியாது' என்று இயமன் சொன்னான். அதற்கு அவள் 'அது மெய்தான், ஆயினும் இரக்கமுள்ள கடவுள் உமக்கு மேலானவர்' என்றாள்.

'நான் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறேன். நான் அவருடைய தோட்டக்காரன். ஆகையால் அவருடைய செடிகளையும் புஷ்பங்களையும் பிடுங்கிப் பரலோகத்தின் தோட்டத்திலே நடுகிறேன். அவைகள் அங்கே எப்படி வளருகின்றன என்பதைப்பற்றியும் அத்தோட்டம் எப்படியிருக்கிறது என்பதைப்பற்றியும் நான் உனக்குச் சொல்லக்கூடாது' என்று இயமன் சொன்னான்.

'என் பிள்ளையை எனக்குக் கொடுத்தருளும், என் பிள்ளையைக் கொடுத்தருளும். இல்லாவிட்டால் இந்தச் செடிகள் எல்லாவற்றையும் பிடுங்குவேன்' என்று தாய் விசனத்தோடு புலம்பினாள். 'அவைகளைத் தொடாதே, உனக்கு இருக்கிற தூக்கமும் வேதனையும் இன்னொரு தாய்க்கு வருவிக்க விரும்புகிறாயா?' என்று இயமன் கேட்டான். உடனே அந்தத் தாய் செடிகளை விட்டுவிட்டாள். 'இதோ உன் கண்களைக் குளத்திலிருந்து எடுத்தேன். அவைகளைப் பெற்றுக்கொள். இங்கே இருக்கிற ஆழமுள்ள கிணற்றிலே பார். நீ பிடுங்க விரும்பின செடிகளுக்கு வரும் காரியங்களைக் காட்டுவேன். அவைகள் குறிக்கிற மனுஷர்களுக்கு நடக்கும் காரியங்களைக் காண்பாய். அப்போது நீ செய்ய விரும்பினது உனக்குத் தெளிவாய்த் தெரியும்' என்று இயமன் சொன்னான்.

அப்பொழுது தாய் கிணற்றிற் பார்த்தாள். ஒரு கண்ணாடியில் காண்கிறதைப்போல உலகத்திலே அந்த இரண்டு செடிகளுக்கு

கடக்கவேண்டிய காரியங்களைக் கண்டாள். ஒரு செடிக்கோ எல்லாப் பாக்கியங்களும் சந்தோஷங்களும் ஆசீர்வாதங்களும் சேர்ந்தன. மற்றச் செடிக்கோ சொல்லிமுடியாத துக்கமும் சஞ்சலமும் வறுமையும் வந்தன. 'இரண்டுக்கும் கடவுளுடைய சித்தத்தின்பிரகாரம் நடக்கிறது' என்று இயமன் சொன்னான். 'சபிக்கப்பட்ட செடி யார்? ஆசீர்வதிக்கப்பட்ட செடி யார்?' என்று தாய் கேட்டதற்கு இயமன் 'நான் சொல்லக்கூடாது. ஆனால் இரண்டு செடிகளில் ஒரு செடி உன் பிள்ளைதான். நான் அவ்வளவுதான் சொல்லக்கூடும்' என்று சொன்னான். அப்பொழுது தாய் பயத்தோடும் துக்கத்தோடும் 'எந்தச் செடி என் பிள்ளை? சொல்லும். சபிக்கப்பட்ட செடிக்கு விடுதலைகொடும். கடவுளுடைய இராஜ்யத்துக்குக் கொண்டுபோம். என் கண்ணீரையும் என் வேண்டுதலையும் மறந்துபோம். நான் சொன்னதையும் செய்ததையும் கவனிக்கவேண்டாம்' என்றான். அதற்கு இயமன், 'நீ சொல்வது எனக்கு விளங்குகிறதில்லை. உன் பிள்ளையைத்திரும்ப உனக்குக் கொடுக்கவேண்டுமா? நீ இப்பொழுது வரக்கூடாத ஒரு இடத்துக்குக் கொண்டுபோகவேண்டுமா?' என்றான். அப்பொழுது அந்தத் தாய் தன் மார்பை அடித்துச் சாஷ்டாங்கமாக விழுந்து, கடவுளை நோக்கி 'நான் உம்முடைய சித்தத்துக்கு விரோதமாகவும் என் பிள்ளையின் நன்மைக்கு விரோதமாகவும் உம்மை வேண்டிக்கொள்ளும்பொழுது என்னைக் கேளாதேயும் கேளாதேயும். உம்முடைய சித்தம் என் பாக்கியம்' என்று பிரார்த்தனை செய்தாள். அவள் அப்படிப் பிரார்த்திக்க இயமன் அவளுடைய பிள்ளையைக் கர்த்தருடைய இராஜ்யத்துக்குக் கொண்டுபோனான்.

Why did Jesus die?

Translated from a chapter in Rev. W. E. Tomlinson's 'King of Truth' by Mr. J. A. Jacob

இயேசு ஏன் மரித்தார்?

['சத்தியத்தின் ராஜா' என்னும் பெயரால் கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை ரெவ. W. E. தாம்லின்சன் ஐயர், கன்னட பாஷையிலும் இங்கிலீஷ் பாஷையிலும் பள்ளிப்பிள்ளைகளுக்காக எழுதியிருக்கிறார். 'இயேசு ஏன் மரித்தார்?' என்னும் விஷயம் அப்புஸ்தகத்தில் ஐம்பதாம் அதிகாரம்.]

யூதரின் இருதயக்கடினமும், அகந்தையும், மதவைராக்கியமும், தன்னயமும், துரோகமும், கோழைத்தனமும், இயேசுவின் மரணத்திற்கு முக்கிய காரணங்களாயிருந்தாலும், அவை எல்லாவற்றிற்கும்

மூலகாரணம் பாவமே. இவ்வுலகத்திலும் நமக்குள்ளும் காணப்படும் அதே மாதிரி பாவமே, இயேசுவை மரணத்துக்குள்ளாக்கிற்று.

இயேசு ஏன் தம்மை ரட்சித்துக்கொள்ளவில்லை?

'அவர் என் மரிக்கவேண்டும்? அவர் அநேக அற்புதங்களைச் செய்திருந்தார். பிணியாளிகளைச் சுகமாக்கி, மரித்தோரை உயிரோடெழுப்பியிருந்தார். பின்னேயேன் சத்துருக்கள் அவருக்கு விரோதமாகக் கூட்டங்கூடும்போது, அவர் தம்மைத் தப்பித்துக்கொள்ளக் கூடாது? தூரியோதனனைப்போல் என் அவர் தமது வல்லமையால் ஒடி ஒளித்துக்கொள்ளவில்லை? தோட்டத்தில் அவரைப் பிடிக்க வரும்போது, அவர் அரூபியாகி ஜனங்கள் மத்தியிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடாதோ? என் அவர் வானத்திலிருந்து ஒரு தூதர் சேனையைக் கூப்பிட்டு தமது சத்துருக்களை சங்கரிக்கவில்லை? அவர் மெய்யாகவே கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், சத்தியாத்தின் ராஜாவானால் என் மரித்தார்? ஆசாரியரும் பரிசேயரும் அவர் சிலுவையில் தொங்கும்போது அவரைப் பரிகாசம்பண்ணி 'மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள முடியாது' என்று இகழ்ச்சியாய்ப் பேசினார்கள். அவர் தம்மை இரட்சித்துக்கொள்ளாததற்குக் காரணமென்ன?

அவர் விரும்பியிருந்தாரானால் தம்மை இரட்சித்துக்கொள்ள முடியும். யவீருவின் வீட்டில் மரணத்தின்மேல் வெற்றிகொண்டவர், சிலுவையின் மரணத்தையும் ஜெயிக்கக்கூடும். ஆனால் அவர் அப்படிச் செய்யும்படியாய் விரும்பவில்லை. ஆணிகளல்ல, அவரைச் சிலுவையில் மாட்டினது: அவருடைய சொந்த சித்தமே. தம்மை இரட்சித்துக்கொள்ள விரும்பாததேன்? அவர் என் மரித்தார்?

சிலுவை பாவத்தின் அகோரத்தைக் காட்டுகிறது.

மனிதரைத் தங்கள் பாவங்களிலிருந்து கடவுளுக்கு நேரே திருப்பும்படியாய் இயேசு மரித்தார். அவர் பிரசங்கம்பண்ணும் ஆரம்பத்தில் சொன்னதாவது:—'மனந்திரும்புங்கள். பாவத்தை வெறுத்து, அதை விட்டுவிடுங்கள்: உங்கள் மனம் மாறினவர்களாய் கடவுளிடத்தில் திரும்புங்கள்.' ஆனால் மனம் மாறுவது மனிதருக்கு வருத்தம். அவர்கள் பலமுறையும் பாவஞ் செய்தபடியால் தங்கள் இருதயம் கடினப்பட்டு மனந்திரும்புதல் கூடாதகாரியமாய்ப் போய்விட்டது. இதற்காகவே இயேசு மரித்தார். யூதருக்கும், பூலோகத்திலுள்ள எல்லா மனிதருக்கும் பாவத்தின் அகோரத்தைக் காட்டி மனந்திரும்பப்பண்ணும்படி அவர் மரித்தார். பாவத்தின் அகோரத்தை மனிதர்

சரியாய் உணரவில்லை. பெருமையும், மாயமும், பொறுமையும், இன்னும் பலவித பாவங்களும் சிறிய பாவங்கள்தானென்று நினைத்தார்கள். ஆனால் இவைகள் சிறிய பாவங்களல்ல. பாவம் இலேசான காரியமல்ல, அகந்தையாகிய பாவம், அபிலாசையாகிய பாவம், பொறுமையாகிய பாவம், கோழைத்தனமாகிய பாவம்— இப்பாவங்களின் கொடுமை, பாவமற்ற இயேசுவைக் கொன்றது. சோக்ரடீஸ் என்பவருடைய வார்த்தையைக் கவனியுங்கள்: 'பாவமற்ற ஒருவர், இப்பாவம் நிறைந்த உலகத்தில் வந்தால், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள்.' பாவத்தின் பயங்கரத்தை இது காட்டவில்லையா? பாவம் எவ்வளவு பயங்கரம்! பாவத்தின் கொடுமை, தர்மராஜனாகிய இயேசு இவ்வுலகத்தில் வந்தபோது, அவரை மரணத்திற்குட்படுத்திற்று.

மேலும், கடவுள் பாவத்தைப்பற்றி என்ன நினைக்கிறார் என்று சிலுவை போதிக்கிறது. இயேசுவைப்போலவே கடவுளும், பாவத்தைப் பகைக்கிறார். இயேசு பாவத்தோடு சம்பந்தப்படுவதைப்பார்க்கிலும் மரணத்தைச் சகித்தார். மாயம், பெருமை, அபிலாசை, பொறுமை முதலிய எல்லாச் சத்துருக்களின் பாவங்களும் அவர் மேல் வந்து அவரைக் கொன்றது. ஏன்? தமது மரணத்தால் பாவத்தின் கொடுமையையும், கடவுள் பாவத்தைப் பகைக்கிறதையும் காட்டினார். மனந்திரும்பிப் பாவத்தை விட்டுவிடுவதுவரைக்கும்: ஆனால் பாவம், பாவமற்ற இயேசுவைக் கொன்றது என்று அறியும்போது மனிதன் பாவத்தில் நிலைத்திருப்பானே? பாவம், தன்னிடத்திலிருக்கும் பாவத்தன்மையே இயேசுவை மரணத்துக்குள்ளாக்கிற்று என்று காணும்போது பாவத்தை அரோசித்து அதை முற்றிலும் விட்டுவிடமாட்டானே? இயேசுவின் சிலுவை மரணம் செய்வது இதுவே. மனிதருக்கு மனமாறுதலைத் தருகிறது; மனிதரின் கடினமான இருதயங்களை உடைக்கிறது; மனிதரின் சுபாவத்தை முற்றிலும் மாற்றுகிறது. இயேசு மரித்ததால், அவரை மரணத்துக்குள்ளாக்கின பாவத்தை அவர்கள் பகைக்கிறார்கள். பாவத்தைவிட்டு, கடவுளிடத்தில் திரும்பி, பாவமன்னிப்புக் கேட்டு, அதைப் பெற்று ஜீவிக்கிறார்கள்.

ஆகவே இயேசு மரித்தது, ஆதரவற்றதாலல்ல, பாவத்தின் கொடுமையைத் தமது மரணத்தால் காட்டவே. பாவத்திலிருந்து மனிதரைக் கடவுளிடத்தில் திருப்ப அவர் மரித்தார்.

சிலுவை கடவுளின் அன்பைக் காட்டுகிறது.

இயேசு சிலுவையிலறையுண்டு மரித்தது கடவுளின் அன்பையும் காட்டுகிறதல்லவா? சிலுவையிலிருந்து பாவத்தின் அகோரத்தைக்

கண்டோம். இயேசுவைப்போலவே கடவுளும் பாவத்தை அரோசிக்கிறார். இயேசுவைப்போலவே கடவுளும் மனிதரை நேசிக்கிறார்.

பாவிகள்மேல் இயேசு வைத்த அன்பை அவருடைய ஜீவியத்தில் பலமுறையும் பார்க்கிறோம். அவருடைய ஞானஸ்நானத்தில், பாவிகள்மேல் அவர் வைத்த அன்பையும் கவலையையும் தண்ணீரில் அவர் களோடே இறங்கி, அவர்களோடே ஞானஸ்நானம் பெற்று, இப்படியாய் பரிசுத்தரான கிறிஸ்து, பாவிகளின் பக்கத்தில் ஒருவராக நின்றார். அவருடைய சகோதரரான பாவ மனுஷரிடம் ஐக்கியமாகி, அவர்களுடைய பாவத்தைத் தமதுமேல் எடுத்துக்கொண்டார். சிலுவையிலும் அவர் அப்படியே செய்தார். மனிதன் பாவஞ் செய்தான்; பாவமற்ற இயேசு மனிதனின் பாவத்துக்காக சஞ்சலப்பட்டார். மனிதன் பாவஞ் செய்தான்; இயேசுவே மனிதனுடைய பாவம் தமதுமேல் வரச் சம்மதித்து, மனிதனுக்காகக் கஷ்டப்பட்டு, பாவத்தால் மனிதனுக்கு வரும் எந்த நோவையும்விட அதிகமாய் அவர் சகித்தார். மனிதனுடைய பாவத்தைத் தமதுமேல் எடுத்துக்கொண்டு, பாவமற்ற அவர் பாவிகளுக்காக மரித்தார். பாவிகள் தங்கள் பாவத்திலிருந்து மீட்கப்படவே அவர் மரித்தார். இயேசு, துஷ்டரை, பாவிகளை, தமது சத்துருக்களை, தமது ஜீவனைவிட அதிகமாய் நேசித்தார். கெட்டுப்போன மனிதரை நல்லவர்களாக்கும்படி தமது ஜீவனையும் கொடுக்க மனதாயிருந்தார். 'நாம் பாவமன்னிப்புப் பெறும்படி அவர் மரித்தார், நம்மை நல்லவர்களாக்கும்படி அவர் மரித்தார்.' அது பூரண அன்பல்லவோ? அது தெய்வீக அன்பல்லவோ? கடவுளின் அன்பும், இயேசு சிலுவையில் காட்டின அன்பைப்போன்றதாயிருத்தல்வேண்டாமோ? இயேசுவின் சிலுவை மரணம், பாவத்தின் அகோரத்தின் ஆழத்தைக் காட்டும் குறி. ஒருவன், இயேசு சிலுவை மரணத்தால் அவன்மேல் வைத்த அன்பைப்போல், கடவுளும் அவனை நேசிக்கிறார் என்று காணும்போது பாவஞ்செய்ய எத்தனிக்கமாட்டான். கடவுளுக்குக் கீழ்ப்படியாமை காட்டி அவரைத் துக்கப்படுத்துவது அவனுக்கு அசாத்தியம். கடவுளுக்குக் கீழ்ப்படிந்து அவருக்குத் தொண்டுசெய்ய நாடுவான். கடவுளின் நேசம் தன்மேல், மரித்த இரட்சகபெருமானாகிய இயேசுவின் அன்பைப்போல் பூரணமாயிருக்கிறதென்று அவன் அறியும்போது, அவன் கடவுளை மெய்யாய் நேசித்து அவருடைய கட்டளைகளை எந்நாளும் கைக்கொள்ளுவான்.

சிலுவை நடப்பிப்பது.

இயேசு ஒருதரம், தாம் ஊழியம்கொள்ளுவதற்கல்ல ஊழியஞ் செய்வதற்கே வந்ததாகச் சொன்னார். கடவுளின் அன்பைக் காட்ட

வும், அவர்களைப் பாவத்திலிருந்து திருப்பவும் அவர் மரித்தபோது அவர் மனிதருக்குச் செய்த ஊழியம் இவ்வளவவ்வளவல்ல. அவருடைய மரணம் அநேகரை மீட்கும்பொருளாய் இருக்கிறதென்று ஒருதரம் சொன்னார். சத்துருக்களின் கைகளிலிருந்து மீட்கும் பொருட்டு பணஞ்செலுத்தப்படுகிறதுபோல், இயேசுவின் மரணம் பாவத்திலிருந்து மனிதரை மீட்கிறது. மீட்கப்படுகிறவர்கள் பாவத்தை அரோசித்து, அதை விட்டுவிட்டு, கடவுளுக்கு நேரே திரும்புகிறார்கள். கிறிஸ்துவின் சிலுவை மனிதரின் இருதயத்தையும் முழு ஜீவியத்தையும் மாற்றிவிடுகிறது. வெட்கமும் துக்கமும் நிறைந்த உள்ளத்துக்கு சமாதானத்தையும், பரிசுத்தத்தையும் தருகிறது. இதைக் கொடுக்கவே இயேசு மரித்தார். அவர் தமது மரணத்தால் பாவிகளை இரட்சிக்க விரும்பியதால், அவர் தம்மை இரட்சித்துக்கொள்ளவில்லை.

C. L. S. PRESS, MADRAS—1918

No. 149. அக்டோபர் 1918

11 OCT 1918

வேதியர் விளக்கு

Translation of the Bible into Tamil

By the Rev. L. P. Larsen

வேத மொழிபெயர்ப்பு

(தொடர்ச்சி)

இப்பொழுது வழங்கும் தமிழ் மொழிபெயர்ப்புக்களில் குறைவுகள் உண்டு. அக்குறைவுகளால் வாசிக்கிறவர்களுக்குச் சில தடைகள் நேரிடும். தடையென்றால் வாசிக்கிறவர்கள் பொருளையும் உபதேசத்தையும் சிறிதும் அறியாதபடி தடுக்கும் தடையல்ல. தடையோ பலவகை. வேதத்தைப் படிக்கும் ஆசைக்குத் தடையாகும் குறைவும் ஒரு தடை. வாசிக்கும் ஆசை குறைந்துபோனால் வாசிக்கிறதினால் உண்டாகும் பலனும் குறைந்துபோம். வேதத்தை வாசிக்கும் ஆசையைக் குறைக்கும் தடைகளுமுண்டு. வாசித்து அடையும் அறிவைக் குறைக்கும் தடைகளும் உண்டு. வேதத்தைப் படிக்கிறவர்கள் அர்த்தத்தையும் சிறப்பையும் சரியானபடி காணுதவண்ணமாய்த் தடுக்கும் தடைகளையும் நீக்குவது அவசியம்.

ஆசையைக் குறைக்கும் தடைகளுக்கும் அறிவைக் குறைக்கும் தடைகளுக்குஞ் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

(1) இலக்கணம்.—'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்.' இது தமிழ்க்கிறிஸ்தவர்கள் எல்லாரும் அறிந்திருக்கிற வாக்கியம். இது தமிழர் பேசும் வகையல்ல; எழுதும் வகையுமல்ல. 'மேய்ப்பர்' என்னும் பதத்தை உபயோகிக்கவேண்டுமாயின், 'கர்த்தரே என் மேய்ப்பர்' என்பதே தமிழ் மரபு. வேதத்திலோ இவ்வுதாரணத்துக்குச் சமமான வாக்கியங்கள் எங்கும் காணலாம். 'அவர் நல்லவர்' என்று சொல்லாமல் 'அவர் நல்லவராயிருக்கிறார்' என்று இருக்கிறது. இது வேதத்தில் வழக்கமானதால் கிறிஸ்தவர்களுடைய பேச்சிலும் புஸ்தகங்களிலும் வழக்கமாய்விட்டது. 'ஆயனும் ஆடும்'

என்ற ஒரு கிறிஸ்தவப் புஸ்தகம் உண்டு. இதைச் சமீபகாலத்திலே வாசித்தபடியால் இதுவே என் ஞாபகத்துக்கு வருகிறது. இப் புஸ்தகத்தின் பொருளோ நேர்த்தியானது. பாஷையோ வேதத் தமிழ். மூன்று மேய்ப்பரைப்பற்றிப் பேசி 'அம்மூன்று மேய்ப் பரும் ஒருவர்க்கொருவர் சுத்த வித்தியாசமானவர்களாயிருந்தார்கள்' என்று ஆக்கியோன் சொல்லுகிறார். தமிழர் சாதாரணமாக 'இப் படிச் சொல்லுவார்களோ? கிரேக்குப் பாஷையிலும் இங்கிலிஷ் பாஷையிலும் 'இருக்கிறார்', 'இருந்தார்' என்னும் சொற்களின் அர்த்தத்தைக் குறிக்கும் சொற்கள் இப்படிப்பட்ட வாக்கியங்களில் வருகிறபடியினால் மொழிபெயர்ப்புத் தமிழிலும் வந்துவிட்டது. இது கிரேக்குத் தமிழும் இங்கிலிஷ் தமிழும் என்று சொல்லத்தகும். தமிழர் வாசிக்கும்படி எழுதவேண்டிய தமிழோ அந்நியநாட்டாரது தமிழல்ல; சுதேசிகளின் தமிழே.

(2) நடை.—மொழிபெயர்ப்புத் தமிழில் 'ஆனால்', 'ஏனெனில்' என்ற சொற்கள் அதிகம். மூலபாஷையில் இப்படிப்பட்ட சொற்கள் வருவது பாஷையின் நடைக்கு ஏற்றது. தமிழிலோ அவை அரிதாய் உபயோகிப்பதே யன்றிக் கிரேக்கிலும் இங்கிலிஷி லும் வரும் அனேக இடங்களிற் பொருந்தாது. கர்த்தருடைய ஜெபத் தில் 'எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணுதிரும். ஆனால் தீமை யினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்' என்னும் மொழிபெயர்ப் புக் கிரேக்கத் தமிழே. அச்செபத்தின் கடைசியில் 'ஏனெனில்' என்ற சொல்லினால் வாக்கியங்களைச் சேர்த்து 'ஏனெனில் இராஜ் யமும் வல்லமையும் மகிமையும் உம்முடையவைகளே' என்று திருப் பினவர்கள் அங்கிய பாஷையின் நடையை நசைத்துவிட்டார்கள். மேலும் 'ஏனெனில்' என்னும் சொல்லின் உற்பத்தியை நினைத் தால் இந்த இடத்தில் பொருந்தவேமாட்டாது. கடவுளை நோக்கி ''என்?'' என்னால்' என்று சொல்லத்தகாது. கடவுள் ஒரு காரி யத்தை அறியாமல் 'என்?' என்று கேட்பாரோ? அந்நியபாஷை யின் நடை வேதத்திற் காண்பது இவ்வகைச் சிறு சொற்களை நசைக் கிற இடங்களில் மாத்திரமல்ல, பவுல் அப்போஸ்தலர் எபேசிய ருக்கு எழுதின நிருபம் முதல் அதிகாரத்தின், 4, 5, 6-ம் வசனங் களை வாசித்தால், ஒரு தடை காணலாம். இது வேறு அனேக இடங் களிலும் காணப்படும் தடை. அவ்வாக்கியங்கள் இங்கிலிஷ் மொழி பெயர்ப்பை வாசிக்கிறவர்களுக்கும் வெகு தெளிவல்ல. தமிழ் மொழிபெயர்ப்பிலோ அர்த்தத்தைக் கண்டறிகிறது அதைவிடக் கஷ்டம். தமிழ் இலக்கணத்தின் பிரகாரம், நீண்டவாக்கியத்தில் காரணத்தையும் நோக்கத்தையும் பிரமாணத்தையும் குறிக்கும் பாகங்

கள் முந்திவரவேண்டியனவாதலால், வாக்கியத்தை வாசித்து அர்த்தத் தைக் கிரகிக்கிறது இலேசல்ல. அப்படிப்பட்ட இடங்களில், அர்த் தமும் தொடர்ச்சியும் மாறாதபடி, நீண்டவாக்கியத்தை இரண்டு, மூன்று, நாலு வாக்கியங்களாக்கித் திருப்புவதே உத்தமம். வாசிப் பவர்களுக்கு இதுவே நலமாகும்.

(3) பதங்கள்.—கிறிஸ்துவின் சுவிசேஷம் புதியபொருளைக் கொண்டு வருவதினால் புதிய பதங்களும் அதில் வழங்குவது ஆச் சரியமல்ல. சில விஷயங்களில் புதிய பதத்தை வருவிக்காமல், பழையதொரு சொல்லுக்குப் புது அர்த்தத்தைக் கொடுத்து வழங்கு வது உண்டு.

இது எல்லாப் பாஷையிலும் நடந்ததும் நடக்கிறதுமான காரி பமே.

இப்படியிருக்கக் கிறிஸ்தவப் போதனையில் உள்ள விசேஷித்த பதங்கள், பொருளை விளக்கத்தக்க பதங்களோ என்று விசாரிப்பது அவசியம். ஓர் உதாரணம்:—தேவன் என்னும் சொல் வேதத்தில் கடவுளைக் குறிக்கும்படி எங்கும் வழங்குகிறது. எல்லாருக்கும் விளங்கும் நல்ல தமிழ்ச்சொல் இருக்கையில், சமஸ்கிருத பதத்தை உபயோகியாமல் தமிழ்ச்சொல்லையே உபயோகிப்பது நியாயம். 'தேவன்' என்கிற பதத்தின் விஷயத்திலோ இன்னுமொரு பெரிய ஆட்சேபனையுண்டு. இப்பதம் பன்மையிலும் வழங்குகிறது. தமிழர் 'தேவர் பலர்; கடவுள் ஒருவர்' என்ற கொள்கையுடையோராத லால், வேதத்தில் உபயோகிக்கவேண்டிய பதம் 'கடவுள்'; தேவன் அல்ல.

இதுபோல விசாரிக்கவேண்டிய பதங்கள் அனேகமுண்டு.

தமிழ் வேதமொழிபெயர்ப்பு வெகுகாலமாகக் கிறிஸ்தவர்களுக் குப் பழக்கமாதலால் மூலாதாரப் பதங்களை ஆராய்ந்து மாற்றத்தக்க காலம் போய்விட்டது என்றும், இப்பொழுது அப்பதங்களைத் தொட் டால் தமிழ்க்கிறிஸ்தவர்களுக்கு அதிக மனவருத்தமும் கலக்கமும் உண்டாகும் என்றும் அனேகர் ஆட்சேபிக்கிறார்கள். இது கவனிக் கப்படத்தக்கதே. இவ்வகைப் பதங்களை ஆராய்ந்து திருத்துவது இலேசிலே தீரும் காரியமல்ல. அதைத் திருப்திகரமாகச் செய்வது கஷ்டமாயினும், கிறிஸ்தவர்களுக்காகவும் புறமதஸ்தர்களுக்காகவும் அதைச் செய்வது அவசியம்.

'வேதமொழிபெயர்ப்பு கிறிஸ்தவர்களுக்காகவே செய்யப்படு கிறது, புறமதஸ்தர்களுக்காக அல்ல' என்று சொல்லினும் மனதில் வைக்கவேண்டிய விசேஷித்த காரியமொன்றுண்டு. அதாவது:— கிறிஸ்தவர்களுக்குள்ளே வழங்கும் தமிழ் புறமதஸ்தர்களுக்குப் பெரும்

பாலும் விளங்காதிருந்தால், அது சுவிசேஷ வேலைக்குப் பெரிய தடையாகும். ஆகவே வேதத்தை மொழிபெயர்க்கும்போது கிறிஸ்தவர்களை மாத்திரம் நினைக்கிறது போதாது, புறமதஸ்தர்களையும் நினைக்கிறது அவசியம்.

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

13-ம் அத்தியாயம்

தாழ்நிலையினின்று மலைப்பிரதேசம் சென்றது

(தொடர்ச்சி)

சவுலும் பர்னபாவும் தௌரஸ் மலைத்தொடரைக் கடந்து அப்புறத்திலுள்ள மலைகளுக்கு வந்துவிட்டால் அவர்களுக்கு யாதொரு கஷ்டமுமில்லை. ஏனெனில் இதற்குச் சற்று முன்னே தான் ரோமர்கள் இங்கே ஒரு ரஸ்தாவைப்பற்றி அதிகம் பெருமை பாராட்டி இதற்கு ராஜபாதை என்று பெயரிட்டார்கள். இப்பாதை பிசிதியாநாட்டு அந்தியோகியாவிலிருந்து தென்கீழ்த்திசையாய் ரோமைக் குடியேற்றமாகிய லீஸ்திராவுக்குச் சென்றது. இப்பாதை நிர்மாணிக்கப்பட்ட நோக்கம் இப்பக்கத்திலுள்ள கள்ளர்களையும் கொள்ளைக்காரர்களையும் அடக்குவதற்குப் போர்வீரர்களை இப் பாதைவழியாய் இலேசாய் அனுப்புவதே.

ஆனால் இந்த இரண்டு பிரயாணிகளும் திறந்த இந்நாட்டுக்கு இன்னும் வரவில்லை. கோவேறு கழுதைகள் செல்லுகிற ஒற்றைப் பாதைகள்மட்டுமுடைய தௌரஸ் மலையின் செங்குத்தான கணவாய்களில் அநேக கள்ளரும் கொள்ளைக்கூட்டத்தாரும் இருந்தனர். கள்ளரால் வந்த மோசத்தில் தாமிருந்ததாகப் பவுல் தாமே சொல்லுகிறார். பெர்கேபட்டணத்திலிருந்து மலைச்சாரல்களைக் கடந்து பிசிதியா மலைப்பிரதேசத்தின் வழியாய் அந்தியோகியா பட்டணத்துக்குச் சென்ற இப்பிரயாணத்தில்தான் மலைக்குகைகளினின்று குதித்தெழுந்து வருகிற கள்ளர்களாலும் கொள்ளைக்காரர்களாலும் பவுல் பிடிபட்டிருக்கக்கூடியது. கடைசியாகப் பவுலும் பர்னபாவும் தௌரஸ் மலையின் உச்சியை அடைந்து தங்களுக்குமுன் கிடக்கிற விஸ்தாரமான சமவெளியைக் கண்டனர். அவர்களுக்குப் பின்னாலே செங்குத்தான மலைகள் தென்றிசையாய் 5,000 அடி உயரமாய்க்

டலுக்குள் இறங்கினது. 1,000 அடிக்குக் கீழே ஆச்சரியமும் அதிசிறந்ததுமான பீடபூமி இருந்தது.

பவுலும் பர்னபாவும் வடதிசையாய்ச் சென்று தௌரஸ் மலை பீர் அடியிலுள்ள சிறுமலைகளைத் தாண்டிக் கடைசியாய் ஒரு பெரிய ஜலசாலகத்தைக் கண்டார்கள். வில்வடிவான கண்மடல்களை உடைய வேலைப்பாட்டால் நிர்மாணித்த இந்தச் சலதாரை கன்மலையை ஊடறுத்துத் தண்ணீர்கொண்டு சென்றது. கன்மலையின் பாரிசத்தில் கட்டப்பட்டிருந்த ஓர் அழகிய பட்டணத்துக்கு இந்த ஜலசாலகம் சென்றது. இம்மலை உச்சிக்குச் சற்றுக்கீழே பாறைபிற் குடைந்து வெட்டப்பட்டிருந்த ஒரு ஆலயமிருந்தது. இந்த ஆலயத்துக்கு முன்னே பளிங்குக் கன்மண்டபமொன்று நின்றது. இம்மண்டபத்தில் புஷ்பமாலைகள் தொங்கப்பெற்ற மாட்டுத்தலைகள் செத்திரித்து வெட்டப்பட்டிருந்தன. ஆனால் இந்த ஆலயத்திலிருந்து அதிக தூரத்திலே ஒரு சிறு கட்டிடம் இருந்தது. இது சித்திரவேலைகள் இல்லாத ஒரு சாதாரணக் கட்டிடம். பவுலும் பர்னபாவும் அத்தேவாலயத்துக்கு அல்ல, இந்தச் சிறு கட்டிடத்துக்கே சென்றார்கள். இது அந்தியோகியா பட்டணத்து யூதர்களுடைய ஜெப ஆலயம்.

பவுலும் பர்னபாவும் ஜெபஆலயத்துக்குள் நுழைந்து மெதுவாய் உட்கார்ந்து ஒய்வுநாள் ஆராதனையில் தாங்களும் சேர்ந்துகொண்டார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தினின்றும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களினின்றும் பாடங்கள் வாசிக்கப்பட்டன. (உபாகமம் முதலாம் அதிகாரமும் எசாயா முதலாம் அதிகாரமும் அந்த நாட்பாடமாயிருக்கலாம்.) இவ்விருவருடைய நடை உடை பாவனைகளைக் கண்டு இவ்விரு பிரயாணிகளும் தங்களைப்போலவே எபிரெயர் என்பதை ஜெபாலயத்திலிருந்த விசேஷித்த மனிதர்கள் கண்டுகொண்டார்கள். உதாரணமாக, ஜெபஆலயத்துக்குட் பிரவேசித்தபோது யூதர்கள் எல்லாரும் போட்டுக்கொள்ளுகிற தலைப்போர்வையை இவர்களும் போட்டுக்கொண்டிருப்பார்கள். ஆகையால் தேவாலயத்துக்கு முதன்மைக்காரர் இவர்களைப் பார்த்து, 'மனுஷரே, உடன் யூதசகோதரரே, இங்கேயுள்ள ஜனங்களை உற்சாகப்படுத்தக்கூடிய வார்த்தைகள் எதாவது உண்டானால் அவைகளைச் சொல்லுங்கள்' என்று கேட்டார்கள்.

பவுலைப்போல பர்னபா அவ்வளவு பேச்சு சாமர்த்தியமுடையவரல்ல. ஆகையால் பவுல் எழுந்து நின்று, 'இஸ்ரவேலரே, கடவுளுக்குப் பயப்படுகிறவர்களே' என்று சொல்லிப் பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

இப்படி இரண்டுவிதமாய் அவர்களே விளித்துக் கூறியதற்கு ஒரு காரணமிருந்தது. அக்காரணம் என்னவென்றால், இஸ்ரவேலராகிய தனியூதர்களேத்தவிர விக்கிரக வணக்கத்தை ஒழித்து யெகோவாவாகிய மெய்த்தேவனை ஒப்புக்கொண்ட அநேக கிரேக்கர்களும் இருந்தார்கள். ஆகையினாலே இந்தக் கிரேக்கர்களைப் பார்த்து 'தேவனுக்குப் பயப்படுகிறவர்களே' என்று அழைத்தார்.

ஜெபஆலயத்திலிருந்த பையன்கள். பவுல் புதியவரும் அந்நியருமாயிருந்தபடியால் அவரை நோக்கினார்கள். ஆனால் பவுலைப் பார்த்த பார்வையைவிட்டுத் தங்கள் கண்களைத் திருப்பாதபடிக்கு அவர்களுடைய மனது அவர்மேல் படிந்தது. ஏனெனில் தாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைச் செய்துமுடிப்பதில் தமக்கு என்னவந்தாலும் பரவாயில்லை என்ற மன உறுதியை உடையவராய் இருந்ததுமல்லாமல் இந்த யூதப்பையன்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்த அநேக கதைகளையும் சொல்லப் பவுல் ஆரம்பித்தார்.

எகிப்திலிருந்து வனாந்தரத்தின் மூலமாய் யோர்தான் அண்டை வந்து அதைக் கடந்து எரிகோவின் சமபூமிக்கும் எருசலேமைச்சூழ உள்ள மலைப்பிரதேசத்துக்கும் செல்லுகிற பெரும்வழியைப்பற்றியும் இவ்வழியாய் எகிப்திலிருந்து எருசலேம் வரையும் யாத்திரைசெய்த இஸ்ரவேலரைப்பற்றியும் பவுல் விஸ்தாரமாய்ப் பேசினார். பையனுயிருந்த சாமுவேல் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து இஸ்ரவேலருடைய ஞானமுள்ள வயோதிப அதிகாரியாகிறதையும் நெடு நெடு என்று வளர்ந்திருந்த சவுலும் அவனுக்கு அருகில் இடையனுகிய தாவீதும் ராஜாக்களாகச் சிங்காசனம் ஏறுகிறதையும்பற்றிப் பவுல் வெகு சவிஸ்தாரமாகப் பேசினார். வனாந்தரங்களில் குடியிருந்த கூடாரங்களைவிட்டு மலைப்பிரதேசத்திலுள்ள பட்டணங்களுக்கும், சாமுவேயுடைய சாதாரண ஆளுகையைவிட்டு ஜாதிகளுள் விசேஷித்த ஜாதியாகிய இந்த இஸ்ரவேலருக்கு அவசியமாயிருந்த இந்த ராஜாங்கத்துக்கும் வழி நடத்தின இச்சம்பவங்கள் எல்லாம் எதோ ஒரு மகா விசேஷித்த காரியத்துக்கு இவர்களே நடத்தினது என்பதை இவர்களுக்கு விளக்கமாய்க் காண்பித்தார்.

இவை எல்லாம் என்னத்துக்கு வழி நடத்தினது? யூதஜாதியார் அனைவரும் வெகு ஆவலாய் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த மகா மகோன்னத ராஜாவினுடைய வருகைக்காக அல்லவோ? பிரசங்கத்தில் இவ்விஷயத்துக்கு வந்தவுடனே அவர்கள் மூச்சுவிடாமல் மகா கவனத்தோடு கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய சந்தோஷசெய்தியை அவர்களுக்குத் திடீரென சொல்ல ஆரம்பித்தார். 'யதார்த்தமாகவே கடவுள் தமது முன்னோரனும் நீர்க்கதரிசியுமாகிய யோவான்ஸ்நானனை முன்னேயே அனுப்பியாயிற்று! கர்த்தருடைய மேசியாவாகிய யேசுக்கிறிஸ்து வந்துவிட்டார்!'

'எருசலேமிலுள்ள யூதர்கள் அவர் எவ்விதக் குற்றவாளி என்பதையும் காணமுடியாவிட்டாலும் அவரைக் கொல்லும்படி பிலாத்துவைக் கெஞ்சி மன்றாடினார்கள். சிலுவைமரத்தில் அவரை எற்றிக் கொன்று புதைத்துவிட்டார்கள். ஆனால் கடவுள் அவரை மரித்தோரிடத்திலிருந்து உயிரோடெழுப்பினார். கலிலேயாவிலிருந்து எருசலேம் வரைக்கும் அவரோடேகூட வந்திருந்த அவருடைய கூட்டாளிகளில் அநேகர் அவரை உயிருள்ளவராகக் கண்டு இது உண்மை என்பதற்கு அவர்களே சாகூியாயிருக்கின்றார்கள். கர்த்தர் நம்முடைய பூர்வபிதாக்களுக்குச் செய்த வாக்குத்தத்தத்தை அவருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் நிறைவேற்றியிருக்கிறார் என்ற சந்தோஷ செய்தியைச் சொல்லுகிறதற்கு நாங்கள் இங்கே வந்திருக்கின்றோம்' என்றார்.

யூதர்களிற் சிலர், விசேஷமாய்ப் பவுல் நின்று பேசின இடத்துக்குச் சமீபத்தில் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்த ஜெபஆலயத்தின் முதன்மைக்காரரில் சிலர், தங்கள் தலையைத் தலுக்கி உக்கிரமாய் அவரைப் பார்த்து, 'சபிக்கப்பட்ட தூக்குமரத்தில் கொலையுண்ட ஒருவனும் தேவகுமாரனுய் இருக்கமுடியாதே' என்று சொல்லி முறுமுறுப்பாய் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

பவுல் தம் பிரசங்கத்தை முடித்தபோது ஜனங்கள் எல்லாரும் ஒருவிதமான மனஎழுச்சியடைந்து விஷயத்தை உள்ளபடி கிரகிக்கிறதற்கு ஆவல்கொண்டிருந்தனர். பவுல் சொல்லுகிறது உண்மையாய் இருக்கலாமென்று சிலர் எண்ணினார்கள். மற்றவர்கள் இவ்விருவரும் எத்தர் என்று தீர்மானித்தார்கள். பவுலும் பர்னபாவும் வெளியே வந்தபோது யேசுவைப்பற்றிய சரித்திரம் உண்மை என்று நினைத்த பலர் அவ்விருவரையும் சூழ்ந்துகொண்டு அநேக கேள்விகளைக் கேட்டார்கள். இவர்களிற் சிலர் யூதர், மற்றவர்கள் கிரேக்கர் ரோமர் முதலியவர்கள். சர்வத்தையும் படைத்த சின்மய சொரூபியும், பரிசுத்தரும், அதரிசியரும், நித்தியரும் ஆகிய ஒரே கடவுளைப்பற்றி யூதர்கள் பேசுகிறதை இந்தக் கிரேக்கரும் ரோமரும் கேள்விப்பட்டிருந்தார்கள். தங்களுடைய தன்மார்க்கமான தெய்வங்களுக்குமுன் தாங்கள் பணிந்துகொள்வது தங்களுக்குத் தகுதியல்லவென்றும் இவரையே தாங்கள் வணங்கவேண்டுமென்றும் உணர்ந்திருந்தார்கள். இப்படி இவர்கள் யூதர்களோடு சேர்ந்துகொண்டு விருத்தசேதனத்தையும் ஒப்புக்கொண்டு அதை அனுசரித்துவந்தவர்கள்.

அடுத்த ஓய்வுநாளில் இவை அனைத்தையும் திருப்பிச் சொல்லும்

படி ஜனங்கள் இவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். பவுலும் அதற்குச் சம்மதித்தார். ஜனங்கள் தேவாலயத்திலிருந்து தங்கள் வீடுகளுக்குப் போனபோது தங்கள் சாப்பாட்டு மேசைகளில் யாவரும் இந்தப் புது உபதேசத்தைப்பற்றியே பேசிக்கொண்டார்கள். அடுத்த நாள் சந்தை வெளியிலும் கடைத்தெருவிலும் இந்தப் புது யாத்திரீகர்களைப்பற்றிய பேச்சை எங்கும் பேச ஆரம்பித்தார்கள். ஆகவே அடுத்த ஓய்வுநாளில் பவுலும் பர்னபாவும் ஜெபஆலயத்துக்குச் சென்றபொழுது யூதர், கிரேக்கர், ரோமர் கலந்திருந்த திரளான கூட்டத்தார் அங்குவந்து கூடியிருப்பதைக் கண்டார்கள். இந்த ஆராதனையைச் சேராதவர்களும் வேடிக்கை பார்க்க வாசலண்டையிலே இந்தப் புதுக்கதையைக் கேட்கவந்த ஜனங்களும் நின்றார்கள். இதற்குள்ளே முந்தின ஓய்வு நாளில் பவுலின்மேல் விரோதம் காண்பித்த யூதர்கள், ஜனங்கள் எல்லாரும் தங்களுக்குச் செவிகொடுக்கும்படி அவர்களை வசம்பண்ணிக் கொண்ட இந்த நாடோடிப் பிரசங்கிகள்மேல் கோபங்கொண்டனர். பவுல் பேசுகிறதைக் கேட்கும்படி இத்தனை திரளான ஜனங்கள் கூடி வந்திருக்கிறார்களே என்ற பொறாமையும் உண்டானது. பவுல் பேச ஆரம்பித்தபோது அவர்கள் குறுக்குமறுக்காய்ப் பல கேள்விகளைக் கேட்டு அவர் பிரசங்கத்தைத் தடுக்க முயன்றார்கள். ஆனால் எவ்வளவு அதிகமாய் அவர்கள் பவுலுக்குத் தடைபண்ணினார்களோ அவ்வளவு அதிகமாய்ப் பவுலும் பர்னபாவும் அவர்களோடே பிரதிவாதம் பண்ணி இந்த இயேசுவே தேவன் அனுப்பின மேசியா என்பதை மிகுந்த வல்லமையோடு கூறினார்கள். விசாலமான அறிவில்லாத யூதர்கள் தங்கள்மேல் அதிக கர்வமாய் எதிர்த்துநிற்கிறார்களென்று இவ்விருவரும் கண்டார்கள். ஆகையால் அவர்கள் எழுந்து நின்று, 'யூதராகிய உங்களுக்குக் கர்த்தருடைய வார்த்தை முதலாவது அறிவிக்கப்படவேண்டியதாய் இருந்தது. ஆனால் நீங்கள் அதைத் தள்ளிவிட்டு நித்தியஜீவனுக்கு உங்களை அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியால் இதோ நாங்கள் புறஜாதிகளிடத்திற்குப் போகிறோம்' என்று கதவண்டை நின்றுகொண்டிருந்த புறஜாதிகளாகிய திரளான ஜனங்களைக் காட்டிச் சொன்னார்கள்.

வெளியே நின்றுகொண்டிருந்த ஜனங்கள் இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சந்தோஷப்பட்டார்கள். ஜெபஆலய ஆராதனை முடிந்தபோது அவர்கள் இவ்விருவரையும் சூழ்ந்துகொண்டு இவ்விஷயத்தைப்பற்றி அதிகம் அறிய விரும்பினார்கள். சூழ இருந்த நாட்டுப் புறத்திலேயிருந்து சந்தைக்கு ஜனங்கள் வந்தபோது, சர்வலோக சிருஷ்டிகர் மானிடவடிவெடுத்து உலகத்தில் வந்திருக்கிறார் என்றும் இவ்வடிவமான கிறிஸ்துஇயேசுவுக்குள் தமது அன்பை வெளிப்

படுத்தியிருக்கிறார் என்றும் இங்நாட்டுப்புறத்தாருக்குச் சொன்னார்கள்.

இவர்கள் மலைப்பிரதேசத்திலுள்ள தங்கள் கிராமங்களுக்குச் சென்றபோது இந்தப் புது உபதேசத்தைப்பற்றி அங்கு பிரஸ்தாபம் பண்ணினார்கள். அடுத்த சந்தைநாளிலே அவர்கள் பவுல், பர்னபாவைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் சொல்லுகிறதைக் கேட்டார்கள். இப்படி இப்பட்டணங்களின் சுற்றுப்புறங்களிலே சிறு சிறு கிறிஸ்தவக் கூட்டங்கள் உண்டாகி அநேகர் விசுவாசிகளானார்கள்.

இதற்கிடையில் கோபாவேசம் கொண்ட யூதர்கள் அந்தரங்கமாய்ச் சில காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். ரோம உத்தியோகஸ்தரை விவாகம் செய்துகொண்டவர்களும் தங்கள் ஜெபஆலயத்தில் தொழுதுகொள்ளுகிறவர்களுமாகிய ஸ்திரீகளிடத்தில் இவர்கள் கலந்து பேசினார்கள். அங்குள்ள ஒவ்வொருவரையும் கலங்கச் செய்துகொண்டிருந்த இந்த இரண்டு தேசாந்திரிகளையும் இப்பட்டணத்தைவிட்டுத் துரத்தும்படி தங்கள் புருஷரை இவர்கள் தூண்டி இவர்களே எழினார்கள். ஒருநாள் பவுலையும் பர்னபாவையும் இங்ஙகராலோசனைக்காரர் அங்ஙகரத்தைவிட்டுத் துரத்தினார்கள். தெருதெருக இவர்கள் கழுத்தைப்பிடித்து இவர்களைத் தள்ளிக்கொண்டு போனார்கள். பட்டணத்து வாசலைக் கடந்து வெளியே வந்தபோது பவுலும் பர்னபாவும் சற்று நின்று தங்கள் பாதரட்சையைக் கழற்றித் தூசியை உதறிவிட்டார்கள். அதன் அர்த்தம் சகல யூதருக்கும் தெரியும். அந்தியோகியா பட்டணத்தாராகிய இவர்கள் தங்களை நடத்தின விதம் சரி அல்ல என்பது இதன் அறிகுறி.

இப்போது அவர்கள் திரும்பவும் திறந்த வெளியிலே வெள்ளைக்கல் பாவப்பட்ட ரோம ரஸ்தாவிலே நீலவானத்தின் கீழே நின்றார்கள். யோவான் மாற்கு தங்களை விட்டுவிட்டுச் சுகமாய்ப் பல்லீனே போய்ச் சேர்ந்தான் என்பதை ஞாபகம் பண்ணிக்கொண்டார்கள். சவுலும் பர்னபாவும் அவமதிக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும், நிந்தைப்பேச்சுக்கும் பரிகாசத்துக்கும் இடமாய், சர்வத்தையும் இழந்து தங்குகிறதற்கு ஸ்தானமற்றவர்களாய், தங்கள் ராஜாவின் சேனை யுத்தியோகத்துக்கென்று வெளியேறிச் சென்றார்கள்.

My Own Son

A Story of Malabari's Mother

Translated by Mrs. G. E. Phillips

என் சொந்த மகன்

லூக். 10[25-37]. 1 யோவா. 4[21].

நேயருங்கள்! மலபாரி மகா கவிஞருடைய தாயைப்பற்றி ஒரு சங்கதியைச் சொல்லுவேன். அவள் பரோடா ராஜ்யத்தில் பார்சி மதத்தைச் சேர்ந்தவள். 1856-ம் வருஷத்தில் அவள் புருஷன் இறந்து போனான். அவளுக்கு இரண்டு வயசுள்ள ஒரே ஒரு குழந்தை இருந்தது. தன் புருஷன் இறந்துபோனபின் அவள் சூரத் மகா நகரத்துக்குப் போகத் தீர்மானித்தாள். தன் கைக்குழந்தையை எந்திக்கொண்டு நாட்டு மாட்டுவண்டி ஒன்றில் ஏறிக் கடும்பிரயாணத்தை ஆரம்பித்தாள். வழியில் ஒருநாள் பீலர் என்று சொல்லப்பட்ட கொடியகள்ளர்கள் அவள் இருந்த வண்டியை வளைந்துகொண்டார்கள். அப்பொழுது அந்த ஏழை ஸ்திரீக்குச் சொல்லமுடியாத பயமும் நடுக்கமும் வந்தது. கைக்குழந்தைக்கோ ஒன்றும் தெரியாமல் தாயின் மடியில் சந்தோஷமாயும் சுகமாயும் இருந்தது. அக்கள்ளர்கள் அவ்வண்டியில் அந்த விதவை குழந்தையோடு இருந்ததைக் கண்டு பரிதபித்து அவளுக்கு ஒரு தீமையும் செய்யாமல் அவளுக்குப் பணம் முதலியவைகளைக் கொடுத்து அவள் சுகத்தோடு சூரத் பட்டணம் போய்ச் சேரும்படி வேண்டிய ஏற்பாடுகள் பண்ணினார்கள்.

பார்சிகளுக்கும் இந்துக்களுக்கும் சாதாரணமாக யாதொரு ஐக்கியமுமில்லை. ஆயினும் பீக்கபாய் என்று பெயர்கொண்ட இந்தத் தாயின் மனதில்–ஜாதி வெறுப்பு கொஞ்சமாவதில்லை. ஒருநாள் அவள் வீட்டு வாசலுக்குக் கிட்ட ஒரு கூடையில் ஒரு சிறு குழந்தையைக் கண்டாள். பசியினால் அந்தக் குழந்தை குற்றுயிராயிருந்தது. அந்தத் திக்கற்ற குழைந்தையைக் கண்டு பீக்கபாய் பரிதபித்து அதைத் தூக்கி மார்பில் அணைத்துக்கொண்டு பால் கொடுத்தாள். அதைக்கண்ட அடுத்த வீட்டுக்காரிகள் பரிகாசம்பண்ணி, 'நீ என் அப்படி ஒரு அநாதபிள்ளைக்குப் பால் கொடுக்கிறாய்? அது எந்த ஜாதிப் பிள்ளையோ? தாழ்ந்த ஜாதிப் பிள்ளையாயிருந்தாலும் இருக்கும்' என்று கேலி பண்ணினார்கள். அக்குழந்தை ஒரு தாழ்ந்த ஜாதிக் குழந்தைதான். அதின் தாய் அதைத் தேட வந்தபொழுது அது மகார் என்று சொல்லப்பட்ட கீழ்ஜாதிப் பிள்ளை என்று தெரியவந்தது. அப்பொழுது அந்த இந்து ஸ்திரீகள், 'நீ செய்தது சுத்தப் பைத்தியம்' என்று இகழ்ந்து பேசினார்கள்.

அது பைத்தியமோ?

ஒருநாள் பீக்கபாயின் சிறு மகனுக்கு வைசூரி கண்டது. ஒரு மூட வைத்தியன் அவளிடம் வந்து 'இந்தத் தெருவில் அலைந்துதிரிகிற ஒரு சிறு பையனைக் கூப்பிட்டு அவனுடைய நகங்களையும் புருவத்தையும் அற வெட்டி மாரிதேவிக்கு அவைகளைச் செலுத்து. அந்தப் பையனுக்கு வேதனை யிருந்தாலும் பரவாயில்லை. அதினால் உன் மகனுக்கு நல்ல சுகம் வரும்' என்றான்.

அதைக் கேட்டவுடனே அந்தத் தாயின் மனதுக்குக் கோபம் உண்டானது. 'நான் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன். இத்தெருவிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் என் சொந்தப்பிள்ளை' என்று மனவருத்தத்தோடு அவள் சொன்னாள். அவள் மகனுக்கு நன்மை வர இன்னொரு பிள்ளைக்கு கஷ்டநஷ்டத்தை வருவிக்க அவள் ஒத்துக்கொள்ளவில்லை.

தன் தாயின் அழகுள்ள குணங்களை மலபாரி கவிஞருடைய பாட்டுக்களில் நாம் காணலாம்.

Love Covereth a Multitude of Sins

A Sermon by Mr. J. D. Barnabas

பிரசங்கம். 1 பேதுரு 4[8].

எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர்
ஊக்கமான அன்புள்ளவர்களா யிருங்கள்.
அன்பு திரளான பாவங்களை மூடும்.

புதிய ஏற்பாட்டில் முக்கியமாய் நாம் கவனிக்கிற ஒரு சத்தியம் என்னவென்றால், அப்போஸ்தலர் எவ்வளவுதான் வித்தியாசமான குணங்களுள்ளவர்களானாலும், வெவ்வேறு பயிற்சியும் தேர்ச்சியும் அடைந்திருந்தபோதிலும், விசேஷமான காரியங்களிலும் போதனைகளிலும் வித்தியாசம் காட்டுகிறதில்லை.

உதாரணமாக, அன்பாகிய கிருபையை சாதாரணமாய் எதாவது புதிய ஏற்பாட்டில் எழுதினவர்களாக நினைக்கப்படுகிற அல்லது ஒப்புக்கொள்ளப்படுகிற நால்வரும் மேன்மைப்படுத்தியே பேசுகிறார்கள். யாக்கோபு, பேதுரு, யோவான், பவுல், கிறிஸ்தவ லக்ஷணமாகிய அன்பை எல்லாவற்றிற்கும் மேலாகவே வைத்து எழுதுகிறார்கள்.

பரி. யாக்கோபு, அன்பின் பிரமாணத்தை ராஜரிகப்பிரமாணம் என்கிறார். 2[8].

பரி. யோவான் சொல்வது, 'தேவன் அன்பாகவே இருக்கிறார்.' அதாவது அன்பே தேவமயம் என்கிறார்.

பரி. பவுல், 'முக்கியமான வரங்களே நாடுங்கள்' 1 கொரி. 12[31] என்று சொல்லி, 'இவைகளில் அன்பே பெரியது' 13[13] என்று முடிக்கிறார்.

பரி. பேதுருவும் பிரசங்க வாக்கியத்தில், 'எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்' என்கிறார்.

இந்த அப்போஸ்தலர் எவ்வளவு வித்தியாசமானவர்கள்! புதிய ஏற்பாட்டில் நாமறிந்தமட்டில் எவ்வளவு வேறுபாடு காட்டுகிறவர்கள்!

பரி. யாக்கோபு ஒரு யூதச் சந்நியாசி. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப்போலவே நியாயப்பிரமாணத்தையும் மதித்துப் போதித்து அனுசரித்து வந்தவர். அவருக்கும் அன்பின் சட்டமே ராஜ சட்டம். அதற்கு மேலான பிரமாணம் இல்லை.

பரி. யோவான் இடிமுழக்க வைராக்கியர். வயது செல்லச் செல்ல அமர்ந்த உணர்வும் தியானிக்கும் சுபாவமுமுடையவரானார். மேலும் அவர் கிறிஸ்துவின் அன்பாகிய கடலில் அமிழ்ந்திக்கிடந்து மயங்கிப் பரலோக கனவேகாணும் பக்தர். இவர் அன்பைத் தேவ சுபாவம் என்றும், நாம் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்தால் தேவன் நம்மத்தியில் வாசம்பண்ணுகிறார் என்றும் சொல்லுகிறார்.

பரி. பவுலோ தன்னுடைய சுயாதீனத்தையும் ஞானத்தையும்பற்றி அதிகமாய்ப் பேசினாலும், அறிவீனமான, பெலவீனக் கிறிஸ்தவ சகோதரனினிமித்தம் தன் சுயாதீனத்தைப் பாராட்டுவதில்லை என்றும், சகல ஞானமும் தனக்கிருந்தாலும் அன்பில்லாவிட்டால் தான் ஒன்றுமில்லை என்றும் சொல்லுகிறார். நியாயப்பிரமாணத்தின்படி குற்றஞ் சாட்டப்படாதவர். ஆயினும் அன்பு இல்லாவிட்டால் ஒன்றுமில்லை.

பரி. பேதுரு ஆதியிலே படபடப்புள்ளவர்; எதற்கும் முந்திக் கொள்வார்; அஞ்சா நெஞ்சர்; வீரன். பிரசங்க வாக்கியத்திற்கு முந்தின வசனத்திலே முதிர்ந்த அனுபவமுள்ள போர்வீரனைப்போல தெளிந்த புத்தி, விழிப்பு, இவைகளைப்பற்றிப் பேசி அவைகளுக்கு மேலாக அன்பை வைக்கிறார்.

எவ்வளவு வித்தியாசமான ஆட்களுக்குள்ளே எவ்வளவு அதிசயிக்கப்படத்தக்க ஒற்றுமை! இவர்களெல்லாரும் ஒரே ஆவியினால்

ஏவப்பட்டு எழுதினார்களென்பதற்கு வேறு அத்தாட்சியும் அவசியமா? எல்லாரும் அன்பையே சிலாகித்துப் பேச வேறு காரணம் உண்டோ?

இப்போதும் பரி. பேதுரு சொல்லுகிற இந்த வசனத்தின் கருத்தென்னவென்று பார்ப்போம். 'எல்லாவற்றிற்கும் மேலாக' என்ற பதங்களே இனி விஸ்தரிக்கவேண்டியதில்லை. 'அன்புள்ளவர்களாயிருங்கள்.'

'ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்.' எனென்றால் 'அன்பு நிரளான பாவங்களை மூடும்'.

அன்பாவது என்ன? அப்போஸ்தலரும் நம்முடைய இரட்சகரும் கிரேக்க பாஷையில் சொன்ன 'அகப்பி' என்ற பதத்திலுள்ள கருத்தெல்லாம் அடக்கக்கூடிய தமிழ்ப்பதமாவது ஆங்கில பதமாவது இல்லை என்று சொல்லலாம். கூர்ந்து கவனித்தால், நாம் யாரிடத்தில் அன்புகூருகிறோமோ அவர்களுக்கு ஏதோ ஒன்றைக் கொடுக்க எவும் ஆவலும், அதனால் சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் உண்டாக்க இருக்கும் ஆசையுமே அன்பு என்னலாம். எவ்வளவுக்கு இந்த ஆசையும் ஆவலும் அடக்கமுடியாமல் தடுக்கக்கூடாதபடி பலமாக இருக்கிறதோ, அவ்வளவாய் அது உண்மையான அன்பு. நாம் தேவனிடத்தில் அன்புகூர்வதானாலும் சரி, மனிதரிடத்தில் அன்புகூர்வதானாலும் சரி, இதுவே அதின் உண்மையான தன்மை.

அது நம்மைக் கொடுக்க நெருக்குகிறது. ஒருவேளை காணிக்கை அல்லது தர்மமாயிருக்கலாம், அல்லது ஒரு கலசம் தண்ணீராயிருக்கலாம், அல்லது நம்மையும் நமக்குள்ளதெல்லாவற்றையுமாய் இருக்கலாம். எதுவானாலும் நம்மை ஒறுத்தும் கொடுக்க ஏவுகிறது. அப்படிக் கொடுக்கும்வரைக்கும் நமக்கு திருப்தி உண்டாகிறதில்லை. வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம். தேவனைப் பாக்கியமுள்ளவர் என்கிறோமே—என்? இடைவிடாமல் கொடுத்துக் கொண்டே இருக்கிறாரல்லவா? அவருடைய ஜீவன் எப்போதும் உலகத்துக்கும் அதன் பொருட்களுக்கும் பிராணிகளுக்கும் அருளப்பட்டுவருகிறதினாலும், விசேஷித்த வகையாய் தேவன் மனிதனுக்கு மனிதருக்காகத் தம்முயிரைத் தத்தம்பண்ணினதினாலுமல்லவா 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்கிறோம். பாவியான ஸ்திரீ இயேசுவுக்குத் தைலம் பூசினபோது, அவர் பரிசேயனைப் பார்த்து, 'அவள் அதிகமாய் நேசித்தாள்' என்றாரே. மேலும் அன்பு பாக்கியத்தை உண்டாக்க, சந்தோஷிப்பிக்க ஆசிக்கிறது. எல்லாவிதமான அன்பும், பெலனற்ற சொஞ்ச அன்பும் கூட, ஒருவாறு ஏதோ ஒரு சந்தோஷத்தை உண்டாக்குகிறது. வழியிலே வருகிற பிச்சைக்கார

னுக்கு ஒரு பிடி அன்னம் கொடுத்தாலும் அல்லது ஒரு காசு கொடுத்தாலும் கூட அவனுக்குக் கொஞ்சம் சந்தோஷம் உண்டாக்க ஆசிக்கிறோமே.

பரோபகாரம், தயாளம், இந்தக் குணங்களும் கூட ஊக்கமீய் ஒன்றைச் செய்யாவிட்டாலும், உலகத்திலே இவ்வளவு கஷ்டங்கள் இல்லாதிருக்கக்கூடுமானால், இருக்கும் கஷ்டங்கள் குறையுமானால் நல்லது என்று விரும்பும் விருப்பத்திற்கு அறிகுறிகளே. ஆயினும் அவை அன்பல்ல.

நம்முடைய வேதம் சொல்லுகிற மகத்தான அன்பை உலகம் ஒரே ஒருவிசைமாத்திரம் பார்த்திருக்கிறது. அது இயேசுகிறிஸ்துவின் ஜீவியமும் மரணமுமே. வேதம் சொல்லுகிற அன்பு, மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதற்கும் மெய்யான பாக்கியம் உண்டாக்க ஆசிக்கிறது. இந்த உன்னத அன்பினாலல்லவோ இயேசுநாதர் வனந்தரத்தில் ஜனங்களைப் போஷித்தார்! இந்த அன்பினாலல்லவோ சீஷர் களைத்திருந்தபோது இளைப்பாறுவதற்கு 'அக்கரைக்குப் போவோம் வாருங்கள்' என்று அழைத்துக்கொண்டு போனார்! இந்த உன்னத அன்பல்லவா நமக்காக அவர் தம்மைத்தாமே ஒப்புக் கொடுக்கப் பண்ணிற்று! அதின் பயனாக நாம் பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைக்கிறோம். ஆகையால் கிறிஸ்தவ அன்பு அல்லது உன்னத அன்பாவது, மனிதரை நல்லவர்களும் தேவசுபாவமுள்ளவர்களுமாக்க இருக்கும் ஆசையும் ஆவலுமே. அந்த அன்பு இந்த உலகத்தைக் கஷ்டம் குறைந்ததாகவும் சவுக்கியம் நிறைந்த பாதிசுமாக்க மாத்திரமன்றி முக்கியமாய் அதைத் தேவனுடைய இராஜ்யம், அதாவது அன்பின் இராஜ்யமாக்க நாடுகிறது. அதிலே கலகம், சண்டை, பொறாமை, பகை இருக்காது. அதிலே மனிதர் புறங்கூறவும் பதிலுக்குப் பதில் செய்யவும் விரும்பார். பவுல் அப்போஸ்தலன் தன் சபையாரிடத்தில் இவ்வித அன்பை, பூரண அன்பை விரும்பினார். 'ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்' என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். இப்படிப்பட்ட உன்னத அன்பு எப்படி நமக்குக் கிடைக்கும்? மனிதரால் செய்யக்கூடாதவைகளைக் கட்டளையிடுவது ஞானமா, தர்மமா? அது கொடுமையல்லவா? ஆகையால் பேதுரு அப்போஸ்தலன் இதைக் கட்டளையிட்டது நிஜமானால் இந்த உன்னத ஊக்கமுள்ள அன்பு நமக்கும் சித்திக்கக்கூடும். மற்றப்படி ஊமையனைப் பார்த்துப் பேசு என்றும், குருடனைப் பார்த்து நன்றாய்ப் பார் என்றும் சொன்னதொக்குமே. ஆகையால் இவ்வித அன்பு நமக்குக் கிடைக்கக்கூடியதே. அதற்குச் சந்தேகம் வேண்டியதில்லை. அப்படியானால் இவ்வன்பை நாம் அடைய வழிவகைகள் இருக்கவேண்டுமே? ஆம், உண்டு. ஆயினும் சிலர் தப்பிதமான வழிவகைகளைக் கையாடுகிறார்கள். சிலர் 'இவ்வித அன்பு நமக்கு இருக்கவேண்டும்,' 'நான் இவ்வித அன்புள்ளவனாயிருப்பேன்' என்று தீர்மானம் செய்துகொண்டால் வந்துவிடும் என்கிறார்கள். இது வண்டிக்குள்ளே உட்கார்ந்துகொண்டு வண்டியைத் தள்ள யோசித்தவன் கதைபோலிருக்கும். வேறு சிலர், தங்கள் அன்பு குறையும்போது தங்களைத் தாங்களே கிட்டிக்கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர், தங்களைச் சிறிது பறக்கப்பண்ணுவதற்கேதுவானவைகளை— 'எழுப்புதல்' என்று சொல்லிக்கொள்ளுகிறவைகளைக் கையாடுகிறார்கள். சிலர், பலமான அன்பைக் காட்டத்தக்க வார்த்தைகளை உபயோகித்தால், பாட்டுகளைப் பாடிவிட்டால், உன்னத ஊக்கமான அன்பு வந்துவிடும் என நினைத்துக் கையாடி வருகிறார்கள். இப்படிப் போலிவகைகளைக் கையாடி எவ்வளவுக்கெவ்வளவு தங்களை உற்சாகப்படுத்திக்கொள்ளுகிறார்களோ, அவ்வளவாய்த் தணிந்து குளிர்ந்து போகிறார்கள். எவ்வளவு விரைவாய் அனலுண்டானார்களோ, அவ்வளவு விரைவாய்க் குளிர்ந்துபோனார்கள். அன்பு நமக்குள்ளே தானே உண்டாக்கி எழுப்பிக்கொள்ளக்கூடிய ஒரு உணர்ச்சி அல்ல. அது நமக்கு வெளியே இருந்துதான் நம்முடைய இருதயத்தை நெருக்கித் தள்ளவேண்டியது.

இந்த அன்பு நமக்குக் கிடைக்கச் செய்ய இரண்டு வழிகளுண்டு.

முதலாவது, அன்பு செய்யச் சொல்லும் கிரியைகளைச் செய்வதே. நமக்கு அயலார்மேல் அனலான அன்பு இல்லாவிட்டாலும், அது வரும் வரை காத்திராமல் அன்பின் கிரியைகளைச் செய்வோமாக. நாம் அவர்களுக்கு நம்மாலியன்ற அன்பின் கிரியைகளைச் செய்யச் செய்ய, அன்பும் அதின் அனலும் உண்டாகும். பழகாத ஒரு மனிதன் நம்மிடம் வருகிறான். ஏதோ ஒரு உதவி கேட்கிறான். அதை நாம் செய்கிறோம். திரும்பவும் வருகிறான். திரும்பவும் உதவி செய்கிறோம். அவன் வர வர, நாமும் பட்சம் காட்டக்காட்ட, முதலாவது அதுதாபமும், அப்பால் அவன் விஷயத்தில் ஒருவிதமான ஊக்கமும், இன்னும் காலாவட்டத்தில் அன்பும் சிநேகமும் உண்டாகிறதல்லவா? இந்த அந்நியன் விஷயத்தில் எப்படியோ அப்படித்தான் நம்முடைய பகைவருக்கும், நாம் விரும்பத்தக்க குணமில்லாதவர்களுக்கும் அன்பின் கிரியைகளை நாம் குவிப்போமானால், அன்புமாத்திரமல்ல ஊக்கமான அன்பும் உண்டாகும்.

இரண்டாவது, தேவனுடைய அன்பைத் தியானிப்பதே. அன்பு வெளியே இருந்துதான் நம்முடைய இருதயத்தை நெருக்கித் தள்ள வேண்டியது என்று பார்த்தோமல்லவா? தேவ அன்புதான் அப்படி

நெருக்கித்தள்ளும். அன்பு அன்பை யுண்டாக்கும். 'முந்த அவர் நம்மை நேசித்தபடியினாலே நாம் அவரை நேசிக்கிறோம்'—இந்த முக்கியமான சுவிசேஷ சத்தியத்தை நம்பும்போதும், அதை நாம் தியானிக்கும்போதும், மற்றவர்கள் நம்மை நேசிக்கட்டும், அவர்கள் தங்களை நாம் விரும்பத்தக்கவர்களாக்கிக்கொள்ளட்டும், நாம் அவர்களில் அன்புகூருவோம், அன்பின் கிரியைகளைச் செய்வோம் என்று காத்திராமல் நாமே முந்திக்கொள்ள நமக்குக் கஷ்டமாயிராது. மனிதர் உங்களுக்கு எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்.

சில வேளைவேளைகளில் மாத்திரம் தளதளவென்று கொதித்து, அமர்ந்து அடங்கிப்போகாமல், இந்த உன்னத அன்பு ஊக்கமுள்ளதாக, இடையறாததாக, பெலனுள்ளதாக இருக்கவேண்டுமென்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிறார். முன்னே அவர் ஊக்கமற்ற அன்புள்ளவர். ஒருதரம் 'காவலிலும் சாவிலும் உம்மோடிருப்பேன், எல்லாரும் உம்மைவிட்டு நீங்கினாலும் நான் உம்மைப் பின்செல்வேன்' என்பார். மறுதரமோ 'அவரை அறியேன்' என்பார். அது அவருக்குப் பிரியமில்லை. பின்னால் ஊக்கமுள்ள அன்புள்ளவரானார். அதையே நாமும் அடையவேண்டும் என்று கட்டளையிடுகிறார். அன்பின் கிரியைகளைச் செய்கிறோமா, தேவஅன்பை உண்மையாகவே நம்பி அதைத் தியானித்து அவ்வன்பு கற்பிக்கிறவைகளை நம்மயலகத்தாருக்கும் பகைவருக்கும் நாம் விரும்பத்தகாத குணமுள்ளவர்களுக்கும் செய்துவருகிறோமா? அப்படியானால் நாம் ஊக்கமான அன்புள்ளவர்கள்தான். மற்றப்படி நம்முடைய அன்பு அன்பல்ல, பேயின் வம்பும் தும்பும்—மாயை.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1918

No. 150 நவம்பர் 1918

வேதியர் விளக்கு

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

14-ம் அத்தியாயம்

வணங்கப்பட்டும் கல்லெறியுண்டது

அவர்கள் அந்தியோகியாவை விட்டுப் புறப்பட்டபொழுது ஓர் நேர்த்தியான ரஸ்தாவின்மேல் நடந்து சென்றார்கள். இது ஓர் பெரிய ராஜபாதை. இப்படிப்பட்ட பாதைகளின் மூலமாகத்தான் **லோகமாதா** என்று சொல்லப்பட்ட ரோமாபுரி, மத்தியதரைக் கடலைச் சூழ்ந்திருந்த பலஜாதியாரோடு சம்பந்தப்பட்டிருந்தது.

பவுல் பர்னபா என்பவர்களுடைய காலத்துக்கு 50 வருஷங்களுக்கு முன்னமே அடிமைகளும் கைதிகளும் நிலந்தோண்டி இந்த ரஸ்தா முழுவதையும் அமைத்திருந்தார்கள். அவர்கள் சற்பாறைகளை உடைத்து அவைகளைச் சரளைக்கற்களாக நொறுக்கி, மண்ணின் மேற் பரப்பி நன்றாய்க் கெட்டித்தார்கள். இப்படி ஒன்றின்மேலொன்றாய் மூன்று அடிக்குச் சரளைக்கற்களால் ரஸ்தா கெட்டிப்பட்டிருந்தது. அப்பால் இந்த ரஸ்தாவின்மேல் ஒன்றோடொன்று நெருக்கமாய்ச் சேர்கிற பாறைக்கல்லுகள் போட்டிருந்தன. தண்ணீர் லேசாய் இருபுறமும் சாய்ந்தோடும் வண்ணம் ரஸ்தாவின் மத்திபாகம் சற்று உயர்வாயும் இரு ஓரங்களும் சற்றுத் தாழ்வாயுமிருந்தன.

பவுலும் பர்னபாவும் தென்கீழ்த்திசையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். இந்த ரஸ்தா வசந்தகால சூரியவெளிச்சத்தில் வெகு அழகாய்த் தோன்றினது. மலைகளிலிருந்த கள்ளர்கள் இந்த ரஸ்தாவைப் பார்த்துப் பயந்தார்கள். ஏனெனில் இந்த ரஸ்தா நெடுக ரோமச்சைனியங்கள், இடுப்பிற் பட்டயமும், புஜத்தில் கேடகமும் வைத்துக்கொண்டு வீரைவாகப் போய்க்கொண்டிருப்பார்கள். ரோமருடைய கழுகுக்கொடி இம்மலைப்பிரதேசமுழுவதும் ஆடிக்கொண்டிருந்தது. இந்த ரஸ்தாவின் மூலமாகத்தான் ரோமாபுரி,

பிரித்தானியா முதல் ஐபிராத்து நதிவரையுமுள்ள தேசமனைத்தையும் அடக்கி நடத்திவந்த சைனியங்களோ ஒன்றின்பின் ஒன்றாய் அனுப்பினது. எழுமலை அசியாகிய ரோமாபுரி இந்த ரஸ்தாவின் மூலமாகத்தான் தனது பிரஜைகளுக்குச் செய்திகளோ அனுப்பிக்கொண்டிருந்தது.

நியாப்போலி என்ற பட்டணம் தங்களுக்கு எதிரேயிருக்கிறதை இந்த ரஸ்தாவிலிருந்து அவர்கள் கண்டார்கள். பவுலும் பர்னபாவும் இந்தப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தபோது, இங்குள்ள வியாபாரக் கூட்டத்தாரிடத்தில் தங்களைப்போன்ற பிரயாணிகளுக்கு அவசியமான சாப்பாடும் விடுதிகளும் கிடைக்குமென்றும், அதோடு கூடக் குதிரைகள் தங்குகிறதற்கு லாயங்களும் தூர இடங்களுக்கு விரைவாய்ச் செல்லுகிறதற்கு அவசியமான வாடகைக் குதிரைகளும் அகப்படுமென்றும் அவர்கள் அறிந்தார்கள்.

குதிரைகள் விரைவாய் ஓடிவருகிற சத்தம் கேட்டது. வியர்வை வியர்த்துக்கொண்டிருக்கிற குதிரைகள் வந்து நின்றன. அவைகளுடைய முதுகிலிருந்து மூட்டைகள் இறக்கப்பட்டன. இந்தத் தபாற்கடித மூட்டை, உலகமுழுவதையும் ரோமராஜாங்கத்தோடு இணைக்கிறது: கிழக்கத்துப்பட்டணங்களிலிருந்து இவ்விதமாய் வந்து கொண்டிருந்தன.

இத்தபாலைக் கொண்டுபோகிறதற்கு புதுக்குதிரைகள் வந்தன. ஆயுதபாணிகளான வீரர்கள் இவற்றின்மேல் ஏறி அந்தியோகியாவைக் கடந்து லெக்கல் பள்ளத்தாக்கு மூலமாய் எபேசுவுக்குச் செல்லுவார்கள். அங்கேயிருந்து தபாற்கப்பலில் ஏற்றி ஏகிய கடலையும் அத்ரியாக்கடலையும் கடந்து பிரிந்தீசியம் என்னும் பட்டணத்துக்கு அனுப்புவார்கள். அங்கேயிருந்து திரும்பவும் குதிரையின்மேலேற்றி ரோமாபுரிக்குச் செல்லுவார்கள்.

கிழக்கையும் மேற்கையும் ஒன்றாய் இணைக்கிற இப்பாதையைப் பவுல் கண்டபோதும் குதிரைகளினுடைய குளம்படிச் சத்தத்தைக் கேட்டபோதும் பவுலினுடைய மனதிலே ஒரு பேராவல் உண்டாயிற்று. அதாவது தம்முடைய சுவிசேஷத்தையும் இவ்விதமே கிழக்கிலிருந்து மேற்குக்குப்போய் இந்த ரஸ்தா செல்லும் பாதை எல்லாம் செல்லவேண்டும் என்பதும், பவுலாகிய தாமே கர்த்தருடைய தெய்வீக தபாற்காரனாக அவருடைய திருவசனத்தைக் கூறிக்கொண்டு இந்த ரஸ்தாவில் ஒரு மூனையிலிருந்து மறுமூனைவரைக்கும் செல்ல வேண்டும் என்பதுமே.

இவ்விதம் பவுலும் பர்னபாவும் கிழக்குநோக்கிச் சென்றார்கள். கிரேக்கத் தீவுகள் இருக்கிற கடற்கரை ஓரங்களிலிருந்து வருகிற

வியாபாரக் கூட்டத்தாரையுடைய ஒட்டகங்களையும் பாலை வனத்திலிருந்து மேற்குமுகமாய் வருகிற வியாபாரக்கூட்டத்தாரையும் இவர்கள் சந்தித்தார்கள். இவர்களில் சிலர் பாரசீகத்திலிருந்தும் பவுலினுடைய ஜென்ம ஸ்தலமாகிய தர்சுபட்டணத்திலிருந்தும் வந்தார்கள்.

இந்த ரஸ்தாவிலிருந்து ஓர் கிளைப்பாதை பிரிந்து ஒரு மலையின் மேற் சென்றது. இவ்விருவரும் இக்கிளைப்பாதையைத் தொடர்ந்து அம்மலையின்மேல் ஏறினார்கள். அவர்களுக்குமுன்னே ஒரு பெரிய சமபூமி கிடந்தது. இதன் மத்தியிற் கோட்டைமதில்களை உடைய ஒரு பட்டணம் இருந்தது. இதுவே இக்கோனியா பட்டணம். இப்பட்டணத்தைப் பார்த்தவுடன் பவுலுக்குத் தமஸ்கு பட்டணத்தின் ஞாபகம் வந்தது. இக்கோனியா பட்டணத்துக்கும் தமஸ்கு பட்டணத்துக்கும் பலவித ஒற்றுமைகள் உண்டு. தமஸ்கு பட்டணத்தைப்போலவே இதுவும் ஒரு சமவெளியில் இருந்தது. அழகிய தோட்டங்கள் நிறைந்தது. மேல்புறத்தில் மலைத்தொடர்களை உடையது. மலையிலிருந்து ஓடிவருகிற நதியை உடையது. இக்கோனியா, தமஸ்கு என்னும் இவ்விரண்டு பட்டணங்களும் அதிக பூர்வீக பட்டணங்களாய் இருந்தாலும் தற்காலம்வரை நிலைத்திருக்கின்றன. காடான நிலங்களைக் கடந்துவருகிறவர்கள் தண்ணீரைத் தேடுகிற முதல் ஸ்தானங்கள் இவைகளானபடியால் இவை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். இவைகளை வனாந்தர துறைமுகங்கள் என்னலாம். மலையிலிருந்து இறங்கிச் சமவெளியில் நடந்து இக்கோனியா வந்து சேர்ந்தார்கள். இவ்விரண்டு கூட்டாளிகளும் பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்து நூறு மைல் தூரம் பிரயாணம் பண்ணியிருந்தார்கள். இந்தப் பாகத்துக்குத் தலைநகர் இக்கோனியாவே. அவர்கள் இக்கோனியா பட்டணத்தின் தெருக்கள் வழியாக நடந்து சென்றபோது அந்தியோகியாவிலிருந்ததுபோல அத்தனை அதிகமான ரோம உத்தியோகஸ்தர் இல்லை என்று கண்டார்கள். அந்தியோகியா, இக்கோனியா என்னும் இரண்டு பட்டணங்களும் ரோமபட்டணங்கள்தான். வெளியவர்களும் பட்டிக்காட்டாரும் தவிர மற்ற யாவரும் கிரேக்குப்பாஷை பேசினார்கள். அந்தியோகியா ராஜாங்கஸ்தானம். இக்கோனியாவோ வியாபாரஸ்தானம். கிழக்கிலும் மேற்கிலுமிருந்து அநேக வியாபாரிகள் வர்த்தகத்தின் பொருட்டு இப்பட்டணத்துக்குப் போக்கும் வரவுமாயிருப்பார்கள்.

செம்புச் சுரங்கங்களும், பாதரசச் சுரங்கங்களும் மிகுந்திருந்த இந்த மலையின்மேலே ஓர் விசேஷித்த ஆலயம் இருந்தது. இந்த ஆலயம் மாதா பூமிதேவிக்கு உரியது. இவள் சமவெளியில் இருந்த

பூமிக்குள் வாசம்பண்ணுகிறவள். விலையுயர்ந்த லோகங்களையும், மலைகளிலிருந்து உற்பத்தியாகின்ற ஆற்றையும், கரைகளிலிருந்து விளைகிற வியாபாரப் பலன்களையும் கொடுக்கிறவள் என்று எண்ணினார்கள். கிரேக்கர்கள் இவளை ஜையநேவியாகிய அத்தேனுள் என்று சொல்லி, இக்கோனியா பட்டணத்திலுள்ளவர்கள் அத்தேனுளாகவே அவளை வணங்கவேண்டுமென்று அவர்களுக்குச் சுற்பித்தார்கள். அப்படியிருந்தும் அந்த ஜனங்கள் யதார்த்தத்தில் அவளை பூழிநேவியாகவே பாவித்து வணங்கிவந்தார்கள். இவளுடைய கூட்டாளி ஒரு சர்ப்பம். அவளுடைய ஆஞ்ஞையை நிறைவேற்ற இச்சர்ப்பமானது பூமியிலிருந்து வெளியே வருமாம்.

பவுலும் பர்னபாவும் தாங்கள் அந்தியோகியாவில் செய்ததுபோல்வே இயேசுவைப்பற்றி பேசும்படியாக ஒய்வுநாளிலே ஜெபஆலயத்துக்குச் சென்றார்கள்.

இங்கே இவர்கள் இருவரும் அதிக வல்லமையோடு பேசினார்கள். யூதரும் கிரேக்கருமாகிய அநேக ஜனங்கள் இவர்கள் சொன்னது எல்லாம் உண்மை என்று நம்பினார்கள். ஆனால் யூதர்களில் சிலரோ இதை ஒப்புக்கொள்ளமாட்டோமென்று மறுத்து விட்டார்கள்.

'நாடோடிகளாகிய இந்தப் பயல்கள் தங்களுடைய சுயநயம் கருதி கிறிஸ்துவைப்பற்றிய இந்தக்கதையைச் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இந்தக் கிறிஸ்து, நமது சமபூமியில் உள்ள கூட்டுப்பாதைகளில் தூக்கிட்டு கொல்லப்படுகிற துஷ்டகள்ளர்களைப்போல, ரோமர்களுடைய சிலுவைமரத்தில் தூக்கப்பட்டு செத்தவனும். இப்படிப்பட்டவன் மறுபடியும் உயிரோடெழுந்தான் என்று இவர்கள் கூறுகிறார்கள்' என்று சொல்லி அலட்சியம் பண்ணினார்கள். அந்தியோகியாவுக்கும் இக்கோனியாவுக்கும் போக்குவரவு சம்பந்தம் அதிகம் உண்டு. ஆகவே அந்தியோகியாவிலிருந்து இக்கோனியாவுக்கு வந்த வியாபாரிகளுள்ளும் உத்தியோகஸ்தருள்ளும் சிலர் இவர்களைக் கண்டு 'ஆ, இந்தப் பயல்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள். இவர்கள் ஜனங்களைக் கலக்குகிறார்கள்' என்று சொல்லி 'நாங்கள் அந்தியோகியாவிலிருந்து இவர்களைத் துரத்திவிட்டோமே, நீங்களும் ஏன் அப்படிச் செய்யலாகாது?' என்று சொல்லுவார்கள். ஏங்கும் பெரிய அமளி உண்டாயிற்று. இவ்விருவரும் அந்தியர் என்பதை ஒழிய இவர்களுக்கு விரோதமாய் ஒரு குற்றமும் அறியாவிட்டாலும், 'இவர்களைக் கல்லெறிந்து கொல்லுங்கள், கல்லெறிந்து கொல்லுங்கள்' என்று சிலர் கத்தினார்கள். பவுலையும் பர்னபாவையும் அருவருப்பாய் எண்ணின இவர்கள், சந்தை வெளியில் உள்ளவர்களையும் பட்ட

ணத்திலுள்ள சர்வ ஜனங்களையும் இவ்விரு கூட்டாளிகளுக்கும் விரோதமாய் எழுப்பிவிட்டார்கள். வேறு சிலர் 'என்? இவர்கள் என்ன செய்தார்கள்?' என்றார்கள்.

இவர்களுக்கு விரோதமான மூர்க்காவேசம் அதிகப்பட்டது. ஜனங்கள் இவர்களுக்கு விரோதமாக மொறுமொறுத்து இவர்களைப் பயமுறுத்தினார்கள். ஆகையால் பவுலும் பர்னபாவும் அங்கேயிருந்து தப்பி சமவெளி வழியாய்ப் புறப்பட்டார்கள். பகல் எல்லாம் அவர்கள் நடந்தார்கள். இவர்கள் சென்ற ரஸ்தாவானது ஒரு கல்மலைச் சிகரத்துக்குச் சென்றது. அதிலிருந்து அவர்கள் ஒரு அகன்ற பள்ளத்தாக்கைக் கண்டார்கள். இப்பள்ளத்தாக்கினூடே ஓர் அழகான நதி ஓடிக்கொண்டிருந்தது. வெகுதூரத்திலே தென்கீழ்த்திசை கோடியிலே தௌரஸ்மலைத்தொடரைப் பார்த்தார்கள்.

அம்மலையின் உச்சியிலிருந்து பள்ளத்தாக்கில் அவர்கள் இறங்கினபோது அவர்கள் நெருக்கமாகக் கட்டப்பட்டிருந்த ஓர் பட்டணத்தைக் கண்டார்கள். அது வட்டவடிவமாய் ஓர் மலையின்மேல் கட்டப்பட்டிருந்தது. அப்பட்டணத்திற்கு லிஸ்திரா என்று பெயர். இதன் இரண்டு பக்கங்களில் ஓர் சிற்றாறு ஓடினது. இவர்கள் முன்னே நடந்து சென்றதும் இக்கோனியாவுக்குப் போகும்படி பிரிந்து சென்றதுமான பெரிய ரஸ்தாவில் திரும்பவும் சேர்ந்தார்கள். அந்தியோகியாவைப்போலவே லீஸ்திராவும் ஒரு ரோம குடியேற்ற ஸ்தானம்; ரோம ஆஞ்ஞைகள் பிறந்ததும், ரோம அதிகாரம் செலுத்தப்பட்டதுமான ஓர் மையஸ்தானம். ஆயினும் இது ரோமாபுரியைவிட சிறியதும் புதியதுமாயிருந்தது.

பட்டணத்தின் தலைவாசலுக்கு எதிராக ஆற்றங்கரையிலே ஒரு ஆலயம் இருந்தது. இது தேவர்கள் தலைவனை ஜூபிடர் உடையது. வெள்ளை அங்கி தரித்த பூசாரிகள் இங்கே காளைகளைப் பலியிடுவார்கள். ஜூபிடர் தாமே ஒருகாலத்தில் தன் தூதனுகிய கோமஸ் என்பவனோடு இப்பட்டணத்துக்கு விஜயம்செய்வார் என்பதாக ஓர் புராணக்கதை இருந்தது. பவுலும் பர்னபாவும் இவ்வாசல் வழியாய் பட்டணத்தின் தெருக்களுள் சென்று அங்கே சிலகாலம் தங்கினார்கள்.

ஒருநாள் பவுல் திறந்தவெளியான ஒரு இடத்தில் நின்று பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார். திரள் கூட்டமான ஜனங்கள் அதைக் கேட்கிறதற்குக் கூடிவந்தார்கள். தான் பிறந்ததுமுதல் பிறவிச் சப்பாணியாகிய ஒருவன் அங்கே இருந்தான். இவன் பவுல் பேசுகிறதை மிக்கக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தான். பவுல் இவனை உற்றுப்பார்த்தார். தன்னை நல்லவனுக்கக்கூடிய விசுவாசம்

அவனிடம் உண்டு என்பதைக் கண்டார். தம்முடைய பிரசங்கத்தை நிறுத்தினர். இவன் முகமாய்த் திரும்பி மிக்க ஆவலோடு அவனை உற்றுப்பார்த்து உரத்தசத்தமாய் 'நீ எழுந்து காலூன்றி நில்' என்று சொன்னர். அவன் குதித்து, எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

கூடிவந்திருந்த லீஸ்திரா பட்டணத்தார் தங்கள் கண் கண்டதை நம்பக்கூடவில்லை. குணமாக்கப்பட்ட இவன், தன்னைச் சப்பாணி என்று சொல்லிப் பாசாங்குபண்ணிக்கொண்டு நிரிந்த நாடோடியான பிச்சைக்காரன் அல்ல. இவன் இப்பட்டணத்தாரைச் சேர்ந்தவன். இவன் சப்பாணி என்பது இவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இவர்கள் பவுலுக்குத் தெரியாத தங்கள் இக்கோனியா பாஷையில் 'தேவர்கள் மனிதர்களாய் நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள்' என்று சத்தமாய்ச் சொன்னர்கள்.

Haridasi

Translated by Mr. Samuel Muthiah and Mr. G. N. Moses

ஹரிதாசி

ஹரிதாசி தன் தகப்பனுக்கு ஒரே மகள். அவளுடைய தந்தையின் பெயர் இராமேசுவரபாபு. அவர் கல்குத்தா நகரிலுள்ள வர்த்தகசாலையொன்றில் பொக்கிஷதாரி வேலை பார்த்துவந்தார். அவருக்குச் சம்பளம் மாசம் ஒன்றுக்கு ரூபா 200. ஹரிதாசி பிறந்த அன்றே அவளுடைய தாய் இறந்துபோனதால், அனுபவம் முதிர்ந்த ஒரு செவிலித்தாய் அவளை வளர்த்துவந்தாள்.

இராமேசுவரபாபு வயதுசென்றவரானதால், தம் மனைவி மரித்த பின் மறுவிவாகம் செய்யவில்லை. அவர் ஒரு ஏழைப் பிராமணப் பையனைத் தெரிந்தெடுத்துத் தன் வீட்டிலே வைத்துப் பராமரித்து வந்தார். அவன் பெயர் ஹரேந்திரன். ஹரிதாசியும் ஹரேந்திரனும் பாலியராயிருக்கும்போதே இராமேசுவரபாபு அவர்களுக்குக் கலியாணம் செய்வித்தார். ஹரிதாசியோ கலியாணமென்றால் என்னவென்றறியாள். ஹரேந்திரனும் அப்படியே. இருவரும் ஒருவரையொருவர் பெயர் சொல்லிக் கூப்பிடுவதும் கூடி விளையாடுவதும் வழக்கம். பள்ளிக்கூடம் போயிருக்கும் ஹரேந்திரன் வீட்டுக்கு எப்போது திரும்பிவருவானென்று ஹரிதாசி வழிபார்த்து நிற்பாள். அவன் வந்தவுடன் இருவரும் திண்ணையிலுட்கார்ந்து பேசிச் சிரித்து விளையாடி சிறுவருக்குரிய வழக்கத்தின்படி வீதியிற் செல்லும் மனிதரையும் வண்டில்களையும் எண்ணிப் பொழுது போக்குவார்கள்.

இராமேசுவரபாபு வேலை முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் இருவரும் ஓடி அவரருகிலுட்கார்ந்து தத்தம் பாடங்களை ஒப்புவிப்பார்கள். அப்பால் இரவில் சாப்பிட்டபின் இருவரும் செவிலித்தாயினருகில் படுத்து நித்திரைசெய்வார்கள். இந்தவிதம் தங்கள் இளம்பிராயத்தைக் கழித்தனர்.

ஹரேந்திரன் தன் மாமனுதவியால் படிப்பில் தேறி காலாந்தரத்தில் எப். ஏ., பி. எல். பட்டங்களைப் பெற்றான். ஹரேந்திரனுடைய கல்வி அபிவிருத்தியால் ஹரிதாசியின் அகமகிழ்ச்சிக்கு அளவில்லை. மருமகனின் அரிய திறமையைக் கண்ட இராமேசுவர பாபுவும் பேரானந்தமடைந்தார். ஹரேந்திரன் கல்குத்தா நகரைவிட்டு வங்காளத்தைச் சேர்ந்த வேறொரு பட்டணத்துக்குப்போய் அங்கு ஜில்லாக் கோர்ட்டு வக்கீல் வேலைபார்த்து மாசம் ஒன்றுக்கு ரூபா 100 வீதம் சம்பாதித்தான். இவனுடைய சாமர்த்தியத்தைக் கண்ட அநேக கட்சிக்காரர் தங்கள் வியாச்சியங்களை அவனிடம் கொண்டு வந்தார்கள். ஹரேந்திரனுடைய பிரஸ்தாபமும் செல்வாக்கும் அதிகரித்தன. ஆகவே அந்த இடத்தில் குடும்பத்தோடு வசிக்க விரும்பி ஹரேந்திரன் தன் மனைவி ஹரிதாசியை அழைத்துக்கொண்டுபோகக் கல்குத்தாநகர் வந்து சேர்ந்தான்.

மனைவியை இழந்த இராமேசுவரபாபு வேறு பிள்ளைகளில்லாததால் தம் எகபுதல்வி எப்போதும் தம் வீட்டிலேயே இருக்க விரும்பினர். ஹரேந்திரன் கல்குத்தா நகரிலே ஒரு உத்தியோகம் பார்த்துக்கொண்டு ஹரிதாசியோடு தம் வீட்டிலேயே வசிக்கவேண்டுமென்பது இராமேஸ்வரபாபுவின் ஆசை.

ஹரேந்திரன் அநேக விஷயங்களில் தன் மாமனுடைய சொற் கேட்டு அதிக பட்சத்தையும் நன்றியையும் காட்டினபோதிலும் தன் மாமனுடைய விருப்பத்துக்கு மாறாக ஹரிதாசியைத் தான் வேலை பார்த்துவரும் இடத்துக்கு அழைத்துக்கொண்டுபோகத் தீர்மானித்தான். இது விஷயத்தை இராமேசுவரபாபு அறிந்து ஆறுத்தியாதலினால் மனம் வருந்தினர். ஆயினும் அவர் தம் மகனின் சுகவாழ்வை விரும்பினபடியால் ஒருவாறு தேறி அவளைத் தம் மருமகனோடு அனுப்ப மனமொப்பினர். தந்தையை அதிகமாய் நேசித்தாலும் ஹரிதாசி தன் ஆசைக்கணவனுடைய ஹரேந்திரனைவிட்டு கொஞ்சம் பொழுதும் பிரிந்திருக்க விரும்புவாளோ? தன் காதலன் கல்குத்தாவை விட்டுப்போயிருந்த சிறிதுகாலத்தில் அவள் மனம் நொந்து முகம் வாடி வருந்தினது அவளுக்கே தெரியும். கணவனிடமிருந்து கடிதம் வரப் பிந்தினால் கலங்கித் தியங்குவாள். ஹரிதாசியைத்

தந்தையின் அன்பு ஒருபக்கம் இழுத்தது, புருஷன்மேற் பாசம் மறுபக்கம் இழுத்தது. யாருடைய பக்கம் திரும்பினாள் பார்ப்போம்.

(இன்னும் வரும்.)

Love Covereth a Multitude of Sins

A Sermon by Mr. J. D. Barnabas

பிரசங்கம். 1 பேதுரு 4[8].

(தொடர்ச்சி)

இதுவரையும், அன்பின் அர்த்தம் என்னவென்றும் அதை எப்படி அடையலாம் என்றும் கவனித்தோம். இனி அதின் வேலை என்ன? அது என்ன செய்யும் என்று சுருக்கமாய்க் கவனிப்போம்.

'அன்பு திரளான பாவங்களை மூடும்' என்கிறார் பிரசங்கவாக்கியத்தில். யார் பாவங்களை—அன்பு பாராட்டுகிறவன் பாவங்களையோ அல்லது அன்பைப் பெறுகிறவன் பாவங்களையோ? என்பது நியாயமான கேள்வி. 'அன்பு பாராட்டுகிறவன் பாவங்களை' என்று அநேக வேதஞானிகள் சொல்லுகிறார்கள். பரி. பேதுருவும் அப்படியே கருத்துகொண்டிருக்கலாம். அதுவும் நாம் நம்பக்கூடிய சத்தியமே. எவன் இரக்கஞ்செய்கிறானோ அவனுக்கு இரக்கங்காட்டப்படும் என்பதும் தேவபிரமாணந்தான். ஆயினும் இந்த வாக்கியத்திற்கு இந்த ஒரு அர்த்தந்தான் உண்டென்றெண்ண எனக்கு மனசில்லை. இன்று காலையில், கிறிஸ்தவ அன்பு மற்றவர்களுடைய திரளான பாவங்களை மூடும் என்ற சத்தியத்தையே சற்று என்னோடு தியானிக்க மன்றாடுகிறேன்.

நாம் மற்றவர்களுடைய பாவத்தை, தப்பிதங்களை, பிழைகளை எப்படி மூடலாம்? ஏதோ ஒரு மந்திரத்தை உச்சரிப்பதாலோ, அல்லது லேசான, சுளுவான, அதிகக் கஷ்டம் தராத ஏதோ ஒரு உபாயத்தாலோ?—அல்ல, பாடின்றி வந்த லாபம் பலநாள் நிற்காது. நாம் அன்பினாலே நம்மயலார் பாவங்களை மூட ஆசைப்பட்டால் மூன்று முறைகளைக் கையாடலாம்.

முதல் முறை: மற்றவர்களுடைய தவறுதல்களை, அற்பசொற்பக் குறைகளைப் பாராட்டாதிருப்பது. மற்றவர்கள் செய்யும் பிழைகளைப் பாராமல் கண்ணை மூடிக்கொள்வதல்ல. அவைகளைப் பாராட்டி அந்தக் குறைகள் நமக்கும் நம்மயலாருக்கும் அந்நியோன்னியமும் அன்பும் உண்டாவதைத் தடுக்க இடங்கொடுக்க

லாகாது. நம்மிலே யார் பூரணர், யார் குறையில்லாதவர்கள்? மற்றவர்களுடைய குறைகளையெல்லாம் பாராட்டி கவனித்தால், அல்லது மற்றவர்கள் நம்முடைய குறைகளைக் கவனித்தால், நம்முடைய உலகஜீவியம் தாங்கக்கூடாத கஷ்டமுள்ளதாகும். குற்றம் பார்க்கில் சுற்றமில்லை. நம்முடைய சபைகளிலும் பலதரமான நாகரீகமும், அந்தஸ்தும், கல்வியும், தொழிலுமுள்ள கிறிஸ்தவர்கள் உண்டு. ஒருவருடைய குறைகளை ஒருவர் மறந்து ஒருவருடைய பாரத்தை மற்றவர் சுமந்து, ஒருவருக்கொருவர் உதவியுள்ளவர்களாகப் பிழைக்காவிட்டால், ஒரே சரீரமாகிய சபையில் நாம் அங்கங்களாயிருப்பது கூடுமா? கிறிஸ்தவ சமுதாயத்தில், இவ்வகைத் தாங்குதலும் சகிப்பினையும உண்டாகும் நாள் எவ்வளவு பாக்கியமான நாளாயிருக்கும்! அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் சகிக்கும். இயேசு பாடுபட்ட நாளில் பேதுருவின் தவறுதல், மனதிற்கு எவ்வளவு வேதனையுண்டாக்கக்கூடியது!

நாம் அதைப்பார்க்கிலும் அற்பமான காரியங்களிற்கூட மன்னிக்க மனமற்றிருக்கிறதில்லையோ? இயேசுவோ தன் உன்னத அன்பால் எல்லாவற்றையும் மூடினாரல்லவா? எப்படி? முதலாவது தன் உருக்கமான பார்வையினால், இரண்டாவது உயிர்த்தெழுந்த காலையில் சொல்லியனுப்பிய செய்தியால், மூன்றாவது திரும்பவும் அன்னியோன்னியமும் பாசமும் காட்டி, நம்பி, தன் ஆடுகளை மேய்க்கும்படி உத்தியோகமும் கொடுத்ததினால்தானே. அன்பு திரளான பாவங்களை மூடும்.

இரண்டாவது முறை: தோற்றத்தை மாத்திரம் பார்க்காமல் நோக்கத்தையும் கவனித்தல். எல்லாத் தீங்கிலும், அன்பு, நல்ல எண்ணத்தையும் ஆவலையும் கண்டுகொள்ளக்கூடியதாய் இருக்கிறது. விக்கிரகாராதனை—தேவசமுகம் எப்போதும் நம்மோடிருக்கவேண்டும், அவரை அடிக்கடி தரிசிக்கவேண்டும், தேவனை ஞாபகப்படுத்த ஒரு சின்னம் வேண்டும் என்ற நல் எண்ணெங்களால் வந்த தப்பறையல்லவா? பதிலுக்குப் பதில்செய்தல்—நீதிசெய்யவேண்டுமென்ற ஆசையை அடக்க முடியாததினால் வந்த தீங்கல்லவா? இப்படியே எல்லாத் தீங்கும், நன்மையான ஒரு வேரிலிருந்தே உதித்ததாகக் காணலாம். தெய்வீக அன்புள்ளவர்கள், தீமையை மாத்திரம் பார்த்து அதைச் செய்கிறவர்களை அக்கிரமக்காரர் என்று அகற்றிவிடாமல், தீமை எதினாலுண்டானதென்று சோதித்து அந்தத் தீமைக்குவேராயிருந்த நன்மையைக் கண்டுபிடித்து அதைத் திருத்தித் தீமையை மேற்கொள்ள வகை தேடுகிறார்கள். பாவிகள்பேரில் கர்னகடூரமாயிருப்பவர்தான் பரிசுத்தர் என்று நினைக்கிறார்கள் சிலர். தாவீது, நாத்தான் உவமையில்

சொன்ன குற்றவாளியின்மேல் எவ்வளவு கடினதீர்ப்புச் செய்தான்! அவன் அப்போது பரிசுத்தனு? இயேசுவைப்போல் பரிசுத்தர் யார்? அவர் பாவிகளிடத்தில் எவ்விதம் நடந்துகொண்டார்? அதைப் பின் பற்றுவதல்லவா கிறிஸ்தவர்களுக் கழகு? சகோதரனே, நீ உன் அன் பால் மற்றவர்களுடைய பாவங்களை மூடுகிறாயா, நீ குறையற்றவன் போல் உன் அயலாரை வெறுத்து அவர்கள் குறைகளைத் தூற்றித் திரிகிறாயா?

மூன்றாவது முறை:- விரும்பத்தகாத குணமுள்ளவர்களையும் விரும்பப் பிரயாசப்படுதல். நம்மை வெறுக்கிறவர்களையும், நம்மோடு நடக்க, நினைக்கப் பிரியமற்றவர்களையும் விரும்பி யுறவாட முயல் தல். இது எப்படிக் கூடியகாரியம்? நம்மைப் பகைத்து நமக்குத் தீமை செய்யவே கங்கணங்கட்டித் திரிகிறவர்களை நேசிப்பது லேசா? இல்லை, கஷ்டந்தான். மாம்ச சுபாவத்தின்படி இது கூடாத காரியந்தான். ஆனால் சகோதரனே, நீ மாம்சத்திற்குரியவன்தானே? மாம்சத்திற்கு இணங்குவதை இன்னும் ஒழித்துவிடவில்லையோ? ஆவியின் பலன் அபத்தமோ? பகைவரை நேசிக்கக் கட்டளையிட்ட இயேசு நீ விரும்பினால் பகைவரை நேசிக்கக் கிருபையும் பெலனும் தாராரோ? மனிதரால் கூடாததுதான். தேவனால், தேவசகாயத்தால், எல்லாம் கூடும் என்றாரே.

உன்னத அன்பு, ஊக்கமான அன்பு, மற்றவர்கள் பாவங்களை மூடுகிற அன்பு, உனக்கு விரோதம் செய்கிறவர்களைச் சகித்து மன் னித்து அவர்களை நேசித்து உறவாடும் அன்பு உனக்கு உண்டோ? அதை அடைய உனக்கு ஆசையோ? அதை எப்பொழுதும் உன் னுடையதாக்கிக்கொள்ள விருப்பமோ? எழுந்து நட, எசு பெலன் தருகிறார். யாரை நேசிக்கமுடியவில்லையோ அவர்களுக்காக ஜெபி; அவர்களைப் பட்சத்தோடு நினை; அவர்கள்மேல் அன்பின் கிரியை களைக் குவி; அவர்களை நேசிக்காமலிருக்க உன்னலாகாது. ஆமென்.

Zeal

Stories translated by Mrs. G. E. Phillips

உற்சாகம்

'செய்யும்படி உன் கைக்கு கேரிகிறது எதுவோ அதை உன் பெலத் தோடே செய்.' பிரசங்கி 9[10].

'அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலா யிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்.' ரோமர் 12[11].

I. இஸ்பானிய தேசத்தானுகிய சித்திரக்காரன் ஒருவன் தன் பேர்போன படங்களை எழுதின லிதத்தைக் கவனித்துப்பார். ஒரு நாள் அவன் படம் எழுதும் அறையிலே ஒரு விநோதக் காட்சி காணப்பட்டது. அங்கே அநேக ஈட்டிகள், வாள் கத்திகள் முதலிய வைகள் இருந்தன. சித்திரக்காரனே ஒரு எக்காளத்தை ஊதி மேளத்தை அடித்து கையிலே கேடகத்தையும் வாளையும் பிடித்துக் கொண்டு சுவர்மேல் பாய்ந்து பெரிய சத்தமிட்டான். அதைக் கண்டு அவனுடைய வேலைக்காரரும் மாணாக்கரும் ஆச்சரியத் தோடும் நடுக்கத்தோடும் ஓடிப்போனார்கள். ஆனால் தீமையைச் செய்ய சித்திரக்காரனுக்கு நோக்கமில்லை. ஒரு யுத்த படத்தை வரைய அவன் விரும்பி, யுத்தம் இன்னதென்றும், பார்வைக்கு எப் படித் தோன்றும் என்றும், போர்வீரர் எப்படியிருப்பார்கள் என்றும் உணர்ந்து தன்னால் ஆனமட்டும் ஒரு நல்ல படத்தை வரைய முயற்சி செய்தான். அதைக் கண்டு, அவன் நோக்கத்தை அவனுடைய மாணாக்கர் அறிந்தபோது ஒரு வேலையை நிர்விசாரத்தோடு செய் கிறதற்கும் வைராக்கியத்தோடு செய்கிறதற்கும் இருக்கிற வித்தியா சத்தை உணர்ந்தார்கள்.

II. ஒரு பிள்ளை ஒருநாள் ஒரு ஆற்றின் வாராவதியின்மேல் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது ஆற்றில் தவறி விழுந்தது. உடனே வேறே யாரோ குதித்த சத்தம் கேட்டது. அது யார் என்றால், புருஷனல்ல, ஸ்திரீயல்ல, பிள்ளையுமல்ல, அது ஒரு நாய். பயமில்லாமல் உடனே ஆழமான ஜலத்தில் குதித்து மூழ்கினது. பிள்ளையின் வஸ்திரத்தைத் தன் வாயினாலே கௌவி அந்த நல்ல நாய் அச்சிறு பிள்ளையைச் சுகமாய் மறுபடியும் கரைக்குக் கொண்டு வந்தது. திரும்பவும் தண்ணீரிலே சல சல என்ற சத்தம் கேட்டது. அது என்ன? இன்னொரு பிள்ளை ஆற்றிலே விழுந்ததா? என்ன சமாசாரம்? நாய் ஏன் திரும்ப ஜலத்தில் பாய்ந்ததென்று சூழ்ந்

ரைத் தேவர்கள் பலருண்டு. அரசன் ஒருவனுயினும் அவருக்குப் பல சிப்பந்திகளுண்டே.

(உத்தாரம்.) சர்வ வல்லமையும் சர்வ ஞானமுமுள்ள கடவுளுச் சிற்றறிவும் பெலவீனமுமுள்ள மனுஷனுக்கு ஒப்பிடல் தகுமியன்று. அப்படிச் சொன்னுல் கடவுளும் மனுஷரைப்போலவே அசக்தரும் ஞானசூனியருமாவார். பூலோக அரசனுக்குச் சர்வ ஞானம், சர்வ வியாபகம் முதலிய லட்சணங்கள் இல்லாதபடியால் அவனுக்கு மந்திரி முதலியவர்களின் உதவி தேவைதான், கடவுளுக்கு இவ்வித உதவி தேவையில்லை.

3. அவன் அசையாமல் அணுவும் அசையாதே. தெய்வச்செயலின்றி மனுஷன் பாவத்தைச் செய்வானு?

(உத்தாரம்.) கடவுள் பரிசுத்தர். பரிசுத்தம் அசுத்தத்தைப் பிறப்பிக்கமாட்டாது. ஒரே ஊற்றிலிருந்து உவர்ப்புந் தித்திப்புமான தண்ணீர் பிறக்குமா? வெண்மைக்கும் கருமைக்கும் வித்தியாசமில்லையா? பூரண நித்திய வஸ்துவாயிருக்கிற கடவுள் சுத்தரும் அசுத்தருமாயிருப்பதெப்படி? 'சோதிக்கப்படுகிறவனெவனும் தான் தேவனுல் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானுக. தேவன் பொல்லாங்கினுல் சோதிக்கப்படுகிறவரல்ல. ஒருவனேயும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினுலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறுன்' என்று வேதம் சொல்லுகிறது.

4. மனுஷரைச் சிருஷ்டித்த கடவுள் எல்லாருக்கும் ஒரே புத்தியைக் கொடுத்து அவரையே வணங்கவும் மற்றவைகளுக்குக் கையெடுக்கப் பண்ணுதிருக்கவும் செய்தாலென்ன?

(உத்தாரம்.) ஒரு தகப்பன் தன் வீட்டிலுள்ள ஒரு அறையில் தின்பண்டங்கள் நிறைந்த ஒரு தட்டை வைத்துவிட்டுத் தன் மகனைப் பார்த்து, அப்பா, நீ இந்த அறையைவிட்டு வெளியே போகாமலும் தட்டிலுள்ள பண்டங்களைத் தொடாமலும் இருவென்று கட்டளை கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டான். திரும்பி வந்து பார்த்தபோது மகன் வெளியேபோகாமலும் பதார்த்தங்களை எடுத்துத் தின்னுமலும் இருப்பதைக் கண்டால் சந்தோஷப்படுவானல்லவா? தன் மகன் யோக்கியனென்றும் புகழுவான். ஆனுல் இதற்குமாறாக முன்சொன்ன பண்டங்களை வைத்து அதே கட்டளையும் கொடுத்துவிட்டுப் பையனைப் பலமான கயிற்றினுல் ஜன்னலில் கட்டிவைத்து வெளியேபோய்விட்டுத் திரும்பிவந்து பார்த்தபோது மகன் வெளியே போகாமலும், சாமான்களில் ஒன்றையும் தொடாமலும் கட்டி வைத்தபடி இருக்கக்கண்டு பையன் யோக்கியன் என்று புகழ இடமுண்டோ? இல்லையே. அவிழ்த்து விட்டாலல்லவோ தம்பியின் காரியம் தெரியும். ஆகையால் கட்டாயத்தினுலாகிறது சன்மார்க்கமாகாது. கடவுள் மனிதரை நல்லவர்களாகும்படி கட்டாயப்படுத்தமாட்டார். கட்டாயத்தால் உள்ள கற்பு கற்பல்லவே.

'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மாந்தர்
நிறைகாக்கும் காப்பே தலை.'

மேலும் ஒருவனைச் சிநேகிக்கிற சிநேகம் உள்ளபடியே இருதயத்திலுண்டாகவேண்டும். இதற்குப் பதிலாக அந்த மனிதனைத் தடியால் அடித்துச் சிநேகிக்கும்படி கட்டாயப்படுத்தினுல் ஒருவேளை அடி பொறுக்கமாட்டாமல் சிநேகிக்கிறேன் என்று சொன்னபோதிலும் உள்ளபடியே மனதாரச் சிநேகிக்கிற சிநேகம் ஆகமாட்டாது. அப்படியே கடவுள் நம்மைக் கட்டாயம்பண்ணுகிறதில்லை. நமக்குச் சுயாதீன சித்தத்தால் நன்மை தீமையைத் தெரிந்துகொள்ளச் சக்தியைத் தந்திருக்கிறார்.

5. மனுஷன் பாவத்தில் விழுவான் என்று அறிந்த தேவன் என் அவனைத் தடுக்காமல் பாவத்தில் விழவிட்டார்?

(உத்தாரம்.) இந்தக் கேள்வி சுயாதீனமாய் நடக்கமாட்டாமற் பலாத்காரமாய் ஏவி நடத்தப்படுகின்ற மிருகங்களைப்போல அவனை என் தேவன் படைக்காமல் விட்டாரென்று கேட்பதுபோல் இருக்கிறது. மனுஷன் சுயாதீனமற்றவனுய் இருப்பானுகில் அவன் செய்யும் எந்தச் செய்கைக்கும் தேவனே உத்தரவாதியாயிருக்கவேண்டிவரும். ஆகவே, அவன் செய்யும் ஒவ்வொரு பாவத்துக்குந் தேவனே காரணரென்பதாய் முடியும். தேவன் தீமைக்குக் காரணரென்று நிறுவுவது வேதம் ஒரிடத்திலேனும் சொல்லாது. இந்து சாஸ்திரங்களே தேவன் தீமைக்குக் காரணரென்னும்.

6. ஆதாமும் ஏவாளும் பாவஞ்செய்து சாபத்தையடைந்தார்கள். அவர்கள் பெற்ற பிள்ளைகளும் என் பாவச் சுபாவத்தோடு பிறக்கும்படி கடவுள் செய்யவேண்டும்? பாவமும் சாபமும் அவ்விருவரோடும் என் நின்றுவிடக்கூடாது?

(உத்தாரம்.) 'அரவுங் காலிலே தீண்டிட விஷம்
அங்கமுழுதும் பரவிடும்
தருவில் ஏவையாள் தின்றிடும் நஞ்சவள்
தலைமுறைக்கெல்லாம் தொலையாமல் நிற்கும்.'

பெருவிரலில் விஷம் தீண்ட அந்த விஷம் தேகமுழுதும் பரவி மூளைக்குப் போய் மனுஷன் சாகவேண்டியதென்ன? விஷம் தீண்டப்பட்ட அப்பெருவிரல் மாத்திரம் செத்தாலென்ன? பெருவிரல் முதற்கொண்டு சிரசிலிருக்கும் மூளைவரையும் இரத்தவோட்டமிருப்

பதினெல்தான் பெருவீரனில் உண்டான விஷம் மூளைக்கு ஏறுகிறது. அப்படிபே நம் பிள்ளைகளும் நம்முடைய இரத்தக்கலப்பாயிருப்பதால் நம்முடைய பாவச் சுபாவம் அவர்களுக்கும் பலிக்கிறது. 'ஒரே குட்டையிலே ஊறின மட்டை' என்ற பழமொழிப்படி பிள்ளைகளும் நம்மிலிருந்து உண்டானவர்களே.

'அடிமரத்தை நாம் வெட்டிட—கிளை
அனேத்தும் காய்ந்திடும் அதுபோல்
படியில் ஏவையின் பழவினைக்கு நாம்
பங்காளியாமென்றார் தங்க யெண்ணையாவே.'

அல்லாமலும் உடைமரம் அல்லது கருவேல் மரம் மூளைக்கும் போதே முள்ளோடு மூளைக்கும். இனம் இனத்தைப் பிறப்பிக்கும். 'இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.' தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை.

7. கடவுளைக் காட்டுங்கள், அப்போது நாங்கள் அவரை நம்பி நமஸ்கரிப்போம்.

(உத்தரம்.) இத்தேசத்தை அரசாளும் காருண்ணிய 5-வது ஜியார்ஜ் மன்னர் ஆங்கில தேசத்தில் வசிக்கின்றார். அவர் எங்கே இருக்கிறரென்றும், எவ்வளவு உபாயமாக அரசியற்றுகிறரென்றும் பிரஜைகளிற் பெரும்பான்மையோர் அறிந்ததில்லை. ஆயினும் அவ்வரசன் செங்கோல் செலுத்துவதை அறியாதவன் யாவன்? அவ்வாறே இப்புறக்கண்ணால் கடவுளைக் காணுதிருந்தும், அவரே நம்மையும் இப்பிரபஞ்ச முழுவதையும் உண்டாக்கி ஆண்டு நடத்துகிறார். இதை அல்லவென்பவன் யாவன்? மேலும், கடவுளைக் காட்டும்படி ஒரு மகம்மதிய குருவைக் கேட்ட சேஷனை குரு மண்டையில் மண்கட்டியால் அடித்தாராம். காரணம் என்னவெனில், நீ நோகுதென்கிறாயே, உன் நோவைக் காட்டு அப்போ கடவுளைக் காட்டுவேன் என்றாராம். வயிறு பசிப்பதைக் காட்டக்கூடுமானால் வானவனைக் காட்டுவேன் என்றாராம் வேறொருவர். கடவுள் உருவத்தைத் திருஷ்டித்து அதை யாண்டு நடத்திவருவதால் கடவுளிருப்பதை நம்பவேண்டும்.

'அத்தனைப் முன்னோர்தம்மை அறிகிலன் இலனென்பானை
சத்தமின் சுவைகந்தத்தைத் தரியா னிலனென்பானை
நித்தனைக் கண்ணிற்காண நீண்மையா லிலனென்றோதும்
பித்தரில் பித்தர்பாரில் பேசிட்வளரோ வம்மா?' நீதிநூல்.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1918.

No. 151 டிசெம்பர் 1918

வேதியர் விளக்கு

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

14-ம் அத்தியாயம்

வணங்கப்பட்டும் கல்லெறியுண்டது

(தொடர்ச்சி)

ஜூபியஸ் தேவர்களுக்குத் தலைவன். மௌனமுடையவனுய் அசைக்கப்படாத தன்மையை உடைய மனுஷனை விசேஷித்தவன் என்பது கிழக்கத்தியாருடைய கோட்பாடு. ஹெர்மேஸ் என்பவன் அவனுடைய தூதன். விரைந்து சாதுரியத்துடன் பேசக்கூடியவன், ஜூபியஸ், ஹெர்மேஸ் என்பவர்களை முறையே யூபித்தர் என்றும், மேர்க்குரி என்றும் கிரேக்கர் சொல்லுவார்கள். ஆகவே அமைதலுள்ள பர்னபாவை யூபித்தர் என்றும், சாதுரியப் பிரசங்கியாகிய பவுலை மேர்க்குரி என்றும் இப்பட்டணத்தார் சொன்னார்கள். பவுலும் பர்னபாவும் ஜனங்களுக்குள் ஒரு பெரிய இளர்ச்சி உண்டாவதைக் கண்டார்கள். ஓர் சப்பாணியைத் தாங்கள் நடக்கும்படி செய்ததினிமித்தம் இது இயல்பாய் நடக்கிறதென்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் சீக்கிரம் அவர்கள் மாடுகள் கத்தின சத்தத்தைக் கேட்டார்கள். அவைகளுக்கு மாலைகள் தரித்துக் கோட்டைவாசலுக்கு எதிரேயிருந்த யூபித்தர் ஆலயத்துக்குக் கொண்டுபோனார்கள். இப்பொழுதுதான் உண்மை இவ்விருவருக்கும் தெரிந்தது. ஜனங்கள் இவர்களைத் தெய்வங்கள் என்று எண்ணிக்கொண்டார்கள். பவுலினுடைய பிரசங்கம் இப்படிப்பட்ட தேவர் வணக்கத்துக்கு விரோதமானது. அப்படியிருந்தும் பவுலும் பர்னபாவும் தெய்வங்கள் என்று ஜனங்கள் எண்ணிக்கொண்டார்கள்.

கிழக்கத்திய தேசத்தான் ஒருவன் தனது மிகுந்த துக்கத்தைக் காட்ட விரும்பும்போது தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொள்வது வழக்கம். பூசாசாரியர்களையும் காளைகளையும் கண்டபோது, பவுலும் பர்னபாவும் தங்கள் அங்கிகளைப் பிடித்துக் கழுத்துமுதல் அடித்தையல்வரைக்கும் கிழித்து, ஜனங்களிடத்திற்கு ஓடி மிகுந்த உரத்த சத்தமாய் அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்:

'மனுஷரே, நீங்கள் செய்கிறது என்ன? நாங்களும் உங்களைப் போலவே மனுஷர்தானே. நீங்கள் இப்படிப்பட்ட பிரயோஜனமில்லாத வழிகளைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் உண்டாக்கின ஜீவனுள்ள கடவுளிடத்திற்குத் திரும்பவேண்டும் என்பதே நாங்கள் உங்களுக்குச் சொல்லவந்திருக்கிற நற்செய்தி. கடந்த காலங்களில் சகல ஜாதிகளும் தங்கள் தங்கள் வழிகளிற் செல்லும்படி அவர் விட்டிருந்தார். ஆயினும் சர்வதயாளுவாகிய அவருக்குச் சாக்ஷிகள் இல்லாதிருக்கவில்லை. அவர் உங்களுக்கு வானத்திலிருந்து மழையையும், பலனுக்குரிய பருவங்களையும் கொடுத்து, உங்கள் சரீரத்துக்குச் சாப்பாட்டையும், உங்கள் இருதயத்துக்குச் சந்தோஷத்தையும் கொடுக்கிறார்' என்று சொன்னார்கள். தங்களுடைய வார்த்தைகளாலும், சைகைகளாலும் இவ்விருவரும் தங்களுக்கு ஜனங்கள் காளைகளைப் பலியிடுவதைத் தடுப்பது மிக்க அரிதாயிருந்தது. கடைசியாகக் காளைகள் தூரத்தப்பட்டன. மாலைகள் எடுபட்டன. பூசாசாரியர் தங்கள் அங்கிகளைக் கழற்றிவிட்டார்கள். எல்லாம் மௌனமாயிருந்தது.

இதற்குச் சிலகாலம் கழித்து லீஸ்திராவுக்கு அநேக யூதர்கள் வந்தார்கள். இவர்களிற் சிலர் அந்தியோகியாவிலிருந்து பெரிய ரஸ்தாவழியாய் வந்தவர்கள், சிலர் இக்கோனியா பட்டணத்திலிருந்து வந்தவர்கள்.

பவுலும் பர்னபாவும் லீஸ்திராவிலிருக்கிறார்கள் என்று இவர்கள் கண்டது காணுதற்கு முன்னே அவ்விருவருக்கும் விரோதமாக கலகம்பண்ண ஆரம்பித்தார்கள்.

இவர்கள் சாதாரண ஜனங்களிடத்தில் போய் அவர்களிடம் தந்திரத்தோடு பேசி இவ்விருவருக்கும் விரோதிகளாய் அவர்களை எழுப்பிவிட்டார்கள். ஜனக்கூட்டம் ஓர் காரியத்தைச் செய்யம்படி அதை எழுப்பிவிடக்கூடிய சக்தியை உடைய ஒருவன், கிழக்கத்திய ஜனக்கூட்டமொன்று ஓர் அந்நிய ஜாதியானைக் கல்லெறிந்து கொல்லும்படி செய்கிறது மெத்த இலேசான காரியம். இவனைக் கல்லெறிந்து கொல்லுங்கள் என்று அவர்கள் ஒவ்வொருவரும் சொல்லி வந்தார்கள்.

இப்படிப் பவுல் லீஸ்திராவின் தெருக்களில் சென்று ஜனங்களிடத்தில் போக்கும் வரவுமாயிருந்தபோது பவுலுக்கு விரோதமாயிருந்த பகை அதிகப்பட்டது.

அவனைக் கல்லெறிந்து கொல்லுங்கள் என்று யாரோ ஒருவன் கத்தினான். உடனே விண் விண் என்று கற்கள் பறந்தன. சப்பாணியை நடக்கச்செய்ததை யாவரும் மறந்துவிட்டார்கள். பவுல் கீழே விழும்வரைக்கும் கல்லெறிந்தார்கள். விரைவாய் எறியப்பட்ட ஒரு கல் பட்டு பவுல் மூர்ச்சித்துத் தரையில் விழுந்தார்.

அவருடைய சரீரத்தை பட்டணத்துக்கு வெளியே இழுத்துக் கொண்டுபோங்கள் என்று ஒருவன் கத்தினான்.

அப்படியே அவர்கள் அவரை வழிதெடுக இழுத்து பட்டணத்து வாசலுக்கு வெளியே கொண்டுவந்து, சில நாளைக்குமுன்னே பவுலுக்கு ஆராதனை செலுத்த முயன்ற ஆலயத்தைக் கடந்து, திறந்த வெளியிலே அவரை எறிந்துவிட்டார்கள்.

15-ம் அத்தியாயம்

திருப்பு பயணம்

லீஸ்திராவிலுள்ள சீஷர்கள் கலகத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவுடனே பட்டணத்துக்கு வெளியே ஓடித் தங்கள் தலைவருடைய சரீரத்தைச் சூழ நின்றார்கள்.

பவுல் இறந்தாபோய்விட்டார்? — இக்கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டார்கள். இறந்துபோய்விட்டார் என்கிற பயம் அவர்களைப் புண்படுத்தினது. ஆயினும் சிறிதுநேரத்தில் பவுல் தமது கண்களைத் திறந்தார். இவர்களுக்குச் சந்தோஷம் உண்டானது. அப்பால் பவுல் மெதுவாக எழுந்துநின்றார். அவருடைய சரீரம் எல்லாம் அடிபட்டு நொந்துபோயிருந்தது. ஆயினும் இப்போது அவர் உயிருள்ளவராக நிற்கிறார். தன் சிநேகிதர் தம்மைச் சூழ்ந்துவர இவர் தம்மை கொஞ்சநேரத்துக்குமுன் செத்த பிரேதமாக் இழுத்தெறிந்து விட்ட அப்பட்டணத்துக்குட் பிரவேசித்தார். அவரைத் துன்பப் படுத்தினவர்களில் அநேகர் அங்குதான் இருந்தார்கள். இறந்துபோனான் என்று தாங்கள் நினைத்த மனிதன் எழுந்துவருவதையும், பவுலினுடையஅசுறைவில்லாத தைரியத்தையும் இவர்கள் கண்டபோது அவருக்கு விரோதமாக ஒன்றும் செய்யத்துணியவில்லை.

தாமும் பர்னபாவும் வசித்துவந்த வீட்டுக்குப் பவுல் திரும்பவும் வந்தார். தங்கள் பிரயாணத்துக்கு அவசியமான தடி, மேல் அங்கி, தண்ணீர்ப் பாத்திரம், அப்பப்பை முதலியவற்றையும் அவர்கள் எடுத்துக்கொண்டு சகல ஆயத்தமும் பண்ணினவர்களாக அன்று இராத்

திரி படுத்து நித்திரைசெய்தார்கள். அடுத்தநாள் விடியற்காலத்தில் இவ்விருவரும் எழுந்து லீஸ்திரா பட்டணத்தைவிட்டுச் சமபூமி வழியாக ரஸ்தாநெடுக கிழக்குமுகமாய்ச் சென்றார்கள். பவுல் சவாரிசெய்கிறதற்கு ஒரு கழுதை இங்கு வாடகைக்குக் கிடைத்தது. மற்றப்படி அடிபட்டு நொந்துபோன உடம்போடு அவர் பிரயாணம் பண்ணுகிறது மெத்தக் கஷ்டம். நாள்முழுவதும் அவர்கள் பிரயாணம் செய்தார்கள். தாங்கள் கூறிய நற்செய்தியினிமித்தம் யூதர்களுடைய இருதயத்தில் தோன்றின பகையைப்பற்றி இவர்கள் பேசிக்கொண்டே வந்தார்கள். இப்பகைதானே அவர்கள் பிசிதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவிலிருந்தும், இக்கோனியாவிலிருந்தும், இப்போது லீஸ்திராவிலிருந்தும் கல்லெறியுண்டு துரத்தப்படும்படி செய்தது.

ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்ட விஷயம் இப்போது பவுலினுடைய ஞாபகத்துக்கு வந்தது. ஸ்தேவான் கொலைசெய்யப்படுவதற்குப் பவுல் சம்மதித்து இருந்தாரல்லவோ? எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்களைத் தாம் பீறிக்கொண்டிருந்தது இவருடைய ஞாபகத்துக்கு வந்தது.

தாம் தேடித்திரிந்து கொன்ற இந்த அருமையுள்ள ஸ்திரீ புருஷர்களுடைய முகங்களை இவர் நினைத்தார். பரலோகத்தில் இவர்களைச் சந்திக்கும்போது, ஸ்தேவானையும் இவர்களையும் கண்டு நான் எவ்வளவு அழுவேன் என்று நினைத்தார்.

இவ்விரண்டு கூட்டாளிகளும் பல மலைகளைக் கடந்து சென்றார்கள். கடைசியில் இவர்கள் கீழேயிறங்கி ஒரு அகன்ற சமவெளியினூடு நடந்தார்கள்.

பவுலும் பர்னபாவும் இன்னும் பத்துமைல் தூரம் பிரயாணம் பண்ணினபின்பு தெர்பை பட்டணத்துக்கு வந்தார்கள். இக்கோனியா, லீஸ்திரா, அந்தியோகியா என்னும் பட்டணங்களைவிடத் தெர்பை சிறியது. ஆயினும் அதனுடைய கோட்டைமதில்கள் மற்றப் பட்டணங்களைப்போலவே அதிக கனமுள்ளன. ஏனெனில் தெர்பை பட்டணம் கலாத்தியாநாட்டின் கிழக்கு எல்லையில் இருந்தது. தெர்பைக்கு வடக்கேயிருந்த மலைகளில் அதிக துஷ்டரான சில கள்ளர்கள் தங்களுக்குக் கோட்டை கொத்தளங்களை ஏற்படுத்திக்கொண்டு வசித்தார்கள். இவர்கள் அங்கிருந்து கூட்டம் கூட்டமாகக் கீழேயிறங்கிவந்து கிழக்கிலிருந்து தெர்பைக்குப் பிரயாணம்பண்ணுகிற ஸ்திதிவந்தரான பிரயாணிகளைக் கொள்ளையடிப்பார்கள்.

(இன்னும் வரும்.)

Haridasi

Translated by Mr. A. Samuel Muthiah and Mr. G. N. Moses

ஹரிதாசி

(தொடர்ச்சி)

புருஷன் வேலைபார்க்கும் இடத்திற்குப்போக ஹரிதாசிக்கு மிக்க ஆசை. ஆயினும் வயதுசென்ற தந்தையைத் தான் கவனித்து வந்ததுபோல் வேறு எவரும் கவனியாரென்னும் எண்ணம் அவளைப் புண்படுத்தினது. அதிகங் கவலையுடன் அன்றிரவு படுத்து நித்திரை செய்து அதிகாலையில் விழித்தெழுந்து தன் புருஷனுடனே புறப்பட்டுப்போகத் தீர்மானித்து, அதிகங் கண்ணீரோடு தன் தகப்பனிடம் விடைபெற்றுக்கொண்டு புருஷன் உத்தியோகம் பார்க்கும் ஊர்வந்து சேர்ந்தாள்.

அவ்வூருக்கு வந்த ஐந்து வருஷத்துக்குள் ஹரிதாசிக்கு இரண்டு ஆண்மக்கள் பிறந்தனர். இராமேசுவரபாபு தமது பேரப்பிள்ளைகளுக்கு அன்னப்பிராசனம் செய்யும் (முதற்தடவை அன்னம் ஊட்டும்) விசேஷ தினங்களில் இங்கு வந்துவிட்டுப்போனார். இவ்வைந்து வருஷங்களுக்கிடையில் ஹரிதாசியும் தன் அருமைத் தந்தையின் ஊருக்கு இரண்டு தடவை போய் அநேக நாள் தங்கியிராமல் உடனுக்குடனே திரும்பினாள். குடும்ப விஷயங்களையும் பணக்கணக்குகளையும் மேற்பார்த்து வந்தபடியால், ஹரிதாசி ஒருநாள் வீட்டில் இராவிட்டால் எல்லாம் ஒழுங்கீனமாகிவிடும். ஹரிதாசி வீட்டில் இல்லாவிட்டால் ஹரேந்திரனும் தன் வேலையை முழுமனதோடு பார்க்கமாட்டான்.

சிறிதுகாலத்துக்குள் ஹரேந்திரனுடைய பெயர் எங்கும் தொனித்தது. அவனைப்பற்றிக் கேள்விப்பட்ட யாவரும் அவனது குணசீலத்தைப்பற்றியும் நீதிநியாயங்களைக்குறித்தும் புகழ்ந்து பேசினார்கள். வக்கீல் வேலையைத் தவிர வேறு அநேக மதிப்புள்ள உத்தியோகங்களும் அவனுக்குக் கையளிக்கப்பட்டன. ஜனோபகார சங்கங்களின் பரிபாலகனாகவும் வேலைபார்த்துவந்தான். பொதுஜன நன்மைமேல் கருதி ஏற்படும் எச்சங்கத்துக்கும் ஹரேந்திரன் அக்கிராசனாதிபதியாக இருப்பது வழக்கம்.

தன் கணவன் ஜனங்கள் பார்வையில் மதிப்புப்பெற்று வருவதைக் கண்ட ஹரிதாசி சந்தோஷத்தினால் பூரித்தாள். இங்ஙனம் சமாதானமாக இருவரும் வாழ்ந்துவருங்காலத்தில் ஹரிதாசியின் சந்தோஷத்துக்கு இடையூறு வந்தது. ஹரேந்திரன் வியாதிப்பட்டான்.

ஹரேந்திரன் பிணியால் வருந்துகிறானென்று கேள்விப்பட்ட அநேக வைத்தியர் தாமாக வந்தார்கள். வேறு சிலரை ஆள் அனுப்பி வருவித்தார்கள். அவர்கள் ஹரேந்திரனுடைய நாடிபார்த்துப் பல சிகிச்சைகள் செய்தும் அவற்றால் யாதொரு பயனும் உண்டாகவில்லை. அவன் வியாதிப்பட்டதால் நாடும் நகரமும் அதிகங் கலக்கமுற்றன. இரண்டு மாதங்களாகியும் ஹரேந்திரனுக்குப் பிணி அதிகரித்ததே யன்றிச் சற்றாகிலும் தணியவில்லை. பிராணபாயத்துக்குரிய குறிகள் இல்லாவிட்டாலும் வியாதி நீங்க இன்னும் சிலகாலம் செல்லுமெனத் தோன்றிற்று.

வியாதி முற்றிலும் தீர மூன்று மாதங்களாயின. ஹரேந்திரனுக்கு நடக்கக்கூடிய சக்தி வந்ததைக் கண்ட சிநேகிதரும் அண்டை வீட்டாரும் சந்தோஷப்பட்டார்கள். ஹரிதாசி தன் குலகுருவைக் கொண்டு தன் குலதெய்வமாகிய சத்திய நாராயணனுக்குப் பூசை முதலிய கைங்கரியங்களைச் செய்வித்தாள். பிராமணருக்கும் ஆண்டி பரதேசிகளுக்கும் அன்னதானமிட்டாள்.

பிணி நீங்கியும் ஹரேந்திரனுக்குப் போதுமான பலம் இன்னும் வரவில்லை, பசிதாகமில்லாமற் கஷ்டப்பட்டான். ஆகையால் பரிபீபன முண்டாக்குவதற்கு தினந்தோறும் சாப்பிடுமுன் அரை அவுன்சு பிராந்தி உட்கொள்ள வைத்தியர் உத்தரவுசெய்தார். ஆனால் ஹரேந்திரனுக்குப் பிராந்தியென்றால் பிராணன் போய்விடும்போலிருந்தது. அதன் நாற்றம் அவனுக்கு அருவருப்பு. ஆயினும் வைத்தியர் சொற்படி அதை மருந்தாகப் பாவித்தாகிலும் உட்கொள்ளாவிட்டால் பிசகென்றெண்ணித் துவக்கத்தில் அதிக வெறுப்புடன் பிராந்தியை உபயோகித்துவந்தான். நாளாவட்டத்தில் ஹரேந்திரனுக்குப் போன பலம் மீளவும் வந்தது. ஆறுமாசமாகப் பிராந்தியை உபயோகித்து வந்தபடியால் அதன்மேலிருந்த வெறுப்பு படிப்படியாய் நீங்கிவிட்டது. இப்போது பிராந்தி குடிப்பது அவனுக்கு வழக்கத்துக்கு வந்து விட்டது. இரவில் கொஞ்சம் பிராந்தி குடியாமற் சாப்பிடமாட்டான். வைத்தியர் உத்தரவுசெய்த அளவுக்கு இருமடங்கு குடிக்க ஆரம்பித்தான். துவக்கத்தில் அளவுப்படி விட்டுக் குடிப்பது வழக்கம். அளவுக்குமிஞ்சிப் பாத்திரத்தில் வடிந்துவிட்டாலும் மீளவும் சீசாவில் ஊற்றிவிடுவான். ஆனால் இப்பொழுதோ யதேட்டமென்று அளவுக்குமிஞ்சி ஊற்றிவிடுவான். அப்படி அளவுக்கதிகமாய் ஊற்றின பிராந்தியைச் சீசாவில் விடுவதற்குப்பதிலாகத் தன் வாய்ப்பையிலே ஊற்றிவிடுவான். இப்படி அடிக்கடி செய்வது வழக்கம். துவக்கத்தில் ஒரு புட்டி பிராந்தி இருபத்துநாலு நாட்களுக்குப் போதுமானது. இப்போது மூன்று புட்டி முப்பது நாட்களுக்குப் போதாது.

தன் புருஷனைக் கெடுக்கத் துவக்கியிருக்கும் மதுபானம் என்ற சத்துருவின் கொடுமையை ஹரிதாசி இன்னும் சரியாய் அறியவில்லை. தன் புருஷனுக்கு வந்த வியாதியினிமித்தம் அவளுடைய மனதில் உண்டான துக்கம் பிணிநீங்கியும் நிராமல் மென்மேலும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஹரேந்திரன் குடிவெறிக்கு அடிமையாகிவிட்டான். குடியாமலிருக்க அவனும் கூடவில்லை. ஒரு தரம் குடிப்பதிலும் திருப்தியடையாமல் ஒரேநாளிற் பலமுறை மதுபானத்தைப் பருகிவந்தான். இரவில் வேலைக்காரரெல்லாரும் தத்தம் வேலைகளை முடித்துவிட்டுப்போனபின் ஹரேந்திரன் வீட்டின் முற்றத்தில் வெகுநேரம் தனித்திருந்து மதுபானம் பண்ணிவிட்டுப் படுக்கைக்குப்போவது வழக்கம்.

ஒரிரவில் வெகு நேரமாகியும் ஹரேந்திரன் வீட்டுக்குள்ளே வரவில்லை. அவனுடைய மனைவி ஹரிதாசி சாப்பாட்டைத் தன் முன் வைத்துக்கொண்டு ஹரேந்திரன் வரத் தாழ்த்தலால் விளக்கு வெளிச்சத்தில் ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். ஐயோ வென்றலறிய சத்தம் திடீரென அவள் காதிலே விழுந்தது. அக் கூச்சலின் காரணத்தை யறிய உடனே அவள் எழுந்து பலகணிகளைத்திறந்து பார்த்தபொழுது ஹரேந்திரன் தூஷணவார்த்தைகளைப் பேசிக்கொண்டு வேலைக்காரனை அடிப்பதைக் கண்டாள். தன் புருஷன் ஒருபோதும் தூஷணவார்த்தைகளைப் பேசக்கேட்டிராத ஹரிதாசி, ஆச்சரியமும் திகிலுமுள்ளவளாய் இப்படி நடந்ததற்குக் காரணம் என்னவென்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். காரணம் இன்னதென்றறிய மனம் பதைத்துக்கொண்டு நின்ற அவள் தன் புருஷனுடைய சிவந்த கண்களையும் தள்ளாட்டத்தையும் பார்த்துக் காரணம் இன்னதென்று அறிந்துகொண்டாள்.

ஹரேந்திரன் அன்று எடுத்துக்கொண்ட வியாச்சியத்தில் தோல்வியடைந்து அதிக மனவருத்தமடைந்தான். அன்று மாலையில் தன் விசனத்தை மாற்றவேண்டுமென்னும் நோக்கத்துடன் பிராந்திப் புட்டியைத் திறந்து வழக்கமாய்க் குடிக்கும் அளவுக்கு இருமடங்கு குடித்தான். குடிவெறியால் புத்தி தடுமாறி காரணமின்றித் தன் வேலைக்காரனை அடித்தான். நடந்த விஷயம் ஒன்றும் அறியாத ஹரிதாசி வேலைக்காரனைப்பார்த்து நடந்த காரியத்தை விவரமாகச் சொல்லும்படிக் கேட்டாள். எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போல், இது ஹரேந்திரனுடைய கோபத்தை அதிகமாய் எழுப்பி விட்டது. ஹரேந்திரன் தன் வாயில் வந்தபடி தன் மனைவியையும் மாமனையும் அவதூறாய்ப் பேசினான். கடைசியில் தன் ஆகாரத்தை வீடெங்கும் சிதறிவிட்டுத் தூங்குவதற்குக் கட்டிலண்டைபோய் அதில் தொப்பென்று விழுந்தான்.

ஹரிதாசி தன் புருஷனுடைய வாயிலிருந்து முதற்றடவையாகத் தூஷணவார்த்தைகளைப் பேசக்கேட்ட சமயம் இதுதான். தன்னையும் தன் தகப்பனையும் தூஷணவார்த்தைகளால் நிந்தித்ததை நினைத்து ஹரிதாசி மனம்பொறுக்காமல் தன்புற்ருள். குடிவெறியே இதற்கெல்லாம் காரணமென நினைத்து தன் கண்கள் சிவந்து முகம் வீங்குமட்டும் விம்மி விம்மி அழுதாள். தீய பழக்கமாகிய குடி வெறியிலிருந்து தன் புருஷனைக் காப்பது எங்ஙனமென்று இரவில் தூங்காமல் விடியுமட்டும் யோசனை செய்துகொண்டேயிருந்தாள்.

ஹரேந்திரன் தூங்கி அதிகாலையில் விழித்தெழுந்து பார்த்த பொழுது ஹரிதாசி தன் படுக்கையின் பக்கத்தில் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து, முந்தின இரவில் நடந்த சம்பவங்களை நினைத்து ஹரிதாசியோடு முகங்கொடுத்துப்பேச வெட்கப்பட்டு மெதுவாய்த் தன் பள்ளியறையைவிட்டு வெளியே போய்விட்டான். வெளியே போய் இரவில் தான் அவதூறாய்ப் பேசி அடித்த வேலைக்காரனுக்கு இரண்டு ரூபா இனாம் கொடுத்து நடந்த சம்பவத்தை ஒருவருக்கும் சொல்லாதிருக்கக் கட்டளையிட்டான்.

ஹரேந்திரனுக்கு மனதில் சந்தோஷமில்லை, முகத்தில் அருளுமில்லை. 'ஐயோ! பெரிய குற்றத்தைச் செய்துவிட்டேனே. நான் என் மனைவியின் முகத்தில் எப்படி விழிப்பேன்' என்று நினைத்து மனம் வருந்தினான். அன்று யாதொரு வேலையும் செய்ய மனமற்றிருந்தபடியால் கட்சிக்காரரையெல்லாம் அனுப்பிவிட்டு வீட்டுக்குள்ளேபோய் ஹரிதாசியின் கைகளை இறுகப்பிடித்துக்கொண்டு, 'என் காதலியே! நான் செய்த இப்பெரும்பிழையை நீ பொறுக்க வேண்டும். நரகத்தில் விழுந்து அழுந்தினாற்போல் இன்று தியாரப் படுகிறேன். என்னை நீதான் இரட்சிக்கவேண்டும்' என்று மன்னிப்புக்கேட்டான்.

ஹரிதாசியின் கண்களிற் கண்ணீர் பொங்கி வடிந்தது. தன் பக்கத்தில் ஹரேந்திரனை இருத்தி அன்றுமுதல் குடியை விட்டுவிட வேண்டுமென்று கெஞ்சினாள்.

ஹரேந்திரன்: 'ஐயோ! அதில்லாமல் என்னால் பிழைக்கமுடியாது. நான் என்னசெய்வேன்!'

ஹரிதாசி: 'நீர் முன்னொருபோதும் குடித்தில்லையே. அக்காலத்தில் எவ்வளவு குணசீலராய் விளங்கினீர்! இப்போது அதில்லாமலிருக்க முடியாதா? முடியுமென்றெண்ணுகிறேன். எப்படியாவது இந்தக் கெட்டபழக்கத்தை விட்டுவிடவேண்டும்; திடீரென்று

ஒரேநாளில் நிறுத்தமுடியாவிட்டாலும் படிப்படியாய் நிறுத்தக்கூடும் என்று நினைக்கிறேன்.'

ஹரேந்திரன்: 'நான் குடியை நிறுத்திவிடுகிறேனென்று வாக்குக் கொடுக்கிறேன். உடனே நிறுத்துவது இலேசல்ல. வரவர நிறுத்திவிடுவேன்.'

ஹரிதாசி: 'இனி ஒருபோதும் வெளியேபோய் எனக்குத் தெரியாமல் குடிக்கமாட்டேனென்று உறுதிமொழி சொல்லும். இனி நான் என் கையால் ஊற்றித்தருவேன். படிப்படியாய் அளவைக் குறைத்துக் கொஞ்சக்காலத்துக்குள் முற்றிலும் குடியை நிறுத்த உபாயம்செய்வேன்' என்ருள்.

ஹரேந்திரன் இந்த யோசனைக்கு உடன்பட்டான். ஹரிதாசியின் மனக்கிலேசம் ஒருவாறு நீங்கிற்று. உடனே வேலைக்காரனை அழைத்து எல்லாப் புட்டிகளையும் ஆபீசிலிருந்து வீட்டுக்குக் கொண்டுவர உத்தரவுசெய்தான். ஹரேந்திரனை ஸ்நானம் செய்யச் சொல்லி சாப்பாடு கொடுத்து கச்சேரிக்கு அனுப்பினாள்.

(இன்னும் வரும்.)

Story-Parables

By Miss Grover

கதாரூபமான உவமைகள்

1. திறந்த கதவு

ஒரு மனிதன் அநேக வருஷங்களாய்ச் சிறைச்சாலையிலிருந்து வயதுசென்றவனாகப்போது தான் இவ்வளவுகாலம் சிறைச்சாலையில் இருப்பதைப்பற்றிப் புலம்பிப் பேசினான்.

அவன்:—'ஐயோ! நான் தங்கியிருக்கிற இவ்விடம் எவ்வளவு பயங்கரமானது! எனக்குச் சுற்றியிருக்கிறதெல்லாம் பெருமூச்சும், அழுகையும், அதிக துக்கமும், இருண்ட பொல்லாப்பும் நிறைந்த இடம். அசுத்தமான சுவர் என்னை நெருக்கிக்கொண்டிருக்கிறது. ஜன்னலின் கம்பி பெலமும் பாரமுமானது. தப்பிப்போக வழியில்லையே. இந்தச் சிறைச்சாலை எனக்கு வெறுப்பும், இதில் கழிந்த நாட்கள் எனக்குக் கசப்பும், என்னைப்போல கைதிகளாகிய மனிதர்களின் முகங்கள் எனக்கு வெறுப்புமாக இருக்கிறது. கதவு திறந்தால் நான் விடுதலையாய்ப் போவேனே' என்று சொல்லிக்கொண்டான். அவ்வேளையில் வெள்ளைவஸ்திரந்தரித்த ஒருவர் வந்து, கத

வைத் திறந்து, அம்மனிதனுக்குச் சைகைகாட்டி, 'வெளியே வா' என்று கூப்பிட்டார்.

அம்மனிதனோ தான் உட்கார்ந்த இடத்திலேயே குனிந்து உட்கார்ந்து பயத்தோடு சத்தமிட்டு :

'நான் வெளியே வரமாட்டேன். நான் போக ஆயத்தம் இல்லே. இந்தச் சிறைச்சாலே சுத்தமாயும் ஈரமில்லாமலும் இருக்கிறது. மாரிகாலத்தில் மாத்திரம் கொஞ்சம் குளிராயிருக்கும். நான் வெளியேபோனால், அந்நியனும் பரதேசியுமாயிருப்பேன். காற்று அடிக்கும்போது நான் என்ன செய்வேன் என்று தெரியாது. அதுவுமல்லாமல் என்கூட இருக்கும் கைதிகள் அவ்வளவு பரிசுத்த மாயில்லாவிட்டாலும் என் சிநேகிதர்கள்தான். எனக்குத் தெரியாத பயம் எனக்கு நேரிடாதபடி நான் இங்கேதான் இருக்கிறேன். இங்கே எனக்கு ஈரமும் குளிருமில்லே' என்றான்.

தன்னோடிருந்த கைதிகளிடத்தில் திரும்பிப்போய், அவர்கள் உடுப்புகளைப் பிடித்துச் சத்தமிட்டு, 'என்னை இரட்சிக்கவேண்டும். வெள்ளைவஸ்திரம் தரித்தவரையும் திறந்ததலையும் பார்த்துப் பயப் படுகிறேன்' என்று கூப்பிட்டான்.

2. இன்று என்பது

இன்று என்பது ஒருநாள் ஒரு மனிதனைப் பார்த்து, 'என்கூட வா, நாம் சேர்ந்து வேலைசெய்யலாம்' என்று சொன்னது.

'எந்தவேலை செய்வோம்' என்று அந்த மனிதன் கேட்டான்.

இன்று என்பது : 'நேர்த்தியான வேலைதான். உன் சிநேகிதன் வியாதிப்பட்டிருக்கிறான். அவனைப் பார்க்கப்போனால் அதிக சந்தோஷமாயிருக்கும். எழையும் விசனமுமுள்ள உன் சகோதரியை நீ பார்த்து அதிக நாளாயிற்று ; அவள் பிள்ளைகளுக்குத் தகப்பன் இல்லாததினால் அவர்களுக்குச் சில வெகுமானங்களை வாங்கிப்போக லாம். அப்புறம் முன்காலத்தில் நீயும் உன் தம்பியும் விளையாடிக் கொண்டிருந்த அந்தக் காட்டிலேபோய் உலாவப்போகலாம். நீ அவ் வழியாய்ப்போய் எவ்வளவு காலமாய்விட்டது ? நீ உன் தம்பியைப் பார்த்து அதிகக் காலமானதல்லவா ? அவன் திரும்பிவந்து நல்ல ஜீவியம் பண்ணலாமென்றிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். அவ னையும் போய்ப்பார்த்து, அவன் கையைப்பிடித்துக் கொஞ்சம் பேச லாம் அல்லவா ?' என்று சொல்லி 'அப்புறம் நாம் . . . .' என்று சொல்ல எத்தனிக்கையில்,

அந்த மனிதனோ : 'இதென்ன புத்தியீனமான பேச்சு ! இதெல் லாம் நான் செய்யவேண்டிய வேலையென்று ஒருநாள் பிரியத்தோடு செய்வேன். ஆனால் இன்று செய்யமுடியாது, இன்றைக்கு உன்

னோடு இன்னொருவகையான வேலைசெய்து பதினாயிரம் ரூபாய் சம்பாதிக்க ஆசைப்படுகிறேன். வீணாய்ப் பேசுகிறதற்குப் பதிலாக உன்னோடு உட்கார்ந்து கணக்குப்பார்க்கலாமென்று எண்ணுகிறேன்' என்று சொன்னான்.

அவர்கள் இருவரும் சேர்ந்து உட்கார்ந்து நாள்முழுவதையும் கழித்துவிட்டார்கள். அப்புறம் இன்று என்பது போக நேரமாயிற்று. 'போகிறேன் சலாம்' என்று சொன்னது.

அந்த மனிதன் : 'ஆ ! சலாம். நீ என்னத்திற்கு ஒருவிதமான விசனத்தோடு என்னைப் பார்க்கிறாய் ? நீ சொன்னதெல்லாவற்றை யும் இனிமேல் செய்யப்போகிறேன். நீ வராவிட்டாலும் உன் தங் கச்சிமார் வரும்போது அந்தவேலை செய்யப்போகிறேன்' என்றான்.

'இனிமேல் வரும் தங்கச்சிமார் எனக்கு இல்லே' என்று இன்று என்பது சொன்னது. சொல்லிவிட்டு அது கதவைக் கடந்துபோகை யில் இராக்காலம் உள்ளே பிரவேசித்தது.

3. ஒரு குழந்தை

ஒரு மனிதன் தன் வீட்டுக்கதவண்டையில் உட்கார்ந்து சுருட்டுக் குடித்தான். பக்கத்து வீட்டுக்காரன் வந்து அவனோடுகூட உட் கார்ந்துகொண்டு அவனைப் பேச்சுக்கொடுத்து சோதித்தான். இரு வரும் அறியாவிட்டாலும் இவன்தான் அவனுக்குச் சத்துரு.

பக்கத்து வீட்டுக்காரன் அந்த மனிதனை நோக்கி : 'நீ வேலை யில்லாத ஏழைப்பட்டவன், உனக்கு லாபம் கிடைக்கும்படி இந்த நல்ல வகையைக் காட்டுகிறேன். இந்த இலேசான வேலையினால் அதிகப் பணம் சம்பாதிக்கக்கூடும் ; கனமுள்ள ஜனங்கள் தினம் செய்கிற வேலையைவிட இது அதிகத் திருட்டுத்தனமுள்ளதல்ல. இந்த நல்ல சமயத்தை இழந்துவிட்டால் நீ பைத்தியக்காரன். என் கூட வா, அந்த வேலையைப்பற்றி ஒரு ஒழுங்குபண்ணுவோம்' என்று சொன்னான்.

அந்த மனிதன் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவன் வாலிப மனைவி, அவர்களுடைய சின்னவீட்டின் கதவண்டையில் வந்தாள். அவன் உடுப்புகளைக் கசக்குகிற வேலை செய்துகொண் டிருந்ததினால் அவள் முகம் உஷ்ணமாயும் சிவப்புநிறமாயும் தெரிந்த தோடுகூட, அவள் குழந்தையையும் கையில் பிடித்துக்கொண்டு வந்தாள்.

அவள் தன் கணவனைப் பார்த்து, 'தயவுசெய்து கொஞ்ச நேரமாகக் குழந்தையைப் பிடித்துக்கொள்ளுங்கள் ; அவன் அழு கிறான். நானோ உடுப்புகளைக் காயப்போடவேண்டும்' என்று சொன்னாள். அந்த மனிதன் குழந்தையைப் பிடித்துத் தன் மடி

யிலே உட்காரவைத்தான். அவன் அதைக் கையில் அணைத்துக் கொண்டபோது, அந்தக் குழந்தை அவன் முகத்தைப் பார்த்துச் சொன்னதாவது: 'நான் உமது மாம்சத்தில் மாம்சமாயிருக்கிறேன்! உமது ஆத்துமாவில் ஆத்துமா! நீர் எதை விதைக்கிறீரோ நாயே அதையே அறுப்பேன். நீர் எங்கே நடப்பிப்பீரோ நானும் அங்கே பின்சென்று வருவேன். ஐயா, வழியைக் காட்டும். என் கால் உமக்குப் பின்னுலே வரும்' என்றது.

அப்போது அந்த மனிதன் பக்கத்து வீட்டுக்காரனைப் பார்த்து, 'போ, இங்கே திரும்பவராதே' என்று சொன்னான்.

அவன் அந்த அருமைக்குழந்தையைத் தன் காலில் ஆட்டி ஒரு பாட்டுப் பாடினான். அப்புறம் அவன் மனைவி குழந்தையை எடுக்க வந்தாள்.

அவள்: 'பாப்பா! பாப்பா! உன் ஐயா உன்னைப் பிடித்தபோது என் அழுதாய்? உனக்கு எவ்வளவு நல்ல அப்பா! நீயும் அவ்வளவு நல்ல மனிதனாக வளர்ந்தால் நன்றாயிருக்கும்' என்றாள்.

அவள் வீட்டில் புகுந்து குழந்தைக்குப் பாட்டுப்பாடினாள்.

4. நல்ல புத்தி

ஒரு வாலிபன் ஒரு பெரிய மனிதனிடத்தில் வந்து, ஏதோ ஒரு சங்கதியைப்பற்றி அவருடைய ஆலோசனையைக் கேட்டான். அவன்: 'நீர் என் சிநேகிதனும், என் தகப்பனின் சிநேகிதனும் தான். மற்றவர்களின் ஆலோசனையைவிட, உமது ஆலோசனை எனக்கு மேன்மையாகத் தோன்றுகிறது; அதைக் கைக்கொண்டு நடப்பேன். இந்தச் சங்கதி என் முழு ஜீவியத்திலும் விசேஷ மானது. நான் இப்படிச் செய்யவேண்டுமா? இல்லையா? சொல்லும். நீர் நினைக்கிற ஆலோசனையை எனக்குச் சொல்லும்' என்றான்.

அந்தப் பெரியமனிதன் தமது ஆலோசனையைச் சொன்னார். அந்த வாலிபன் அதற்காக அவருக்கு நன்றிசெலுத்திப் போய்விட்டான். அவன் போகையில் தலையைத்தூக்கி பெருமூச்சுவிட்டான். அவன் தனக்குள் சொன்னதாவது: 'அது விசனந்தான். முந்தித் தெளிவாயும் தைரியத்தோடும் நியாயத்தைக் காட்டினார். இப் போதோ பயப்பட்டு கலங்கிப் பேசுகிறார். முந்தியிருந்த புத்தி அவருக்கு இப்போது இல்லை; அவர் மனம் பெலவீனமாய்ப்போயிற்று, அது விசனந்தான்' என்று நினைத்து அவன் போய் அந்தக் காரியத்தைச் செய்தான்.

Some Hindu Objections and the Answers

By Mr. A. Samuel Muthiah

இந்துக்கள் கேட்கும் கேள்விகள்

a. தெய்வத்தைப்பற்றிய கேள்விகள்

(தொடர்ச்சி)

8. ஒத்தே பலருயிர் மோர்கடலைச் சேர்ந்திடல்போல் எத்தேவர் சிந்தனையு மீசனுக்காம்.' கல்லைக் கும்பிட்டாலும், காளியைக் கும்பிட்டாலும், கிருஷ்ணனைக் கும்பிட்டாலும் வணக்கம் ஈசனுக்கே செல்லுமல்லாமல் வேறு யாருக்குச் செல்லும்?

(உத்தாரம்.) ஒருவன் உயர்ந்த மலையிலிருந்து வழுவித் தாழ விழுந்தாற்போல், மனிதர் ஒரே மேலான கடவுளைவிட்டுத் தாழ விழுந்து அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள பறவைகள், மிருகங்கள், ஊர்வன முதலியவைகளுக்கொப்பாக மாற்றினார்கள். சிவன் என்றாலும் எகோவா என்றாலும் என்ன? கிறிஸ்து என்றாலும் கிருஷ்ணன் என்றாலும் என்ன? எவரை வணங்கினாலும் ஒருவரையே வழிபட்டதற்குச் சரியென்று சொல்லுவது தவறு. ஒருவனுக்குரிய பெயரை மற்றொருவனுடையதென்று வழங்குவது பொய். மனதினாலே ஒருவன் கொலைபாதகனென்று அறிந்தும் மற்றொருவனே அக்குற்றமுடையோனென்னச் சொல்வது மாறுபாடான பொய்யே. ஒருவனுக்கு ஒரு சாதனம் எழுதும் போது அவன் சொந்த நாமமே அதில் எழுதப்பட்டவேண்டுவது போல், கடவுளைக் குறிக்கும்போது அவரது திருநாமத்தையே அவருக்கு வழங்கவேண்டும். அவர் தமது திவ்விய நாமத்துக்குச் செலுத்தவேண்டிய வணக்கத்தை பிறர் நாமத்துக்குக் கொடுக்கவொட்டார். தேவத்துரோகியைப் பார்த்து, கடவுளே உம்மைத் துதிக்கிறேன் என்றால் அது கடவுளுக்கேற்குமா? எகோவா தம்முடைய நாமத்தை வீணிலே வழங்கவொட்டார் (யாத். 20. 7).

9. தெய்வம் ஒன்றுதான், ஆனால் அவருக்கு நாமபேதம் அனந்தம்.

(உத்தாரம்.) தண்ணீர் என்று தமிழ் ஜனங்கள் சொல்லுகிற அதே வஸ்துவைத் தெலுங்கர் நீளு என்றும், இந்துஸ்தானி பேசுகிறவர்கள் பாணி என்றும், இங்கிலீஷ் பேசுகிறவர்கள் வாட்டர் என்றும் சொல்வது உண்மை. ஆனால் எந்தப் பாஷையில் சொன்னபோதிலும் ஒருதன்மையுள்ள பொருளையே குறிக்கிறார்கள். ஆனால் கடவுள் விஷயத்தில் பல பேர்களைச் சூட்டினாலும் கடவுளுக்குரிய

இலட்சணங்கள் அந்தந்தப் பெயரால் குறிக்கப்படுகிற ஆளுக்கு இல்லையானால் அவர் கடவுள் ஆவாரோ? ஆகமாட்டார்.

10. பல பல மார்க்கங்களும் ஒரே கடவுளண்டை வழிநடத்தும் ரஸ்தாக்கள்.

(உத்தரம்.) மணியாச்சியென்ற ரெயில்வே ஜங்ஷனிலிருந்து தெற்கே திருநெல்வேலிக்கு ஒரு இருப்புப்பாதையும், வடக்கே மதுரைக்கொன்றும், கிழக்கே தூத்துக்குடிக்கொன்றும் போகிறது. மதுரைக்குப் போகவேண்டிய பிரயாணி எந்த மார்க்கமாய்ப் போனாலும் மதுரைக்குத்தான் போகுமென்றெண்ணி விசாரிக்காமல் தூத்துக்குடிக்குப் போகும் வண்டியிலேறினால் இரண்டொருமணி நேரத்தில் தூத்துக்குடியிலிருப்பானல்லவா? புத்தியுள்ளவன், மதுரைக்கு வழி வாயிலே என்றபடி, தீரவிசாரித்து அப்புறந்தான் போகத் துணிவான். உலகவிஷயத்தில் இவ்வளவு புத்தியைக் கையாடுகிற மனுஷர், ஆத்துமா விஷயத்திலும் 'என்னைப் பாவத்திலிருந்து ஈடேற்றி, கடவுளோடு ஐக்கியப்படுத்தி, மோட்ச சாம்பிராஜ்யத்தை யளிக்கும் மார்க்கம் எது?' என்று விசாரியாமலிருப்பது சரியோ?

11. அவனவன் கொண்டதே கொள்கை. நாம் எதைக் கடவுள் என்று விசுவாசிக்கிறோமோ அதுதான் கடவுள்.

(உத்தரம்.) நகை வாங்குகிறவர்கள் உரைத்துப்பார்க்காமலும் மாற்று இன்னதென்று சோதிக்காமலும் விசுவாசத்தோடு தங்கமென்றெண்ணி வாங்கினால் அது தங்கமாயிருக்குமா? அது தங்கமுலாம் பூசின பித்தளையாயிருந்தாலும் விசுவாசமிருந்தால் தங்கமாக மாறிப் போமென்று சொல்வதுபோலிருக்கிறதல்லவா? இது புத்தியீனமேயன்றி வேறல்ல. மண்குதிரை யேறி விசுவாசத்துடன் வெள்ளத்தைக் கடப்பாருண்டா? கண்ணை மூடிக்கொண்டு கண்டதெல்லாம் கதிதரும் கடவுளென்றெண்ணி மோசம்போகவேண்டாம்.

12. நிரித்துவம் உண்டென்று உபதேசிக்கிறீர்களே. அப்படியானால் மூன்று தேவர்களுண்டா?

(உத்தரம்.)

(1) 'மூக்குணம் பாலுக்கு உண்டு—அவை
* மூருகும் சுவையும் வெண்மையாம்
விக்கின மில்லாமல் முத்தன்மை சேர்ந்ததே
வேறுவேறல்ல அவ்வாறே நிரித்துவம்.

(2) அறிவில் மிகுத்த அண்ணலே—இதை
அங்கிகாரம் செய்து கொள்ளுவீர்
சிறிய மாடத்தில் மூன்று மூலைகள்
சேர்ந்தோர் வஸ்துவாய்த் தோன்றுதல்லவோ.

* நீர்.

(3) பரம ரகசியம் பரப்பிரமாச மூலம்
பரீட்சிக்க வென்று துணிதல்
பரவையைச் சம்புவால் கொண்டளப்பது வதுப்
பகடியா மன்றி மேலும்
உரிமை யுடனே நிரித்துவம் ஒருத்துவமாய்
ஒன்றித் திருக்கும் உறவை
உரைதரும் சுருதியிற் கண்டமட் டல்லாது
உற்றுய்வது ஒருசுனையி நீர்
வருவதற் காதி யேதென்றறியவே துணிதல்
வானந் தொடத் துணிதலாம்
வட்டடங்கா வான விரிவகல மேதென்ன
வான்மீன் தொகை யிதென்ன
பெருவாரி நீர்த்துளி திவலைவரை நிறையீது
பேசுவன் பேதை யன்றே
பிரணவத் தந்தாதி ஆராய்வ தீதொத்த
பின்ன மென்றற வன்னவே.' (இன்னும் வரும்)

A New Commentary on Revelation

By the Rev. E. Brutzer

யோவானுக்குண்டான நிரு வெளிப்படுத்தல்

ஒரு புது வியாக்கியானம்

சபை திருத்தலின் நானூறும் வருஷ உற்சவத்தில் புருட்சர் ஐயர் இந்த வியாக்கியானத்தைத் தமிழ்ச்சபைகளுக்குச் சமர்ப்பித்திருக்கிறார், நல்ல இனமே. நேர்த்தியான அச்சிலிருக்கிறபடியால் கண்களுக்கு நோவில்லாமல் சந்தோஷமாய் வாசிக்கலாம். மூதனூலைப் புதிதாய்த் தமிழ்ப்படுத்தியிருக்கிறபடியால், அநேக வேதவாக்கியங்களில் நாம் இதுவரையில் மிதமிஞ்சிய பழக்கத்தால் கவனியாமல் விட்டிருக்கிற அர்த்தத்தைப் பார்க்கலாம். ஆரம்பத்தில் போட்டிருக்கிற உள்ளுரை, வெளிப்படுத்தின விசேஷத்தின் ஒழுங்கை ஒரு அட்டவணையில் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

வியாக்கியானத்தின் மாதிரியைக் காட்டுவதற்கு சபையின் தூதர்களைக் குறித்து புருட்சர் ஐயர் எழுதியிருக்கிறதை இங்கே அச்சிட்டிருக்கிறோம்.

"'என் கையிலிருக்கிற நட்சத்திரங்கள்' சபையின் தூதர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். தூதன் என்ற வார்த்தையால்

என்ன தெரிவிக்கப்படுகிறது? இதை வார்த்தையினாலேயே அறிய முடியாது. தூதன் என்றால் அனுப்பப்பட்டவன் என்றர்த்தம். மல்கி. 2, 7; 3, 1–ல் இந்தப்பேர் ஆசாரியருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், ஆம் மேசியாவுக்குங்கூட கொடுக்கப்படுகிறது. ஆயினும் கர்த்தர் மத். 18, 10–ல் வான ஆவிகள் சிறுகுழந்தைகளை ஆண்டு காப் பாற்றுகிறபடியால் அவர்களை அவர்களுடைய தூதர் என்றும், அப். 12, 15–ல் கூடியிருந்த சீஷர்கள் சிறைச்சாலையில் இருக்கிறவனுக நினைத்தப் பேதுரு வாசலிலிருக்கிறான் என்று கேட்டபோது நம்பாமையினால், அது பேதுருவல்ல அவனுடைய தூதன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியால், நாம் இங்கே சொல்லப்பட்ட சபைகளுடைய தூதர்கள் பூமியிலே சபைகளை ஆளவும் காப்பாற்றவும் ஊழியம் பெற்றுக்கொண்டவர்கள் என்று நினைக்கலாம். ஏனென்றால், 'தூதர்' என்ற வார்த்தைக்கு 'வானதூதர்' என்று அர்த்தங்கொள்வது இங்கிருக்கிற சம்பந்தத்திற்கு விரோதம். கர்த்தர் வானத்திலிருக்கிற தூதருக்கு நிருபங்கள் எழுதவேண்டியதில்லை. மேலும், யோவானுகிய மனுஷன்மூலமாக அவர் வான தூதருக்கு நிருபம் எழுதுவது விபரீதம். வேதத்தில் வேறெங்கும் இந்த மாதிரி தூதனத்தை நாம் வாசிக்கிறதில்லை. ஆகையினாலே, புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் தலைவர், மேய்ப்பர், கண்காணிகள், மூப்பர் என்கிற பெயர்களால் குறிக்கப்பட்ட உத்தியோக அந்தஸ்து இங்கே தூதன் என்கிற பெயரால் சொல்லப்படும். . . .

ஆயினும், அந்த மூப்பர்கள் பின்வரும் நிருபங்களில் சபைகளோடு பிரிக்கமுடியாத ஒற்றுமையிலே இருக்கிறார்கள். ஆகையினால் சபைகளுக்குச் சொல்வதையும் தலைவர்களுக்குச் சொல்வதையும் வேறுபிரிக்கிறது மெத்தக்கஷ்டம். அக்காலத்தில் சபை மூப்பர்களாகிய சபைத்தலைவர் முன்றிச் சபையின் அவயவமாயிருந்து, பிறகு சபைக்குத் தலைவராய் ஏற்படுத்தப்பட்டமையாலும், அதினிமித்தம் சபை அவனைப் பிரிந்திராமல், அவனோடொட்டிச் சம்பந்தப்பட்டிருந்தமையாலும், அவன் ஏற்பட்ட இடத்திலே நிலைத்திருக்க வேண்டியபடியாலும், சபைக்கும் குருவுக்கும் பெரிய வித்தியாசம் இருந்ததில்லை. உத்தரவாதமானது குரு, சபை ஆகிய இருவர்மேலும் ஒரேதன்மையானதாயிருந்தது. இதினிமித்தம் சபைக்குச் சொன்னது குருவுக்குஞ் செல்லும், குருவுக்குச் சொன்னது சபைக்குஞ் செல்லும்."

புஸ்தகத்தை வாங்கவிரும்புவோர், Rev. E. Brulzer, Church of Sweden Mission, Kilpauk, Madras என்கிற மேல்விலாசத்துக்கு ரூபாய் இரண்டு அனுப்பினால், புஸ்தகம் அவர்களுக்கு அனுப்பப்படும்.

C. L. S. PRESS, MADRAS—1918

No. 152 ஜனவரி 1919

வேதியர் விளக்கு

Petitions for the New Year

நவ வருஷத்து விண்ணப்பங்கள்

1. என்றும் மாறுதவரே, நாங்கள் இந்தப் புதியவருஷத்தின் வழியாக உண்மையுள்ள இருதயங்களோடு சென்று, எல்லா விஷயங்களிலும் உம்முடைய அன்பான கண்ணுக்குப் பிரியமாயிருக்க எங்களுக்கு அருளும். ஆமென். கி. பி. 7-ம் நூற்றாண்டு.

2. சர்வவல்லமையுள்ள தேவனே, ஒளிக்கும் இருக்கத்துக்கும் வற்றாத ஊற்றே, இவ்வருஷத்தின் துவக்கத்துக்கு எங்களைக் கொண்டு வந்தவர் நீரே. உம்மை நேசிக்கவும் உம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவும் எங்களைக் காத்துவருகிறீர். வருகிற காட்களுக்கு எங்களை ஆயத்தம்பண்ணும். உம்முடைய அருள் எங்கள் இருளைப் பிரகாசிப்பித்து, எங்கள் பலவீனத்தைத் தாங்குவதாக. நாங்கள் கடந்த காலத்தின் பாவங்களையும் தக்கங்களையும் மறந்து, அவைகள்மூலம் வந்த ஞானத்தையும் தாழ்மையையும் மனதில் வைக்க எங்களுக்கு உதவிசெய்யும். புதுநோக்கங்களாலும் நம்பிக்கையாலும் எங்களை ஏவியருளும். சத்தியத்தின் நேசமும் நன்மையின் நேசமும் எங்கள் இருதயங்களில் ஆழமாய் வேரூன்றச்செய்யும். நீர் இந்த நாட்களை எங்களுக்குக் கொடுத்த நோக்கத்தையும் இந்த நாட்களில் நாங்கள் கற்கவேண்டிய பாடத்தையும் எங்களுக்குக் காட்டும். உமக்கு உண்மையற்றவர்களாய்ப்போக எங்களை விடாதேயும். இதுகாறும் எங்களை நிறைய ஆசீர்வதித்தீர். இன்னும் உம்முடைய கையால் எங்களை நடத்தும், இன்னும் உம்முடைய ஆவியால் எங்களுக்கு வழிகாட்டும். ஆடுகளின் நல்ல மேய்ப்பரே, எங்களைக் கைவிடாதேயும். நாங்கள் உம்முடையவர்கள் என்கிற எண்ணம் நாங்கள் பாவஞ்செய்யும்போதும் எங்களைவிட்டு நீங்காமலிருப்பதாக. எங்கள் ஜீவியத்தின் இளைப்பாவது துக்கமாவது, இவ்வுலகத்தின் சந்தோகமாவது இருளாவது உம்மை நம்பும் நம்பிக்கையை எங்களி

லிருந்து எடுக்க ஒட்டாதேயும். என்ன ஒளி பிரகாசித்தாலும், என்ன இருள் மூடினாலும், உம்மை நம்பி உமக்குக் கீழ்ப்படிகிறவர்களின் கூட்டத்திலிருந்து தவறுதபடி எங்களைக் காத்தருளும். எங்கள் நாதர் இயேசுகிறிஸ்துவின் அன்பிலும் ஊழியத்திலும் எங்களை வைத்துக் கொண்டிரும். ஆமென்.

O India, come to Christ

By the Rev. F. Kingsbury

நாவலந் தீவாரை நம்பன்பால் அழைத்தல்

திருத்தாண்டகம்

கங்கைசிந்து பிரமபுத்ரன் யமுனை வைகை
காவிரிதா மிரவருணி யாறு பாயும்
நங்கைவளநிற் பாதகண்ட நம்தாய் பெற்ற
நன்மக்கான், சோதரரே, ஒன்று கேண்மின்:
வங்கமின்றிக் கடல்நீந்த நும்மால் ஆமோ?
வைத்தியனீச் சுரனின்றி நோய்கள் போமோ?
உங்களுக்காய்ச் சிலுவைமிசை மாண்ட யேசு
உபயதிரு வடிவணங்கி உய்ம்மின் நீரே.

"மாண்டனன்உங் களுக்காகச் சிலுவை மீது
மற்றவன்றன் மலரடியே வணங்கும்" என்றீர்;
மாண்டவொரு மனிதனைநாம் வணங்கல் ஆமோ?
மதியுடையீர், இதுமுறையோ? வழக்கோ? சொல்லீர்.'
மாண்டபிரான் மாண்டொழிந்து போனு னல்லன்;
மாதேவன் எழுப்பஅவன் எழுந்தான், கண்டீர்;
ஆண்டவன்பின் பாலோகம் போனுன்; அங்கே
அப்பன்வலப் பக்கமுள்ளான்; வணங்கு வீரே.

Eight Days of Prayer for Christian Unity

திருச்சபை ஐக்கியத்துக்காக எட்டுநாள் ஜெபம்

எல்லாத் தேசங்களையும் வகுப்புக்களையும் சேர்ந்த கிறிஸ்தவர்களில் அநேகர் போன வருஷம் ஜனுவரி மாசத்தில் எட்டு நாளாக விண்ணப்பம் பண்ணினதுபோல, இந்த வருஷத்திலும் நாம் ஏகோபித்து ஜனுவரி 18-ம் தேதி முதல் 25-ம் தேதி மட்டும் ஊக்கத்தோடு

ஜெபம் செய்யவேண்டும் என்று கேட்கப்படுகிறது. அவ்வாரத்தில் இதைப்பற்றி விண்ணப்பம் செய்வதற்காக விசேஷித்த கூட்டங்களை வைப்பது உத்தமம். அப்படிப்பட்ட கூட்டங்களிலாவது தனி ஜெபத்திலாவது உபயோகிக்கிறதற்காகப் பின்வரும் ஒழுங்கை இதில் அச்சிட்டிருக்கிறோம்.

சனி, ஜனுவரி 18

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னில் அணுப் பிணைந்த உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். யோவான் 17 : 21.

கிறிஸ்தவ ஐக்கியம், சபைப் பிரிவுகளினின்றும் தர்க்கங்களினின்றும் நீங்கியிருப்பதல்ல, உலகத்தை கிறிஸ்துவினிடம் கொண்டு வருகிறதற்கு ஒன்றுசேர்ந்து நிற்பதே. எனெனில் மனுஷருக்கு புதிய உயிர் கொடுத்து அவர்களை மீட்கும்படி இவ்வுலகத்திற்கு வந்த தேவகுமாரனது ஜீவியம் அதுவே. ஐக்கியம் சட்டதிட்டங்களாலே வாராது. தமது சரீரமாகிய சபையின்மூலமாய் உலகத்துக்குத் தம்மைக் காட்டும்படி நாம் வல்லமை பொருந்தியவர்களாயிருக்கும்படி, சித்தத்திலும் அன்பிலும் நாம் ஒருவரோடொருவர் ஐக்கியமாயிருக்க வேண்டுமென்றே அவர் பிதாவை நோக்கி மன்றாடினார். இந்த ஐக்கியத்தின் நோக்கம் நாம் உலகத்தைக் கிறிஸ்துவின்பாதத்தில் கொண்டு வரவே. ஆதலால் நாம் ஜெயங்கொண்டவர்களாய் நிற்கும்படி கிறிஸ்துவின் ஜீவியத்தை உலகத்துக்குக் காட்டவேண்டும். அவரே எல்லாவற்றையும் தமக்குக் கீழாக்க வல்லமையுள்ளவர்.

நமதாண்டவர் தம்மை உலகத்தின்பொருட்டுப் பலியாக ஒப்புக் கொடுக்குமுன் தம்முடைய அடியார்கள் ஐக்கியமாயிருப்பதால் உலகத்தை தம்மிடம் கொண்டுவரக்கூடுமென்பதை தமது ஜெபத்தில் காட்டினார். உலகம் கிறிஸ்துவுடையதாக வேண்டுமானால் உலகம் அவரைக் காணக்கூடியவகை ஒன்று வேண்டும். ஆவிக்குரிய ஐக்கியம் போதுமானதன்று, எனெனில் உலகத்தார் அதைக் காணமுடியாது. ஐக்கியம் ஆவிக்குரிய ஐக்கியமாயிருந்தாலும் காணக்கூடிய ஐக்கியமாயிருத்தல் அவசியம்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

கிறிஸ்தவர்கள் ஒற்றுமையால் கிறிஸ்துவை உயர்த்திக்காட்டி மனுஷரை இழுத்துக்கொள்ள ஜெபிக்கவேண்டும்.

நமது பிரிவினை நமதாண்டவரின் ஒளியை மறைத்து உலகத்தில் அவர் பிரகாசிக்காமலாக்கிவிடுகின்றதை நாம் பார்க்க ஜெபிக்க வேண்டும்.

நமது பிரிவினையால் கிறிஸ்து பிரிந்திருக்கிறாரென்று உலகத்தார் நினைக்கிறதை நாம் காணும்படி ஜெபிக்கவேண்டும்.

நமது பிரிவினை நமது மனதைச் சிதறப்பண்ணிச் சுவிசேஷத்தைக் கேட்பவர்களுக்குப் பிரிவினையின் சத்தத்தைத் தொனிக்கப் பண்ணுவதை நாம் பார்க்கும்படி ஜெபிக்கவேண்டும்.

ஐக்கியத்தை உண்டுபண்ணுவது நாமல்ல, நமது சித்தத்தைக் கடவுளின் சித்தத்துக்குக் கீழாக்குவதாலேதானுகுமென்று நாம் பார்க்கும்படி ஜெபிக்கவேண்டும். நாம் தனித்தனியாகவும் கிறிஸ்தவ சமுதாயமாயும் ஜீவஞ்ருகிய அவருக்கு நம்மைக் கீழ்ப்படுத்தி அவர் சமூகத்தால் நிறைந்து அவரை உலகத்துக்குக் காட்டும்படி நாம் ஜெபிக்கவேண்டும்.

ஜெபம்

எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே! உம்முடைய அப்போஸ்தலரிடம், சமாதானத்தை வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேனென்று சொன்னீரே! எங்கள் பாவங்களைப் பாராமல், உமது சபையின் விசுவாசத்தைப்பார்த்து, அதற்குச் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் உமது சித்தத்துக்கிசைய அளிக்கவேண்டுமென்று நித்திய கடவுளாகிய உம்மை வேண்டுகிறோம். ஆமென்.

எங்கள் இரட்சகரும் சமாதானத்தின் அதிபதியுமாகிய இயேசு இரட்சகரின் பிதாவே! எங்கள் பிரிவினையால்வரும் பெரிய தீவினைகளை நன்குணர உமது கிருபையைத் தாரும். எவ்விதப் பகையையும், விரோதத்தையும், தெய்வீக ஐக்கியத்தைக் கெடுத்துப்போடும் மற்றெந்தத்தடையையும் நீக்கிப்போட மன்றாடுகிறோம். ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே ஞானஸ்நானமும், பிதாவாகிய ஒரே கடவுளும் இருப்பதுபோல், நாங்களும் ஒரே சிந்தையாய் உண்மையும், சமாதானமும், விசுவாசமும், அன்புமாகிய பரிசுத்தக்கட்டிலே இணைக்கப்பெற்று உம்மை மகிமைப்படுத்தும்படி எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

எல்லாம் வல்ல கடவுளே! உமது ஜனங்களெல்லாருக்கும் ஐக்கியத்தையும், சமாதானத்தையும், உண்மையான சினேகத்தையும், உட்பிரகாரமாயும், வெளிப்பிரகாரமாயும் தந்தருள எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டுகிறோம். ஆமென்.

ஞாயிறு, ஜனுவரி 19

நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். யோவான் 17:21.

நமதாண்டவர் வேண்டின ஐக்கியம் மனுஷர் எட்டுவதற்கு மிகவும் மேலானது. ஒருவேளை நாம் அந்த ஐக்கியத்தைத் தடுத்தோ, அதைக் கெடுத்தோபோடலாம்; ஆனால் அதைச் சிருஷ்டிக்க முடியாது. எனென்றால், அது திரித்துவத்திலிருக்கும் ஒரே ஜீவனின் ஐக்கியம்.

இது மனுஷருடைய ஒழுங்கு என்று நாம் நினைக்குமளவும், நமது அகந்தையாலும், பொறுமையினாலும், சந்தேகத்தாலும், நான் என்கிற சிந்தையாலும், நமது எத்தனங்கள் வாய்க்காமற்போய்விடும். இந்த ஐக்கியம் மனுஷருடைய சித்தத்தால் உண்டாகமாட்டாது, கடவுளின் சித்தத்தாலே ஆகும்.

சட்டதிட்டங்களால் இந்த ஐக்கியத்தைக் கொண்டுவர முடியாது. எனெனில், விசுவாசம் மனிதனுடைய முழுச்சக்தியால் கடவுளுக்குத் தன்னைப் பிரதிஷ்டைபண்ணி அவரிடமிருந்து ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவதே. ஜீவன் சட்டதிட்டங்களால் கட்டப்படாமல் கிறிஸ்துவின் சத்துவத்தால் இணைக்கப்பெற்று அவரால் நடத்தப்படவேண்டும். ஆதலால் கிறிஸ்தவ ஐக்கியத்தைக் கடவுள் நமக்குள் உதிக்கப்பண்ணி ஒழுங்குப்படுத்தி எல்லா மனிதரையும் தமக்குள் ஒற்றுமைப் படுத்துகிறார்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

பரிசுத்த ஆவியானவர் நமது மனக்கண்களைத் திறந்து திரித்துவத்திலுள்ள ஐக்கியத்தைப் போதிக்க நாம் ஜெபிக்கவேண்டும்.

நாம் உண்மையான மனத்தாழ்மையால் நிரப்பப்பட, நாம் இவ்வுலகத்தில் ஒன்றான மெய்த்தேவனுகிய கடவுளையும் அவர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அறியும்படி ஜெபிக்கவேண்டும்.

கடவுளுடைய சித்தத்துக்கு நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்து அவரை இவ்வுலகத்திற்கு நீடிகாலமாய்க் காண்பிக்கும்படி நாம் ஜெபிக்கவேண்டும். நாம் எதற்காக அழைக்கப்பட்டோமோ அதில் நாம் தாழ்மையோடும், பொறுமையோடும், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி நடக்கும்படி ஜெபிக்கவேண்டும்.

நாம் எல்லாரும் விசுவாசத்தின் ஐக்கியத்தில் வரவும் தேவனுடைய குமாரனை அறியும் அறிவில் பூரணபுருஷராய்க் கிறிஸ்துவின் பரிபூரணத்தை அடையும்படி நாம் ஜெபிக்கவேண்டும்.

ஜெபம்

கடவுளே, உமது உதவியின்றி நாங்கள் உம்மைப் பிரியப்படுத்த முடியாததால், கிருபையாய் உமது பரிசுத்த ஆவியைத் தந்து எங்கள் இருதயத்தை ஆண்டருள வேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

கிறிஸ்துவே, உன்னத பிதாவின் வார்த்தையே, எங்கள் மத்தியில் வசிக்கும்படி மாமிசமானவரே, உம்மால் மீட்கப்பட்ட நாங்கள் உம்மோடு நித்தியகாலமாய் இணைக்கப்படும்படி கிருபைசெய்தருளும். ஆமென்.

எங்கள் பிதாவே, எல்லா நன்மைக்கும் மேலான நன்மையே, எல்லா அழகுக்கும் மேலான அழகே, சமாதானத்துக்கும் ஐக்கியத்துக்கும் சாந்தத்துக்கும் உறைவிடமே, எங்கள் பிரிவினைகளை அகற்றி அன்பினால் இணைத்துக்கட்டியருளும். நீர் எல்லாவற்றிற்கும் மேலாயிருப்பதுபோல நாங்களும் ஆவியில் ஒருமைப்பட்டு அன்பிலும் பெருந்தன்மையிலும் ஒருவரோடொருவர் ஐக்கியமாகும்படி, எல்லாவற்றையும் சமாதானமாக்குகிற உமது மூலமாயும் உமது ஒரே பேரான குமாரனின் கிருபையின் மூலமாயும் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

திங்கள், ஜனுவரி 20

எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன். யோவான் 5. 30.

பிரிவினைக்கேட்டின் காரணமென்ன? நமது பெருமையும் மனுஷருடைய சித்தத்தின் நிலைவரமற்ற தன்மையுமே. இவ்வுலக மனுஷன் கடவுளின் வல்லமையையும் அவருக்கும் உலகத்துக்குமுள்ள பந்தத்தையுங் குறைத்து, கடவுளின் ஞானத்தை அறிந்தவன்போல, கடவுள் உலகத்தை இரட்சிப்பது இந்தவழியாய் மாத்திரமென்று எண்ணி அகந்தையாய் நினைத்துவந்ததாலே பிரிவினைகள் உண்டாயின. கடவுளுடைய சித்தத்தையல்ல, நமது சித்தத்தையே நாடி நாம் நினைக்கிறபிரகாரம் கடவுள் நடத்தவேண்டுமென்று ஜெபித்துவந்தோம்.

ஜெபமானது கடவுளுடைய சித்தத்தை நமது சித்தத்தோடு ஒற்றுமைப்படுத்துவதல்ல, நமது சித்தத்தை அவருடைய சித்தத்துக்குக் கொண்டுவருவதே. ஆதலால் கடவுள் நமக்கு அவருடைய சித்தத்தைக் காண்பித்து அதைப்பின்பற்றக் கிருபைதர, ஜெபிக்கவேண்டும்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

தேவனுடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படும்படி,

நமது பெருமையை அகற்றிவிடும்படி கடவுளுடைய கிருபைக்காக,

சிறுபின்னைகளைப்போலாகி தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கப் பக்குவமாக்கப்படும்படி,

நம்முடைய சித்தத்தையல்ல, கிறிஸ்துவின் சித்தத்தைத் தேடும்படி,

பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் அவருடைய பிரமாணத்தைக் கண்டுகொள்ளுவான் என்னும் சத்தியத்தை நாம் அறியும்படி,

ஐக்கியத்தை அடைவது அதைப்பற்றிச் சிந்திப்பதனாலல்ல, ஆயத்தங்கள் செய்வதனாலல்ல, அன்பினால் எவப்பட்டு நாடோறும் அதைப் பழக்கத்தில் கொண்டுவருவதே.

ஜெபம்

ஆண்டவரே, நாங்கள் எப்பொழுதும் சரியான காரியங்களை நினைத்துச் செய்யும்படி உதவிசெய்தருளும். உம்மையல்லாமல் நாங்கள் நன்மையானது ஒன்றும் செய்யமுடியாததாலால், உமது சித்தத்துக்கொப்ப ஜீவிக்கும்படி எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

எல்லாம் வல்ல கடவுளே, மனிதருடைய புத்திக்கு மேலான காரியங்களைச் செய்ய வல்லவரே, உமது சபைக்கு நன்மையான எல்லாக்காரியங்களையும் செய்துமுடிக்கத் தேவரீர் வல்லவரென்று ஊக்கமாய் விசுவாசிக்க உதவிபுரிந்தருளும். அவிசுவாசத்தை எங்கள் இருதயத்திலிருந்து அகற்றியருளும். எங்களை உமக்குமுன் தாழ்த்தி எங்களுடைய மனதையும், இருதயத்தையும் உமக்கு முன்பாகத் திறந்துவைத்து உமது ஆவியானவர் எங்களுக்குப் போதிக்கவும் உமது சித்தத்தின்மூலமாய் உலகத்திலுள்ள விசுவாசிகள் ஒரே சரீரமாக்கப்படவும், எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

செவ்வாய், ஜனுவரி 21

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷரென்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். யோவான் 13 : 34, 35.

அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். யோவான் 4 : 16.

கிறிஸ்தவர்களுக்குள் வாக்குவாதங்கள் எழும்பிக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப் பிரித்து, அவருடைய இரட்சிப்பின் சுவிசேஷத்தை உலகம் கேட்கக்கூடாதபடி செவிடாக்கிப்போட்டுவிட்டது. சர்வதேச ஐக்கிய சங்கம் அன்பின் புதியகட்டளையைத் திரும்பவும் கூறி கன்னிமரியாளிடத்திற் பிறந்த இயேசுவிலே கடவுளின் இவ்வற்புதமான அன்பின் திறவுகோலைக் காட்டுகிறது. இச்சங்கம் நிலை வரப்படும்படி ஒருவரையொருவர் மதித்து அவரவர்களுடைய நல்ல கோட்பாடுகளைக் காண எவ்விறது. நமக்கு விருப்பமானால் நாம் கனவிலும் நினைத்திராத ஐசுவரியங்களைக் காணலாம். வாக்குவாதங்களில் இன்னும் நிற்போமானால் நமது சகோதரருக்கு முன்பாகத் தடைகளாகவே நிற்போம்.

கடவுளின் திரித்துவத்தின் ஊற்று அன்பாதலால், மனுஷனும் அந்த ஜீவனில் பங்குபெறும்படி அன்பால் இணைக்கப்படவேண்டும். அன்பு தன்னைக் கொடுத்து, அதைத் திரும்பவும் பூரணமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறது. நாம் ஒருவரையொருவர் நேசியாதபடியால், ஒருவரையொருவர் அறியாமல் தூர நிற்கிறோம். நமது நோக்கம் தர்க்கத்தில் ஜெயிக்கவேண்டுமென்றிருப்பதால் மற்றவர்களை ஆதாயம் பண்ணமற்போகிறோம். நாம் மற்றவர்களோடு அன்பாயிருந்தால் நாம் மற்றவர்களுக்குக் கொடுத்தும், வாங்கியும், மேலான உண்மையின் பொருளை அன்பினால் கண்டடைந்து ஜீவனும் பெலனுமடைவோம்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

நமது உள்ளம் வாக்குவாதங்களை ஒழித்துவிட்டு, தாழ்மையின் சிந்தையைத் தரிக்கும்படி,

நாம் எவ்வளவுக்கு கிறிஸ்துவின் அன்பில் நிற்கிறோமோ அவ்வளவுக்குத்தக்கதாய் நமது உள்ளான நிலைமையைக் கண்டுகொண்டு, இவ்வுலகத்தில் கடவுளின் ஊழியக்காரராயிருப்போமென்னும் சத்தியத்தை நாம் காணும்படி,

நாமும், நம்முடைய தர்க்கவாதிகளும் அன்பினால் நெருங்கி ஜீவிக்கும்படி.

ஜெபம்

பரிசுத்தாவியாகிய கடவுளே, சர்வதேச ஐக்கிய சங்கத்தின் தலைவர்களை நீர் நடப்படுத்தி அவர்களுக்கு பொறுமையையும், தாழ்மையையும், பெலனையும் கொடுத்து அன்பில் வேரூன்றச்செய்து, உமது ஆவியால் அவர்களை நடத்த உம்மை வேண்டுகிறோம். கிறிஸ்தவர்களெல்லாரும் தங்கள் ஐக்கியத்தால் இயேசு இரட்சகரை உலகத்துக்குக்காட்டி, எல்லாரையும் இழுக்கும்படி உதவிசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். ஆமென்.

புதன், ஜனுவரி 22

அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படி அப்படிச் செய்தார்—அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க்கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்க தாய் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது. எபேசியர் 4 : 15, 16.

பூரணப்படும்படி, நாம் ஒருவருக்கொருவர் தேவை. கிறிஸ்தவ விசுவாசம், தனித்தனியாய் கடவுளிடத்திலுள்ள சம்பந்தமோ, அல்லது சில கோட்பாடுகளை நம்புகிறதோவென்று நினைக்கப்படாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கமாயிருந்து, அவருடைய ஜீவனால் நிரப்பப்படுவதே கிறிஸ்தவ ஜீவியத்தின் நோக்கம். நாம் ஒவ்வொருவரும் உண்மையாகிய அவரிடமிருந்து சில பாகங்களைக் காண்கிறோம். ஆனால் நாமெல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒருவர் காண்கிறதை மற்றவர்களுக்குச் சொல்லுவோமானால் அவரைச் சரிவர அறியலாம். கிறிஸ்து, கடவுளின் அன்பைக் காட்டுகிறவராதலால், நாம் கிறிஸ்துவின் அன்பால் நிரப்பப்பட்டால் ஒருவருக்கொருவர் உதவிசெய்து, பாமராஜாவின் காட்சியில் ஒருவரையொருவர் கொண்டுசேர்க்கலாம்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

வெவ்வேறு சபைகளிலிருக்கும் நல்ல விஷயங்கள் முழுச்சபையின் வசமாகவும்,

எல்லாக் கிறிஸ்தவர்களும், விசுவாசத்திலும் பக்தியிலும் வளரவும்; ஒருவரையொருவர் பிரிக்கிற தடுப்புக்கள் விழவும்; மற்றவர்களுடைய குற்றங்களையல்ல, நல்ல குணங்களைப் பார்க்கவும் நல்ல குணங்களில் ஒன்று சேரவும்.

ஜெபம்

எங்கள் கடவுளே, அன்று அந்த மலையில் சீஷருக்குமுன் உமது குமாரனின் மகிமையைக் காட்டினீரே! நாங்களும் இவ்வுலகத்தின் மத்தியில் ஜீவித்தாலும், உமது குமாரனும், எங்கள் ராஜனுமான இயேசுகிறிஸ்துவின் மகிமையைக் காணும்படி அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

எல்லாம் வல்ல நித்திய கடவுளே, தமது ஆவியால் சபையை நடத்திச் சுத்திகரிப்பவரே! உமது திருச்சபையிலுள்ள எல்லா

மனுஷருக்காகவும் நாங்கள் ஏறெடுக்கும் விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஒவ்வொரு அங்கமும் அதினதின் ஊழியத்தைச் சரிவர நடத்தும்படி எங்கள் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

வியாழன், ஜனுவரி 23

நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற தூரும்பைப் பார்க்கிறதென்ன? லூக்கா 6 : 41.

நாம் நம்முடைய சகோதரனின் குற்றங்களை மாத்திரம் பார்க்குமளவும் அவைகளைப் பெருப்பித்து அவன் அந்தப் பிழைகளில் உரங்கொள்ளச் செய்வோம். அவன் ஒருவேளை சொல்லுவது: 'நான் தப்பிதமாயும் நீ சரியாயும் இருக்கலாம். ஆனால் நீ என்னைப் பகைப்பதால் நான் என்னுடைய தப்பிதத்தையே நேசித்து, ஜீவனைவிட அதிகமாய் அதைக் கவர்ந்து, என்னை எரித்துப்போட்டாலும் அதை விடக்கூடாதபடி, நீ எனக்கு உன்னுடைய சத்தியத்தைப் போதிக்கிறாய். ஆதலால் என்னுடைய தப்பிதத்தில் நான் உரங்கொள்ளுகிறது மாத்திரமல்ல; நீயே தவறிவிழுவாய்.' எனென்றால் கிறிஸ்தவ உண்மை அன்பாகிய கிறிஸ்துவின் வெளிப்படையான லட்சணமே. தப்பிதத்திலிருக்கிற என் சகோதரனை நான் நேசித்தால் அவனைப்பற்றி அதிகமாய் அறியலாம்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

கடவுளாகிய பரிசுத்தஆவி நமக்குப் பொறுமையைத்தந்து நம்மை விட்டு நீங்கியிருப்பவர்களுடைய சத்தியத்தை அறிந்துகொள்ளும்படி,

நம்முடைய வாக்குவாதங்களை விட்டுவிட்டுக் கடவுள் நமக்குத் தெரிவித்த உண்மையை மற்றவர்களுக்குச் சொல்லும்படி, பரிசுத்த ஆவி நமது சகோதரர்களிடம் கிரியைசெய்வதை நாம் நினையாமல் போனதற்காகக் கடவுளிடத்தில் நாம் மன்னிப்புப் பெறும்படி,

நம்முடைய சகோதரரோடு ஐக்கியப்பட்டு எல்லாரும் சரீரம், ஆத்துமா எல்லாவற்றையும் கடவுளுக்குகந்த பலியாகக் கொடுக்கும்படி அவருடைய கிருபைக்காக,

நாமும் நம்முடைய சகோதரரும் கிறிஸ்துவைத் தொழுதுகொள்ளுவதில் வெவ்வேறு வகைப்பட்டவர்களாலும், எல்லாரும் ஆவியானவரோடும் பிதாவோடும் ஏகமனதுள்ளவர்களாயிருக்கவும், ஆவியின் ஐக்கியத்தை நாம் கொண்டுநடத்த கிருபைபெற்றவர்களாயிருக்கவும்.

ஜெபம்

எங்கள் ஆண்டவரும் இரட்சகருமாகிய கிறிஸ்துவே, நீர் இவ்வுலகத்தில் வந்தபோது வாக்குவாதமோ சத்தமோ இடாமல் மழைத்துளிகள் பூமியில் விழுவதுபோல் உம்முடைய வார்த்தைகளை மனுஷருடைய இருதயத்தில் போட்டீரே, விசுவாசத்துக்காகப் போராடும் எல்லாரையும் தப்பிதத்துக்கும் வாக்குவாதங்களுக்கும் விலக்கி, உண்மையை அன்பினால் பேசி மனுஷர் உம்முடைய மகிமையைக் காணும்படி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

வெள்ளி, ஜனுவரி 24

என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான்; நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். யோவான் 6 : 56.

நமது பிரிவினையின் மூலமாய் அன்பாகிய கட்டிலிருந்து ஒருவரையொருவர் பிரித்து கிறிஸ்து தமது பலியால் உலகத்துக்குக் காட்டின மேலான போதனையை மறந்துபோகிறோம். திருவிருந்து ஞாபகச்சின்னமாயிருக்குமானால் அது அன்பின் ஞாபகச்சின்னம். நாம் ஒருவரோடொருவர் ஐக்கியமாய் இருக்கவேண்டுமென்று எவப்படாமலிருப்போமானால், எப்படி நாம் அத்திருவிருந்தில் சேருவோம்? அதினால் நாம் கிறிஸ்துவின் திருச்சமுகத்தில் செல்லுகிறோமானால், நாம் அவருடைய மெய்ச்சரீரத்தையும் இரத்தத்தையும் உட்கொள்ளுகிறோமானால், உலகத்துக்காகக் கொடுக்கப்பட்ட பலியோடு நம்மை ஒப்புரவாக்கிக்கொண்டோமானால், நாம் நம்முடைய சகோதரரோடு ஐக்கியப்படாவிட்டால் கிறிஸ்து நம்மில் எப்படி வாசம் பண்ணக்கூடும்?

தேவன் தம்மோடு சினேகிதனுகவோ பகைஞனுகவோ மனிதனுக்குச் சுயாதீனம்கொடுத்திருக்கிறார். நாம் சுயாதீனராதலால் கிறிஸ்து, நாம் சுய இச்சையால் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அவருடைய பூரண வேலையை நமது பிரிவினையால் தடுப்போமோ? நாம் நமது பிரிவினைகளால் நமது ஆண்டவரைத் திரும்பவும் சிலுவையில் அறைந்து மனிதர் அவரிடத்தில் வராதபடி தடுத்துப்போடுகிறோம்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

தனித்தனியாய் நாம், பிரிவினைகளுக்கு எம்மட்டும் காரணமாயிருந்தோமென்று காணும்படி,

நமது பெருமையும், சுய இச்சையும் இந்தப் பிரிவினைகளை அதிகரிக்க எம்மட்டும் காரணமாயிருந்ததென்று பரிசுத்தாவியானவர் நமக்குக் காட்டும்படி,

நமது பெருமையும், போதுமென்ற மனதும் காரணமாயிருந்த பிரிவினைக்காகக் கடவுளை நோக்கிக் கெஞ்ச,

மற்றச் சபையார் நம்மை அவர்களுடைய ஐக்கியத்துக்குப் புறம்பாக்குவார்களானால் அதைத் தாழ்மையோடு ஏற்றுக்கொண்டு அவர்களும் கடவுளுடைய சித்தத்தைச் செய்ய ஏவப்பட்டிருக்கிறார்களென்று உணர.

ஜெபம்

இன்று சிலுவையில் விரிக்கப்பட்ட கையோடு தொங்கின மேன்மைபொருந்திய மீட்பரே, பூலோகத்தார் உம்மை நோக்கிப் பார்த்து இரட்சிக்கப்படக் கிருபைசெய்தருளும். ஆமென்.

நமது ஆண்டவராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து கொண்டு வந்த சமாதானத்தின் தேவன், ஆடுகளின் மேலான மேய்ப்பன், நித்திய உடன்படிக்கையாகிய ரத்தத்தின் மூலமாய் நம்மை எல்லா நற்கிரியைகளிலும் பெருகப்பண்ணி, அவருக்குமுன்பாக நற்சீர் பொருந்தி நடக்க நம்மை ஆசீர்வதிக்க வேண்டிக்கொள்ளுகிறேம். ஆமென்.

சனி, ஜனுவரி 25

சத்தியம் உங்களை விடுதலையாக்கும். யோவான் 8 : 32.

காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும். எபேசியர் 1 : 9.

அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக. எபிரேயர் 12 : 27.

நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும். அப். 9 : 6.

உலகத்துக்கு வந்திருக்கும் நிர்ப்பந்தத்தை இனிமேல் பொறுக்க முடியாது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் ஒன்றுயிருப்பதால், அவருடைய பூரணவேலையைச் செய்ய இடங்கொடுத்தாலல்லாமல் உலகம் சீர்ப்படமாட்டாது. உலகத்தின் அஸ்திபாரங்கூடக் குலுங்கிற்று. இன்னும் பழையபடி ராஜ்யங்கள் இருக்கவேண்டுமோ, அல்லது உலகத்தில் நமது ஆண்டவருடைய ராஜ்யம் ஸ்தாபிதமாகவேண்டுமோ? இன்னும் அன்பின் ராஜனுக்கு விரோதமாய் நாம் பிரிவினையுடையவர்களாயிருக்கவேண்டுமோ, அல்லது நம்மை நாம் முழுவதுமாய் தத்தம்செய்து அவருடைய சமாதானமும் நீதியும் ஸ்தாபிக்கப்பட இடங்கொடுப்போமோ?

'ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டுமென்று நீர் சித்தமாயிருக்கிறீர்' என்று கேட்ட அந்த அப்போஸ்தலனைப்போல நாம்

எப்போதாகிலும் சொன்னதுண்டா? நாம் அப்படித் தாழ்மையாய்க் கேட்டால் நாம் என்ன செய்யவேண்டுமென்று போதிக்கப்படுவோம். அப்பொழுது, சிருஷ்டிப்பு ஆவலாய்க் காத்திருக்கிற புதியகாலம் வரும்; அப்போது நீதியும் இரக்கமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்; அப்பொழுது, சமுத்திரம் தண்ணீரால் நிறைந்திருப்பதுபோல உலகம் கர்த்தரை அறிகிற அறிவால் நிறைந்திருக்கும்.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள்

பிதாவாகிய கடவுள், பரிசுத்தாவியை கிறிஸ்துவின் நாமத்தினாலே அனுப்பி, நம்மை எல்லாக் காரியங்களிலும் போதித்து, கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையாகிய அன்பை நமது ஞாபகத்துக்குக் கொண்டுவரும்படி,

ஜீவனுகிய கிறிஸ்துவோடு வெளிப்படையாய் இணைக்கப்பட்டு, உலகம் அதின் மீட்பரைக் கண்டு, சமாதானமும் நீதியும் அன்பும் ஸ்தாபிக்கப்படும்படிக்கு.

ஜெபம்

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம், நம்முடைய இருதயங்களையும் சிந்தைகளையும், தேவனுடைய அன்பிலும் ஞானத்திலும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளுவதாக! பிதாக்குமாரன் பரிசுத்தாவியின் ஆசீர்வாதம் நம்மனைவரோடும் இப்போதும் இனி சதாகாலங்களிலுமிருப்பதாக. ஆமென்.

Story-Parables

By Miss Grover

கதாரூபமான உவமைகள்

(தொடர்ச்சி)

5. ரஸ்தா

ஒரு சமயத்தில் ஒரு வாலிபன் ஓர் பெரிய நகரத்துக்குப் பிரயாணம்பண்ணப் புறப்பட்டான். அவன் குடும்பத்தார் அவனை வழியனுப்ப வாசலண்டையில் சேர்ந்தார்கள்.

'சரியான வழியாய் நடக்க ஜாக்கிரதைப்படு' என்று அவன் தாய் சொன்னுள்.

அவன் அக்காளோ 'அதைப்பற்றிப் பயமில்லை, அவன் ஜாக்கிரதையாய்ப் போவான்' என்றாள்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவன் பாட்டன் 'ஒரே ஒரு நல்ல வழி உண்டு; அது குன்றின்மேல் ஏறுகிற நேர் வழிதான்' என்று சொன்னான்.

அந்த வாலிபன் சிரித்துக்கொண்டு, பாட்டனுக்கு வந்தனம் செய்து, 'நீர் நல்ல அருமையான பாட்டன்தான், ஆனால் உமக்கு மறதி ஜாஸ்தி, ஞாபகமில்லையே; நான் நடக்கவேண்டிய வழி புஷ்பங்கள் பூக்கும் வயலண்டையிலும், பசுமையான நதியண்டையிலும் போகிற வழிதான்' என்று சொன்னான்.

அவன் எல்லாருக்கும் வழியனுப்பிக்கொண்டு சந்தோஷத்தோடு புறப்பட்டுப்போனான். அப்போது விடியற்காலம்தான். சூரியன் நன்றாய் உதித்திருந்தது. புஷ்பங்கள் பூத்திருந்த வயல்களண்டையில் அவன் போனபோது அதிக அழகாயிருந்தது. ஆகாயத்துப் பட்சிகள் பாட்டுப்பாடின. புல்லுக்குள் பூக்கள் ராஜரத்தினங்களாகப் பிரகாசித்தன. சிவப்பு, நீலம், ஊதா நிறமுள்ள பூக்கள் இருந்தன. அந்த வாலிபன் ஒரு பூவைக் கிள்ளி, இன்னொரு பூவைக் கிள்ளும் போது, முந்தினதை எறிந்துவிட்டுப் பாட்டுப் பாடிக்கொண்டு, தன் வழியாய்ப் போனான். அப்புறம் தான் நடந்த பூமி ஈரமாகவும், மெதுவாகவும் இருந்ததென்று கவனித்தான்; புல் நீளமாய் வளர்ந்து, அவன் முழங்கால்மட்டும் உயர்ந்திருந்ததினால், அவன் கால் தவறிப் போகத்தக்கதாயிருந்தது. அவன் நடந்த ஒவ்வொரு அடியும் அதிக ஆழமாய் சேற்றிலும் உளையிலும் அமிழ்ந்தது. தான் நிற்கமுடியாததும், மோசம் வரத்தக்கதுமான இடத்திலிருந்ததாகக் கண்டான்; அதுவுமல்லாமல் அவன் சுற்றிப்பார்த்தபோது, அந்தச் சேறுள்ள நிலம், தனக்கு முன்னும், தன் இருபக்கங்களிலும் இருந்ததாகவும், அதின் வழியாய்ப் பாதை இல்லாததாகவும் கவனித்தான்.

அப்போது அந்த வாலிபன், 'நான் முந்தி இந்தச் சேறுள்ள நிலத்தைக் கவனியாமற்போனது என்ன புத்தியீனம்! இப்போ நான் திரும்பிப் போகவேண்டும்; இல்லாவிட்டால் வழிதப்பிப் போவேன், இறந்துபோனாலும் போவேன்' என்று சொல்லிக் கொண்டான்.

ஜாக்கிரதையோடும் கஷ்டத்தோடும் தன் கால்களைச் சேற்றிலிருந்து இழுத்துக் கெட்டியான நிலத்தில் வைத்துத் தன் வழியைக் கண்டுபிடித்தான். தான் வந்த வழியைவிட்டு முகத்தைத் திருப்பிப் பார்த்தபோது அவனுக்குமுன் அந்தப் பெரிய குன்று எழும்பினதாக

வும், அந்தக் குன்றின்மேல் ஒரு ரஸ்தா கற்பாறைகள் நடுவிலும், முட்செடிகள் நடுவிலும் நேராய்ப்போனதாகவும் பார்த்தான்.

அந்த வாலிபன், 'அது கரடுமுரடான வழியாகத் தெரிகிறது. ஆனால் அது நல்லவழிதான், எனென்றால் அது நேராகவும், ஈரமில்லாமலும் இருக்கிறது. இன்னொரு நாளைக்கு அந்தவழியாய்ப் போவேன்' என்றான்.

இராக்காலத்தில் அந்த வாலிபன் ஆயாசமாயும் ஒழுங்கீனமாயும் தன் வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தான். அவன் 'நான் காலமே போன வழி தகாதவழிதான். நாளைக்கு நான் மறுபடியும் புறப்பட்டுப் போய், குன்றின்மேல் போகும் அந்த நேர்வழியாய்ப் போவேன். அதுதான் நல்லவழி' என்று சொன்னான்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த கிழப்பாட்டன், 'அது நிசமா? அதைக் கேள்விப்படுகிறது நல்லது' என்று சொன்னான்.

அந்த வாலிபன் சிரித்துக்கொண்டு, அவனுக்கு வந்தனம் செய்து, 'நீர் நல்ல அருமையான பாட்டன்தான். ஆனால் உமக்கு மறதி ஜாஸ்தி, ஞாபகமில்லையே' என்று சொன்னான்.

6. யாரோ

ஒருவன் கோவிலுக்குப்போய் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினான். அவன்: 'தேவனே! நான் உள்ளும் புறம்பும் பாவமுள்ளவனாயிருக்கிறேன். என் ஆத்துமா என் பாவத்தினாலே அழுக்காயும் கறுப்பாயுமிருக்கிறது. என் முதுகுக்கு அது சுமக்கக் கூடாத பாரம். எல்லா இரக்கங்களும் பொருந்திய தேவனே, பிரதான பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்' என்றான். அவன் கோவிலைவிட்டுப் புறப்பட்டபோது ஒரு சிநேகிதனைக் கண்டான். 'நீர் எங்கேயிருந்து வருகிறீர்?' என்று அந்தச் சிநேகிதன் கேட்டான்.

'நான் கோவிலுக்குப்போய் பாவஅறிக்கைபண்ணி வந்திருக்கிறேன்' என்று அந்த மனிதன் சொன்னான்.

'உமது பாவங்களைப்பற்றிப் பேசினால், உம்மிடத்தில் ஒரு குற்றம் இருக்கிறதாக நான் அடிக்கடி கவனித்திருக்கிறேன்' என்று அந்தச் சிநேகிதன் சொன்னான். அக்குற்றத்தை அவனுக்கு உடனே சொன்னான். 'பொய்யனே' என்று அம்மனிதன் சொல்லி அவன் வாயிலே ஒரு அறை அறைத்தான்.

7. சொந்த முகத்தைப் பார்ப்பது

ஒருவன் தன் அயலகத்தாரைப்பற்றி முறுமுறுத்தான். அவன் சொன்னதாவது: 'இவ்வூரிலிருக்கும் துஷ்டஜனங்களைப்போல்

நான் வேறெங்கும் கண்டதில்லை. அவர்கள் பண ஆசைக்காரர், சுய நயத்தைத் தேடுபவர்கள், திருடர்கள், மற்றவர்களுக்குப் பரிதாபத்தைக் காட்டமாட்டார்கள். இதுவுமல்லாமல் அவர்கள் ஓயாமல் ஒருவர் மேல் ஒருவர் கோள்சொல்லுகிறார்கள்' என்று சொன்னான்.

'அது நிசமா?' என்று அவன்கூட நடந்துபோன ஒருவர் கேட்டார். அதற்கு அந்த மனிதன், 'அது நிசம்தான். பார்! நமக்கு எதிரில் வருகிற இந்த ஆளைக் கவனி. அவன் முகம் எனக்கு நன்றாய்த் தெரியும், அவன் பெயரையோ நான் மறந்துவிட்டேன். அவனுடைய கொடூரமான கூர்ந்த கண்கள், பாம்பின் கண்கள்போல், இங்கும் அங்கும் பார்க்கின்றன. அவன் முகத்தைப் பார்த்தால், அவனுக்குப் பணப்பேய் பிடித்திருக்கிறதென்றறியலாம். அவன் நிமிர்ந்து நடக்காமல் கீழ்ப்பார்வை பார்த்துக்கொண்டு நடக்கிறான்' என்றான்.

'இதெல்லாம் கூர்ந்து கவனித்ததினாலே நீ கெட்டிக்காரன்தான்; ஆனால் நீ கவனிக்காததொன்றுண்டு' என்று மற்றவர் சொன்னார். 'அதென்ன?' என்று அம்மனிதன் கேட்டான்.

'பார்! நமக்கு எதிரில் நிற்கிறது ஒரு முகக்கண்ணாடிதான்' என்று மற்றவர் சொன்னார்.

C. L. S. PRESS, MADRAS—1919

No. 153 பெப்ருவரி 1919

சேவதியர் விளக்கு

OFFICE OF THE LIBRARY 6-FEB 1919

Favourite Hymns in Tamil Metres

Translated by the Rev. F. Kingsbury, B.A.

I

'O Love that wilt not let me go'

பண்: திருத்தாண்டகம்

'அரியானை அந்தணர்தம் சிந்தை யானை' என்பது போல.

நினையொழிந்து போகவிடா தென்னை ஈர்க்கும்
நேயமே, வேசறுமென் னுயிரை எந்தாய்
உனிற்சார்த்து கின்றேன்; நீ தந்த வாழ்வை
உன்றனுக்கே மீளவும்நான் தருகின் றேனே;
கனைகடலாம் நினதுநிறை வாழ்வில் என்றன்
கடுகனைய வாழ்வதுதான் கலந்து பாய்ந்து
முனமில்லாச் செழுமையொடு நிறையும் வாய்ந்து
மூதலகில் நனிசிறந்து விளங்கு மாறே.

என்வழியெல் லாந்தொடரும் ஒளியே, காற்றில்
இயங்கியசை என்திரிநான் உனக்கே கின்றேன்;
என்னுள்ளம் ஈகின்ற தனைக்கே மீண்டும்
நீதந்த கதிரதனை இரவி யுன்றன்
தன்னுவெயில் தனிலதன்றன் பகலே மிக்க
சோதியுடன் அழகமைந்து தலங்கு மாறே
மன்னுயிர்தாம் இருளழுந்தி மானா வண்ணம்
வானமிசை மிளிர்கின்ற மணிகள் கோவே.

கவலைவழி எனைநாடுங் களிப்பே, நெஞ்சின்
கதவினைநான் உன்றனுக்குச் சாத்து கில்லேன்
திவலைமழை பொழிகையிலும் வான வில்லே
தெரிகின்ற தென்கண்கள் தமக்கே எந்தாய்;
புவனஇருள் புலரும், பின் காலை தோன்றும்
புன்கண்ணீர் தோன்றுது போகும் என்ற
உவமையிலா நின்சொல்வீண் சொல்லன் றென்றே
உணர்கின்றேன் என்னுளம்வாழ் உயிரே தேனே.

என்றலையை நிமிர்த்துகின்ற குருசே, உன்னை
யான்நீங்க அருள்களனத் துணியேன் கண்டாய்;
இந்நிலத்து வாழ்வில்உயிர் இல்லை யென்றே
எறிந்தனன்யான் அதன்பெருமை துகளில்; அச்சோ
மன்னுமொழியா வாழ்வு மலரு கின்ற
மாண்பென்னே அத்துகளி லிருந்து தானே!
அன்னையிலும் அன்புள்ள அப்பா என்றும்
ஆருகனின் னுளப்படியே அடிய னேற்கே.

II

'Lead, Kindly Light'

பண்: திருநேரிசை

'பத்தனுப்பாட மாட்டேன்' என்பது போல.

இருள்எனைச் சூழ்ந்த தந்தோ! அன்புள ஒளியே, என்னை
அருள்வழி நடத்து; கங்குல் இருண்டது, வீடோ தூரம்;
திருவுளம் இரங்கி என்றன் சீறடி நீகா, சேய்மை
அரியவை காண வேண்டேன்; அமையும்ஓர் அடிகண் டாலே.

இன்றுநான் இருத்தல் போல என்றும்நான் இருந்தேன் அல்லேன்;
என்றனை நடத்து நீயென் றியானுனைக் கேட்டேன் அல்லேன்;
என்னுளப் படியே சென்றேன்; என்வழி தெரிந்தேன் யானே;
இன்றெனை நடத்து நீயே என்னஆ ளுடைய கோவே.

பகட்டின பகலை நச்சிப் பாவிநான் திரிந்தேன் ஐயோ!
அகத்தினில் அச்சங் கொண்டே னெயினும் இறுமாப் பென்றன்
அகத்தைஆட் கொண்ட தையோ! அடியனேன் கழிந்த காலம்
தகப்பனே நினையேல்; எழைத் தமியனை நடத்து நீயே.

இந்தநாள் காறும் உன்றன் வல்லமை தாங்கிற் றென்னை;
குன்றுபுற் றரையே ஆற்றில் உலையில்யான் செல்ல நேரின்
இன்னும்நின் சத்தி தானே என்றனை நடத்தும் மெய்யே,
இந்நிசி விடியும்; பின்னே பரிதியும் எழுவா னன்றே.

அக்கணம் காண்பேன் யானே அகல்விடந் தனிலே சாலத்
துக்கம்நான் சிறிதுகாலம் கொள்ளஎன் றனைத்து நந்த
மிக்கருமை நேசர் மின்னும் முகைமுகம்: அதுகா றெல்லாத்
திக்கிலும் காலும் செய்ய அன்புள ஒளிகா நீயே.

III

'Rock of Ages'

உலவாமலை

கலிவிருத்தம்

'முத்திநெறி அறியாத' என்பது போல.

ஊழிதொறும் நிற்கும்எழில் உலவாத கன்மலையே
பாழடைந்த என்பொருட்டுப் பிளவுண்ட பருவதமே
எழைஎற்கெம் பெருமான்நீ சரண்; பாவம் பழிதீர்க்க
வாழும் உன்றன் விலவில்வடி வாரியொடு செந்தீரே.

என்பாவம் யான்தீர்க்கச் செயற்பால அறமுமிலை;
எந்நாளும் முயன்றிடினும் எப்பொழுதும் அழுதாலும்
என்னுரும் அவற்றாலே? எல்லாம்வீண் எனஅறிந்தேன்;
முன்னவன்நீ எனைக்காத்தல் வேண்டும். அன்றிமுடியாதே.

உன்னருள்யான் பெறுவதற்குக் கொடுவருவ தொன்றுமிலை;
என்செய்வேன்! உன்குருசே இறுகப்புல் கின்றேன்யான்;
மன்னோநான் உடையிலேன், துணையிலியான், மலமுடையேன்;
தன்னமுடை தீனைதூய்மை தா; அன்றேல் உய்யேனே.

நிலையில்இக வாழ்வினிலும் நினைவழிந்து சாகையிலும்
உலகுதுறந் தும்பர்உலம் துய்ப்பதற்கு வருகையிலும்
இலகுதனி அறஇருக்கை தனிலுனைநான் காண்கையிலும்
உலவாத கன்மலையே அடியேன்உன் னடைக்கலமே.

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

15-ம் அத்தியாயம்

திரும்பு பயணம்

(தொடர்ச்சி)

இவ்விருவரும் தெர்பை பட்டணத்திற் தங்கி மாரிகாலத்தைக் கழித்தார்கள். பக்கத்திலுள்ள மலைகளில் உறைபனி விழ ஆரம்பித்தது. வியாபாரக்கூட்டத்தாருடைய ஒட்டகங்களின் போக்குவரவு அற்றுப்போயிற்று. மலைக்கணவாய் உறைபனியினால் மூடப்பட்டது. சமவெளியில் இருந்த மகாபெரிய நீலமலை முழுவதும் வெண்மை மயமானது. பவுலுக்கு இங்கு சில வேலைகள் கிடைத்தன. இடையர்களுக்கும் பிரயாணிகளுக்கும் அவசியமான கூடாரங்களை அவர் செய்வார். சில சமயங்களில் அவற்றைப் பழுதுபார்ப்பார். ஆகவே ஒருவருக்கும் கஷ்டமில்லாமல் தாம் இருக்கக்கூடும். தமது வேலையைப் பார்த்துக்கொண்டே பேசிக்கொண்டிருப்பார். ஜனங்கள் அவருடைய தொழிற்சாலையிற் குந்திக்கொண்டு அவரிடத்தில் பல கேள்விகளைக் கேட்பார்கள். இயேசுகிறிஸ்து என்கிற தம்முடைய குமாரன் மூலமாய்க் கடவுள் மனுஷரோடு பேசுகிறார் என்று அவர்கள் கூறின இந்த விசேஷ சங்கதியைப்பற்றி அவர்களோடு தர்க்கம் பண்ணுவார்கள். பிரயாண உபதேசிகராகிய இவ்விருவரும் சொல்லிய யாவும் யதார்த்தமென்று தெர்பை பட்டணத்தாரில் அநேகர் உணர்ந்தார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய கையிற் தங்களை ஒப்புக்கொடுத்து அவருக்குச் சீஷர் ஆனார்கள்.

மாரிகாலம் கழிந்து வசந்தகாலம் ஆரம்பித்தது. மலைகளின் இரு பாரிசங்களினின்றும் உறைபனிக்கட்டி உருண்டோடிச் சமவெளியிற் சென்றது. மலை திரும்பவும் கருநிறமடைந்தது. ஆயினும் தெர்பை மலைத்தொடரின் ஓடுங்கிய கணவாயில் இன்னும் பனி நின்றது. வசந்தகாலத்தின் சகலவித முயற்சிகளும் திரும்பவும் தலை எடுத்தன. பவுலும் பர்னபாவும் சில வியாபாரக்கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் மேற்குமுகமாய்ப் பிரயாணம்பண்ணி இலயுதிர்காலத்தில் தாங்கள் வந்த அதே ரஸ்தாவின் வழியாய்ச் சென்றார்கள். லீஸ்திரா பட்டணத்தின் ஆலயம் அவர்கள் கண்முன் நின்றது. சில மாசங்களுக்கு முன்னே பவுல் கல்லெறியப்பட்ட அந்

தப் பட்டணத்துக்குள் அவ்விருவரும் தைரியத்தோடு வந்தார்கள். அங்கே அவர்கள் சீஷர்களோடு பேசி அவர்கள் மார்க்கத்தை ஸ்திரமாகப் பற்றிக்கொண்டிருக்கவேண்டுமென்றும், அதரிசியான தங்கள் இரட்சகரோடு அவர்கள் பிரதினமும்சகவாசம்பண்ணிக்கொண்டேயிருக்கவேண்டுமென்றும் அவர்களுக்குச் சொன்னார்கள். இது இலேசானகாரியமல்லாவிடினும், அநேக துன்பங்களின் மூலமாய்த்தான் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குட் பிரவேசிக்கவேண்டியிருக்கிறது என்று சொல்லி அவர்களைத் தைரியப்படுத்தினார்கள்.

பவுல் சொல்லுகிறதை அவர்கள் மெத்த வணக்கத்தோடு கேட்பார்கள். கல்லெறியுண்கிறதும் அவரைத் தமது விசுவாசத்தினின்று விலகச்செய்யவில்லை என்றும், எவ்விதமான பயமுறுத்தல்களும் அவருடைய தைரியத்தைக் குலையச்செய்யவில்லை என்றும் இவர்கள் கண்டார்கள். இந்த ஜனங்களுக்குப் பிற்பாடகாலத்தில் இவர் எழுதிய நிருபத்திற்கூறிய இவ்வித வார்த்தைகளை இங்கேயும் இவர் சொல்லியிருக்கலாம்: 'சண்டை செய்கிறவர்களும், பொறாமைக்காரரும், கோபாவேசம் கொள்ளுகிறவர்களும், அசுத்தரும், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமுடியாது. கர்வமும், கோபமூட்டுதலும் நம்மிடத்தில் இருக்கலாகாது. கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் தங்கள் மாம்சத்தைச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். ஆவியின் கனி அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நன்மை, விசுவாசம், சாந்தம், தன்னடக்கம்.'

லீஸ்திராவிலுள்ள சீஷர்களில் அதிக ஸ்திரமுள்ளவர்களைப் பவுலும் பர்னபாவும். தெரிந்தெடுத்து அப்பட்டணத்தச் சிறிய சபைக்கு இவர்களை முதன்மைக்காரராக ஏற்படுத்தினார்கள். அப்பால் இவர்கள் லீஸ்திராவிலுள்ள சீஷர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பதினெட்டு மைல்தூரம் நடந்து இக்கோனியாவுக்குச் சென்றார்கள்.

இக்கோனியாவிலிருந்து ரோமரஸ்தாவின் வழியாய் மேற்குமுகமாய்ப் பிரயாணம்பண்ணி பிசிதியாகாட்டிலுள்ள அந்தியோகியாவிற்கு வந்துசேர்ந்தார்கள். இவ்விரண்டு இடங்களிலுமுள்ள கிறிஸ்தவர்களுக்கு தைரியம் சொல்லி, அவர்கள் விசுவாசத்தில் ஸ்திரமாயிருக்கவேண்டுமென்றும், துன்பத்தை எதிர்பார்க்க வேண்டுமென்றும், தேவனுடைய ராஜ்யத்தின் நிமித்தம் அத்துன்பங்களில் தளர்ந்து போகக்கூடாது என்றும் அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். இந்தத் திரும்பு பிரயாணத்தில் பவுல் யூதர்களுடைய ஜெபஆலயங்களுக்குப் போனதாக நாம் வாசிக்கிறதில்லை. கிறிஸ்தவக்கூட்டத்தார் இருந்த இடங்களுக்குமட்டும் சென்று அவர்களைத் திடப்படுத்தினார்.

சரியான வசந்தகாலம் இப்போது வந்துவிட்டது. மலைக்கண வாய்கள் எல்லாம் திறக்கப்பட்டன. இப்போது பவுலும், பர்ன பாவும் இம்மலைப்பிரதேசங்களை விட்டு சீரியாநாட்டு அந்தியோகி யாவிலுள்ள கிறிஸ்தவர்களிடத்திற்குச் சென்று இரண்டு வருஷங் களுக்கு முன்னே தங்களை இந்த சுவிசேஷ பிரயாணத்திற்கென்று அனுப்பிய அந்த சிநேகிதருக்கு அப்பிரயாண விபரத்தைப் சொல்லு தற்கு தாங்கள் காலதாமதமின்றி செல்லவேண்டுமென்று பவுலும், பர்னபாவும் எண்ணினார்கள்.

அவர்கள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு வழிநெடுக பல மலைகளை யும் சமவெளிகளையும் கடந்தார்கள். ஒரு மலைத்தொடரின் உச்சி யில் ஏறி அப்பால் தெற்குமுகமாய் இறங்கினார்கள். தேவதாரு விருட்சங்கள் அடர்ந்த இவ்வழியாகத்தான் இதற்குமுந்தின கோடை காலத்தில் அவர்கள் பிரயாணம்பண்ணி ஏறிச்சென்றார்கள். இது வரை அவர்கள் இருந்த இடம் சமுத்திரமட்டத்துக்குமேல் சுமார் 3,000 அல்லது 4,000 அடி உயரம். அம்மலைப்பிரதேசத்தின் ஆகாய மானது மெத்த திவ்யமானது. ஆனால் இப்பொழுது அவர்கள் மலைத் தொடருக்கும் கடலுக்கும் இடையிலிருந்த சமவெளிகளில் இறங்கி விட்டார்கள். இப்பாகம் உஷ்ணமானது.

வசந்தகாலத்து மழையும், உறைபனிக்கட்டி உருகிய ஜலமும் சேர்ந்து பிரவாகம் எடுத்து மலைக்கணவாய்கள் மூலமாய் அதிவேக மாய் ஓடினது. அவர்கள் வெகுதூரம் கீழேயிறங்கிவந்தபோது இந்த ஆற்றின்மேல் போடப்பட்டிருந்த ஒர் பாலத்தைத் தாண்டி அக்கரை சேர்ந்தார்கள். அங்கேயிருந்த பட்டணம்தான் முன்னே தான் காய்ச் சல் வியாதியில் விழுந்த பெர்கேபட்டணம்.

இவ்விருவரும் பெர்கேபட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு உப தேசம் பண்ணினார்கள். அப்புறம் பெர்கே பட்டணத்தின் ஆற்று முகத்துவாரத்திலிருந்த துறைமுகத்தில் கப்பல் ஏறுமல் அவர்கள் பம்பிலியாநாட்டுச் சமவெளியினூடே நடந்து அதைக் கடந்து அத் தாலியா என்னும் கடல்துறை பட்டணத்துக்கு வந்தார்கள். அவர்கள் பிரயாணம் பண்ணினபொழுது மலைகளிலுள்ள ஆடு, வெள்ளாடு, இவைகளின் மயிரையும், ஒலிவ எண்ணெயும், வற்றல் பழங்களையும் ரோமாபுரி, அலக்சாந்திரியா, அந்தியோகியா முதலிய மகாபெரிய பட்டணங்களுக்கு கப்பல் வழியாய் அனுப்பும்படி கொண்டுபோகிற கழுதைக் கூட்டத்தையும், வியாபாரக்கூட்டத்தாருடைய ஒட்டகங் களையும் இவர்கள் கடந்தார்கள். செலுக்கியாவுக்குப் போகிற கப் பலை துறைமுக மேடையில் அவர்கள் கண்டார்கள். இங்கு கப்பல் ஏறி மகாசமுத்திரத்தின்மீது சென்று கிழக்குமுகமாய்க் கரையை

அடுத்து பிரயாணம்பண்ணினார்கள், தனக்கு வடக்கே பவுல் உறை பனி மூடிய சிகரத்தை உடைய தௌரஸ் மலைத்தொடரைக் காண லாம். இம்மலைத்தொடரிலிருந்து சிலகாலத்துக்கு முன்தான் பவு லும், பர்னபாவும் இறங்கினார்கள்.

கடைசியாக கப்பல் செலுக்கியா துறைமுகம் வந்து சேர்ந்தது. அதன் பாய்கள் சுருட்டப்பட்டன. கப்பலானது உள்துறைமுகத் துக்குள் சென்றது. பவுலும், பர்னபாவும் இறங்கி ஆற்றங்கரை வழி யாய் அந்தியோகியாவிற்குப் பிரயாணம் செய்தார்கள்.

அந்தியோகியாவிலுள்ள சகோதரர் தங்கள் மிஷனரிகளாகிய இவ்விருவரும் திரும்பிவந்ததைக் கண்டு வெகு சந்தோஷமும் குதூ கலமும் கொண்டார்கள். அவர்கள் இவ்விருவரையும் சூழ்ந்து கொண்டு இவர்கள் சொல்லுகிறதை அதிக கவனமாய்க் கேட்ட னர். கிறிஸ்து தேவகுமாரன் என்பதை ரோமஅதிபதியாகிய செர் கியுபவுல் உணர்ந்து விசுவாசியானான் என்ற செய்தியைக் கேட்ட போது அவர்களுடைய முகங்கள் சந்தோஷத்தால் பிரகாசமடைந்தன. ஆனால் அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா, என்னும் பட்டணங் களில் இந்த யூதர்கள் இவர்களைத் துன்பப்படுத்தின விதத்தைப்பற்றி யும், சவுல் யூதர்களால் கல்லெறியுண்டு மரணத்தறுவாயில் இருந்த தைப்பற்றியும் அவர்கள் கேட்டபோது அவர்களுடைய முகங்கள் துக்கத்தால் வேறுபட்டது.

பர்னபாவும், பவுலும் நடப்பித்த சகல காரியங்களையும் அவர்கள் கேட்டபோது ஒருவிதமான சந்தோஷம் அவர்கள் உள்ளங்களை நிரப்பினது.

ஏனெனில் யூதன், கிரேக்கன், ரோமன், எகிப்தியன், அடிமை, எஜமான் என்ற தாரதம்மியமில்லாமல் சகலரையும் விசுவாசத்தின் மூலமாய் கடவுளுடைய சந்நிதானத்திற்கு யார்மூலமாய்ச் செல்ல லாமோ அதே இயேசுகிறிஸ்து இக்காரியங்கள் அனேத்தையும் நடத் துகிறவர் என்பதை அவர்கள் நிச்சயமாய் அறிந்தார்கள்.

Haridasi

Translated by Mr. G. N. Moses and Mr. A. Samuel Muthiah

ஹரிதாசி

(தொடர்ச்சி)

ஹரிசேந்திரன் தன் மனைவியின் ஆலோசனைக்கு இணங்கி அவ ருடைய சன்மானஞ் வீடங்களில் குடிப்பதை நிறுத்திவிட்டான்.

சாப்பிடுமுன் பிராந்தியை ஹரிதாசி கணக்காக அளந்துகொடுத்து வந்தாள். அள்ளிக்குடித்தவனுக்கு அளந்துகொடுத்தால் திருப்தியுண்டாகுமா? சிலநாட்களாய்த் திருப்தியற்றிருந்த ஹரேந்திரன் ஒரிரவு தன் மனைவியைப் பார்த்து 'எனக்கு இன்று நல்ல சுகமில்லை. ஆகையால் கொஞ்சங்கூட்டித் தரவேண்டும்' என்று கெஞ்சிக்கேட்டான்.

ஹரிதாசி: பிராணநாயகா! நான் உமக்கு மனைவியாயிருந்தும் மதுபானத்தை என் கையால் ஊற்றி உமக்குக் கொடுப்பது நஞ்சை யூற்றித் தருவதுபோலிருக்கிறது. அப்படியிருக்க நீர் விரும்புகிறபடி அளவுக்குமிஞ்சித் தர என் மனம் சம்மதிக்குமா?

ஹரேந்திரன்: குடியினால் சாவாருண்டா? மட்டாகக்குடித்தால் மனுஷனுக்கு எவ்வளவு ஆரோக்கியம் உண்டாகிறது! மரணத்தறுவாயிலிருந்த என்னை இரட்சித்தது பிராந்தியென்று உனக்குத் தெரியுமே. ஒருவருஷமாக நாள்தவறாமல் நான் குடித்துவந்தும் ஒருநாளிலாவது சுகமில்லையென்று படுத்ததுண்டா?

ஹரிதாசி: நான் வழக்கம்போல் ஊற்றித்தருகிறேனே. இதை விட அதிகம் வேண்டுமென்று ஆசைப்படவேண்டாம்.

ஹரேந்திரன்: வேளாவேளைகளில் கொஞ்சங் கூட்டிக்குடிப்பதால் கேடொன்றும் வராது.

ஹரிதாசி: நீர் சொல்வது உண்மைதான். ஆனால் அளவு அதிகரிக்க அதிகரிக்க குடியின்மேலுள்ள விருப்பமும் அதிகரிக்குமே. 'மதுவுண்ணப்போன தேனீ திருப்தியற்று மதுவுக்குள்விழுந்து குடித்து மாண்டாற்போல்' நீரும் மதிமயங்கிக் குடியில் அமிழ்ந்து போக எண்ணங்கொண்டீர் போலும். ஐயோ வேண்டாம்! வேண்டாம்!

ஹரேந்திரன் அன்றைக்கு எப்படியாவது அதிகங் குடிக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தபடியால் தன் மனைவியின் இன்ப வார்த்தைகள் அவனுக்குக் கசப்பாய்த் தோன்றின. அவன் தன் மனைவியைப்பார்த்து 'நான் குடிகாரனாய்ப் போவேனென்று பயந்து நீ அதிகங் கவலைப்படுகிறாய். அந்த எண்ணத்தை முற்றும் விட்டுவிடு. குடியினாலுண்டாகும் நன்மை தீமை இன்னவென்று நான் உன்னைவிட நன்றாய் அறிவேன். நான் குடிகாரனாகி எனக்கே அவமரியாதையை வருவித்துக்கொள்ள விரும்புவேனா? நீ நினைக்கிறபடி நான் மூடன் அல்ல' என்றான். ஹரிதாசி ஒன்றும் பேசாது மௌனமாய் நின்றாள். புருஷனின் வார்த்தைகள் அவளுக்கு அதிகத் துயரத்தை யுண்டாக்கின. ஹரேந்திரனோ 'உன் போதனை எனக்குப் போதும். இன்னொருமடங்கு குடிக்கக்கொடு' என்றான். ஹரிதாசி 'உம் மனம்போல் ஊற்றிக் குடியும்' என்று

சொல்லி விசனத்தோடு வெளியே போய்விட்டாள். ஹரேந்திரன் தன் மனம்போல் பிராந்தியைவிட்டுக் குடித்தான். அது அவனுக்கு அமிர்தம்போலிருந்தது. அன்றிரவு அவன் தன் மனைவியைப் பார்த்ததே யில்லை.

ஹரிதாசி தன் புருஷனின் குடியை மாற்றும்விதம் இன்னதென்றறியாமற் கலங்கினாள். மறுநாளில் ஏற்கனவே புட்டியிற் கொஞ்சந் தண்ணீர் கலந்துவைத்து, ஹரேந்திரன் இரவில் சாப்பிடப்போகும் போது அவன் மனதுக்கிசைய இருமடங்கு விட்டுக் கொடுத்தாள். அவன் ருசிபார்த்துத் தன் மனைவியின் தந்திரத்தை யறிந்துகொண்டான். அறிந்தும் அறியாதவனைப்போல் இருந்துகொண்டான்.

பொழுதுவிடிந்ததும் ஹரேந்திரன் ஒரு புட்டி ஒயின் வாங்கி தன் ஆபீசில் ஓரிடத்தில் மறைத்துவைத்து வேலைக்காரனைப்பார்த்து 'நீ இதை உன் எஜமாட்டிக்கு அறிவிக்காதே' என்று கண்டிப்பாய்ச் சொன்னான். சாப்பிடப் போகுமுன் இரண்டு திராம் போட்டுக் கொண்டான். இதோடு தன் மனைவி வழக்கமாய்க் கொடுத்துவரும் பிராந்தியையும் மாறிப்பேசாமல் வாங்கிக் குடித்துக்கொண்டான். இப்படி நாலைந்து நாளாய் நடந்தது. அதற்குள் இரகசியமாய்த் தன் கணவன் குடித்து வருகிறானென்று ஹரிதாசி ஊகித்துக்கொண்டாள். என்றாலும் அவனிடத்தில் அதைப்பற்றி யொன்றும் பேசவில்லை. இது நிற்க.

ஒரு விசேஷித்த கூட்டம் நடந்தது. வங்காளத் துரைத்தன பஞ்சாயத்தால் (Bengal Government Jury System) உண்டான நன்மைகளதிகமாகையால் அவ்வேற்பாட்டை நீக்கக்கூடாது என்னும் விஷயத்தின்பேரில், ஹரேந்திரன் அக்கூட்டத்தில் ஓர் உபந்நியாசம் செய்ய ஒழுங்குபண்ணியிருந்தது. இன்றிரவு ஹரேந்திரனுடைய உபந்நியாசம், ஹரேந்திரனுடைய உபந்நியாசம் என்று நாடெங்கும் பிரஸ்தாபமாயிற்று. ஹரேந்திரன் கச்சேரியிலிருந்து திரும்பிவரவும் தனது சோர்பு நீக்கும்படி ஒண்ணுநம்பர் ஒயினில் கொஞ்சம் குடித்துக்கொண்டால் நன்றாயிருக்குமென்று நினைத்து, ஒரு கிளாசு குடித்தான். பின்னர் உபந்நியாசப்பொருளை யோசிக்கும் படி கையிற் கடதாசி எடுத்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்து சிந்தித்தலையினான். அவனுடைய சிந்தை முழுதும் மதுப்புட்டியில் இருந்தபடியால் உபந்நியாசப்பொருள் சிறிதேனும் அவனுக்குத் தென்படவில்லை. இன்னும் கொஞ்சங் குடித்துக்கொண்டால் உற்சாகமுண்டாகி குறிப்பு முழுவதையும் ஐந்து நிமிஷத்தில் வரைந்து விடுவேன் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு திரும்ப ஒரு கிளாசு குடித்தான். தனக்கெதிரிலிருந்த ஒயின்புட்டியின் நிறம்

அவன் மனதை அதிகமாய்க் கவர்ந்தபடியால் அவன் திரும்பத் திரும்பக் குடித்து மதிமயங்கிக் கடைசியில் கட்டைபோல் நாற்காலியில் சாய்ந்திருந்தான்.

கூட்டத்திற்குச் சமயமாயிற்று. நானாபக்கத்திலுமிருந்து ஜனங்கள் திரண்டுவந்து சபாமண்டபத்தில் அமர்ந்தனர். குறித்தசமயங் கழிவாறாயிற்று. எல்லாருடைய கண்களும் ஹரேந்திரபாபு எங்கேயென்னுங் குறிப்போடு எட்டுத்திசைகளையும் நோக்கின. டிங், டிங் என்று மணி எட்டு அடித்தது. ஆயினும் ஹரேந்திரன் வரவில்லை. ஆகையால் கூட்டத்தின் அக்கிராசனாதிபதி ஹரேந்திரபாபுவை அழைத்துவர ஓர் ஆள் அனுப்பினார். கூட்டத்திலிருந்து ஆள் வந்த செய்தியை வேலைக்காரன் ஹரேந்திரனுக்கு அறிவித்தான். மயக்கத்தோடு மயக்கமாய் ஹரேந்திரன் ஆத்திரமாய் எழுந்திருந்து, வாகனத்தைத் துரிதமாய் ஆயத்தப்படுத்து என்று சாரதிக்குச் சொல்லிவிட்டு, திரும்பக் கொஞ்சங் குடித்துக்கொண்டான். வண்டி வேகமாயோடினது. சபாமண்டபத்தைச் சேருமுன் மதுபான வெறியால் முற்றும் மதிமயங்கிவிட்டான். வண்டியை விட்டிறங்க அவனால் முடியவில்லை. கைலாகுகொடுத்துச் சிலர் அவனை உபந்நியாசமேடைக்கு நடத்தினார்கள். ஹரேந்திரன் எழுந்து நின்று வாயில் வந்தபடி குளறினான். அவனுடைய பேச்சும், கண்களும், தள்ளாட்ட நிலையும் அவன் குடித்து மயங்கினவன் என்று தெளிவாய்க் காட்டின.

இவ்விதமாய் யாவரும் ஹரேந்திரன் பெருங்குடியன் என்று அன்றைத்தினம் அறிந்துகொண்டனர். 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்பது பழமொழி. 'அறியப்படாத இரகசியமில்லை' என்பது மெய்மொழி. எவ்வளவு சுகுணமுள்ள பாபு இந்த இழிதொழிலுக்கு ஏற்பட்டுவிட்டானே என்று துக்கித்தோர் பலர். படித்தும் புத்தியில்லாக் கற்றறிமூடன் இவன் என்றிகழ்ந்தோர் சிலர். வெளியே நற்குணமும் அந்தஸ்துமுடையவன்போல் பாவித்துக்கொள்ளும் வேஷதாரி யென்றெண்ணினோர் வேறு சிலர். இவ்வித எண்ணங்களோடும் ஏமாற்றத்தோடும் ஜனங்கள் தங்கள் இல்லிடங்களுக்கேகினர்.

ஹரேந்திரபாபு வீட்டிற்கு வந்தான். புத்தி தெளியவும், அவன் பட்டவேதனைக்குக் கங்குகரையில்லை. மறுநாட்காலையில் அவன் தன் ஆபீசில் ஒருவேலையும் செய்யாது உன்மத்தன்போல் அங்குமிங்கும் நடந்து திரிந்தான். வெட்கமும் துக்கமும் அவன் மனதை நிரப்பின. அவன் பலதடவை ஐயோவென்று கதறி பெருமூச்செறிந்தான். ஆயிரக்கணக்கான தேட்கள் சேர்ந்து அவனைக் கொட்

டினாற்போலத் தோன்றிற்று. தன் மனக்கொந்தளிப்பை நீக்கும் பொருட்டுத் திரும்பத் திரும்பக் குடித்துக்கொண்டான்.

தன் புருஷன் இரவில் பட்டபாட்டையும் கூட்டத்தில் நடந்த விஷயங்களையும் அறிந்த ஏழை ஹரிதாசி, மனம் வருந்தி முகஞ்சோர்ந்து, தன் புருஷனை இனி எவ்விதம் சீர்திருத்துவதென்று அறியாது திகைத்தாள். தான் இருப்பதைவிட சாவதே நன்று என்று அன்றைக்குப் பலமுறை நினைத்தாள். ஆனால் தனக்குப்பின் தன் மூன்று சிறுபிள்ளைகளும் அகதியாய் வருந்துமேயென்று எண்ணி என்னசெய்வதென்று அறியாமற் பலவாறாய்ப் புலம்பினாள்.

ஹரேந்திரன் அன்று ஒன்றும் புசிக்கவில்லை. ஹரிதாசியும் ஒன்றும் சாப்பிடாமல் அழுதுகொண்டே கட்டிலிற் படுத்திருந்தாள். இரண்டாம்நாளும் அப்படியே கட்டிற்கிடையாய் அழுவதைப்பார்த்த அவளுடைய மூத்தபையன், தகப்பனிடம் ஓடி, 'அப்பா! வந்து பாருங்கள், அம்மாளுக்குச் சுகமில்லை, வந்து பாருங்கள். அவர்கள் அழுகிறார்கள்' என்றான். மனிதகுணம் மாறி மிருககுணம் மேற்கொண்ட ஹரேந்திரன் தன் பிள்ளையின் சொல்லையும் தன் மனைவியின் கண்ணீரையும் கொஞ்சமேனுங் கவனிக்கவில்லை. அவனுடைய மனம் வைரத்தைவிடக் கடினமாயிற்று. ஒருவார்த்தையும் பேசவில்லை. பையன் வழக்கம்போல் தகப்பனின் கழுத்தைத் தன் மெல்லிய கரங்களாற் சேர்த்துக் கட்டிக்கொண்டு அப்பாவென்று தொடங்குமுன் படீரென்று தன் பாலகனைக் கன்னத்தில் அடித்துத் துரத்திவிட்டான். ஐயோ! பாவம்! கதறிக்கொண்டு ஓடிவந்த பையனை ஹரிதாசி அணைத்துத் தடவி அமர்த்தினாள். இரண்டுநாட் கழிந்தும் ஹரேந்திரன் ஆபீசைவிட்டு வெளியே வரவில்லை.

மூன்றாம்நாள் விடிந்தது. இரண்டுநாளும் படுக்கையைக் கண்ணீரால் நனைத்த ஹரிதாசி, தன் வருத்தத்தையும், சோர்பையும் கவனியாமல் தன் புருஷனின் சங்கடத்தை நீக்கக் கருதிக் கதவைத்தட்டித் திறக்கும்படி பலமுறை கெஞ்சினாள். அவனோ கதவைத் திறக்கவுமில்லை, ஒருவார்த்தை பேசவுமில்லை. பலமுறை கெஞ்சியும் அவன் மனமிரங்காமையால் கடைசியில் கதவில் முட்டினாள். ஒருவேளை ஜீவனை மாய்த்துக்கொள்வாளென்று நினைத்து, ஹரேந்திரன் கதவைத் திறந்தான். ஹரிதாசி தன் கணவனைப் பார்த்தாள். அவள் மனம் சகிக்கவில்லை. மூன்று நாட்களுக்குள் ஹரேந்திரன் உருக்குலைந்து முகஞ்சோம்பி, கண்குழிந்து விசாரத்தால் மெலிந்துபோனான். ஹரிதாசி அடியற்ற மரம்போல் விழுந்து, தன் கணவனின் காலைக் கட்டிக்கொண்டு, 'நமது பிள்ளைகளின் பரிதாபத்தைப் பார்த்து அவர்களுக்காக தயவுசெய்து இக்கொடிய விஷக்குடியை

நிறுத்திவிடும்' என்று மெல்லிய இரக்கமொழியாற் பேசினாள். அன்பான வார்த்தைகள் பேசி, 'போனது போகட்டும். வருந்தினால் வாராததொன்றில்லை. இனியாகிலும், தீர்க்கமாய்க் குடியை வெறுத்துவிடுவீரென்றால், இழந்த பேரும் மானமும் திரும்ப வரும். எல்லாம் நன்மையிருக்கும். மனம் வருந்தவேண்டாம்' என்று பலவாறு தேற்றினாள். ஹரிசந்திரன் இவற்றையெல்லாம் மௌனமாய்க் கேட்டு மறுமொழியொன்றும் பேசாதிருந்தான்.

5

Some Hindu Objections and the Answers

By Mr. A. Samuel Muthiah

இந்துக்கள் கேட்கும் கேள்விகள்

13. விக்கிரகங்களைக் கும்பிடவேண்டாமென்கிறீர்களே! கல்லைப் படைத்தவரும் கடவுள்தானே என்று சாமானிய ஜனங்கள் வாதாடுவார்கள்.

(உத்தாரம்.) கல்லையும் மண்ணையும் படைத்தவர் கடவுள்தான். ஆனால் அவற்றைக் கும்பிடும்படி நமக்குச்சொல்லவில்லை. இராஜாவுக்குச் செய்யவேண்டிய மரியாதையை ஒரு பிச்சைக்காரனுக்கு செய்து அவனுக்கு வரி செலுத்தினால் இராஜாங்கத்தார் விட்டுவிடுவார்களா? மேலும் ஒவ்வொரு பொருளுக்கும் சற்பிரயோகமும் உண்டு துர்ப்பிரயோகமும் உண்டு. நெருப்பைக்கொண்டு சமையல் செய்யவும் தீபமேற்றவும் செய்யலாமேயன்றி வீடுகளைக் கொளுத்திவிடலாமா? அறுவாள், மண்வெட்டிகளினால் பிரயோஜனமான வேலைசெய்வதைவிட்டு மனுஷருடைய தலைகளை அவற்றால் கொய்வது துர்ப்பிரயோகமல்லவா? அப்படியே கல்லால் உரல், அம்மி, திரிகையந்திரம் முதலியவைகளைச் செய்து உபயோகப்படுத்த கடவுள் உண்டாக்கினாரேயன்றி வணக்கத்திற்காக அதைப் படைக்கவில்லை.

14. அறிவீன ஜனங்களுக்குத் தெய்வத்தைப்பற்றிய அறிவையுண்டாக்குவதற்கு ஞாபகசின்னங்களாக விக்கிரகங்களை உபயோகப்படுத்திவருகிறோம் என்பார்கள்.

(உத்தாரம்.) அவலட்சணமும் பயங்காரமுமான கற்சிலைகளும் செம்புக்குட்டிகளும் கடவுளுடைய எந்த திவ்விய இலட்சணங்களை அறிவீனருக்குப்புகட்டுகின்றன? சிவனுடைய உருவத்தைப் பார்த்தால் அவனுடைய தூர்த்த இலட்சணமே மனதிற்கு வரும். கிருஷ்ணனுடைய சிலையைக் கண்டால் கற்புக்கேடான காம நினைவு

கள் மனதில் உதிப்பதேயன்றி திவ்விய இலட்சணங்கள் அந்த ஏழை அறிவீனமுள்ள ஜனங்களுக்குப் புலப்படுமோ? ஒருபோதுமில்லை. சூரியனும் வானஜோதிகளும் தங்களை உண்டாக்கின வல்லவரின் மகிமையை வெளிப்படுத்தும். ஒவ்வொரு பொருளும் அதைப் படைத்த கடவுளுடைய வல்லமை, அறிவு, மகிமை முதலிய திவ்விய இலட்சணங்களைக் காட்டுகிறதாயிருக்கிறது. ஆகையால் உலகத்திலுள்ள சிருஷ்டிகளைப் பார்த்து தியானிப்பதால் கடவுளைப்பற்றிய மேலான எண்ணம் உண்டாகுமேயன்றி கற்சிலைகளால் உண்டாகாது.

15. வாசற்படியில் போட்டு மிதிக்கிற கல்லுக்கும் விக்கிரகக் கல்லுக்கும் வித்தியாசம் இல்லை. ஆயினும் மந்திரம் செய்து கும்பாபிஷேகம் செய்வதால் கடவுளுடைய உயிரும் சக்தியும் கல்லுக்கு வரும். அதற்கு அப்புறம்தான் அதைச் சுவாமியென்று நமஸ்கரிப்போம்.

(உத்தாரம்.) கல்லுக்குத் தெய்வஜீவன் வந்துவிட்டதென்று எப்படியறிவோம்? நரம்பு, நாளம், எலும்பு, தோல் முதலியவையற்ற கல்லுக்கு கடவுளுடைய உயிரைக் கொடுப்பவர்கள், அவைகளெல்லாம் உள்ள ஒரு பிரேதத்துக்கு மந்திரோபாயத்தால் உயிரைக் கொடுக்கச் சக்தியற்று நெருப்புக்கும் மண்ணுக்கும் இரையாக்கு வானேன்?

16. இந்த அந்தக் கோவில்களிலிருக்கும் விக்கிரக சுவாமிகளால் சக்தி விளங்குகிறது. அல்லாவிட்டால் அவைகளுக்குக் கை யெடுப்போமா?

(உத்தாரம்.) மனுஷருடைய தன்பங்களை நீக்கி உதவிபுரிகிறவர் கடவுளேயன்றி விக்கிரகமல்ல. எனெனில், விக்கிரகம் தன்னைக் காப்பாற்றச் சக்தியற்றிருக்கும்போது மனிதரைக் காப்பாற்றும் சக்தி அதற்கு எங்கிருந்து வரும்? நாம் தண்ணீர்விட்டுக் கழுவினால் அது சுத்தமாயிருக்கும், இல்லாவிட்டால் அழுக்கடையும். நாம் விளக்கு வைத்தால் வெளிச்சமாயிருக்கும், இல்லாதபட்சத்தில் இருளடைந்து கிடக்கும். நாய், ஓணான், பட்சிகள் அவற்றின் சிரசில் எச்சம் இடுகின்றன. அவைகளைத் தூரத்திவிட அவற்றிற்குப் பலமில்லையே. அப்படியிருக்க நம்மைக் காப்பாற்றவும் இரட்சிக்கவும் கொஞ்சம்கூட வல்லமை அவைகளுக்கில்லை.

17. விக்கிரகத்தை நாங்கள் வணங்குகிறதில்லை, அதற்குள் ஆரோபிக்கப்பட்டிருக்கும் பிரம்மத்தையே வணங்குகிறோம், சருவாந்தரியாமியாக இருக்கும் பிரம்மத்தையே யாராதிக்கிறோமென்பதாகவும் கூறுவார்கள்.

(உத்தாரம்.) 'பார்க்கு மிடமெல்லாம் பரனேகா ணம்மானே
பாராம லெங்காளும் பாழ்பட்டே னம்மானே'

என்ற பாட்டின்படி கடவுள் பார்க்குமிடமெங்கும் நிறைந்தவராயிருக்கையில் விக்கிரகத்தை யுண்டாக்கி அதில்தான் அவர் இருக்கிறார் என்பது பைத்தியமல்லவா?

18. கர்மோபதேசத்தில் பாவத்துக்குத் தண்டனையை மனிதர் இப்பிறப்பிலாவது மறுபிறப்பிலாவது அநுபவித்தே தீரவேண்டும் என்றிருக்கிறது. நீங்கள் பாவமன்னிப்பு உண்டென்று கூறுவதற்கு நியாயம் என்ன?

(உத்தாரம்.) கிறிஸ்தவர்கள் கர்மோபதேசத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஆகிலும் பாவத்தைக் கடவுள் தண்டிப்பாரென்கிறதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆதலால் மனிதரின் பாவத்துக்காகத் தண்டனைப்பட்ட கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்து மனிதருடைய பாவத்தைச் சுமந்தபடியால் கடவுள் நீதியுள்ளவராயிருந்தும் குணப்படுகிற பாவியின் பாவத்தை மன்னிக்க இடமுண்டு.

மேலும் பாவிகளாகிய நாமே ஒருவர் செய்த குற்றத்தை யொருவர் மன்னிக்கும்பொழுது தயாநிதியாகிய கடவுள் தம்மை நோக்கிப் பாவமன்னிப்புக்காகக் கெஞ்சுகிறவர்களின் பாவங்களை மன்னியாரா? அப்படி அவர் மன்னிக்கிறதில்லையென்றால் மனிதராகிய நாம் கடவுளைவிட நல்லவர்களும் இரக்கமுள்ளவர்களுமாயிருக்கிறோம் என்று சொல்லுவதுபோலிருக்கிறது. அப்படிச் சொல்லுவதும் எண்ணுவதும் தப்பு.

'எத்தன்மைக்குற்றம் இயற்றிடினுந் தாய் பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும் அண்ணே பராபரமே.'

19. சிலர் பாக்கியமாய் ஜீவனம் பண்ணுவதற்கும் வேறு சிலர் நிர்ப்பந்தமான ஜீவியம் செய்வதற்கும், சிலர் நீண்ட ஆயுளுள்ளவர்களாய் மரிப்பதற்கும் வேறு சிலர் அற்ப ஆயுளுள்ளவர்களாய் மரிப்பதற்கும் காரணம் என்ன?

(உத்தாரம்.) இந்தக் கேள்விக்கு உத்தரவாக எதிர் கேள்விகளைக் கேட்கலாம். சில பழங்கள் தித்திப்பாயிருப்பதற்கும் வேறு கனிகள் கசப்பாயிருப்பதற்கும் சில மிருக ஜீவன்கள் வெள்ளையாயிருப்பதற்கும் வேறு சில கறுப்பாயிருப்பதற்கும், காரணம் என்ன? கொசுகு ஏன் மதயானைபோலிருக்கக்கூடாது? உயர்வு தாழ்வு மனுஷஜாதியில் மாத்திரமல்ல, மற்றெல்லா மிருக ஜீவன்களிலும் தாவரங்களிலும் உண்டே.

நாம் ஒவ்வொருவரும் பாக்கியமாயும் சந்தோஷமாயும் பிழைக்க வேண்டுமானால் கடவுள் நமக்குக் கிருபையாய்க் கொடுத்த காலத்தை அவருடைய சித்தப்படி செலவிட்டு நமக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாய் ஜீவனம்பண்ணவேண்டும்.

20. கிறிஸ்துமதம் ஜீவகாருணியத்தை வற்புறுத்துகிறதில்லை. ஆகையால் அது சரியல்லவென்று சைவர் கூறுவார்கள்.

(உத்தாரம்.) கொலை செய்யாதிருப்பாயாக வென்பது பத்துக் கற்பனைகளிலொன்று. இது மனுஷரைக் குறிக்குமேயன்றி மிருகங்களையாவது உற்பத்தி வளர்த்தி முதலிய மாறுதல்களையடையும் ஜீவனையுடைய மரஞ்செடிகளையாவது குறிக்காது. மனிதனுக்கேயன்றி மற்றவைகளுக்கு ஆன்மா இல்லை. எல்லாம் மனுஷனுடைய உபயோகத்துக்காகவே உண்டாக்கப்பட்டன. சைவர்கள் இந்தக் கேள்வியால் கிறிஸ்தவர்களைக் குறைகூறினால் கிறிஸ்தவர்கள் இந்து மார்க்கத்தை இகழ்ந்துபேசி இந்துக்களுடைய சாஸ்திரங்களில் மிருக பலி செய்யும்படிக் கற்பிக்கப்பட்டிருப்பதாகவும், தற்காலத்தில் ஆடு மாடு கோழி முதலியவற்றை இந்துக்கள் பலியிடுவதையும் சுட்டிக் காட்டுவதோடு, சைவர்களும் கூட தண்ணீரிலுள்ள எண்ணிறந்த ஜீவப்பிராணிகளை உட்கொள்வதாகவும், மாம்சதாரிகள் மிருக ஜீவன்களை அடித்துச் சாப்பிடுவதுபோல் ஜீவனுள்ளமரஞ்செடிகளின் பலன்களையும் மற்றுமுள்ள தாவரவர்க்கங்களையும் சாப்பிடுவது குற்றமாகாதோவென்றும் கூறுவார்கள்.

புத்தமார்க்கமும் சமணமதமும் எற்பட்டபின்னேதான் இந்தக் கேள்வி கேட்கப்பட வதுவாயிற்று. அதற்கு முன் மானவ தர்ம சாஸ்திரத்தில் மிருகஜீவன்களைப் பலி செலுத்தலாம் என்று கூறியிருக்கிறது. சுருக்கிச்சொன்னால் நாம் ஜீவப்பிராணிகளை எவ்வளவாய் நேசித்து அவற்றை ஹிம்சிக்கக்கூடாதென்று நினைத்தாலும் தண்ணீர் சாப்பிடாமலிருக்க ஒருவராலும் கூடாதாகையால் ஜீவப்பிராணிகளைக் கொல்லாமலிருப்பதில்லை.

இரண்டாவது, மனுஷரைக் கொல்லுகிற ஜீவப்பிராணிகளைக் கட்டாயம் கொல்வது நியாயமே. ஏனெனில் மனிதன் மற்ற மிருகங்களையும் ஜீவஜந்துக்களையும் பார்க்க விசேஷித்தவன். சிங்கம், புலி, கரடி முதலியவைகளைப் பூர்வகாலத்தில் கொன்றாவிட்டால் அவைகள் மனுஷரை இவ்வுலகத்திலில்லாதபடி நிர்மூலம் பண்ணியிருக்குமல்லவா? பிளேக் என்கிற வியாதிக்குக் காரணமாகிய எலியைக் கொல்லவேண்டாமென்று சொல்வாருண்டா?

மூன்றாவது, மனுஷன் ஜீவஜந்துக்களைப் பற்பலவிதமாய் உபயோகப்படுத்தலாம். பாலைப் பசுவிலிருந்து கறந்து சாப்பிடலாம்.

மாடு குதிரை முதலியவற்றை வண்டி இழுக்க அல்லது ஏர் உழ உப யோகப்படுத்தலாம். ஆனால் சாப்பாட்டுக்காக அவற்றைக் கொல்ல லாமோ வென்றால், விசேஷமாக உத்தரதுருவத்தில் (Arctic Zone) வசிக்கிற மனுஷருக்கு மிருகங்களின் மாமிசத்தைச் சாப்பிட்டு அவற் றின் தோலைப் போர்த்துக்கொள்ளாவிட்டால் குளிரைத் தாங்கமுடி யாது. மாமிசம் அத்தேசத்தாரின் இயற்கையான உணவு. கீரை காய் முதலியவற்றைச் சாப்பிட்டால் சாகவேண்டும். மாட்டைக் கலப்பை, வண்டிகளிற் கட்டி இருப்புமுள்ளால் குத்துவதைவிட உடனே உயிரை வாங்கிவிடுவது உத்தமமல்லவா?

(இன்னும் வரும்)

C. L. S. PRESS, MADRAS—1919

No. 154 மார்ச்சு 1919

வேதியர் விளக்கு

Remove My Cares, Oh God!

என் துயர் நீக்கென இறைவனை வேண்டல்

பண்: நட்டராகம் ('பொன்னார் மேனியனே' என்பதுபோல.)

பொல்லா நெஞ்சினன்யான்—உனைப்—பூசிக்கு மாறறியேன்
எல்லாப் பாவங்களும்—நிதம்—செய்து வரும்பொழுது
நல்லாய் நாயகனே—தடுத்—தாண்டனை அன்றெனை நீ;
சொல்லாய் இன்றெனது—துயர்—நீக்குவ தார்கடனே?

என்னுளம் உள்ளகுறை—அவை—யாவையும் நீ அறிவாய்;
கொன்னே ஆழ்கடலில்—துரும்—பொத்துழல் கின்றனன்யான்;
என்னால் ஆவதொன்றும்—இலை—உன்கருத் தாகுகஎன்
றன்னே ஈங்கிருந்தேன்;—எனை—ஆதரி யென்னப்பனே.

F. K.

A Conversation between a Man and a Statue

By C. Lakshmipathi

ஒரு மனிதனுக்கும் ஒரு ஞாபகச்சிலைக்கும் நடந்த சம்பாஷணை

'. . . . வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.' (மத். 5 : 25.)

ஈ. உன் பேர் என்ன?
என் பேர் சமயம்.
ஈ. உன்னை யார் இங்கே செய்து வைத்தது?
என்னை லைஸிபஸ் என்பவன் செய்து வைத்தான்.

மனிதன். ஆமாம், நீ என் உன் கால்விரல்களின்மேல் நின்று கொண்டிருக்கிறாய்?

சீலே. நான் எப்போதும் ஓரிடத்தில் நிற்காமல் ஓடிக்கொண் டேயிருக்கிறேன்.

மனிதன். உன் பாதங்களில் என் இறக்கைகள் இருக்கின்றன?

சீலே. நான் எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிக வேகமாயும் தரிதமாயும் பறந்து செல்லுகிறேன். அதற்கு உதவியாக என் பாதங்களில் இறக்கைகள் உண்டாயிருக்கின்றன.

மனிதன். நீ என் உன் கையில் ஒரு பட்டயத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்?

சீலே. நான் எந்த வாளைப்பார்க்கிலும் அதிக கூர்மையானவன். எனக்குமுன் எந்தத் தடையிருந்தாலும் நான் ஊடறுத்துச் செல்லு வேன். நான் எப்படிப்பட்ட நிலைமையிலுள்ள மனிதன் முன்பாக வும் வந்து நிற்கிறேன். எனக்கு எளியாரென்றுமில்லை, வலியார் என்றுமில்லை. ஏழை முன்பாகவும் வருகிறேன், ஐசுவரியத்தால் நிறைந்த அரசர் முன்பாகவும் வந்து நிற்கிறேன்.

மனிதன். உன் தலையில் என் முன்பக்கத்தில் மாத்திரம் மயிர் வளர்ந்திருக்கிறது? பின்பக்கத்தில் ஒன்றுமில்லாமல் வழுக்கையாக இருக்கிறதே, இதற்குக் காரணம் என்ன?

சீலே. என்னை ஒருவன் முன்பக்கத்தில் பிடித்தால்தான் பிடிக்க முடியுமேயன்றி, பின்பக்கத்தில் என்னை ஒருவனும் பிடிக்க முடி யாது. பூப்பித்தர் என்பவனும் என்னை ஒருதரம் தப்பவிட்டுப் பின் சென்று வருவானாயின், ஒருக்காலும் என்னைப் பிடிக்கமுடியாது. நான் அதிவேகமாய் ஓடிச்சென்று மறைந்துபோவேன். 'தருணம் தப்பினால் மரணம்' என்னும் முதுமொழியை மறந்துபோகாதே.

மனிதன். லெவிபஸ் உன்னை என்னத்துக்கு செய்து வைத் தான்?

சீலே. என்னை அவன் உனக்காகவே செய்து வைத்தான். உனக்கும் உன்னைப்போல் என்னைப் பார்க்க வருகிற அனைவருக்கும் நான் நல்ல புத்தி சொல்லுகிறேன். 'வெள்ளம் வரும் முன்னே அணைபோடவேண்டும்.' சமயம் வரும்போதே ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஒரு சமயம் தப்பினால், மறுபடியும் உனக்கு அப்படிப்பட்ட சமயம் வாய்க்காது. உன் சகோதரன் உன் வழியில் வரும்போதே அவனுக்கு நீ செய்யவேண்டிய நன்மையைச் செய்; நாளை செய்யலாம் என்று அவனைக் கடந்துபோகாதே. நன்மை செய்ய உனக்குச் சமயம் வாய்க்கும்போது, அதைத் தப்பவிடாதே; அதற்காகத்தான் நீ உண்டாக்கப்பட்டாய். உனக்கு முன்பாக வரும்

எந்த காரியத்தையும் விட்டுவிடாதே. 'ஓ! இது அற்பமான காரியம்' என்று அசட்டை செய்யாதே. பெரிய பெரிய காரியங்கள்தான் உனக்குமுன் அடிக்கடி வரும்; பெரிய நன்மை செய்யலாம் என்று காத்திருக்கவேண்டாம். உனக்குமுன் வரும் சின்ன காரியங்களை நீ அசட்டைசெய்யாமல் செய்துமுடித்துவந்தால் பெரிய காரியத் தையும் செய்ய உனக்குச் சக்தி உண்டாயிருக்கும். ஆனால் சின் னதை விட்டுவிட்டு பெரிய நன்மை செய்யக் காத்திருந்தால் அப் போது உன்னால் ஒருவேளை செய்ய இயலாமல் போய்விடும். உனக்குக் கடவுள் கொடுத்த சமயத்திலேயே அந்த நன்மைகளை மனப்பூர்வமாய்ச் செய். ஆகையால் உன் சகோதரன் உன் சமீபத் தில் இருக்கும்போதே நீ அவனுக்குச் செய்யவேண்டிய சகாயத் தைச் செய்; சமயத்தை முன்னதாகவே பிடித்துக்கொள்; நன்மை செய்ய விரைந்துகொள். இந்தப் பாடத்தைக் கற்றுக்கொடுப்பதற் காகவே நான் இவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறேன்.

Short Commentary to some of the Parables

By the Editor

இயேசுநாதர் உரைத்த சில உவமைகளுக்கு சுருக்கமான வியாக்கியானம் *

The Sower

விதைக்கிறவன் உவமை

(மத். 13: 3–9, 18–23; மாற். 4: 3–8, 14–20; லூக். 8: 5–18 வாசிக்கவும்.)

இந்த உவமையின் கருத்தை பொதுவாக உணருவது நம்மெல்லா ருக்கும் சுலபம். அதோடுகூட யூத தேசத்தில் பயிர்வேலை நடந் தேறும் விதத்தைப்பற்றி சில வார்த்தைகளைச் சொன்னால்தான் இந்த உவமையிலடங்கிய பல விவரங்கள் தெளிவாகும்.

நவம்பர் மாதத்தில் மழைக்காலம் துவங்குகிறது. அதற்கு முன் னமே பூமியானது சூரியனுடைய கொடுமையான கதிர்களாலே ஈர மில்லாமல் கல்போலக் கெட்டியாயிருக்கும். மழை பெய்தபிற்பாடு

* டேன்மார்க் தேசத்தில் வசிக்கும் கனம் Carl Krock போதகர் அவர்கள் இயற்றின தேயேசுவின் உவமைகள் என்னும் புஸ்தகம் சிரஸ்த கர்த்தாவின் அனுமதியின்பேரில் உபயோகிக்கப்பட்டது. பத்திராதிபர்.

ானேந்து உழுகிறதற்குத் தகுதியாய்விடும். உழுது விதைத்தபின்னர் கல்ல மழை பெய்தநிஞலே விதைத்த விதை சீக்கிரம் முளேத்து வளர்ந்துவிடும்.

இந்த முதல் மழைக்காலம் ஆனபிறகு இடையிலே இரண்டு மாதம் மழையில்லாமலே, மார்ச்சுமாதத்தில் இரண்டாவது முறை மழை பெய்யும். பெய்தபிற்பாடு ஏப்பிரில் மாதத்திலே தானியம் அறுக்கத் தொடங்குவார்கள்.

இவ்விதமாய் இக்காலத்தில் எப்படியோ அப்படியே அக்காலத்தி லும் இருந்தது.

நிலம் எல்லாம் ஒரே விதமான நிலமாகாமல் உவமையிலே இயேசுநாதர் சொன்னபடி நாலு விதமாயிருக்கிறது.

1. மனுஷர் போகிற பாதை ஒருவிதமான நிலமாம். மனுஷர் கள் அகேகமாய் நிலத்தைச் சுற்றிப்போகாமல் அதின்மேலே நேரே போய்மிதிப்பார்கள். அப்படியே இங்கும் அங்கும் பற்பல சிறு பாதை கள் உண்டாகின்றன. இப்படிப்பட்ட பாதைகளிலே விதை விழுந் தால் முளேக்கமாட்டாது, விழுந்தபடியே கிடக்கும். ஆகாரம் தேடும் பகிகள் அதைக் கண்டவுடனே இறங்கி பொறுக்கித் தின்றுவிடும். ஆகையினுலே பாதையில் விழும் விதைகள் எல்லாம் விதைக்கிற வனுக்குப் பிரயோஜனமில்லாமல் போய்விடும்.

2. கல்லுள்ள பூமியும் உண்டு. பார்வைக்கு மேற்புறத்தில் மாத் திரம் கொஞ்சம் மண் இருந்தாலும் அடியிற் பாறையாகவேயிருக்கும். மழை பெய்தால் அது கல்ல ஈரமான பூமியாகவே தோன்றும். விதை இப்படிப்பட்ட பூமியிலே விழுந்தால் உடனே சேர்த்தியாகவே முளேத்து முதல் மழை நின்றவுடன் சூரியனுடைய வெப்பத்தினுலே எல்லாம் சீக்கிரத்தில் உலர்ந்துபோம். துவக்கத்திலே நன்ருய் முளேக்கத்தோன்றின அதுவும் பின்னிட்டு பிரயோஜனமில்லாமல் போயிற்று.

3. கெநேசரேத் கடலருகே இருக்கிற செழிப்பான தேசத்திலே முள்ளுள்ள ஒருவிதமான செடி அடிக்கடி காணப்படுகிறது. அது நாலு முழம் உயரத்துக்கு வளரும். பூமிக்குமேல் தோன்றுகிறதெல் லாம் எவ்வளவு சுட்டாலும் உள்ளிருக்கிற வேர் ஒருகாலும் கெடாது. அந்த வேரை எடுக்க எவ்வளவு நோண்டித் தோண்டிப் பிரயாசப்பட் டாலும் எல்லாவற்றையும் எடுக்கமுடியாது. ஆகையினுலே கலப்பை யும் மழையும் பூமியை மிருதுவாக்கினபிறகு கோதுமையோடே கூட இதுவும் தாராளமாக முளேத்துவிடும். மேலும் இது பலமான செடியானபடியினுலே வளர வளர கல்லதாயிருக்கிற கோதுமையை நெருக்கிப்போடும்.

இப்படியே இந்த மூன்ருவது விதமான நிலத்தில் விழுந்த கோதுமைமணியும் பிரயோஜனமற்றுப் போயிற்று.

4. நாலாவது விதமான நிலம் கல்ல நிலம். அதிலே விழுகிற கோதுமைமணிகள் எல்லாம் முளேத்து வளர்ந்து பலனேக் கொடுக் கும். பூமி மிகவும் செழிப்பாயிருந்தால் அதிக பலனேத்தரும், அவ் வள்வு செழிப்பாயில்லாவிட்டால் கொஞ்சம் குறைவாய் கொடுக்கும். அப்படியே பூமியின் தன்மைப்பிரகாரம் சிலது நூருகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் கொடுக்கும்.

இக்காலத்திலே அந்த தேசத்தார் பயிர்வேலேயைக் கவனமாய் நடத்துகிறதில்லே ஆகையால் நூருக பலன்கொடுக்கிறது கிடையாது, மற்றப்படி இக்காலத்துக்கும் அக்காலத்துக்கும் வித்தியாசமில்லே. இயேசுவானவர் கடல்ோரத்தில் உட்கார்ந்து உவமையாகப் பேசின அன்றையதினம் விதைக்கிறவன் எப்படி விதைக்கப் புறப்பட்டானே அப்படியே இன்றையதினமும் விதைக்கப் புறப்படுகிருன்.

இந்த உவமையின் முக்கியமான கருத்து என்னவென்ருல், கோதுமைமணிகளேல்லாம் ஒரே தன்மையாய்த்தான் இருக்கின் றன, அவைகளின் வாலாறே பூமியின் தன்மைக்குத்தக்கபடியே ஆகின்றது; இதைப்போலவே தேவனுடைய வசனம் ஒரே தன் மையாயிருந்தும் அதின் வாலாறே மனுஷர் இருதயத்தின் தன் மைக்குத்தக்கபடியே ஆகும்.

அது எப்படியென்ருல்: விதையானது தேவனுடைய வசனம், நிலமோ நமது இருதயம். நமது மனதில் விழும் விதை கல்லவிதை தான்—தேவனுடைய வசனம்; மேலும் இது வித்தியாசமில்லாமலே இருக்கும். நம்முடைய இருதயங்களோ வித்தியாசப்படும்—சிலது ஏற்றுக்கொள்ளும், சிலது தள்ளிவிடும்.

1. கல்போன்ற கடினமான நெஞ்சுள்ளவர்கள், வார்த்தையைக் கேட்டும் கேளாதவர்கள்போல் இருப்பார்கள். அவர்களுக்கு வசனம் மனதில் படுகிறதேயில்லே ஆகையால் அது பலனற்றுப்போகிறது.

2. ஸ்திரமில்லா நெஞ்சுடையார், வார்த்தையைக்கேட்டு சந்தோ ஷமாக அதை உடனே ஏற்றுக்கொள்ளுவார்கள். எல்லாம் நன்ரு கத் தோன்றுகிறது ஆனலும் நாள் செல்லச் செல்ல மனதில் விழுந்த கல்ல வசனம் வேரற்றுப்போம். உலகத்திலே ஒரு கஷ்டமுமில்லா மல் சுகமாக வாழலாம் என்று நினேத்த இவர்கள் ஏமாந்துபோகிறார் கள். அவர்கள் எதிர்பார்த்தபிரகாரம் நிறைவேறுகிறதில்லே. ஆகை யால் அவர்கள் வெறுப்படைய, இருதயம் காய்ந்துபோய்விட்டது.

3. கவலையினுலும் ஐசுவரியத்தினுலும் நெருக்கப்பட்ட நெஞ் சுள்ளவர்கள் நெடுநாளாக இயேசுவினுடைய வசனத்தில் சந்தோஷப்

படுவார்கள். நாள் செல்லச் செல்ல பண ஆசையினாலேயே வார்த்தையின்மேலிருந்த வாஞ்சை முற்றிலும் கெட்டுப்போகிறது. தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக என்று ஜெபிப்பது ஒரு கல்ல ஜெபமாம் (நீதி. 30:8).

4. கல்ல விதை கல்ல நெஞ்சத்தில் விழுந்தால், எப்படியாவது கடைசியிலே கல்ல பலன் கொடுக்கும்.

இந்த உவமையை இயேசுவானவர் எந்த காலத்தில் சொன்னார் என்றால், தமக்கு விரோதம் உண்டாயிருந்த காலத்திலே. அநேகர் பல காரணங்களினாலே அவரைப் பின்சென்றார்கள்; சிலரோ வானத்திலிருந்து அடையாளங்களைக் கேட்டார்கள்; வேறு சிலர் அவரைப் பிசாசு பிடித்தவன் என்றும் ஓய்வுநாள் கட்டளையை மீறுகிறவன் என்றும் சொன்னார்கள்.

சேஷர்கள் இதெல்லாம் கவனித்தபோது அவர்களுடைய மனதில் ஒருவிதமான சந்தேகம் உண்டாயிற்று. 'தேவனுடைய ராஜ்யம் இப்படியா வரும்? மேசியா வந்தால் எல்லாரும் அவரை ஏற்றுக் கொள்ளவேண்டுமே. தேவனுடைய ராஜ்யம் மகிமையோடே வரவேண்டுமே. இப்பொழுதோ மனுஷர்கள் அநேகமாய் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லையே. காரணம் என்னவோ? ஒருவேளை அவருடைய வார்த்தையிலே பிழை இருந்திருக்குமோ? அல்லது வேறொருவர் வரவேண்டுமோ, என்னவோ' என்று பலவாறான எண்ணங்களினால் சேஷர்களுக்குச் சந்தேகமுண்டாயிருக்கலாம்.

இயேசுவுக்கோ எள்ளளவேனும் சந்தேகம் உண்டாகவில்லை. பெரியோர் என்று எண்ணப்பட்டவர்கள் எவ்வளவு அசட்டை பண்ணினாலும், சிறியோர் என்று எண்ணப்பட்ட அநேகர் மனதிலே இதற்குன்னாக இந்த கல்ல விதை நன்றாய் முளைத்தது. இதற்காகவே அவர் பிதாவை ஸ்தோத்திரித்தார். 'இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்' என்றார். மனுஷர்களுடைய எண்ணம் எப்படி இருந்தாலும், அவர்கள் வசனத்தை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், வசனம் கல்ல வசனந்தான்; விதை கல்ல விதைதான். வசனத்திலே தப்பிதம் ஒன்றுமில்லை, நிலத்திலேயோ தப்பிதம் உண்டு.

அக்காலத்து மனுஷர்களைப் பார்த்தால், முதல் விதமான நெஞ்சுள்ளவர்கள் பரிசேயர். 'அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாம் ஒருவர் அவனை விசுவாசித்ததுண்டா? வேதத்தை அறியாத வர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்' என்றார்கள்.

(யோ. 7[48,49].) அப்படியே அவர்கள் வசனத்தை அலக்ஷியம்பண்ணி தள்ளிவிட்டார்கள்.

இக்காலத்திலும் இந்த தேசத்தில் அநேக மனுஷர்கள் அப்படியே அலக்ஷியம்பண்ணி வசனத்தைத் தள்ளுகிறதில்லையா? அதினாலே நாமே விசுவாசத்தை இழந்துபோகவேண்டாம்.

இரண்டாம் விதமான நெஞ்சுள்ளவர்கள் கலிலேயர். அவர்கள் எல்லாரும் ஆழமான வேரில்லாதவர்கள்; இயேசுவை உடனே சந்தோஷமாய் அனுசரித்தார்கள். பிற்பாடு இயேசுவினுடைய ராஜ்யம் ஆத்மீக ராஜ்யம் என்று அவர்கள் கண்டபோது தாங்கள் எதிர்பார்த்த ராஜ்யம் வராதாகையால் இடறலடைந்தார்கள்.

இத்தேசத்திலும் அநேகர் கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்தால் லௌகீக லாபம் கிடைக்கும் என்று நினைத்து வேறொன்றையும் யோசிக்காமலே அவசரமாய் ஓடிவருவார்கள். இவர்கள் சபையைச் சேர்ந்தாலும் சேருவார்கள், இயேசுவின் ராஜ்யத்தையோ சேருகிறதில்லை.

மூன்றாம் விதமான நெஞ்சுள்ளவர்கள், கொஞ்சம் நிதான முள்ளவர்கள். 'ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன்' என்று சொன்ன மூன்று பேர்களும் கவலையுள்ள நெஞ்சுடையவர்கள். (லூக். 9 [57-62].) அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு கவலையாவது ஒரு தடையாவது இருந்தது. ஐசுவரியமுள்ள வாலிபனும் இந்த வகுப்பைச் சேர்ந்தவன். எல்லா காலங்களிலும் எல்லா தேசங்களிலும் இப்படிப்பட்ட மனுஷர் அநேகர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற கவலைகள் ஒரு பெரிய பாரமாயிருந்தாலும் அவர்கள் அந்த பாரத்தை இயேசுவினிடத்தில் விட்டுவிடாமல், அவர்களே அதைச் சுமந்துகொண்டே தவிக்கிறார்கள். இயேசுவோ: 'பாரம் சுமக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள்' என்று அவர்களை அன்பாக அழைக்கிறார். ஐசுவரியமுள்ள வாலிபனிடத்தில் இயேசு அன்புகூர்ந்ததுபோல மற்றவர்களிடத்திலும் அவர் அன்புகூருகிறார். 'அவன் துக்கத்தோடே போய்விட்டான்.' இயேசுவுக்கும் துக்கம் உண்டாகவில்லையோ?

கடைசியாக ஒரு எச்சரிக்கையையும் ஒரு புத்திமதியையும் நாம் கவனிப்போமாக!

எல்லாருக்கும் ஒரு எச்சரிக்கை: இந்த உவமையினாலே நீ மற்றவர்களுடைய இருதயங்களை நன்றாய்ச் சோதித்துப் பார்க்கலாம் என்று எண்ணவேண்டாம். இயேசுவானவர் இந்த உவமையைச் சொல்லும்போது இப்படிப்பட்ட நோக்கத்தோடு சொல்லவில்லை. அவர் நோக்கம் எதுவென்றால், நீ உன் இருதயத்தை நன்றாய் சோதித்துப் பார்க்கவேண்டும் என்பதே. இதிலே பல்ன் கிடைப்

படாவிட்டால், அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காரணமோ வசனத்தில் இல்லை.

வேதியர்க்கு ஒரு புத்திமதி: விதையாகிய வசனத்தைத் தாராளமாகக் கொட்டிவிடு. சில விதை கல்ல பூமியிலே விழுமோ, விழாமட்டாதோ என்று கலங்கப்படவேண்டாம். கர்த்தர் அதைப் பார்த்துக்கொள்வார். எங்கே நல்ல பூமி இருக்கிறதோ அங்கே எப்படியாவது விதை விழவேண்டும் என்பதை நீ பார்த்துக்கொள்.

கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

16-ம் அத்தியாயம்

முடிவான போராட்டம்

ஒருநாள் இரவு கிரேக்களுடைய நீத்துவும் தர்சுபட்டணத்தானுடைய பவுலும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அன்றைக்கு அவர்களோடு புது விருந்தாளி ஒருவர் இருந்தார். அவர் நிடகாத்திரமுள்ளவர். வெண்கலவர்ண தாடி உடையவர். கலிலேய பேச்சு உடையவர். இவர்தான் பேதுரு. அந்தியோகியாவிலுள்ள சகோதரரைப் பார்க்கும்படி இவர் எருசலேமிலிருந்து வந்தார்.

அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள்ளே இவர் அநேக கிரேக்கர்களைக் கண்டார். தாம் வசித்த எருசலேம் பட்டணத்து சபையிலிருந்தவர்கள் அனைவரும் யூதர். ஆயினும் நமக்குத் தெரிந்தபடி பவுல் யோப்பா பட்டணத்தின் மேல்மாடியில் இருக்கும்போது கண்ட தரிசனத்தினால் தான் எந்த ஜாதியையும் அசுத்தமானது என்று சொல்லக்கூடாது என கர்த்தர் அவனுக்கு காண்பித்திருந்தார். ஆகையால் அவர் அந்தியோகியாவிலிருந்த கிரேக்கர்களான கிறிஸ்தவர்களிடம் சென்று அவர்களுடன் சாப்பிட்டார்.

ஆகவே அந்தியோகியாவிலே பேதுரு, நீத்து, பவுல், லூகியும், மனுயீன் முதலியவர்கள் ஒன்றுயிருந்து தங்கள் அப்பத்தைப் பிட்டு பால்கட்டிகளையும் ஒலிவகனிகளையும் சாப்பிட்டார்கள். அவர்கள் சாப்பிடும்பொழுதே தங்கள் ஊழியத்தைப்பற்றி தாங்கள் கொண்டிருந்த எற்பாடுகளைக்குறித்துப் பேசிக்கொண்டார்கள்.

இக்காலத்தில் எருசலேமிலிருந்து அந்தியோகியாவிற்கு சில மனுஷர் வந்தார்கள். இவர்கள் கிறிஸ்தவர்கள். பேதுருவுக்கு இவர்கள்

தெரியும். இவர்கள் இயேசுவானவர் யூதர்களுக்குமட்டும் மேசியாவாக வந்தார் என்று எண்ணினார்கள். இவர்களுடைய அபிப்பிராயப்படி இயேசுவின் சீஷர் யூதர்களுக்குள் ஒரு பிரிவார். பரிசேயர், சதுசேயர் முதலிய பல வகுப்புகள் யூதர்களுக்குள் இருந்தன. இயேசுவின் சீஷர் நசரேயர் என்ற ஓர் புதுவகுப்பார் என்பதே எருசலேமிலிருந்து வந்த யூதகிறிஸ்தவர்களுடைய கொள்கை. சீப்புரு தீவிலிருந்த ரோம அதிபதியின் கலாத்தியா நாட்டிலுள்ள கிரேக்கர்களும், மோசேயினுடைய நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படியாமலே கிறிஸ்துவின் மார்க்கத்துக்குள் பிரவேசித்தார்கள் என்பதை இவர்கள் கேள்விப்பட்டபொழுது இவர்கள் அதிக கோபங்கொண்டு இவர்களுக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். பவுலினுடைய பூர்வ மதமாகிய பரிசேயமதத்தினின்று தோன்றியவர்களான இந்தக் கிறிஸ்தவர்கள் அந்தியோகியா பட்டணத்துக் கிறிஸ்தவர்களுடைய ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளாமல் 'அந்நியர்களான இவர்களால் நமது மார்க்கம் கெட்டுப்போகப்போகிறது. புறஜாதிகளை நாம் அப்புறப்படுத்தவேண்டும். இயேசுவானவர் ஓர் யூதன். அவர் விருத்தசேதனம் பண்ணப்பட்டார். அவர் யூதர்களுக்குப் பிரசங்கித்தார். அவருடைய சீஷர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு முழுவதும் கட்டுப்பட்டவர்கள். இயேசுவானவர் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாகிய தேவனிடத்திலிருந்து வந்தார்' என்று சொல்லி அந்தியோகியா பட்டணத்துச் சபையிலிருந்த கிரேக்கர்களையும் பவுலையும் பலவிதமாய்ப் பேசி அவர்களை எதிர்த்தார்கள். இவர்கள் கிரேக்கரான கிறிஸ்தவர்களைப் பார்த்து, 'நீங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி விருத்தசேதனம் பெற்று அவ்விருத்தசேதனத்தின் மூலமாய் யூதர்களாகாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்' என்று சொன்னார்கள்.

இது சபையை இருதண்டாய் வெட்டுகிற கோடரி வெட்டைப் போலிருந்தது. தனது பாலியகாலத்தில் இவ்வித கோட்பாடு உடையவனுயிருந்த பேதுரு இவ்வார்த்தைகளால் இழுப்புண்டு கிரேக்க கிறிஸ்தவர்களிடத்திலிருந்து விலகிக்கொள்ள ஆரம்பித்தான். பர்னபாவும் கூட இவர்களைவிட்டு விலகி எதிர்க்கட்சியைச் சேர்ந்துகொள்ள மனச்சார்பு உடையவன்போல் இருந்தான். அப்பட்டணத்து சபையிலுள்ள யூதர்கள் பவுலுக்கு விரோதமாய் இருந்தனர். இது இப்படியிருக்க கிறிஸ்தவர்களான கிரேக்கர்கள் தாங்கள் கிறிஸ்துமதத்துக்கு உரியவர்கள் அல்ல என்று இவர்கள் சொன்னதினிமித்தம் அதிக நிலைமை கலக்கமும் கொண்டார்கள்.

பவுலின் இரத்தம் துடித்தது. அவர் சகலருக்கும் முன்பாக பேதுருவைக் கடிந்துகொண்டார். 'நீர் ஒன்றோடொன்று முரண்கொண்ட

விஷயங்களைப் பேசுகிறீர். நீர் யூதனுயிருந்தும் புறஜாதியானைப் போலவே வசித்துவந்திருக்கிறீர். அப்படியிருக்க புறஜாதிகள் கிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொள்ளவேண்டுமானால் அவர்கள் யூதர்களாகவேண்டுமென்று நீர் எப்படிச் சொல்லலாம்?

'ஒரு மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு அவனுடைய சரீரத்தில் ஓர் அடையாளத்தை உண்டாக்குவது அவசியமானால் நம்மை கடவுளுக்குச் சமீபமாய்க் கொண்டுபோகும்படி இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் வந்து, ஜீவித்து, மரித்ததினால் என்ன பிரயோஜனம்? நான் சொல்லுகிறதைக் கேளும்: விருத்தசேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. கிறிஸ்துவினால் உண்டாக்கப்படுகிற புதிய மனுஷனே அவசியம்' என்றார்.

இப்போது சகோதரர் யாவரும் யூதர், கிரேக்கர் என்ற இரண்டு கட்சிகளாய்ப் பிரிந்தனர். ஆகையால் இந்த விவாதத்துக்கு முடிவு கட்டுவது அவசியமாயிற்று. இவ்விவாதத்தை எருசலேமில் தீர்த்துக் கொள்வது நல்லது. மற்றபடி இவ்விவாதம் திரும்பவும் எழும்பும். எருசலேமே யூதகட்சிக்கு விசேஷித்த ஸ்தானம். அந்தியோகியாவிலிருந்த கிறிஸ்தவர்கள் பவுலையும், பர்னபாவையும், வேறு சிலரையும் எருசலேமுக்கு அனுப்பினார்கள்.

இச்சிறு கூட்டத்தாரான மனுஷர் தங்கள் அங்கிகளையும், தண்ணீர் செம்புகளையும், தடிகளையும் எடுத்துக்கொண்டு ரஸ்தா நெடுக சென்றபோது அவர்களுடன் சென்றார்கள். அவர்களை வழி அனுப்பிக்கொள்ளும்படி அவர்களுடன் சிறிதுதூரம் சென்ற கிரேக்க கிறிஸ்தவர்கள் தவிர வேறு ஒருவருக்கும் இவர்கள் எங்கே போகிறார்கள், எனனத்துக்குப் போகிறார்கள் என்று தெரியாது. அதை அறிந்துகொள்ள அவர்கள் கவலைப்படவுமில்லை. ஆயினும் காண்கிறதற்குக் கண் உள்ளவர்களுக்கோ உலகசரித்திரத்தில் உள்ள அதி விசேஷமான சம்பவங்களில் இது ஒன்று. உலகத்தில் நடந்த் பல விசேஷமான சண்டைகளில் ஒன்றை நடத்தும்படி பவுல் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தார். இப்போராட்டத்தில் இவர் தன்னந்தனியே யிருந்தார்.

அவர்கள் எல்லாருள்ளும் பவுல் ஒருவரே இக்கேள்வியைப்பற்றி அதிகமாய் ஆராய்ச்சிசெய்து முடிவான நிர்மானத்துக்கு வந்தார். அவருடைய கொடியின்மேல் 'கிறிஸ்துவுக்குள் சுயாதீனம்' என்ற வாசகம் வரையப்பட்டிருந்தது. இயேசுகிறிஸ்து யூதர்களைமட்டுமல்ல சர்வ ஜனத்தாரையும் இரட்சிக்கவந்தார் என்று சொல்லுகிறதற்கு பவுல் கொஞ்சமும் மயங்கவில்லை. இயேசுகிறிஸ்து ஜாதி, வருணம், தேசம் என்கிற வேறுபாடில்லாமல் எழைகள், ஸ்திரீகள் என்கிற யாதொரு பேதமின்றி உலகத்தார் அனைவரையும் இரட்சிக்கிறார் என்றும் அவருக்குள்ளான மனுஷர் மோசேயின் நியாய்ப்பிரமாணத்தினுடைய கட்டுப்பாடுகளினின்று நீங்கலாகியிருக்கிறார்கள் என்றும் அவர் உறுதியாய் நம்பினார்.

பேதுரு சொன்னதற்குப் பவுல் இணங்கிப்போயிருப்பார் என்றால், அல்லது பர்னபாவைப்போல் இவர் இதைக்குறித்து சற்று நிகைத்திருப்பாரானால், கிறிஸ்துமார்க்கமானது ஓர் மிஷனெரி மார்க்கமாக இராது. அதிசீக்கிரத்தில் முழுவதுமே அற்றுப்போயிருக்கும். இங்கிலாந்து தேசமும், ஐரோப்பாகண்டம் முழுவதும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்டிருக்கமாட்டா. இயேசுகிறிஸ்துவினுடைய அடியார் யூதமார்க்கத்தினுடைய உட்பிரிவாகமட்டுமே இருந்திருப்பார்கள். இவ்விஷயங்களில் தன்மேல் பவுலின் மூலமாய் அறிந்துகொண்ட அந்தியோகியாப் பட்டணத்துச் சபையார் இவ்விவாதத்தை ஜெயமான முடிவுக்குக் கொண்டுவருகிறதற்கு ஆவலாய் இருந்தார்கள். ஆகையால் அவர்கள் வெகுதூரம் ரஸ்தா நெடுக பவுல், பர்னபா முதலியவர்களோடு சேர்ந்து அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். கடைசியாக அந்தியோகியா சபையார் அவர்களிடத்திலே விடைபெற்றுக்கொண்டு திரும்பினார்கள். பவுலும், அவர் கூட்டத்தாரும் கடல்கரை ஓரமாய் பெனிக்கேயா தேசத்துப் பூர்வபட்டணங்களாகிய தீரு, சீதோன் பட்டணங்களை நோக்கிப் பிரயாணம்செய்தார்கள். இது அநேகமாய் மாரிகாலமாய் இருக்கவேண்டும். ஆகையால் அவர்கள் தங்கள் அங்கிகளைப் போர்த்துக்கொண்டு, காற்றுக்கும் மழைக்கும் பயப்படாமல், சுகதோஷமாகவும் விரைவாகவும் நடந்து சென்றார்கள். சில சமயங்களில் அந்த ரஸ்தாவானது கெர் ஆற்றங்கரை வழியாகச் செல்லும்; சில இடங்களில் அது கடலுக்கு எதிர்முகமாக இருக்கிற பாறைகளுக்கு ஊடே செல்லும். பெனிக்கேயா கடல்கரையிலே உள்ள கன்மலைகளிலே விகாரமான உருவங்களும், விநோதமான அட்சரங்களும் வெட்டப்பட்டிருந்தன. இவைகளை அவர்களில் ஒருவரும் வாசிக்கவாவது, அர்த்தம் சொல்லவாவது முடியவில்லை. பவுலினுடைய காலத்துக்கு அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னே இந்த வடதேசத்தை ஜெயித்த ஓர் பூர்வ ஜாதியாரால் இந்த அட்சரங்கள் வெட்டப்பட்டன. இந்தப் பூர்வ ஜாதியாருக்கு எத்தியர் என்று பெயர்.

அவர்கள் ஒருமலை உச்சிக்கு வந்தபோது திறைமுகப்பட்டணமாகிய சீதோன் அவர்களுக்குத் தெரிந்தது. அங்குள்ள ஜனங்கள் இயேசுகிறிஸ்து கடலுக்கு அப்பாலுள்ள மகா நகரங்களில் வசித்த அந்நிய

ஜாதியாரான ஜனங்களுடைய கண்களுக்கு முன்பாக விளம்பரப் படுத்தப்பட்டார் என்றும், அந்த ஜனங்கள் அந்த இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைக் கேட்டு மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு உட்படாமலே அவர்கள் ரூபத்தை எற்றுக்கொண்டார்கள் என்றும் இங்கேயுள்ள ஜனங்கள் கேள்விப்பட்டபொழுது அவர்கள் அதிக சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் இன்னும் கடல்கரை ஓரமாக தெற்குநோக்கிப் பிரயாணம்பண்ணி தீருபட்டணத்துக்கு வந்தார்கள். மீன்பிடிகாரர் கடல் இளிஞ்சில்களை சுமந்துகொண்டு கடல் கரையி னின்று வருகின்ற மீன்பிடிகாரர்களை பவுல் கண்டார். இக்கடல் இளிஞ்சில்களிலிருந்துதான் இந்திரநீலசாயத்தை தீருபட்டணத்தார் செய்தார்கள். அக்காலத்திலாவது, இக்காலத்திலாவது இச்சாயத்தைப் போன்ற சாயம் ஒருவரும் செய்யவில்லை. துர்நாற்றமுள்ள சில தொட்டிகளை அவர்கள் கடந்து சென்றார்கள். இத்தொட்டிகளில் தான் ரோம மந்திராலோசனைக்காரரும், கௌரவ வீரர்களும் அணிந்துகொள்ளுகிற சால்வைகளுக்காக ஆட்டுமயிரை சாயம் தோய்ப்பார்கள்.

அப்புறம் அவர்கள் சிறிது உள்நாட்டுக்குள் சென்றார்கள். யூதேயாவிலிருந்த ஜனங்களோடு இவர்கள் அதிகம் பேசவில்லை. அன்னிய ஜாதியார் கிறிஸ்துவின்மூலமாய் தேவனுக்குச் சமீபமானார் கள் என்கிற செய்தி இந்த யூதர்களுக்குப் பிரியமானதல்ல. கடைசி யாக இப்பிரயாணிகள் பட்டணத்து வாசலண்டை வந்து எருசலே முக்குள் பிரவேசித்தனர். சில வருஷங்களுக்கு முன்னே கிறிஸ் துவை வணங்கினதினிமித்தம் தான் தன்பப்படுத்தின அதே ஜனங் கள் இப்பொழுது விசாலமான கிறிஸ்தவர்களாக இராததினிமித்தம் அவர்களோடு போராடும்படி தான் செல்வது பவுலுக்கு விகாரமாகத் தோன்றியிருக்கும்.

அப்போஸ்தலரும் மூப்பரும் அடங்கிய எருசலேம் பட்ட ணத்து சபை அனைத்தும், பவுலோடும் பர்னபாவோடும் இவ்விஷயத் தைக்குறித்து தர்க்கித்து ஆராய்ச்சிசெய்யும்படி கூடிவந்தார்கள். அவர் கள் வட்டவடிவமாய் உட்கார்ந்திருந்தார்கள். கர்த்தருடைய சகோதர னாகிய யாக்கோபு அச்சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாகி இருந்தார்.

பவுல் எழுந்து நின்றார். சீப்புருதீவிலுள்ள சொந்தியு பவுலும், மலைப் பிரதேசங்களிலுள்ள மகா நகரங்களில் வசித்த கிரேக்கர் களும் ரோமர்களும் தங்கள் கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கத்தின் மூலமாக உண்மையாகவே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார் கள் என்பதை பவுல் வெகு சாங்கோபாங்கமாய் விவரித்தார். கடவுள் கிறிஸ்துவின்மூலமாய்த் தமது பரிசுத்த ஆவியை விருத்தசேதனம்

செய்யப்படாத புறஜாதியாருக்குத் தந்தருளினார் என்பது மறுக்க முடியாத சத்தியமாயிருந்தது. பவுலினுடைய செய்கை மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமானது என்று அவர்கள் சொல்ல லாம். ஆனால் மேற்சொன்ன காரியங்கள் கர்த்தரால் சொல்லப்பட் டது என்பதை அவர்கள் மறுக்கமுடியாது. கர்த்தர் தம்முடைய சொந்த உலகத்தில் தாம் விரும்பியதைச் செய்ய சுயாதீனமுடையவர். இதையும் அவர்தாமே செய்தார்.

உடனே சபையிலிருந்த பரிசேயகட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் எழுந்தார்கள். இவர்களில் சிலர் பவுலினுடைய பழைய சகபாடிகளாக இருந்திருக்கலாம். இவர்கள் எழுந்து 'புறஜாதியார் கிறிஸ்தவ சபையைச் சேருகிறதற்கு முன்னே விருத்தசேதனம் பெற்று மோசேயின் நியாயப்பிரமாணத்துக்குக் கீழடங்குவது இன்றியமையாத காரியம்' என்று ஒரே சாதனையாய்ச் சொன்னார் கள். அதற்குப் பவுல் 'மோசேயினுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிகிறதினால்மட்டும் ஒருவன் நல்லவனாயிருக்கக்கூடுமானால் இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் வந்து ஜீவித்ததும் மரித்ததும் வீண் தானே' என்று கேட்டார்.

எருசலேம் பட்டணத்து சபையின் முதன்மைக்காரர் திரும்ப வும் கூடிவந்தார்கள். இக்கூட்டத்துக்குச் சாதாரண அங்கத்தினர் வரவில்லை. சபைத்தலைவர்கள் இவ்விஷயத்தைக்குறித்து அதிக மூர்க்கமாய் சச்சரவு செய்தார்கள். தர்க்கம் அதிக மும்முரமாக அவர்களுடைய கண்கள் அக்கினிபோல் எரிந்தது. சபை அனைத் தும் இரண்டாகப் பிரிக்கக்கூடிய ஒரு சண்டை உண்டாகும்போல் தோன்றினது. அதற்குள் பவுல் சொல்லுகிறது சரி என்றும் கர்த்த ருக்குள்ளான அன்புக்குள் சகலரையும் இணைக்கும்படிக்கே இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்தார் என்பதையும் நன்றாய் உணர்ந்த பேதுரு தான் கடைசியாகக் கொண்டிருந்த கோட்பாட்டை ஒழித்து உண் மையை உணர்ந்து எழுந்து நின்றார். அவர் எழுந்து சபையைப் பார்த்துச் சொல்லுகிறார்:

'சகோதரரே, புறஜாதியார் சுவிசேஷ நற்செய்தியைக் கேட்டு விசுவாசிகள் ஆகிறதற்கு கர்த்தர் என்னை அநேக நாட்களுக்கு முன் னேயே தெரிந்துகொண்டார் என்று உங்களுக்கு நன்றாய்த் தெரி யுமே. ஒவ்வொருவருடைய இருதயத்தையும் ஆராய்ந்தறிகிற கட வுள் நமக்குத் தந்தருளியபிராகாரமே இந்தப் புறஜாதிகளுக்கும் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதினாலே அதை ரூபகாரப்படுத்தினார். விசுவா சத்தின் மூலமாக அவர்களுடைய இருதயங்களைச் சுத்தம்செய்வதில் நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசத்தையும் காட்டவில்லை.

அப்படியிருக்க நமது பிதாக்களும் நாமும் சுமக்கிறதற்கு அரிதாகிய நுகத்தை இந்த சீஷர்கள்மேல் சுமத்துவானேன், அப்படிச் செய்யலாகாதே. அவர்களைப்போலவே நாமும் கர்த்தராகிய இயேசுவின் கிருபையினாலே விசுவாசித்து இரட்சிக்கப்படுகிறோம்' என்று கூறினார்.

அப்பால் பவுலும் பர்னபாவும் எழுந்து கர்த்தர் தங்களைக்கொண்டு புறஜாதிகளுக்குள்ளே நடப்பித்த ஆச்சரியமான காரியங்களை அவர்களுக்குத் திரும்பவும் எடுத்துரைத்தார்கள். அங்குள்ள யாவரும் தங்கள் போராட்டத்தை நிறுத்தி யாதொரு அசைவாட்டமுமின்றி வெகு கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் பேசி முடிந்தபிறகு யாக்கோபு எழுந்து சங்கத்தினுடைய பொதுவான அபிப்பிராயத்தைத் தொடுத்துக்கூறினார். 'சகோதரரே, செவிகொடுங்கள். தம்முடைய நாமத்தைத் தரித்துக்கொள்வதற்கு புறஜாதிகளிலிருந்து ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்வது கடவுளுடைய அநாதி சித்தம் என்பதை சிமியோன் நமக்கு விளக்கிக்காட்டினார். விழுந்துபோன தாவீதின் கூடாரத்தைக் குறித்து தீர்க்கதரிசியானவர், "மற்ற மனுஷரும் என்னுடைய சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன்" என்று கூறிய வசனம் இதோடு பொருத்தமுடையதாய் இருக்கிறது. இக்காரணத்தினிமித்தம் புறஜாதியார் இம்மார்க்கத்தை அனுசரிக்கிற விஷயத்தில் அவர்களுக்கு இன்னும் தடைகளை நாம் ஏற்படுத்தக்கூடாது என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நாலு விஷயங்களில் மட்டும் அவர்கள் நியாயப்பிரமாணத்தை அனுசரிக்கவேண்டும் என்று நாம் அவர்களுக்கு எழுதி அனுப்பவேண்டும். அவையாவன: விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிசத்தைப் புசியாமலிருத்தலும், சுத்தஜீவியம் செய்வதும், (மிருகத்தினுடைய இரத்தமானது அதனுடைய நாம்புகளில் இருக்கத்தக்கதாக) நெரிக்கப்பட்டு கொல்லப்பட்ட மிருகங்களின் மாமிசத்தைச் சாப்பிடாமலிருப்பதும், இரத்தத்தை ருசிபாராமல் இருப்பதுமாகிய இந்நான்கு விஷயங்களையும் அவர்கள் அனுசரிக்கவேண்டும்' என்றார்.

இதற்கு சங்கத்தார் சம்மதித்தார்கள். பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்குப் போகும்படி எருசலேம் சபையில் உள்ளவர்களில் சிலரைத் தெரிந்துகொண்டார்கள். எருசலேமிலுள்ள கிறிஸ்தவ சகோதரருக்குள் விசேஷித்தவர்களாகிய பர்சபா என்

னப்பட்ட யூதாவையும், சீலாவையும் அவர்கள் தெரிந்துகொண்டு அவர்களை அந்தியோகியாவிற்கு அனுப்பினார்கள். கோத்தியான தோல் அட்டையில் ஒரு கடிதம் எழுதி அதைச் சுருட்டி பிரயாணிகளில் ஒருவருடைய சட்டைப்பையில், அநேகமாய் பர்சபா என்னப்பட்ட யூதாவின் சட்டைப்பையில் போட்டார்கள். இவ்வித ஆயத்தத்தோடு அவர்கள் வடக்குமுகமாய் நீண்ட ரஸ்தாவில் பிரயாணம்பண்ணி மலையையும், எரியையும், ஆற்றையும், சமபூமியையும் கடந்து அந்தியோகியாவிற்கு வந்தார்கள். எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தை அறிகிறதற்கு அந்தியோகியா கிறிஸ்தவர்கள் மிக்க ஆவலாய் இருந்தார்கள். அத்தீர்மானத்தைக் கேட்கும்படி கிறிஸ்தவர்கள் எல்லாரும் கூடிவந்தார்கள். அக்கடிதம் அங்கு கொண்டுவரப்பட்டது. அதை விரித்து அந்தியோகியா சபையாருள் ஒருவரிடத்தில் கொடுத்தார்கள். அவர் அதை வாசித்தார். அந்தக் கடிதம் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

'கிறிஸ்தவ சகோதரத்துவத்தின் அப்போஸ்தலரும், மூப்பரும், அந்தியோகியா, சிரியா, சிலிசியா நாடுகளில் புறஜாதிகளிலிருந்து கிறிஸ்துவின் நாமத்தை ஏற்றுக்கொண்ட சகோதரருக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதிக்கொள்வது: எங்களைச் சேர்ந்தவர்களில் சிலர் எங்களுடைய அனுமதியின்றி உங்களிடத்தில் வந்து தங்கள் உபதேசத்தினால் உங்களைக் கலக்கினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டோம். ஆகையால் எங்களில் சிலரைத் தெரிந்துகொண்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தங்கள் ஜீவனையும் ஒரு பொருட்டாகப் பாராத நமது அன்பான கூட்டாளிகளாகிய பவுல், பர்னபா என்பவர்களோடு அவர்களை அனுப்பத் தீர்மானித்தோம். ஆகையால் நாங்கள் யூதா, சீலா என்னும் இவர்களை இக்கடிதத்துட்ன அனுப்புகிறோம். அவர்கள் தங்கள் வாய்மொழியாகவும் இதைக் குறித்து உங்களிடம் பேசுவார்கள். இக்கு கண்டிருக்கிற நான்கு விஷயங்களை யல்லாமல் உங்கள்மேல் வேறெந்த பாரத்தையும் சுமத்தாமல் இருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாய்த் தோன்றினது' என்று எழுதியிருந்தது. இதற்குக்கீழ் யாக்கோபின் உபதேசத்தில் குறிக்கப்பட்ட நான்கு காரியங்களும் கண்டிருந்தது.

முடிவுரையாக 'இவைகளுக்கு விலகியிருங்கள். அப்போது உங்களுக்கு வாழ்வுண்டாகும். சுகமாயிருப்பீர்களாக' என்று எழுதியிருந்தது.

இதெல்லாம் இப்படியிருந்தாலும் அக்கடிதம் அத்தனை தெளிவான கடிதம் அல்ல. எனெனில் ஒருபோதும் இணைக்கமுடியாத இரண்டு விஷயங்களை இணைக்கும்படியான முயற்சி இந்நிருபத்தில் கண்டி

ருந்தது. பொதுவான சுயாதீனத்தை இந்திருபமானது கொடுத்தா லும் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட சில அற்ப சொற்ப விதி விலக்குகளை அனுசரிப்பது இன்றியமையாத காரியமாயிற்று. ஆனால் ஒரு விஷயத்தில் இத்தீர்மானம் அதிகச் சிறந்தது. கிரேக்கர்கள் விருத்தசேதன பிரமாணத்துக்கு அடங்கியிருக்கவேண்டிய அவசிய மில்லை. ஆகையால் அந்தியோகியாவிலுள்ள கிரேக்க கிறிஸ்தவர்கள் அதிக சந்தோஷம் கொண்டாடினார்கள். அவர்களுக்குத் தங்கள் தலைவனுகிய பவுலின்மேலிருந்த அன்பும் அபிமானமும் அதிகப் பட்டது.

அதிகத் தொகையினரான தன் சத்துருக்களோடு சுயாதீனத்தின் பொருட்டுப் பவுல் செய்த தனது நீண்ட யுத்தத்தின் முதலாம் சண்டை யில் எதிரிகளின் பலத்துக்கு மையஸ்தானமாகிய எருசலேம் பட்ட ணத்திலேயே அவருக்கு ஜெயம் உண்டானது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1919

No. 155 ஏப்பிரல் 1919

வேதியர் விளக்கு

9-APR 1919 MADRAS

The Moral and Spiritual Uplift of Village Christians

By Rev. D. Perumal

கிராமக் கிறிஸ்தவர்களை யெழுப்பிவிடுதல்

நற்காலம் நமது கிராமக் கிறிஸ்தவர்கள் மிகுதியாய் ஏழைக் குடும் பங்களிலிருந்து வந்தவர்களும், பழக்கவழக்கங்களில் மிகத் தாழ்ந்த வர்களாயுமிருக்கிறார்கள். மிகுதியானவர்கள் மிக்க கடன்பட்ட வர்கள்; குடி வெகு சகஜம்; மிகுந்த தரித்திரர்கள்; கேவலமும் ஓடியமுமான வார்த்தைகளைப் பேசுகிறவர்கள்; நல்ல காரியங்களைச் சொன்னால் கவனிக்கக்கூடாதவர்கள். சன்மார்க்க நெறி யறியாத வர்கள். காலமெல்லாம் வாங்கி சாப்பிட்டவர்களேயன்றி, பணத்தைக் கையில் வைத்து செலவிட்டவர்களல்ல. இப்படிப்பட்ட ஜனங்களை சன்மார்க்க நெறியில் வளர்த்து ஆவிக்குரிய ஜீவியமுள்ளவர்களாக்கு வது நமது கடமையாயிருக்கிறது.

முதலாவது இந்தப் புது கிறிஸ்தவர்களின் தரித்திரம் நீக்கப்பட வேண்டும். மிகுதியாய் கூலிவேலைக்காரரும் பண்ணையாட்களுமா யிருக்கப்பட்ட இவர்கள் கொஞ்சம் நிலமுள்ளவர்களும், அவைகளை வகிக்க அத்தியந்த அவசியமாய் வேண்டிய மாடுகள் உழுதொழில் கருவிகளுள்ளவர்களாயிருக்கப் பார்க்கவேண்டும். இதற்கென்று சர்க்கார் மூலமாய் தற்காஸ்த்து விண்ணப்பங்களோ, அல்லது கோஆப்பரேட்டிவ் சொசைட்டி மூலமாய் அட்வான்சுகளோ சிறிது செய்து, தங்களுக்கு பாதோ கொஞ்சம் உத்திரவாதம் இருப்பதாய் அவர்கள் உணரும்படி செய்யவேண்டும். இப்படிப்பட்ட முயற்சி களை நன்றாய்க் கவனித்து அவைகளால் வரும் நன்மைகளை முழுது மாய் அடைந்துகொள்ளக்கூடிய அநேக புத்திசாலிகளும் அவர்களி லுண்டு. இப்படி முன்னேறுகிறவர்கள், மற்றவர்களுக்கு சீக்கிரத் தில் நல்ல முன்மாதிரிகளாயிருப்பார்கள்.

கூடுமானால் இந்த ஜனங்களை ஒரே இடத்தில் ஒரு செட்டில் மெண்டாக, வீடுகள் கட்டும்படி செய்து, அவர்கள் மத்தியில் ஒரு பள்ளிக்கூடம் கட்டி சொற்ப சம்பளத்தில் ஒரு உபாத்தியாயரை வைத்து, போர்டிங் பள்ளிக்கூடத்தில் படிப்பிப்பதுபோல், வேதக் கதைகள், போதகங்கள், பாட்டுகள், விபசாயமுறைகள், வெளி தேசத்து சமாச்சாரங்கள், ஒழுங்காய் சொல்லப்படவேண்டும். இந்தக் கூட்டங்களுக்கு எல்லாரும் வாவும் கற்கவும் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

பஞ்சமர்கள் வாழ்விலும் சாவிலும், அஞ்ஞானிகளாயிருந்த காலத்தில், ஆடுகிறவர்களும் பாடுகிறவர்களும் கொட்டடிக்கிறவர்களுமாயிருந்த காரணத்தைப்பற்றி வெகு சீக்கிரத்தில் நன்றாய்ப் பாடும்படி கற்றுக்கொள்ளுகிறார்கள்.

புதுமையான நல்ல வழக்கங்களையும் நற்பழக்கங்களையும் கற்றுக் கொள்ளும்படி செய்வதே முன் தீப்பழக்கங்களை விட்டுவிடும்படி செய்வதற்கு தக்க முயற்சி. கூடுமானால் மத்தளம், வாத்தியபெட்டி, ஜாலர் முதலியவைகளைப் பாலிய பிள்ளைகளுக்குத் தந்து வேதப் பாடங்களைக் கற்பிப்பது, எல்லா கிறிஸ்தவர்களுக்கும் சந்தோஷமும் அவர்களுடைய இனஜனங்களான மற்றவர்களும் அவர்களுடன் வந்து சேரும்படியான முயற்சியுமாகும்.

பழைய ஏற்பாட்டு சரித்திரங்கள் புது கிறிஸ்தவர்களுக்கு மிகவும் ஏற்றவைகள். தேவனுடைய ஆச்சரியமான நடத்தைகளடங்கிய கதைகளை மிகுதியாய் சொல்லவேண்டும். இந்துமார்க்கத்திலிருந்து வந்தவர்களுக்கு இவைகள் மெத்த பொருத்தமாயிருக்கும். விக்கிரக ஆராதனையும் பாவமும் நிறைந்திருந்த ஆதி ஜாதிகளை தேவன் எவ்விதமாய் அழித்துவிட்டாரென்கூறுவது கேட்போரை நல்லொழுக்கத்தில் நடக்கும்படி செய்யக்கூடியது. புதிய ஏற்பாட்டிற்குரிய திரித்துவ போதகம், இரட்சிப்பு, பிராயச்சித்தத்தினால் வந்த மீட்பு முதலிய உபதேசங்களை யேமற கற்பிக்கலாம். இவைகளை ஆட்சேபிக்கிறவர்கள் யாரும் கிடையாது. ஏனெனில் இந்த ஜனங்கள் மிகுதியாய் பலி முதலிய விஷயங்களை எப்போதும் நடத்தி பாவ மன்னிப்பை எதிர்பார்த்தவர்கள் ஆதலால் கிறிஸ்துமார்க்க மூல உபதேசங்களைத் தாராளமாய் பால்போல ஊட்டிவரவேண்டும். இவர்களுக்குப் போதனைசெய்துவரும் தேவஊழியன் மெத்த படித்தவனாயிருக்கவேண்டியது அவசியமில்லையெனினும், தான் சொல்லும் போதனையை தன் சாதனையால் காட்டிவரவேண்டியது மெத்த அவசியமான விஷயம்.

கிறிஸ்தவர்களிருக்குமிடம் பொதுவாய் ஜலசவுக்கியமுள்ளதா

யிருக்கவேண்டும். ஜனங்கள் பொதுவாய் குளித்து, வஸ்திரம் தோய்த்து, வீடுகளை மெழுகி வெள்ளையடித்து சுத்தமாய் வைக்கும் படி பார்க்கவேண்டும். சுத்தமாயிருக்கும் பெரிய அறையுள்ள எல்லா வீடுகளிலும் அடிக்கடி ஜெபக்கூட்டம் வைக்கவேண்டும். இப்படி ஜனங்கள் சுசி சுத்தத்தில் வளர்வதால் குடியானவர்கள் படிப்பிடியாய் அவர்களை மதிப்பார்கள். மதிப்புக்குக் குறைவாய் எண்ணப்படும் செத்த ஜீவன்கள் தின்னல், கொட்டடித்தல், கூத்தாடல் முதலிய பழக்கங்களை நிறுத்துதல் தேவை. தவிர கட்டிய ஆண், பெண், பிள்ளைகள் எல்லோரும் வாசிக்க, பாட, கற்பது மெத்த அவசியம். இப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படும்போது, வெகு சீக்கிரத்தில் மேன்மையடைந்து முன்னேறவேண்டுமென்கிற அசை, தானே அநேகரில் உண்டாகிவிடுகிறது.

தற்காலம் பஞ்சமாயிருப்பதால் வீட்டிலுள்ள எல்லோரும் வேலை செய்தாலொழிய கஷ்டமின்றி பிழைப்பது கூடாதகாரியம். நெசவு தொழில் வெகு லேசாய் கற்றுக்கொள்வதுடன் வீட்டிலுள்ள அநேகருக்கு அது வேலைகொடுக்கும். நாகரீகம் அதிகரிக்க பாதரட்சைகள் அதிகமாய் உபயோகமாகிறது. தற்காலத்தில் இந்துக்கள் இதை அதிகமாய் செய்யமாட்டார்கள். கிறிஸ்தவர்கள் சீக்கிரத்தில் இவைகளைக் கற்று நல்ல லாபம் சம்பாதிக்கக்கூடும். இப்படியெல்லாம் செய்து தரித்திரத்தைத் தங்கள் வீடுகளினின்று தூரத்தக்கூடுமானால், சொல்லப்படும் நல்ல காரியங்களை மனதில் வைக்கக்கூடும். தூரை மாரும், போதகன்மாரும் அடிக்கடி அவர்களைச் சந்தித்து நல்ல போதனைசெய்து தைரியப்படுத்தவேண்டும். மாதந்தோறும் இத்தனை வேத பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்று சொல்லி அது சரியாய் நடந்தேறியிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். தேறினவர்களுக்கு சில இனாம் கொடுப்பது, மெத்த உற்சாகத்தைக் கொடுக்கும் ஓர் வழி. அஞ்ஞானிகளாயிருந்த காலத்தில் அவர்களுக்கு அநேக பண்டிகைகளிருந்தன. கிறிஸ்தவர்களானபின் நாமும் சில பண்டிகைகள் நியமித்து அதை விருந்து தினங்களாகவும் சந்தோஷமான காலங்களாகவும் செய்வது மெத்த அவசியம். ஈஸ்டர், கிறிஸ்மஸ், அறுப்பின் பண்டிகைகள் அதற்கேற்ற சமயங்கள். இவைகளின் மூலமாய் அநேக வேத உபதேசங்கள் நன்றாய் கற்பிக்கப்படக்கூடும். தவிர பரிசுத்த வாரத்தில் சில தினங்களில் உபவாசிக்கும்படி செய்து, அல்லது கூட்டங்களுக்கு ஒழுங்காய் வரும்படி செய்து பெரிய வெள்ளிக்கிழமை உபவாசம் செய்து, முழுவர்ஷமும் பலத்திற்கடுத்த வஸ்துக்கள் சாப்பிடாது நிறுத்தி ஜெபத்தில் தரித்திருக்கும்படி செய்தல் புது கிறிஸ்தவர்களுக்கு அவசியம். மார்க்க சத்தி

யத்தில் தேறிவரும்போது அறிவுக்குத்தக்கதாய் சிலதைக் கூட்டியும் குறைத்தும் வைத்துக்கொள்ளலாம். ஜீவனற்ற சுத்த சடங்காசாரத்தினின்று வந்தவர்களுக்கு, உன்னதமான சுத்த சுவிசேஷத்தை அனுஷ்டானங்களின்றி கற்பிப்பது சரியாயினும் யுக்தமானதன்று. இவ்விஷயங்களில் ரோமன் மார்க்கத்தார் நமக்கு ஒருவாறு முன்மாதிரிகளாய் இருக்கிறார்கள். மனிதருடைய மனதின் இயற்கைப் பிரமாணத்தை அவர்கள் நன்றாய் தெரிந்துகொண்டு அதற்கிசைய பாவற்றையும் நடத்திக்கொள்ளுகிறார்கள். அப்புறம் அறிவீனத்தில் வைத்து அதில் நிலைத்திருக்கும்படி செய்கிறார்கள். நாமோ எப்போதும் விருத்திசெய்யும்படி பிரயத்தனப்படவேண்டியது. ஏழை ஜனங்களுக்குள் பொதுவாய் காணப்படும் குற்றங்களாகிய கடன், குடி, விபசாரம், சண்டை முதலியவற்றில் அடிக்கடி கண்டித்து தெண்டித்து வரவேண்டும். இக்குற்றங்களே நாம் எவ்வளவாய் அருவருக்கிறோமென்று அவர்களுக்கு நமது விசாரணையின் மாதிரியாலும், புத்தி போதகத்தினாலும் தெரிவிக்கவேண்டும். அவர்களுக்குள் நல்லவர்களாயிருக்கிறவர்களே, மதிப்புக்குரியவர்களாயும் பலவித ஒத்தாசைகளைப் பெறத்தகுந்தவர்களாயும் நடத்துகிறதினால் மற்றவர்களும் அப்படியாவதற்கு எவப்படவேண்டும்.

விசேஷமாய் இரட்சகரின் சரித்திரமும் போதனையும் எல்லா பொதுக்கூட்டங்களிலும் வற்புறுத்திக் கற்பிக்கப்படவேண்டும். ஏனெனில் நம்முடைய ஆண்டவர் 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள்' என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் எப்போதும் அவரையே சபைக்கு முன் வைக்கவேண்டும். அவரிடத்தில் தான் அவர்கள் நேரில் நல்ல காரியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

தவிர, சிறு காணிக்கை யெனினும் கொடுக்கும் பழக்கத்தை உண்டாக்கவேணும். எல்லா சம்பாத்தியங்களிலும் முதல் பாகத்தை அவருக்குத் தருவதினால் மாத்திரம் தேவன் அதிகமதிகமாய் ஆசீர்வதிக்கிறார் என்கிற அறிவை உண்டாக்கவேண்டும். அஞ்ஞானிகளாயிருந்த காலத்தில் அவர்கள் பலவித காணிக்கைகள் செலுத்தினவர்களாகையால் அந்தப் பழக்கம் மாறுவண்ணம் காப்பாற்றுவது மெத்த அவசியம். இதைப்பற்றி கவலையெடுத்துக்கொள்ளாததால் சில ஏழைக் கிறிஸ்தவர்கள் காலமெல்லாம் பிச்சைக்காரர்போல் கேட்கிறவர்களாகிறார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதால் நமது கிறிஸ்தவர்கள் சன்மார்க்கத்திலும் ஆவியிலும் விருத்தியடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

Co-operative Movement

By G. S. Duraisamy, Esq.

Secretary, Rural Department, Y.M.C.A.

ஐக்கிய நாணய சங்கம்

'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை' என்பது முதியோர் வாக்கு. நாடு வாழ்வது என்றால் என்ன? நாட்டிலுள்ள ஐசுவரியவான்கள் மாத்திரமல்ல, ஏழைஜனங்களுங்கூட வயிறு வளர்க்கும் காரியத்திலேனும் அதிகக் கவலையின்றிக் கூடியவரை சுகமாய்க் காலந்தள்ளக் கூடியவராயிருந்தால் ஒருவாறு நாடு நல்ல நிலைமையில் இருக்கிறதென்று சொல்லலாம்.

நம்முடைய நாட்டில் சாதாரண ஜனங்கள் பாடு மிகவும் கஷ்ட நிலைமைக்குள் ஆய்விட்டது. அன்றாடகம் கிடைக்கும் கூலி குடும்ப சம்ரக்ஷணைக்குப் போதுமானதாயில்லை. ஏழைஜனங்களுக்கும் கடன் வரவர அதிகரித்துவிட்டது. சிறிது நிலபுலங்களே வைத்துப் பயிர்செய்வோரும் அந்த நிலங்களே அடைமானம் வைத்துவிட்டு நிலத்தினால் வரும் லாபத்தை யடைகிறதில்லை. ஒன்றுமில்லாத ஏழைகள் தங்களுக்கு அறுப்பு அடிப்புக்காலத்திற் கிடைக்கக்கூடிய கூலிகளே பிடுகாட்டி அதற்குமுன்னமே கடன்வாங்கிக் காலங்கழித்து அதிகம் கிடைக்கும் காலத்தில் சேர்த்துவைக்க இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

ஊர்கள்தோறும் லேவாதேவிசெய்யும் ஆட்கள் இவர்களுக்கு அதிகமான வட்டிக்குக் கடன்கொடுக்க ஆயத்தமாயிருந்துகொண்டு இவர்களைக் கெடுக்கிறார்கள். நூற்றுக்கு மாதம் ரூபா 1½, 2, 3 வீதம் கூட வட்டி வாங்குகிறார்கள். கடன்கொடுக்கிறவர்கள் பெரும்பாலும் தங்கள் லாபத்தைக் கருதுகிறவர்களேயன்றிக் கடன்வாங்கும் ஏழைகளின் நன்மையை நாடுகிறவர்கள் அல்ல. எவ்விதத்திலும் இந்த ஏழைகளினுடைய அற்பசொற்ப சொத்துக்களேயும் தாங்களே அபகரித்துக்கொள்ளவேண்டும் என்னும் நோக்கத்தோடு கடன் கொடுக்கிறார்கள். அல்லது இந்த ஏழைக் கூலிஜனங்கள் சதா இவர்களுக்கு ஊழியம்செய்து, ஒருவாறு அடிமைகள்போலிருக்கும்படி செய்கிறார்கள். ஏழைக் கூலிஜனங்களோ எழுத்துவாசனை சிறிதும் அறியாத அறிவீனமானவர்கள். கடன்வாங்கத் தெரியுமேயல்லாது வாங்கின கடனைத் திரும்பக் கொடுக்கவேண்டிய அறிவும் கடன்கொடுத்தவன் கூட்டிப்போடும் வட்டி இன்னதுதான் என்று

அறிந்துகொள்ளும் உணர்வும் இவர்களுக்குக் கிடையாது. ஆகவே காலமெல்லாம் கடனில் மூழ்கி நிலங்களையும் வீடுவாசல்களையும் இழந்து கடன்கொடுக்கிறவர்களுக்கு அடிமைகளாகவே காலங்கடத்தி வருகிறார்கள்.

மேலும் இவர்களுடைய அறிவீனத்தின் பயனாய் இவர்கள் குடி வெறி முதலிய பல தீர்ப்பழக்கங்களுக்கு ஆளாகிக் கையிற்கிடைக்கும் காசுகளைக் கள்ளுக்கடையால் வீசியெறிந்துவிட்டு சிக்கனம் என்பதே யாதென அறியாமலிருக்கிறார்கள். இவர்களிடம் காணப்படும் மற்றும் கேவலமான ஒழுக்கங்களும் உண்டு. வாக்குநாணயம், மேரைமரியாதை, கன்றிபாராட்டுதல் முதலிய குணங்களை இவர்களிடத்தில் காண்பது அபூர்வம்.

இக்குறைகளை நிவர்த்திசெய்யும்பொருட்டு ஏற்பட்ட சங்கங்களை ஐக்கியநாணய சங்கங்களாம். ஏழைகள் கெட்டுப்போவதைக் காணச் சகியாத நமது கவர்ண்மெண்டாரால் கோவாப்பரேட்டிவ் இலாக்கா ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அந்த இலாக்கா உத்தியோகஸ்தராலி இச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு மேல்விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

இச்சங்கங்களால் ஏழைகளுக்குண்டாகும் நன்மைகள் அனந்தம்.

1. கடன் வாங்குகிறவன் கடன்கொடுக்கிறவனுக்கு அடிமையென்னும் வாசகம் இங்கே கிடையாது. சங்கத்தைச்சேர்ந்த ஒவ்வொருவனுக்கும் சங்கத்திலிருந்து கடன் வாங்கும் பாத்தியதையுண்டு. பாத்தியதை பாராட்டிக் கடன்கேட்கலாம். ஒருவரையும் முகஸ்துதி பேசி இரந்து கெஞ்சி யாசிப்பதுபோல் கடன் கேட்கவேண்டியதில்லை. சுயாதீனமான எண்ணம் வித்தியாவதற்கு இது ஒரு ஏது.

2. வட்டி மிகவும் சுருக்கம். சாதாரணமாக ரூபாய்க்கு 1½ பை வீதம் வட்டி கொடுக்கவேண்டும். சில கடன்களுக்கு 2 பை வீதம் வட்டி வாங்குவதும் உண்டு.

3. கடன்கொடுத்தவன் கள்ளக்கணக்குக் கூட்டிக்கொள்ளுவான் என்னும் பயமில்லை. சகல காரியமும் சர்க்காருடைய மேல்விசாரணையிலிருப்பதாலும் கொடுக்கிற தொகை எவ்வளவு சிறியதாயிருந்தாலும் அதற்கும் சங்கத்திலிருந்து ரசீது கொடுக்கவேண்டியது கட்டாயமானதாலும் கணக்கு கொஞ்சமும் பிசகிவிடாமலிருக்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

4. சங்கத்திலிருந்து கடன்வாங்குகிறவர்களுக்குப் பத்திரச்செலவும் ரிஜிஸ்தர் செலவும் கிடையாது. சாதாரண வெள்ளைக்காகிதத்தில் எழுதி ரிஜிஸ்தராபீசில் கொடுத்தால் பத்திரம் ரிஜிஸ்தர் ஆய்விடும்.

5. கடன்கொடுத்தவன் ஓயாமல் வந்து வீட்டில் தொந்தரவு செய்தலாவது தனக்கு வேண்டும்போது பணத்தைத் திரும்பக்கேட்டலாவது இல்லை. கடன் வாங்குகிறவன் வாங்கும்போதே இன்னின்ன வாய்தாவில் இன்னின்ன தொகை செலுத்துகிறதென ஒப்புக்கொண்டு அதன்படி செலுத்திவிடவேண்டும்.

6. வாங்கின பணம் முழுவதையும் மொத்தமாய்ச் செலுத்தவேண்டியதில்லை. சாதாரண கடன்களை 1½ வருடத்திற்குள்ளும் மற்றக் கடன்களை 10 வருடங்களுக்குள்ளும் செலுத்தலாம். வாங்கின தொகையைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் திரும்பக்கொடுத்தாலும் அப்படிக் கொடுத்த தொகைகளுக்கு அதுமுதல் வட்டி கிடையாது, பாக்கியிருக்கும் தொகைக்குத்தான் வட்டி கட்டவேண்டும்.

7. கடன் வாங்காமல் பணம் சேர்த்துவைப்பதற்கும் சங்கத்தில் நல்ல ஏதுக்கள் உண்டு.

8. மாதந்தோறும் ரூ. 1 வீதம் சங்கத்தில் போட்டுவைத்தாலும் அதற்கும் சங்கத்திலிருந்து வட்டிகொடுப்பார்கள். சேர்ந்ததொகையை மொத்தமாக வட்டியும் முதலுமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

9. சங்கத்தில் சேரும்போது இவ்வளவு தொகையாவது சேர்த்துவைப்பேன் என்று அந்தத் தொகையைப் பங்குத்தொகைகளாகச் செலுத்தவேண்டும்.

10. தொழிலாளிகள் பலர் சேர்ந்து தொழிலுக்கு வேண்டிய சாமான்களை மொத்தமாய்த் தருவித்துக்கொள்ளுவதற்கும், தாங்கள் செய்த சாமான்களை மொத்தமாய்ப் பெரிய வர்த்தகஸ்தானங்களுக்கு அனுப்புவதற்கும் சங்கம் ஏற்படுத்தலாம்.

11. ஊரிலுள்ள எல்லாருக்கும் அன்றுடகம் வேண்டிய அரிசி, உப்பு, புளி, துணி முதலிய சகல சாமான்களையும் நேராகவே தருவித்து ஜனங்களுக்கு நயமாய் விற்பதற்கும் சங்கம் ஸ்தாபிக்கலாம்.

12. பலபேர் ஒன்றுகூடித் தனித்தனியே வீடுகள் கட்டிக்கொள்ள விரும்பினால் அதற்கு வேண்டியபொருள் கடன்கொடுத்து வாங்குவதற்கும் ஐக்கிய நாணய கட்டட சங்கங்கள் உண்டு.

இவ்விதமாக ஜனங்களுக்குச் சகலவிதங்களிலும் உபயோகப்படக்கூடியதே ஐக்கிய நாணய சங்கமாம்.

சங்கத்தில் சேரவேண்டியவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கியமான குணம் வாக்குநாணயம். சொன்னசொல் தவறாமல் தாம் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளின்படி வாங்கின தொகைகளை ஒழுங்காய்ச் செலுத்திவந்தால் சங்கம் முன்னுக்குவரும். பலரும் பயன் அடையலாம்.

சங்கம் ஸ்தாபிப்பதற்கு அனுகூலமான ஏதுக்கள்:

1. ஒரு ஊர், அல்லது ஒரு ஊரிலுள்ள ஒரு ஜாதியார். ஒரே விதமான தொழிலாளிகள், மார்க்கத்தார், இவர்களுக்குச் சங்கம் ஏற்படுத்தலாம்.

2. ஒரு சங்கத்திற்குக் குறைந்தபக்ஷம் 20 பேர் வேண்டும்.

ஐக்கியநாணய சங்கங்கள் இருவகைப்படும் :

1. வரையறுக்கப்பட்ட சங்கங்கள்.
2. வரையறுக்கப்படாத சங்கங்கள்.

1. சங்கத்தில் சேருகிறவர்கள் எடுத்துக்கொள்ளும் பங்குத்தொகைகளின்பேரில் கணக்கிட்டுக் கடன்கொடுக்கப்படுவதே வரையறுக்கப்பட்ட சங்கமாம். இதிலுள்ள அங்கங்களின் பொறுப்பு அந்தந்த அங்கத்தவர் செலுத்தியிருக்கும் பங்குத்தொகை யளவுதான்.

2. சங்கத்தில் சேருகிறவர்களின் மொத்தம் ஆஸ்தியின்பேரில் கணக்கிட்டுக் கடன்கொடுக்கப்படுவதே வரையறுக்கப்படாத சங்கமாம். இதிலுள்ள அங்கங்களின் பொறுப்பு அந்தந்த அங்கத்தவருக்குள்ள சொத்தின் அளவாகும்.

ஒவ்வொருவருடைய பொறுப்பின்பேரில் எல்லாருக்கும், எல்லாருடைய பொறுப்பின்பேரில் ஒவ்வொருவருக்கும் கடன்கொடுப்பதே ஐக்கிய நாணய சங்க மூலக்கோட்பாடாம்.

ஐக்கிய நாணய சங்கம் வேண்டுமென விரும்பும் ஒரு கூட்டத்தார் 20 பேருக்குக் குறையாமல் சேர்ந்து ஐக்கியசங்க இலாக்கா உத்தியோகஸ்தருக்கு மனுச்செய்துகொண்டால் அவர்கள் வந்து சங்கத்தை ஸ்தாபிப்பார்கள்.

சங்கத்தை ஸ்தாபிப்பதுமாத்திரமே அவர்கள் செய்வார்களேயல்லாமல் மற்றச் சகல காரியங்களும் சங்கத்தைச் சேர்ந்திருக்கும் அங்கங்களாலேயே நடைபெறவேண்டும். அங்கங்கள் எல்லாரும் கூடித் தங்கள் காரியங்களை நடத்த ஒரு பஞ்சாயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். பஞ்சாயத்தாரில் ஒருவர் அக்கிராசனாதிபதி, மற்றவர் காரியதரிசி, பொக்கிஷதார், மற்றவர்கள் பஞ்சாயத்து அங்கங்கள்.

இவர்கள் கூடியிருந்து இன்னாருக்குக் கடன்கொடுக்கலாம், இவ்வளவு கொடுக்கலாம், இன்ன வாய்தாவுக்குக் கொடுக்கலாம், இன்ன ஆதாரத்தின்பேரில் கொடுக்கலாம், இன்னின்ன நிபந்தனைகளின் பேரில் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கவேண்டும். மொத்தம் சங்கத்திற்கு இவ்வளவு கடன் தேவை என்பதையும் இவர்களே கணக்கிட்டுச் சங்க இலாக்கா அசிஸ்டாண்டு ரிஜிஸ்தாருக்கு மனுச்செய்துகொள்ள அவர் ஏதாவது சென்டிரல் பாங்கிக்குச் சிபார்சு செய்வார். அவர் சிபார்சின்பேரில் பாங்கியிலிருந்து பணம் வரும்.

சங்கத்தின் நடவடிக்கைகள் சரிவர நடந்து வருகின்றனவா என்று பார்ப்பதற்கு ஐக்கிய நாணய சங்க இன்ஸ்பெக்டர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் வருஷம் ஒருமுறை இரண்டுமுறை வந்து கணக்குகளைப் பரிசோதித்துப் போவார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு இவ்விஷயத்தில் உதவிசெய்வதற்கென்று Y. M. C. A. சங்கத்தார் முன்வந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ சங்கங்களுக்குக் கடன்கொடுப்பதற்கென்று கிறிஸ்தவ சென்டிரல் பாங்கியொன்று சென்னை பிராட்வேயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருவாங்கூர் முதலிய இடங்களில் Y. M. C. A. செக்ரட்டேரிகள் இவ்வேலையைப் பார்த்துவருகிறார்கள்.

ஐக்கிய நாணய சங்கவிஷயமாய் உதவிவேண்டிய கிறிஸ்தவர்கள், மிஷனெரிமார், பாதிரிமார் முதலியவர்கள் இந்தச் சங்கவேலையை உற்சாகமாய் நடத்திவரும் Y. M. C. A. நேஷனல் செக்ரட்டேரி ஸ்ரீமான் சுவாமிதாஸ் அவர்களுக்கு எழுதி வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் விலாசம் : நெல்லூர் சுபேதார் பேட்டையிலிருக்கும் Y. M. C. A. நேஷனல் செக்ரட்டேரி ஸ்ரீமான் சுவாமிதாஸ் அவர்கள்.

இதுவரையும் நமது ராஜதானியில் கிட்டத்தட்ட 2000 சங்கங்கள் ஏற்பட்டு ஜனங்களுக்குப் பேருபகாரமாயிருக்கின்றன. இங்கு மங்கும் சில கிறிஸ்தவ சொசைட்டிகளும் இருக்கின்றன. கிறிஸ்தவர்கள் இவ்விஷயத்தில் ஏனோதானோவென்றிராமல் வேண்டிய உற்சாகம் எடுத்துக்கொள்வார்களாகவும்.

Short Commentary to Some of the Parables

By the Editor

இயேசுவானவர் உரைத்த சில உவமைகளுக்கு சுருக்கமான வியாக்கியானம்

2. THE TARES

கோதுமை நிலத்தில் களை

(மத். 13, 24–30 ; 36–43 வாசிக்கவும்.)

ஏஜமானன் நல்ல விதையை விதைத்தபிற்பாடு இராக்காலத்தில் விரோதி ஒருவன் வந்து இரகசியமாக நஞ்சுள்ள விதை விதைத்தான்.

அந்த களை முளைக்கும்போது, இதற்கும் கோதுமைக்கும் வித்தியாசம் அவ்வளவு தெரியாது, நாள் செல்லச்செல்லத் தெரியவரும். நிலத்தில் களை முளைத்திருக்கிற்தாக வேலைக்காரர் கவனித்தவுடனே, எஜமானனிடத்தில் வந்து சொன்னார்கள்.

இப்போது என்ன செய்கிறது! வேலைக்காரர்கள் சற்று ஆலோசித்து, 'நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா?' என்று கேட்டார்கள். அதற்கு எஜமானன், 'வேண்டாம்' என்றான். ஏனெனில், களையின்வேர் கோதுமையின் வேரோடு கலந்திருக்கும்; கோதுமையைக் கெடுக்காமல் களையை எடுக்கமுடியாது. ஆகையால் எஜமானன் மிக்க ஆலோசித்து, 'இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்' என்றான். வேலைக்காரர்கள் அப்படியே செய்தார்கள். அறுப்புக்காலத்தில் களைகளையெல்லாம் வேறாகவும் கோதுமையையெல்லாம் வேறாகவும் பிரித்துவைத்தார்கள். பிறகு களைக்கட்டுகளைச் சுட்டெரித்தார்கள், கோதுமையையோ களஞ்சியத்திலே சேர்த்தார்கள்.

இந்த உவமையின் கருத்து என்னவெனில்: நிலமென்பது உலகம், அறுப்புக்காலம் என்பது உலகத்தின் முடிவு.

கர்த்தருடைய நாள் எப்போ வருமோவென்று யூதர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த நாளிலே தம்முடைய ஜனத்தை இரட்சிக்கவும் சத்துருக்களை சிக்ஷிக்கவும் கர்த்தர் வருவார் என்று அவர்கள் நினைத்தார்கள். தாம் தெரிந்துகொண்ட ஜனத்தைக் கர்த்தர் காப்பாற்றுவார் என்பதைப்பற்றி சந்தேகம் அவர்களுக்கு இருந்ததில்லை. ரோமரையும் ஏரோது ராஜாவின் வம்சத்தையும் அழிக்க வருவாரே அல்லாமல் தமது ஜனத்தாரில் ஒருவரையும் அழிக்கமாட்டார் என்று எண்ணினார்கள்.

'தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்னும் புதுப் பிரசங்கத்தை அவர்கள் கேட்டவுடனே, கர்த்தருடைய நாள் இப்போது சீக்கிரம் வரப்போகிறது என்று சந்தோஷமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். 'தீர்ப்போ வரக்காணோம். நீதிமான்களுக்கு வரவேண்டிய அதிகாரம் இன்னும் சத்துருக்களுடைய கையில்தான் இருக்கிறதே! கர்த்தர் தமது ஜனத்தை எப்போ மீட்க வருவாரோ!' என்று நியங்கினார்கள்.

'இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்' என்று சொல்லுகிறார். இந்த யுகத்தில் பிரிவு ஆகிறதில்லை, இந்த யுகத்தின் முடிவிலே ஆகும். அப்போது ஆகப்போகிற பிரிவோ யூதர்களையும் அவர்களுடைய சத்துருக்களையும் பிரிக்கும் பிரிவல்ல; இராஜ்யத்தின் புத்திரர்களையும் பொல்லாங்கனுடைய புத்திரர்களையும் பிரிக்கும்

பிரிவேயர்ம். ஆகையினாலே யூதர்களுடைய எண்ணத்தின்படி எல்லா இஸ்ரவேலரும் உண்மையான இஸ்ரவேலர் அல்லர்; புற ஜாதியாருக்குள்ளேயும் இராஜ்யத்தின் புத்திரர் உண்டு.

இதைப்போலவே எல்லா கிறிஸ்தவர்களும் உண்மையான கிறிஸ்தவருமல்லர். சபையிலும் களை இருக்கிறதே.

உண்மையான கிறிஸ்தவர்களுடைய மனதிலேயும் களை காணப்படும்.

உலகமெல்லாம் அவருடைய ராஜாங்கத்துக்கு உரியது. சபையெல்லாம் அவருடைய நிலம். நமது மனதிலேயும் நல்ல விதைதான் விதைத்திருக்கிறார்.

அப்படியிருக்க எல்லாம் கலந்திருக்கிறதைக் காண்கிறோம். தீயதை எப்போது வெல்லுவாரோ? தீயோனுடைய அதிகாரமும் தீயருடைய அதிகாரமும் எப்போது நீங்கிவிடுமோ? அவருடைய ராஜ்யம் எப்போது வல்லமையோடு வருமோ? கவலைப்படவேண்டாம். கர்த்தர் தம்முடைய விதை மேற்கொள்ளச் செய்வார். அவருடைய இராஜ்யத்துக்கே ஜெயம் வரப்போகிறது. அவர் ஆரம்பித்ததை முடிப்பார். இயேசுவுக்கே ஜெயம்.

'Not Hearers Only'

By P. D. Eairaj, B.D.

'திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல'

ஒரு காலத்தில் ஒரு போதகர் தன் சபையில் இருபது வருஷ காலமாய் தன் பிரசங்கங்களைக் கேட்டுவந்த மனுஷன் ஒருவனைச் சந்திக்கப் புறப்பட்டார்.

இந்தச் சபையான் ஓர் நல்ல மனுஷன் என்று அந்தப் போதகர் எண்ணியிருந்தார். இவன் வாரந்தோறும் ஆலயத்துக்குப்போய் பிரசங்கவேளையில் உறங்காமல் சுறுசுறுப்பாய் உட்கார்ந்து வசனத்தைக் கவனிக்கிறவனும், தன் தலையை சில சமயங்களில் போதகருக்கு நேராக உயர்த்தியும் மறுசமயம் தாழ்த்தியும் வேறு சமயம் தன் கையைத் தலையில்வைத்து சிந்தனை பண்ணுகிறவனும், நெற்றியைச் சுளித்தும் கண்களைத் திறந்து எதோ ஓர் திசையில் தியானம்பண்ணுகிறவனுமாய் இருந்த அவனை அந்தப் போதகர் வாரந்தோறும் பீடத்திலிருந்து கவனித்ததால், இவன் வசனத்தைக் கேட்டே அதின் சாராம்

ஸத்தை உட்கொள்ளும் சிந்தனையோடிருக்கிறான் என்று நினைத்து, இவன் ஓர் நல்ல கிறிஸ்தவன் என்று இவர் மனதில் நிச்சயித்தார். இப்படியாக இருபது வருஷம் சென்றன. ஓர்நாள் இவன் வியாதிப் பட்டு, கடைசி நிமிஷ வேளையாயிற்றென்று எண்ணி இவன் பெண் சாதி போதகரை அழைக்க, இவரும் உடனே புறப்பட்டார். நல்லவன் என்ற எண்ணம் இவரிடத்தில் இருந்தமையால், சந்தோஷமாகவே சென்று, கடைசியாய் பரம பயணத்துக்குத் தக்க வார்த்தைகளைச் சொல்ல எத்தனிக்குமுன் இவன் போதகரைப் பார்த்து, 'ஐயா போதகரே!' என்றழைக்க, 'என்ன அப்பா!' என்று போதகரும் கேட்க உடனே 'ஐயா, நான் ஒரு பிரசங்கமாவது கேட்கவில்லை' யென்று மொழிந்தானும். அதற்குப் பிரதியுத்தரமாக போதகர், 'என்ன அப்பா, கடந்த இருபது வருஷமாய் ஆலயத்துக்கு வந்தாயே, ஒழுங்காய்க் கேட்டாயே, நானும் அப்படியே எண்ணியிருந்தேனே, என் இவ்விதமாய்க் கூறுகின்றாய்' என்று சொல்லி, இவனது மனவியைப் பார்த்து புத்திமாறாட்டமும் கொஞ்சமிருக்கிறாப்போல் தோன்றுகிறது என்று அவளிடம் சொல்ல, உடனே இவன் மறுபடியும் அவரைப் பார்த்து 'ஐயா, ஓர் பிரசங்கமும் என் காதில் படவேயில்லை. நான் கேட்கவேயில்லை. இது உண்மையே. நான் என் சொஸ்தபுத்தியில்தான் இதைச் சொல்லுகிறேன். திருவசனத்தைக் கேட்கவில்லையே' என்று புலம்பி படுக்கையில் புரண்டான். அப்போதும் போதகர் நம்பமுடியாதவராய் அதிசயித்து இவனைப் பார்த்து, 'பின்னை என்ன செய்துகொண்டிருந்தாய் பிரசங்கவேளையில், அப்பா' என்று சந்தேக முகத்துடன் கேட்க, இவன், 'ஐயா, தாங்கள் பிரசங்கம் ஆரம்பித்தவுடன் முந்தின வாரத்தில் நான் செய்த வியாபாரக் கணக்கையும் லாப நஷ்டத்தையும் வரிசையாய் மனதிலே கணக்குப் பார்த்துக்கொண்டிருப்பது வாடிக்கை, நீங்கள் "கடைசியாக" என்று பிரசங்கத்தில் சொன்னவுடன் வருகிற வாரக்கணக்கு ஜாபிதா மனதிலே போட்டுக்கொண்டே இருபது வருஷத்தையுங் கழித்துவிட்டேன். பிரசங்கம் கேட்கவில்லை, ஐயா' வென்று புலம்பிக்கொண்டே மரித்துவிட்டான். போதகர் பிரமித்து நின்றார்.

இவ்விதமாய்த் திருவசனத்தைக் கேட்கிறவர்களுக்கு இச்சம்பவம் ஓர் எச்சரிப்பன்றே!

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

17-ம் அத்தியாயம்

பவுல் தன் குமாரனாகிய தீமோத்தேயுவைக் காணல்

இதற்குச் சில நாட்களுக்குப் பின்பு, பவுல், பர்னபாவைப் பார்த்து 'வாரும், நாம் கர்த்தருடைய வார்த்தையை அறிவித்த ஒவ்வொரு பட்டணங்களுக்கும் போய், அவ்விடந்தினுள்ள சகோதரர் எப்படியிருக்கிறார்கள் என்று பார்ப்போம்' என்று சொன்னார்.

அதற்குப் பர்னபா 'சரி, அப்படியே செய்யலாம். நம்மோடு யாரைக் கூட்டிக்கொண்டு போகலாம்? என் இனத்தானாகிய யோவான் மாற்குவைக் கூட்டிக்கொண்டுபோகலாமா?' என்றான். இது பவுலினுடைய மனதுக்குப் பிடிக்கவில்லை.

'நாம் பம்பிலியா தேசத்தில் இருந்தபோது சுவிசேஷ பிரபல்ய சம்பந்தமான மோசங்களுக்குப் பயந்து நம்மைவிட்டு விலகிப்போன மனுஷன் இப்போது நமக்குக் கூட்டாளியாகக் கொண்டுபோவது எனக்குப் பிரியமில்லை' என்றார்.

யோவான் மாற்கு மிக்க கோழைத்தனம் உடையவனென்றும், எவ்வித உபத்திரவத்தையும் சகிக்க ஆயத்தமாயிருக்கும் குணம் இவனிடத்தில் இல்லை என்றும், பவுல் பர்னபாவைப் பார்த்துச் சொல்லும்போது பர்னபா விசனப்பட்டுக்கொள்ளாதபடி இதைச் சொல்வது மிகவும் அரிதே. சற்றே கோபகுணமுடைய பவுல் இதை சுருக்கெனச் சொல்லியிருப்பார். பர்னபாவோ மாற்குவின் குணத்தை ஒரே தடவையில் அறிந்துவிடுதல் முடியாதென்றும், இரண்டாம் தரம் அவனைப் பரீட்சை பார்க்கவேண்டுமென்றும் சொல்லியிருப்பார். இப்படிச் செய்கிறது பவுலுக்குப் பிரியமில்லை. மாற்கு தன்னைத் திரும்பவும் ஏமாற்றிவிடுவானென்று பவுல் பயந்தார். பவுல் நினைத்தது சரிதான் என்று நமக்குத் தெரிகிறது. கஷ்ட காலத்தில் தங்களைக் கைவிடக்கூடிய ஒரு மனுஷனை இவர்கள் தங்களோடு கூட்டிக்கொண்டு போகலாகாதே.

இது எப்படியாயினும் பவுலின் வார்த்தை பர்னபாவுக்கு அதிக கோபம் மூட்டியது. இதினிமித்தம் பர்னபாவுக்கும், அவனுடைய பழைய சிநேகிதனாகிய பவுலுக்கும் இருந்த சம்பந்தம் அற்றுப்போயிற்று. பர்னபா, அந்தியோகியாவிலே பவுலை விட்டுவிட்டுத் தன்

இனத்தாளுகிய யோவான் மாற்குவைக் கூட்டிக்கொண்டு தன் ஜென்ம தேசமாகிய சீப்புரு தீவிற்குச் சுவிசேஷ பிரசங்கம் செய்வ தற்குப் புறப்பட்டான்.

தம் முதலாம் சுவிசேஷ பிரயாணத்தில் தமது கூட்டாளியாக இருந்த பர்னபாவை விட்டுப்பிரிவது பவுலினுடைய மனதைப் புண் படுத்தினது. கல் எறியப்படுதல், காய்ச்சல், கள்ளர், முதலிய பல கஷ்டங்களை இவ்விருவரும் ஒருமிக்க அனுபவித்திருக்கிறார்கள். ஆறுகளினாலும், ரஸ்தாக்களினாலும், கடல்களினாலும் வருகிற துன் பங்களில் இவ்விருவரும் பங்கு பெற்றிருக்கிறார்கள். ஆகையால் பவுல், பர்னபாவை விட்டுப் பிரிகிறது இப்போது அவருக்கு மிகுந்த மனவேதனையாய் இருந்தது. ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி பவுல் நன்றாய் அறிந்திருந்தார். அதாவது யோவான் மாற்குவைப்போல கஷ்ட நஷ்டங்களுக்கு அஞ்சுகிற ஒருவனும் செய்யத்தகாத ஒரு பெரிய முயற்சியைத் தாம் இப்போது தொடங்குவதை அவர் அறிந் திருந்தார்.

பவுல் தம்மை ஒரு வீரனாக ஒருபோதும் நினைக்கவில்லை. ஆனால் முழுவதும் தேவனுடைய ராஜ்ய சம்பந்தமான விஷயங்களை நடத்து வதில் அவர் மிக்க கவலைப்பட்டு அவற்றையே நினைத்துக்கொண் டிருந்தபடியால் தமது சொந்த நலத்துக்குரிய காரியங்களை முழு வதும் மறந்துவிட்டார். மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களி லும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல் களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், பசியிலும், என்னைக் கர்த்தருடைய உத்தம ஊழியக்காரனுயிருக்கும் படிக்கு என்னை விளங்கப்பண்ணுகிறேன் என்று அவர் சொல்லியது உண்மையே.

ஆகவே தமது கூட்டாளியாகிய பர்னபாவை அவர் எவ்வளவு அதிகமாக நேசித்தாலும், எவ்வித லாப நஷ்டத்துக்கும் ஆயத்தமா யிராதவனென்று தாமறிந்திருந்த யோவான் மாற்குவைத் தம்முடன் கூட்டிக்கொண்டுபோக அவர் மனங்கொள்ளவில்லை.

ஆகவே பர்னபா அதிக கோபமும், புண்பட்ட மனதும் உடை யவனுய் யோவான் மாற்குவைக் கூட்டிக்கொண்டு, செலுக்கியா துறைமுகத்துக்குப் போய் கப்பல் ஏறி மேற்குமுகமாய்ப் பிரயாணம் செய்தார். பவுலும் பர்னபாவும் இதற்குப்பின் ஒருவரையொருவர் சந்தித்ததாக நாம் எங்கும் வாசிக்கிறதில்லை.

எருசலேம் சங்கத்திலிருந்து தாங்கள் திரும்பி வரும்பொழுது தன்னிடத்தில் அநேக விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொண்டுவந்த தன் சிநேகிதனுகிய சீலாவினிடத்திற்குப் பவுல் போய்ச் சேர்ந்தார்.

கலாத்தியா நாட்டிலுள்ள இந்த ரோம பட்டணங்களிலுள்ள கிறிஸ்தவ யூதர்கள் பவுல் புறஜாதியார் விஷயமாய் நடந்துகொண்டதை ஒப்புக் கொள்ளவில்லை. விருத்தசேதனமில்லாமல் புறஜாதியாரை மார்க் கத்தில் ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லிய பவுல் யாதொரு அதிகாரமும் அற்ற வீண்பேச்சுக்காரன் என்று எண்ணினார்கள். ஆனால் யாக்கோபினால் கையொப்பமிடப்பட்ட கடிதத்தை எரு சலேம் சபையிலிருந்து கொண்டுவந்த சீலாவைப்பற்றிக் குறை சொல்வது கூடாத காரியம். பவுலும், அவருடைய புதிய சிநேகித னுகிய சீலாவும் வடக்குமுகமாய்ப் பிரயாணம் பண்ணினார்கள். அவர்களை வழிவிட்டனுப்பும்படி சகோதரரில் சிலர் கொஞ்சதூரம் வந்தார்கள்.

அவர்கள் செல்லவேண்டிய பிரயாணம் அதிக நீண்டது. பல இடங்களில் அவர்கள் தங்கவேண்டியிருக்கும்; பல சிற்றூர்களை அவர்கள் தாண்டவேண்டும்; எரிகளைச் சுற்றிச் செல்லவேண்டும்; பெரிய மலைகளின்மேல் ஏறவேண்டும்; அசுன்ற சம பூமிகளைத் தளர்ந்த நடையாய்ச் செல்லவேண்டும். தங்கள் சாமான் பை, தண்ணீர்த் துருத்தி, எண்ணெய், பால் கட்டி, ஒலிவப்பழம், இருப் புச்சட்டி முதலிய சாப்பாட்டு சாமான்களையும் அங்கிகளையும் சுமந்து போகிறதற்காகக் கழுதைகளை அவர்கள் வாடகைக்கு அமர்த்தியிருக் கலாம். அவ்விடங்களிலிருந்த கள்ளர்களுக்குப் பயந்து கூட்டம் கூட்டமாகப் பயணம்பண்ணிய வியாபாரக் கூட்டத்தாரோடு சில சமயங்களில் இவர்கள் சேர்ந்துகொள்ளுவார்கள். சம பூமிகளி லிருந்து மலைப்பிரதேசங்களுக்குச் செல்லும் பாதைகள் சோர பய முள்ளதால் இப்படிப்பட்ட மலைநாடுகளில் அவர்கள் பிரயாணம் பண்ணும்பொழுது இவ்வாறு செய்வது அவசியமாயிற்று.

பவுலும் சீலாவும் கழுதைகளின்மேல் ஏறி சவாரி செய்யும் பொழுதும், அவற்றின் பக்கத்தே நடந்துசெல்லும்பொழுதும் ஒரு வரோடொருவர் பேசிக்கொண்டேபோனார்கள். தாங்கள் எதிர் நோக்கிச் சென்ற தர்சு பட்டணமாகிய தனது ஜெனன நகரத்தைப் பற்றி பவுல் அதிகப் பெருமையாயிருந்தார். தான் தர்சு பட்டணத் தில் பையனுயிருந்த காலத்தில் தன் ஜீவியத்தோடு சம்பந்தப்பட்ட கதைகளை சவுல் சீலாவுக்கு நிச்சயமாகவே சொல்லியிருப்பார். ஒரு நாள் சாயந்தரம் அவர்கள் வியாபாரக்கூட்டத்தார் தங்குகிற இடத் திற்கு வந்தபோது பவுல் அங்கு போடப்பட்டிருந்த கூடாரங்களை சீலாவுக்குக் காட்டினார். இக்கூடாரங்கள் மிகவும் பிரசித்திபெற்ற தர்சுநாட்டு வெள்ளாட்டுக் கடாக்களின் மயிரால் செய்யப்பட்டவை. பவுலினுடைய ஜென்மதேசமாகிய சிலிசியாவின் சமவெளியி

லிருந்து வந்தபடியால் இந்தத் தணிக்கு ரோமராஜ்யமெங்கும் சிலிசியம் என்று பெயர்.

கூடாரம் செய்யும் தொழில் பவுலுக்குத் தெரியுமென்பதை சீலா அறிவான். பவுல் அவனைப் பார்த்து 'நான் ஒரு பட்டணத்தில் பிரசங்க ஊழியத்துக்காகத் தங்கும்பொழுது எனது சொந்தத் தொழிலினால் நான் சம்பாதித்து ஜீவிக்க விரும்புகிறேன். ஜீவனுர்த்தத்தினிமித்தம் நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறேன் என்று ஒருவனும் அப்போது சொல்லமுடியாது' என்று சொன்னர்.

சீலாவும் பவுலும் பர்னபாவிஷயமான சண்டையைப்பற்றித் தர்க்கித்திருப்பார்கள். யோவான் மாற்குவைவிட சிறந்த குணசீலத்தை உடையவனும், அவனிலும் தைரியமுள்ளவனுமான ஒரு வாலிபன் தங்களோடு வழித்துணையாக வந்தால் எவ்வளவு நன்றாயிருக்குமென்று பேசிக்கொண்டார்கள்.

பவுல் சீலாவைப் பார்த்துச் சொல்லுகிறார்: 'அம்மலைகளுக்கு அப்பாலே, லீஸ்திராபட்டணத்திலே தீமோத்தேயு என்னும் பெயர் கொண்ட ஒரு வாலிபன் இருக்கிறான். நான் அப்பட்டணத்திலிருந்தபோது அவன் கிறிஸ்துவுக்கு சீஷனானன். அவன் தகப்பன் ஒரு கிரேக்கன். அவன் தாய் ஒரு யூத ஸ்திரீ. யோவான் மாற்குவுக்குப் பதிலாக இவன் ஒரு நல்ல துணையாய் இருப்பானென்று நம்புகிறேன்' என்றார்.

இவ்வாறு இவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டே பட்டணங்களுக்கு வந்தார்கள். பர்னபா தன்னை அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டுபோனதற்கு முன்னே பவுல் இப்பட்டணங்களில்தான் பிரசங்கம்பண்ணி உபதேசித்துவந்தார். சிலிசியாநாட்டுப் பட்டணங்களின் தெருக்களில் பவுல் வந்தபோது அங்குள்ள கிறிஸ்தவ ஜனங்கள் தங்கள் பழைய சிநேகிதனாகிய இவரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

(இன்னும் வரும்)

C. L. S. PRESS, MADRAS—1919

8-MAY 1919

No. ~~155~~ 186 மே 1919

வேதியர் விளக்கு

Short Stories

By V. Samuel Ponniah

அவருடைய உபகாரங்களை மறவாதே

ஒரு கிராமத்தில் ஒரு ஏழை விதவையிருந்தாள். அவளுக்கு ஒரே ஒரு மகனிருந்தான். அவனை கிராமப் பள்ளிக்கூடத்திலாவது அனுப்பிப் படிப்பிக்கக்கூடாத கஷ்டங்களை அனுபவித்து அன்றுடக ஜீவனத்துக்கும் அதிகமாய் வருந்தினுன். அடுத்த பட்டணத்தில் தன் பிள்ளையை ஏதாவதொரு தொழிலிலமர்த்திவைக்கலாமென்ற எண்ணத்துடன் அழைத்துப்போய் அங்குள்ள ஒரு சிறு வியாபாரிக்குத் தன் குறைகளைச் சொல்ல, அவன் அவள் எளிமையைக் கேட்டு மனமிறங்கி அவனைத் தன் பிள்ளைகளிலொருவனைப் போலேற்றுக் கொண்டு அவளுக்கும் கொஞ்சம் உதவிசெய்து பையனை வேலையில் பழக்கிவந்தான். பண்டிகைக்குப் பிள்ளைகளுக்கு உடைகளைக் கொடுத்தது போலவே இவனுக்கும் வாங்கிக்கொடுத்து அவனிருதயத்தை மகிழச்செய்தான். தன் தாயாரும் பார்த்து நன்றிசெலுத்த வேண்டுமென்று ஒரு நாளுத்தரவு பெற்றுத்தன் தாயாரிடம் போனன். தானும் தன் பிள்ளையும் வியாபாரிக்கு நன்றிசெலுத்துவதை மறந்து தன் பிள்ளையின் அந்தஸ்துக்கு இது ஏற்ற இடமல்ல என்றெண்ணி வேறு வியாபாரியிடம் கொண்டுபோய் விட்டுவிட்டாள். பையன் திரும்பிவராததைக் கண்ட வியாபாரி பையனுக்கு என்ன ஆபத்தோ என்று தேடிவந்து பார்த்து நடந்த சம்பவங்களைக் கண்டு திக்கத்துடன் திரும்பிவிட்டான். தேவன் நமக்குக் கொடுத்த நன்மைகளை மறந்து எத்தனை தடவைகளில் அவர் கொடுத்த ஈவுகளை பிசாசின் சேவைக்குபயோகப்படுத்தி யிருக்கிறோம்.

நீ பூரண சற்குணனுயிருக்க விரும்பினுல்

ஒரு கிராமத்திலுள்ள பிரபு தான் சராசரி கிறிஸ்தவனுக ஜீவியத்தைக் குறித்து மேன்மை பாராட்டிவந்தான். அந்த ஊரிலிருந்த பக்தியுள்ள தோட்டக்காரன் அவரை உணர்த்தும்படி சமயம் பார்த்

துக்கொண்டிருந்தான். பிரபுவின் தோட்டத்தை வேலியடைக்க இத்தோட்டக்காரனுக்கு உத்தரவானபோது இவரை யுணர்த்த தகுதி யான சமயமிதுவே என்றறிந்து வேலியை வெகு ஜாக்கிரதையாக அடைத்து சில இடங்களில் மாத்திரம் வேலி சரியாகக் கட்டாமல் வைத்தான். பிரபு தோட்டத்தைப் பார்க்கவந்தபோது: ஐயா! வேலி சில இடங்களில்தான் பலவீனமாயிருக்கிறது. ஆனால், சராசரி நல்ல வேலிதான் என்றான். பிரபு அவனுடைய மதிவீனத்தைக்குறித் துப் பேசினபோது: ஐயா! கிறிஸ்தவ ஜீவியத்தில் பூரணப்படுவதும் அப்படியே அவசியம். சராசரி நல்லவனாய் ஜீவிப்பது போதாது என்றான்.

உன் நெஞ்சை எனக்குத் தா

ஒரு சீனன் தன் கடியாரம் கெட்டுப்போனபடியால் கடியார ஷாப்பில் அதைச் சரிப்படுத்திக்கொள்ள எண்ணங்கொண்டு தன் கடி யாரத்திலுள்ள இரண்டு கைமுள்ளுகளையும் கழற்றி பத்திரமாய் கடி தத்தில் மடித்துக்கொண்டுபோய் ஷாப்பில் கொடுத்தான். அவர்கள் காதெத்தைத் திறந்து இரண்டு முள்ளுகள் மாத்திரமிருக்கக் கண்டு சங்க தியை விசாரித்தார்கள். ஐயா! என் கடியாரம் கெட்டுப்போய்விட்டது இந்த இரண்டு முள்ளுகளும் அசையாதபடியால் எனக்கு மணி தெரிய வில்லை. ஆகையால் இது சரியாகப் போகும்படி நீங்கள் இதை சரிப்படுத்தவேண்டும் என்றான். அதற்கு அவர்கள் கடியாரத்தைக் கொண்டுவந்தால் அதைப் பழுதுபார்ப்போம். கைகளும் சரியாக மணி காட்டும். என்ன ஐயா! முள்ளுகள் ஒடாமலிருக்கக் கடி யாரத்தை என் தொடவேண்டுமென்று சொல்லி வெறுப்புடன் திரும்பிவிட்டான். தங்கள் ஜீவியத்தைச் சரிப்படுத்த கர்த்தர் கேட் கும் இருதயத்தைத் தா: எத்தனை பேர்கள் மனமற்றவர்களாயிருக்கிறார் கள். அவர் இருதயத்தை சுத்தம் செய்தால் நமது காரியங்கள் எல் லாம் சரியாகப் போம் என்பதை யுணராதிருக்கிறார்கள்.

Hints to the Preachers

By P. D. Durairaj, B.D.

1 Chapter.

வேதியர்க்கோர் வார்த்தை

சுவிசேஷத்தை யறிவிக்க எத்தனிக்கும் சுவிசேஷகர்கள், சில உதாரணங்கள், சம்பவங்கள், சரித்திரங்கள், கதைகள் வாயிலாக சுவி

சேஷத்தை யூட்ட விரும்புவது சரியே. இவ்விதமாய்த்தான் சுவி சேஷவேலை எங்கும் செய்யப்பட்டு வருகிறது. கதைகளை நீட்டி, சுவிசேஷத்தைச் சுருக்கி, கதையைத் தவிர கதையின்மூலமாய்ப் போதிக்கவேண்டிய சத்தியங்கள் மறைந்து சுவிசேஷம் மறைபொரு ளாகவே திரும்பிவிடுமாயின், அது சுவிசேஷகனின் குறைவே. இதைக்கண்டு நாம் துக்கிக்கின்றோம். இவ்விதமான ஆயாசம் பகுதி பகுதியாய் சுவிசேஷகாரனைக் கூட்டி கூடாரப் பிரசங்கங்கள் தெருப் பிரசங்கங்கள் செய்தவர்களின் அனுபவத்தில் ஸ்பஷ்டமாய் விளங் கும். இவ்விதக்குறைவுகளைப்பற்றி நாம் இங்கு எடுத்துரைக்காமல், இவைகளிலும் பெரிய குறைவுகளாயும், நாம் செய்யும் பிரசங்கங் களுக்கு இடையில் தடையுண்டாக்குகின்றனவாயும், நாம் எவ்வளவு அரும்பிரயாசையெடுத்து வெள்ளென எழும்பியும் ஐந்தாறு மைல் நடந்தும் வெயிலிலோ அல்லது மழையிலோ அடிபட்டும் நம்முன் னால் நின்று சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்கும்படி கூடிநின்றவர் சிரித்து வேடிக்கைபண்ணி இவ்விதமாய்ப் பயனற்றுப்போகும்படி செய்யக்கூடியவைகளுமாகிய சில வல்லகுறைவுகளைப்பற்றியே நாம் இங்கு எடுத்துரைப்போம். இக்குறைவுகளெவையென்றால், இந்து மார்க்கங்களுக்குரிய பாடல்கள், சுலோகங்கள் முதலியவற்றைத் தப் பிதமாய்க் கருத்துரைத்து, சுவிசேஷகனிடத்திற் கிசைய மேற்படி சுலோகத்திற்கும் சுவிசேஷத்திற்கும் ஒவ்வாத வியாக்கியானங் கூறு வதும் இதைப்போன்ற வேறனேகக் குற்றங்களுமாம். இதைப்பற்றி சற்றுத்தெளிவாய் இனிமேல் பார்ப்போம். பழமொழியையோ இந்து மார்க்கப்பாடல்களையோ குறளில் சொல்லப்பட்ட நீதிவாக்கியங் களையோ யெடுத்து அவைகள் மூலமாய் சுவிசேஷத்தைத் தக்கவித மாய் நாம் சொல்லக்கூடுமானால் சந்தோஷமே. அப்படியில்லாமல் அவைகளின் கருத்தை மாற்றி சுவிசேஷகனுக்கிசைய கருத்துரைக்க ஆரம்பிப்போமானால் அது தர்மபமே. படித்த இந்துக்கள் தங்கள் சாஸ்திரங்களைத் தவறாய் வியாக்கியானிக்கிறவர்களைப்பற்றி என்ன நினைப்பார்கள்? கிறிஸ்தவர்கள் ஞானம் வீண்அஞ்ஞானம் என்றும் அஞ்ஞானிகள் யார்! கிறிஸ்தவர்களே அஞ்ஞானிகள் என்று சொல்லி வாதுசெய்தும் இவ்விதமாய்ப் பிரசங்கங்கள் முழுவதையுங் கெடுத்து தாறுமாறாய்ப் பேசி மதிப்புங் கெட்டுப்போகிறதற்கு நாமே காரணமாயிருத்தலாகாது. மேற்படி குற்றங்களுக்கு நாம் நீங்கலாக வேண்டுமென்ற அவா, சுவிசேஷகனுக்கு நமக்குமுண்டு. ஆகை யால், ஆண்டவன் பாதம்பணிந்து அவருடைய சேவையில் குற்றமேற் படாதபடி அவருழியுஞ் செய்ய கடமைப்பட்டிருக்கின்றோமென் பதை யுணர்ந்து அவித உணர்ச்சி முன்னின்று இழுக்க, பதவத்

சுவிசேஷம் சுத்தமாய் அருளப்பட வேண்டுமென்கிற வாஞ்சை பின்னின்று உதைக்க, நாம் எம்மனுபவத்தில் தவறு என்று நிச்சயித்துக் கொண்ட குற்றங்களனேகத்தில் சிலவற்றை மாத்திரம் உதாரணத்துக்காக எடுத்துரைக்கின்றோம். இவைகள் அனேகவிடங்களில் சாதாரணமாய் எவராலும் தப்பிதமாய்க் கூறப்பட்டு வருகின்றவைகளேயே எடுத்துரைக்கின்றோம். உதாரணங்களாக,

அருளில்லார்க் கவ்வுலகமில்லை,
பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை.

இந்தக் கருத்தையுடைய சுலோகம் திருக்குறளில் 'அருளுடமை' என்ற அதிகாரத்தில் காணப்படும்.

'அருளில்லார்க் கவ்வுலகமில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாதியாங்கு'—துறவறம்: 25 Ch. 7th Stanza.

இந்தச் சுலோகம் கிறிஸ்தவ ஊழியர்கள் வாயில் நன்றாய் ஊறியுள்ள சுலோகம். அருத்தம் இதற்கு சுளுவாய் உரைக்கின்றார்கள். வெகு சாமர்த்தியமாய்க் கிறிஸ்துமார்க்கப் போதனையை இதற்குள் இழைக்கின்றார்கள். வியாக்கியானம் எப்படியென்றால்: பொருள், பணம், செல்வம், ஐசுவரியமுள்ளவனைத்தான் மனுஷர் கனம் பண்ணுகின்றார்கள். பணக்காரனுக்கு பல திக்கிலும் பெருமை; இவர்களே பெரியவர்கள் என்று கொண்டாடப்பட்டவர்கள். இவர்களால் பத்துகாரியம் ஆகும். 'பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே'—பணக்காரனுக்குத்தான் இவ்வுலகம், இவ்வுலகத்தின் சந்தோஷம்—என்று நீட்டியுரைத்து, அப்படியே 'அருள்' அதாவது கடவுளின் அருளில்லாதவர்க்கு அவ்வுலகமில்லை; மோக்ஷமில்லை. மோக்ஷம் கடவுளின் கிருபையைப் பெற்றவரின் காணியாட்சி. ஆகையால் கடவுள் கிருபையே மனுஷன் பெறவேண்டிய பெரும் பேறு. அந்தக் கிருபை, கிருபையும் சத்தியமும் நிறைந்தவராகிய இயேசுகிறிஸ்துவால் மாத்திரமுண்டாகுமென்று முடிக்கின்றார்கள். அறியாதவர்கள் மத்தியில் இவ்விதமாய் சொல்லிவிட்டால், 'ஊமையனுக்கு கொண்னவாயன் சண்டப்பிரசண்டம்' என்பதை ஒக்கும். இவர்களது திறமை சாமர்த்தியமே. இத்திறமையுடன் மெய்யறிவுங் கூடினால் எவ்வளவோ நேர்த்தி. இங்கு சொன்ன சுலோகத்தின் வியாக்கியில் தவறு எதுவென்றால், முக்கியமான பதமாகிய 'அருள்' என்ற பதத்திற்கு கருத்து 'கிருபை' என்று உரைப்பதில், 'அருள்' என்றால் 'கிருபை' யன்று. திருவள்ளுவர் உபயோகித்த இப்பதத்தையும் இச்செய்யுள் வருகின்ற அதிகாரத்தையுங் கவனிப்போம்! பத்துச் செய்யுட்களில் இது ஒன்று. பத்

தும் ஒருபொருளையே குறிக்கும். கொலையைத் தவிர்த்து, புலால் தின்பதைவிட்டு மிருகங்களைச் சித்திரவதை செய்வதாகிய கருணையற்ற கருமத்தைச் செய்யாது, தயை காண்பிக்கவேணும் என்ற கருத்தையடக்கி 'அருள்' என்றால் மனுஷர் மிருகங்களுக்குக் காண்பிக்கவேண்டிய தாக்ஷிணியம் என்ற கருத்தோடு பாடியிருத்தலையியாமையே மேற்படி குற்றத்துக்குக் காரணம். இக்கருத்து யறியாத இந்துக்களிருந்தால் அவர்களால் கஷ்டம் ஒன்றுமில்லை. குறளையறிந்தவனிருந்தாலோ, நமது அறிவீனத்தைப் பகிரங்கமாக்காமலிருப்பனோ? நமது குறைவைப் பகிரங்கப்படுத்த, அதற்கு நாமிணங்காதவாய் அவன்மேல் வீண்குற்றம் கூறிக்கொண்டு வருவதுதான் பலன், வேறுபலன் கிடையாது. ஆகையால் வேதியர் இந்தச் சுலோகத்தின் பொருளை கிரகித்துக்கொள்வார்களாக!

b. இரண்டாவது, வேறொரு செய்யுளையும் அதையும் எப்படி தப்பர்த்தம் பண்ணுகின்றார்களென்பதையுங் கவனிப்போம்.

வானின்றுலகம் வழங்கிவருதலாற்
றானமிழ்தமென்றுணர்ந் பாற்று.
2–ம் அதிகாரம். முதலாம் செய்யுள்—குறள்.

இதன் கருத்து: மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையுடைத்து: இச்செய்யுள் 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தில் மழையின் விசேஷத்தைக் குறிக்கும் செய்யுளாயுளது. இதிலேயும் சுவிசேஷகர்கள் கிறிஸ்துவை சாமர்த்தியமாய் நுழைக்கும் விந்தையே பெரியவிந்தை. 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' தெளிவாயுள்ள இக்கருத்துக்கு வித்தியாசமாய்க் கருத்துரைக்கப் புகுவதுவிட்ட சனியனே வருந்தியழைத்தாற்போலாயது. இவர்கள் கூறும் கருத்து எதுவென்றால் மழைக்குப்பதிலாய் கிறிஸ்துவென்று அர்த்தங்கூறி கிறிஸ்து இடையறாது நிற்ப, உலகம் நிலைபெற்று வருமாயின் கிறிஸ்துதான் இம்மானிட ஜென்மத்திற்கு அமிழ்தம் என்று உரைத்து போகின்றார்கள். இவ்விதமாக, தகாதவிதமாய் பாடங்களே உபயோகிப்பானேன்? பாடல்களே நீக்கி நோய்க் கிறிஸ்து உலகத்திற்கு அமுதமென்றுரைத்தால் எவ்வளவோ மேல்.

c. மூன்றாவதாக, தாயுமானவர் பாடல்களில் ஒன்றை உதாரணத்திற்காகவும் மாதிரியாகவும் எடுத்துரைப்போம்:

'அன்பைப்பெருக்கி எனதாருயிரைக் காக்கவந்த
இன்பப்பெருக்கே இறையே பராபரமே.'

இச்செய்யுள் தாயுமானவரின் பாடல்களில் 'பராபரக்கண்ணி'யிலு

ளது. கிறிஸ்தவ பிரசங்கிமார் இதை வியாக்கியானஞ்செய்வதும் வேடிக்கையென்றால், மற்றொருபக்கத்தில் இது கிறிஸ்துவின் அன்பைக்குறிக்கும் முன்னடையாளச் செய்யுளாக்குமென்பது பெரிய தணிகாமாம். பழைய ஏற்பாட்டில் எவ்வாறு சிற்சில வசனங்கள் மேசியாவுக்கு முன்னடையாளமாயிருக்கின்றனவோ, அவ்வாறே கி.பி. 19–ம் நூற்றாண்டிலிருந்தும், தாயுமானவர் கிறிஸ்துவையறிய இடம் பெறுமலே கிறிஸ்துவின் அன்பைப்பற்றி முன்னறிவிப்பாகவே சொல்லிவிட்டனர் என்றும் சாதிக்கின்றனர். இவர்கள் வியாக்கியானஞ் சொல்லுவது எப்படி என்றால், அன்பு ஏராளமாய்ப் பெருகி, அதாவது, தன்னிடத்தில் அன்பை ஏராளமாய் உடையவராகி, என்னருமை ஜீவனைக் காக்கும்படியாக, பூலோகத்திற்கு வந்த இன்பப் பெருக்கே, இறையே பராபரமே என்று பிரசங்கம்செய்ய நாம் கேட்டும் இரண்டொருவிடங்களில் இந்தக்கருத்து தாயுமானவருக்கு முற்றும் விரோதம் என்று எதிர்த்து வாதுபண்ணி சுவிசேஷ வேலைக்குக் குந்தகம் ஏற்பட்டதை நாம் கண்டுமிருக்கிறோம். இவ்விதக் கருத்து சரியென்று நிரூபிக்கப்பட்டாற்போலுரைப்பதற்குக் காரணம் கிறிஸ்து இந்துமார்க்கத்தின் பூன்மவாஞ்சையை நிறைவேற்றுகிறவர் என்று 'பசுமரத்தாணிபோல்' அறையவேண்டுமென்கிற வாஞ்சை சுவிசேஷகர்களுக் குண்டென்பது நமது தணிபு. இவ்வித வாஞ்சையைக்குறித்து நாம் ஒர்பக்கம் பிரமானந்தம் கொண்டாலும் இடங்கொடாதவிடத்தில் 'சம்மட்டியடி' போல் கிறிஸ்துவை நுழைக்கப் பிரயாசப்படுஞ் சிரமத்தைக்குறித்து நாம் வியசனிக்கின்றோம். தாயுமானவர் கருத்து எதுவாமெனில்: ஈசுவரன் பக்தனுள்ளத்தில் அன்பைப்பெருக்கி பக்தனிடத்தில் கடவுளாலே பெருகின அன்பின் விசேஷத்தால் அவனது ஆருயிர் உய்வதற்குக் காரணமாயிருந்த இன்பப்பெருக்கே இறையே பராபரமே என்பதாம். இவரது கருத்துக்கும் கிறிஸ்துமார்க்கப்போதனைக்கும் வித்தியாசம் உண்டு. எப்படியெனின், கடவுள் மனிதன்பேரிலுள்ள அன்பால் இயேசு கிறிஸ்துவை யனுப்பி மனிதனை மீட்கச் சித்தங்கொண்டார். அன்பு கடவுளுடையது. மனிதர்பேரில் ஒடியுள்ளது. மீட்புக்குக் காரணம் அவரது அன்பே. அன்பு உருவெடுத்து மனிதனைத் தடுத்தாட்கொண்டது. தாயுமானவர் கருத்தோ—பக்தனிடத்தில் ஈசுவர அன்பைப் பெருக்கி அன்பு அவனிடத்தில் பெருகினதால், பரிபக்குவமடையச் செய்து தடுத்தாட்கொண்டாற்போல் இவனை மீட்டுக்கொண்ட வகையைக்குறிக்கும். இங்கே, அன்பு பெருகினது பக்தனுடைய உள்ளத்தில். இவனுள்ளத்தில் அன்பைப் பெருக்கினது கடவுள். இவன் உய்வதற்குக் காரணம் இவனது அன்பே. இந்த அன்பு கடவுள்பே

ரில் ஒடியது. 'பெருக்கி' என்ற பதத்தையே நீர்க்கயோசித்தால், அது என் பிறவினையிலுள்ளது என்று நன்றாய் விளங்குவதுமல்லாமல் தாயுமானவருடைய கருத்து என்று நாம் எடுத்துரைத்ததற்கும் சான்றாகும். இதை நாம் அறிந்துகொள்ளாமல், 'இங்கு மங்கும் நாம் சிலபொறுக்கு வசனங்களை மனப்பாடஞ்செய்து 'சொன்னதையே சொல்லுங் கிளிப்பிள்ளைபோல' பேசுவோமானால், வெகு சீக்கிரம் நம்மறிவீனத்தைப் பிரசித்தப்படுத்துவோமென்பதற்கு ஐயமுண்டோ? இவ்விதமாய் நாம் முகவுரையாக எடுத்துச்சொல்லும் பாடல்களைச் சரியாய் வியாக்கியானஞ் செய்வதற்குத் தக்கவழியைக் கையாடவேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொள்வது கர்த்தருடைய ஊழியத்திற்குப் பிரயோசனமும் அவசியமுமாகும்.

(இன்னும் வரும்.)

Outline to a Study of St. Paul's First Epistle to the Thessolonians

By the Rev. J. Andersen

பவுல், தெசலோனிக்கே சபையாருக்கு எழுதிய முதல் நிருபத்தின் பொருட் குறிப்பு

A. சபை ஸ்தாபகம். (அ. நட, 17, 1 to 9)

இதைப் படித்து அறியவேண்டியவை:

1. ஸ்தலம். 2. ஜனம். 3. பவுல்செய்த பணிவிடை. இவற்றின் விவரம்; இடம்—விதம்—காலம்—பலன்.

B. இந்நிருப விசேஷ விவரம்.

1. எழுதின காலம்.

2. எழுதின கருத்து.

(1) தனக்கும் சபைக்குமுள்ள பரஸ்பர நட்பைக்காட்டி ஐக்கியத்தைப் பலப்படுத்தவும்.

(2) உபத்திரவ காலத்தில் சபையை உற்சாகப்படுத்தி தைரியப்படுத்தவும்.

(3) சபைக்குற்ற குறைகளை நீக்கி நிறைவாக்கவும்.

3. படிப்போர்க்குப் பலன்.

பவுல் கொண்ட கருத்தை இந்நிருபத்தில் நிறைவேற்றினவிதத்தைப் படித்து ஆராய்ச்சிசெய்கிற நாம், இதர மதஸ்தர்களுக்குள்

ளும், சபையாருக்குள்ளும் செய்யவேண்டிய பணிவிடை பண்ண வேண்டிய போதனை சாதனை, பாராட்டவேண்டிய குணசீலங்கள் இன்னதென்பதும், பூர்வீகத்தில் அஞ்ஞான இருளிலிருந்து நேராக கிறிஸ்தவ மார்க்கம் சேர்ந்த சபையார் கொண்ட எண்ணங்களும் கொள்கைகளும் நடந்த நடக்கைகளும் கிறிஸ்தவ மார்க்க பிரபல்லியத்திற்காகப் பண்ணின பிரயத்தினங்களும், போராட்டங்களும், பட்ட கஷ்டங்களும், அவர்களுக்குள்ளிருந்த குறைவு நிறைவுகள் இன்னதென்பதும் நாம் படித்து அறியலாம்.

C. இந்நிருபத்திலடங்கிய பொருட் சுருக்கம்.

I. அதி. 1—3. பவுல் தெசலோனிக்கே பட்டணத்திலிருந்தபோது செய்த போதனையும், காட்டிய சாதனையும், அதனால் விளங்கின தெய்வ வல்லமையும், சபைக்குண்டான பெரும்பலனும், பிறகு அவர் பாராட்டின அன்பும் எடுத்துக்கொண்ட சிரமமும், தற்போது கொண்டுள்ள கவலையும் கரிசனையும்.

அதி. 1. 1 வாழ்த்துதல்.

2—4; சபை நிலைமைக்காக ஸ்தோத்திரமும் பிரார்த்தனையும். அந்நிலைமை எத்தன்மையது?

5 பவுல் சபையில் போதனையும் சாதனையும் இச்சிறப்பின் உயர்வை கவனிக்கவும் 3-ம் வசனத்திற்கும் 5-ம் வசனத்திற்கு முள்ள சம்பந்தம் என்ன?

6—10. அப்பணிவிடையின் பலன்.
ஆதியில் வ. 6—என்ன விசேஷம்?
இடையில் வ. 7—பலனின் சுருக்கம் 8—10. அதின் விஸ்தாரம்.
குறிப்பு. எவரை அனுசரிப்பதாக, எவருக்கு மாதிரியாக, எல்வளவுதூரம் தொனித்ததாக, அவர்களின் முன்னிலை, தற்கால நிலை வருங்கால நிலை, என்ன?

அதி 2. 1—12. முன்னே 1. 5-ல்; உள்ள சுருங்கச் சொன்ன போதனை சாதனைகளை இதில் விரித்து விளக்குகிறார். இதில் தன்மனதிலுள்ளவைகளை எல்லாம் தாராளமாய் எடுத்துரைப்பதைக் கவனிக்க.

1—2. பணிவிடையின் ஆரம்பம்—எப்படி?

3—6. இதைச் செய்வதில், தாம் கொண்ட நேர்மையும், சுத்தமுமான எண்ணங்கள்.

அவை எவ்வகையது? கொண்டவைகள், நீக்கினவைகள், எவை?

7—12. சபையாரிடத்துக்காட்டிய நட்பு.
தாய்போல 7—10: எதில் தாய்போல? எவ்வகை இலக்ஷணங்கள்.
தகப்பன்போல 11—12. எப்படி? எந்த மூன்று சொற்கள் இதைக் குறிக்கின்றது.

அதி 2. 13—16. முன்னே 1. 6-ல் உள்ள, சுருங்கச்சொன்ன போதனைசாதனைகளை இதில் விரித்து விளக்குகிறார். (1 முதல் 12 வரைக்கும், பவுலைப்பற்றியவைகளும் 13 முதல் 16 வரையில் சபையைப்பற்றியவைகளும்.)
கவனிக்கவும். தெய்வச்சொல்—தெய்வச்செயல்—தெய்வச்சத்துருக்கள், எவை?

அதி 2. 17-3. 13. குருவின் சபாபிமானம்:—உபத்திரவங்களால் சோதிக்கப்படுகிற சபையைப்பற்றிப் போதகர் கொள்ளுகிற கவலையும் சகாயம் செய்ய எடுக்கும் சிரமமும்.
(கேள்வி 2. 1-12 எக்காலத்தில்? 2. 17-3. 13. எக்காலத்தில்?)

17—18. மன உருக்கமும் ஸ்காயம் செய்ய பிரயத்தினமுமுள்ள நட்பு. தடை என்ன?

19—20. சபையாரை அருமையாக எண்ணி மேன்மை பாராட்டுகிற நட்பு. எப்போது? எங்கு?

3. 1—5. சபையாரைப்பற்றி விசாரிக்கிற நட்பு.
அதற்குக் காரணங்கள் எவை?

6—10. சபையாரின் சிறந்த நிலைமையையறிந்து களிகூருகிற நட்பு.
இந்நிருபம் எழுதினசந்தர்ப்பம் என்ன?
சபையின் நிலைமை எவ்வாறிருந்தது?

11—13. சபைக்காகப் பிரார்த்தனை செய்கிற நட்பு.
தற்காலத்தில் பவுல் வேண்டிக்கொண்டவை எவை?
சபையாரடைய வேண்டிய இலக்கு எது? வருங்காலத்தில் வரப்போகிற சம்பவம் என்ன?

II. அதி 4—5. பவுல் தற்காலத்தில் சபையாருக்கு இந்நிருபத்தில் எழுதுகிற நற்போதகங்கள்.
கவனிக்கவும். நாம் படித்தபடியே சென்றகாலத்

தில் செய்தபோதனை சாதனைகளின் இலக்ஷணங்கள் என்ன? தற்காலத்தில், எடுத்துக்கொண்ட கவலைகளும் கரிசனைகளும் எவை? வருங்காலத்தைப் பற்றிய போதகத்தின் விசேஷங்கள் என்ன?

4. 1—12. சபையார் கைக்கொள்ளவேண்டிய பரிசுத்த நிலைக்கான போதகம்.

1—2. பரிசுத்த நடக்கைக்கேற்ற பொது போதகம்.
இந்நடக்கைக்கு முக்கிய பிரமாணம் என்ன?

3—5. கற்பு நிலைக்கானது
6—8. நீதி நிலைக்கானது
} இவைகளில் நினைத்து நிற்க முக்கிய முகாந்திரங்கள் எவை?

9—10. சகோதர சிநேக நிலைக்கானது.
இந்நிருபத்தில் இப்பொருளைக்குறித்து எழுதின வைகள் எவை? அதின் அருமையும், அவசியமும், என்ன?

11—12. உலக ஜீவிய நிலைக்கானது.
இதில் குறிக்கப்பட்ட குறைவுகள் என்ன?
2 தெச. 3. 9–12 ஒப்பிட்டுப்பார்க்க.

4. 13—5. 11. மரித்த விசுவாசிகளுடைய நிலை இன்னதென்பதும் இயேசுகிறிஸ்து வருகைக்கென்று சபையார் நிலைத்து நிற்கவேண்டிய நிலை இன்னதென்பதையும் போதித்தல்.
இவ்விஷயத்தைப்பற்றிப் போதிக்க நேர்ந்த முகாந்திரங்கள் எவை?

13—18. இயேசுகிறிஸ்து, வரும்போது மரித்தவர்கட்கும் உயிரோடிருப்பவர்கட்கும் சம்பவிக்கும் சமபவங்கள்.
கவனிக்கவும். அவர் வருகையின்மாதிரி — அவர் செய்யும் கிரியைகள் — இவற்றைப்பற்றி பவுல் கொண்ட நம்பிக்கை.
(1 கொரி. 15. 51–53; வெளி. 11, 15 ஒப்பிட்டுப் பார்க்க.)

5. 1—11. இயேசுகிறிஸ்துவின் வருகைக்காகக் காத்துக்கொண்டு தயாராயிருக்கவேண்டிய சபையார் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள்.

1—3. அவர் வருகை, எதிர்பாராதகாலம்–உலகத்தாருக்கு
4—5. அவர் வருகை, எதிர்பார்த்து அறியக்கூடிய காலம்–

சபையாருக்கு எப்படி?—இதில் உலகத்தாருக்கும் சபையாருக்கும் என் வித்தியாசம்.

6—7. அவர் வருகைக்காக விழித்துக் காத்திருக்கவேண்டிய காலம்.

8—9. அவர் வருகைக்காக தயார் செய்யவேண்டியகாலம். எவ்வித தயார்? உயுத்தத்தைப்பற்றி இவ்விடத்தில் பேசவேண்டிய தென்ன?

10—11. இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் நோக்கம் அவருடைய வருகையில் பூர்த்தியாக நிறைவேறும்.

5. 12—22. நானாவிதமான போதகங்கள்.

12—13. சபையார் குருவுக்குக் காட்டவேண்டிய குரு அபிமானம்.
எவ்வித காரணங்களால்?

14—15. சபையார் தங்களுக்குள்ளே பாராட்டவேண்டிய சபாபிமானம்.

16—22. சபையார் அனுஷ்டிக்கவேண்டிய பக்த ஜீவியத்தின் சிறந்த லக்ஷணங்கள்.
(சபையார் தனித்தனி, கவனிக்கவேண்டியவை, 16-18.
சபையார் தங்களுக்குள் கவனிக்கவேண்டியவை, 19-22.
(கவனிக்கவும்.) ஒவ்வொன்றையும் யோசித்துப்பார்க்கவும். இவைகளெல்லாம், ஞானமார்க்கத்திற் குரியவைகள் எனவும், சபையின் பக்தி விருத்தி பண்ணுவதற்கு எதுக்களென்றும் அறியவும்.

5. 23—28. ஆசீர்வாதங்களும் வாழ்த்துதல்களும்.

23—25. பிரார்த்தனைகள்—எவர்களுக்கு? விரும்பி வேண்டுகிறதென்ன? நம்புகிறதென்ன?

26—28. வாழ்த்துதல்.

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

17-ம் அத்தியாயம்

பவுல் தன் குமாரனுகிய தீமோத்தேயுவைக் காணல்

(தொடர்ச்சி)

அவர்கள் அவ்விடத்தினின்று ஓடி அப்பட்டணத்துள் வசித்த மற்ற சகோதரரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் எல்

லாரும் கூடிவந்து தங்களுக்கு உபதேசம்பண்ணி இப்புதியமார்க்கத்தில் சேர்ந்த பவுல் சொல்லிய வார்த்தைகளை மிக ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பவுல் இவர்களுக்கு என்ன சொன்னானென்று வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் அவர் வேறு சமயத்தில் தம் சிநேகிதருக்கு எழுதிய வசனங்களைப் போன்றவைகளையே இப்பொழுதும் எழுதியிருப்பார் என்று உறுதியாய்ச் சொல்லலாம். அதாவது:

'எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, ஸ்திரமாயிருங்கள்.

'உண்மையாகவே நலமாயிருக்கிற விஷயங்களின்மேல் நீங்கள் பற்றுதலாயிருக்கத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் சகல நற்செய்கைகளிலும் மேன்மேலும் வளரும்படியாக நான் அதிகமாய் விரும்புகிறேன்.'

ஓர் தளகர்த்தன் தனது சைனியங்களுக்கு இடத்தக்க ஆஜ்ஞையைப்போன்ற கீழ்வரும் இரண்டு கட்டளைகளையும் சொன்னார், அதாவது:

'நீங்கள் ஏக ஆவியும், ஏக சிந்தையும் உடையவர்களாய் சுவிசேஷத்தின் விசுவாசத்துக்காக ஒன்றுகூடி கடினமாய் உழையுங்கள்.

'உங்கள் சத்துருக்களைக் கண்டு பயப்படாதேயுங்கள். என்னைப் போலவே நீங்களும் பல போராட்டங்களைச் செய்து கிறிஸ்துவுக்காகத் தண்டிக்கப்படவேண்டிய வரத்தைப் பெறுவீர்கள். மற்றவர்கள் உங்களைக் குற்றப்படுத்தாமலும் நீங்கள் ஒருவரையும் தண்டிக்கப்படுத்தாமலும் இருக்கத்தக்கதாக உங்கள் வேலை எல்லாவற்றையும் மொறு மொறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். கோணலும் மாறுபாடுமான ஜாதியின் நடுவிலே ஜீவவசனமாகிய சுடரைப் பிடித்துக்கொண்டு உலகத்துக்குத் தீபங்களைப்போலப் பிரகாசிக்கிற தேவபுத்திரராக நீங்கள் வசியுங்கள்' என்பதே.

இந்த இடங்களில் மிகுதியான ஸ்தானங்களில் முன் பல இடங்களில் உண்டான அதே விவாதம் உண்டானது. சகலரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ் அடங்கவேண்டுமென்று யூதர்கள் சொன்னார்கள். மற்றவர்கள் அப்படியல்ல என்றார்கள். ஆகையால் சீலா தன்னுடைய தோல்சுருளை எடுத்து புறஜாதியார்மேல் இந்த பாரத்தை வைக்கவேண்டாமென்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை வாசித்தது பலருக்கு உதவியாயிருந்தது.

கடைசியாக அவர்கள் சிட்னஸ் நதிக்கரைக்கு வந்து மகா நகரமாகிய தர்சு பட்டணத்துக்கு வந்தார்கள். பவுலுடைய தகப்பனும், தாயும் மிக்க வயோதிபராயிருந்திருக்கவேண்டும், அல்லது இறந்து

போயிருக்கவேண்டும். பவுலினுடைய சகபாடிகளில் சிலர் அவரோடு பேசவேயில்லை. கிறிஸ்தவனாகிவிட்ட பவுலோடு யாதொரு சம்மந்தமும் வைத்துக்கொள்ள விரும்பாத கடினமான பரிசேயராகிவிட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் கடவுளை வணங்குகிறதற்கு பவுலால் நடத்தப்பட்ட வேறு சிலரோ அவருக்கு அதிசியமானால் தங்கள் கண்களையும் பிடுங்கிக் கொடுக்கத்தக்கதாக அவ்வளவுதூரம் அவருக்கு பட்சம் காட்டினார்கள். அவரும் சீலாவும் இங்கே இன்னும் அதிககாலம் தங்க முடியவில்லை. அவர்களுக்கு முன்பாகத் தெளரஸ்மலை எழும்பி நின்றது. அம்மலைக்கு அப்புறத்திலே ரோமபட்டணங்களுள்ள பெரிய பீடபூமி இருந்தது. கழுதைகளைக் கொண்டுவந்து அவற்றுக்கு சேணம்கட்டி அவற்றின்மேல் தங்களுக்கு வேண்டிய சாமான் முதலியவைகளை ஏற்றினார்கள்.

தாங்களும் ஏறி அப்பட்டணத்து வடக்குவாசல் வழியாய் சவாரி செய்தார்கள். கழுதைகளின் குளம்புகளின் சத்தம் கல்தளவரிசையிடப்பட்ட ரோமரஸ்தாவின்மேல் கலீர், கலீர் என்று கேட்டது. தர்சுபட்டணத்து வெளியூர்களை அவர்கள் கடந்தபிறகு, பாம்பைப் போல் வளைந்து வளைந்து, ஒரு சிற்றூற்றை ஒட்டி, மலையின் மேல் சென்றார்கள். இதுவும் தளவரிசையிடப்பட்ட பெரிய ரோமரஸ்தாதான். ஏனெனில், இந்த வழியாகத்தான் ரோமசைனியங்கள் செல்லும். ரோமராஜாங்கத்து குதிரைத்தபாலும் இம்மார்க்கமாகத்தான் போகும். ரஸ்தாவுக்குப் பக்கத்திலிருந்த மலைகளிலே வசந்தகால புஷ்பங்கள் மலர்ந்திருந்தன. ஆனால் பனிக்கட்டியைப்போல் குளிர்ந்து உறைந்திருந்த ஓடையின் பக்கமாய் அவர்கள் மேலே எறிப்போகப்போக ஒரு புஷ்பமும்கூட காணமுடியவில்லை. அதற்கப்பால் அவர்கள் சற்றுதங்கி ஒலிவகனிகளையும், பாற்கட்டியையும், அப்பத்தையும் சாப்பிட்டார்கள்.

மணிகளின் சத்தம் கிணீர், கிணீர் என்று தூரத்திலே கேட்டது. கற்பாறையின்மேல் வெட்டப்பட்டிருந்த ரஸ்தாவின் வளைவிலே ஒரு ஒட்டகம் வந்தது. அதனுடைய கழுத்திலே கனீர் என்று சப்திக்கொண்டிருந்த கிண்கிணிமணிச்சரங்கள் போட்டிருந்தது. அதின் இருபக்கத்திலும் இரண்டு பெரிய்மணிகள் தொங்கின. இவ்வொட்டகமானது அக்கணவாயில் மௌனமாய் இறங்கிக்கொண்டிருந்தபொழுது, இவ்விரண்டு மணிகளும் டான், டான் என்று நிறுத்தி நிறுத்தி ஆழ்ந்த சத்தமாய் அடித்துக்கொண்டேயிருந்தன. இதற்குப்பின்னால் இன்னொரு ஒட்டகம் வந்தது. அதற்குப்பின் வேறொன்று, அப்புறம் வேறொன்று, ஆக எட்டு ஒட்டகங்கள் மெல்லிய சங்கிலிகளால் ஒன்றோடொன்று தொடுக்கப்பட்டவைகளாய்

அவ்வழி வந்தன. முதலும் கடைசியுமாகிய இரண்டு ஒட்டகங்களுக்கு மாத்திரம் ஆடமணி கட்டப்பட்டிருந்தன. ஒரு சிறு கழுதையின்மேல் ஏறி எல்லாவற்றிற்கும் முன்னே பிரயாணம்பண்ணிய ஒட்டகக்காரன் மணிச்சத்தம் கேட்காவிட்டால் சங்கிலியானது அறுந்துபோயிற்றென்றும், தனது ஒட்டகங்களில் சில தூரத்திலே நின்றுபோயிற்றென்றும் அறிந்துகொள்ளுவான்.

சூரியன் மலைக்கு அப்பால் அஸ்தமித்தது. சாயரட்சையில் பவுலும், சீலாவும் ஒரு கட்டடத்துக்கு வந்தார்கள். அது சத்திரமானது; மிக தாழ்வானது; ஜனங்கள் இல்லாதது; நாலு சுவர்கள் மட்டும் உள்ளது. உள்ளேயிருந்த முற்றத்தில் அவர்கள் தங்கள் கழுதைகளை நிறுத்தி எதோ ஒரு மூலையில் தங்கிக்கொள்ளலாம். அவர்கள் தங்கள் அங்கிகளைப் போர்த்துக்கொண்டு தூங்கலாம்.

சத்திரத்துக்கு வெளியே கூட்டம் கூட்டமாயிருக்கிற ஒட்டகங்களை அவர்கள் பார்த்தார்கள். அவைகள் வட்டமாக நின்று கொண்டு வால் வெளியேயும், தலையை மத்தியிலும் வைத்துக்கொண்டு ஒட்டகக்காரன் கொடுத்த தீனியை சாப்பிட்டுக்கொண்டிருந்தன. சில ஒட்டகங்கள் அப்பொழுதுதான் அங்கு வந்துசேர்ந்தன. அன்று இராத்திரி பவுலும் சீலாவும் விறகுக்குச்சிகளைப் பொறுக்கிக்கொண்டு வந்து அடுப்புமூட்டி கோதுமை அப்பம் செய்து எண்ணெய் வாசனை கூட்டு ஆகிய இவற்றோடு சேர்த்து கோதுமை அப்பம் செய்தார்கள். அச்சத்திரத்தைச் சுற்றிலும் இப்படியே அநேகர் அடுப்பு மூட்டி சாப்பாடு பண்ணிக்கொண்டிருந்தார்கள். ஒரு பக்கத்தில் ஒரு ஒட்டகக்காரன் சிறு சிறு சரணங்களால் ஆகிய ஒரு நீண்ட தெம்மாங்கு பாட்டை கதையாகப் பாட ஆரம்பித்தான். இப்பாடல் மெத்த அசங்கியமானது. ஆகையால் பவுலும் சீலாவும் இந்த அசுத்தபாடல் தங்கள் காதுகளில் விழாதபடிக்கு தங்கள் போர்வையை நெருக்கமாய் இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்கிவிட்டார்கள்.

அடுத்தநாள் காலை சூரியோதயத்துக்கு முன்னே பவுலும் சீலாவும் எழுந்து பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த சிற்றாற்றில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பவும் ரஸ்தா மேடைக் சென்றார்கள். இடுக்கு வழியில் அவர்கள் ஏறி ஏறிச் சென்றார்கள். எங்கு பார்த்தாலும் நீரோடைகளின் இரைச்சலும், ஒட்டக மணிச்சத்தமும் கேட்டன. செங்குத்தான கன்மலை இருபுறமும் அதிக உயரமாய் நின்றது. அதை அண்ணாந்து பார்க்கும்போதே மயக்கம் உண்டாக்கத்தக்கதாய் இருந்தது. பவுலும் சீலாவும் தளர்ந்த நடையராய் மெல்ல மெல்லச் சென்றார்கள். ஒட்டகத்தின் சுமையானது பக்கத்திலிருந்த கன்மலையில் படும்படியாய் ரஸ்தா அவ்வளவு ஒடுக்கமாயிருந்தது. ரஸ்

தாவின் மற்ற பக்கத்தில் மலையாறு விரைவாய் ஓடிக்கொண்டிருந்தது. ரஸ்தா, ஆறு என்னும் இவற்றுக்குப் பக்கத்தில் செங்குத்தான உயர் பர்வதம் அதிக உயரமாய் ஆகாசத்தை அளாவிச் செல்வதுபோல் அநேக நூற்றுக்கணக்கான அடிதூரம் வளர்ந்தோங்கி நின்றது. சிற்றாற்றின் சத்தமானது செங்குத்தான மலைகளில் அலங்காரமாய் பிரதிதொனித்துக்கொண்டே யிருந்தது. இவர்கள் இருவரும் இந்த ஒடுக்கமான இருள் நிறைந்த கணவாய் வழியாய்ச் சென்றார்கள். இக்கணவாய்க்கு சிலுசியவாசல் என்று பெயர். மகா அலக்சாந்தர் இவ்வொடுக்கமான கணவாய் வழியாய்த் தன் சைனியங்களை இட்டுக் கொண்டுவந்தார் என்னும் விஷயம் இவர்களுக்கு அச்சமயத்தில் ஞாபகம் வந்ததோ அல்லவோ என்பது நமக்குத் தெரியாது.

ஆனால் அப்போது அந்தக் கணவாயில் யூதர் உடுப்பைத் தரித்தவனும், கூடாரவேலை செய்து கை காய்த்துப்போனவனும், அதிக பிரயாணத்தினால் கால் கடுகொண்டவனும் நின்ற ஒருவன் யதார்த்தமாகவே அலக்சாந்தரைக் காட்டிலும் பெரியவன் என்று சீலா, சவுலைப் பார்த்துச் சொன்னார். சவுல் அதைக் கேட்டு சிரித்திருப்பார். ஆனால் வல்லமையிலும், புத்தியிலும், தைரியத்திலும், வீரத்திலும் பவுல் உண்மையாகவே மகா அலக்சாந்தரைவிட பெரியவர். பிற்கால உலக சரித்திரத்தில் மகா அலக்சாந்தரைவிட பவுலே அதிக செல்வாக்கைச் செலுத்தியவர். அலக்சாந்தருடைய ராஜ்யத்திலிருந்த ஜாதிகளைக் காட்டிலும் அதிகமான ஜாதிகளை அடக்கிய ஒரு மகா ராஜ்யத்தின் கொடியை சவுல் பிடித்திருந்தார். ஒரு சேஞ்முகத்தில்ல, அதரிசனமுள்ளவரும் உயிரோடெழுந்தவருமாகிய அரசனுடைய வல்லமையிலே தன்னந்தனியனாய் நின்று இப்போராட்டத்தைப் போராடி ஜெயம் கொண்டார்.

இவ்விதமாக பவுலும் சீலாவும், இடுக்கமும் ஒடுக்கமுமான கணவாயைக் கடந்து உயர்ந்த பீடபூமியின் சூரியபிரகாசத்துள் சென்றனர். ஓர் அகன்ற பள்ளத்தாக்கில் அவர்கள் சவாரிசெய்து அப்பால், ஓர் சமபூமிக்கு வந்தார்கள். இச்சமபூமி சமுத்திரமட்டத்துக்குமேல் 3,000 அல்லது 4,000 அடி உயரத்தில் அநேக மைல் தூரம் பரவியிருந்தது. ரோமருக்குக் கீழாக அரசாளுகிசெய்த அந்தியோகுவின் ராஜ்யத்தில் அவர்கள் இப்பொழுது இருந்தார்கள். இந்த ராஜ்யத்தின் எந்த பட்டணத்திலும் அவர்கள் நிற்காமல் கலாத்தியா மாகாணத்து இக்கோனியா நாட்டின் எல்லை நகரமாகிய தெர்பை பட்டணத்துக்கு வந்தார்கள். முன்னே பவுல், பர்னபாவோடு பிரயாணம்பண்ணி தெர்பைக்கு வந்தபோது அவர் மேற்கு வாசல் மூலமாய் வந்தார். இப்போது கிழக்கு வாசல் மூலமாய்

உட்சென்றார். அவரும் சீலாவும் அங்குள்ள கிறிஸ்தவர்களைக் கண்டு எருசலேமிலிருந்து தாங்கள் கொண்டுவந்த கடிதத்தை அவர்களுக்கு வாசித்து, விளக்கிக்காட்டி, அவர்களோடு பேசி அவர்களை தைரியப்படுத்தினார்கள்.

தெர்பை பட்டணத்திலிருந்து அவர்கள் மேற்குமுகமாய் ரோம ரஸ்தா வெகு பிரயாணம்செய்தார்கள். கோபாவேஷம் கொண்ட யூதர்களால் தூண்டிவிடப்பட்ட ஜனங்கள் தன்னைக் கல் எறிந்து காயப்படுத்தினபிறகு இந்த வழியாக லீஸ்திராவிலிருந்து வந்த விஷயத்தைப் பவுல், சீலாவுக்குச் சொல்லியிருப்பார். கடைசியாக லீஸ்திரா பட்டணம் அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. பவுலையும், பர்னபாவையும் மெர்க்குரி, யூபித்தர் என்னும் தெய்வங்களாக எண்ணி அவர்களுக்குப் பலியிட பூசாரிகள் ஆயத்தம்பண்ணிய ஸ்தானமாகிய யூபித்தரின் மகா ஆலயத்துக்குப் பின் சூரியன் அஸ்தமயமாயிற்று.

C. L. S. PRESS, MADRAS—1919

No. 157 ஜூன் 1919

வேதியர் விளக்கு

15 JUL 1919

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

17-ம் அத்தியாயம்

பவுல் தன் குமாரனாகிய தீமோத்தேயுவைக் காணல்

(தொடர்ச்சி)

ஓர் பாலியன் விரைவாய் ஓடி அவர்களுக்கு வந்தனம் செய்தான். பவுல் திரும்பவும் லீஸ்திராவுக்கு வருகிறதைக் கண்டு அவனுடைய கண்கள் சந்தோஷத்தால் பொங்கினது. பவுல், சீலாவைப் பார்த்து 'இவன்தான் தீமோத்தேயு' என்றார். சீலா, தீமோத்தேயுவின் மயிரையும், அவனுடைய கண்ணின் நிறத்தையும், தோளின் நிறத்தையும் பார்த்தபோது இவன் சுத்தமான யூதன் அல்ல என்று அறிந்துகொண்டான். அவர்கள் தீமோத்தேயுவின் வீட்டுக்குப் போனபொழுது அவருடைய தகப்பன் கிரேக்கன் என்றும், ஐனேக்கேயாள் என்னும் பேர்சொண்ட அவனுடைய தாய் யூதஸ்திரீ என்றும் அவன் கண்டான். லோவிசாள் என்னும் பேர்கொண்ட அவருடைய பாட்டியும் அந்த வீட்டில் அவர்களோடு வசித்தாள். பவுல் லீஸ்திராவுக்கு வந்ததினிமித்தம் தீமோத்தேயு அதிக குதூகலம் கொண்டான். பவுல் அவனைப் பார்த்து, இயேசுகிறிஸ்துவுக்குள் காண்பிக்கப்பட்ட தேவனுடைய அன்பின் நற்செய்தியைக் கூறுகிறதற்கு நீ என்னோடு கூடப் பிரயாணம்பண்ணி வருகிறாயா என்று பவுல் அவனைப்பார்த்து கேட்டபோது அவன் அதிக சந்தோஷத்தினால் நிறைந்து உரத்த சத்தமாய், 'இதுவே நான் அதிகமாய் வாஞ்சிக்கிற காரியம்' என்று சொல்லி, இன்னும் ஏதோ சொல்லப்போனான். பவுல் அதை நிறுத்தி, யோவான் மாற்கு கஷ்டத்துக்குப் பயந்து திரும்பிப்போய் விட்டதைப்பற்றி அவனுக்குச் சொன்னார். 'இது லேசான காரிய

மல்ல. ஆயாசம், கஷ்டம், பசி, தாகம், குளிர், காற்று, கள்ளர், கல் எறியுண்ணல், அடிபடல், சிறைச்சாலை, மரணபயம், ஆகிய இவை யாவற்றையும் நோக்குகிறதற்கு நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்' என்று சொன்னார்.

ஆனால் அவர் தீமோத்தேயுவின் முகத்தை உற்றுப்பார்த்து, அவனுடைய உற்சாகமான ஆவியையும், அன்பையும், பக்தியையும், தன் குருவாகிய பவுலோடுகூட இருக்கும்போது எவ்வித அபாயத் துக்கும் பயப்படாமல் ஆவல்கொண்டிருப்பதையும் கண்டு, பவுல் நிகைக்காமல் தீமோத்தேயு தன்னோடுகூடப் பிரயாணம்பண்ணி முன் தங்களில் ஒருவரும் சென்றிராத புது தேசங்களுக்குச் செல்ல வேண்டுமென்று அவனுக்குச் சொன்னார்.

18-ம் அத்தியாயம்

மேற்கு நோக்கிச்செல்லல்

லூனேக்கேயாள் தனது அருமை தீமோத்தேயுவின் சட்டை யைத் தைத்து முடித்து, அவனுடைய பிரயாணப்பையில் அப்பம், பேரீச்சம்பழம், பால்கட்டி, ஒலிவஅடை முதலியவற்றைப் போட்டு அவனுடைய பிரயாணத்துக்கு ஆயத்தம்பண்ணினாள். பவுல் இதைக் கண்டபோது, தன் தாயும் அநேக வருஷங்களுக்கு முன்னே தான் எருசலேம் கலாசாலைக்குச் சென்றகாலத்தில் தனக்காக சகலத்தை யும் ஆயத்தம்பண்ணிய விஷயம் அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் ஒரு தாய் தன் அருமை மகனை தூரதேசத்துக்கு அனுப்புவது அவளுக்கு எத்தனை கஷ்டமான விஷயம் என்பதைப் பவுல் நம்மைக் காட்டிலும் இப்பொழுது அதிக நன்றாய் உணர்ந்தார்.

அவருடைய பாட்டியாகிய லோவிசாளுடைய கைகள் பிரிவாற் றுமையினால் நடுங்கிக்கொண்டிருந்தது. நடுக்கம்கொண்ட கைக ளால் அவள் தீமோத்தேயுவின் தண்ணீர் செம்பை நிரப்பி, அவனு டைய பிரயாணப் பையில் இன்னும் ஒரு பலகாரத்தை வைத்தாள். தீமோத்தேயு தன் செருப்பைப் போட்டுக்கொண்டான். இரும்புப் பூண்தரித்த தன் தடியையும் எடுத்துக்கொண்டான். பிரயாணத்துக்கு அவசியமான இவைகளையன்றி வேறொன்றையும் அவர்கள் கொண்டு போகவில்லை.

இப்படியாக சகல ஆயத்தமும் முடிந்தது. அப்புறம் தன்னுடைய அங்கியையும், பவுலுடைய அங்கியையும் தன் தோள்மேல் போட்டுக் கொண்டு தண்ணீர்ச் செம்பையும், சாமான் பையையும் இடுப்பில் கட்டிக்கொண்டு, தீமோத்தேயு தன் தாயாரிடத்திலும், பாட்டியிடத் திலும் விடைபெற்றுக்கொண்டு வெளியேறினான். லீஸ்திராபட்ட

ணத்தின் மேற்குவாசலின் மூலமாய் இம்மூன்று பிரயாணிகளும் கடந்து இக்கோனியா என்ற பக்கத்து பட்டணத்துக்கு நேரே சென்றார்கள்.

மத்தியதரைக் கடலுக்கு வடக்கேயும், கிழக்கேயும் உள்ள தேசங் களுக்குப் பவுலும், அவருடைய கூட்டாளிகளும் சிறந்த பிரதிநிதி கள் என்று சொல்லலாம். அவரும் சீலாவும் யூதர்கள். ஆயினும் இருவரும் ரோமபிரஜைகள். தீமோத்தேயுவின் தகப்பன் கிரேக்கன். தாய் யூதஸ்திரீ. இப்படியாக கிரேக்கர், ரோமர், யூதர் என்னும் மூவர் அடங்கிய இக்கூட்டமானது ஓர் மூப்புரிநூல்போல ஒருவர்மேல் ஒருவருக்குள்ள அன்பினாலும், கடவுள்மேல் உள்ள பக்தியினாலும், இணைக்கப்பட்டிருந்தார்கள். முன்னே பவுல் இரண்டுதரம் பிரயா ணம் பண்ணிய மலைமுகட்டின்மேல் ஏறிச்சென்று பகலெல்லாம் நடந்தார்கள். சூரியாஸ்தமானத்துக்குமுன்னே அவர்கள் இக்கோ னியா பட்டணத்துக்கு வந்துவிட்டார்கள். தெர்பை, லீஸ்திரா என் னும் பட்டணங்களில் செய்ததுபோலவே இங்கேயும் எருசலேமி லிருந்து தாங்கள் கொண்டுவந்த கடிதத்தை வாசித்தார்கள். அங்கே யுள்ள சகோதரர் ஒரு தோல்சுருளையும் நாணற்பேனுவையும் கொண்டுவந்து அக்கடிதத்தில் உள்ளதை தோல்சுருளில் பெயர்த் தெழுதினார்கள். வைராக்கியமுள்ள யூதர்கள் வந்து கிரேக்க கிறிஸ் தவர்களாகிய இவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை அனு சரிக்க வேண்டுமென்று சொல்லும் பட்சத்தில், தாங்கள் அது அவசியமில்லை என்று காண்பிக்க, இந்த நகல் சுருளைக் காட்டும் நோக்கமாய் இப்படிச் செய்தார்கள். இக்கோனியா பட்டணத்தி லிருந்து இம்மூன்று கூட்டாளிகளும் இரட்டைச் சிகரங்களைக் கடந்து மகாரோம ரஸ்தாவில் வந்து கூடினார்கள். கல் தளவரிசை யிடப்பட்ட இந்த மகாரஸ்தாவில் அவர்கள் இரண்டுநாள் மெல்ல மெல்ல பிரயாணம் பண்ணினார்கள். மலைகளிலிருந்து பள்ளத்தாக் கைக் கடந்து பிசிதியாநாட்டு அந்தியோகியாவுக்கு வருகிற ஜலக் குழாய்க் கட்டிடத்தை அவர்கள் கண்டார்கள். இங்கேயும் அவர்கள் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தித் தாங்கள் கொண்டுவந்த சுயாதீன பத்திரத்தின் நகல் ஒன்று எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

இப்போது பவுல் தான் பர்னபாவோடு இருந்தபோது செய்தது போலவே திரும்பி மலைகளைக் கடந்து பெர்கே பட்டணத்துக்கு வந்து அந்தியோகியாவுக்கு கப்பல் ஏறிச்செல்லலாம். ஆனால் அவர் இதைக்காட்டிலும் மகா விஸ்தாரமான படையெழுச்சியில் பிரவே சிக்கத்தக்க தைரியம்கொண்டிருந்தார். அவர்களுக்கு நேரேயிருந்த ரஸ்தாவானது ரோமராஜ்யத்திலுள்ள கிரேக்கபட்டணங்களுக்கு அவ

ரை அழைத்தது. அந்த ரஸ்தாவின்மேல் ஒட்டகங்கள் தங்கள் சுமை களைச் சுமந்துகொண்டு எபேசுபட்டணத்தையும், கடலையும் நோக்கி மெல்ல மெல்ல சென்றுகொண்டிருந்தன. ராஜாங்க தபால் குதிரை கள் ராஜ்யத்தின் செய்திகளை ரோமாபுரிக்குக் கொடுப்பதற்காக மேற்குமுகமாய் ஓடிக்கொண்டிருந்தன.

பவுல் எருசலேம் தேவாலயத்தில் முழங்கால்படியிட்டிருக்கும் போது 'இந்த நற்செய்தியை ஜாதிகளுக்கு அறிவிக்கும்படியாக நான் உன்னை அழைத்திருக்கிறேன்' என்னும் இந்த வார்த்தைகள் அவருடைய செவிகளில் தொனித்துக்கொண்டிருந்தன.

மேற்கேயுள்ள இப்பட்டணங்களுக்கு ரோமராஜ்யத்தின் சகல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் போக்குவரவாய் இருந்தார்கள். ஆகையால் இந்த இடத்தில் சுவிசேஷத்தை அறிவித்தால் அந்தந்த செய்தியானது மத்தியதரைக்கடலைச்சூழ உள்ள சகல இடங்களி லும் பிரஸ்தாபமாகும். இப்பட்டணத்திலிருந்து போனவர்கள் கப் பல்கள், ரஸ்தாக்கள், சந்தைப்பேச்சு, கிராமப்பேச்சு, பட்டண வாசல், அரங்கசாலை ஆகிய பல வழிகளால், இச்செய்தியை பிறர் அறியச்செய்வார்கள்.

ஆகவே பவுல் தனது கூட்டாளிகளை மேற்குமுகமாய்த் திருப்பி கிழக்கேயும், மேற்கேயும் ஒரு பாதை இணைப்பதைப்போல் இணைத்த பாதையாகிய இந்த சர்வஜன மகா ரஸ்தாவின்மூலமாய் நடந்து சென்றார்.

பவுல் நடக்கும்போது வெகு மௌனமாயிருந்தார். பிற்காலத் தைக்குறித்து நினைத்துக்கொண்டே நடந்தார். மேற்கு முகமாய் அவரை அழைக்கிற சத்தம் அவருடைய செவியில் தொனித்துக் கொண்டிருந்தது. ரஸ்தாவின் மேலிருந்த பட்டணங்களை அவர்கள் கடந்து சென்றபோது சீலா அவரைப்பார்த்து நாம் இப்பட்டணங் களுக்குள் சென்று பிரசங்கம் பண்ணலாமே என்று கேட்டான். அதற்குப் பவுல் 'அப்படியல்ல. நாம் ஆசியா நாட்டில் சுவிசேஷத் தைப் பிரசங்கிக்கிறதற்குத் தாமதியாமல் நேரே போகவேண்டு மென்று ஆவியானவர் எனக்குச் சொல்லுகிறார்' என்றார்.

அவர்கள் வடக்குமுகமாய் அநேக நாள் பிரயாணம்பண்ணினார் கள். சில சமயங்களில் தனிமையாய்ச் சென்றார்கள். அநேக தரு ணங்களில் வியாபாரக்கூட்டத்தாரோடு சேர்ந்து சென்றார்கள். அவர் தன் பிரயாணம் பண்ணிய இடம் உயர்ந்த பீடபூமி.

ஒவ்வொருநாளும் சூரியோதயத்துக்கு முன் எழுந்து பிரயா ணத்தை ஆரம்பிப்பார்கள். இப்படியே அநேகநாள் செய்தார்கள். மத்தியான நேரத்தில் தனிமையாய் இருக்கிற கிணற்றண்டை உள்ள

கல்லின் நிழலிலே உட்கார்ந்து தங்கள் சாப்பாட்டை உண்பார்கள். மத்தியான உஷ்ணம் அதிக கடுமையாயிருக்கும்பொழுது அவர்கள் இங்கே தங்கி இளைப்பாறுவார்கள். சூரியன் சற்று இறங்கினபின் னர் அவர்கள் தங்கள் பிரயாணத்தைத் திரும்பவும் துவக்குவார்கள். இராத்திரியில் ரஸ்தாவின் பக்கத்திலுள்ள ஒரு சத்திரத்தில் படுத்து நன்றாய் நித்திரைசெய்வார்கள். பகலெல்லாம் நன்றாய் உழைத்த இவர்களுக்கு இராக்காலத்தில் வெகு இனிமையான நித்திரை வரும். மலைகளில் உள்ள நரிகள் ஊளையிடுதலும், ஓநாய்கள் உறுமுத லும் இவர்கள் செவிகளில் விழாது. அவர்கள் வடக்குமுகமாய் இன்னும் கொஞ்சதூரம் பிரயாணம்பண்ணி பித்தினியா நாட்டுக் குச் சென்றிருப்பார்கள். ஆனால் பரிசுத்தாவியானவருடைய அந்த ரங்க சத்தமானது பவுலை நிச்சயமாகவே வழிநடத்தினது. ஆகை யால் அவர்கள் திரும்பவும் மேற்கு முகமாய்த் திரும்பி ஆசியாநாட் டின் மீசியா மாகாணத்தின் மூலமாய்ச் செல்லுகிற ரஸ்தாவின் வழி யாய்ச் சென்றார்கள்.

வடக்குமுகமாய் ஓடுகிற அநேக ஆறுகளை அவர்கள் ஒன்றின் பின் ஒன்றாய்த் தாண்டினார்கள். அவர்களுடைய முகம் சூரியாஸ்த மனதிசைக்கு நேர் இருந்தது. பாலங்களில் ஏறியும், பட்டணங் களை ஊடறுத்தும் ஓர் இடத்திலும் தங்காமல் இம்மூன்று சிநேகித ரும் தங்களுக்கு எதிரிலிருக்கிற தங்கள் வேலையைப்பற்றியும் தாங் கள் விட்டுவந்த சிநேகிதரைப்பற்றியும் பேசிக்கொண்டே மகாரோம ரஸ்தாவின் வழியாய் நடந்தார்கள்.

இப்போது பவுலும் சீலாவும் இருந்த இடத்துக்கும் சீரியாநாட்டு அந்தியோகியா கிறிஸ்தவர்கள் இருந்த இடத்துக்கும் உள்ளதூரம் 600 மைல். தீமோத்தேயு 200 அல்லது 300 மைல் பிரயாணம் பண்ணியாயிற்று.

(இன்னும் வரும்)

Hints to the Preachers

By P. D. Durairaj, B.D.

2 Chapter

வேதியர்க்கோர் வார்த்தை

c. நாம் இந்தமதப்பாடல்களை வியாக்கியானம் செய்யும்போது, ஆக்கியோன் கருத்துக்கிசைய செய்யவேண்டுமென்றும், அப்படி யல்லாமல் நம்முடைய நோக்கத்திற்கிசையவே சிற்சில பாடல்களை

வியார்த்திசெய்கிறோமென்பதற்கு இரண்டொரு உதாரணங்கள் மூலமாய் திருஷ்டாந்தப்படுத்திலேம். நாம் பட்டினத்தடிகள் பாடல் களிலுமிருந்தும் ஒரு பாடலை எடுத்துக்காட்டி அதையும் உபதேசி மார்கள் எப்படி அநியாயமாய்க் கருத்துரைக்கிறார்களென்பதற்கு பின்வரும் செய்யுளைக் கவனிப்போம்!

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே—விம்மிவிம்மி யிரு
கைத்தலமேல் வைத்தழும் மைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே.

இது அடிக்கடி பிரசங்கிகள் உபயோகிக்குஞ் செய்யுள். இதைத் தெரியாதவரும் இதைத் தங்கள் பிரசங்கங்களில் உபயோகிக்காதவரும் இல்லையென்றே சொல்லவேண்டும். உலகத்தின் அநித்தியத்தைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் செய்யுளாக்கு மிது. இதை வியார்த்திசெய்பவர் 'ஆஸ்தியும், வாழ்வும் வீட்டோடேயே நிற்கும். எவனுடைய அந்தியகாலத்திலும் அவரது மனைவி அம்மனைக்கு முன் தெருவாசலோடே வந்து அழுதுவிட்டு திரும்பிடுவள், ஓலமிட்டு அழுதுகொண்டு வரும்படியான மக்களோ, தெருவாசலுக்கப்பால் சுடுகாடுமட்டும் சவத்திற்குப்பின்னே அழுதுகொண்டே வருவர். ஆனால் இறந்தவர்கூட வருகின்றது எதுவென்றால் அவரது புண் ணியமும் பாவமுமே. இவைகள் இரண்டும் கூடவே வரும். ஒரு வன் புண்ணியஞ் செய்தவனுனால் அவனது புண்ணியமும், பாவம் செய்தவனுனால் அவனது பாவமும், அவனோடேயே தொடர்ந்து வரும்' என்று முடிக்கிறார்கள். இதுவரை, இவ்வித கருத்துரையில் நாம் குற்றங்கண்டிலோம். குற்றம் எற்படுகிற தெங்ஙனம்? 'புண் ணியம்' என்ற பதத்திற்கும் 'பாவம்' என்ற பதத்திற்கும் இவர் கூறும் அருத்தத்திலே எற்படுகின்றது. பட்டினத்தடிகள் கருத்து எதுவா மென்றால், சைவ சித்தாந்தம் கற்றவரிடங் கேட்டால் அவர் விளங்க வைப்பார். ஆனால் நம்மவர் 'புண்ணியம்' என்பதை நல்ல கருமம், நல்ல செயல், நல்ல நடக்கை, சன்மார்க்கம், 'good character' என்பதற்கு நிகராயும் 'பாவம்' என்பதை தீய கருமம், அக்கிரமச் செய்கை, 'sinful life' என்பதற்கு ஒப்பாயும் உபயோகித்து, சாகுங்காலத்திலே இந்த இரண்டிலொன்றுதான் கூட வருமா கையால், நாம் புண்ணியம் நிறைந்தவர்களாய், கடவுளுக் கிணங்கி 'ஊசியுஞ் சரடும்போல்' அவரது சித்தமும் நம்முடைய சித்தமும் இசைந்து நம்முடைய புண்ணியம் கூடவரத்தக்கதாய் பிழைப்போ மாகவென்று புத்தி சொல்லி முடிப்பார்கள். இவ்விதக் கருத்தை

'புண்ணியம்', 'பாவம்' என்ற சொற்களுக்குக் கூறுகிறவன் சைவ சித்தாந்தத்தைப் பார்வையிடாதவன் செய்யும் பிரசங்கமாக்கும். ஆகை யால் இவ்விதக் கருத்து இப்பாடலுக்கு விரோதமென் றுரைப்ப தடன், சித்தாந்தத்தையும் நம்முடைய பிரயோஜனத்திற்காக சுருக்க மாய் எடுத்துக் காட்டுவோம்:

சைவ சித்தாந்தத்தின்படி, புண்ணியமும் கர்மம், பாவமும் கர் மம்; புண்ணியஞ் செய்தவனும் முக்தி யடையான், பாவஞ் செய்த வனும் முக்தி யடையான். முக்தி யடைவதற்கு புண்ணியமுந் தடை, பாவமுந் தடை. முக்தி யென்றால் விடுதலை, அதுதான் கிறிஸ்தவர் கள் கூறும் 'மோக்ஷம்,' அல்லது 'வீடு'. 'மோக்ஷம்' யடைவதற் குப் புண்ணியமும் பாவமும் விலங்குகளாம். 'இருவினை' யென்று மேற்படி செய்யுளிலே வந்ததையுங் கவனிக்க! அப்படியென்றால் 'முக்தி' யடைவ தெவ்விதம்? நாம் கவலைத்தாழ்ச்சியாயும் அறிவீன மாயும் உபயோகிக்கும் பதங்கள் இந்த சித்தாந்தத்திலே வரும், அவை யாவன: நரகம், சொர்க்கம், புண்ணியம், முக்தி, முதலியன. நம் முடைய பிரசங்கங்களில், கிறிஸ்துவை நம்பிப் பிழைத்தவர்களே நல்லவர்கள், அவர்களே சொர்க்கம் அடைவர் என்றும் பாவத்துக் காளாகி கெட்டுப்போகாதபடி 'புண்ணியஞ்' செய்து நல்ல கதி யடையப் பிரயாசப்படுவோமாக வென்றும் சொல்லுகிறோம். சில சமயங்களில் மோக்ஷத்திற்கு 'முக்தி' யென்றும் வேறு சமயம் 'சொர்க்கம்' என்றும் உபயோகித்து வருகிறதைக் கேட்டிருக்கி றோம். நம்முடைய கருத்து எவ்வாறுயிருந்தாலும், நம்மைக் கேட் கிற சைவனுக்கு கருத்து வித்தியாசமாகவே யிருக்குமென்பதற்குப் பின்வரும் சித்தாந்தம் கவனிக்க!

'புண்ணியம்' என்றால் நல்ல கிருத்தியங்கள்; கடவுள் பக்தி, அன்னமிடல், சத்திரம் கட்டுதல், தர்மஞ் செய்தல், எழைக்கிரங்கு தல், முதலியவை. அக்கிரமம் செய்பவன் பாபம் செய்கிறவன். அக்கிரமஞ் செய்தவனும் புண்ணியஞ் செய்கிறவனும் ஒருகாலத் தில் சாகவேண்டும். சுத்தால் புண்ணியஞ் செய்தவன் 'சொர்க் கம்' போகிறான்; பாவஞ் செய்தவன் 'நரகம்' அடைகிறான். சொர்க்கத்திலும் நரகத்திலும் சாஸ்வதமாய் இவர்கள் இருப்பதில்லை. புண்ணியஞ் செய்தவன் சொர்க்கத்தில் தான் செய்த புண்ணியத்திற் களவான காலம் இன்பத்தை யனுபவிக்கிறான்; பாவஞ் செய்தவன் நரகத்தை யடைந்து பாவத்திற்கு அளவான காலம் நரக வேதனையை யனுபவிக்கிறான். இன்பம் அனுபவித்தலும் துன்பம் அனுபவித்த லும் சாஸ்வதமாயன்று. ஏதோ ஓர்காலம் வரை, புண்ணியத்திற்கும் பாவத்திற்கும் கர்மம் என்றே சொல்லுவார்கள். இந்தக் கர்மம்

தேயத்தேய, கன்மசேடத்திஞல் திரும்பவும் ஆன்மா ஜெனன மெடுக்கிறது. 'கன்மசேடம்' என்ருல் கன்மம் மிதி. சொர்க்கத் திலும், நரகத்திலுமிருக்கின்ற ஆன்மாக்கள் எதோ ஒரு காலமிருந்து அததற்குத் தக்க பலனே யனுபவித்தபின்னர், கர்மம் மீதியொன்று ஏற்பட்டு, அந்தக் கர்மத்தின் தன்மைக்குத் தகுந்தாற்போல் ஏழு பிறப் பில் யாதாமொரு பிறவியாய்ப் பிறந்து இறந்து சொர்க்கமோ நர கமோ வடைந்து, மறுபடியும் பிறந்திறந்து, சொர்க்கமோ நரகமோ வடைந்து, மறுபடியும் ஜெனனமெடுத்தே யுழல்வதிஞல் இப்பிறவிக் கடல் நீந்துவதற்கு புண்ணியமும் தடையாயும் பாவமுந் தடையாயு மிருத்தலால், பற்றித் தொடரு மிருவினை, இரு விலங்குகளென்ருர். ஒருவனது ஜீவியத்தில் புண்ணியமே மேலிட்டிருந்தால், முக்தி யடைவதற்கு அது தடையாகி, மறுபடியும் எதோ ஒரு நல்ல பிறவி யடைவான். அல்லது பாவமே அவனது ஜீவியத்தில் மேலிடுமா ஞல், அவனுக்குப் பாவம் தடையாகி, எதோ ஒரு கேவலமான பிறவியை யடைகிருன். ஆகையால் இவ்வித இருவிலங்குகளி னின்று விடுதலையடைவதே 'வீடு, முக்தி.' அது எப்படியாகுமென் ருல், பாவமும் புண்ணியமும் சரியளவாகி, எவனுடைய ஜீவியத் தில் இவ்விரண்டும் சமரசப்படுமோ அன்று அந்த ஆன்மா முக்தி யடைகிறது. இப்படி புண்ணியமும் பாவமும் சரியளவாகிறதைத் தான் 'இருவினை யொப்பு' என்பார்கள். அன்றுதான் முக்தி.

'சொர்க்கம்' ஒரு ஜீவாத்மா நித்தியமாய்ச் சுகித்திருக்கு மிட மன்று. 'நரகம்' ஒரு ஜீவாத்மா நித்தியமாய் வேதனையைச் சகித் திருக்குமிடமன்று. முக்தியடையும் ஜீவாத்மாவுக்கு சொர்க்கமுங் கிடையா, நரகமுங் கிடையா. முக்தி பெறும்படியான இருவினை யொப்பு எந்த காலத்திலோ, எந்த யுகத்திலோ—அது யார் அறியக் கூடும்?

இவ்விதமான தாற்பரியங்களடங்கிய பதங்களோ சைவமார்க்கத் தார் ஓர்விதமாய் அறிந்திருக்க, நாம் வேறுவிதமாய் உபயோகித்தால் அது அறிவீனமன்ருே? நம்முடைய பிரயாசை சிரத்தையெல்லாம் நஷ்டமாகாதோ?

கிறிஸ்தவன் சொர்க்கம் தேவையெனும்போது சைவன் எனக்கு சொர்க்கமல்ல மோக்ஷமே தேவையென்று எண்ணிக்கொள்ளுகி ருன். அல்லாது எண்ணும்போது கிறிஸ்தவனுடைய வாஞ்சையிலும் தன்னுடைய வாஞ்சை எவ்வளவோ மேன்மையான வாஞ்சை யென்றும் எண்ணிக்கொள்ளுகிருன். சைவர்கள் நித்திய பேரின்ப வாழ்வுக்கென்று பாடுபடுகிறவர்களென்றும், நாமோ சொற்பக்கால

இன்பமாகிய* சுவர்க்க இன்பத்திற்கே பாடுபடுகிறவர்களென்றும் அவர்கள் தப்பிதமாய் அறிந்துகொள்வதற்கு, நம்முடைய அறிவீ னமே காரணமாகு மாகையால், மேற்கூறிய செய்யுள்களோடும் இதைப்போன்ற வேறய செய்யுள்களோடும் நம்முடைய படிப்பைச் செலுத்தி, சரியான வியார்த்தி செய்தல், நம்முடைய மதிப்புக்கும், வேலை சித்திக்கும், ஏதுவாயிருக்கு மென்பதற்கு ஐயமேயில்லை. ஆகையால் வேதியர்கள் மேற்சொன்ன்வைகளை ஏற்றுக்கொண்டு, ஆண்டவருடைய பணியில் கசடற்றிருக்க முயலுவோமாக! 'கற்க கசடற.'

P. D, Durairaj.

(இன்னும் வரும்.)

Story-Parables

By Miss Grover

கதாரூபமான உவமைகள்

(தொடர்ச்சி)

7. தப்பான எண்ணம்

ஒருநாள் தன்னைப்பற்றி பொருமைபாராட்டின ஒருபிள்ளை ஒரு தெருவின் வழியாய் நடந்துபோகையில் ஏழையான இன்னெரு பிள்ளையைக் கண்டாள். அவள் தனக்குள் சொன்னதாவது: 'அந்தப் பிள்ளையைப்போல ஏழையாயும் கேவலமான உடுப்புகளைத் தரித்த வளாயும் இருப்பது எவ்வளவு பரிதாபம்! அவள் எவ்வளவு மெலிந்த பிள்ளை! கந்தையாயிருக்கிற அவளுடைய சட்டை காற்றிலே அசை வாடுகிறது. அவள் உடுப்பைவிட பட்டு உடுப்பு எவ்வளவு வித்தியா சம்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

---

* மோக்ஷத்திற்கு சுவர்க்கம் என்று சொல்வது தவறு என்று பார்த் தோம்: 'கைலாசம்' என்றும் 'வைகுண்ட பதவி' யென்றும் 'சோணு சலன் பாதம்' என்றும் அடிக்கடி கிறிஸ்தவர்கள் உபயோகிப்பதும் தவறு. இப்பதங்களால் குறிக்கப்படும் இடங்களில் சித்தின்பத்தோடு கூடிய நடனக்களிப்புண்டு, காமக்களுக்கு விஷயமுண்டு, காதியுண்டு, காமம் நிறைவேறும் போகமுண்டு. 'மோக்ஷம்' என்ற பதத்தால் நாம் அறிந்துகொள்வதேதோ, பரிசுத்தர் முன் சுத்த பரிசுத்தமாய்க் கூடி, புருஷன் முன்னிலையில் பெண்சாதி என்னும்படி நாமகளுடைய இயேசு கிறிஸ்துவின் முன் மணவியாகிய திருச்சபை மேலான சுத்த பரிசுத்த ஆவிக்குரிய ஐக்ய பந்தத்தாலுண்டாகும் பேரின்பத்தையேயாம்.

அக்ஷணமே ஒரு அம்மாள் அவ்வழியாய் வந்தாள். 'நீ என்ன கவனித்துப் பார்க்கிறாய்?' என்று அந்த அம்மாள் கேட்டாள்.

'நான் அந்தப் பெண்ணைக் கவனித்துப் பார்க்கிறேன்' என்று அந்தப் பிள்ளை சொன்னாள்.

அந்த அம்மாள் 'நானும் அவளைக் கவனித்தேன். அவள் உடுப்புகள் எவ்வளவு அழகானவைகள்!' என்று சொன்னாள்.

அந்தப் பிள்ளை 'என்ன சொல்லுகிறீர்கள்? நமக்கு எதிரே வருகிற இந்தப்பெண்ணையே கவனித்தேன். அவள் உடுப்புகளெல்லாம் கந்தைதான். அல்லது கந்தை அல்லாவிட்டால் அவைகள் புழைய தாயும் கிழிந்துபோனவைகளாயும் இருக்கின்றன' என்றாள்.

அந்தம்மாளோ 'அப்படி அல்ல. அதை எப்படி சொல்வாய்? உறைந்த பனிபோல சுத்த வெள்ளை உடுப்புகளை அவள் தரித்திருக்கிறாள். அவ்வளவு அழகான உடுப்புகளை நான் இதுவரைக்கும் கண்டதில்லை. நீயோ ஏழைப்பிள்ளை! அதிக கேவலமான உடுப்புகளைத் தரித்திருக்கிறாய். நீ போட்டிருக்கும் கந்தையில் காற்று ஜில் என்று தெரிகிறதில்லையா? ஆனால் என் அருமைப் பிள்ளையே! என் அவைகளை சுத்தமாகவும் தைத்ததாகவும் போடவில்லை? அப்படி செய்வது உன் கடமை' என்று சொன்னாள். அதற்கு அந்தப் பிள்ளை: 'நீங்கள் சொல்லுகிறது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அந்தப் பெண் கந்தை தரித்த பிச்சைக்காரி! என் தகப்பனோ பட்டணத்தில் அதிக ஆஸ்திக்காரர்! நான் பட்டு உடுப்புகளையும் பொன் நகைகளையும் தரித்திருக்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?' என்றாள்.

'உன் ஆத்துமா உடுப்புகளைப்பற்றி பேசினேன்' என்று அந்த அம்மாள் சொன்னாள்.

'ஆத்துமாவைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதென்று அந்தப் பிள்ளை சொன்னாள்.

'ஆமாம், உனக்கு ஒன்றும் தெரியாதென்பது நிஜம்' என்று அந்த அம்மாள் சொன்னாள்.

8. நட்சத்திரங்கள்

ஒரு அருமையான சின்னப்பிள்ளை தன் கட்டிலில் படுத்துக் கொண்டு, இருட்டாயிருந்ததினால் தேம்பித் தேம்பி அழுதுசொண்டிருந்தான். கீழ் அறையிலிருந்த அவன் தகப்பன் தேம்பி அழுகிற சத்தத்தைக் கேட்டு மெத்தைக்கு ஏறிவந்து: 'என் அருமைப்பிள்ளையே! உனக்கு என்ன செய்கிறது? என் அழுதாய்?' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பிள்ளை, 'ஐயா! இருளைப்பற்றி எனக்கு பயம். விளக்கு வைக்கக்கூடாதென்று ஆயாள் சொல்லுகிறாள். அதிக இருட்

டாயிருக்கிறதினால் நாலுமூலையிலும் பேய்கள் இருந்து என்னைப் பார்க்கிறதென்று பயப்படுகிறேன்; நான் பயத்தினாலே செத்துப் போவேன், ஐயா! என் இந்த இருட்டு? பயங்காரமான இராத்திரி வந்ததென்ன? எப்போதும் பகலாயிருந்தால் நல்லது' என்றான். தகப்பன் அந்தப் பிள்ளையைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டு மெத்தையிலிருந்து கீழே இறங்கிப்போய் தோட்டத்தில் நின்றான். அப்போது அவன் தைரியமும் பட்சமுமான சத்தத்தோடு 'அருமைப்பிள்ளையே! உன் கண்களை ஏறெடுத்து மேலே பார்! தேவன் உண்டாக்கின சின்னவிளக்குகளை மேலே காண்கிறாயா?' என்றான்.

சிறுவன் மேலே பார்த்து ஆகாயவிரிவாகிய வானத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கிறதைக் கண்டான்; அவைகள் விளக்குகளைப் போல பிரகாசமாயும் பொன்னைப்போல மஞ்சளாயும் இருந்தன.

'ஐயா! அந்த அழகானவைகள் என்ன?' என்று பிள்ளை கேட்டான்.

அதற்கு தகப்பன், 'அவைகள் நட்சத்திரங்கள், அவைகள் தேவனுடைய சின்னவிளக்குகள்' என்றான்.

'நான் இதுமட்டும் அவைகளைப் பார்க்கவில்லை' என்று சிறுவன் சொன்னான்.

'நீ அதிக சின்னப்பிள்ளையானதினால், இராத்திரியில் வெளியே வரமாட்டாய்' என்று தகப்பன் சொன்னான்.

'இராத்திரியில் மாத்திரமா நட்சத்திரங்களைப் பார்க்கிறோம், ஐயா!' என்று சிறுவன் கேட்டான்.

'இராத்திரியில் மாத்திரம் பார்க்கிறோம்' என்று தகப்பன் சொன்னான்.

'அவைகள் அப்போ மாத்திரமா தெரியும், ஐயா?' என்று சிறுவன் கேட்டான்.

'அவைகள் எப்போதும் வானத்தில் உண்டு, ஆனால் வெயில் எரிக்கும்போது நமக்குத் தெரியாது' என்று தகப்பன் சொன்னான்.

'ஐயா! இங்கே இருளானது பயங்காரமாகத் தெரிகிறதில்லை, நட்சத்திரங்கள் அழகாயிருக்கிறது' என்றான் சிறுவன்.

'ஆமாம்! என் அருமைப் பிள்ளையே! இருளானது எப்போதும் அழகாயிருக்கிறது, நாமோ மூலைகளைப் பார்க்காமல் நட்சத்திரங்களைப் பார்க்கவேண்டும்' என்று தகப்பன் சொன்னான்.

9. ராஜாவின் வருகை

ஒருநாள் சில பிள்ளைகள் தங்கள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, அம்மைதானத்தின் வழியாய் ஒரு சேவ

கன் சவாரிசெய்து, எக்காளம் ஊதி, 'ராஜா வரப்போகிறார்! இன்றைக்கு இவ்வழியாய் ராஜா கடந்துபோவார்! ராஜாவுக்கு ஆயத்தம் பண்ணுங்கள்!' என்று சத்தமிட்டுக் கூவினான்.

பிள்ளைகள் விளையாட்டை விட்டுவிட்டு, ஒருவரையொருவர் பார்த்து:

'அதைக் கேட்டாயா? ராஜா வரப்போகிறார். அவர் சுவர் மேல் எட்டிப்பார்த்து நமது மைதானத்தைக் கண்டாலும் காண்பார்; யாருக்குத் தெரியும்? அதை ஒழுங்குபண்ணவேண்டும்' என்றார்கள்.

இந்தப் பிள்ளைகள் ஒழுங்கீனமானவர்களாயிருந்ததினால் அந்த மைதானம் அதிக கேவலமாய் இருந்தது. மூலைகளில் காகிதத் துண்டுகளும், ஓடுகளும் கிடந்தன. இப்பொழுதோ ஒரு பிள்ளை ஒரு முள்ளையும், இன்னொரு பிள்ளை ஒரு மண்வெட்டியையும், மூன்றாம் பிள்ளை தோட்ட வாசலண்டையிலுள்ள ஒரு கூடையையும் கொண்டுவந்தார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு வேலைசெய்த பிறகு அந்த மைதானம் சுத்தமாயும் ஒழுங்காயும் தெரிந்தது.

'இப்போ சுத்தமாயிருக்கும்! ஆனால் ராஜாக்கள் அழகுள்ள இடங்களைப் பார்க்கப் பிரியப்படுவார்கள், ஆகையால் அதை அலங்கரிக்கவேண்டும். அவர் எப்போதும் சுத்தமானதைப் பார்ப்பதினால் வேறுஞ் சுத்தத்தைக் கவனிக்கமாட்டார்' என்று ஆலோசித்தார்கள்.

ஒரு பிள்ளை வாசனையுள்ள காணலைக் கொண்டுவந்து தரையிலே பரப்பிப் போட்டாள்; மற்றவர்கள் இலைகளால் மாலைகளைத் தைத்து சுவர்களில் தொங்கவைத்தார்கள். அதிக சிறுபையன் ஒருவன் மஞ்சள் பூக்களைப் பறித்து மைதானத்தில் எறிந்துவிட்டு, 'அது பொன்போல் தெரியவேண்டும்' என்றான்.

எல்லாம் முடிந்தபின், அம்மைதானம் அவ்வளவு அழகாயிருந்ததினால், பிள்ளைகள் அதைப் பார்த்து, சந்தோஷத்தோடு கைகொட்டினார்கள்.

'அதை எப்போதும் இவ்விதமாய் வைத்துவிடுவோமாக!' என்று ஒரு சின்ன பையன் சொன்னான்; மற்றவர்களும் 'ஆமாம்! அப்படிச் செய்வோம்' என்று கூவினார்கள்.

நாள் முழுவதும் ராஜா வருவதற்குக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவரோ வரவில்லை; என்றாலும் சாயங்காலமானபோது பழைய உடுப்புகளைத் தரித்திருந்த ஒரு மனிதன் அவ்வழியாய்க் கடந்துபோகையில், சுவர்மேல் எட்டிப்பார்க்க நின்றான்; அவன் முகம் பட்சமாயும் ஆயாசமாயும் தெரிந்தது.

'இது எவ்வளவு இன்பமான இடம்! அருமைப் பிள்ளைகளே! நான் உள்ளே வந்து உட்காரலாமா?' என்று கேட்டான்.

பிள்ளைகள் அவனை சந்தோஷத்தோடு அழைத்துக்கொண்டு, ஒரு பழைய பெட்டியினால் அவர்கள் உண்டாக்கின ஒரு ஆசனத்தின் மேல் அவனை உட்காரவைத்தார்கள். பெட்டியின்மேல் ஒரு சிவப்புத் துணியைப் போட்டதினால் அது ஒரு நல்ல சிங்காசனம்போல் இருந்தது. அப்போ அந்தப் பிள்ளைகள்: 'இது நாங்கள் விளையாடும் மைதானம்! ராஜா வருவதற்கு அதை அலங்காரமாக்கினோம், அவரோ வரக்காணோம், இனிமேல் அதை நாங்கள் நிமித்தமாக இப்படி வைக்கலாம் என்றிருக்கிறோம்' என்றார்கள்.

'அப்படிச் செய்வது நல்லதுதான்' என்று அம்மனிதன் ஒத்துக்கொண்டான்.

'அது ஒழுங்கீனமாயும் கேவலமாயும் இருப்பதைவிட, அழகாயும் சுத்தமாயும் இருப்பது நல்லதல்லவா?' என்று மற்றொரு பிள்ளை சொன்னது.

'ஆமாம், நல்லதுதான்!' என்று அம்மனிதன் ஒத்துக்கொண்டபின்,

'ஆயாசமானவர்கள் இங்கே உட்காரலாம்' என்று அந்த சின்ன பையன் சொன்னான்.

'அதுதான் உத்தமமானது' என்று அம்மனிதன் சொன்னான்.

அவன் இளைப்பாற உட்கார்ந்து, பிள்ளைகளை அவ்வளவு பட்சமாய் நோக்கிப் பார்த்ததினால், அவர்கள் கூச்சமில்லாமல் அவனைச் சுற்றிவந்து, சொந்த சங்கதிகளைப் பேசினார்கள்:

'மாட்டுக்கொட்டகையில் ஐந்து நாய்க்குட்டிகள் உண்டு' என்றும்,

'பட்சியின் கூண்டில் நாலு முட்டைகள் இருக்கும்' என்றும்,

'கடல் கரையில் பொன் கிளிஞ்சலைக் கண்டேன்' என்றும் பேசிக்கொண்டார்கள்.

அம்மனிதன் தலையாட்டி எல்லாம் சந்தோஷமாய்க் கவனித்தான்.

அப்புறம் அவன் தாகத்துக்குக் கேட்டபோது, பொன் பூபோட்ட அழகான கோப்பையில் தண்ணீரை அவனுக்குக் கொண்டுவந்து கொடுத்தார்கள். வந்த மனிதன் பிள்ளைகளுக்கு நன்றிவந்தனம் செய்து எழுந்து புறப்பட்டுப் போனான்; போகுமுன் அவர்கள் தலையின்மேல் கையை வைத்ததினால் அவர்கள் மனசுக்கு சந்தோஷம் உண்டானது.

அம்மனிதன் புறப்பட்டுப் போனபோது பிள்ளைகள் சுவரின் மேல் ஏறி அவன் போகிறதைப் பார்த்தார்கள். அவ்வேளையில் சூரியன் அஸ்தமித்ததினால் வெயில் சாய்ந்த சுடர்களாய் அவ்வழியில் விழுந்தது.

'அவன் எவ்வளவு ஆயாசமாயிருந்தான்!' என்று ஒரு பிள்ளை சொன்னான்.

'ஆனாலும் எவ்வளவு பட்சமாயிருந்தான்!' என்று இன்னொரு வன் சொன்னான்.

'பாருங்கள்! அவன் தலைமேல் வெயில் பிரகாசிப்பதினால் அது பொன் கிரீடம்போல் தெரிகிறது!' என்று முன்பேசின அந்த சின்ன பையன் சொன்னான்.

10. குன்று

ஒரு சின்ன பையன்: 'நான் இந்தக் குன்றின்மேல் ஏறிப் போக என்னால் முடியவே முடியாது, நான் என்ன செய்வேன்? நான் குன்றினடியில்தான் தங்கவேண்டும்; ஐயையோ! நான் என்ன செய்வேன்?' என்று புலம்பினான்.

அவன் அக்காள்: 'அது விசனம்தான். ஆனால் வா, கம்பி, பாரு, இது நல்ல வினோயாட்டு, ஒரு அடி நடந்து தூரியிலே தெரிந்த அடி சுவடு பார். நான் நடந்ததைப் பார், என் பாதத்திலுள்ள கோடெல்லாம் தெரிகிறது. இப்போ நீ நடந்து பார், நான் செய்ததுபோல அவ் வளவு தெளிவாய்க் காண்பி' என்றாள்.

அந்த சின்ன பையன்: ஒரு அடி நடந்து 'என்னுடையது அவ் வளவு தெளிவாய்த் தெரியும்' என்றான்.

அவன் அக்காள்: 'அப்படி நினைக்கிறாயா? என்னுடையதைப் பார், இங்கேயும்! நான் உன்னைவிட பெரிதானதினால் பெரிய அடியாக நடப்பேன், அதினால் அதிக தெளிவாய்த் தெரியும். திரும்பி நடந்து பார்!' என்றாள்.

அந்த சின்ன பையன்: 'இப்போதோ என்னுடையது அவ் வளவு ஆழமாயிருக்கும் பார்! இங்கேயும் அங்கேயும், அதிக ஆழ மாயிருக்கும், பார்!' என்றான்.

அவன் அக்காள்: 'ஆமாம், அது நல்லதுதான். ஆனால் இப்போ நான் நடக்கவேண்டிய முறை வந்தது, நான் பிரயாசப்படுவேன், அப்போது பார்ப்போம்', என்றாள். அப்படியே நடந்துகொண்டே போய் படிப்படியாக அடிசுவடுகளைக் கவனித்து, தூரியானது அவர் கள் விரலுக்குள் எழும்பினதினால் சிரித்துவிட்டார்கள்.

அப்புறம் அந்த சின்ன பையன் தலையை உயர்த்திப் பார்த்தான். 'இதென்ன! நாம் குன்றின் உச்சிக்கு வந்து சேர்ந்தோம்' என்று சொன்னான்.

அவன் அக்காள்: 'என்ன ஆச்சரியம்! எப்படி வந்துவிட் டோம்?' என்றாள்.

11. காரணம் என்ன?

இரண்டு தூதர்கள் சேர்ந்து உட்கார்ந்து, ஒரு புஸ்தகத்திலுள்ள பெயர்களை வாசித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவன்: 'ஆம் தெரியும்! உமக்கு உத்தரவு வந்து விட்டது, அதினால் சரியாய் இருக்கும்; என்றாலும் துக்கமான சங் கதிதான்! இந்த ஏழைக் கிழவி விடுதலைபெறுவாள் என்று நம்பி னேன்; அவள் படுகிற வேதனை அதிகம்; அவள் சுகப்படமாட் டாள்; அவள் மிக்க ஆயாசத்தினால் போகத்தான் வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். அந்த ஏழைப் பெண்ணை கொஞ்சம் வயசும் அழகுமுள்ளவள்! நல்ல கதி ஆகும் என்று வரப்போகிற காலத்தை நினைத்து சந்தோஷப்படுகிறாள். அதினிமித்தம் எனக்கு விசனம் தான், என்றாலும் விசனப்படக்கூடாதென்று அறிந்திருக்கிறேன்' என்று சொன்னான்.

மற்றவனை: 'அருமை சிநேகிதனே! நானும் நன்றாய் ஆலோசிக் காமல் நீ நினைக்கிற மாதிரி நினைத்தேன். இப்போதோ எல்லா சங் கதிகளையும் பார்த்து நியாயத்தை அறிந்திருக்கிறேன். அந்த கிழவியை இன்னும் அனுப்பக்கூடாது; அவ்வூரிலுள்ளவர்களுக்கு ஆத்தும வெளிச்சம் அவள் மூலமாய்த்தான் உண்டாகும்; அவள் குடும்பத் தாரும், வைத்தியனும், அவளுக்கு உதவிசெய்கிற பெண்ணும், பக் கத்து வீட்டுக்காரர் எல்லாரும், அவள் காட்டும் வெளிச்சத்தினால் வழி அறிந்து நடக்கிறதேயல்லாமல், அவர்களுங்கூட இப்போ வெளிச்சமடைந்து போகிறார்கள். அவள் முந்தி தன் கிழபுருஷ னுக்காக எல்லா உதவியும் செய்து வந்ததினால் அவன் ஆத்தும விஷயத்தில் பரிதாபமான ஸ்திதியாய், கறுப்பும் அவலக்ஷணமுமான கந்தை உடுத்திக்கொண்டதுபோலிருந்தான்; இப்போதோ அவளுக் காக அவனே எல்லா உதவியும் செய்யவேண்டியதாகையால் அவனு டைய ஆத்துமா நல்ல சுகமாய்ப் போகும்; இன்னும் கொஞ்ச வரு ஷம் அவள் தங்கக்கூடுமானால் அவனுடைய ஆத்துமா அதிக நேர்த்தி யாய் மாறும்' என்றான்.

'அந்த வாலிபப் பெண்பிள்ளை நிலைமை எப்படி?' என்று முதல் பேசின தூதன் கேட்டான்.

அதற்குப் பதிலாய்: 'ஆ! அந்தப் பெண்பிள்ளை என்றால், அவள் இனிமேல் இருக்கக்கூடாது. ஏழை பிள்ளை! அவள் துவக்கத் திலேதான் தவறிப்போனாள். அவள் தகப்பன் ஆஸ்திக்காரனாயிருந் தாலும், ஆத்தும விஷயத்தில் வாழ்வு கிடையாது. அதிக பரிதாபமான நிலைமை! அவள் சொந்தக்காரர் இப்படி ஏழைகளானதினால், அவ

ளுக்கு உதவிசெய்யும்படி யாரும் இல்லை ; நேற்றையதினம் அவள் ஆத்துமா உடம்பைச் சோதித்துப் பார்த்தேன் ; அது அவலக்ஷணமாயிருந்தது, இப்போதோ அவலக்ஷணம் நீங்கிப்போயிருக்கும். இச் சமயத்தில் அவளை உடனே எடுத்துவிட்டால் அவள் புது ஆத்துமா உடையவளாய்ப் போவாள். அவள் ஒரு ஏழை ஆட்டுக்குட்டி! அதுவுமல்லாமல் அவள் நிமித்தம் விசனப்படும் அவள் குடும்பத்தார் அந்தத் துக்கத்தினுல் குணப்படுவார்கள். அவள் மரணத்தினுல் அவர்களுக்குண்டாகும் துக்கம் அவர்கள் ஆத்துமாக்களுக்கு மருந்தும், அப்பமும், தண்ணீருமாயிருக்கும். அதினுல் அவர்களுக்குள் ஆச்சரியமானமாறுதலுண்டாகும் என்று எதிர்பார்க்கிறேன்' என்றான்.

அதற்கு முதல் தூதன் 'இப்போ விளங்குகிறது. நமக்கு என்ன தெரியும்!' என்றான்.

அதற்கு இரண்டாவது தூதன் : 'ஆம், நிசம்தான்! என்றாலும் கொஞ்சம் படித்திருக்கிறோம். நமது அறிவு அதிக சொற்பம்தான் என்பது இப்போ கண்டறிகிறோம். முன்காலத்திலோ எல்லாம் அறிந்திருக்கிறோம் என்று யோசித்தபோது ஒன்றும் அறியவில்லை ; பூலோகத்தார்போல் இருந்தோம்! அதுவே பரிதாபமான ஸ்திதி!' என்றான்.

'ஆமாம்! அதுவே பரிதாபமான ஸ்திதிதான்' என்று மற்ற தூதனும் யோசனையோடு சொன்னான்.

C. L. S. PRESS, MADRAS—1919

No. 158 ஜூலை 1919

வேதியர் விளக்கு

Paul the Dauntless

அஞ்சா நெஞ்சராகிய பவுல்

18-ம் அத்தியாயம்

மேற்கு நோக்கிச் செல்லல்

(தொடர்ச்சி)

பிடூமியின் மலைப்பிரதேசத்திலிருந்து அவர்கள் இப்போது ஓர் அகன்ற நீளமான பள்ளத்தாக்குக்குள் இறங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வலதுபக்கத்தில் மலைகள் மெள்ள, மெள்ள இறங்கி ஓர் அழகிய சமபூமியோடு கலந்தன. அவர்களுக்கு இடதுபக்கத்தில் ஜடாமலை என்ற அழகிய மலையானது பள்ளத்தாக்குகளுக்கு மேலே அதிக உயரமாய் எழும்பினது.

தீமோத்தேயு சமபூமியைக் கூர்ந்துபார்த்தபோது அதிக ஆச்சரியமடைந்தான். மகா ரோமதுறைமுகமாகிய இந்த துறைமுகப்பட்டணத்தைப் போன்ற வேறெந்த பட்டணத்தையும் அவர்கள் கண்டதில்லை. இப்பட்டணமானது அதிக்பெலமான கோட்டை வாசலால் சூழப்பட்டிருந்தது. இம்மதிலின் சுற்றளவு சுமார் மூன்று மைல். கோட்டை மதிலின்மேல் அநேக கோபுரங்களும் இருந்தன. பளிங்குக்கற்களால் கட்டப்பட்ட அலங்காரமண்டபம் அவனுடைய கண்களுக்கு முன்பாக பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஒரு அழகான நாடகசாலை மேற்குமுகமாய் கடலுக்கு நேரே திரும்பிக்கொண்டிருந்தது. ஜடாமலையிலுள்ள உஷ்ண ஊற்றுக்களினின்று திவ்யமான ஜலத்தைக் கொண்டுவருகின்றன. நீர்க்குழாய் கட்டடங்கள் அச்சமபூமிக்கு உள்ளே சென்றது.

துரோவா பட்டணத்திலே வைத்தியன் ஒருவன் இருந்தான், அவன் கடலுக்கு அப்பாலிருந்த மகாநகரமாகிய பிலிப்புபட்டணத்திலிருந்து வந்தவன். அவன் பெயர் லூக்கா.

ஒருநாள் இவனும் இம்மூன்று யாத்திரிகர்களும் ஒருவரையொருவர் சந்தித்தார்கள். இவர்கள் எப்படிச் சந்தித்தார்களென்று நமக்குத் தெரியாது. இந்த லூக்கா இவர்களைச் சந்தித்தகாலத்தில் கிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொண்டானோ? அல்லது வைத்திய தேவதையாகிய அஸ்குலாபியஸ் என்ற தெய்வத்தின் நாமத்திலே தொழுதுகொண்டானோ? என்பதும் நாம் சொல்லமுடியாது. இது எப்படியாயினும் வைத்தியனாகிய லூக்கா மகாவைத்தியராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சீக்கிரம் சீஷனாகிவிட்டான். பவுலுக்கிருந்த சிநேகிதர் அநேகர். ஆனால் அவர்கள் எல்லாருள்ளும் லூக்காவுக்கே நாம் மிக கடமைப்பட்டிருக்கிறோம். எனெனில் உலகத்திலுள்ள புஸ்தகங்களுள் மகாமுக்கியமான புஸ்தகங்களில் ஒன்றாகிய அப்போஸ்தல நடபடி ஆகமம் என்னும் நூலை எழுதியது இந்த லூக்காதான். லூக்கா பிலிப்பு பட்டணத்தைப்பற்றி அதிக பெருமை பாராட்டினான். மக்கதோனியா நாட்டு பிலிப்பி என்ற அரசன் பெயரை உடைய இப்பட்டணமானது ரோமராஜ்யத்திலுள்ள மகா விசேஷித்த ரஸ்தா ஒன்றின்மேல் நின்றது. இந்த மகாரஸ்தாவானது மக்கதோனியா நாட்டின் வழியே அநேக நூற்றுக்கணக்கான மைல் தூரம் சென்று ஆதிரியாக்கடல் கரையிலுள்ள டிராகியம் என்ற இடத்துக்கு நேரேசென்றது. அங்கேயிருந்து பிரின்டிசியம் என்ற இடத்துக்கு கப்பல் வழியாய்ச் சென்று, பிரின்டிசியத்திலிருந்து ரோமாபுரிக்குக் குதிரைமேல் சவாரிசெய்து போவார்கள். பிலிப்பு பட்டணத்தின்பேரில் அதிக அபிமானமும் பெருமையுமுடைய லூக்கா, இவ்விசேஷங்களை எல்லாம் தன் சிநேகிதருக்குச் சொன்னான்.

அந்த நாள் இரவு பவுல் நித்திரை செய்தபோது அவனுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று. மக்கதோனியாவிலிருந்து வந்த ஒரு மனுஷன் தன் கைகளைப் பவுலுக்குநேரே நீட்டி மக்கதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்யுங்கள் என்று தன்னை வேண்டிக்கொள்ளுவதாக ஒரு தரிசனம் கண்டான். தரிசனத்தில் வந்த இந்த மனுஷன் லூக்காவாயிருக்கலாம். அடுத்தநாள் காலையில் பவுல் தான் இரவில்கண்ட சொப்பனத்தை தன்கூட்டாளிகளுக்குச் சொன்னான். இதன் அர்த்தம் அவர்கள் எல்லாருக்கும் வெளிப்படை. கர்த்தருடைய ராஜ்யத்தின் செய்தியை மக்கதோனியா நாட்டிலுள்ள

பிலிப்பி முதலிய பட்டணங்களிலுள்ள ஜனங்களிடத்துக்குச் சென்று அவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி கர்த்தர் தங்கள் எல்லாரையும் அழைக்கிறார் என்பதை அவர்கள் எல்லாரும் அறிந்தார்கள்.

— துரோவாபட்டணத்து துறைமுகத்துக்குச் சென்று கப்பல் ஏறி எகியன் கடலுக்குச் சென்றார்கள்.

(இன்னும் வரும்.)

Hints to Preachers

By P. D. Durairaj, B.D.

3rd Chapter

வேதியர்க்கோர் வார்த்தை

Questionable Stories—ஆக்ஷேபனைக்குரிய கதைகள்.

இந்துமார்க்க கதைகளை சிற்சில சமயங்களில் சொல்லி, இந்துமார்க்கத் தெய்வங்களின் நடத்தையை உற்றுப்பார்க்குங்கால், தெய்வத்துக்குரிய இலக்ஷணங்கள் இல்லையே யென்று நிரூபிக்க எத்தனிக்கையில், நவீன காலத்து இந்துக்கள் புராணக்கதைகளின் உட்கருத்து வேறேயென்றுகூறி சுவிசேஷகர்களையே அறிவீனரென்று பரிகாசஞ்செய்யவாவது அல்லது மேற்படி கதைகளுக்கும் நமக்கும் உடன்பாடு இல்லையென்று கூசாமலுரைக்கவாவது புகுந்திருக்கின்றன ராகையால், இப்படிப்பட்ட ஆவியையுடையோர் நிருக்குமிடங்களில், ஆக்ஷேபனைக்குரிய கதைகளை யெடுத்துப்பேசுவது காலநஷ்டமும் அபிரயோஜனவாதத்திற்கும் இடமாகுமாகையால், அவைகளை நீக்கிச் சுத்த சுவிசேஷத்தையே வேறே பிரயோஜனமான மார்க்கமாய்க் கூறவேண்டும் என்பதே இந்த அதிகாரத்தின் கருத்து.

ஆக்ஷேபனைக்குரிய கதைகள் எவையாமெனில், அவைகளை நாம் கைவிரலிட்டு எண்ணி இத்தனையென்று கணிக்கமுடியாவிடினும், இரண்டு கதைகளை நாம் எடுத்துக்கூறி, இவைகள் எப்படி சாதாரணமாய் பிரசங்கிகள் யாவரும் அறிந்துள்ள கதைகளென்றும், அடிக்கடி அவரது சம்பாஷணைகளில் உபயோகப்படுத்தப்பட்டு வந்தவை யென்றும், ஆனால் தற்காலத்திலோ மேற்படி கதைகளுக்கு உட்கருத்து வேறேயென்று கேவலமான கதைகளுக்கும் நியாயங் கூறும்படி சிலர் எழும்பியிருக்கின்றனரென்றும் பார்ப்போம். (இவைகளைக்கொண்டே ஆக்ஷேபனைக்குரிய மற்ற கதைகளின் ரூபத்தைக் கண்டுகொள்க.)

கிருஷ்ணன் பதினாயிரங் கோபிஸ்திரீகளோடே புணர்ந்து அவர்கள் கற்பையழித்த வரலாற்றை யெடுத்துக்கூறி, பிறகு அக்கதை, யின் பாடமாக, 'கிருஷ்ணன் சிற்றின்பப்பிரியன், காமவேகமுடை யவன். இவனே வழிபடும் பக்தர்கள் பரிசுத்த நிலையை யடைவது யெங்ஙனம்? குரு எப்படியோ அப்படியல்லவோ சிஷ்யனும்! கிருஷ் ணனைப் பின்பற்றுகிறவனுங்கூட மாம்ச இச்சையை மேற்கொள்ள இயலாமற்போவதோடுங்கூட, கிருஷ்ணரே விளையாடின விளை யாட்டு நாமும் விளையாடினாலென்ன வென்று நினைத்து, சோத னையை ஜெயிக்கவேணுமென்ற ஆசையாவது, ஜெயிக்கும்படியான சக்தியாவது கிடையாமல் தீமைக்குள் விரைந்துசெல்வதற்கு இது தூண்டியும் விடும்' என்று பிரசங்கிக்கின்றோம். இது சரிதான். புராணத்திலுள்ளவாறு நாமுஞ் சொல்வதில் தவறு ஏற்படாது. ஆனால் பலவிடங்களில் படித்த பிராமணர்களும் ஓர் சமயத்தில் சென்னை சர்வகலாசாலை பிரவேசப் பரீக்ஷைக்குப் படித்துவந்த மாணாக்கரில் ஒருவனும் அந்தக் கதைக்கு விசேஷார்த்தஞ் சொல்லி, நம்மேல் குறை கூறிக்கொண்டதையும் நாம் கேட்டிருக்கிறதினால், சுவிசேஷகர்களுக்கு அவர் கூறும் விசேஷார்த்தம் என்னவென்று உரைக்கிறோம்: கிருஷ்ணன்—இறைவன், பதி, கடவுளென்றும், பதினாயிரம் கோபிஸ்திரீகள்—பதினாயிரம் ஆன்மாக்கள், பசுக் கள், பக்தாட்களென்றும், ஓர் காலத்தில் ஈசுவர ஸ்மரணையும் ஈசுவர பக்தியும் நிறைந்து ஈசுவரனுடே முழுவதுமாய் லயமாகி யிருத் தலையே விரும்பமுடையவரும் அதற்கான பரிபக்குவ நிலையை யடைந்தவர்களுமாகிய பதினாயிரத் தொண்டர்களாகிய இவர் களுக்கு ஓர் நாள் ஏககாலத்திலேயே இவ்வித பரமபதமாகிய பரப் பிரம்மத்தோடு ஜீவாத்மா சேர்த்துப்போகும்படியான இன்பத்தைக் கட்டளையிடுவோமென்று அந்த இறைவன் வாக்களித்தாரென்றும், அவரந்தப்படியே அந்த பக்தாட்கள்மேலுள்ள கருணை அன்பு முத லியவை எவ்வளவு நிஜம், அவர் வாக்கு எவ்வளவு உண்மையென் றதை நிரூபிக்க இப்படி பகவத்பலனுண்டானதை யாவருமறியும்படி யாகவே, இறைவனே கிருஷ்ணராகவும், பதினாயிரம் ஆன்மாக் களே பதினாயிரம் கோபிஸ்திரீகளாகவும், பரமாத்மா ஜீவாத்மாக்கள் மேலுள்ள வாஞ்சையை, புருஷன் ஸ்திரீயைத் தீண்டுவதினாலுண்டா கும் இன்பத்திற்குச் சரியாயும், இந்த ரூபமாய்க் கற்பித்துச் சொன்ன கதையாக்குமென்று விசேஷார்த்தங் கூற புகுந்திருக்கிறார்கள். ஆகையால் இவ்விதமாய்ப் பேசும் ஹிந்து கிறிஸ்தர்கள் நம்முபந்நி யாசங்களைக் கேட்பவரின் கும்பலிலிருந்தால், மேற்படி கதையைச் சொல்லாமலேயிருத்தல் நலம் என்பதை நாம் சொல்லவேண்டிய

161979

தில்லை. கேட்கிறவர் பாமரர் எனத் தெளிவுண்டாகுமானால், மேற் படி கதையைச் சொல்ல அவசியமிருக்கும்போது சொல்லிவிட்டால் தோஷமில்லை. எனினும், இந்துமார்க்கத்தின் மேன்மையைஸ்திரப் படுத்தவேணும்; எவ்விதத்தாலும் இப்படிச் செய்யவேண்டுமென்ற ஆவி தற்காலத்தில் அதிகமாயுண்டென்பதை யாவரும் அறிந்து கொள்ளவேண்டியதோடுங்கூட இவருடன் சம்பாஷிக்க எத்தனிக் கும் சுவிசேஷகர்களுக்கு எச்சரிப்பாக இக்கதையின் விசேஷார்த் தத்தையும் அறிந்துகொள்ளவேண்டியது பிரயோஜனமாயிருக்கும் என்பது நமது துணிபு.

மேலும் இவ்விதமான விசேஷார்த்தம் நழைக்கக்கூடாத கதை கள் அநேகமுண்டு. அவைகளில் ஒன்றை நாம் எடுத்துச் சொல் லத் துணிந்தாலோ, அப்பொழுதுங்கூட இந்த நவீன ஆவி வேறுவித மாய் உத்தரவுசொல்லத் துணிகிறதேயன்றி அக்கதை அப்படியே ஒப்புக்கொள்ள மனமற்றுப்போகிறதென்பதற்கு உதாரணமாக பின் வரும் சம்பவத்தைக் கூறுகின்றோம்.

ஓர் சமயத்தில் ஏழு எட்டுக் கிறிஸ்தவ பிரசங்கிகள் ஓரிடத்தில் கூடி ஒரு வைஷ்ணவனோடு கடவுள் லக்ஷணங்களைப்பற்றி தர்க்கித் துக்கொண்டும், அந்த வைஷ்ணவன் கிறிஸ்தவர்களைப் பார்த்து இயே சுகிறிஸ்துவின் தெய்வலக்ஷணங்கள் எப்படி விஷ்ணுவின் தெய்வ லக்ஷணங்களிலுஞ் சிறந்தனவென்று வாதித்து மடக்கிக்கொண்ட சம யத்தில் இவர்களைத் தேடிவந்த நாமும் தற்செயலாய் இவன் வீட் டண்டையிலே இவர்களைக் கண்டுபிடிக்க, அப்பொழுது இந்த வாதத்தை நம்மிடமுஞ் சொல்லி எம்மையும் இதற்குள்ளிழுத்து வேடிக்கை செய்யவேணுமென்ற மனவெழுச்சியையும், விஷ்ணு வின் கேவல நடத்தைகளுக்கு உட்கருத்து சொல்லக்கூடிய சாமர்த் தியமும் இந்த நவீன ஆவியும் இவனுக்குண்டென்று நிச்சயித்துக் கொண்ட பின்னர் பின்வருமாறு அவனுக்கு உரைக்கப்பட்டது: (சைவர்களிற் சிலர் அங்கிருந்தனர்.) தெய்வ லக்ஷணங்கள் யாரிடத் தில் சிறந்து விளங்கினவென்றறியவேண்டுமானால், இயேசு கிறிஸ்துவையும் விஷ்ணுவையும் சிவனையும் தனித்தனியாய் நிறுத்தி கிறிஸ்துவைப்பற்றிய சரித்திரங்கள் விஷ்ணுபுராணம், சிவபுராணம் முதலியவைகளைப் பார்வையிட்டு, பின் தனித்தனியாய் அவரவர் லக்ஷ ணங்களை யெழுதித் தெரிந்துகொண்டால் மாத்திரம் யாருடைய தெய்வ லக்ஷணங்கள் சிறந்துவிளங்கும் என்று கண்டுகொள்ளலா மென்று சொல்லி, சைவர்களையும் வைஷ்ணவனையும் வாய்மதம் அடக்க ஐயனார் சுவாமி வரலாற்றைக்குறித்து, அவர் பிறப்பு எப்படி உண்டானது? சிவனும், விஷ்ணுவும் மோகினிவேஷக் காலத்தில்,

எதோ ஓர் தெய்வப்பெண்ணென்று தப்பிதமாய் எண்ணி, அந்தப் பொய்ப் பெண்மேல் மோகித்து அதைத் தரத்தியோட, வேஷமா யிருந்தவர் வெட்கி, கைவசமடைந்தால் கேவலத்திற்கிடமாகுமென்று பயந்து ஓட, இப்படி ஒருவரையொருவர் காடுமேடுகளெல்லாம் தரத்தியோடி, பின் சையோக மடைந்ததின் பலனுய்ப் பிறந்த பிறப் பாம் ஐயனென்று புராணங் கூறுவதாக அடிக்கடி கேள்விப்படு கிறோமே. இந்தப் புராணக்கதை வாஸ்தவந்தானென்றால், இதில் இருவரும் தெய்வ லக்ஷணங்கள் பொருந்தினவர்தானேவென்று கேட் கும்போது, அவர்கள் பதில் சொல்ல எதுவொன்றுமில்லாமல், எதோ வொன்று சொல்லவேண்டுமென்று நினைத்து, உடனே இந்தக் கதைக்கும் நமக்கும் உடன்பாடு கிடையாதென்று சொல்லி விட்டார். இவ்விதமாய்த்தான் இந்தப் புதிய ஆலி ளம்பியுள்ளது. கூடியவரையில் நல்ல உட்கருத்து வொன்று கேவலமான கதைகளுக் குள் நுழைக்கவும், கூடாதவைகளுக்கும் நமக்கும் உடன்பாடு இல்லை யெனவுமாச்சு. ஆகையால். இத்தகைய வகுப்பாரை யடைந்து அவர்களுக்குள் சுவிசேஷம் அறிவிக்க விரும்புகிறவர்க ளாகிய நாம் ஞானமாய்ப் போதிக்கவும், வீண் பிரயாசைக்கு இடங் கொடாமலும், நாம் எண்ணிவந்த நோக்கத்தைக் கொண்டுசெலுத்தும் படி தக்கவிதமாய் நடந்துகொள்ளவும் வேண்டுமென்பதை நாம் அறிந்துகொள்வது உசிதமாகும்.

The Reunion of Christendom and the Peace of the World

கிறிஸ்தவர்களின் மறு ஐக்கியமும், உலகத்தின் சமாதானமும்

உலக சீர்திருத்த சங்கத்தார் (The World Conference) திருச் சபைகளுக்கு, விசுவாசம், ஒழுங்கு இவைகளைப்பற்றி பின்வரும் சேதிகளை அனுப்பியிருக்கிறார்கள்.

நாம் நம்பியிருக்கிற உலகத்தின் புதிய ஒழுங்கு, நிலையாகவும் பிர யோஜனமாகவும் இருக்கவேண்டுமானால், சமாதான வருகையோடு, சமாதானம், நீதி, அன்பு இவைகளின் கர்த்தாகிய ஒருவர் மூலமாய் கிறிஸ்தவர்களுக்குள் பிரத்தியட்சமான ஐக்கியம் அல்லது ஒற்றுமை இருக்கவேண்டியது அத்தியந்த அவசியமாம். மனு மக்களுக்குமுன்

கொண்டுவரப்பட்ட திரும்பக்கட்டுதல் (reconstruction) என்னும் காரியம் அதிக முக்கியமானது. வல்லமையில் சரிபாகமான தேசங் களை மறுபடியும் ஏற்படுத்தல் என்னும் நோக்கம் அல்ல. ஏனெனில், அப்படிச் செய்வதால் சிலகாலத்திற்கு சோர்ந்துபோன உலகத்தில் யுத்தம் உண்டாகாமலிருக்கிறதற்கு அனுகூலமாக இருந்தாலும், ஜாதி களை ஈர்வத்தினாலும், அவநம்பிக்கையாலும் நிரப்பி, அவர்கள் யுத்த சின்னங்களை அதிகமாய் சேகரிக்க இடம் உண்டாக்கும். நம்முள் ளிருக்கும் எண்ணம் யாதெனில், உலக சகோதர ஐக்கியம் உண் டாக்கவேண்டும் என்பதாம். இந்தப் பெரிய அகோரமான யுத்தத் தில் நாம் எல்லாரும் கற்றுக்கொண்ட கடமை, ஊழியம், தத்தம் என் பவை எல்லாம் அப்படியே எப்போதும் செய்யப்படவேண்டும். ஐசு வரியவான்களும் தரித்திரரும், பலவீனரும், பலவான்களும், ஒவ் வொருவனும் தனக்குத் தான் பிழைக்கிறான் என்ற எண்ணம் இருக் கும்வரைக்கும் எவனும் தான் அடையவேண்டிய உயர்ந்த நிலைமை அல்லது அந்தஸ்துக்குப் போகமுடியாது.

கன்னி மரியாளிடத்தில் அவதரித்துப் பிறந்த தேவகுமாரனுகிய இயேசுவால் வெளிப்படுத்தப்பட்ட 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்ற சத்தியத்தை ஜாதிகளும், ஒவ்வொரு மனுஷனும், மனுஷியும் அங்கீகரிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் புதிய பிரமாண மாகிய, 'அவர் நம்மை நேசித்ததுபோல நாமும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்' என்னும் சங்கதி எல்லாருடைய மேலான சட்டமாயிருக்கவேண்டும். இந்த சமாசாரத்தை அதாவது இந்த சட்ட டத்தை நிலைநிறுத்தி, நாம் ஜீவிக்கவேண்டிய ஒரே ஒரு சட்டமும் நித்தியமும் அநாதியுமாய் நிற்கின்ற அன்பின் சமாச்சாரம் இதை வெளிப்படுத்தும் பொருட்டே திருச்சபையானது நிலைநாட்டப் பட்டது. ஆனால் அன்பு ஒற்றுமையைக் காட்டுகிறது. ஏனெனில், அன்பானது கடவுளின் ஒரே ஜீவனில் பங்குபெறும்படி செய்கிறது. ஒரு பிரிவினையுடைய சபையானது அந்த ஜீவனை பூரணமாய் வெளிப்படுத்த முடியாது. அந்த அன்பை சரியானபடி விளங்கச் செய்யவும் கூடாது.

விசுவாசம், ஒழுங்கு இவைகளைப்பற்றி கூடிய உலகச்சங்கமானது கிறிஸ்தவர்களை உண்மையான கிறிஸ்தவ அன்பிற்கும் தாழ்மைக் கும் கொண்டுவரவும், ஒருவரை ஒருவர் சரியாக அறியவும், ஒருவர் வேலையில் ஒருவர் உற்சாகப்படவும், அந்த பிரத்தியட்சமான ஐக்கியம் வளர்ந்துவர ஆயத்தமுண்டாக்கும் வழியை சித்தப்படுத்தவும், உல கத்தை அதின் மீட்பரிடம் கொண்டுவர அதை மனந்திரும்பச் செய் யவும் ரூபகாரப்படுத்தவும் செய்யத்தக்க ஒரு முயற்சியேயாம். சில

சில விடங்களில் அங்கங்கே ஒருவிதமான முயற்சி முன்னமே இவ்வித ஐக்கியத்திற்காக எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி முயற்சி எடுக்கிறவர்களைப் பரிசுத்த ஆவியான தேவன், அனல்மூட்டி, வழி நடத்தி வருகிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் உலகமானது முன்போல பலவிதமான ஜாதிகளின் ஒரு தொகையாக இருக்கக் கூடாது, முன் ஒருபோதும் இராதமாதிரி இப்போது அது ஒன்றாயிருக்கும். மேலும் மூல ஆதாரமாகிய மூலைக்குத் தலைக்கல்லாகிய கிறிஸ்துவின்மேல் இதை அஸ்திபாரப்படுத்தினாலொழிய, இன்னும் வரும் தலைமுறை தலைமுறைக்கும் ஒருபோதும் ஒன்றாகமாட்டாது. உலகமுழுவதும் சமாதானத்தால் நிறைந்திருக்கும் காட்சியை எல்லாக் கிறிஸ்தவர்களும் காணவேண்டியது அவசியமாயிருக்கிறது. எனெனில் அது எல்லா அறிவுக்கும் கடந்த தேவசமாதானத்தில் ஒன்றாயிருக்கிறது. எட்டு வருஷங்களுக்குமுன் கஷ்டமாகக் காணப்பட்ட ஒரு அளவுக்குமேலாக இப்போது தேவன் இந்த உலகச்சங்கத்தின் முயற்சியை அதிகமாக ஆசீர்வதித்திருக்கிறார். எந்தெந்த சபையைப் போய்க்கேட்டாலும் அநேகமாக அவை ஒவ்வொன்றும் இதனுடே சேர தன் நல்அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது. புராட்டஸ்டாண்டு எபிஸ்கோபல் சபையின்விசாரணைசங்கத்தார் இந்த உலகச்சங்கத்தை சேரும்படியாக ரோமசபையையும், கிழக்கு பக்கத்திலுள்ள சபைகளையும் அழைக்கும்படியாக ஆட்களை நியமித்து அனுப்பும்படியாக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமாகவே அவர்கள் இன்னும் இவ்விதமான அழைப்பு போகாத தேசங்களுக்கெல்லாம் அவர்களை அனுப்ப சித்தமாயிருக்கிறார்கள்.

பிரத்தியட்சமான ஐக்கியத்திற்கு வளர்ச்சியுண்டாக வேண்டுமானால் எல்லாச்சபைகளின் ஆழ்ந்த விருப்பத்தினால் மாத்திரம் ஆகுமே தவிர வேறெவ்விதத்தாலும் உண்டாகாது. மேலும் அதை அடையும்படியாக இடைவிடாத ஊக்கமான ஜெயத்தால் மாத்திரம் ஆகுமே. ஒழிய வேறெவ்வித பிரயாசத்தாலும் அடையமுடியாது. உன்னுடைய சிநேகிதரையும், உன்னைச் சார்ந்தவர்களையும், உனக்கு அறிமுகமானவர்களையும், இன்னும் இதர சபையைச் சேர்ந்தவர்களையும், கிறிஸ்தவர்களின் மனம் மாறும்படியாகவும், இவ்வித ஐக்கியத்திற்கு ஒற்றுமைப்படும்படியாகவும் உலகச்சங்கத்தாருடைய வழிநடத்துதலுக்காகவும் ஜெபிக்கும்படி நீ தூண்டவேண்டும். பிரத்தியேகமாக வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் நடக்கவும் குருமார் இதற்காக பொதுவான ஆராதனை நடத்தவும் பிரயாசப்படு.

உலகச்சங்கத்தாருடைய காரியங்களைக் குறித்து Robert A. Gardiner, 174 Water Street, Gardiner Main, U. S. A. என்று

எழுதி அறிந்துகொள்ளலாம். ஐக்கியத்திற்காக ஜெபப்புஸ்தகம் ஒன்று Mr. Gardiner என்பவருக்கு எழுதி இலவமாகத் தருவித்துக் கொள்ளலாம்.

Story-Parables

By Miss Grover

கதாரூபமான உவமைகள்

(தொடர்ச்சி)

12. கோதுமை வயல்

சில பிள்ளைகள் ஒரு கோதுமை வயலில் அறுப்பு அறுக்க அனுப்பப்பட்டார்கள். கோதுமை பொன்போல மஞ்சள் நிறமானது, வெயில் பிரகாசமாய் அடித்தது, பாப்பாத்தி பூச்சிகள் அங்குமிங்கும் பறந்தன. சில பிள்ளைகள் நன்றாய் வேலைசெய்தார்கள், சிலர் கேவலமாய்ச் செய்தார்கள். ஒரு பிள்ளையோ இங்குமங்கும் ஓடி பாப்பாத்தி பூச்சிகள் பறக்கிறதைப் பின்தொடர்ந்து பாட்டு பாடினான்.

அப்புறம் சாயங்காலம் வந்தபோது கோதுமை வயலின் எஜமானனவன் பிள்ளைகளைக் கூப்பிட்டு, 'இப்போ வாசலுக்கு வந்து உங்கள் அரிக்கட்டுகளைக் கொண்டுவாருங்கள்' என்றான். அப்படியே பிள்ளைகள் தங்கள் அரிக்கட்டுகளைக் கொண்டுவந்தார்கள். சிலர் கட்டுகளைப் பெரியதாயும் கெருக்கமாயும் சமமாயும் வைத்ததினால், ஜாஸ்தி சுமந்துகொண்டு வந்தார்கள். சிலர் இருந்ததைவிட ஜாஸ்தியாகத் தெரியும்படி பெரிதாயும் இலேசாயும் கட்டுகளைக் கட்டி இருந்தார்கள். ஒரு பிள்ளை கதிர் அறுக்காமல் இங்குமங்கும் பாப்பாத்தி பூச்சிகளைப் பின்தொடர்ந்து ஓடினதினால் வெறுங்கையாக வந்தது.

எஜமானனவன் அந்த பிள்ளையைப் பார்த்து 'உன் அரிக்கட்டுகள் எங்கே?' என்றான். அந்தப் பிள்ளை தலைகுனிந்து: 'எனக்குத் தெரியாது, நான் கொஞ்சம் பொறுக்கினேன் அவைகளைக் காணோம், எப்படிப்போனது என்று எனக்குத் தெரியாது' என்றான்.

'அரிக்கட்டுகள் இல்லாமல் ஒருவனும் இங்கே புகுந்து வரக்கூடாது' என்று எஜமானனவன் சொன்னான். 'அது எனக்குத் தெரியும், ஆனால் மற்றவர்கள் போகிற இடத்தைப் பார்க்கவேண்டு

மென்று வந்தேன், அதோடு நான் அவர்களை விடக்கூடாதென்று அவர்கள் சொன்னார்கள்' என்றான். அப்பொழுது பிள்ளைகள் எல்லாரும் அவனைப்பார்த்து சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

அவர்களில் ஒருபிள்ளை சொன்னதாவது: 'அருமை எஜமானே! அவனை உள்ளேவிடும். காலையில் எனக்குச் சுகவீனமானபோது இந்தப் பிள்ளைதான் வந்து என்னோடுவிளையாடி, பாப்பாத்தி பூச்சிகளைக் காண்பித்ததினால் என் நோவெல்லாம் போய்விட்டது, அதோடுகூட அவன் அரிக்கட்டுகளில் ஒன்றை எனக்குக் கொடுத்தான். அதைத் திரும்ப அவனுக்குக் கொடுக்க யோசித்தேன். ஆனால் என்னுடைய தில் அது இன்னதென்று எனக்குத் தெரியவில்லை' என்றான்.

இன்னொரு பிள்ளை சொன்னதாவது: 'அருமை எஜமானே! அவனை உள்ளேவிடும். நடுப்பகலில் வெயில் என் தலையில் அடித்ததினால் நான் மயக்கமடைந்து செத்தவன்போல் விழுந்தேன். அப்போ இந்தப் பிள்ளை ஓடிவந்து என்னைப் பார்த்துவிட்டு தண்ணீரைக் கொண்டுவந்து என்னை எழுப்பி, என் ஆயாசத்தைத் தீர்த்துவிட்டு, பாப்பாத்தி பூச்சிகளை நான் கவனிக்கச்செய்து அவ்வளவு சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருக்கும்படி செய்ததினால் நான் பெலப்பட்டேன். எனக்குங்கூட ஒரு அரிக்கட்டு கொடுத்தான். திரும்ப அவனுக்குக் கொடுக்க யோசித்தேன். ஆனால் அது என்னுடையதைப் போலொத்ததினால் அதைக் காட்ட முடியாது' என்றான்.

வேறொரு பிள்ளை சொன்னதாவது: 'இப்போ சாயங்காலமானபோது நான் ஆயாசமும் துக்கமும் அடைந்தேன். அரிக்கட்டுகள் குறைவாயிருந்ததால் இன்னும் வேலைசெய்வது பிரயோசனமில்லை என்றிருந்தேன், இந்தப் பிள்ளையோ எனக்கு ஆறுதல் சொல்லி பாப்பாத்தி பூச்சிகளை எனக்குக் காண்பித்து தன் அரிக்கட்டுகளில் ஒன்றை எனக்குக் கொடுத்தான். அதோ! ஒருவேளை இது அவனுடையது, ஆனால் அது என்னுடையதைப்போல் இருக்கிறதினால் எனக்குத் தெரியாது' என்றான்.

எல்லாப் பிள்ளைகளும் எஜமானைநோக்கி, 'அருமை எஜமானே! எங்களுக்கும் அரிக்கட்டுகளைக் கொடுத்தான். அவனை உள்ளே விடும்படியாய் கெஞ்சிக்கேட்கிறோம்' என்றார்கள்.

எஜமானனவன் புன்சிரிப்பு காட்டி, வாசலுக்கு உள்பக்கமாய் தன் கையை நீட்டி அரிக்கட்டுகளை எடுத்துக் காட்டினான், ஆனால் அவைகளின்தொகை அதிகமில்லை. என்றாலும் வெயிலின் பிரகாசம் அவைகளின்மேல் இருந்ததினால் வயல் முழுவதும் பிரகாசித்தது.

'இதோ! அவனுடைய அரிக்கட்டுகள். அவைகளெல்லாம் ஒவ்வொன்றாக அறிந்து எண்ணப்பட்டன' என்று எஜமான் சொல்லி அந்தப் பிள்ளையைப் பார்த்து உள்ளேவர வழியைக் காண்பித்தான்.

13. தேவதூதர்கள்

ஒரு பிள்ளை தன் தாயைப் பார்த்து: 'அம்மா! தேவதூதர்கள் உண்டோ?' என்று கேட்டான். 'வேத புஸ்தகத்தில் அப்படி சொல்லுகிறது' என்று தாய் சொன்னாள்.

அந்தப் பிள்ளை 'ஆம் அந்தப் படத்தைப் பார்த்தேன். ஆனால் எப்போதாகிலும் தூதனைப் பார்த்திருக்கிறீர்களா?' என்று கேட்டான். 'பார்த்திருக்கிறேன். ஆனால் அந்தப் படத்தைப்போல அது தோன்றவில்லை' என்று தாய் சொன்னாள்.

அந்தப் பிள்ளை 'நான் ஒரு தூதனைத் தேடப்போகிறேன். அந்தூதனைக் காணும்மட்டும் இந்த ரஸ்தாவில் நெடுந்தூரம் ஓடப் போகிறேன்' என்று சொன்னான்.

அதற்குத் தாய் 'அது நல்ல யோசனை. நீ சின்ன பையனதினால் ஒண்டியாய்ப் போகக்கூடாது. நான் உன்கூட வருகிறேன் என்றாள்.

'நான் இப்போ சின்னபிள்ளை அல்ல. எனக்கு கால் சட்டை உண்டு. நான் பெரிய பையன்தான்' என்று பையன் சொன்னான்.

அதற்குத் தாய் 'ஆம் நிசம்தான். நான் மறந்துவிட்டேன். ஆனால் இது நல்ல காலம். உலாவிப்போக எனக்கு இஷ்டம்தான்' என்றாள்.

'ஆனால் உங்கள் கால் நொண்டியானதினால் சீக்கிரமாய் நடக்க மாட்டீர்கள்' என, 'நான் சீக்கிரமாய் நடப்பதைப் பார்ப்பாய்' என்று தாய் சொன்னாள்.

அப்படியே புறப்பட்டுப்போகையில் அந்தப்பிள்ளை குதித்தோடின போது தாய் தைரியத்தோடே நடந்துகொண்டே போனதினால் அவளுக்கு நொண்டிகால் என்பதை பிள்ளை மறந்துவிட்டான்.

பிள்ளை முன்னே ஓடுகையில் வெள்ளை நிறமான நேர்த்தியான குதிரைகள் கட்டின ஒரு ரதம் அவனுக்கு எதிரே வருவதைப் பார்த்தான். அந்த ரதத்தில் உட்கார்ந்திருந்த ஒரு அழகான ஆஸ்தியுள்ள அம்மாளவர்கள் பட்டு உடுப்புகளையும் காதிலும் கையிலும் கழுத்திலும் நகைகளையும் தரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்

கள் தலையை திருப்பினபோது இரத்தினங்களும் பொன்னும் பளபள வென்று இருந்தது. அதுபோல அவர் கண்களும் பிரகாசித்தன.

'நீங்கள் ஒரு தூதனு?' என்று அந்தப்பிள்ளை ரதத்தின்பக்கமாய் ஓடிக் கேட்டான்.

அந்த அம்மாள் பதில் சொல்லாமல் பிள்ளையை மேட்டிமை யான கண்ணால் பார்த்தார்கள். அப்போ அவர்கள் குதிரைக்காரனுக்கு உத்தரவு கொடுத்தபோது, அவன் சவுக்கை எடுத்து ரதத்தை சீக்கிரம் ஓட்டினதினால் தூசி மேகம்போல் எழும்பினது. தூசியானது பிள்ளை கண்களிலும் வாயிலும் பட்டதினால் அவன் இருமலிட்டு தும்மினான். அவன் சுவாசிக்கக் கஷ்டப்பட்டு கண்களைக் கையாலே தேய்த்துவிட்டான். அப்புறம் அவன் தாய் வந்து சேர்ந்து தூசியை தன் நாட்டு சீலையால் துடைத்தாள்.

'அவள் தூதன் அல்ல' என்று பிள்ளை சொன்னான்.

'அல்லவே அல்ல. தூதனைப் போலவுமில்லை' என்று அவன் தாய் சொன்னாள்.

அந்தப்பிள்ளை மறுபடியும் குதித்தோடி அங்குமிங்கும் ஆடி நடந்து போகையில் அவன் தாய் கூடிய சீக்கிரம் பின்தொடர்ந்தாள். அப்புறம் ஒரு அழகான வாலிபப் பெண் வெள்ளை உடுப்பு தரித்துக் கொண்டு எதிராக நடந்து வந்தாள். அவள் கண்கள் நட்சத்திரம் போலவும் அவள் முகம் சிவப்பாயுமிருந்தது.

'நீ ஒரு தூதன் அல்லவா?' என்று பிள்ளை சத்தமிட்டான்.

அந்தப் பெண் முகமெல்லாம் புன்சிரிப்பு வந்தது.

அவள் 'அருமைப் பிள்ளையே! அப்படியா என்னை சொல்லுகிறார்கள்! நான் ஒரு தூதனைப்போல் இருக்கிறேனு?' என்று சொன்னாள்.

'நீயே ஒரு தூதன் தான்' என்று பிள்ளை சொன்னான்.

அந்தப் பெண் அவனைக் கையிலெடுத்து முத்தமிட்டு அன்போடு அணைத்தாள். அவள் 'நீ அதிக அருமைப் பிள்ளைதான். என் அப்படி சொல்லுகிறாய்?' என்று கேட்கும்போது திடீரென்று அவள் முகம் வேறுபட்டது.

அவள் 'ஐயோ யாரோ வருகிறார்! நீ உன் தூசியுள்ள காலால் என் வெள்ளை உடுப்பை அசுத்தப்படுத்தி, என் மயிர்களை ஒழுங்கை மாக்கினாய். ஓடிப்போ பிள்ளையே! உன் தாய் வீட்டுக்குப் போடா' வென்று சத்தமிட்டாள்.

அவன் அந்தப் பிள்ளையை அவசரத்தோடு கீழே விட்டதினால் அவன் கால் தவறி விழுந்தான். அவளோ அதை கவனிக்கவில்லை.

எனென்றால் யாரோ எதிர்ப்பட்டதினால் அவனை சந்திக்கப்போனாள் அந்தப் பிள்ளை மண்ணிலே கிடந்து தேம்பித்தேம்பி அழுதான். அப்புறம் அவன் தாய் வந்து அவனை அணைத்துக்கொண்டு தன் நாட்டு சீலையினால் அவன் கண்ணீரைத் துடைத்தாள்.

'அவள் ஒரு தூதன் என்று நான் இனிமேல் சொல்லமாட்டேன்' என்றான்.

தாயும் 'அவள் தூதன் அல்ல. ஆனால் இனிமேல் அவள் தூதனுனாலும் ஆவாள். அவள் வாலிபப் பெண்தான்' என்றாள்.

அந்தப்பிள்ளை 'நான் ஆயாசமாயிருக்கிறேன் அம்மா. என்னைத் தூக்கி வீட்டுக்குக் கொண்டுபோகவேண்டும்' என்று சொன்னான்.

தாயும் 'கொண்டுபோகிறேன், அதற்காகவே நான் கூட வந்தேன்' என்றாள்.

பிள்ளை தன் தாய் கழுத்தைக் கட்டிக்கொண்டிருக்கையில் அவள் அவனைக்கெட்டியாய் பிடித்து அவனுக்குப் பிரியமான பாட்டுப் பாடி, வழியில் நடந்துபோனாள். திடீரென்று அவள் முகத்தை எட்டிப் பார்த்தான். 'அம்மா நீங்கள் ஒரு தூதன் என்பது மெய்யோ?' என்று அவன் கேட்டான்.

அதற்குத் தாய் 'என்ன புத்தியீனமான பிள்ளை! ஒரு தூதன் நாட்டு சீலையைக் கட்டிக்கொண்டு இருப்பானு?' என்று சொன்னாள், அவள் இப்படி சொல்லிக்கொண்டு பாட்டுப்பாடி தைரியத்தோடு நடந்துபோனதினால் அவளுக்கு நொண்டி காலென்று யாரும் அறியவில்லை.

A Sermon Outline

By Rev. N. Samuel

பிரசங்கக் குறிப்பு

யோவான் 16 : 23-24.

இது நமது இரட்சகர் மரித்ததற்கு முன்னே இரவில் அவர் தமது சீஷரோடு பேசின வார்த்தைகளில் ஒன்று. அவர் தமது ஜீவியத்தின் கடைசி இரவில் பேசின வார்த்தைகளில் சிலவற்றைப் பார்க்கில் அவர் தீர்க்கதரிசியாகவும், வேறு வார்த்தைகளைப் பார்க்கில் பிரதான ஆசாரியராகவும், மற்றும் பல வார்த்தைகளைப் பார்க்கில் அவர் இராஜாவாகவும் விளங்குகிறார்.

நமது வாக்கியத்தை உற்றுப்பார்க்கில் அது ராஜா வாக்கியமாய் வினங்கும். அது ஜெபத்தைப்பற்றியது.

ஜெபத்தைப்பற்றிய கிறிஸ்தாசர் வாக்கு

இதில் நாம் கவனிக்கத்தக்க விசேஷங்கள் மூன்று.

1. இராஜ கட்டளை.
2. இராஜ முத்திரை.
3. இராஜ நன்கொடை.

1

கேளுங்கள் என்பதே அக்கட்டளை.

a. பிதாவைக் கேட்பதே ஜெபம்.

(1) கிறிஸ்தவர்களாகிய நாம் புறமதஸ்தரைப்போல் விக்கிரகங்களை, பேய்ப் பிசாசுகளை, மற்றப் படைப்புகளை நோக்கி ஜெபம்செய்யமாட்டோம். அது தெய்வ சித்தத்திற்கு விரோதம், பாவம்.

(2) பிதா ஒருவரே சகல கல்லீவுகளுக்கும் குறைவற்ற சகல வரங்களுக்கும் ஊற்றானவர்.

(3) அவர் ஒருவரே நன்மைசெய்யச் சித்தமுள்ளவர்.

(4) அவர் மாத்திரமே தமக்குச் சித்தமான யாவையும் செய்ய வல்லவர்.

b. நமக்குத் தேவையான எல்லாவற்றையும் ஜெபத்தில் கேட்கலாம்.

(1) ஆத்துமத்திற்கும் சரீரத்திற்கும் தேவையான நன்மைகள் அநேகம்.

(2) நமக்காகவும், பிறருக்காகவும் வேண்டியவற்றை ஜெபத்தில் கேட்கலாம்.

c. நாம் எந்த இடத்திலும் ஜெபம் செய்யலாம்.

(1) கோவில், பள்ளிக்கூடம், வீடு முதலியவற்றில் மாத்திரமல்ல.

(2) ஆபிரகாமைப்போல் அந்தர வெளியிலும், ஈசாக்கைப் போல் வயல் வெளியிலும், பவுலைப்போல் காவல் இடங்களிலும், பேதுருவைப்போல் மேல் மெத்தையிலும் ஜெபம் செய்யலாம்.

d. எந்தக் காலத்திலும் ஜெபம் செய்யத் தடையில்லை.

(1) ஞாயிற்றுக்கிழமையில் மாத்திரமல்ல, வாரத்தின் எல்லா நாட்களிலும் நாம் ஜெபிப்போம்.

(2) தாவீதரசரைப்போலவும், தானியேல் தீர்க்கதரிசியைப் போலவும் ஒரு நாளைக்கு மூன்றுதாரமும் அதற்கு அதிகமாகவும் ஜெபிக்கலாம்.

(3) இளமை, வாலிபம், புருஷப்பிராயம், முதுமை எந்த வயதும் ஜெபத்துக் கேற்றதே.

e. எந்த விதமாகவும் ஜெபிக்கலாம்.

(1) வாய் திறந்தும், வாய் திறவாமலும்.

(2) நின்றுகொண்டும், நடந்துகொண்டும், முழங்கால் படியிட்டும் ஜெபிக்கத் தடையில்லை. இராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தனுமானவர் நமக்கு கட்டளைகொடுத்து ஜெபிக்கச் சொல்லுகையில் அவருக்கு நாம் கீழ்ப்படியாதிருப்பது எப்படி.

இயேசுவின் நாமமே நமது ஜெபத்தைப் பிதாவுக் குகந்ததாக்கும். ராஜ முத்திரை (கோர்ட்டு முத்திரை, தபால் முத்திரையைப் போல்),

(a) நமது சுய நாமத்தை முன்னிட்டு, நமது சுய புண்ணியத்தை நம்பி, செய்கிற ஜெபத்தைப் பரமபிதா ஏற்றுக்கொள்ளமாட்டார்.

(பிரதான ஆசாரியர்மட்டும் பிரவேசிக்கவேண்டிய மகா பரிசுத்த ஸ்தலத்தை மனமேட்டிமையோடு பிரவேசித்த உசியா என்ற அரசன் தேவ கோபாக்கினைக்கு உள்ளானான்.)

(b) இயேசுகிறிஸ்து ஒருவரே பிதாவுக்குப் பிரியமான நேச குமாரன். அவரே மோட்சத்திற்கு வழியும் வாசலுமாயிருப்பதால், அவரை முன்னிட்டுச் செய்யும் ஜெபம் பிதாவுக்கு ஏற்றதாகும்.

(c) அவர் ஒருவரே நம்முடைய பாவங்களை நிவர்த்திசெய்து, நம்மைப் பிதாவுக்கு ஏற்றவர்களாக ஆக்கக்கூடியவர். ஆதலால் அவர் மாத்திரமே, நமது ஜெபங்களைப் பரமபிதாவுக்குப் பிரியமுள்ளதாக்குவார்.

(d) என்நாமத்தில் பிதாவைக் கேளுங்கள் என்று நமது இரட்சகர் சொன்னதின் கருத்து, நாம் நம்முடைய ஜெபங்களில் அவருடைய நாமத்தைச் சேர்த்து உச்சரிக்கவேண்டுமென்பதல்ல,

நாம் அவரை முழு மனதிலுலும் விசுவாசித்து ஜெபிக்கவேண்டு மென்பதே.

(இயேசுவை விசுவாசியாதிருந்தும் அவர் நாமத்தில் பிசாசு களைத் துரத்தமுயன்ற ஸ்கேவாவின் பிள்ளைகள்.)

இயேசுவின் நாமமென்ற இராஜ முத்திரை நமது ஜெபத்திற் குத் திடநிச்சயத்தைத் தரத்தக்கது.

கொடுப்பார், வாங்குவீர்கள், உங்கள் சந்தோஷம் நிறைந்ததாய் இருக்கும் என்ற வாக்குத்தத்தங்கள் ராஜ நன்கொடைகளாம்.

a. பரமபிதா தமது திருச்சித்தப்படி நமது ஜெபத்தைக் கேட் டுக் கொடுப்பார். நாம் நமது சுயசித்தப்படி கிடைக்கவேண்டு மென்று எதிர்பார்க்கலாகாது.

b. பிதா நமக்கு நன்மையாயிருக்கும் காரியங்களை மாத்திரம் கொடுப்பார் என்பது நிச்சயம். நாம் அடிக்கடி நம்முடைய ஜெபங் களில் நமக்கேற்ற நன்மைகள் எவையென்று அறியாமல் கேட்கி றோம். நமக்குத் தீமையாயிருப்பவற்றை பிதா நமக்குக் கொடார்.

c. கொடுப்பார் என்பதனால் பரமதகப்பன் தமக்கேற்ற வேளை யில் நமக்கு வேண்டியவைகளைத் தந்தருளுவார் என்பது நிச்சயம். இன்னம் என் வேளை வந்ததில்லை யென்று அவர் கூறும் சமயங் களும் உண்டு. அதனால் அவர் வாக்குத் தவறுகிறவரென்று சொல்லலாகாது.

d. அவர் நாம் வேண்டிக்கொள்வதையும் நினைப்பதையும் பார்க்க அதிகமாய் கொடுப்பதும் உண்டு. (சாலொமோன் ராஜா.)

C. L. S. PRESS, MADRAS—1919

வேதியர் விளக்கு

'To My Friend'

I. 'O God, our help in ages past'

பண் : திரு நேரிசை

'பத்தனுப்ப் பாட மாட்டேன்' என்பதுபோல.

1. பண்டைநாள் எங்களுக்குப் பழுதிலாத் துணையே, இன்னும்
நண்ணுமாண் டுகளில் நாங்கள் வாழ்சையோ டெதிர்பார்க் கின்ற
நின்னையப் பொருளே, சீறும் புயலில்யாம் ஒதுங்க கேர்ந்த
எண்ணரும் அரணே, என்றும் யாங்கள்வாழ் வீடே, தேவே.

2. நின்திரு இருக்கை நீழல் தன்னிலே நினது தொண்டர்
மன்னிவாழ் வுற்றார், ஆங்கே தீமையொன் றறியார் ஆன்றார்;
உன்னுருக் தீமை எதும் உறுமெனில் எம்மைக் காப்பான்
நின்னெரு தோளே போதும், நிச்சயம்; வேண்டா வேறே.

3. குன்றுகள் நிரையில் நிற்கு முன்னரே, குவல யந்தான்
தன்னுரு அடையு முன்னர், அனாயியாய்க் கடவுள் நீயே;
இன்னும்எண் ணில்லா யாண்டு ஒருபடி யினையாய் என்றும்
தன்னுசீர் உள்ளாய்; தோன்றல் நிரிதல்கே டறியா வாழ்வே.

4. ஆயிரம் யுகங்கள் நிற்குக் கழிந்ததோ ராக்கி போலும்;
பாயிருள் எல்லாம் நீங்கப் பரிதிதான் எழுவ தன்முன்
மேயவை கறையே போலும்; முதல் இடை கடைகள் மேவா
நாயனே, கால காலா, நம்பனே, எங்கள் கோவே.

5. என்றும்ஓய் வின்று பாயும் யாறுபோற் காலம் ஆங்கே
தன்னரு மைக்தர் எல்லார் தம்மையும் அடித்துச் செல்லா
கின்றதால்; அவர்கள் தம்மை நினைப்பவர் உலகில் இல்லை,
சென்றகங் குலினிற் கண்ட கனவயர்ப் பதுபோ லன்றே.

6. பண்டைநாள் எங்களுக்குப் பழுதிலாத் துணையே, இன்னும்
நண்ணுமாண் டுகளில் நாங்கள் வாழ்சையோ டெதிர்பார்க் கின்ற
நின்னையப் பொருளே, தேவே, துயர்எமை நீங்கு காறும்
அண்ணல்நீ காவாய், என்றும் அடியம்வாழ் வீடு நீயே.

II. 'When I survey the wondrous cross'

பண்: திரு நேரிசை

'பத்தனுப்பாட மாட்டேன்' என்பதுபோல.

1. மாண்பெலாம் உடையு பெம்மான் வதைபடி சிலுவை தன்னை
வீணன்யான் காணுங் காலே வியப்புறு கின்ற துள்ளம்;
நீணிலத் தனில்யான் பெற்ற நேரில்லா இயமும் நட்டம்;
பேணிய சருவ மெல்லாம் பிச்சென இகழ்கின் றேனே.

2. கடவுள்என் கிறிஸ்து நாதன் சிலுவையை யன்றி மற்றோர்
உடைமையைப் பெரிதென் றெண்ணும் உன்மத்தம் எனக்கு வேண்
உடையவன் சிந்து செங்கீர் உளத்தனில் என்னுங் நோறும் [டா
புடவியில் மருட்டும் எல்லாப் பொருளையும் துறப்பேன் யானே.

3. என்னிறை தகைகை தாணின் றியல்பொடு துயரும் அன்பும்
மன்னியே கலந்து பாயும் மாட்சியைக் காணுப் நெஞ்சே;
முன்னொரு பொழுதில் வாறு கலக்தவோ துயரும் அன்பும்?
பின்னின தண்டோ முள்ளாற் பெறலரும் மௌலி தானே.

4. எண்ணிலா உலகம் யாவும் என்பொரு ளாயின், இந்த
மண்ணொடு புவனம் எல்லாம் வழங்கினும் கைம்மா ருமோ?
அண்ணல்என் மீது கொண்ட அன்பிது தனக்கென் னுவி
கன்னும்என் பொருள்வாழ் நாளும் நான்தரல் கடமை தானே.

Tr. Francis Kingsbury.

'Witness Bearing'

By the Rev. G. P. George, Kodaikanal

சாட்சி கொடுத்தல்

அப். 1 : 8. 'பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள்.'

சாட்சி என்கிற பதம் சாதாரணமாய் நியாயஸ்தலங்களிலே வழங்குகிறது. ஒரு வியாச்சியத்திற்கு சாட்சிகளின் வாக்குமூலம் மெத்த அவசியம். ஆனல் சாட்சி சொல்ல வருகிறவர்களுன் பல வகுப்பாருண்டு. சிலர் கடபடிகளைக் கண்ணுரக்கண்டு விஷயங் களைத் திட்டமாய் அறிந்து சாட்சிசொல்ல வருகிறார்கள். இப்படிப் பட்டவர்களின் சாட்சி மிகுந்த பிரயோஜனமுள்ளது.

சிலரோ தாங்கள் ஒன்றையும் நேராகப் பாராமலும் திட்டமாய் அறியாதவர்களுமாயிருந்தும், எதோ தாங்கள் பிறர் மூலமாய் கேள் விப்பட்ட அல்லது ஊரிலே பேசப்படுகிற விஷயங்களை ஆதார மாகக்கொண்டு சாட்சிசொல்ல வருகிறார்கள். இவ்வித சாட்சி களினுல் அனுகூலமுண்டாகிறதில்லை.

பின்னும் சிலர் தாங்கள் ஒன்றையும் காணுமலும் அறியாமலும் இருந்தும், வாதியிடத்திலோ அல்லது பிரதிவாதியிடத்திலோ கொஞ் சம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, தாங்கள் வாங்கின லஞ்சத்திற் காக தங்களுக்குத் தெரியாத சங்கதிகளை முற்றிலும் தெரிந்ததுபோல் நடித்து சாட்சிகளாக வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களின் சாட்சி மிகுந்த பெலவீனமுள்ளதென்று நாம் அறிவோம்.

தேவனுடைய ராஜ்ய பிரபல்யத்திற்காக, நமது மீட்பராகிய இயேசு ரட்சகரைப்பற்றி சாட்சி கொடுக்கிறவர்களுக்குள்ளும் பற்பல வகையாருண்டு. சிலர் தாங்களே இரட்சிக்கப்பட்டுப் பாவ மன்னிப்பை அடைந்திருக்கிறோம் என்கிற நிச்சயமற்றவர்களாயிருந் தும், தாங்கள் பிரசங்கிமார் மூலமாயும், புஸ்தகங்களின் மூலமாயும், சத்தியவேதத்தின் மூலமாயும் அல்லது வேதசாஸ்திரக் கல்லூரியில் தாங்கள் அடைந்த பயிற்சியின் மூலமாயும், கற்றுக்கொண்ட விஷ யங்களை மாத்திரம் ஆதாரமாக வைத்து சாட்சி கூறிவருகிறார்கள்.

வேறு சிலர் ஆவிக்குரிய அனுபவங்களை அடையாமலும், சாட்சி கூறவேண்டியது இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்த வனின் கடமையாய் இருக்கிறதென்பதை உணராமலும், தாங்கள் பெற்றுவரும் சம்பளத்திற்காகவே சாட்சி கூறிவருகிறார்கள். நமது இரட்சகர், நாமெல்லாரும் உத்தமமும் பிரயோஜனமுமுள்ள சாட்சி களாயிருக்கவேண்டுமென்கிற வாஞ்சையோடு 'நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' என்கிறார். கிறிஸ்துவுக்கு உகந்த சாட்சி களாய் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டிய ஓர் பிரதான பக்குவம் உண்டு.

யோவான் 15 : 27. 'நீங்கள் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்' என்று இயேசு சொன்னர். சிஷ்யர்களைப் பார்த்து 'நீங்கள் மிகுந்த கல்விமான்கள்; செல்வாக்கில் விசேஷித்தவர்கள்; வேதசாஸ்திரத்தில் நிபுணர்; ஆகையால் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்' என்று இயேசு சொல் லவே இல்லை. என்னுடனே கூட இருந்தபடியால் சாட்சிகளா யிருங்கள் என்கிறார். அவரோடு சஞ்சரிக்கும் ஜீவியமே சாட்சி களின் பிரதான லட்சணம்.

யூதாசுக்குப் பதிலாக ஒரு சீஷன் ஏற்படுத்தப்படவேண்டியிருந்த சமயத்தில் பேதுரு சொன்னது என்ன? (அப். 1:22) 'அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனே கூட இருந்த மனுஷர்களில் ஒருவன் எங்களுடனே கூட சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும்.' பேதுரு அந்தச் சமயத்திலே ஒரு பெரிய வேதசாஸ்திரப் பண்டிதனே அல்லது ஒரு கல்விமானைத் தெரிந்தெடுக்க வேணுமென்று சொல்லாமல் இயேசுவோடுகூட சஞ்சரித்த ஒரு ஆள் தேவை என்கிறார்.

காரியத்தைக் கண்டவனே உத்தம சாட்சி பகரக்கூடும். இதுவே பிரதானம். நாம் இயேசுவோடு கூட இருந்தவர்களா? அவரைத் தரிசித்தவர்களா? 'கடைசிநாட்களில் உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்' என்று யோவேல் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறாரே. நாம் ஆவிக்குரிய காட்சிகளை, தரிசனங்களை நமது ஜீவியத்தில் கண்டிருக்கிறோமா? 'நான் குருடனாயிருந்தேன் இப்பொழுது காண்கிறேன்' என்று எத்தனைபேர் தைரியமாய் சொல்லக்கூடும்?

சாட்சிகளாயிருக்கும் விஷயத்தில் நாம் மனதில் வைக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதை சாட்சி என்கிற பதமே நமக்கு வற்புறுத்துகிறது. சாட்சி என்ற வார்த்தைக்கு மூலபாஷையில் வழங்குகின்ற பதம் இரத்தச்சாட்சி (Martyr) என்று பொருள்படும். நாம் சாட்சிகளாயிருக்கவேண்டுமென்று சொல்லும்போது இரத்தச் சாட்சிகள் என்பதே அதின் தாற்பரியம். சீனுதேசத்தில் கர்த்தருடைய ராஜ்யம் தீவிரகதியாய் பரம்பி வருகிறது. முகாந்தர மென்ன? அங்கே அநேக இரத்தச்சாட்சிகள் எழும்பினார்கள். நாமெல்லாரும் இரத்தச்சாட்சிகளாய் மரிக்கவேண்டிய அவசியம் என்பது கருத்தல்ல. அப்படிப்பட்ட காலம் நமக்கு இல்லை. உபத்திரவங்களும் ஆக்கினைகளும் தற்காலத்தில் நமக்குக் கிடையாது. ஆனால் மகா தைரியத்தோடும் வல்லமையோடும் சுயவெறுப்போடும் நாம் சாட்சி பகரவேண்டும். அனலுமின்றி குளிருமின்றி ஏனோதானேவென்று சாட்சிசுமந்து திரிவதினால் எவ்வித பலனும் கிடைக்காது. கஷ்டங்களின் மத்தியில் துன்பத்தின் ஊடே அதைரியம் நேரிடும்போதும் நிந்தைகள் வரும்போதும், தைரியத்தோடும் சுயவெறுப்போடும் சாட்சி கொடுப்பதே காரியம்.

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் சாட்சிகளாயிருப்பீர்கள். சாட்சிகளுக்குப் பரிசுத்த ஆவியின் பெலன் அவசியம். பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு 3000 பேருக்கு முன்பாக சாட்சி கூறி ஞானஸ்நானம் கொடுக்கவும், தென் இந்தியாவில்

ஜோவற் பண்டிதர் ஒரேநாளில் 2222 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் தக்கதாக வல்லமையளித்த ஆவியானவர் நேற்றும் இன்றும் என்றும் மாறுதலாயிருக்கிறார். பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல ஆவியினாலேயே ஆகும் என்பதை மனதில்வைத்து, கிறிஸ்துவோடு சஞ்சரித்து, தரிசனங்களைக் காணும் அனுபவத்தை அடைந்து, சுயவெறுப்போடும் தைரியத்தோடும் இரத்தச்சாட்சிகளாய் ஜீவிப்போமானால் நமது தேசம் சீக்கிரத்தில் கிறிஸ்துவின் ராஜ்யமாகுமென்பதில் ஐயமில்லை.

Lectures on
The Presentation of Christ to the Hindus—I

By the Rev. J. S. Masillamony, B. D.

ஹிந்துக்களுக்குக் கிறிஸ்துவை எவ்வாறு காட்டலாம் என்பதைப்பற்றிய உபந்நியாசங்கள்—I

1. கிறிஸ்து கடவுளின் திரு அவதாரம்

சர்வ லோக ரக்ஷாபெருமானாகிய இயேசுகிறிஸ்துவை நமது நாட்டாருக்குக் காட்டும் வழிகள் ஒன்றல்ல, அவை பல. அப்போஸ்தலர் கிறிஸ்துவை யூதர்களுக்கு ஒருவிதமாகவும், ரோமர் கிரேக்கர்களுக்கு வேறுவிதமாகவும் காட்டியதுபோலவே, நாமும் ஹிந்துக்களுக்கு அவரைக் காட்டவேண்டும். அவரவர்களுடைய முன் எண்ணங்களுக்குத் தக்கதாக நாம் கிறிஸ்துவை அவர்கள்முன் வைக்கவேண்டும். இவ்வாறு நாம் இந்த விஷயத்தை ஆராய்ச்சி செய்கையில் ஹிந்துக்களுடைய முன் எண்ணங்களுக்கும் அநேக நூற்றாண்டுகளாக அவர்கள் கொண்டிருக்கும் கோட்பாடுகளுக்கும் தக்கதாக கிறிஸ்துவைப் பலமாதிரியாக அவர்கள்முன் நிறுத்தலாம் என்று காண்போம். அவற்றுள் நாம் இவ்விடத்தில் எடுத்துக்கொண்டது மூன்று. அவையாவன:

1. இயேசுகிறிஸ்து கடவுளின் திரு அவதாரம்.
2. இயேசுகிறிஸ்து தேவ சற்குரு.
3. இயேசுகிறிஸ்து கடவுளின் தற்சொரூபம்.

இவற்றுள் முதலாவது விஷயமான 'இயேசுகிறிஸ்து கடவுளின் திரு அவதாரம்' என்பதைமட்டும் இங்கு எடுத்துக்கொண்டு, அதை ஆராய்ச்சி செய்வோம்.

இதை ஆராய்ச்சி செய்யும்போது மூன்று காரியங்களை நாம் பார்க்கவேண்டும். அவையாவன:

I. அவதார உபதேசம் என்றால் என்ன?

II. அவதார உபதேசத்தில் அடங்கிக் கிடக்கும் விசேஷ சத்தியங்கள் அல்லது கருத்துக்கள் என்ன?

III. இந்தச் சத்தியங்கள் அல்லது கருத்துக்கள் இயேசுகிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேறுகின்றன?

இவ்விதமாக நாம் அவதார உபதேசத்தைக் கற்று நமது தேசத்தவர்களுக்குக் கிறிஸ்துவைக் காட்டுவோமென்றால், அவர்கள் கிறிஸ்துவை தேவ திரு அவதாரம் என்று அறிந்து அவரை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

I. அவதார உபதேசம் என்பதென்ன?

அவதாரம் என்னும் பதத்துக்குக் 'கீழே இறங்குதல்' என்று அர்த்தம், அதாவது கடவுள் வானுலகைவிட்டு பூவுலகில் இறங்குதல். இந்த உபதேசத்தின் கருத்து பகவத்கீதையில் தெளிவாய் சொல்லியிருக்கிறது. கீதை 4: 7, 8—'எங்கெங்கே தர்மம் (நீதி) அழிந்து அநீதி உயர்கின்றதோ அங்கே நான் அவதரித்துத் தோன்றுகிறேன். உத்தமரை ரக்ஷிக்கவும், பாவகர்மிகளைத் தண்டிக்கவும், நீதியை நிலைவரமாய் ஸ்தாபிக்கவும் நான் யுகந்தோறும் யுகந்தோறும் அவதரித்துத் தோன்றுகிறேன்' என்று கிருஷ்ணன் அர்ச்சுனனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

இவ்வாறு கடவுள் அவதரித்திருக்கின்ற அவதாரங்கள் எண்ணிறந்தன. இவற்றுள் விசேஷமானவை பத்து. இவையே தசாவதாரம் என்ற பெயர் பெறும்.

II. அவதார உபதேசத்தின் விசேஷ சத்தியங்கள் என்ன?

அவதார உபதேசமாவது என்னவென்றும் தற்கால ஹிந்துக்களால் மிகுதியும் கொண்டாடப்படுகிற பகவத்கீதையில் அவதாரத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கின்றதென்றும் பார்த்தோம். இனி இவ்வுபதேசத்தில் அடங்கிக்கிடக்கின்ற சத்தியங்கள் யாவை எனச் சிறிது ஆராய்ச்சி செய்வோம்.

மேற்கூறிய உபதேசத்தையும் ஹிந்துப் புராண இதிகாசங்களில் கூறப்பட்டிருக்கிற அவதாரக்கதைகளையும் நாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது நாலு விசேஷ சத்தியங்கள் அல்லது கருத்துக்

கள் இந்த உபதேசத்தில் அடங்கிக் கிடக்கின்றன என்று காண்பேம். அவையாவன:

1. எந்தப் பகைவன் இந்த உலகத்தைத் தன் வசப்படுத்தி தன் இஷ்டம்போல் ஆண்டுகொண்டிருக்கிறனே, எவனுடைய நிஷ்டூரமான ஆட்சியின் கீழ் இப்பிரபஞ்சமானது தவித்துக் கொண்டிருக்கின்றதோ, யாரை மேற்கொள்ள இப்பிரபஞ்சம் சக்தியற்றிருக்கிறதோ, அந்தப் பகைவனை ஜெயித்து அவனுடைய வல்லமையை ஒடுக்கும்படியாக சர்வேஸ்வரன் இவ்வுலகத்தில் அவதரிக்கிறார்.

இக்கருத்துத்தான் அவதார உபதேசத்தில் முதன்மையானது. சுருக்கமாய் ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் சர்வேஸ்வரன் உலகரக்ஷகராக அவதரிக்கிறார். உலகம் தன்னைத் தானே ரக்ஷித்துக்கொள்ள முடியாதபடி சத்துருவினுடைய கையின் கீழ் நின்று தவிக்கும்பொழுது சர்வேஸ்வரன் உலகத்தில் அவதரித்து அதை ரக்ஷிக்கிறார்.

புராணேதிகாசங்களில் இதற்குப் போதிய திருஷ்டாந்தங்கள் சொல்லலாம். இராவணன் என்னும் ராக்ஷதனுடைய கொடுமையின் கீழ் இவ்வுலகம் தத்தளித்துக்கொண்டிருக்கும்பொழுது மகாவிஷ்ணு ராமராக அவதரித்து அவனைக் கொன்று உலகத்தை ரக்ஷித்தார். இரணியன் என்னும் ராக்ஷதன் கையிலகப்பட்டு இவ்வுலகமானது தவித்துக்கொண்டிருந்த காலத்தில் மகாவிஷ்ணு நரசிம்மாவதாரம் செய்து அவனைக் கொன்று உலகத்தை ரக்ஷித்தார். இப்படியே இதர அவதாரங்களிலும். ஆக்வே பகைவனை ஜெயித்து உலகத்தை ரக்ஷிக்கும்படியாக சர்வேஸ்வரன் இவ்வுலகத்தில் தோன்றுகிறார் என்னும் இக்கருத்து அவதார உபதேசத்தில் அதிமுக்கியமானது.

2. துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம்.

அதாவது துஷ்டர்களை அழித்து பக்தர்களை பரிபாலனம் பண்ணும்பொருட்டுக் கடவுள் உலகத்தில் அவதரிக்கிறார். கிருஷ்ணாவதாரம், நரசிம்மாவதாரம், வாமனாவதாரம் என்னும் இந்த அவதாரங்களில் இக்கருத்து விசேஷமாய்த் தோன்றுகிறது. துஷ்டர்களாகிய துரியோதனன், துச்சாதனனாதியோர், இரணியன், மகாபலி முதலியவர்களை நிக்கிரகித்து சிஷ்டர்களாகிய பாண்டவர், பிரகலாதன் முதலியவர்களைக் காப்பாற்றினார்.

3. தர்மஸ்தாபனாநந்தம்.

அதாவது நீதியை நிலைநிறுத்துவதற்கான வழியை உண்டுபண்ணும்படி கடவுள் அவதரிக்கிறார். மேலே எடுத்துக்கூறிய பகவத்

கீதை வாக்கியத்தில் இக்கருத்துக் கூறப்பட்டிருக்கின்றது. பகை வனை ஜெயித்து, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனங்களை இயற்றிய ஈஸ்வரன் உலகத்தில் நீதிநியாயம் நிலைவரமாய் நிலைத்திருக்கும் பொருட்டு அதற்காக ஒரு உபாயத்தையும் செய்கிறார். ஆனால் மகா விஷ்ணு எடுத்திருக்கிற அவதாரங்களில் அவர் இவ்வித நீதிஸ்தாப னம் ஒன்றுஞ் செய்ததாகத் தெரியவில்லையே என்று நாம் ஹிந்து கல்விமான்களைக் கேட்டால், அவர்கள் இனிமேல் பத்தாவது அவ தாரமாக நிகழப்போகிற கற்கி அவதாரத்தில் கடவுள் ஒரு பிரா மணப் பிள்ளையாக அவதரித்து சகல தர்மங்களையும் (நீதி நியாயங் களையும்) நிலைநிறுத்துவார் என்று சொல்லுவார்கள். ஆகவே தர்மஸ்தா பனார்த்தத்துக்காகக் கடவுள் இவ்வுலகத்தில் அவதாரம் பண்ணுகிறார்.

4. மனிதர்களோடு எவ்விதத்திலும் அனுதாபப்பட்டு அவர்க ளுடைய கஷ்ட நஷ்டங்கள் சுகதுக்கங்களாகிய இத்தியாதி அனு பவங்களில் பங்குபெற்று, கால ஸ்தான கட்டுப்பாடுகளுக்கு அமைந்து, கோஞ்சங்குறைய எல்லாவிதத்திலும் மனுஷனைப் போலவே இருந்த ஒரு தெய்வ சொருபம் மனுஷ ஆன்மாவை அன்போடு இழுத்து ஆறுதல்படுத்துகின்றது.

இதுபற்றித்தான் ஹிந்து புராணேதிகாசங்களில் கடவுளின் மனு ஷ்ரூபம் அதிக திட்டமாய்ச் சொல்லப்படுகிறது. அவதார சொரூபத் தில் அமைந்திருக்கிற கடவுள் வெறும் தோற்றத்துக்கு மட்டும் மனு ஷனாக இராமல், பூரணமனுஷனாக இருக்கிறார். மனுஷருக்குள்ள சுகதுக்கங்கள் லாபநஷ்டங்கள் அவருக்கும் உண்டு. அவர் சிறுகுழந் தையா யிருக்கும்பொழுது (பாலகிருஷ்ணன், பாலசுப்பிரமணியன்) பிள்ளைப்பருவத்துக்குரிய சகல விஷயங்களும் அவருக்கும் உண்டு. சர்வேஸ்வரன் ஒரு உண்மையான பாலகன் ஆனார்; தாலாட்டப் பெறுகிறார்; மற்றும் சிறுவர்களோடு சேர்ந்து தெருவில் புழுதி யளைந்து விளையாடுகிறார்; சிறு வண்டில்களைத் தெருவில் உருட்டிச் செல்லுகிறார். அவருக்கு வந்த இன்ப துன்பங்களும் அவரை நம் மோடு சம்பந்தப்படுத்துகின்றவைகளாகவே இருக்கின்றன. இப்படிப் பட்ட தெய்வ சொரூபம் மனுஷ ஆத்துமாவைத் தேற்றுகிறது.

ஆகவே இந்த நாலு கருத்துக்களுமே அவதார உபதேசத்தில் அடங்கிக்கிடக்கிற விசேஷ சத்தியங்கள் என்று காண்கிறோம்.

III. அவதார உபதேசத்தின் விசேஷகருத்துக்கள் இயேசு கிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேறுகின்றன?

ஒவ்வொரு கருத்தையும் முறைப்படி தனித்தனியாய் எடுத்துக் கொண்டு இவை கிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேறுகின்றன என்று ஆராய்வோம்.

1. உலகத்தை நடத்திக்கொண்டிருக்கிற பகைவனுடைய வல் லமையை அடக்கி, உலகத்தினரை ரக்ஷித்தல்.

இந்தப் பகைவன் பாவமே. இதைப் பாபாசுரன் என்று உயர் நிலையாலும் கூறலாம். ஆதியாகமம் மூன்றும் அதிகாரம் இதைப் பற்றிக் கூறும்.

'தன்னையே கெடுத்தான் முன்னம் தற்பெருமையினால், அந்தோ
பின்னையும் பொருமையாலே பிறரையும் கெடுத்தான்'

என்றபடி உலகத்தைக் கெடுப்பதே இவன் தொழில். இவனை ஒடுக்கவே கடவுள் கிறிஸ்துவென்னும் அவதார ரூபத்தில் வந்தார். ஒருவராலும் ஜெயிக்கப்படாத இந்தப் பாவத்தை இயேசுகிறிஸ்து ஜெயித்தார். அவனுடைய வல்லமையை சிலுவைமரத்தின் கீழ் அழித்துக் கெடுத்தார். இது பற்றித்தான் இவருக்கு இயேசு (இரக்ஷகர்) என்ற இயற்பெயர் கொடுக்கப்பட்டது. எனெனில் இவர் ஜனங்களை அவர்களுடைய பாவத்தினின்று இரக்ஷிக்கிறார். இதைப்பற்றி அபோஸ்தலனாகிய பவுல் ரோமர் நிருபம் ஏழாம் அதிகாரத்தில் விரிவாய்ப் பேசுகிறார். பாவத்துக்கு அடிமைப்பட்டு இதுவரை நிர்ப்பந்தமான நிலைமையிலிருந்த பவுல் இயேசுகிறிஸ் துவை அண்டினவுடனே பாவத்தினின்று ரக்ஷிக்கப்பட்டுக் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறான். பாவத்துக்கடிமைப்பட்டிருக்கிறவர்கள் பாப பந்தத்தினின்று நீங்கவேண்டுமானால், இயேசுகிறிஸ்துவை அண்டி இலேசாய் மீட்படையலாம். எனெனில் இயேசுகிறிஸ்து பகைவ னுடைய வல்லமையை ஒடுக்கி உலகத்தினரை ரக்ஷித்திருக்கிறார்.

2. துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்.

எதிர்பார்த்தலுக்கு அதிகமாக இயேசுகிறிஸ்து இதை நிறை வேற்றுகிறார். துஷ்டர்களை நிக்கிரகம் பண்ணுமல் அவர்களை சிஷ்டர்களாக மாற்றுகிறார், பாவிகளை பரிசுத்தவான்களாக்குகிறார். இயேசுகிறிஸ்துவின் தொழில்களில் ஒன்றாகிய இது 'பரதேசியின் மோட்ச பிரயாணம்' என்னும் நூலில் ஒரு உவமானத்தால் கூறப் பட்டிருக்கின்றது. கிறிஸ்தியான் ஜீவகங்கை என்னும் நதியண்டை நின்று அங்கு நிகழ்வதாகிய பல காட்சிகளைப் பார்த்துக்கொண் டிருக்கின்றான். அப்போது நீத்தொழிலைப் புரிகின்ற கொடிய ஓநாய்கள் ஜீவகங்கை என்னும் ஆற்றண்டை சேர்ந்து, அதன் ஜீவதண்ணீரைச் சாப்பிட்ட மாத்திரத்தில் தம் தூர்க்குணங்களெல் லாம் நீங்கப்பெற்று, கெடுதலில்லாத சாந்தம், நண்பு முதலிய சற்குணங்களைப் பெற்று அவ்விடத்தினின்று திரும்புகிறதைக் கண் டான்; இப்புதுமையைக் கண்டு அதிசயம் கொண்டான்.

மேவிவந்து தித்தொழில்புரி வெய்யகோ காய்கள்
ஜீவகங்கையை அருந்தலும் செம்மறி யாடாய்த்
தாவில்சாந்தம் கண்பாதிய சற்குணந் தழுவி
போவதாகிய புதுமைகண் டதிசயம் பூத்தான்.

(ஜீவபுஷ்கரிணிப் படலம்).

கொடிய பாவிகள் எத்தனையோ பெயர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபிறகு பரிசுத்தவான்களாகி யிருக்கிறார்கள். மகா அருஸ்தீனும் இதற்கு சிறந்த திருஷ்டாந்தம்.

துஷ்டர்களே சிஷ்டர்களாக மாற்றுகிறதுமல்லாமல் சிஷ்டபரிபாலனமும் இவர் விசேஷமாய்ச் செய்துவருகிறார். தம்மை அண்டினவர்களுக்கு வேண்டிய உதவிசெய்கிறார். பலவானால் தாக்கப்படுகிற ஒரு பலவீனன் தன் பகைவனை மேற்கொள்ளக்கூடிய வேறொரு பலவானை அடித்து உய்வதுபோல, கிறிஸ்துவை யார் யார் அண்டிக் கொள்ளுகிறார்களோ, அவர்கள் உலகம் பேய் உடல் என்னும் மூன்றின் உபத்திரவங்களினின்று நீங்குவார்கள். உதாரணம் எண்ணிறந்தன.

3. தர்ம ஸ்தாபனார்த்தம்—நீதி நியாயத்தை நிலைபெறச்செய்யும் முறைமையை ஸ்தாபித்தல்.

எம்பெருமான் ஸ்தாபித்த இந்த முறை பரலோக ராஜ்யமே. இதுவே அவர் உலகத்துக்குக் கொண்டுவந்த செய்தி; இதுவே அவருடைய உபதேசத்தின் ஆரம்பம்; இதுவே அவருடைய ஊழியம். பரலோக ராஜ்யம் என்பது என்னவென்று கேட்டால், மனுஷருடைய இருதயங்களிலும் அவர்களுடைய காரியங்களிலும் தேவன் ஆளுவதே பரலோக ராஜ்யம். இந்த தேவ ராஜ்ய ஸ்தாபகர் கிறிஸ்துவே; இதன் முன்மாதிரியான பிரஜையும் அவரே. இந்த ராஜ்யத்தை உலகத்தில் பூரணமாய் ஸ்தாபிப்பதே கிறிஸ்தவ சபையின் நோக்கம். இது பூரணப்படுவதே சோர்ணயுகம். இந்தப் பரம ராஜ்யம் வருவதாக என்பதே பக்தர் வாஞ்சை.

தர்ம ஸ்தாபனமாகிய இந்தப் பரமராஜ்யத்தை இயேசுகிறிஸ்து ஸ்தாபித்திருக்கிறார். இதைக்காட்டிலும் மேலான தர்மஸ்தாபனார்த்தம் இனி உலகத்தில் உண்டாகப்போகிறதில்லை. உலகம் படிப்படியாய் இந்த நல்ல நிலைமைக்குள்ளாகும் என்பதே கிறிஸ்துமதத் தணிபு.

4. பூர்ண மனுஷனுன தேவசொரூபம் மனுஷ ஆத்துமாவை அன்புடன் இழுத்து ஆறுதல்செய்கின்றது.

யாவராலும் காணமுடியாத மகாதேவன் ஒரு எழைக் குழந்தையாகிப் பிள்ளைப்பருவத்துக்குரிய யாவும் செய்தார், வளர்ந்தார். (லூக். 2 : 52.) பரிசுத்தம் நித்திரை கொண்டார். பாவமட்டுமே அவரிடம் இல்லை. என்னைப் பின்பற்றி வாருங்கள் என்று மனுஷருக்குச் சொல்லக்கூடியவர் இயேசுகிறிஸ்துவே. மனுஷனுகி மனுஷ அனுபவங்களை அடைந்திருப்பதால் அவர் மனுஷனுடைய பல வீனங்களில் அவர்களோடு அனுதாபப்பட்டு அவர்களுக்கு உதவி செய்யக்கூடும்.

பகவானுடைய மனுஷீக சொரூபம் மனுஷனுடைய மனதைக் கவருகின்றது.

இப்படியாக அவதார உபதேசத்தில் அடங்கிக்கிடக்கிற நாலு விசேஷித்த கருத்துக்களும் இயேசுகிறிஸ்துவில் திவ்வியமாய் நிறைவேறுகின்றன என்று காண்கின்றோம். ஆகையால் இயேசுகிறிஸ்துவே சர்வேஸ்வரனுடைய உண்மைத் திரு அவதாரம்.

Relying on the Body and Losing the Soul

By F. P. Ratnam

சரீரத்தை நம்பி ஆத்துமத்தை இழந்துபோகிறது சரியா

சகல வஸ்துக்களுக்கும், பிராணிகள் முதலான ஜந்துக்கள் என்னப்பட்ட யாவுக்கும் ஆதிகாரணமானவருமாய், சகலத்தையும் சிருஷ்டிக்கவும், இரட்சிக்கவும், சுத்திகரிக்கவும் பலமுடைத்தானவருமாய்,,குறையற்ற நீதியுடையவருமாய், அனந்த கிருபையுள்ளவருமாய், அளவறுக்கப்படாத பெலனுடைத்தானவருமாய் இருக்கிற கடவுள் யாரென்றறியாமலும், உலகத்துக்கு தேவன் ஒருவரோ பலரோவென்றறியாமலும், பாராமலும், மெய்யான கடவுளுடைய சுபாவ சொரூபங்கள் முதலான இலக்ஷணங்கள் எப்படிப்பட்டனவாய் இருக்குமென்றும், தேவதிருவாக்காலே திருவுளம்பற்றப்பட்ட பரம சித்தத்துக்கேற்கப்போகிற வழிகளென்னவென்றும், தேவன் கற்பித்த கற்பனைகள் எந்தப்பிரகாரமாய் இருக்குமென்றும், ஒன்றான பரம சித்தத்திற் கேற்கப்போகிற வழிகளேதென்றும் தேடாமலும், அஞ்ஞானமாகிற அந்தகாரத்திலே அமிழ்ந்தியிருக்கப்பட்ட பாவிகளான மனுஷருக்கு வரப்போகிற ஆக்கினையானது, மனோவாக்குக்கெட்டாததுமாய் அளவறுக்கப்படாததுமா யிருக்குமென்பது திண்ணமாமே,

அன்றியும் அவர்கள் நரகத்திலே அழியாத வேதனை அடைவார்களே ஒழிய, கெதியடைவார்களென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. ஆனபடியால் குருடன்போல இப்பூலோகத்தினுடைய வாழ்வுகளையும் ஊர் அம்பலம், இலௌகீக ஈசுவரியங்கள் முதலான நன்மைகளையும், துர்க்கந்த சுகபோகங்களையும், வெகுமானம் பெருமைகளையும், சதமென்றும், பர்க்கியமென்றும், மோக்ஷமென்றும் நம்பவேண்டாம்.

இந்த பூலோகத்தினுடைய சகல வாழ்வுகளெல்லாம் எப்படிபோகுமென்றால், கோடை மழையிலே புறப்படுகிற மின்னல்போலவும், ஆடிமாதத்தி லடிக்கிற காற்றுபோலவும், குயவன் சூளையிலே கிளம்புகிற புகைபோலவும், நீரின்மேலே புறப்படுகிற நீர்க்குமிழிபோலவும், சகதியிலே புழுக்கிற புழுப்போலவும், உறங்கினவன் கண்ட கனவுப் போலவும் அழிந்துபோகுமே ஒழிய அவைகள் ஸ்திரமாயிருக்கிற நன்மைகளென்று எண்ணக்கூட்டாது. ஆனபடியினாலே புத்திமான்களாயிருக்கிற மனிதர்கள் தங்களுடைய ஆத்துமம் பிழைக்க வழி தேடவேண்டும். அதேனென்றால் மனுஷனுடைய ஆத்துமா அழியாத மாணிக்கம்போல இருக்கிறது. மாணிக்கம் வைக்கப்பட்டிருந்த ஒரு பாத்திரம் உடைந்துபோனால், பாத்திரம் மண்ணுப்போகுமே ஒழிய மாணிக்கம் மண்ணுகமாட்டாது; மாணிக்கம், மாணிக்கமாகவே இருக்கும்.

அவ்விதமே மனுஷனுடைய ஆத்துமமானது, மாணிக்கத்தைப் பார்க்கிலும் அதிசயித்திருக்கிறது. மண்பாத்திரமாய் இருக்கிற சரீரம் விழுந்துபோகும்போது மண்ணோடேமண்ணுப்போகும், மாணிக்கமாய் இருக்கிற ஆத்துமம் புறப்பட்டு ஒன்றான கடவுளை அறிந்து அவர் சித்தப்படி நடந்தால் மோக்ஷகதியடையும், இல்லாவிட்டால் நரகத்தில் விழும்.

இப்படிப்பட்ட மாணிக்கமாய் இருக்கிற அழியாத ஆத்துமம் மண்பாத்திரமாய் இருக்கிற சரீரமென்கிற பொந்திக்குள்ளே இருக்கிறபடியினாலே ஓடவும், நடக்கவும், பேசவும், சாப்பிடவும், ஆபரணங்களைப் பூட்டவும், வாசனை பூசவும், புஷ்பங்களை முடிக்கவும், சுகபாக்கியங்களை அனுபவிக்கவும் கூடியதாயிருக்கிறது.

மாணிக்கமாகிற ஆத்துமமானது மண்பாத்திரமாயிருக்கிற சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடனே மண்பாத்திரமாயிருக்கிற இந்தப் பொந்தியானது மண்ணைப்பார்க்கத் துர்க்கந்த நாற்றத்தோடே அழிந்துபோகிறதை நாம் கண்ணாலே பார்த்துக்கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட அழிந்துபோகிற சரீரத்தை நம்பி மாணிக்கமாகிற அழியாத ஆத்துமத்தினுடைய நன்மையைத் தேடாமலிருக்கிறது சரியா?

On the Difference between Man's Soul and Animal's Soul

By F. P. Katnam

மனுஷனுடைய ஆத்துமத்துக்கும் மிருகத்தினுடைய ஆத்துமத்துக்குமுள்ள வித்தியாசம்

இந்த இந்தியாவிலிருக்கிற சிலர் மனுஷனுடைய ஆத்துமத்துக்கும் மிருகத்தினுடைய ஆத்துமத்துக்கும் யாதொரு வித்தியாசமில்லை, இரண்டும் ஒன்றென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி இவ்விடத்தில் நாம் சற்று சிந்திப்போம். இந்த சந்தேகத்திற்குப் பிரதியுத்தரமேதென்றால், மனுஷனுடைய ஆத்துமத்துக்கு மூன்று உள்ளிந்திரியங்கள் உண்டு. மிருகத்தினுடைய ஆத்துமத்துக்கோ ஒருவித நினைவுமாத்திரம் உண்டல்லாமல் அதற்குப் புத்தியுமில்லை மனதுமில்லை, மனிதனுடைய ஆத்துமத்துக்கோ புத்தி, மனது, நினைவு என்கிற இந்த மூன்றும் உண்டு.

புத்தி என்றால்—இன்ன காரியங்களுக்கு இந்தப் பிரகாரம் உதவி செய்தால் காரியம் ஆகும், இந்தப் பிரகாரம் செய்யாவிட்டால் காரியம் ஆகாதென்று அறிந்து செய்கிறது புத்தி என்று சொல்லப்படும்.

மனது என்றால்—இது நல்லதென்றும் இது பொல்லாததென்றும், இது கசப்பு இது இனிப்பென்றும், இது பாவம் இது புண்ணியமென்றும் மனதிலே எண்ணி சம்மதிக்கிறது மனதென்று சொல்லப்படும்.

நினைவு என்றால்—கடந்த காலங்களில் அவனவன் செய்த காரியங்களையும் எண்ணின எண்ணங்களையும் பிற்காலத்திலே ஞாபகப்படுத்துகிறது நினைவென்று சொல்லப்படும்.

மிருகத்துக்கோ வென்றால் மனிதனுக்குச் சொன்ன இந்த மூன்று விஷயங்களில் நினைவுமாத்திரமுண்டு. ஒரே நினைவினாலே நின்கிற இலையையும் விதையையும் ஆகாரத்தையும், குடிக்கிற தண்ணீரையும், படுக்கிற ஸ்தலத்தையும் பார்க்குமே ஒழிய, இது நல்லதென்றும் பொல்லாததென்றும் இது பாவமென்றும் புண்ணியமென்றும் பகுத்தறியும் அறிவானது மிருகத்துக்கில்லை. ஆனதுபற்றி அதற்கு மோக்ஷமும் இல்லை நரகமும் இல்லை. அதினுடைய சீவனானது சரீரத்தோடே அழிந்துபோகுமேயல்லாமல் அதின் சரீரத்தைவிட்டுப் பிரியாது. அதெப்படியெனில், ஒரு மிருகத்தை நூறுதுண்டாய் அறுத்

தாலும் தண்டத்துக்கு தண்டம் தடிக்கும், அதினுடைய சீவனுனது அதோடேகூட அழிந்துபோகும். ஆனல் ஒரு மனுஷனே அப்படி தண்டம் தண்டமாக அறுத்தால் துடியாமலும் பதையாமலும் இருக்கிறதைப் பார்க்கலாம். எனெனில் மனிதனுடைய உயிர் பிரிந்து போகிறதே அல்லாமல் சரீரத்தோடு அழிகிறதில்லே.

இதுதவிர செத்துப்போன மனுஷனுடைய பிரேதத்தை ஒருவர் கண்டால் பங்கம் உண்டாவதுமல்லாமல் அவர்கள் பேய் பிசாசுகளாய் காணப்படுவார்களோ என்கிற பயமும் உண்டாகிறது. ஆனல் செத்துப்போன மிருகத்தை ஒருவர் கண்டால் பயப்படுவதில்லே. எனென்றல் மிருகத்தினுடைய சீவனுனது சரீரத்தோடே அழிந்துபோகிறது. ஆகையால் பேய் பிசாசுகளாகும் என்கிற அச்சமுண்டாவதில்லே. மனுஷனுடைய சீவனேனவென்றல் அழியாத சீவனுய் இருக்கிறபடியினலேயும், செத்த சரீரத்திலே திரும்ப வந்து அச்சீவன் புகுமென்கிறபடியினலேயும் செத்த மனுஷனுடைய பிரேதத்தைக் கண்டவர்களுக்கு பயங்கரமுண்டானதையும், மிருகத்தினுடைய சீவன் சரீரத்தோடே அழிந்துபோகிறபடியினலே, செத்துப்போன மிருகத்தைக் கண்டவர்களுக்கு அல்வித பயங்கரம் உண்டாகாததையும் மனிதர்கள் தெரிந்திருந்தும் மனுஷனுடைய சீவனுக்கும் மிருகத்தினுடைய சீவனுக்கும் வேற்றுமையில்லே என்று சொல்வது புத்திக்கு உகந்ததா அல்லது பிடிவாதம் சாதித்தல் என்பதா?

இதல்லாமல் இப்படி சொல்லுகிறவர்கள் ஒரு மிருகம் செத்துப்போனல் அந்த மிருகத்திற்காக தான தர்மம் முதலான புண்ணியங்களேப் பண்ணுகிறதில்லே. மனிதர் மரித்தபிற்பாடு கண்டிப்பாய் அவரவர்களேக் குறித்து தான தர்மம் முதலான புண்ணியங்களேப் பண்ணுகிறார்கள். அதேனென்றல், மனுஷனுடைய சீவனுனது என்றென்றைக்கும் அழியாமலிருக்கும் என்கிறதற்கு அடையாளமாக முற்காலத்து புத்திமான்கள் இவ்வாறு ஏற்படுத்தினர்கள். மிருகத்தினுடைய சீவனே செத்தவுடன் சரீரத்தோடுகூட அழிந்து போகிறதென்பதில் சந்தேகமில்லாதபடியினலே விவேகிகள் தான தர்மங்களே ஏற்படுத்தவில்லே.

அதுவுமல்லாமல் மிருகங்களுக்கு தகப்பனென்றும் தாயென்றும் தங்கை என்றும் மக்களென்றும் அறியும்படியான புத்தி அணுப்பிரமாணமாகிலும் இல்லே. ஆனபடியினலே மனுஷனுண்டய ஞானமுடைத்தான சீவனே மிருகத்தினுடைய சீவனுக்கு சரியென்று சொல்லத் தகுமா என விவேகிகள் யோசித்துப்பார்க்கவும்.

Short Commentary on Some of the Parables

By the Editor

இயேசுநாதர் உரைத்த சில உவமைகளுக்குச் சுருக்கமான வியாக்கியானம்

3. THE MUSTARD SEED AND THE LEAVEN

கடுகுவிதையுவமைக்கும் புளித்தமாவுவமைக்கும் சில குறிப்புகள்

(மத். 13 : 31–32 ; மாற். 4 : 30–32 ; லூக். 13 : 18, 19 வாசிக்கவும்.)

1. கடுகுவிதை—

a. **மிகவும் சிறிதாயிருக்கும்.**

இதைவிட இன்னும் சிறிதான விதை உண்டாகினும், விதைக்கத்தக்க விதைகளிலும் இதுவே சிறிது. இதின் சிறுமையைப்பற்றி யூதர்களுக்குள்ளே பல பழமொழிகள் இருந்தன. எள்ளளவு என்பதினுலே நாம் சிறுமையைக் குறிக்கிறதுபோல் அவர்கள் கடுகு விதையளவு என்று சொல்லி சிறுமையைக் காட்டினர்கள். கடுகு விதையளவு விசுவாசம் என்று இயேசுவானவரும் சொன்னதாக நாம் வாசிக்கிறோம். (மத். 17 : 20)

b. **மரமாகும்.**

கடுகுச்செடி ஒரு பூண்டுதான். பூண்டானலும் சிட்டுக்குருவி முதலான சிறு பக்ஷிகள் அதின் கிளேகளில் உட்கார்ந்து குளிர்ச்சியான நிழலே அனுபவிக்கக்கூடிய உயரத்தையும் பலத்தையும் அடையும். ஆகையினலே அதை ஒரு மரம் என்று சொல்லலாம்.

2. புளித்த மா—

சாதாரணமாய் மூன்று படி எடுக்கிறது வழக்கம். திருஷ்டாந்தமாக ஆபிரகாம் சாராளிடத்திற்குப் போய் தீ சீக்கிரமாய் மூன்று படி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் (ரொட்டி) சுடு என்றன். (ஆதி. 18 : 6.)

பழைய மாவிலிருந்து அவர்கள் எப்போதும் கொஞ்சம் எடுத்து வைத்து, பிற்பாடு புதிய மாவோடே கலந்து பிசைவார்கள். அப்படியே மாவெல்லாம் புளிப்பாய்விடும். புளித்த மா சொற்பமானலும் பிசைந்த மாவுக்கெல்லாம் ருசிதரும். 'கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா முழுவதையும் புளிப்பிக்கும்' என்கிற பழமொழியை பவுல் அபோஸ்தலர் இரண்டு தரம் திருஷ்டாந்தமாக உபயோகித்திருக்கிறார். (1 கொரி. 5 : 6 ; கலா. 5 : 9.)

இவ்வுவமைகளின் கருத்து.

தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க மேசியாவானவர் வந்திருந்தார். ஆரம்பமோ மிகவும் அற்பமாயிருந்தது. காரியம் சித்திக்குமோ என்று சீஷர்கள் சந்தேகித்தார்கள். அந்தச் சந்தேகத்தை நிவிர்த்திக்க: 'கடுகுவிதையைப் பாருங்கள். சகல விதைகளிலும் அது சிறியதாயினும், குருவிகள் உட்கார்க்கூடிய ஒரு பெரிய பூண்டு அதினால் உண்டாகிறது. அல்லது புளித்த மாவைக் கவனியுங்கள். அது கண்ணுக்குத் தெரியாதேபோனாலும் பிசைந்திருக்கிற மா வெல்லாவற்றுக்கும் அதுவே ருசிதரும். தேவனுடைய ராஜ்யம் அத்தன்மையே' என்று சொல்லி இயேசுவானவர் தைரியந்தளர்ந்த சீஷர்களை உற்சாகப்படுத்தினார்.

இரண்டு உவமைகளினாலே அவர் இந்த சத்தியத்தைத் திருஷ்டாந்தப்படுத்தினதினாலே அது அதிக நிச்சயமாயிருக்கிறது என்று அறிந்துகொள்ளவேண்டும். (புதையலும் முத்தும் உவமைகளும் அப்படியே.) ஆதியாகமம் 41 : 32—இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும்பொருட்டு, இந்த சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது.

உயிருள்ளதாயிருந்தால் சின்னதானது பெரிதாகும்

சின்னதானதினாலே அலக்ஷியம் பண்ணவேண்டாம். ஆலமரத்தின் கனி சிறிதாயினும், அதின் நிழலிலே ஒரு சேனை தங்கலாம். பனைமாத்தின் கனியோ பெரிது, அதின் நிழலோ ஒரே ஒரு பிராணி இளைப்பாறப் பற்றுது.—ஆகையால் கிறிஸ்தவ மதம் இப்பொழுது ஒரு மேன்மையுமில்லாமல் தோன்றினும், இனிமேல் எல்லாரும் அதின் சத்தியத்தை ஒப்புக்கொள்ளுவார்கள்.

புளித்தமாவுவமையினால் இன்னொரு போதனை கற்றுக்கொள்ளலாம். அதாவது மாவிலே பெருங்காயம், மிளகாய் முதலியவைகளை கலக்கினால் பலவிதமான சுவை உண்டாகிறதேயன்றி, இவை மாவோடு ஒன்றுகவேமாட்டாது, வேறு வேறுகவிருக்கும். புளித்த மாவோ மற்றதுபோகவே பிசைந்த மாவோடே அது ஒன்றுவதோடுகூட இதின் ருசி அதினால் மாறிவிடும். இதைப்போல தேவனுடைய ராஜ்யம் நமது ஜனத்தாரின் மனதிலே நுழைந்து அதிலிருக்கிறதெல்லாவற்றையும் புதுப்பிக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் ஒரு புது ஜாதியாராகக் கூடாது, எல்லா ஜாதியாரும் இந்த புளித்த மாவின் மூலமாய் புதிய உயிரையும் புது பலத்தையும் புதிய ஆசையையும் பெற்றுக்கொள்ளவேண்டியது.

இதுவே இயேசுகிறிஸ்துவினுடைய நோக்கம். இந்த நோக்கம் நம்மிடத்திலும் நமது ஜனத்தாரிடத்திலும் நிறைவேறக்கடவது.

C. L. S. PRESS, MADRAS—1919

No. 160 செப்டெம்பர் 1919

வேதியர் விளக்கு

A Text

By Dr. Lyman Abbott

Matt. xviii. 15–17.

And if thy brother sin against thee, go, shew him his fault between thee and him alone: if he hear thee, thou hast gained thy brother. But if he hear thee not, take with thee one or two more, that at the mouth of two witnesses or three every word may be established. And if he refuse to hear them, tell it unto the chruch: and if he refuse to hear the church also, let him be unto thee as the Gentile and the publican.

This is the introduction: To treat a man as a heathen man and a publican or Roman taxgatherer was simply to have no dealings with him. The heathen were not subjected to penalties of any sort in Judea; the Jews simply had no intercourse with them. The meaning, then, of Christ's ultimatum, as it would have been understood by his disciples, would be: If your fellow-member defies the public opinion of the Christian community to which you both belong, have nothing more to do with him.

The great statesmen of the world, horrified by this terrible world war, are endeavouring to find some better method for the settlement of international difficulties than 'wager of battle,' and curiously, and as it seems to me very significantly, have hit upon the method which Christ commended to his disciples nineteen centuries ago. If I interpret Christ's counsel correctly, these statesmen are following Christ, whether they know it or not. For, if we apply the spirit of his counsel to international action, it would mean, first, Dip-

lomacy; second, Arbitration; third, Judicial Procedure; fourth, to enforce such procedure, Non-intercourse.

So the divisions are:

1. *Diplomacy.*—If in the community of nations a controversy arises between two or more of them, the first step toward a settlement is diplomacy—that is, personal negotiation between the two nations. The object of this negotiation should be to gain a brother. Its spirit and its purpose should be pacific; its aim, to find some common ground on which the two nations can agree. Austria had a complaint against Serbia. The Austrian Crown Prince had been assassinated, and the Austrian Government believed that the Serbian Government had been accessory to the assassination. If the charge was true, the trespass committed by the Serbian Government was very great. But Austria showed no desire in her negotiations to gain a brother. She treated Serbia as a criminal. She went with a demand in one hand and a threat in the other. And the demand was one to which no nation could accede under threat, without, by that very act, surrendering her independence.

Christ also advises that these negotiations between the complainant and the supposed transgressor be private. 'Go and tell him his fault between thee and him alone.' Recently there has been in certain quarters a great outcry against secret diplomacy. There has been in this country some demand, though not very widespread or influential, for the abolition of the secret sessions of the Senate. It is said that secret negotiations have led to wars, and that, if all negotiations were conducted in the open, war would be avoided. And it is probably true that some wars have been prepared for, and perhaps promoted, by secret negotiations.

But it is certain that wars have often been prevented by secret negotiations. There are many international questions which cannot be discussed in the open forum without arousing popular prejudices and exciting popular passions. There is a strong popular feeling in this country against unlimited Japanese immigration. There is a strong popular feeling in Japan hostile to American discrimination against Japanese

immigrants. Popular discussion in the press of America excites race prejudice against the Japanese. Popular discussion in the press of Japan excites race prejudice against the Americans. There would be little danger of war between the two countries if we could only unite our forces in a successful war against the yellow press of both countries. If the Japanese question could be taken out of the public forum, there is little doubt that, by friendly negotiations between the Japanese mission now in this country and our President representing the Democratic party and Elihu Root representing the Republican party, an agreement could be reached which would calm the excessive self-esteem of the one people and the excessive fears of the other.

2. *Arbitration.*—If diplomacy quietly conducted between the two parties in a spirit of mutual brotherhood fails, arbitration is the next step in Christ's league to enforce peace. It is evident that the two or three witnesses are to hear both sides of the incipient quarrel. Their opinion is to be listened to by both parties to the quarrel. There is, indeed, no suggestion that they possess *authority* to decide. Authoritative decision is reserved for the third stage in this proceeding toward peace. But they are not partisans of the complainant taken by him to overbear the accused. They are witnesses, taken to hear the story, to reach their conclusion upon it, and, if no agreement can be reached by their aid, to report to the constituent assembly their judgement upon the undetermined issue. My readers will remember how urgent were the entreaties of England, France, Italy, and Russia to Germany and Austria to submit the issue between Austria and Serbia either to the Hague Tribunal for decision or to a conference of the Powers for amicable settlement, and how emphatic and almost contemptuous was the refusal.

3. *Judicial Procedure.*—This was as far as Christian civilisation had gone in 1914 in its preparations to avoid war. Reformers had urged the constitution of a supreme court of nations to which any nation might be summoned to give account of its claims. But no such court had been constituted. The imperfectly organised Hague Tribunal could pass

only on such questions as were submitted to it by the consent of both the parties to the controversy. Christ recommended to his disciples a further step—the creation of some sort of body—Parliament, Congress, Supreme Court, Constituent Assembly, Ecclesia—to which either party could report its complaint, a body which would have power to declare an authoritative judgement.

4. *Non-intercourse.*—And if the other party would not accept the judgement, what then?—war to enforce the decision? No! Non-intercourse. If he will not hear the assembly let him be unto thee as an heathen man and a publican. Let us imagine that in 1914 the eighteen nations now in alliance against the Central Powers had constituted a community of nations; that they had an international tribunal or assembly with power to hear and decide international questions; and that when Germany and Austria refused to submit the issue between Austria and Serbia to decision by that tribunal, the Powers had instantly and automatically pronounced a decree of non-intercourse. What would have happened? Every foreign ambassador in Germany and Austria would have been called home. Every German and Austrian ambassador would have been sent home. The mails between other countries and Germany and Austria would have been suspended. Telegrams of every description would have ceased. The world's ports would have been hermetically sealed against the offender. No exports could have passed from the Central Powers to other countries, no imports could have passed from other countries into their territories. Germany and Austria would have been as effectually isolated as if they had been transported bodily to Mars. The present blockade, which is threatening to bring Germany to her knees, would be insignificant by the side of such a world blockade. What nation would venture to defy it? What nation defying it once would ever venture to defy it a second time?

It is true that such a league as is here foreshadowed would not absolutely prevent war. Germany might have invaded Holland, Belgium, France in the west, and Russia, Serbia, Bulgaria, Rumania in the east, to get by her arms the

supplies which commerce refused to her. It might have been necessary to unite the armies of the world in defence of the right to decree and enforce non-intercourse against a defiant nation. But if such a league had existed in 1914, it would not have required three years of robbery on the land and piracy on the sea to call it into existence.

If any ecclesiastical reader is inclined to think that the counsels embodied in the passage here interpreted and applied to international affairs were intended by Christ simply as a direction for Church discipline, I must refer him to my Commentary on Matthew for a statement of the reasons why I cannot agree with him; if any reader thinks they were intended only for the settlement of private disputes, I reply that the same principles apply to the settlement of disputes between organisations as between individuals. If any one thinks it extraordinary that the world should not have long since discovered and adopted Christ's league to enforce peace, if it is really suggested by his teaching, I reply that he who believes, as I do, that Jesus Christ is the divine leader of mankind will not think it extraordinary that he should still be in advance of the age and waiting patiently for his disciples to overtake him.

(From *The Expository Times.*)

A Sermon Outline

By the Rev. N. Samuel, Tranquebar

பிரசங்கக் குறிப்பு

சங்கீதம் 1 : 1–2.

இது பாவம் நிறைந்த உலகம். பாவத்தினால் சகலவித நிர்ப்பாக்கியமும் இதில் உட்பட்டது. அதனால் இதற்கு 'அழுகையின் பள்ளத்தாக்கு,' 'கண்ணீர்க்கணவாய்' என்னும் பெயர்கள் வந்தன. ஆயினும், இந்த உலக வாசிகள் எல்லாரையும் நிர்ப்பாக்கியர் என்று சொல்லோம். உலகவாசிகளாயிருந்தும், மெய்ப்பாக்கியத்தை அனுபவிக்கிறவர்கள் உண்டு. நமது இரட்சகர் மலைப்பிரசங்கத்தில் அவர்

களே நமக்கு காண்பிக்கிறார். நமது வாக்கியத்திலும் ஒரு பாக்கிய வாஞைப் பார்க்கிறோம். இவ்வாக்கியத்தை ஆதாரமாய் வைத்து நாம் கேட்கும் கேள்வி:

இந்த நிர்ப்பாக்கிய உலகத்தில் மெய்ப்பாக்கியம் அனுபவிக்கக் கூடுமா?

விடை:—1. வேதவசனம் மெய்ப்பாக்கியத்தின் ஊற்று.

2. வேததியானம் மெய்ப்பாக்கியமாகும் வழி.

1. வேதவசனம் மெய்ப்பாக்கியத்தின் ஊற்று.

a. 'வேதம்' பாக்கிய சமூத்திரமாகிய கடவுளால் உண்டானது. (2 தீமோ. 3: 16, 17.) அதற்குக் கர்த்தருடைய வேதம் என்று பெயர்.

கவனிப்பு. சங்கீதக்காரர் 'வேதம்' என்ற வார்த்தையால் தமது காலத்திலிருந்த வேதாகமங்களைக் குறிக்கிறார் என்பது மெய்யேயாயினும், கிறிஸ்தவர்களாகிய நமக்கு அது முழு வேதபுத்தகத்தையும் குறிப்பதாம்.

b. 'வேதம்' பாக்கியம் அனுபவித்த பரிசுத்தவான்கள் எழுதியது. (2 பேது. 1: 20, 21.)

c. 'வேதம்' பாக்கியத்தை அளிக்கும் பலமுடையது. (ரோ. 1: 16.)

(1) அது பாவம் செய்யாதபடி எச்சரிக்கும்.
(2) அது பாவியை மனந்திருப்பும்.
(3) அது மனந்திரும்புகிறவனை ஆற்றித்தேற்றும்.
(4) அது இயேசுவுக்கு சாட்சிகொடுத்து, விசுவாசத்தை உண்டாக்கும். (யோவான் 5: 39.)
(5) அது விசுவாசிகளுக்குப் பாவமன்னிப்பைக் கூறும், நித்திய ஜீவ நம்பிக்கையைக் கொடுக்கும்.

d. (1) இம்மட்டும் திருச்சபையைக் கட்டி வளர்த்துவருகிறது.
(2) இராஜ்யங்களைக் கட்டிக் காக்கிறது.
(3) குடும்பங்களை வளர்த்து ஆசீர்வதிக்கிறது.
(4) தனியாட்களைக் கனிதரும் விருட்சங்களுக்கு ஒப்பாக்குகிறது.

2. வேததியானம் மெய்ப்பாக்கியமாதும் வழி.

a. நாம் விலக்கவேண்டிய தடைகள்.
(1) துன்மார்க்கரின் ஆலோசனை.
(2) பாவிகளின் வழி.
(3) பரிகாசக்காரர் சங்காத்தம்.

b. வேதத்தில் பிரியம் இருப்பது அவசியம்.
(1) கடமைக்கல்ல.
(2) மற்றோர் கட்டாயத்துக்கல்ல
(3) வழக்கத்துக்கல்ல
(4) பார்ப்போர் புகழ்ச்சிக்கல்ல
} நமது பரமபிதாவின் வாக்கென்கிற எண்ணத்தால் உண்டாகும் விருப்பம் அவசியம்.

c. வேதத்தில் தியானம்.
(1) ஜெபத்தோடு கவனமாய் வாசித்து (பெரோயா சபை.)
(2) இரவும் பகலும் மறவாமல் மனதில்வைத்து (மரியாள்).
(3) அதன் உட்பொருளைக் கருத்தோடு யோசித்துப் பார்ப்பது உத்தமம்

d. இதனால் மெய்ப்பாக்கியம் அனுபவித்தோர் தொகை பெரிது (அகுஸ்தின், லுத்தர், கல்வீன் மி).

Outline to a Study of St. John's Gospel

By the Rev. J. Andersen

யோவான் எழுதிய சுவிசேஷப் பொருட் குறிப்பு விபரம்

I. சிறப்புப்பாயிரம்

1. ஆக்கியோன்:—இன்னுரென்று இந்நூலிற் சொல்லாவிடினும், ஆதிசபைப்பிதாக்கள் யோவான் அப்போஸ்தலன் என்று நிச்சயப்படுத்துகிறார்கள். இதற்கு 1: 14; 19: 35; 21: 20, 24; 1: 40; 13: 28; 20: 2–5 இவைகள் ஒவ்வும். 1 யோ. 1: 1–3 ஒப்பிட்டுப்பார்க்க.

சிந்திக்கவும். யோவான் இனத்தார், சரித்திரம், வேலை, மற்ற நூல்கள், முதலியவைகள் எவையென்று ஆராய்ந்து அறியவும்.

2. காலம்:—85–95 A. D.

சிந்திக்கவும். அவ்வருஷங்களில் எழுதினதால் என்ன பயன்? அவர் வயதும் அனுபவமும் என்ன? எருசலேம் நிலைமை என்ன? சபைகளின் அக்காலத்திய ஸ்திதி என்ன? மற்ற சுவிசேஷங்கள் எழுதப்பட்ட காலம் எது?

3. காரணம்:—20: 31-ல் காணவும். இந்நூலின் வரலாறும் இதைக் காட்டும்.

4. பொருள் விசேஷம்:—இரு வகை.

அ. **கர்த்தரைப்பற்றியவை**:—சரித்திரம், வரலாறு, அற்புதங்கள் கொஞ்சம், உபதேசமோ அதிகம். கிறிஸ்துநாதரின் தெய்விகத்தைக் காட்டத்தக்க கிரியைகள், உபதேசங்கள், பதங்கள், முதலியவை விசேஷமாய் விரித்துரைத்து விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன, சிந்திக்கவும். இதில், இந்த சுவிசேஷத்திற்கும் மற்ற சுவிசேஷங்களுக்கும் உள்ள பேதங்கள் எவையென்று ஆராய்ந்து அறியவும்; எழுதவும். யோவான் கர்த்தரை விசேஷமாய் அறிந்து நெருங்கி விசுவாசிப்பது இந்நூலில் தெரிகிறதா? உதாரணம் காண்பிக்கவும்.

இதில் விசேஷித்து வழங்கப்பட்டிருக்கிற பதங்கள் கீழ்வருபவை.

(1) வார்த்தை (Logos). இங்கு இதின் அர்த்தம், வெளிப்படுத்துதலும் அதைச் செய்யும் மகாபுருஷனும் (1 : 1–14).

(2) ஜீவன். (52 தரம்.) மரணத்துக்கு எதிரில் (5 : 21 ; 6 : 63 ; 11 : 25); சந்தேகத்துக்கு எதிரில் (14 : 6) ; ஜீவாதாயமாகவும் ஈவாகவும் (4: 14 ; 6: 35, 48, 63, 68 ; 12: 50 ; 17: 3; 20: 31) ; பிதாவிலும் குமாரனிலும் ஸகஜமாயுள்ளது (5 : 26) ; தொண்டர்களிலும் உள்ளது (6 : 53, 54 ; 5 : 40 ; 3 : 15, 16, 36) ; இம்மையில் (5 : 24) ; மறுமையில் (4 : 36 ; 6: 27 ; 12: 25) ; உலகத்துக்கென்றும் (6 : 51 ; 10 : 10).

(3) ஒளி. (18 தரம்.) 1 : 4–9 ; 3 : 19 ; 8: 12 ; 9: 5 ; 12 : 35, 36, 46.

(4) சத்தியம். (25 தரம்.) கிறிஸ்துநாதரே சத்தியம் (14 : 6 ; 8: 40) ; பரிசுத்த ஆவியானவர் சத்தியம் (14: 17 ; 15: 26; 16: 13); தேவவசனமே சத்தியம் (17 : 17, 19) ; மெய்யாகவே மெய்யாகவே என்பது 25 தரம்.

(5) உலகம். (79 தரம்.) அவர் உலகத்திற்குச் செய்த நன்மைகள் உலகத்திற்கே அவசியம் (1 : 29 ; 6 : 33, 51 ; 3 : 17 ; 4 : 42 ; 8 : 12 ; 9 : 5 ; 12 : 47) ; உலகமோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (1 : 10, 11; 14: 17 ; 15 : 18).

(6) மகிமை (40 தரம்). (7) சாக்ஷி (78 தரம்). (8) அறிவு (55 தரம்). (9) விசுவாசம் (98 தரம்). (10) நாமம் (25 தரம்). (11) தீர்ப்பு (29 தரம்). (12) அன்பு (43 தரம்).

(13) கிறிஸ்துநாதரின் தெய்விகத்தைக் காட்டுகிற விசேஷித்த வாக்கியங்கள். (6: 35; 8: 12; 10: 7, 11; 11: 25; 14: 6; 15: 1; 8: 24, 28, 58 ஒப்பிட்டுப்பார்க்கவும்.)

இவ்வார்த்தைகளின் அருமையான திவ்வியப்பொருளை யோவான் ஞானக்கண்ணால் கண்டு மனதில் ஆழப்பதிந்து பலப்பட வெகுகாலம் தியானம்செய்து கிறிஸ்துநாதரின் தெய்விகத்தன்மையை பக்தியனுபவத்தால் அதிகமாய் உணர்ந்து இந்த ஞானதிரவியங்களைத் தன் உள்ளத்திலிருந்து எடுத்து இப்பொழுது சபையாருக்குமுன் வைத்துப் பேசுகிறார்.

ஆ. **மனிதரைப்பற்றியவை**:—இப்பேர்ப்பட்ட மஹா தெய்வ அவதார புருஷன் செய்த திவ்விய போதனை சாதனைகளில் மனிதர்கள் ஒத்துக்கொள்ளுகிறதும் ஒத்துக்கொள்ளாததும் இன்னதென்று படிப்படியாய் காட்டிவருகிறார். இவ்வாறு இச்சுவிசேஷம், விசுவாசமும் அவிசுவாசமும் எப்படி உண்டாகி வளருகிறதென்பதைக் காட்டுகிறது.

II. பொருள் அடக்கம்

A. முகவுரை (1 : 1–18) : மனித அவதாரம்

1–2 கிறிஸ்துநாதரின் தெய்வத்தன்மை (தெய்வசம்பந்தம்).

3 படைப்புத்தன்மை (உலகசம்பந்தம்).

4 காத்தற்றன்மை
5 குருத்தன்மை
} (மனிதசம்பந்தம்.)

6–8 யோவான் ஸ்நானன் (சாக்ஷி).

9–18 கிறிஸ்துநாதரின் அவதாரம் (அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள், 9–11 ; ஏற்றுக்கொண்டவர்கள், 12–13 ; அவதார மஹிமை, 14–18).

சிந்திக்கவும். இம்முகவுரையில் கிறிஸ்துநாதரின் அவதாரத்திற்கு முன்னிலையும் பின்னிலையும் என்ன? யோவான் அவரிடத்தில் கண்ட விசேஷம் என்ன? விசுவாசிகள் பெற்ற தெய்வத்தன்மை எவ்வாறு? விஷ்ணுவின் தசாவதாரத்துக்கும் இவ்வவதாரத்துக்கும் பேதம் என்ன?

B. கிறிஸ்துநாதர் உலகத்துக்குத் தம்மை வெளிப்படுத்தினது (1 : 19–12 : 50)

இப்பாகத்தில் கிறிஸ்துநாதர் விசேஷமாய் ஜீவனுகவும் ஒளியாகவும் விளங்குகிறார். இப்பதங்களில் ஒளி 13 தரமும், ஜீவன் 36 தரமும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன ; அன்றியும் கிறிஸ்துநாதருக்கும் யூதர்களுக்கும் உண்டான விரோதமும் பகையும் காண்பிக்கப்பட்டிருப்பதுடன் சீஷர்களின் விசுவாச வளர்ச்சியும் விளங்குகிறது. இப்பெரிய பாகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(i) உலகத்திற்கு சுவிசேஷ ஒளியையும் ஜீவனையும் பகிரங்கப்படுத்தல் (1 : 19–4 : 54).

1: 19–37 யோவான் ஸ்நானன் கூறின சாக்ஷி
1: 38–51 முதல் சீஷர்கள் கொடுத்த சாக்ஷி
2: 1–12 கிறிஸ்துநாதர் செய்த முதல் அற்புத சாக்ஷி

இம் மூன்றிற்கும் உள்ள பேதாபேதங்களும் அவற்றின் விசேஷங்களும் என்ன?

2: 13–3 : 21. கிறிஸ்துநாதர் எருசலேம் பட்டணத்தில் செய்த உபதேசம்.

(சாமானியருக்கு, 2 : 13–25; ஆசாரியனுகிய நிக்கொதேமுக்கு, 3 : 1–21.)

3 : 22–4 : 3. கிறிஸ்துநாதர் யூதேயா நாட்டில் செய்த பிரசங்கமும் யோவான் ஸ்நானன் கொடுத்த சாக்ஷியும்.

4: 4–42. கிறிஸ்துநாதர் சமாரியாவில் செய்த உபதேசம்.

(ஒரு ஸ்திரீயுடன் சம்பாஷித்து உணர்த்துதல், 4-26 வ.; சீஷர்களைக் கண்டித்து உணர்த்துதல், 27–38 வ.; ஊராருக்குப் போதித்து உணர்த்துதல், 39–42 வ.)

4 : 43–54. கலிலேயா நாட்டில் நடத்தின கிரியைகள்.

சிந்திக்கவும். கிறிஸ்துநாதர் தம்மைப்பற்றி போதித்து உறுதிப்படுத்துகிறதென்ன?

அவரைப்பற்றி ஜனங்கள் கொண்ட அபிப்பிராயம் என்ன?

சீஷர்கள் அவர்மேல் கொண்ட விசுவாசமானது எப்படி உற்பத்தியாகி, எதனால் உறுதிப்பட்டது?

கிறிஸ்துநாதர் வெவ்வேறு ஜனங்களோடு கலந்து வெவ்வேறு வித நிலையில் செய்த வேலைகளினின்று நாம் நம்முடைய வேலையைச் செய்யக் கற்றுக்கொண்ட விதம் எது?

சமாரியர் யார்? எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்? (2 ராஜா. 17 : 24, 41; எஸ்ரா 4 பார்க்கவும்.)

யோவான் ஸ்நானனுக்கும் கிறிஸ்துநாதருக்கும் இருந்த பரஸ்பர மனோபாவம் என்ன?

(ii) சுவிசேஷ பிரபலியத்தினால் கிறிஸ்துநாதருக்கும் யூதருக்கும் உண்டான வேற்றுமையும் விரோதமும் (அதி. 5–12).

இதனால் நேர்ந்த விரோதம் அதிகாரிகளால் உண்டாகி பலப்பட்டு அவரைக் கொலைசெய்யும்படி வீர்த்தியடைந்தது. இந்த பாகம், மூன்று பிரிவாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு உபதேசத்துடன் கூடி அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அற்புதத்தினாலே உறுதிப்படுத்தப்பட்டுமிருக்கிறது.

(a) கிறிஸ்துநாதரின் ஜீவாதாயம் (அதி. 5, 6).

5 : 1–15. கொடிய வியாதியஸ்தனை அற்புதமாய் குணமாக்குதல். [ஜீவனைக் காக்கின்றவர்.]

5 : 16–47. இதனால் விளைந்த பகையும் இகினிமித்தம் செய்த உபதேசமும்.

(குமாரன் பிதாவின் கிரியையில் உள்ளவர். குமாரன் தன்மையிலும் அதிகாரத்திலும் பிதாவைப்போலிருக்கிறபடியால் அவரையே விசுவாசிக்கவேண்டியது. 16–30.)

பிதா குமாரனைப்பற்றிக் கொடுக்கிற சாக்ஷி, 31–38.

வேத சாஸ்திரங்களின் சாக்ஷி, 39–47.

6 : 1–14. ஐயாயிரம் பேரை அற்புதமாய் போஷித்தல். [ஜீவனைப் போஷிக்கின்றவர்.]

15–21. கடலின்மேல் அற்புதமாய் நடந்துபோதல். [பூதங்களோடடக்குகின்றவர்.]

22–71. கப்பர்நகூம் ஜெப ஆலயத்தில் உபதேசித்தல்.

ஜனங்கள் கிறிஸ்துநாதரைக் கேட்ட மூன்று கேள்விகளுக்கு அவர் செய்த மூன்று உபதேசங்கள் 22–24. [சந்தர்ப்பம்.]

முதற்கேள்வி, வசனம் 25, உபதேசம் 26–40; கிறிஸ்துநாதர் தம்மிடம் வருபவர்களுக்குக் கொடுக்கும் ஜீவப்பிரசாதம்.

இரண்டாங்கேள்வி, வசனம் 41–42, உபதேசம் 43–51; இதற்கென்று பிதாவானவர் ஆத்துமாக்களைத் தன் அருள்வசப்படுத்தல்.

மூன்றாங்கேள்வி, வசனம் 52, உபதேசம் 53-59; அதைத் தன் சொந்தமாக்கிக்கொள்வதின் அவசியம்.

இதனால் சீஷர்களுக்குள் உண்டான அபிப்பிராய பேதங்கள். வசனம் 60–71.

சிந்திக்கவும். 5–ம், 6–ம் அதிகாரங்களில் குறித்த காலமும் ஸ்தலமும் எவை? 4: 35 ல் சொல்லியிருக்கிற அறுப்புகாலம் எந்த மாதம்? 5 : 1. என்ன பண்டிகை? 6 : 1. எந்த மாதம்? 7: 2. எந்த மாதம்? (லேவியாகமம் 23: 39-44.) இதெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால் 4–ம் அதிகாரமுதல் 7–ம் அதிகாரம் வரையில் உள்ளவைகள் எவ்வளவு காலத்திற்குள் நடந்திருக்கவேண்டும்?

5–ம், 6–ம் அதிகாரங்களில் சொல்லியிருக்கிறபடி கிறிஸ்துநாதரின் தெய்விகத்தன்மை எப்படி உபதேசிக்கப்பட்டிருக்கிறது? 5: 19 ல் கருத்தென்ன? இவ்விஷயத்தில் அவ்வதிகாரங்களின் வித்தியாசம் என்ன? இவைகளில் சீஷர்களின் விசுவாச அபிவிருத்தி எப்படியிருந்தது?

(இன்னும் வரும்.)

Short Commentary on Some of the Parables

By the Editor

இயேசுநாதர் உரைத்த சில உவமைகளுக்குச் சுருக்கமாய் வியாக்கியானம்

THE HIDDEN TREASURE AND THE PEARL

புதையலும் முத்தும் உவமை

(மத். 13: 44–46)

1. புதையல் உவமை.

ஒருநாள் ஒருவன் தற்செயலாய் ஒரு நிலத்திலே புதையல் ஒன்றைக் கண்டெடுத்தான். முன்னொரு காலத்தில் ஓர் இசுவரியவான் சத்துருக்களுக்கும் திருடருக்கும் பயந்து தன்னிடமிருந்த ரொக்கம் மணி ஆபரணுதிகளை எடுத்து ரகசியமாய் தன் தோட்டத்திலே புதைத்துவைத்திருந்தான். அவன் இறந்துபோனபிற்பாடு அந்த சொத்து இருந்த இடம் யாருக்குந் தெரியாது. அவனுடைய ஆஸ்தி இன்னொரு மனிதனுக்குக் கிடைத்தது. அநேக வருஷம் சென்ற பின் தற்செயலாய் ஒருவன் அந்தப் புதையலைக் கண்டெடுத்தான். இவன் நல்ல யோக்கியனாயிருந்தால், நிலத்தின் சொந்தக்காரனிடத்தில் போய்க் காரியத்தைத் தாராளமாய்ச் சொல்லியிருப்பான். இவன் சாதாரண லௌகீக மனுஷன். ஆகையால் இவன் செய்ததேதெனில் திரும்பவும் புதையலைப் பத்திரமாய் மூடிவிட்டு நிலத்துடையானிடத்திற்குப் போய் நிலத்தின் கிரயத்தை விசாரித்தான். அவன் சொன்ன விலை இவனுடைய ஆஸ்தியின் மதிப்புக்குச் சரியாயிருந்தது. ஆனாலும் நிலத்தில் புதைத்திருந்த சொத்துமாத்திரம் கிடைத்தால், எவ்வளவு கொடுக்கவேண்டுமானாலும் சந்தோஷமாய்க் கொடுக்கலாம் ஆகையால் தன் ஆஸ்தி எல்லாம் விற்று ரொக்கமாக்கி கேட்ட விலையை பூராவாகவே தீர்த்துவிட்டு தான் அபேக்ஷித்த அந்த நிலத்தை வாங்கிக்கொண்டான். அப்படியே தனக்கிருந்த சொற்ப ஆஸ்தியைக் கொடுத்ததினாலே இதற்கும் மேலான ஆஸ்தி இவனுக்குக் கிடைத்தது.

2. முத்து உவமை.

முத்துச்சிப்பிகள் அநேகமாய் அரபி தேசத்துக்கும் பாரசீக தேசத்துக்கும் இடையிலிருக்கிற கடலிலே இருக்கும். அங்கே ஆழத்தின் அடிவரைக்கும் இறங்கி சிப்பிகளை வாரி எடுப்பார்கள். மேலே ஏறினபிற்பாடு அவற்றின் ஓட்டையெல்லாம் உடைத்து ஒவ்வொன்

றிலும் முத்திருக்கிறதோ இல்லையோவென்று பரிசோதித்துப் பார்ப்பார்கள். அவைகள் ஒவ்வொன்றிலும் சில முத்துக்கள் இருக்கும், ஆனால் கெட்டி முத்து அகப்படுவது அரிது. பிறகு அவர்கள் அம்முத்துக்களை வியாபாரிகளுக்கு விற்றுவிடுவார்கள்.

ஒரு முத்து வியாபாரி சிரேஷ்டமான முத்து ஒன்றை வாங்கவேண்டும் என்று வெகு நாளாக ஆசைப்பட்டிருந்தான். கடைசியாக ஒருநாள் மிகவும் நேர்த்தியான ஒரு முத்தைக் கண்டான். எப்படியாவது இதை வாங்கவேண்டும் என்று தனக்குள்ள ஆஸ்தி எல்லாவற்றையும் விற்று இந்த முத்தையே வாங்கிக்கொண்டான்.

இவ்வுவமைகளின் கருத்தென்ன?

இரண்டும் ஒன்று.

இந்த இரண்டு உவமைகளுக்குப் பொதுவானது எது?

ஆசைப்பட்ட பொருளை அடையும்பொருட்டாக அவர்கள் தங்களுக்குள்ள எல்லாவற்றையும் விற்றுவிட்டே அதை வாங்கிக்கொண்டார்கள்.

விற்றுவிட்டது அற்பம்—வாங்கிக்கொண்டது சிரேஷ்டம்.

இப்படிப்பட்ட ஒரு சமயம் நமக்கும் வாய்த்தால் நாம் எல்லாருஞ் சந்தோஷமாய் அப்படியே செய்வோம். இந்த சத்தியத்தை உணரவேண்டும் என்பதே இயேசுவானவருடைய கருத்து.

தேவனுடைய ராஜ்யமே அந்த பொக்கிஷம்.

தேவனுடைய ராஜ்யமே அந்த முத்து.

அதின் இனிமையை ஒரு மனுஷன் கண்டவுடனே அதற்கு ஈடாகச் சந்தோஷமாய்த் தனக்குள்ள எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுப்பான். முன்னிருந்ததைப்பார்க்கிலும் இன்னும் அதிக மேன்மையான சிலாக்கியங்கள் அவனுக்குக் கிடைக்கும். ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் ஒப்புக்கொடுக்கவேண்டும், கொஞ்சமானாலும் ஏதாவது வைத்துக்கொண்டால் தேவனுடைய ராஜ்யத்தின் இனிமைகள் நமக்குக் கிடைக்கமாட்டா. சந்தோஷமோ துக்கமோ, வல்லமையோ விவேகமோ, சித்தமோ சொத்தோ எல்லாவற்றையும் உற்சாகமாய் பகவானிடத்தில் கொடுத்துவிடவேண்டும். கொடுத்தாலும் நமக்கு நஷ்டமாகாது, லாபமுண்டாகும்.

கவலைக்குப் பதிலாகச் சமாதானமும், சஞ்சலத்துக்குப் பதிலாக ஆனந்தமும், சந்தேகத்துக்குப் பதிலாக உறுதியான நம்பிக்கையும் நமக்கு சொந்தமாகும்.

இந்த சிரேஷ்டமான பொக்கிஷமும் முத்தும் நம்மெல்லாருக்கும் கிடைக்கக்கடவது.

Notes on Influenza

இன்ப்ளுயென்ஸா என்னும் ஜ்வரத்தைப்பற்றி சுருக்கமான குறிப்புகள்

சென்ற வருஷத்தில் உலகத்தின் எல்லா பாகங்களிலும் ஜனங்களுக்கு இன்ப்ளுயென்ஸா என்னும் ஜ்வரம் கண்டது. ஜ்வரம் நின்றுபோனபிறகு அநேகர் பலவீனமடைந்து சொற்ப நோய்களினால் கஷ்டப்பட்டார்கள். கோடைகாலத்தில் இந்த ஜ்வரத்தினால் ஜனங்களுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால், இலையுதிர் காலத்தில் அது மறுபடியும் தோன்றி, அதனால் அநேக ஜனங்கள் மாண்டார்கள். அது வெகுசாய் மறுபடியும் தோன்றக் கூடும். ஆகவே, அது தங்களுக்கு வராதபடி தடுத்துக்கொள்ள சகலரும் சித்தமாயிருக்கவேண்டும். தருந்த முறைகளை அனுசரிக்கிறபட்சத்திலே இந்த ஜ்வரம் ஒருவருக்கும் வராதபடி தடுக்கலாம் என்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஆனால் இப்போது கீழே சொல்லியிருக்கும் உபாயங்களை ஜனங்கள் அனுசரித்தால் அவர்களுக்கு வெகுவாய் நன்மை உண்டாகும்.

இப்படிப்பட்ட உபாயங்களை ஜனங்கள் கவனமாய் அனுசரிக்கும்படி அவர்களை நிர்ப்பந்தப்படுத்த சட்டமொன்றும் கிடையாது. ஆனால், அவர்களுடைய நன்மையை உத்தேசித்தே இப்போது சொல்லியிருக்கும் உபாயங்களை அவர்கள் அனுசரிக்கவேண்டும்.

இன்ப்ளுயென்ஸா ஜ்வரம் காண்பதற்குமுன் தும்மலும் இருமலும் சாதாரணமாய் உண்டாகின்றன. ஆகவே, ஒரு மனிதனுக்கு தும்மலும் இருமலும் உண்டாயிருந்தால், இதர ஜனங்கள் அவனை விட்டு விலகியிருக்கவேண்டும். மேலும், ஒருவனுக்கு ஜ்வரமும் இருமலும் தும்மலும் இருந்தால் அவன் இதர ஜனங்களுக்கு சமீபத்தில் போகக்கூடாது.

உடம்பை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டு இந்த ஜ்வரம் கண்டிருப்பவர்களுக்கு சமீபத்தில் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உமக்கே ஜ்வரம் வந்துவிட்டால் நீர் இதர ஜனங்களுக்கு சமீபத்தில் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கிரமமான வேலைகளில் ஆகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும். நன்றாய்த் தூங்கவேண்டும். தேகப்பயிற்சி செய்யவேண்டும். சீதளம் சேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். சாராயம் முதலியவை குடிக்கக்கூடாது. இந்தப்படி யெல்லாம் செய்தால் ஜ்வரம் வந்தாலும் ஜனங்கள் அதைத் தாங்கக்கூடியவர்களாயிருப்பார்கள். தும்மல் மூலமாகவும் இருமல் மூலமாகவும் ஜ்வரம் இதர ஜனங்களுக்குப் பரவும். தும்மும்போதும் இருமும்போதும் மூக்கையும் வாயையும் எப்போதும் மூடிக்கொள்ளவேண்டும்.

வேலைசெய்யும்போதும் தூங்கும்போதும் ஜன்னல்களை எப்போதும் திறந்துவைத்திருக்கவேண்டும். ஒரு தேயிலைக்காண்டி உப்பு கலந்த ஒரு பைண்ட் தண்ணீரினால் மூக்கின் உட்புறத்தைக் கழுவி, தொண்டையில் அந்த உப்புத்தண்ணீரை விட்டுக் கொப்புளிக்கவேண்டும்.

ஜனங்கள் நிறைந்திருக்கும் அறைக்குள் போகக்கூடாது. கூட்டங்களில் சேராமல் விலகியிருக்கவேண்டும்.

எவருக்காகிலும் ஜ்வரமாவது தும்மலாவது கண்டால், அவர் உடனே ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும், அல்லது வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொண்டு உடம்பை சூடாக வைத்திருந்து கூடமானால் வைத்தியர் ஒருவரை வரவழைக்கவேண்டும். காலியாயிருக்கும் அறை கிடைக்குமானால் அதில் படுத்துக்கொள்ளவேண்டும். அந்தப்படி கிடைக்காவிட்டால், அறையின் மற்ற பாகத்துக்கும் படுக்கைக்கும் மத்தியில் மறைப்பு வைக்கவேண்டும். மூக்கில் வடியும் சளியைத் துடைப்பதற்காக கைக்குட்டைகளை உபயோகிக்கும்பட்சத்தில் அவைகளைத் தண்ணீரில் போட்டு வேகவைக்கவேண்டும். துணிகளையாவது காகிதத்தையாவது உபயோகித்தால் அவைகளைக் கொளுத்திவிடவேண்டும்.

பூர்த்தியாய் சொஸ்தமாகும்வரையில் மறுபடியும் வேலைக்குப் போகக்கூடாது. அந்தப்படி போவது இதர ஜனங்களுக்கு அபாயத்தை விளைப்பதாகும். மேலும், அதிசீக்கிரத்தில் வேலைசெய்யத் தொடங்குவதால், வேறே வியாதிகளும் காணக்கூடும். ஜ்வரம் நின்று ஏழு தினம் ஆகும் வரையில் கூட்டங்களுக்கும் வேடிக்கைகள் பார்ப்பதற்கும் போகக்கூடாது. இந்த ஜ்வரம் கண்டவர் படுத்துக் கொண்டிருந்த அறைக்குள் வெயில் காயும்படிச் செய்யவேண்டும்.

இன்ப்ளுயென்ஸா ஜ்வரம் கண்டிருக்கும் ஜனங்களைப் போய்ப் பார்க்கக்கூடாது. ஒருவரோடொருவர் நெருங்கியிருப்பதனாலேயே இந்த வியாதி அநேகமாய் ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகிறதென்பதை மறக்கக்கூடாது. வெளிக்காற்றிலிருப்பதும் அறைகளில் காற்று தாராளமாய் வீசும்படிச் செய்வதுமே இந்த ஜ்வரத்தைத் தடுப்பதற்குச் சிறந்த உபாயங்களென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

A Preventive to Influenza

'இன்ப்ளுயென்ஸா' என்னும் விஷஜ்வரத்தைத் தடுக்கும் முறை

கெ. 91.

பிரதம காரியதரிசி
விளம்பர ஆபீசு
1919ஆ ஆகஸ்டுமீ 4உ

அன்பார்ந்த ஐயா,

அடியில் கண்ட மருந்து சாக்குகளை ஒன்றாய்ச் சேர்த்து அவற்றில் சில துளிகளை கைகுட்டையில் தெளித்து அடிக்கடி முகரு வதால் 'இன்ப்ளுயென்ஸா' என்னும் விஷஜ்வரம் வராமல் தடுக்க லாமென்று; சென்னையிலுள்ள வைத்தியர்களடங்கிய சங்கத்தாரால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதென்று சென்னை சுகாதார உத்தி யோகஸ்தர் தெரிவிக்கிறார்.

மருந்து சாக்குகளாவன:

லவங்கப்பூ தைலம் (அ) Ol. Chinnamomi 2 Dm. (அ) 120 துளி.

பார்மலின் திராவகம் (அ) Liq. Formaldenyde 1 Dm. (அ) 60 துளி.

ரெக்டிபிகேட்டஸ் திராவகம் (அ) Spiritus Rectificatus 1 Oz. (அ) 8 டிராம்.

சென்னையிலுள்ள எந்த ரசாயன சாஸ்திரியும் மேற்படி மருந்து களைச் செய்து விற்பனைசெய்யலாம்.

தங்கள் உண்மையுள்ள
(கையொப்பம்) ஜே. டி. வின்,
விளம்பர ஆபீசர்.

G. L. S. PRESS, MADRAS—1919

வேதியர் விளக்கு

An Outline Study of St. John's Gospel

By the Rev. J. Andersen

யோவான் எழுதிய சுவிசேஷப் பொருட் குறிப்பு விபரம்

(தொடர்ச்சி)

(b) கிறிஸ்துநாதரின் சத்தியப்பிரகாசம் (அதி. 7-10).

அதி. 7. சத்தியப்பிரகாசத்தின் அபிப்பிராயபேதங்கள்.

1-9. இனத்தாருக்குள்.
10-44. பொதுஜனத்துக்குள்.
45-52. அதிகாரிகளுக்குள்.

சிந்திக்கவும். இனத்தார் அவருக்கு உண்டாக்க நினைத்த சோத னைக்குக் காரணம் என்ன?

தம்மைப்பற்றி ஜனங்கள் கொண்டிருந்த தப்பான அபிப் பிராயத்தை மாற்றித் திருத்த அவர் செய்த மூன்று பிரயத் தனங்கள் எங்கு காட்டப்பட்டிருக்கிறது?

கிறிஸ்துநாதரின் பிறப்பைப்பற்றி ஜனங்கள் கொண்ட தப்பான அபிப்பிராயம் என்ன?

கிறிஸ்துநாதர் முன்செய்த எந்தக் கிரியையினால் அவர்களுக்கு அவ்வளவு விரோதம் உண்டாயிற்று?

கிறிஸ்துநாதர் அநேகர்மேல் தம் செல்வாக்கை செலுத்தி சித்தி யடைந்தது எம்மட்டும்?

கிறிஸ்துநாதர் படிப்பிலும் அறிவிலும் சொல்வன்மையிலும் மனோசக்தியிலும் விசேஷசக்தி யுடையவரா?

அதி. 8. சத்தியப்பிரகாச மார்க்கம்.

1-11. குற்றவாளிகளை மன்னித்தல்.
12-20. தன்னைப் பின்பற்றுதலே சத்தியப்பிரகாச மார்க்கம்.
21-30. தன்னை விசுவாசித்தலே இரக்ஷணியமார்க்கம்.

31–36. தன் உபதேசத்தில் நிலைத்திருத்தலே விடுபடுதலின் மார்க்கம்.

37–47. இதை அசட்டை செய்பவர்களின் நிலைமை பயங்கரம் என எச்சரித்தல்.

48–59. கேட்டோர் வேண்டுமென்றே அம்மார்க்கத்தை ஏசட்டைசெய்தல்.

கிறிஸ்துநாதர் சொல்லுகிறபடி யூதர்களின் நிலைமை என்ன வென்று ஆராய்ந்து அறியவும்.

பாவமேயில்லாத அவர் யூதர்களைக் குணப்படுத்தி திருப்பமுடியாத காரணமென்ன?

யூதர்கள் கிறிஸ்துநாதரிடத்தில் காணக்கூடியதாயிருந்த தெய்வத் தன்மைகள் எவை?

கிறிஸ்துநாதர் தாம் தேவகுமாரன் என்றதற்கான நிலைமையும், சிந்தனையும், குணாடவடிக்கையும் உடையவராயிருந்தது எப் படித் தெரிகிறது?

அதி. 9. சத்தியப்பிரகாசத்தின் அற்புத அடையாளம்.

1–7. பிறவிக்குருடனை சொஸ்தமாக்குதல்.

8–34. யூதர்கள் அதைப்பற்றிச் செய்த விசாரணை. (வியாதிஸ்த னிடத்தில், 8–17; பெற்றோரிடத்தில், 18–23; மறுபடியும் அவ னிடத்தில், 24–34.)

35–41. கிறிஸ்துநாதர் அம்மனிதனுக்குச் சொன்ன ஆறுதல்.

அதி. 10. சத்தியப்பிரகாசத்தின் காரண தருவும் காரிய தருக்களும்.

1–6. நல்ல மேய்ப்பர்கள். (அவர்களுக்கு ஆடுகளைப்பற்றிக் கவலை, அவைகளுக்கு அவர்களிடத்தில் நம்பிக்கை.)

7–9. கிறிஸ்துநாதரே ரக்ஷணிய வாசல்.

10–18. கிறிஸ்துநாதரே ரக்ஷணிய மேய்ப்பர்.

19–21. இந்த உபதேசத்தினால் உண்டான அபிப்பிராயங்கள். (அச்சமயத்தில் ஆரம்பித்த இவ்வுபதேசத்தை அடுத்த பண்டிகை யில் முடிக்கிறார். 22–24.)

25–30. அவருடைய ஆடுகளுக்கு அடையாளம் விசுவாசமே.

31–39. அதைக் கேட்டோர் கொண்ட பகை.

40–42. அதனால் அவர் பிரிந்துபோனது.

சிந்திக்கவும். வசனம் 22. அப்பண்டிகை எப்பொழுது? வச னம் 24. அதன் அர்த்தம் என்ன? கிறிஸ்துநாதர் அக்கேள்விக்கு ஏன் நேராய் பதில் சொல்லவில்லை? இவ்வதிகாரத்தில் புறஜாதியா

ரைப்பற்றி ஏதாவது பேசப்பட்டிருக்கிறதா? இவ்வதிகாரத்திலுள்ள ஞான உபதேசங்கள் எவ்விதமாய் விசுவாசிகளுக்கு நிச்சயம், தைரி யம், விசுவாசம் முதலியவைகளை உண்டாக்கும்?

(c) கிறிஸ்துநாதரே அற்புத ஜீவாகஷ்கர் (அதி. 11, 12).

1–16. லாசரு வியாதியும் மரணமும், கிறிஸ்துநாதர் சகாயம் செய்ய ஆயத்தப்பட்டதும்.

17–28. கிறிஸ்துநாதரும் மார்த்தாளும் (செய்த உபதேச ஆறு தல்).

29–37. கிறிஸ்துநாதரும் மரியாளும் (செய்த உபதேச ஆறு தல்).

38–44. கிறிஸ்துநாதரும் லாசருவும் (அருளின தெய்வவல் லமை).

45–57. அவ்வற்புதத்தினால் ஜனங்களுக்குண்டான பலன் (45–53 விசுவாசமும் விரோதமும்; 54–57 கிறிஸ்துநாதர் அவர்களை விட்டுப் பிரிந்துபோதல்).

சிந்திக்கவும். கிறிஸ்துநாதர் செய்த எல்லா அற்புதங்களிலும் இது பெரியதும் கடைசியுமாய் இருக்கிறது.

கடவுள் எவ்வித விசேஷித்த நோக்கத்துடன் இச்சமயத்தில் இவ் விடத்தில் இவ்வித அற்புதத்தைச் செய்தார் என்பதற்கு காரணங்க ளுண்டா? யூதர்கள் இவ்வற்புதத்தைக் கண்டு அதிக பகை கொண்ட தற்குக் காரணமுண்டா? கிறிஸ்துநாதர் அவர்கள் மூவரிடத்தும் அவ்வளவு சிநேகம் வைத்திருந்தும் என் அவர்கள் விசுவாசத்தைப் பரீக்ஷிக்கவேண்டும்?

அதி. 12. கிறிஸ்துநாதர் உலகத்துக்குச் செய்துவந்த உபதே சத்தின் முடிவும் பலனும்.

1–8. கடைசி அபிஷேகம்.

9–11. லாசருவைக் கொல்ல ஆசாரியர்கள் செய்த ஆலோசனை.

12–19. எருசலேம் நகரத்தில் கடைசிப் பிரவேசம் (வியாழக் கிழமை காலையில்).

20–50. ஆலயத்தில் செய்த கடைசி உபதேசம். (தம்மைத் தேடின இதர மதஸ்தர்களுக்கு, 20–28; தம்மைத் தள்ளின யூதர் களுக்கு, 29–36; கிறிஸ்துநாதர் இதுவரையில் செய்துவந்த வேலை யைப்பற்றி யோவான் தெரிவிக்கிற அபிப்பிராயங்கள், 37–43; கிறிஸ்துநாதர் கடைசியாய்க் கண்டிப்பாய் தெரிவித்த எச்சரிப்பு 44–50.)

சிந்திக்கவும். இந்தக் கடைசி உபதேசத்தின் பொருளை ஆழ்ந்து யோசிக்கவும். அதன் விசேஷங்கள் எவை? கிறிஸ்துநாதர் அச்சமயத்தில் அவ்விதமாய்ப் பேசினது ஏன்? அவர் பொங்கின மனதையும், காட்டின உற்சாக வைராக்கியத்தையும், அதற்குப் பிதா அருளின அருளையும் சிந்திக்கவும். 16, 23, 27 இவ்வசனங்களின் கருத்தென்ன? இதர மதஸ்தர்கள் அத்தருணத்தில் வந்து கேட்ட கேள்விகள் எதற்கு அடையாளம்? 37 முதல் 43 வரை உள்ளவைகளின் கருத்தென்ன? (ஏசாயா 6 அதி., அப். 28: 23–28 ஒப்பிட்டுப் பார்க்கவும்.)

5 அதி. முதல் 12 அதி. வரையில் சொல்லியிருக்கிறபடி விசுவாசமும் அவிசுவாசமும் படிப்படியாய் வளர்ந்து வந்த விதம் இன்னதென்பதை ஆராய்ந்து அறியவும்.

C. கிறிஸ்துநாதர் தம்மை சீஷர்களுக்கு வெளிப்படுத்தினது (அதி. 13–17)

முன்பாகத்துக்கும் இப்பாகத்துக்கும் உள்ள வித்தியாசங்கள்: 1. காலம். 2½ வருஷம். இதுவோ ஒரு ஞாயிரவில் நடந்தது (வியாழக்கிழமை). 2. ஸ்தலம். யூதேயா கலிலேயா நாடுகள் எங்கும். இதுவோ எருசலேம்பட்டணத்திலுள்ள ஒரு தனி வீடு. 3. ஜனம். எல்லோருக்கும் பொது. இதுவோ சீஷர்களுக்கு மாத்திரம். 4. பொருள். பிரசங்கம், உபதேசம், அற்புதம் முதலியன. இதுவோ பக்குவமடைந்த சீஷர்களுக்கு மாத்திரம் செய்த தனி உபதேசம். ஆரம்பம் இராப்போஜனம் (13); முடிவு ஜெபம் (17); மத்தியில் உபதேசம் (14–16). இப்பாகத்தில் சொல்லப்பட்டவைகள் மற்ற சுவிசேஷங்களில் கிடையாது. இவ்வுபதேசங்கள் யோவானுக்கு வெகு அருமையாயும் அவசியமாயும் தோற்றப்பட்டதால்தான் தன் சுவிசேஷத்தை எழுதின காலத்தில் 50 வருஷ காலமாய் அவர் மனதில் தங்கி, மூளைத்தத் தழைத்துச் செழித்து நல்ல பலன் கொடுத்த இந்த திவ்ய ஞானங்களை நிறைந்த தன் உள்ளத்திலிருந்து எடுத்து சபையாருக்குக் கொடுக்கிறார்.

கிறிஸ்துநாதர் சீஷர்களுக்கு இந்த உபதேசங்களைச் செய்த காரணம் என்னவென்றால், (1) வரப்போகிற தன் மரணத்திற்கு சீஷர்களை ஆயத்தம்பண்ணவும், (2) தமக்கு பதிலாக வரப்போகிற தேற்றரவாளனை எதிர்பார்க்கவும், (3) ஜெபத்தின் சிலாக்கியத்தைக் கற்பிக்கவும், (4) அவர்களை விட்டுப் பிரியுங்காலத்தில் அவர்களுக்கு வேண்டிய ஆறுதலும் தைரியமும் உண்டாகவும் சிநேகம் காட்டவும் தான். (13: 1 பார்க்கவும்.)

அதி. 13. மனத்தாழ்மை.

1–11. மனத்தாழ்மையின் அடையாளம்.

12–20. அதன் உபதேசம்.

21–30. துரோகியாகிய யூதாஸ் நீங்குதல்.

31–35. கிறிஸ்துநாதர் ஒருமனப்பட்ட சிநேகிதர்களின் கூட்டத்தில் தான் கொண்ட மனோரம்மியமும் அதைப்பற்றி கொடுத்த கட்டளையும்.

36–38. மனத்தாழ்மையில் குறைவுள்ள பேதுருவை எச்சரித்தல்.

சிந்திக்கவும். மனத்தாழ்மையை இவ்வண்ணமாய் திருஷ்டாந்தப்படுத்தக் காரணம் என்ன? (மற்ற சுவிசேஷங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும்.)

இந்த அதிகாரத்தில் ஞானஸ்நானத்தைப்பற்றி எதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

யூதாசினிடத்தில் அவிசுவாசமும் துரோகத்தன்மையும் உண்டாகி வளர்ந்த தெப்படி?

யூதாஸ் இராப்போஜனத்தைப் பெற்றாரா?

இந்த அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி கிறிஸ்துநாதரின் மனோநிலை என்ன?

அதி. 14. வாக்குத்தத்தங்களும் ஆறுதல்களும்.

1–11. மறுமையில் தம்மோடு மோக்ஷவாழ்வைப் பெறுதல்.

12–15. இம்மையில் தம் நிமித்தம் ஜெபம் கேட்கப்படுதல்.

16–24. வருங்காலத்தில் திரியேக தேவன் சீஷர்களிடத்தில் வாசம்பண்ணுதல்.

(16–17 பரிசுத்த ஆவி; 18–21 கிறிஸ்துநாதர்; 22–24 பிதாவானவர்.)

25–31. இவைகளால் உண்டாகும் ஆறுதல்கள்.

(25–26 ஆவியின் சகாயம்; 27–31 சுமாரனுடைய சமாதானம்.)

சிந்திக்கவும். அதி. 13–14 பேதுரு, தோமா, பிலிப்பு, யூதாஸ், இவர்கள் கேட்ட கேள்விகளால் அவர்களுடைய விசுவாசத்தின்நிலைமையைப்பற்றி நாம் தெரிந்துகொள்வதென்ன?

கிறிஸ்துநாதர் என் இச்சமயத்தில் ஜெபத்தைப்பற்றி விசேஷமாய்ப் பேசுகிறார்?

கிறிஸ்துநாதர் இதில் உபதேசிக்கிறபடி திரியேக தேவன் மனுஷர்களிடத்தில் வாசம்பண்ணுதற்கும் இவ்விஷயமாய் இந்துக்களின் கொள்கைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

இவ்வதிகாரத்தில் அனுபவழியாய் பக்தி ஜீவியம், தைரியம், பலம் முதலிய விளைவிக்கத்தக்க விசேஷங்கள் எவை?

அதி. 15: 1–16: 4. சீஷர்களின் நிலைமை.

1–11. கிறிஸ்துநாதருடன் ஜீவசம்பந்தம்.

12–17. தங்களுக்குள்ளிருக்கவேண்டிய சிநேக சம்பந்தம்.

15: 18–16: 4. உலகத்தாரின் பிரியினையும் பகையும்.

சிந்திக்கவும். இக்கனிகள் எதால், எதற்கென்று, எத்தன்மையா யிருக்கவேண்டியது? அவரில் நிலைத்திருத்தலாவது என்ன? அது ஆத்துமத்தின் ஓர் நிலையா அல்லது கிரியையா?

9–ம் வசனத்தின் கருத்தென்ன?

இச்சிநேகத்தின் தன்மை, கிரியை, அவசியம் இவைகள் என்ன? இத்திராக்ஷச்செடி எந்தத் தோட்டத்தில் உள்ளது? பகைக் குக் காரணம் என்ன? அதற்கு ஆறுதல் என்ன? உலகத் தாருக்கு நேர்ந்துள்ள உத்தரவாதம் எதனால்?

அதி. 16: 5–33. சீஷர்கள் அடையப்போகிற சிலாக்கியங் கள்.

5–15. ஆவியின் வருகையால் கிடைக்கப்போகும் சகாயம்.

(உலகத்தை உணர்த்துதல், 5–11; சீஷர்களுக்கு உபதேசித்தல், 12–15.)

16–24. தம் வருகையில் கிடைக்கப்போகும் சந்தோஷம்.

25–33. தேறுதல் சொல்லி விடை பெற்றுக்கொள்ளுதல்.

சிந்திக்கவும். தாம் செய்யக்கூடாத சிலவேலையை ஆவியானவர் செய்யப்போவ தெப்படி? அவருக்கும் சீஷர்களுக்கும் இனி இருக்கப்போகிற சம்பந்தத்துக்கும் இதுவரையிலிரு ந்த சம்பந்தத்துக்கும் என்ன வித்தியாசம்? வித்தியாசமிருந் தால் அவர்கள் நெருங்கிய பக்தியை பக்குவப்படுத்துகிற வழி எது?

அதி. 17. பிரதான ஆசாரிய ஜெபம்.

1–8. தமக்காக (செய்ததென்ன? கருதியதென்ன? கேட்கிற தென்ன?)

9–19. சீஷர்களுக்காக (நிலைமை என்ன? அபாயம் என்ன? அவர்களுக்கு அவசியமான தேவையென்ன?)

20–26. எல்லா விசுவாசிகளுக்குமாக (கேட்கிற தென்ன? கேட்கக் காரணம் என்ன? பெற்ற சிலாக்கியமும் உத்தரவாதமும் என்ன?)

சிந்திக்கவும். இவ்வதிகாரத்தில் கிறிஸ்துநாதர் ஜெபிக்கிறபடி அவருடைய சீஷர்கள் அடைந்த பக்திநிலைமை என்ன? அவர்கள் மூன்று வருஷமாய் அவரிடத்தில் கண்டு கற்றுக் கொண்டவைகளின் பலன் என்ன?

இவ்வதிகாரத்தில் காட்டியிருக்கிறபடி கிறிஸ்துநாதருக்கும் அவர் சீஷர்களுக்கும் இருக்கிற நெருங்கிய சம்பந்தத்தைக் காட்டு கிற விசேஷித்த வாக்கியங்களையும் பதங்களையும் ஆராய்ந்து அறியவும்.

(இன்னும் வரும்.)

Lectures on
The Presentation of Christ to the Hindus—II

By the Rev. J. S. Masillamony, B.D.*

ஹிந்துக்களுக்குக் கிறிஸ்துவை எவ்வாறு காட்டலாம் என்பதைப்பற்றிய உபந்நியாசங்கள்—II

II. இயேசுகிறிஸ்து தேவசற்குரு

முதல் உபந்நியாசத்தில் இயேசுகிறிஸ்து கடவுள் திருஅவதாரம் என்பதைப் பார்த்தோம் இந்த இரண்டாம் உபந்நியாசத்தில் இயேசு கிறிஸ்து தேவசற்குரு என்பதை அதே முறையாய் ஆராய்ச்சி செய் வோம். முந்தின உபந்நியாசத்தில்போல மூன்று பிரிவுகளாக எடுத்துக்கொள்ளுவோம்.

(i) குரு உபதேசம் என்ன?

(ii) குருபதேசத்தில் அடங்கிய விசேஷ சத்தியங்கள் என்ன?

(iii) இந்த சத்தியங்கள் இயேசுகிறிஸ்துவில் எவ்வாறு நிறை வேறுகின்றன?

(i) குரு உபதேசம்.

குருவைப்பற்றி ஹிந்துமதநூல்களிலே வெகு விஸ்தாரமாகக் கூறியிருக்கிறது. ஹிந்துமத மூலோபதேசங்களில் குருபதேசமும் ஒன்று என்னலாம். இவ்வுபதேசம் ஹிந்துமதத்தினுள் ஒரு பிரி வுக்கு மட்டுமே உரியதல்ல. சைவம், வைஷ்ணவம், ஸ்மார்த்தம்,

* The second of a series of lectures delivered at the Madura Mission Institute of Advanced Studies for Mission Agents.

முதலிய பல பிரிவுகளிலும் இந்த உபதேசம் விசேஷமாய் மதிக்கப் படுகின்றது.

வைதீக அறிவும் முக்திஞானமும் பெறுவதற்கு மனுஷனுக்குத் தேவகுரு இன்றியமையாத அவசியம் என்பது இந்த உபதேசத்தின் கருத்து. தெய்வத்தைப்பற்றிய மெய்யான அறிவையும் மீட்பை அடையத்தக்க ஞானத்தையும் மனிதன் தன் சுயமுயற்சியினாலே அடைந்துகொள்ள முடியாது. தெய்வகுருவை அடைந்து அவர் மூலமாக இவன் ரக்ஷிப்பின் ஞானத்தை அடைந்து முக்திபெற வேண்டும்.

(ii) குருபதேசத்தில் அடங்கிய விசேஷ கருத்துக்கள்.

ஹிந்துமதத்தில் விரிவாக வியாக்கியானம்செய்யப்பட்டிருக்கிற இந்த உபதேசத்தை நாம் ஆராய்ச்சி செய்துபார்க்கும்பொழுது மூன்று கருத்துக்கள் இதனுள் விசேஷமாய் அடங்கியிருக்கின்றன என்று காண்போம். அவையாவன :

1. அறிவைப் புகட்டுபவர் குரு.

இவரை வித்தியாகுரு என்று சொல்லலாம். இவரும் ஆங்கிரவரில் ஒருவர். உபாத்தியாயன் ஆசான் என்பதும் இக்கருத்துப்பற்றியதே. தானும் ஐயந்திரிபறக் கற்று, தான் கற்றதற்கேற்ற குணசீல நடக்கைகளையுடையவனும், தான் கற்றுணர்ந்தவற்றைப் பிறருக்கு அறிவுறுத்தக்கூடியவனே குரு. சிறந்த ஆசானுக்கு இம்மூன்று லக்ஷணங்களும் இருத்தல் வேண்டும். (1) தான் ஐயந்திரிபற, அதாவது சந்தேக விபரீதங்களில்லாமல், கற்றிருக்கவேண்டும். ஐயம் என்பது சந்தேகம். அதுவோ இதுவோ என்று ஒரு நிலைக்கு வராமல் சந்தேகித்தல். திரிபு என்பது விபரீதம். அது ஒன்றை இன்னொன்றாக நினைத்து மயங்குதல். கயிறு ஒன்றைக் கண்டு பாம்பு என்று பயப்படுதல்போல. இவ்விதச் சந்தேக விபரீதங்களுக்கு இலக்காகாத அறிவுடையவரே உத்தம ஆசான். (2) குரு தான் கற்றதற்கேற்ற ஒழுக்கம் உடையவராய் இருக்கவேண்டும். கல்விக்கும் நடக்கைக்கும் நேரான சம்பந்தம் இருக்கவேண்டும். கட்டில் கால்போல் பஞ்சபாண்டவர் மூவர் என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டுபவன் ஆசான் அல்ல. பிறருக்கு ஹிதோபதேசஞ்செய்து தான் துன்மார்க்கமாய் நடக்கும் ஆசான் 'படிக்கிறது பாகவதம் இடிக்கிறது பெருமாள் கோயில்' என்னும் பழமொழிக்குத் திருஷ்டாந்தமாவான். (3) சிறந்தகுரு தான் கற்றுணர்ந்தவற்றைப் பிறர்க்கு அறிவுறுத்தக்கூடியவனாய் இருத்தல்வேண்டும். இது இல்லாத ஆசான் பிறர்க்குப் பயன்படான்.

2. அஜ்ஞானத்தை நீக்குபவர் குரு.

குரு என்னும் பதத்துக்கு இருளைப் போக்குகிறவன் என்று பொருள். யார் யார் தன் உபதேசத்துக்கும் செல்வாக்குக்கும் உட்பட்டார்களோ அவர்களுடைய அந்தகாரம் அஜ்ஞானம் முதலியவற்றை நீக்குபவர் குரு.

3. ஒருவனுடைய பாவம் நீங்கி அவன் முக்திபடையத்தக்க ஞானோபதேசம் செய்யவல்லவர் குரு. இவரே ஞானகுரு அல்லது ஞானாசிரியர் என்னப்படுவார்.

முக்தியென்பது விடுதலை, அது பாவத்தினின்று விடுதலையடைவது. முக்தியென்பதும் ரக்ஷிப்பு என்பதும் ஒரே பொருள்படும். இம்முக்தியைத் தரக்கூடிய ஞானகுருவைப்பற்றிய உபதேசத்தின் தாற்பரியம் என்னவெனில், ஒரு ஆத்மாவானது முக்தியடையத்தக்க பரிபக்குவ நிலைமைக்கு வரும்பொழுது, அவ்வான்மாவைப் பாபபந்தத்தினின்று விடுவிக்கும்பொருட்டு கடவுள் குருவடிவமாய் அவனிடம் வந்து, அவனுக்கு ஞானோபதேசம்செய்து அவனுடையபாவத்தை நீக்கி அவனுக்கு முக்திகொடுக்கிறார் என்பது கடவுள்தாமே குருவாக வருவார், அல்லது முக்திபெற்ற ஒருவரை அதிஷ்டித்து நின்று (அதாவது நிலைக்களமாகக்கொண்டு நின்று) முக்தியுபதேசம் செய்வார். இவ்வாறே கடவுள் பூர்வகாலத்தில் பலருக்கு முக்தியளித்திருக்கிறார். தக்ஷிணாமூர்த்தியென்னும் ஞானகுருவாகத் தோன்றி சனகாதி முனிவருக்கு ஞானோபதேசம் செய்தார். குருந்தமரத்தடியில் மாணிக்கவாசகருக்கு ஞானாசிரியராய்த் தோன்றி முக்தியுபதேசம் செய்தருளினார். கடவுள்தாமே குருவடிவமாய்த் தோன்றுவதுமல்லாமல், முக்திபெற்ற ஒருவரை (அதாவது ஒரு ஜீவன்முக்தனை) தமக்கு நிலைக்களமாகக்கொண்டு நின்றும் அவனுக்கு ஞானோபதேசம் செய்தருளுவார். இவ்வாறே திருமூலநாயனார் மசபில் தோன்றிய மௌனகுருவை நிலைக்களமாகக்கொண்டு நின்று தாயுமானவருக்கு ஞானோபதேசஞ் செய்து முக்தியளித்தார்.

"பந்தமெல்லாம் தீரப் பரஞ்சோதி நீகுருவாய்
வந்தவடிவை மறவேன் பராபரமே."

தமக்கு ஞானோபதேசஞ் செய்தவர் மௌனகுரு என்னும் ஜீவன்முக்தன் என்று நினையாது அவர் கடவுளே என்றுகொண்டாடுகிறார். இப்படியாக ஒரு ஆத்மா முக்தியடைவதற்கு ஞானகுரு அவசியம் என்பதை ஹிந்துமார்க்கமாய் அதிகமாய் வற்புறுத்துகிறதை நாம் காண்கிறோம்.

(iii) குருபதேசத்தில் அடங்கிய இந்த மூன்று விசேஷ கருத்துக்களும் இயேசுகிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேறுகின்றன?

1. வித்தியாகுரு.

அறிவைப்புகட்டும் ஓர் ஆசானுகமட்டும் இயேசுகிறிஸ்துவை வைத்து நோக்குங்காலத்திலும், அவருக்கு நிகரான ஆசான் உலகத்திலில்லையெனச் சொல்லலாம். கடவுள், உலகம், மனுஷன், பாவம், முக்தி யென்னும் விஷயங்களை மனிதருக்குப் போதிக்கும் படி தோன்றிய உபாத்தியாயர்களை ஒருங்குவைத்து நோக்குங் காலத்தில் எம்பெருமானுக்கு இணையானவர் ஒருவரும் இல்லை யென நிச்சயமாய்ச் சொல்லலாம். இயேசுகிறிஸ்து நாதர் அருளிச்செய்த மலைப்பிரசங்கத்துக்கு நிகரான ஹிதோபதேசம் உலகில் எங்குமே கிடையாது. கடந்த இரண்டாயிரம் வருஷங்களில் மலைப் பிரசங்கத்தைக் காட்டிலும் மேலான ஹிதோபதேசத்தை மனுஷ ஜாதிக்கு ஒருவரும் உபதேசித்ததில்லை. உலகத்தில் தோன்றிய உபாத்தியாயர்களின் தொகை எண்ணிறந்தது. அவர்களுள் பல ருடைய பெயர் அதிக உச்சமாய் நிற்கிறது. சாக்ரட்டிஸ், அரிஸ்ட் டாட்டில், பிளேட்டோ முதலிய மேலைதேசத்தாரும் கன்பூசியஸ், சோராஸ்டர், மோசே, புத்தமுனிவர், மகாவீரர், சங்கரர், ராமானுஜர், மகமது நபி முதலிய கீழ்தேசத்தவரும் மனுஷ ஜாதியின் மதிப்புக்குரியவர். ஆயினும் இவருள் யாரைக் கிறிஸ்துவுக்குச் சமானமாய்ச் சொல்லக்கூடும்? உலகத்தில் தோன்றிய அதி சிறந்த மதோபதேசிகர்களில் கிறிஸ்துநாதருக்கு அதி உன்னத ஸ்தானம் கிடைக்கவேண்டும். வைதிக சாஸ்திரம், நீதிசாஸ்திரம், உபதேச முறை முதலியவைகளில் அவருடைய உபதேசம் மகா சிறப்புடையது.

ஆகவே உலகத்துள் தோன்றியிருக்கிற வித்தியா குருக்களில் இயேசுகிறிஸ்துவே அதி சிறந்தவர் என்று காண்கிறோம். மகாமகோன்னதமான வைதிக அறிவை அடையவேண்டுமானால் ஒப்புயர்வற்ற ஹிதோபதேசஞ் செய்தருளிய இயேசுகிறிஸ்துவாகிய இந்த மகாமகோபாத்தியாயரையே அண்டிக்கொள்ளவேண்டும். ஆகவே ஹிந்துமார்க்க குருபதேசத்தில் அடங்கிய முதல் கருத்து இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுகிறதைக் காண்கிறோம்.

2. அஜ்ஞானத்தை, இருளை, மயக்கத்தை நீக்குபவர்.

குரு என்னும் பதத்துக்கே இதுதான் அருத்தம் என்று பார்த்தோம். இயேசுகிறிஸ்து தம்மைக் குறித்துப் பேசியபொழுது

'நானே மெய்யான ஒளி' என்று கூறினார். இந்த ஒளி சகலவித அந்தகாரத்தையும் மயக்கத்தையும் தூரத்துகிறது. கிறிஸ்து எங்கெங்கே சென்றாரோ அங்கங்கேயெல்லாம் வெளிச்சம் உதித்திருக்கிறது. 'ஜாதிகளைப் பிரகாசிப்பிக்கிற ஒளி' இவரே. ஸர் எட்வின் ஆர்னல்ட் (Sir Edwin Arnold) என்னும் ஆங்கிலக் கவிராயர் ஒருவர் ஆசியாவின் தீபம் (The Light of Asia) என்று ஒரு காவியம் எழுதினார். இது பௌத்தமத ஸ்தாபகராகிய புத்த முனிவருடைய சரித்திரத்தைக் கூறும் நூல். புத்தருடைய சரித்திரத்தையும் உபதேசத்தையும் படிப்போர் மனதில் அழுந்தத்தக்க அழகிய நடையில் எழுதப்பெற்றது. கவிராயர் கருதிய அளவுக்கு அதிகமாக உலகத்தார் இந்நூலைக் கொண்டாடிய பொழுது சிறந்த கிறிஸ்தவராகிய இந்த சர் எட்வின் ஆர்னல்டு ஆசிரியர் லோகதீபம் என்று இன்னொரு காவியத்தை இயற்றினார். இதில் இயேசுகிறிஸ்துவினுடைய திவ்ய சரித்திரமும் உபதேசமும் விபரிக்கப்படுகின்றது. இயேசுகிறிஸ்து ஆசியாக்கண்டத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதுக்குமே ஒளி என்பது இந்நூலின் கருத்து. இயேசுகிறிஸ்து ஜாதிகளைப் பிரகாசிப்பிக்கிறார். சுமார் 100 வருஷங்களுக்கு முன்னே நாமாமிச பக்ஷணிகளாயிருந்த தென் சமுத்திரத் தீவார் மெய்யான ஒளியாகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபிறகு கல்வி, அறிவு, ஒழுக்கம், நாகரீகம் முதலியவற்றுள் விருத்தியடைந்திருக்கிறார்கள். நமது சொந்த தேசத்திலுங்கூட தீண்டா ஜாதியார் என்றிகழப்பட்ட ஜாதியாரில் இயேசுகிறிஸ்துவை அண்டிக்கொண்ட எத்தனையோ பேர் வெளிச்சம் அடைந்திருக்கிறார்கள்.

ஜாதிகளுடைய அந்தகாரத்தை மட்டுமல்ல, தனித்தனி மனுஷருடைய ஹிருதயத்தின் அந்தகாரத்தை நீக்குபவரும் அவரே. எபே. 5 : 14. உலகத்தின் மெய்யான ஒளியாகிய இயேசுகிறிஸ்து என்னும் ஞானசூரியன் உதயமாகும்பொழுது அதன் கிரணங்களால் தீண்டப்பெற்ற எந்த இருதயக் கமலமும் மலர்ந்து பலன் தரும் என்பது நிச்சயமே.

ஆகவே குருபதேசத்தில் அடங்கிய இந்த இரண்டாவது கருத்து இயேசுகிறிஸ்துவுக்குள் நிறைவேறுகிறது.

3. முக்தியளிக்கும் ஞான குரு.

இயேசுகிறிஸ்து பாவத்தைப் பரிகரிக்கக்கூடியவர். அவருடைய உபதேசத்தை யார் ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அவர்கள் முக்தியடைகிறார்கள். முக்தி என்பது ரக்ஷிப்பு, மீட்பு. கடவுளே

இயேசு என்னும் ஞான குருவாக வெளிப்பட்டார். இவரே நித்ய குரு. இவர் குருமூர்த்தியாய் உலகத்தில் தோன்றுமுன் சப்தரூபமாய் அநாதிமுதல் இருந்தவர். இவருடைய ஞானோபதேசத்தை யார் ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அவர்கள் பாபத்தினின்று மீட்கப்பட்டு முக்தியடைகிறார்கள். உதாரணம் எண்ணிறந்தன. எத்தனையோ தத்வ சாஸ்திரிகள் தங்கள் ஞானத்தால் திருப்தியடையாது இயேசுகிறிஸ்துவின் ஞானோபதேசத்தால் திருப்தியடைந்து ரக்ஷிப்புப் பெற்றிருக்கிறார்கள்.

இவ்விதமாக, இயேசுகிறிஸ்து மெய்யான ஞானசிரியர் என்றும் அவருடைய ஞானோபதேசத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் மெய்யான ரக்ஷணியத்தை யடைகிறார்கள் என்றுங் காண்கிறோம்.

ஆகவே ஹிந்துமத குருபதேசத்தில் கூறிய மூன்று கருத்துக்களும் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுகின்றன என்பதைக் காண்கிறோம். இயேசுகிறிஸ்து அதி யுன்னதமான ஹிதோபதேசஞ் செய்தருளியிருக்கிற **வித்தியா குரு**. இயேசுகிறிஸ்து சர்வ ஜாதிகளுடைய இருளையும் தனித்தனி மனிதருடைய ஹிருதய அந்தகாரத்தையும் நீக்கி மெய்யான ஒளியைத் தருகிற **குருமூர்த்தி**. இயேசுகிறிஸ்து தமது ஞானோபதேசத்தையும் தம்மையும் ஏற்றுக்கொள்ளுகிறவர்களுடைய பாவத்தைப் பரிகரித்து, அவர்களுக்கு இரக்ஷணிய ஈடேற்றம் அருளுகிற **குருபான்**.

ஆகையால் இயேசுகிறிஸ்துவே தேவ சற்குரு, அவரே **குருபான்**.

Church Union

By the Rev. J. Lazarus, D.D.

திருச்சபை ஐக்கியம்

எம்பெருமான் இயேசுகிறிஸ்து அருளிச்செய்த திருச்சபையானது உலகத்திலே மூன்று பாகமாகப் பிரிந்திருக்கிறது. ரோமச் சபை ஒரு பாகம், கிரேக்குச் சபை மற்றொரு பாகம், சீர்திருந்திய அல்லது புரோட்டெஸ்தாந்துச் சபை மூன்றும் பாகம். ஒருத்துவ மார்க்கத்தாராகிய யூனிட்டேரியன் சபை அமெரிக்காவில் சிறிது விருத்தியடைந்ததாயினும், இயேசுவின் திவ்யத்துவத்தை மறுக்கிற காரணத்தால் திருச்சபையிலே அடங்கமாட்டாது. ரோமச் சபைக்கு அதிகாரி போப்பும் அவருடைய உதவிக்குருக்களுமே, அவர்களிருப்

பிடம் ரோமாபுரி. அவர்களுக்கு ஒரு பெரிய ராஜ்யமும் உண்டாயிருந்தது; ஆனால் இப்பொழுது ஒன்றுங் கிடையாது. கிரேக்குச் சபைக்கு அதிகாரி முக்கிய பிதா வென்றர்த்தமுள்ள பேற்றியார்க்கு—அவருக்கிருப்பிடம் அந்தியோகு—மூற்காலத்திலே கான்ஸ்டாந்தினோபில். சீர்திருந்திய சபையோ பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கிலேய சபையென்றும், லூத்தரன் சபையென்றும், பிரெஸ்பிட்டீரியன் சபையென்றும், காங்கிரிகேஷனல் சபையென்றும், மெத்தொடிஸ்ட் சபையென்றும், பாப்டிஸ்ட் சபையென்றும், இன்னும் சிற்சில அம்சங்கள் சேர்ந்து பற்பல பாகங்கள் அடங்கியிருக்கிறது. ஏனைய இரண்டு பெரும் பாகங்களிலும் இவ்விதவிகற்பங்கள் கிடையா. ஒவ்வொன்றுக்கும் ஒரே தலையுண்டு. பல தேசங்களிலுமுள்ள பாகங்கள் யாவும் தத்தம் தலைக் குருவுக்கு அடங்கினவை. அந்தந்தக் குருவின் ஆக்கினைக்குத்தவறி நடக்கவொண்ணாது.

புரோட்டெஸ்தாந்துச் சபைக்கு இவ்வித ஐக்கியமுமில்லை, ஒரே தலையுமில்லை. அபிப்பிராய விகாரத்தினாலும், ஆசார வித்தியாஸத்தினாலும் கணக்கற்ற வகையாகப் பிரிவுண்டு. பரஸ்பர சினேகமற்றவர்களாகவும், சிறிதும் ஐக்கியமில்லாதவர்களாகவும் உலகத்தில் விளங்கி வருகிறார்கள். ஆயினும் நூதன விஷயங்களுக்கெல்லாம் இருப்பிடமும் பிறப்பிடமுமாகிய அமெரிக்காவிலே உலகத்தின் அபிப்பிராய ஆராதனைகளின் (World's Faith and Order) ஒருமைப்பாட்டைப்பற்றி ஒரு பகிரதப் பிரயத்தனம் ஆரம்பித்து நடந்துவருகிறது. இது எவ்வாறு சித்திபெற்று முடியுமோ வென்பது சகலரின் ஆவலும் வேண்டுகோளுமாயினும், அது கடவுளுக்குமாத்திரம் தெரிந்த விஷயம்.

தற்காலம் தென்னிந்தியாவில்மட்டும் பெரும்பாலும் ஒன்றுபோலான சில சபைகள் அங்கிய குருமார் தூண்டலினாலே ஒன்று சேர்ந்து ஒருவாறு ஐக்கிய சபையாக நாமந்தரித்து நடந்துவருகிறார்கள். இதிலே சேர்ந்தவர்கள் லண்டன் மிஷன், ஸ்காட் மிஷன், அமெரிக்கன் ஆர்க்காடு மதுரை மிஷன்கள் மாத்திரம். இந்தச் சபைகளுக்கு ஆதிதொடங்கி ஐக்கிய சம்பந்தம் உண்டாயிருக்கிறது. ஐக்கிய ராப்போஜனமும் பரஸ்பரப்பிரசங்கமும் சகஜமாய் நடந்துவந்தன. ஆயினும் ஒருவாறு அந்தரங்கமாயிருந்த இவ்வைக்கியத்தைப் பஹிரங்கமாக்கி, சிறிய பெரிய சங்கங்களும், பொதுவான விசுவாசப்பிரமாணமும், ஆராதனை ஒழுங்கும் பெரும்பாலும் நடத்திவருகிறார்கள். இதற்குத் தென்னிந்திய ஐக்கிய சபை என்று பெயரிட்டிருக்கிறது. இந்த ஐக்கிய சபையிலோ, கவர்ன்மெண்டாதீனத்திலும் அந்தஸ்திலும் இருக்கிற அங்கிலேய சபையும், திரள்கூட்ட

மான பாப்டிஸ்துச் சபைகளும், வைராக்கியம் பொருந்திய லூத்தரன் சபைகளும், வெஸ்லியன் சபையாரும், மெத்தொடிஸ்ட் சபையாரும், ஏனைய சிலரும் சேரவேயில்லை. சேரத்தக்க சகுனங்களும் காணேம். ஆகிலும், அங்கிலேய சபையோடு மாத்திரம், இனமான சில குலங்கள் கொள்வினை கொடுவினைச் சம்பந்தம் செய்துகொள்வதுபோல, ஒருவர் ஆலயத்தில் ஒருவர் பிரசங்கம் பண்ணவும், ராப் போஜனம் பரிமாறவும் தக்க ஒருவித ஐக்கியத்தை ஸ்தாபிக்கும்படியான ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள்.

இது சிறந்ததெனச் சொல்லவேண்டும். அங்கிலேயச் சபைக்கு இதுவிஷயத்தில் சில தடைகளுண்டு. பரம்பரையான பிஷப்பினாலே அபிஷேகம்பெற்ற குருக்கள்மாத்திரம் அங்கிலேய சபையிலும், மற்றச் சபைகளிலும் மேற்படி. அரும்பெருஞ் சடங்குகளை நடத்தக்கூடும். தென் இந்திய ஐக்கியசபைக் குருமாருக்கு இவ்விதப் பட்டாபிஷேகமில்லாமையால் அவர்கள் அங்கிலேய சபையிலே அதுகளை நடத்தக்கூடாதே. இது அங்கிலேய சபையின் ஐதிகம். இம்முக்கிய குறையை நிவர்த்திக்கும்படியாக ஒருபாயம் ஊகிக்கப்படுகிறது. அது யாதெனில், அங்கிலேய பிஷப்புகள் மூவரும், ஐக்கியசபைக் குருக்கள் (பிஷப்புகள் அல்ல) மூவரும் சேர்ந்து ஒரு பட்டாபிஷேக சடங்கு வைத்து தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று ஐக்கிய குருமாரூக்கு, தலைமேல் கைவைத்து ஜெபம்பண்ணி, பிஷப்புப் பட்டம் கொடுக்கவேண்டியதாம். இப்படி அபிஷேகம் பெற்ற புதுப் பிஷப்புகள், இந்த அபிஷேகம் செய்யும் குருக்கள், அங்கிலேயக் குருக்களைப்போலவே அங்கிலேய ஆலயங்களிலும் மற்ற ஆலயங்களிலும் சகல ஆராதனைகளையும் பிழை குறையின்றி நடத்தலாம் என்று ஒருவாறு தீர்க்கப்பட்டிருக்கிறது.

இதனால் பெறப்படுகிற விஷயங்களாவன: ஐக்கிய சபைக் குருமாரின் அபிஷேகம் குறைபாடுள்ளது. அங்கிலேய கரம் வைத்தவுடன் அதன் குறை நிவர்த்தியாகிறது. இது இந்திய குருமாருக்குப் பெருமை தருவதாயினும், அவர்கள் பெற்றிருக்கிற பட்டத்துக்குப் பங்கமாகிறது. அன்றி, யாது அதிகாரத்தினாலே அங்கிலேய பிஷப்புகள் அந்நியர் சிரசின்பேரில் தங்கள் கைகளை வைப்பது? இது ஆர்ச்சு பிஷப்பின் அநுமதியினாலோ, அல்லது பார்லிமெந்து சட்டத்தினாலோ? அல்லது இங்கிலாந்துக்குப் புறம்பான இந்திய சபைகளிலே இவ்வித தாறுமாறுகள் தாராளமாய் நடக்கலாமென்றோ? அங்கிலேய அபிஷேகம்பெற்ற குருமாத்திரம் பிஷப்பு அபிஷேகம் பெறலாமே தவிர ஏனைய குருக்கள் அவ்வித அபிஷேகம் பெறலாமென்பதற்கு ஆதாரம் உண்டான தெவ்வாறு? மேலும், மேற்படி அபிஷேகச் சடங்கிலே ஐக்கிய குருமார் மூவரின் கரங்கள் வைப்பானேன்? அக்கரங்கள் அவசியமே யில்லை. அதுகளுக்கு யாதொரு புண்யமும் கிடையாதல்லவா? அச்சடங்கிலே இன்றியமையாதது பிஷப்புகளின் கரங்கள் மாத்திரமே.

அன்றியும், அங்கிலேய பிஷப்புக் கைவைக்கப்பெறுத ஏனைய குருக்களும் அங்கிலேய சபைகளிலே ஆராதனை செய்யவும், அங்கிலேய குருக்கள் மற்றச் சபை ஆலயங்களிலே ஆராதனை நடத்தவும், வேறே விதமான கம்மிஷன் அல்லது அதிகாரம் அல்லது எழுத்து வடிவான அபிஷேகம் நடக்குமாம். இது நகைப்புக் கிடமாகத் தோற்றுகிறது. விரைவிலே குழப்பத்துக்கும் கலகத்துக்கும் இடமுண்டாகிவிடும். அதிகாரமற்றதும் அதிருப்தியானதுமான இந்த பிஷப்பபிஷேகம் சகலராலும் ஒப்புக்கொள்ளப்படாது. முதலாவது, ஐக்கிய சபையைச் சேர்ந்த ஐரோப்பிய அமெரிக்க குருக்கள் இவ்வித பிஷப் பட்டத்தைப் பெற்றுக்கொள்வார்களா? அது அவர்களுக்கு சகிக்கமாட்டாத மானபங்கமாயிருக்குமே! மேற்கே இவ்வாறு எப்போதாயினும் நடந்ததுண்டா? ஸ்காட்டிச்சபைக் குருக்களும், காங்கிரிகேஷனல் சபைக் குருக்களும் மேற்கிலே இவ்வித நகைப்புக்குரிய அபிஷேகத்துக்குட்படுவார்களா? பரிச்சேதமில்லை. நமது ஏழை நாட்டில்மட்டும் இவ்விதமான குழப்பங்கள் நடக்கலாமோ? இது தானே கனியாதகதைத் தடிகொண்டடித்துக் கனியச் செய்வது போலும். ஐக்கியத்தை இவ்வாறு விலைகொடுத்துக் கொள்ளலாமா? கண்காணிகள் என்கிற பகட்டினாலும், அங்கிலேய குருக்களின் நன்குமதிப்பினாலும் சிலர் புத்தித் தடுமாறி இவ்வீண் சடங்குக்கு இடங்கொடுத்தாலும், உள்ளத்தில் ஞாணங்கொள்வா ரென்பதற்கு ஐயமில்லை.

பிஷப்புப் பட்டம் காலகதியில் பிற்பாடுண்டானது. ஆண்டவர் ஆரம்பத்தில் அப்போஸ்தலரைக் குருக்களாக அபிஷேகஞ் செய்தார். அவர்கள் தங்கள் கைகளால் தக்க சிலரை அபிஷேகஞ் செய்தார்கள். அந்தியோக்கிலிருந்த சபைக் கர்த்தாக்கள் பவுலையும் பர்னபாவையும் அபிஷேகம்பண்ணினார்கள். பிஷப்பபிஷேகமல்ல, குரு அபிஷேகமே அதி முக்கியமானது. இது திருச்சபையிலே ஆதிதொடங்கி நடந்தேறி வருகிறது. நியாயமாக, சபையாரே தாம் தெரிந்துகொள்ளும் ஒருவரை அபிஷேகம் பண்ணிக்கொள்ளலாம். ஆயினும், பல குருக்கள் சேர்ந்து ஒரு புதுக் குருவை அபிஷேகம் பண்ணலாம். பிஷப்பு அபிஷேகம் பண்ணும்பொழுதும் குருக்கள்மார் அதிற் சேர்ந்து, தலைமேல் கைவைக்கிறார்களே. ஒரு பட்டணத்திலே பல சபைகளின் குருக்கள்மார்—ஒழுங்குக்காகவும் ஆசார ஒருமைக்காக

வும் வேண்டி—ஒரு சங்கமாகக் கூடி தங்களில் ஒருவரைத் தலை... கத் தெரிந்துகொண்டார்கள். பிஷப்புண்டான முறை இதுவென்று திருச்சபை கூறித் தீர்த்ததால் விசதமாகிறது. சபையின் குருவே கண்காணி—சபையின் மூப்பர்களே டீக்கன்மார்.

இந்திய சபைகளிலே பரஸ்பர ஆராதனை நடக்கவேண்டுமாஞல் அந்தந்தச் சபைகளின் பிஷப்பாவது, சேர்மென்னுவது, வேறொரு தலையாவது அதற்குத்தக்க அநுமதி அருளிச்செய்யலாம். இங்கிலாந் திலே காலாகாலங்களில் பிஷப்பு உத்தரவினுலே தம்மைச் சேர்ந்த ஒரு குரு அந்திய ஒரு சபைபிலே பிரசங்கம்பண்ணவும், இவர் அங்கே பிரசங்கம்பண்ணவும் நடந்துவருகிறதைக் கேட்டு மகிழ்கின் றேம். இந்திய சபைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து சுய ஆட்சி அடையும்பொழுது, மேற்றிசையிலிருந்து வந்திருக்கிற சகலவிதமான கோட்பாடுகளும் அனுவசியமான ஆசாரமுறைகளும் நீங்கலாகி, பரஸ்பர சிநேகமும், பரஸ்பரப் பிரசங்கமும், பரஸ்பர ஆராதனையும் யாதொரு தடையின்றிச் சமாதானமாய் நடந்துவரும். கடவுள் இதற் கருள்புரிவாராக.

C. L. S. PRESS, MADRAS.—1919

No. 162 நவம்பர் 1919

வேதியர் விளக்கு

An Outline Study of St. John's Gospel

By the Rev. J. Andersen



யோவான் எழுதிய சுவிசேஷப் பொருட் குறிப்பு விபரம்

(தொடர்ச்சி)

D. கிறிஸ்துநாதர் பட்ட பாடுகளினின்றும் மரணத்தினின்றும் உயிர்த்தெழுந்து ஜெயங்கொண்டு உலகத்துக்கும் தம் சீஷர்களுக்கும் தம்மை வெளிப் படுத்தினது (அதி. 18–21)

இவ்விஷயங்களில் முந்தின சுவிசேஷங்களுக்கும் இதற்குமுள்ள பேதாபேதங்களையும் அவைகளில் விடப்பட்டு இதில் குறிப்பிடப் பட்டவைகளையும் ஆராய்ந்து அறியவும்.

(i) அதி. 18–19. கிறிஸ்துநாதர் பட்ட பாடுகளின் சரித்திரம் (வெள்ளிக்கிழமை)

18: 1–11. பிடித்தல்.

18: 12–19: 16. விசாரித்துக் குற்றவாளியாக்குதல் (18: 12–27 யூதசங்கத்தாரால்; 18: 28–19: 16 பொந்தியு பிலாத்துவினுல்).

19: 17–42. சிலுவையில் அறைதல் (17–24 அறைதல்; 25–27 வார்த்தைகள்; 28–30 மரணம்; 31–42 அடக்கஞ் செய்தல்).

சிந்திக்கவும். பிலாத்து தன் வாக்கு, செய்கை, தீர்ப்பு இவை களில் தான் நடந்துகொண்டதிலிருந்து அவன் குணநடவடிக் கையை ஆராய்ந்துகொள்ளவும். கிறிஸ்துநாதர் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு மனிதர்களிடத்தில் தாம் காட்டிக் கொண்ட திவ்ய லக்ஷணங்களை ஆராய்ந்தறியவும். பேதுரு மறுதலித்த விஷயமாய் நாலு சுவிசேஷங்களிலும் உள்ள வைகளைக்கொண்டு காரணம், காலம், இடம், சொந்த பலவீனம் இவைகளைக் கண்டுபிடிக்கவும்.

(ii) அதி. 20–21. கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுதலின் சரித்திராம் (ஞாயிற்றுக்கிழமை)

20 : 1–10. பேதுருவும் யோவானும் கல்லறைக்குப்போய்ப் பார்த்தல்.

11–18. கிறிஸ்துநாதர் மரியாளுக்குத் தம்மை வெளிப்படுத்தல் (காலேயில்).

19–25. சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தல் (மாலேயில்).

26–29. தோமாஸ் என்பவனுக்குத் தம்மை வெளிப்படுத்தல்.

30–31. சுவிசேஷத்தின் நோக்கம்.

21 : 1–8. கிறிஸ்துநாதர் தம்மை வெளிப்படுத்தி அற்புதமாய் மீன் பிடிக்கும்படி செய்தல்.

9–14. போஜனம் பண்ணுதல்.

15–22. கிறிஸ்துநாதர் பேதுருவை மறுபடியும் சுவிசேஷத் தொழிலில் அமர்த்தல்.

23–25. முடிவுரை.

அதி. 20 : 20–23 வரையில் உள்ள கட்டளையையும் வாக்குத் தத்தத்தையும் சிந்திக்கவும்.

சிந்திக்கவும். 1–ம் அதிகாரம் 40–ம் வசனத்தையும், 20–ம் அதிகாரம் 28–ம் வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சீஷர்களுடைய சுமார் இரண்டு வருஷ விசுவாச வளர்ச்சியைப் பற்றி நமக்கு என்னதெரியும்?

இந்த சுவிசேஷத்தில் தோமாவைப்பற்றிச் சொல்லியிருக்கிறதென்ன? 21–ம் அதிகாரத்தில் கிறிஸ்துநாதர் பேதுருவோடு பேசினதில் அன்பைப்பற்றி வற்புறுத்திப் பேசினகாரணமென்ன?

கிறிஸ்துநாதர் பேதுருவை மறுபடியும் சுவிசேஷத்தொழிலில் அமர்த்த தாம் செய்துகாட்டிய கடைசி யற்புத விசேஷத்தின் ஆறுதல் என்ன?

III. காலநிருபணக்கிரமம்

முதல் வருஷம்

(1) அதி. 1 : 19–3 : 21. மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் நடந்திருக்கவேண்டும். (2, 13; 1, 19, 29, 35, 43; 2, 23; 3, 1.)

1 : 19, 51 யூதேயாவில்; 2 : 1–12 கலிலேயாவில்; 2 : 13; 3 : 21 எருசலேமில்.

(2) அதி. 3 : 22–4 : 42. மேமாதம் முதல் டிசம்பர் மாதத்திற்குள் சம்பவித்திருக்கவேண்டும்.

4 : 35–ம் வசனம் டிசம்பர் மாதத்தில் சொல்லப்பட்டிருக்கவேண்டும்.

(அறுப்புக்காலம் ஏப்ரல் மாதம்.)

ஆகையால் கிறிஸ்துநாதர் யூதேயாநாட்டில் (அதி. 3 : 22; 4 : 3) ஏழு எட்டு மாதகாலம் வேலைசெய்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

இரண்டாம் வருஷம்

(1) அதி. 4 : 43–54. வருஷத்தின் முதல் இரண்டு மூன்று மாதங்களில் கலிலேயா நாட்டில் இருந்ததுபோல் தோன்றுகிறது.

(அதி. 4 : 43–ல் சொல்லப்பட்ட பிரயாணம், மத். 4 : 12, மாற். 1 : 14, லூக். 4 : 14 இவைகளுக்கு ஒப்பாயிருக்கிறது. ஆகையால் அதி. 4 : 43 வரைக்கும் மற்ற சுவிசேஷகர்கள் எழுதாத தன் முந்திய 9 மாத கால வேலையை குறிப்பிடுகிறார்கள்.)

(2) அதி. 5–ல் சொல்லப்பட்டிருக்கிறது பூரிம் பண்டிகை, எருசலேமில் மார்ச்சுமாதம் நடந்திருக்கும். (எஸ்தர் 9 : 20–32.)

(3) அதி. 6. கலிலேயாவில் ஏப்ரல் மாதம். (6 : 4, 59.)

(4) அதி. 7–10 : 21. எருசலேமில் அக்டோபர் மாதத்தில் நடந்த கூடாரப்பண்டிகை சமயத்தில் நடந்திருக்கவேண்டும் (7 : 2, 10, 37; 8 : 59; 9 : 1). ஆனதால், அதி. 1–ல் சொல்லியிருக்கிறபடி, அதி. 6–க்கும் இதற்கும் நடுவில் கலிலேயாவில் 6 மாதம் சென்றிருக்கவேண்டும்.

(5) அதி. 10 : 22–39. எருசலேமில் டிசம்பர் மாதத்தில் பிரதிஷ்டைபண்டிகை காலத்தில் நடந்தது.

மூன்றும் வருஷம்

(1) 10 : 40–11 : 57. வருஷத்தின் முதல் இரண்டு மூன்று மாதங்களில் யூதேயாவில் நடந்தவைகள். (10 : 40; 11 : 1, 54, 55.)

(2) அதி. 12–21. எருசலேமில் ஏப்ரல் மாதத்தில் நடந்த பஸ்காப்பண்டிகை காலம். (12 : 1; 13 : 1; 18 : 28; 19 : 31; 20 : 1, 19, 26.)

இவைகளிலிருந்து கிறிஸ்துநாதர் எவ்வளவு காலம் ஊழியம் செய்திருக்கக்கூடும் என்பதை சிந்திக்கவும்.

Some Defects in 'The Difference between Man's Soul and Animal's Soul' (By F. P. Ratnam)

By C. V. G. Paul

'மனித ஆத்துமத்துக்கும் மிருக ஆத்துமத்துக்கும் உள்ள வித்தியாசம்' என்பதில் சில குறைபாடுகள்

நிகழும் வருஷம் ஆகஸ்ட்டுமீ வெளியான வேதியர் விளக்கு என்னும் பத்திரிகையை உற்று வாசிக்குமிடத்து 125-ம் பக்கத்தில் 'மனுஷனுடைய ஆத்துமத்துக்கும் மிருகத்தினுடைய ஆத்துமத்துக்குமுள்ள வித்தியாசம்' என்னும் வியாசத்தில் அடியிற்கண்ட சில குறைபாடுகள் இருக்கின்றன :—

I. 2-வது பாராவில் 'புத்தி' என்னும் தலைப்பின்கீழ் விவரிக்கப்பட்டுள்ளது, மனித ஆத்துமத்துக்கேயன்று பிராணிகளுக்கும் உள்ளது.

(உ–ம்) நரியினம் தான் நினைத்த காரியத்தைச் சாதித்தற் பொருட்டு மனிதனுடைய புத்திக்கெட்டாத சாதனங்களைச் செய்கிறதென்பதை நாம் பார்த்துமிருக்கிறோம் கேட்டுமிருக்கிறோம். இக் காரணம்பற்றியே தந்திரசாலியான ஓர் மனிதனை நரிக்கு ஒப்பிடுவது.

சில காலத்துக்குமுன் ஷோலாப்பூரில் நடந்த பரிச்சேதத்தில் குறங்கு சாக்ஷியம் கூறியதை நாம் பார்த்தோம். இன்னும் அமெரிக்காவில் குறங்கினங்களால் கனிவர்க்கம் நிறைந்த தோட்டங்கள் புத்தி சாலித்தனமாய்க் கொள்ளையடிக்கப்பட்ட உண்மைகளை, நாம் அநேக மாதாந்தப் பத்திரிகைகளில் வாசித்தோம்.

சாதாரண பிராணியாகிய ஒரு நாய் செய்யும் காரியங்கள் எவ்வளவோ! உலாந்துநாய் தனக்கு வந்த ஆபத்துக்களையும் தான் பட்ட காயங்களையும் ஒரு பொருட்டாக மதியாமல், தான் வாயைத் திறந்தால், வாயிலிருக்கும் சவான் கீழே விழுந்துவிடுமென்று, சாந்தமாகச் சென்று, தன் எஜமானனுக்குச் சவானைக் கொடுத்துவிட்டு மீண்டும் வந்து தன் விரோதியை பழிக்குப் பழி வாங்கினதை நாம் வாசித்திருக்கிறோம்.

நியூட்டன் துரை வளர்த்துவந்த நாயின் அரிய குணங்களை விவரிக்க முடியுமா! ல்லுவலின் (Llewelynne) துரை வளர்த்துவந்த பெத்ஜிலர்ட் (Beth Gelert) நாயின் கதை தெரிந்த விஷயம். ஸ்காட் (Scott) துரை வளர்த்துவந்த நாயின் புத்தி என்ன! இவைகளெல்லாம் பொய்யாமா? இவ்வாறெல்லாமிருக்க 'பிராணிகளுக்கு இன்ன காரியங்களுக்கு இவ்வாறு உதவிசெய்தால் காரியமாகும், இந்தப் பிரகாரம் செய்யாவிட்டால் காரியம் ஆகாது என்று அறியும் சக்தி இல்லை' என்பது எவ்வாறு ஏற்கும்?

II. 3-வது பாராவில் 'மனது' என்னும் தலைப்பின்கீழ் விவரித்துள்ளதில் 'இது நல்லது இது பொல்லாதது, இது புண்ணியம் இது பாவம்' என்றறிவது பகுத்தறிவு. இது மிருகாதி பிராணிகளுக்கு இல்லை. 'இது இனிப்பு இது கசப்பு' என்பது சுவையிற் சேர்ந்தது. இது விலங்குகளுக்கு உண்டென்பதை நன்னூலாசிரியர்:

'வானவர், மக்கள், நாகர், விலங்கு, புள்ளாதி
செவியறிவோடு ஐயறி உயிரே'

என்னும் சூத்திரத்தால் விளக்குகிறார். செவியறி தவிர மற்றை நான்கு அறிவுகளாவன : ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம்.

விசேஷித்த அறிவாகிய பகுத்தறிவு விலங்கினங்களுக்கு இல்லாதிருலே ஆத்துமா வேறாகுமா? அப்படியானால்

'விலங்கொடு மக்கள் அனைவர்
இலங்குநூற் கற்றூர் எனையர்' என்றும்
'மக்கள் தாமே ஆறறி உயிர்
மாக்கள் தாமே ஐயறி உயிர்' என்றும்

குறளாசிரியர் மனிதரில் சிலரை (அதாவது பகுத்தறிவற்றவர்களை) விலங்குகளுடன் சேர்க்கிறார். அப்போது இந்த மனித ஆத்துமாவிலேயே இரண்டு விதமா?

III. 5-வது பாராவில் 'ஒரு மிருகத்தை நாறு துண்டுகளாகத் துண்டித்தால் துண்டத்துக்குத் துண்டம் துடிப்பதினால் அதனு

டைய ஆத்துமா அதனுடே அழிகிறது' என்பது பிசகு. நூறு துண்டமும் எகாலத்தில் துடிப்பதினுல் அந்தப் பிராணிக்கு நூறு ஆத்துமாக்கள் இருக்கின்றனவா? அல்லது, ஒரு ஆத்துமாவே நூறு பாகங்களாகி ஒவ்வொரு துண்டுக்கும் இந்த ஆத்துமாவில் ஒவ்வொரு பாகம் போய் புகுந்து அவற்றைத் துடிக்கச் செய்கிறதா?

துண்டுகள் துடிப்பதற்குக் காரணம்:—

நரம்பு முடிச்சுகள் (Nervous Centres) மிருகங்களுடைய தேகத்தில் அதிகம், மனிதனுடைய தேகத்தில் கொஞ்சம். மிருகத்தின்மேல் உட்காரும் ஈ அல்லது வண்டு முதலியவற்றைத் தூரத்த அந்த பாகம் படபடவென்று துடிப்பதைப் பார்க்கலாம். மனிதனுடைய தேகத்தின்மேல் உட்காரும் ஈயை அவன் தன் கையினுல் தான் தூரத்தவேண்டும். மனிதனுடைய அவயவமும் துண்டுபட்டால் துடிப்பதைப் பார்க்கலாம். ஒரு மனிதன் நடந்துகொண்டே இருக்கும்போது அவனுடைய கழுத்தை ஓர் கூரிய வாள்கொண்டு வெட்டினுல் மனிதன் முன்போலவே கொஞ்சதூரம் நடப்பதைப் பார்க்கலாம். அதனுல் அவனுடைய ஆத்துமா கூட அழிந்துபோகிறது என்று கூறத் துணியலாமா?

IV. 6-வது பாராவில் 'செத்த மனிதனைக் கண்டால் பேய் பிசாசாதும்' என்னும் பயமானது அறிவுடையவர்களுக்கன்று. அப்படி கொண்டால் கூட ஒரு சென்மத்தில் இரண்டு சென்மங்கள் எப்படி இருக்கக்கூடும்? அதுவும் ஒன்று திடமான சென்மம் (மனிதன்), மற்றொன்று அருவம் (பிசாசு). சொரூபம் அரூபம் உடனுக்குடன் எப்படி உண்டாகும்?

'யாதாமொரு மிருகம் செத்துப்போனுல் அம்மிருகத்துக்காக தானதர்மம் பண்ணுகிறதில்லை, ஆனுல் ஒரு மனிதன் இறந்தால் தானதர்மம் பண்ணுகிறார்கள். ஆகவே இந்த இரண்டு ஆத்துமாவும் வேறு' என்று பிரித்துக் காட்டுவது சிரிப்பை விளைவிக்கிறது.

V. கடைசியாக 'மிருகங்களுக்குத் தாயென்றும் தந்தையென்றும் தங்கையென்றும் மக்களென்றும் அறியும்படியான அறிவு அணுவேனும் இல்லை' என்பது அறியாமை (ignorance). அவைகளுக்குள்தான், இந்த உரிமை அதிகமாகக் காணப்படுகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாக நாம் நாடோறும் அநேக சாக்ஷிகளைக் காண்கிறோம். அற்ப ஜெந்துக்களாகிய காகம், கோழி முதலிய தத்தம் குஞ்சுகளைக் காக்கும்பொருட்டு படும் பாடு என்ன! ஓர் தன்றுக்கும் அதனை ஈன்ற பசுவுக்கும் உள்ள நட்பு (ஆசையாகிய

பாசம்) என்னே! 'கன்றை யிழந்த பசுபோல்' என்றும், 'தாயிழந்த கன்றுபோல்' என்றும் சொல்வதின் மேன்மை யென்னே! இவ்வாறெல்லாமிருக்க அந்த உணர்வே இல்லை என்பது போலித்தனமே யொழிய ஆழ்ந்த புத்தியிற் பொருந்தற்பாலதன்று.

மனித ஆத்துமாவுக்கும் மிருக ஆத்துமாவுக்கும் அவயவ ஏற்றக் குறைவினுலேயும், விசேஷித்த பகுத்தறிவினுலேயும் வேற்றுமையிருந்தால், மனிதருக்குள் எத்தனை விதமிருக்கின்றனர்? பகுத்தறிவிருந்தும் எத்தனைபேர் தீயவழியில் நடக்கின்றனர்? பகுத்தறிவுடன் மற்றைய அறிவில்லாத ஈறறிவுடைய பிராணியாகிய நத்தை முதலியன ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாது வாழவில்லையா? மனிதருள் பல்லக்கேறுவோர் எத்தனைபேர்? அதைச் சுமந்து போகிறவர் எத்தனைபேர்? இவ்வித கக்ஷிகளில் ஆத்துமாவானது வேறுபட்டால், மிருகம் மனிதன் என்னும் கக்ஷிகளிலும் வேறுபடும்.

மேலுட்டு டார்வின் (Darwin) பிரபுவின் கொள்கையை ஆராயுமிடத்தும் மனித சென்மம் என்பது அமீபா (Ameba) என்னும் புழுவிலிருந்து விகற்பித்ததாகக் காணப்படுகிறது. ஆகையால் ஒரே வித ஆத்துமா இத்தனை விகற்பங்களாயின என்பதும் விசித்தமாகையால் ஆத்துமாவில் பிரிவினை காட்டுவது புத்திக்குகந்ததாயில்லை.

Mr. Andrews' Conference with the Publicity Board Re: Ceylon Labour Ordinance

(From the Publicity Bureau)

Mr. C. F. Andrews was good enough to meet the Publicity Board on September 13th and to give a very interesting statement of his views on the new Ceylon Labour Ordinance and the whole question of Tamil Labour in Ceylon. Mr. Andrews' qualifications as an expert on such questions are too well known to require demonstration here. He has just returned from Ceylon where he has been studying on the spot the probable effects of the new ordinance and the view taken of it by the different classes affected. He has visited both tea and rubber estates and has seen and spoken with officials, planters, kanganis and labourers. His opinions are therefore

entitled to much weight and it is very satisfactory to learn that he is able to say of the new Ceylon Labour Ordinance that it has the full approval of all sections of the Tamil Community in Ceylon and of no small fraction of the Planters and that it is in his opinion on the whole deserving of the hearty support of the public of Madras.

Mr. Andrews said that during his enquiries he found the utmost readiness among all classes to help him with information and in other ways. He was particularly struck by the personality of the Attorney-General, the drafter of the bill, and by his interest in the questions with which the bill dealt. Thanks to the help thus given him, he felt that he had obtained during his visit a good insight into conditions in Ceylon.

He was bound to say that he had seen and heard things which convinced him that there had once been only too much justification for the bad repute attaching to Ceylon's treatment of immigrant labour in the past. He was at the same time glad to recognise that there had been a great though somewhat unequal improvement in recent years. In some estates things were still bad—very bad—but in others much had been done towards improving the conditions under which labour lived. In some estates the improvement was not merely marked, but extraordinary. He had nowhere seen anything better than the arrangements made for the accommodation of labour on some of the best estates. Indeed it would be difficult to devise anything better. On one estate he had seen what he had never seen before, the Tamil cooly well fed, well dressed, clean and self-respecting. On this estate the employer had spent money freely, had laid out a model village with model houses (Rs 550 had been spent on the house for one family) and garden allotments for his labour. Given these facilities, the Tamil labourer had taken full advantage of them and had done the rest himself. The expenditure had undoubtedly repaid the employer amply as his labour was thoroughly contented and could therefore be depended on. Such employers and there were more than one, should be accorded great credit for their wise and generous policy. But on some other estates conditions were not merely less satisfactory; they were thoroughly bad both as regards sanitary conditions and as regards the use made of the penal provisions of the labour law against the cooly. His enquiries went to show the root of the past difficulty lay in the indebtedness of the cooly to the estates and to the kanganis. He found that not only did the cooly suffer from this system, but the estates found it ruinous to their interests. The only gainers were the more unscrupulous among the kanganis who were in a position to blackmail the estates. There was no doubt that many estates were suffering heavily from the exactions of kanganis who could always extort money by veiled threats of removing the estates' labour and with it the debts owed by the coolies to the estates. It was clear to him that till the cooly's indebtedness was totally done away with, it was hopeless to expect that the position would become satisfactory throughout the island, either for the coolies or for the estates. The abolition of the coolies' indebtedness was the key to the solution of the labour problem in Ceylon, and he was glad to find that the estates had recognised this, and that the draft Ordinance now before the public provided for a complete and immediate cancelment of the coolies' debts.

It was important that the public of Madras should remember that the draft Ordinance now before the public had not yet become law. There was still considerable danger of opposition and Madras ought, in his opinion, to exert itself to see that the draft Ordinance became law and was not mutilated. He had ascertained from what quarters opposition to the Ordinance proceeded and he had considered how this opposition could best be met. He found that reasonable objections were taken to the Ordinance by the owners of small estates The draft provides that the coolies' debt both to the estate and to the kangani should be cancelled at once while the estate should make good to the kanganis certain very considerable sums which would thereafter be due to the kanganis. The Ordinance provided that these sums should be paid in instalments extending over five years. He found that the kanganis were extremely pleased at this arrangement

which they considered to be very profitable to themselves. But the planters of the small estates maintained and he thought with reason that the unexpected payments of these considerable sums in so short a period would be a very heavy drain on their resources and would effectually prevent them from carrying out any improvement during the next five years. He felt that it was desirable in the interests not only of the planters themselves, but of the island and of Tamil labour that the planters should be in a position, as early as possible, to spend money on extensions and improvements of all kinds, and he greatly doubted the wisdom of calling upon the small estate owner to pay up considerable sums in the short period of five years. He had suggested that the Ceylon Government should make the payment to the kanganis in a period of five years, and recover the amount from the planters by instalments spread over ten years. If this concession was made, he believed that the opposition to the Bill would greatly diminish, if it were not entirely withdrawn. The cost of the concession he thought would not be excessive, considering the importance of encouraging the rapid improvement of the estates. The concession would be specially needed by and would be most useful to this small estate owners. The small estates were generally in the hands of resident owners and on the average the resident owner was more humane and more interested in the welfare of his labour than the Companies who dealt with their estates at a distance. He, of course, wished it to be understood that many managers employed by Companies treated their labour admirably, but striking an average he thought the resident proprietor was a better master than the Manager. He thought therefore that the Madras Public ought, in the interests of Tamil labour, to support the suggested concession to the Estates if it were brought forward seriously by the Ceylon Government.

As regards the provisions of the Bill relating to Sanitary regulations and to the arrangements for the import of labour he thought they might be accepted on the whole as satisfactory. Much of course would depend on the personnel of the Labour Controller and his staff who were responsible for

working the machinery set up under the Bill. He thought it important that the staff should be composed of men of good status. They might be either English or Tamil, but they should be men who had gone through a full University course and they should be placed above temptation to corruption. The machinery set up by the Bill, Mr. Andrews had seen at work in the Malay States, where it proved most effective. The power of refusing or cancelling registration is a most formidable weapon, and can be depended upon to bring the most obstinate estate owner to reason, because refusal of registration effectually deprives an estate of all its labour. Mr. Andrews saw no reason to doubt that with the help of this machinery every bad estate in Ceylon could be induced to put its house into order.

On the whole Mr. Andrews felt that he could say that as a result of the draft Ordinance Ceylon would in the near future be likely to offer much more satisfactory conditions of life to Indian emigrants. While saying this he wished to draw attention to defects in the present system for which the draft Ordinance had not as yet provided any remedy. He felt however that the draft Ordinance had by cutting away the root of the evil, i.e., the indebtedness of the cooly, removed the temptation to the continuance of existing abuses and made it easier to sweep them away.

The first and most conspicuous of these defects was found in the penal provisions of Ceylon law. The provisions relating to labour offences were antiquated and inexcusable. They made punishable by imprisonment trivial actions or omissions on the part of ignorant coolies. Neglect of work, misconduct or absence from the estate without leave were, he believed, punishable by imprisonment and had frequently been so punished. The illiterate cooly did not know how he stood. He felt that the estate manager could haul him up before a Magistrate whenever he liked and he could never be sure that the most simple action on his part would not bring him within the reach of the criminal law. Well managed and self-respecting estates would not of course use these penal provisions at all. But there were many estates that were neither well.

managed nor self-respecting, and in point of fact he believed that very full use of these provisions was made by certain estates. He understood that there were as many as 4,000 prosecutions in a year for labour offences of this petty description. Further the magistracy charged with the enforcement of these provisions had often shown a great lack of common sense in interpreting them and in awarding punishments. He had heard that an illiterate cooly who had given a month's notice to his employer had been imprisoned for leaving estate 12 hours before the month expired. He was sure that the penal provisions would go and must go soon, and that any similar penal provisions which existed in Madras or elsewhere in the world would soon follow them. He believed that the Government of India accepted this view. He thought it quite practicable to amend the Ceylon Labour Ordinance in such a way as to make an end at once of these abuses. He hoped that Madras would press for such an amendment and he doubted whether there would be much opposition to it in Ceylon. He believed that under the new conditions the Manager of an estate would feel the need of these Ordinances of 1865 less than ever before. By cutting away the coolies' indebtedness to the estate it removed the temptation to use them in order to retain the labour on the estate. While the cooly was deeply indebted to the planter, the planter was naturally alarmed lest he should desert the estate. If he did so, the estate lost the money owed by the cooly. Further a hopelessly indebted man could only be stimulated to industry by threats. Under the new Ordinance the cooly owed the estate nothing. The estate owner will no longer be so fearful of desertion while the cooly having obtained a decent economic position is likely to turn out a fair day's work for a fair wage. The need for the old penal laws will therefore disappear and with it the opposition to their abolition. He hoped that Madras would press for the earliest possible repeal of such laws.

Another defect in Ceylon conditions for which no remedy is provided in the existing ordinance is the low wages paid on the tea estates. Wages paid on the rubber estates are much

better. But unfortunately labourers accustomed to work on the tea estates have a traditional objection to taking up work on the rubber estates in the low country where the climate is much hotter. The higher wage paid on the rubber estate does not therefore affect the wage on the tea estate as rapidly as might be expected. The tea estates, he learns, are now beginning to make very good profits. They can well afford, he thinks, to pay a better wage, and it would be in their own interests to do so. Some of the employers already see this. Many have made concessions in the way of selling rice below the cost price, and they have in other roundabout ways increased the coolies' real wage. But the instinct of the employer is always against any direct increase in the money wage. They must however be induced to pay higher wages. He had seen many of these tea estates, and he felt sure that the wage paid there was insufficient to support the coolies' families in full working efficiency. One proof of this was the very high infant mortality. The rate was, he understood, not quite so high as in the city of Madras but it was far too high for healthy country districts. In 1916 it was 232 per thousand. He believed the reason was that the mothers were insufficiently fed, or at least that they suffered from despondency and anxiety due to the insufficiency of the most ordinary comforts of life within their reach. Feebly nourished mothers could not do full justice to their sucking children. He had tried to persuade the planters that it was to their own interest to give their labourers such conditions that they would desire to settle as colonists on the spot. He felt that temporary emigrant labour could never be satisfactory. Conditions for labour can never be described as satisfactory till labourers are willing to make their children's home in the place where they are earning their livelihood. He had pressed this view on the planters and he found that many of them had arrived at the same conclusion and were considering how they could induce labour to settle permanently on their estates. He said that public opinion should bring pressure on the tea estate owners to raise wages. He did not advocate legislation to fix minimum wages. He thought that the difficulties in the

way of fixing a fair wage and of fairly administering such a law were too serious. But he hoped that public opinion would be successful in securing an increase in wages.

As regards the sale of drink, Ceylon laws and their administration were not satisfactory. He understood that the Government of Ceylon recognised this and were considering what remedies could be applied. It was on badly managed estates that one saw most of the drink evil. Low wages, drink, debt and poverty made a vicious circle and it was difficult to free the labourer. But the abolition of debt would do much and the greater freedom of labour and the improved conditions of some estates were likely to force the worse estates to raise their wages.

The question which deserved attention was whether special measures were necessary to prevent the kangani who had been paid off in Ceylon from suing the coolies in India for the same debt. The point should be looked into by lawyers and effective precautions should be taken ; otherwise there was a danger that quite a number of coolies would be cheated by unscrupulous kanganis out of the benefits of the Ordinance.

It was of course important too that the Madras Government should continue to exercise very careful supervision over the recruiting which was carried on in this country. Every precaution should be taken to see that the cooly knew accurately the terms on which he would be required to work in Ceylon and the wage he would really get there. There was one minor provision in the draft Ordinance which he did not like. That was the provision which empowered the Labour Controller to appoint recruiters of his own. These men were likely to be professional recruiters. The professional recruiter is, Mr. Andrews thinks, a danger. He is likely to mislead men for the sake of getting recruits. The kangani who is sent once in a way from the estate to obtain recruits almost always goes to his own village and brings his cousins and friends. He is likely to give them a fair account of the conditions at the estate and he will not bring any one unless conditions are satisfactory.

Mr. Andrews is against the proposal to provide emigrants with a free passage home. The effect would be to unsettle and demoralize the man.

It is important, Mr. Andrews says, that after the draft Ordinance is passed, the Madras public should not go to sleep, confiding that all is well. Emigrant labour conditions require constant watching. Unless the country from which the emigrants go keeps an eye on the interests of her emigrant sons, the conditions under which they work are sure to deteriorate. For the emigrants are foreigners in a strange land and are therefore too weak to fight their own battles.

Probably the most important point for which the Ordinance has not made full provision is the saving of the cooly from falling into debt in the future. The Ordinance forbids the employer or the kangani to lend to him. But the cooly will from time to time need credit, and it is most difficult to devise means for putting a reasonable amount of credit at his disposal. The possibilities of the co-operative societies or state loans have been considered and should be further considered. But it is not easy to work out the practical details of a scheme that will work for the benefit of the labourers. Mr. Andrews has considered and thought out a number of schemes. But there are none with which he is entirely satisfied. He thinks that the Ceylon Government would be wise to borrow officers who have had experience of co-operative work in Madras. The question must be further studied as the future economic condition of Ceylon labour depends on a satisfactory solution being found.

On the whole Mr. Andrews thinks that though there are some improvements which should be made in the draft Ordinance still the authorities who are responsible for its production deserve and should receive the gratitude and support of the Madras public in their efforts to make the Ordinance law. The Ordinance strikes at the root of the evil even as it stands. If it does not remove all the abuses prevalent in Ceylon, it at least goes far towards hastening the end of such abuses as remain. It is true that at the outset mistakes were made in handling the

question. No Tamil representation was appointed on the commission of enquiry and an air of secrecy surrounded its proceedings. Suspicion was thus unnecessarily aroused. But the draft Ordinance finally published has, Mr. Andrews says, obtained the approbation of all sections of the Tamil community in Ceylon and he thinks that Madras may concur in this judgement.

Mr. Andrews wished it to be put on record that he felt certain that the Madras Government as well as the Ceylon Government were to be congratulated on the statesmanlike form in which the draft Ordinance has finally appeared. He had every reason to believe that some at least of the improvements which were now embodied in the Ordinance, had been due to the long correspondence before the Deputation came and exchange of views which took place when the Ceylon Deputation visited His Excellency the Governor of Madras at Ootacamund. The Attorney-General of Ceylon had wholeheartedly invited public criticism and there was every hope that the Bill when it came forward would be a truly satisfactory measure.

C. L. S. PRESS, MADRAS—1919

No. 163 டிசம்பர் 1919

வேதியர் விளக்கு

Two Christmas Songs

By the Rev. F. Kingsbury

கிறிஸ்து ஜயத்திப் பிரார்த்தனம்

பண் : பழம் பஞ்சுரம்

('மற்றுப்பற்றெனக்கின்றி' என்ற தேவாரம் போல.)

1 சருவ வல்லமை சருவ வியாபகம் சருவ ஞானமும் மறைத்தவா
சருவ சேஷ்யும் மகிமை யாவையும் சத்ய லோகமும் விடுத்தவா
இருவர் தம்மையும் பிரிந்திம் மண்ணினில் ஏகனுய் அவ தரித்தவா
தரும மூர்த்தியே நின்ச ரண்சரண் தந்து காத்திடெம் அப்பனே.

2 சிறிய நாட்டிலொ ரேழைக் கன்னிகை சிந்தை யிற்களி கூரவே
சிறிய * வெல்லேயில் மாட்டுக் கொட்டிலிற் செனித்த சேயெங்கள் நேயனே
மறிகள் காத்திடும் இடையர் போற்றிடும் மன்னவா உன்றன் சரணமே
சிறியர் எங்களுக் கடைக்க லம்செப்ப வேறெ ராதா வில்லையே.

3 சிமியன் கைகளில் ஏந்தி வாழ்த்திடும் குழந்தை யேயெங்கள் செல்வமே
தமிய ளாயசீர் அன்னுள் ஏத்திடும் பிள்ளை யே உனைத் தாசர்யாம்
நிமிட மாயினும் மறவா தன்புபா ராட்டி நேசித்துச் சேவிக்கத்
தமைய னேவரந் தந்து பாலிக்கச் சமய மீதெங்கள் சாமியே.

4 ஏழை நாட்டினின் றறிஞர் தேடிவந் தடிப ணிந்தனர் † கேள் உனை
ஏழை நாடெனும் பாரதம் சீனமும் கிளரும் ‡ நிப்பொனும் நின்னையே
ஏழை நாட்டொடு வாழ்த்திப் பாடுவ தெத்தி னம் மெமக் கறைதியே
ஏழை நாட்டினர் மேலை நாட்டினர் என்ற பேதமில் லாதவா.

---

* வெல்லை = பெத்லெகேம். † கேள் = மித்திரன்.
‡ நிப்பொன் = ஜப்பான்.

கிறிஸ்து ஜயத்திச் சாழல்

நாலடிக் தரவு கொச்சகக்கலிப்பா

(இராகம் : ' முத்திதெறி யறியாத ' என்பது போலப் பாடலாம்.)

1 என்னப்பன் எம்பெருமான் எல்லார்க்குந் தான்கடவுள் "
மன்னும்உல கத்தின்பால் வைத்தஅன் பெத் துணைத்தேடி
மன்னும்உல கத்தில்அன்பு வைத்ததனுற் றந்தானே
தன்னரிய ஒருமகனைச் சாவதற்கே சாழலோ.

2 அன்னவன்றன் திருமகனே நம்பினவன் அழிவதில்லை
மன்னும்ஒழி யாவாழ்வு பெற்றுய்வான் காணேடி
மன்னும்ஒழி யாவாழ்வு மனிதர்கள்தாம் பெற்றுய்யப்
பொன்னுலகைத் துறந்துவந்தான் புவிதனக்கே சாழலோ.

3 வான்பழித்திம் மண்புகுந்து மனிதரையாட் கொண்டவள்ளல்
மான்பழித்த நோக்கிமரி வயினுதித்தான் காணேடி
மான்பழித்த நோக்கிமரி வயினுதித்த தாலன்றே
யான்பழிச்சும் இலக்கானுன் யாவர்க்கும் சாழலோ.

4 கடவுளுரு தனக்கிருந்தும் கடவுளுக்குச் சமத்துவமே
படுபோரிற் பண்டமெனப் பற்றினனே காணேடி
படுபோரிற் கொள்ளைகொண்ட பண்டமெனப் பற்றுமற்
கடவுள்வெறு மையனுன காட்சியென்னே சாழலோ.

5 அடிமையுரு தானெடுத்தே அமர்பிரான் குருசதனிற்
கொடுமரணம் ஏன்அடைந்தான் யான்அறியக் கூறேடி "
கொடுமரணம் குருசின்மிசை கொற்றவன்றன் உற்றிலனேற்
கடவுள்அருள் வாழ்வதனைக் காணுவமோ சாழலோ.

6 ஆடவன்தோள் சேர்ந்தறியா அணங்குமரி ஒருசேயை
நீடுபுவி தனிற்பெற்ற நேர்மையது என்னேடி
நீடுபுவி தனிற்கன்னி சேய்பெற்ற நேர்மையது
தேடரிய தூயாவி செயலதுகாண் சாழலோ.

Christmas

By the Rev. N. Samuel

கிறிஸ்து ஜயந்தி

மனுக்குலபுரம் என்ற நகரத்தின் வெளிவேஷத்தெரு என்ற இராஜவீதியில் சாந்தநாதர் என்ற ஒரு வயோதிப சாது நடந்து கொண்டிருந்தார். அவரைத் தரிசித்த சில சிறுவர் சிறுமியர் அவரிடம் நெருங்கிப் பேசினர். அவர் முகமலர்ந்தவராய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அவர்களோடு சம்பாஷித்தார். பிள்ளைகள் அதனால் மனமகிழ்ந்து 'தாத்தா, எங்கள் வீட்டுக்கு வாருங்கள், எங்கள் வீட்டுக்கு வாருங்கள்' எனச் சொல்லி, தத்தம் வீட்டுக்கு அழைத்தார்கள். அவர்களில் அண்ணன் தம்பிகளாகிய இரண்டு சிறுவர்கள் வீட்டுக்குப் போனர். அந்த வீட்டுக்காரர்கள் ஊராரின் மதிப்புப்பெற்ற செல்வந்தர்கள். அவர்கள் தங்கள் வீட்டுக்கு வந்த பெரியவரை அன்போடழைத்து உபசரித்தார்கள். போஜன வேளையில் அவரை ஜெபஞ்செய்யக் கேட்டுக்கொண்டார்கள். அன்று முழுவதும் அவர்களோடு அவர் தங்கியிருந்து, அந்திப்பொழுதில் வெளியேற விரும்பினர். அவர் வீடுவாசல் இல்லாத பரதேசியென்றறிந்த அந்த வீட்டார் அவரைப் போகவிடாமல் தங்களோடு எப்பொழுதும் இருக்கும்படி கேட்டுக்கொண்டு, தங்கள் மேல்வீட்டில் அவருக்கு விடுதி கொடுத்து, அவரை இருத்திக்கொண்டார்கள். அவர்கள் வீட்டில் பெரியோரும் சிறியோரும் பிறந்த நாளைத் தவறாது கொண்டாடும் வழக்கம் இருந்ததால், ஒருநாள் அவர்கள் அந்த வயோதிபரைப் பார்த்து, ஐயா, தங்கள் ஜனன நாள் எதுவென்று கேட்க, அவர் அதைத் தெரிவித்தார். அந்த நாளை அசாதாரண குதூகலிப்போடு கொண்டாடத் தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டார்கள். தங்கள் தீர்மானத்துக்கேற்ப, பெரியவர் ஜனன நாள் வர இன்னம் ஒரு மாசம் இருக்கும்பொழுதே, அதற்கான சகல முஸ்திப்பும் செய்தார்கள். அந்த நாளில் தங்கள் பெற்றூர் பிறந்தார், உற்றூர் உறவோர், இஷ்டமித்திரர், யாவரும் தங்கள் வீட்டுக்கு வரவேண்டுமென்ற கோரிக்கையோடு அவர்களுக்கு அழைப்பு நிருபங்களை அனுப்பினர்கள். தங்கள் வீட்டை அலங்கரிக்கக்கருதி, பெரியவரை அடுத்த வீட்டிற் குடியேற்றி, தாங்கள் அவரை அழைப்

பிக்கும் நேரத்தில் அவர் தங்களிடம் வரலாமெனச் சொல்லி வைத்தார்கள்.

குறித்த நாள் வந்தது. நூற்றுக்கணக்கான விருந்தாடிகள் கால் நடையாகவும் வாகனஞ்ரூடாகவும் கூட்டங்கூட்டமாய் வந்தார்கள். வீட்டிற் பல வாத்தியங்கள் முழங்கின. இராஜகுமாரன் கலியாண விருந்துக்கொத்த விருந்து நடந்தது. அறுசுவை உண்டி பட்சண பானுதிகளுக்குக் குறைவில்லை. வீட்டுக்காரர்கள் வந்தோரைப் உப சாரத்துடன் எற்று அவரவர் அந்தஸ்துக்கேற்ற ஆசனங்களில் இருத்தி அவர்களை உண்பித்தார்கள். விருந்துநேரத்தில் பிள்ளைகள் இங்கித ஓசையாய்ப் பாடினார்கள்.

இவ்வளவெல்லாம் நடந்தும், ஒரு முக்கிய காரியத்தை மறந் தார்கள். யாருடைய ஜெனன நாளை அவர்கள் கொண்டாடினார் களோ அவரை முற்றிலும் மறந்து, அவரைக் கொண்டாட்டத் திற்கு அழைக்காதே போனார்கள். கலியாண வீட்டில் தாலிகட்ட மறந்ததுபோலாயிற்று. என்ன பரிதாபம்! கொண்டாட்டம் முடிந்து, விருந்தாடிகள் தங்கள் தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனபின், ஒரு சிறுபிள்ளை தாயாரைப் பார்த்து: 'தாத்தா எங்கே அம்மா, அவர்களைக் கூப்பிட மறந்தோமே' என்று சொல்லவே, யாவ ரும் அவரைத்தேட ஆரம்பித்தார்கள். அடுத்த வீட்டில் தங்கியிருந்த அவர் ஒருவருக்கும் சொல்லாமல் எங்கேயோ போய்விட்டார். அவருடைய காருண்ய முகத்தையும், அமிர்த வாக்கையும், அவ ரால் தங்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களையும் நினைத்து நினைத்து அங்கலாய்த்துப் புலம்பினார்கள்.

இதுவே தற்போது கிறிஸ்து ஜயந்தி கொண்டாடும் பல கிறிஸ்தவ சபைகளின் நிலைமை, பல கிறிஸ்தவ குடும்பங்களின் நிலைமை, பல தனிக் கிறிஸ்தவர்களின் நிலைமை. பண்டிகையைச் சிறப்பாய்க் கொண்டாடியும், பண்டிகைக்குரிய முக்கிய பொருளைத் தப்ப விடுவார்கள். அவர்கள்: 'நமக்கொரு பாலகன் பிறந்தார், நமக் கொரு குமாரன் கொடுக்கப்பட்டார்' என்று பாடியும், அவர்களில் அந்தப் பாலகன் வாசமாயிருக்கிறதில்லை, அந்தக் குமாரனை அவர் களிடம் காணேம். அத்தன்மைக் கிறிஸ்தவர்களைக் குறித்தே பவுல் அப்போஸ்தலன்: 'என் பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உரு வாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்' என்கிறார். (கலா. 4: 19.) இதுவே கிறிஸ்தவ சபைகளில் உழைக் கிற போதகமாரின் வேலையாயிருப்பது அவசியம். குடும்பாராதனை செய்யும் குடும்பத்தலைவரின் கவலையாயிருக்கவேண்டியது இதுவே.

அப்படிக்கில்லாத ஆடம்பரமெல்லாம் வீண். எல்லாக் கிறிஸ்தவ சபைகளும், எல்லாக் கிறிஸ்தவ குடும்பங்களும், எல்லாக் கிறிஸ்தவ ஆத்துமாக்களும், தங்களில் கிறிஸ்து உருவேற்படும் பாக்கியத்தைப் பெற்று, பண்டிகை ஆசீர்வாதங்களைப் பரிபூரணமாய் அனுபவிக்க அமலன் அருள்புரிவாராக. ஆமென்.

For Christmas Day

By P. D. Durairaj

கிறிஸ்மஸை தினத்திற்குரியது

'ஆதியிலே வார்த்தை யிருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்தி லிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்ற வசனம் நாம் நன்றாயறிந்துகொண்ட வசனம். நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு 'வார்த்தை' யென்று பெயர். 'வார்த்தை' யென்ற நாமதேயம் இயேசுகிறிஸ்துவிற்கு எப்படிப் பொருந்தும்? அவர் எப்படி 'வார்த்தை'யாவார்? 'வார்த்தை' யென்றால், அவ் 'வார்த்தை' தெரிவிப்பது எது? என்று நாம் அறிந்துகொள்வதற்கு ஓர் சிறு கதையை உதாரணமாய்ச் சொல்லுவோம்:

ஒருநாள் ஓர் அரசன் தன்னெதிரியாகிய வேறொரு அரசனை ஜெயிக்கவேண்டுமென்ற கர்வத்தினால், திடீரென்று அவன்மேல் சண்டை புரிவதாக விளம்பரஞ்செய்து, சைன்னியங்களைச் சித்தப் படுத்தி, தக்கப் பக்குவங்களுடன், ஏற்ற சமயமறிந்து, பெருமித மாய் சேனைகளை வீரதீரமாய் நடத்திச்சென்றான். இவ்வரவை யும் எரிச்சலுடன் எதிர்நோக்கிய மாற்றானும் தனக்கான பரிபக்கு வங்களுடன் சண்டைபுரிய சித்தனாயிருந்தான். இரு சேனைகளும் போர்புரிந்து, இளைத்துப்போகிற சமயத்தில், கர்வத்துடன் புறப் பட்டு கௌரவத்தை யடைய்வேண்டு மென்றிருந்த அரசனே தோல்வியுற்று, முதுகுகாட்டி யோடும்படி நேரிட்டது. அவ்வரச னின் குமாரத்தியாகிய ஒரு இளவரசியையும் சிறையாக்கப் பட்ட அநேகருடன், சிறையாய்க் கொண்டுபோய் விட்டார்கள். அந்திய அரசனின் அரமனையில், அரசிற்குரிய மரியாதைகளுடன் அவளிருந்தபோதிலும், அன்னபானுதிகளை வெறுத்து, தன்னழகிய முகம் வேறுபட, கருங்குழல் துவள, தேகம் மெலிய, மனம் வாட, ஆவி சோர—இருந்த இக்கண்ணாரவியைப் பார்த்துச் சகி யானும் அந்த அரசனும் அவளை விடுதலைசெய்ய மனமுடையா

ஞாய், அப்பெண்ணே யணுகி, 'அம்மா, உன் துக்கத்திற்குக் காரணம் யாது?' என்று பலமுறை வினவியும் மாறுத்தரம் பிறவாமலிருந்ததைக் கண்டு, தன் குமாரத்திகளே அவளிடம் அனுப்பி துக்கக் காரணம் விசாரிக்கச் செய்தான். அவர்களும் அவளிடம் இன்பமான பல மொழிகளால் அனுதாபங்காட்டினதை யுணர்ந்தப் பெண், மறுமொழியாய்க் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் ஒரே வார்த்தையை திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டே யிருந்தாள். அந்த வார்த்தை, தான் நேசித்து மணம்புரிந்துகொள்ள விரும்பியிருந்த ஆடவன் பேர். அந்தப் பேர் 'பெக்கட்'. இந்தப் பெண்டிகள் கேட்ட கேள்விக்கு இவள் வாயிலிருந்து வந்த மறுமொழி 'பெக்கட்' என்பதே. கடைசியாய் இந்த ராஜன் இவளே தன் தகப்பன் வீட்டிற்கு அனுப்பி நிகழ்ந்தனவற்றைத் தெரிவித்து, 'பெக்கட்' என்ற வார்த்தையின் கருத்து முழுவதையுங் கண்டுகொண்டான்.

இவள் மனத்திலே யுண்டாயிருந்த சகல எண்ணங்களையும் கருத்துக்களையும் 'பெக்கட்' என்ற ஒரு வார்த்தையே தெரிவித்தது. இவ்விதமாகவே நமது நாட்டில் அநேக மோனக் குருக்கள், சாதுக்கள், சந்நியாசிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களின் குணவிசேஷங்களைக் கண்டுகொள்வது அரிதாகையால், அவர்களின் மோன விரதத்தை முறிக்க மற்றவர் பிரயாசப்பட்டு, அப்படி அபூர்வமாய்ப் புறப்படும் வார்த்தைகளால் குணவிசேஷங்களைக் கண்டுகொள்ளுகிறார்கள். அப்படியே நமது உள்ளத்திலடங்கிய சகல விருப்பும் வெறுப்பும், ஆசை, தீர்மானம், சித்தம், முதலியவைகளும், நமது சைத்தன்ய நிலையின் தன்மை முழுவதையும் பிறருக்கு அறிவிப்பன நமது வார்த்தைகளே. வார்த்தைகள் இல்லாவிடில், கருத்துக்கள் வெளியாகா! குணங்கள் புதைபொருளே!

வார்த்தையின் குணம் மனிதனின் குணத்தை (Character) தெரிவிக்குமானால், நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவிற்கு 'வார்த்தை' என்ற பெயர் எவ்வளவு ஒத்தப் பெயர்! எவ்வளவு தக்கப் பெயர்!

'வார்த்தை'யாகிய இயேசு, கடவுளின் குணத்தை எடுத்துச் சொல்லவந்தார். மனிதன் பாவம் புரிந்து சண்டாளனாகி, தீயவன் வலையில் சிக்கி, ஒடுக்கப்பட்ட பயங்கர ஸ்திதியையும், மனிதன் ஆதியிலுண்டானபோது அவனுக்குச் சுதந்தரமான உன்னத ஸ்திதியையிழந்து மோசம்போவதற்குக் காரணமாயிருந்தது எதுவென்றும்—காலாகாலத்திற்கும், இயேசு திருஅவதாரஞ் செய்யுமுன் மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் அநேக குணங்களோடு—

புதிதாய் இயேசுகிறிஸ்துவின் அவதாரத்தோடு 'தேவன் அன்பாயிருக்கிறார்' என்ற விசேஷித்த குணத்தை நிரூபித்துக்காட்டவும், கெட்டுப்போன பாவியை ஏற்றுக்கொள்ள சித்தராயிருக்கும் தகப்பனின் அன்பு, குமாரனின் பாடு, ஆவியின் போராட்டம், நித்திய ஜீவனின் இன்பம் முதலியவற்றைத் தெரிவிக்க வந்த 'வார்த்தை'யாக்கும் நமது இரட்சகர்.

ஆகவே, கிறிஸ்மஸ் தினத்தில் நமது கொண்டாட்டத்திற்குக் காரணமாயிருக்கும் கிறிஸ்துவின் ஜயந்தியின் மூலப் பொருள் யாதெனில், இதுவரையில் மனிதனுக்குத் தெரியாத அநேக சத்தியங்களைத் தெளிவாய் எடுத்துச் சொல்லும்படி, முதலாவது அவர் மூலமாய், அவர் காலத்திலிருந்து அவர்கள் சீஷர்கள் மூலமாய், பின்பு அவர்களின் பின்னடியார்கள் மூலமாய், பிறகு திருச்சபையின் மூலமாய், இப்பொழுது திருச்சபையில் எல்லா அங்கங்கள் மூலமாயும்—இருளிலிருப்பவர் வெளிச்சத்தைக் காணும்படி, தேவ விரோதிகள் தேவ பிள்ளைகளாகும்படி, நாஸ்தீகம், அக்நாஸ்தீகம், குழைஸ்திகம், உலகாயிதம், அசீசுரவாதம் முதலிய கேடுகள் நீங்கி ஏகேஸ்வராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவை வணங்கும்படி—அவ் 'வார்த்தை' காரணமாயிருத்தல் பொருட்டு, பெத்லெகேம் ஊரிலே திருவவதாரஞ்செய்த இயேசு, அன்றையத்தினம் முதற்கொண்டு உலகம் நிற்கும்வரை, 'மனந்திரும்பி குணப்படுங்கள்,' 'தேவன் அன்பாயிருக்கிறார்' என்று கூறிக்கொண்டே, போராடிக்கொண்டே, வெளிச்சத்திற்குள்ளிழுத்துக்கொண்டே இருப்பதைத் தெரிவிப்பதேயாம்.

The late N. V. Tilak

By Pandit K. Venkatasubbiah

காலஞ்சென்ற ஸ்ரீமான் நாராயணவாமான் திலக்

கிறிஸ்தவ நாயகமாய், உயர்ந்த தேசாபிமான குணத்தில் சிறந்து விளங்கிய ஸ்ரீமான் நாராயணவாமான் திலக் என்பவர் சென்ற மேமீ 9உ யன்று பம்பாய் மாநகரத்தில் தேகவியோகமானார். இவரை நன்கறிந்தவர்கள் இவர் பிரிவினால் நேர்ந்த பெருங் குறைவினை யுள்ளி வருத்தமுறுதாரில்லை. இன்னர் கி. பி. 1862-ம் வருஷத்திலே வட இந்தியாவிலே ஓர் சிறு கிராமத்தின்கண் ஜனனமானார். மகாராஷ்டிர பிராமண ஜாதியைச் சேர்ந்தவர். சாமான்

னிய குடும்பத்திலே பிறந்தவர். புலவர் வழி வந்த மரபினர். இவ ரது ஜீவிய காலத்திலே, பாட்டனாரும் தாயாரும் கற்றறிக் கவிஞர் களாய் மேன்மையுற்றிருந்தனர். தகப்பனாரிடம் இவருக்கு அதிகப் பற்றின்மையின், தம்மால் மிகுதியும் நன்குமதிக்கப்பெற்ற அன்பின் ஆர்வமுடையாளாகிய அன்னைபால் சார்ந்தொழுகி, பாட்டனாரோடு பயில்வாயினர்.

இளம்பிராயத்தில் தமது சுயவித்தையாகிய மகராஷ்டிர பாஷை யையும், அன்னையார் இறந்த பின்னர் நாவலீக் என்னுமிடஞ் சென்று, ஆண்டிருந்த மாஜி ஜஸ்டீஸ் கனம் எம். ஜி. ரெனேட் என்பவரின் ஆதரவைப் பெற்று, அன்னவரால் ஸ்தாபிக்கப்பட் டிருந்த பண்டித சங்கமொன்றில் ஆத்தும வித்தையாகிய சமஸ்கிருத பாஷையையும் கற்று, அவ்விரு பாஷைகளிலும் தேர்ச்சியடைந் தனர். பிறகு பரதேசத்தாரின் ஆளுகைக்குட்பட்ட இந்தியாவிலே, பரவித்தையாகிய ஆங்கிலம் கற்றல் இன்றியமையாததனவாம் என வறிந்து ஆங்கிலமும் சின்னட் பயின்று பரிச்சயம் செய்துகொண் டனர். அக்காலத்திலே பிரபல வேதாந்த வித்தியார்த்தியாயிருந்த கணேச சாஸ்திரி லீலி என்பவரிடம் இவர் அதிகமாய் அப்பிய வித்து வந்தமையானது, இவர் ஜீவியத்தின் நன்மைக்குப் போந்த சத்துவமுள்ள முகாமையா யிருந்தது.

சமஸ்கிருதக் கல்வியி லாழ்ந்து, கவிபாடும் வாத்தின் திறத்தின ராகி, தேசாபிமானம் என்னும் உரிமைக் குணத்திலே வளர்ந்து, தமது ஜனன பூமியை அதிகமதிகமாக நேசிக்கத் தொடங்கினர். தம்முடைய தேசத்தாரின் பக்தி நீவிரத்தை மதித்து, இந்துதேச சரித் திரத்திலும், பரம்பரையிலும், பழக்கவழக்கங்களிலும் உத்தமமானதை உண்மைக்குத்தாரமாகத் தெரிந்துகொண்டார். தாமே, 'எனது தேசத்தைப் பார்க்கிலும், பெற்றோர்களையும், பெண்டுபிள்ளைகளையும், உற்றாருறவினரையும், என்னையும்கூட அதிகமாய் நேசித்ததாக நான் நினைக்கவில்லை' என்று தமது முடிவுரையிற் கூறியிருக்கின்றனர். ஜனசமூக ஊழியம் இவர் மனதில் இளம் வயது தொடங்கி வேரூன்றி வளர்ந்துகொண்டு வந்தமையின் ஜாதிக்கட்டு, விக்கிர காராதனை, பிரகிருதி தத்துவம் முதலிய தமது தேசவாழ்வின் விஷ யத்தில் துவேஷபுத்தியை யுடையோராய், எத்தேசத்தையும் கட்டுப் படுத்தி இணைக்கக்கூடிய சர்வதேச சம்மத மார்க்கமொன்று கண்டு பிடிக்கப்படின் நலமென்றும், அம்மார்க்கம் மானுஷத்தன்மையின் சகோதர வைக்கியத்தின்பேரில் புருஷ தத்துவ தேவனுய் ஏற் பட்டிருத்தல் சிலாக்கியமுடையதாகுமென்றும் கருதுவரர்யினர். தமக்கு வேறு ஒருவித நம்பிக்கையும் ஏற்படாத காரணத்தால், இந்த

வாலிப வைராக்கிய புருஷன், தமது நீண்ட ஆலோசனையின்பேரி லும் படிப்பின்பேரிலும் அத்தகைய உலகமெங்கும் செல்லத்தகுந்த மார்க்கமொன்றை ஏற்படுத்துவதில், தமது ஆயுளைச் செலவிட நிச் சயித்துக்கொண்டனர்.

இம்மாதிரி இங்ஙனமாக, உத்தியோகார்த்தமாய் புகைவண்டிப் பிர யாணஞ் செய்ய இவருக்கோர் சந்தர்ப்பம் நேர்ந்தது. அத்தறுவாயில் ஐரோப்பிய கனவானெருவரைச் சந்தித்தவிடத்து பற்பல சம்பா ஷணை நிகழ்ந்து கடைசியாக கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றியும் பிரஸ் தாபித்தனர். முன்பின் அறியாத அவ்வைரோப்பிய கனவான் இவ ருக்கோர் புதிய ஏற்பாட்டின் பிரதியைத் தந்து, நீவிர் இதனை வாசித்து சித்திபெறுவீராக வெனச் சொல்லிப் பிரிந்தேகினர். அக் கால் நாராயணவாமான் திலகரும் அவ்வாறே வாசித்து வருவதாக வாக்களித்திருந்தனர். அப்படி வாசித்துக்கொண்டே போகையில் கிறிஸ்துநாதரின் மலைப்பிரசங்கம் இவர் மனதில் மிகுதியும் பதிந்து, 'இனி நான் இத்தகைய வசனங்களினின்றும் அப்புறப்படேன்; இவ்வாக்கியங்கள் மிக அருமைப் பெருமையுடையன; நான் படித்த இந்த மூன்று அதிகாரங்களிலே, இந்து தத்துவ சாஸ்திரங்களிலே அறிதற்காரிதாகிய பிரதினங்களுக்கு ஏற்ற உத்தாரங்களைக் கண்டு கொண்டேன்; இதிலே, அவைகள் எவ்வளவாய் விடுவிக்கப்பட் டிருக்கின்றனவென்பதைப் பார்க்க ஆச்சரியமுடையவனானேன்; கிறிஸ்துவை மேன்மேலும் நான் தெரிந்துகொள்ளத்தக்கதாய் இவ் வேற்பாட்டின் கடைசிப்பக்கம் வரை ஆவலோடு விடாது வாசித்துக் கொண்டே போனேன்' என்று தாமே அறிக்கை இட்டனர்.

அவர் தேடிக்கொண்டிருந்த பொருள் அக்கிறிஸ்துவாயிற்று. இவ்விதமாக அவர் கிறிஸ்துவையறியும் அறிவிலே காலக்கிரமத்தில் வர்த்தனையடைந்து, உடனே தமது புதிய விசுவாசத்தை, தமது கவி சாதுரியத்தினாலும் பத்திரிகைகள் வாயிலாக ரூபகரமான விஷய தானங்களினாலும் வெளியிடத் துவக்கினர்.

இதன் பயனாய் அவர் தமது பதவியை இழக்கவும், அத்தியந்த வறுமைக்குள்ளாகவும், பெண்டுபிள்ளைகளின் ஒற்றுமைப்பாட்டைத் தவிர்க்கவும், இன்னோரன்ன கஷ்டங்களை யனுபவிக்க நேரிட்டது. பயப்படுத்துகையும், துன்புறுத்தலும் அவர் பாதையைப் பின்பற்றின. ஆனால் அவர் பேரவாவின் கனிவு கிறிஸ்துவின் குணாதிசயங்களி லாழ்ந்து ஆழ்ந்து அளவிட்டுச் சென்றது. அவர் தமது சாதன சாத் தியத்தை பல்வேறுபட்ட வகையாய் வாக்கினாலும், வாசகத்தினாலும் வெகு நேர்மையோடு வெளியிட்டுவந்தார்.

கிறிஸ்தவுசாரியான முற்பகுதியிலே இவர் ஆமெத் நகரிலிருந்த டாக்டர் ஆர். எ. யூம் என்பவரோடு சகவாசஞ் செய்வாராயினர். அவரின் இடைவிடா சிநேகமும், புத்தியுள்ள யோசனையும், கடமைப்பாடும் தமக்கின்னதாயதென விவரித்திருக்கின்றனர். தாம் எந்த மிஷனரியாரோடு அளவளாயிருந்தனரோ அவரால் தீர்ம் அடைந்த சிலாக்கியத்தை சமயம் வந்தபோது எடுத்துரையாநின்றனர்.

தமது அனுபவத்தினுலே அவர் விசுவாசித்தறிந்து ஒருக்கால் சொன்னதாவது : இயேசுகிறிஸ்து இந்துமார்க்கத்தை அழிக்கவல்ல அதை நிறைவேற்றவே வந்தார் என்பதே. இவர் இருபத்துநான்கு வருஷங்களாக செய்துவந்த கிறிஸ்தவ ஊழியமானது இருதிறத் தினையுடையது. மேற்கத்தியருடைய நடையுடை பாவனைகளை கிழக்கத்தியரும் அனுசரித்துக்கொள்ளவேண்டுமென்னும் எண்ணத் தையும், இன்னும் இதர அபாசமான தப்பறைகளையுங்கொண்டு சீர் குலைந்து நிற்கும் சபைகளைத் திருத்தி ஒழுங்குபடுத்துவது ஒன்றும், தேசபாஷையின் ஊசுவரியத்தால் கிறிஸ்து மார்க்கம் புதுப்பிக்கப் பட்டு புதுப்பெலனும் சத்துவமுமுடையதாய் நடந்துவர உழைப்ப தொன்றும் தான்.

இவர் மகராஷ்டிர பாஷையில் இயற்றின கிறிஸ்து மதானுசார காவியங்களும் கீர்த்தனங்களும் சாமான்னிய இந்துக்களின் மனதை யும் கூட வெகுவாய் கவர்ந்தன. மலைப்பிரசங்கத்திற்கும் இன்னும் அநேக வாசகங்களுக்கும் இவர் செய்த தேசபாஷா திருப்புதல் மிகவும் பயன்படுவனவாய் கல்விமான்களாகிய இந்துக்களையும் விரும்பிப் படிக்கச் செய்தன. உலகெங்கும் பாடப்பெற்ற தேசியக் கீத மொன்றும் இயற்றினர்.

ஆகவே நமது திலகர் தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபி மானம் முதலிய உரிமைக்குணங்களிற் சிறந்து உத்தமக் கிறிஸ்தவ ஜீவியராய், அரும்புலவரெனவும், கிறிஸ்து தத்துவ வியாக்கியானி எனவும் பேர்பெற்று சிறந்திருந்தனரென்னலாம். சுபம்.

Lectures on
The Presentation of Christ to the Hindus—III

By the Rev. J. S. Masillamony, B.D.*

ஹிந்துக்களுக்குக் கிறிஸ்துவை எவ்வாறு காட்டலாம் என்பதைப்பற்றிய உபந்நியாசங்கள்—III

III. இயேசுகிறிஸ்து தேவதற்சொரூபம்

முதல் உபந்நியாசத்தில் இயேசுகிறிஸ்து கடவுளின் திரு அவதாரம் என்பதைப் பார்த்தோம். இரண்டாம் உபந்நியாசத்தில் அவர் தேவசற்குரு என்பதைப் பார்த்தோம். இந்த மூன்றும் உபந்நியாசத்திலே இயேசுகிறிஸ்து தேவ தற்சொரூபம் என்பதை அதே முறையாய் ஆராய்ச்சி செய்வோம். முந்தின உபந்நியாசங்களில் போலவே மூன்று பிரிவுகளாக எடுத்துக்கொள்ளுவோம்.

(i) சொரூபத்தை அல்லது விக்கிரகத்தைப் பற்றிய உபதேசம் என்ன ?

(ii) விக்கிரக உபதேசத்தில் அடங்கிய விசேஷ சத்தியங்கள் என்ன ?

(iii) இந்த சத்தியங்கள் இயேசுகிறிஸ்துவில் எவ்வாறு நிறை வேறுகின்றன ?

(i) சொரூபத்தைப்பற்றிய உபதேசம் என்ன ?

ஹிந்து ஆலயங்களில் விக்கிரகங்களுக்கு அதி விசேஷ ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்பதை நாம் அறிவோம். பூர்வத்தில் அத்தேனே பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருந்ததுபோலவே ஹிந்து தேசமும் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதென்று கூறலாம்.

ஊரும் பேரும் உருவும் இல்லாத கடவுள், அடியார் பொருட்டு ஊரையும் பேரையும் உருவையும் கொண்டருளுகிறார் என்பது ஹிந்துமதத் துணிபு கடவுள் அரூபி, ஆயினும் அடியார் தம்மை வணங்கி உய்யும்பொருட்டு அவர் ரூபத்தை எற்கிறார். அதரிசனமான பிரமத்தை நமது தரிசனத்துக்கு இலக்காக்கும் பொருட்டு

* The third of a series of lectures delivered at the Madura Mission Institute of Advanced Studies for Mission Agents.

எதோ ஒருவித உருவம் இன்றியமையாததாகின்றது. சப்த ரூப மாகிய ஒலிவடிவங்களைக் காட்டுகிறதற்கு வரிவடிவாகிய அக்ஷரங் களை உபயோகிப்பதுபோல அரூபியாகிய கடவுளைக் காட்டும்படி ரூபங்கள் உதவுகின்றன. இவ்வாறே

'கண்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற் கிடுவுரு வாம்வடி வெழுத்தே'

என்று ஒரு இலக்கணி கூறினர். பல பாஷைகளின் முதல் எழுத்து ஒரு சப்தத்தைக் குறிக்கும். அச்சப்தம் செவிக்குரியதேயொழிய கண்ணுக்குரியதல்ல.

'கிளிமுகம் போல சுழித்துக் கீழ்கொணர்ந்
திடபால் மீட்டி மேல்வளைத் திடைவெளி
தரவலத் தீர்த்து மேல்கீழ் நேர்த்தல்
அகரக் குறியாம்'

என்றபடி கிளிமுகத்தைப்போல ஒரு சுழி சுழித்து கீழே கொண்டு வந்து இடப்பக்கம் மீட்டி, மேல் வளைத்து இடையில் இடங்கிடக்கும் படி வலப்பக்கம் இழுத்து, மேலுங்கீழுமாகக் கோடிழுத்தல் அகரம் என்னும் சப்தத்துக்குக் குறியாகும். விசேஷமானது சப்தமே. அதைக் காட்டுகிறதற்கு எதோ ஒரு அறிகுறிவேண்டும். அதை மேல் சூத்திரத்தில் கூறியபடி நாம் வைத்துக்கொண்டோம். இக் குறியும் பாஷைகள்தோறும் வேறு, ஆயினும் முதல் வடிவமாகிய சப்தம் ஒன்றே. இவ்வாறே கண்ணுக்கு இலக்காகாமல் தியானவடி வாகமட்டுமேயுள்ள கடவுளுக்கு அறிகுறியாக லிங்கம் முதலியவை கள் ஏற்பட்டிருக்கின்றன. இதுவே விக்கிரகங்களைப் பற்றிய ஹிந்துமத உபதேசம்.

(ii) இந்த உபதேசத்தில் அடங்கிய விசேஷ கருத்துக்கள் என்ன?

சொரூபத்தைப்பற்றிய ஹிந்துமத உபதேசத்தில் மூன்று விசேஷ கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

1. சொரூபமானது முதற்பொருளை நமது எண்ணத்துக்குக் கொண்டு வருகின்றது. உதாரணமாக லிங்கங்கள், கிளிமுகம் போல சுழித்தெழுதப்பட்ட அக்ஷரத்தைக் கண்டவுடன் அதற்குரிய ஒலிவடிவம் (சப்தரூபம்) நமது எண்ணத்துக்கு எவ்வாறு வருகின் றதோ, அவ்வாறே லிங்கத்தைக் கண்டவுடன் கடவுள் நமது எண்ணத் துக்குள் வருகின்றார்.

2. சொரூபமானது கடவுள் உலகச் சரித்திரத்தில் செய்த ஓர் அருஞ் செய்கையை நமக்குக் காட்டுகின்றது. நீலகண்டன்,

காலாரி, திரிபுரசங்காரன் முதலிய இருபத்தைந்து உருவத்திருமேனி கள் இதற்கு உதாரணம்.

'சிற்றுயிர்க் கிரங்கி
காய்கின ஆலமுண்டாய் அமுதுண்ணக் கடையவனே'

என்று மாணிக்கவாசகர் கூறியபடி, சிவன் மிக்க இரக்கங்கொண்டு பாற் கடலில் உண்டாகிய விஷத்தால் மற்றையோர் இறவாதபடி தாமே அக்கொடிய விஷத்தையுண்டு அவர்களை ரக்ஷித்தார். (A suffering god.) அப்படியே தமது பக்தனைக் கொல்ல வந்த யமனை உதைத்தார். பிற வடிவங்களும் இவ்வாறே. இப்படியாக இந்த உருவங்களைக் காணும்போது கடவுள் இவ்வுலகச்சரித்திரத்தில் செய்த அரும்பெரும் செய்கைகள் நமது ஞாபகத்துக்கு வருகிறது. இந்த இருபத்தைந்து உருவங்களில் ஒவ்வொன்றும் இவ்வாறே கடவுள் நடப்பித்த ஒவ்வோர் காரியத்தைக் காட்டுகின்றது.

3. சொரூபமானது கடவுளின் குணங்களைத் தனது அவய வத்தால் குறிக்கின்றது. விக்கிரகங்களைப்பற்றிய ஹிந்துமத உபதே சத்தில் இது விசேஷமானது.

'புனிதக் திருமேனி, முகம்திகழ் புன்னியம், கண்
கனிதக்கு பேரருள், அம்புயம் சர்வ சக்தி,
கனிதற்று மெய்ஞ்ஞானம் உயிர்ப்பு'

என்றபடி, விக்கிரகத்தினுடைய ஒவ்வொரு அவயவமும் கடவுளு டைய ஒவ்வோர் குணத்தைக் குறிக்கின்றது. உதாரணமாக அதன் கண்கள் கடவுளுடைய கிருபையைக் குறிக்கும், அதன் கைகள் கடவு ளுடைய ரக்ஷையையும் அடைக்கலத்தையும் குறிக்கும். சில ஹிந்து விக்கிரகங்களுடைய நிலை நாம் நோக்கத்தக்கது. அதனுடைய ஒரு கை பயப்படாதே என்று அபயங்கொடுக்கும் தன்மையாகவும், மற்றக் கை எதோ ஒன்று தருவது போலவும் இருக்கும். இவ்விரண்டு கரங்களுக்கும் முறையே அபயாஸ்தம், வராஸ்தம் என்று பெயர். மற்ற அவயவங்களும் இவ்வாறே.

(iii) இக்கருத்துக்கள் கிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேறுகின்றன?

ஹிந்து மார்க்கத்தில் வெகு சாதாரணமாக இருப்பதும், ஹிந்து தேவாலயங்களில் இன்றியமையாததாகக் கொண்டாடப்படுவது மான விக்கிரகங்களைப்பற்றிய உபதேசம் என்னவென்றும், அந்த உபதேசத்தில் அடங்கிய விசேஷ சத்தியங்கள் என்னவென்றும், நாம் பார்த்தோம். இவற்றை நாம் நன்றாய் ஆராய்ச்சிசெய்து

பார்க்கும்பொழுது, இம்மூன்று கருத்துக்களும் இயேசுகிறிஸ்துவுக்குள் நிறைவேறுகின்றது என்பதைக் காண்கிறோம். எவ்வாறெனில்,

1. இயேசுகிறிஸ்து கடவுளை நமது எண்ணத்துக்குள் கொண்டு வருகிறார். இயேசுகிறிஸ்துவைப்பற்றி நினைக்கும்பொழுதும் அவருடைய குணலக்ஷணங்களை தியானிக்கும்பொழுதும் கடவுளைப்பற்றி நாம் நினையாமலிருக்கமுடியாது. கிறிஸ்துவினுடைய மனமொழிமெய்களில் கடவுள் காணப்படுகிறார். 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்று அவர்தாமே கூறியிருக்கிறார். ஆகவே இயேசுகிறிஸ்து, கடவுளுடைய அச்சடையாளம்.

2. கடவுள் உலகச்சரித்திரத்தில் இயற்றிய ஓர் அரும்பெருஞ் செய்கையை இயேசுகிறிஸ்துவின் ஜீவியம் நமக்குக் காட்டுகின்றது. இந்தப் பெரிய செய்கை இயேசுகிறிஸ்துவின் திரு அவதாரமும் அந்த அவதாரத்தின் கிரீடமாகவுள்ள பிராயச்சித்தப் பிராணத்தியாகமுமே. உலகச்சரித்திரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நடத்தி வருகிறவர் கடவுளே. அவர் இயற்றிய சர்வ செயல்களிலும் மகாப் பெரியது இயேசுகிறிஸ்துவின் திருஅவதாரமே. இதுவே உலகச் சரித்திரத்தின் அதிவிசேஷ அம்சம். இச்சம்பவம் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தோடும் ஊழியத்தோடும் சம்பந்தமுடையது. இதன் மேன்மை லோகப்பிரசித்தமானது.

3. இயேசுகிறிஸ்துவில் கடவுளுடைய குணங்கள் வெளிப்படுகின்றன. கிறிஸ்துநாதர் முழுவதும் தெய்வீககுணம் நிறைந்தவர். அதரிசனமானவரும் மனுவாக்குக்கெட்டாதவருமான சர்வேஸ்வரனுடைய குணலக்ஷணங்கள் இயேசுகிறிஸ்துவில் பிரதிபிம்பமாகின்றன. தெய்வகுணங்களாகிய நன்மை, கிருபை, நீதக்கம், சாந்தம், பொறுமை முதலிய சாத்மீக குணங்கள் வேறெங்கும் இல்லாதவித மாய் இயேசுகிறிஸ்துவுக்குள் அமைந்து கிடக்கின்றன. சுடந்த 2000 வருஷங்களாக இக்குணங்கள் யாவும் பல்லாயிரம் மனுஷரால் ஆராய்ந்தறிந்து அனுபவிக்கப்பட்டவை. மேலும் இயேசுகிறிஸ்துவில் இந்த தெய்வகுணங்களை யல்லாமல் வேறு குணங்களை நாம் காண்கிறதில்லை. காம குரோத லோப மோக மத மாச்சரியம் என்று நமது நாட்டாரால் இகழப்படுகிற இந்தத் தீய குணங்கள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் சிறிதும் காணப்படவேயில்லை. இயேசுகிறிஸ்துவில் காணப்படுகின்றவை யெல்லாம் சிறந்த தெய்வகுணங்களே. இயேசுகிறிஸ்துவின் குணலக்ஷணங்களில் ஒவ்வொன்றும் கடவுளுடைய குணங்களே.

இப்படியாக சொரூபங்களைப்பற்றிய ஹிந்துமார்க்க போதனையில் காணப்படும் மூன்று விசேஷ சத்தியங்களும் இயேசுகிறிஸ்துவில்

நிறைவேறுகின்றன என்பதைப் பார்க்கிறோம். கடவுளை நமது எண்ணத்துக்குக் கொண்டுவருகிறவரும், சர்வேஸ்வரன் உலக ஈடேற்றத்தின்பொருட்டு இயற்றிய ஓர் அரும்பெருஞ்செய்கைக்கு அறிகுறியானவரும், நமது மனமொழிமெய்களாகிய கிரிகரணங்களிலும் தெய்வகுணங்களை வெளிப்படுத்துகிறவருமான தெய்வ விக்கிரகம் இயேசுகிறிஸ்துவே. கொலோசெயர் 1 : 15 இல் சொல்லப்பட்டபடி இயேசுகிறிஸ்துவே தேவனுடைய சுற் சொரூபம்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஹிருதய விக்கிரகம் என்ற ஓர் கருத்து உண்டு. ஒவ்வொரு மனுஷ ஆத்துமாவாலும் ஹிருதய விக்கிரகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஹிருதய கமலத்தில் வீற்றிருக்கச் செய்து, பூஜிக்கப்படத்தக்க சொரூபம் மேலே காட்டப்பட்ட சிறந்த தெய்வலக்ஷணங்களையுடைய சாக்ஷாத் இயேசுகிறிஸ்து நாதஸ்வாமியே யொழிய வேறொன்றும் இல்லை. இவர் ஒருவரே யாவராலும் பூஜிக்கப்படத்தக்க ஹிருதய விக்கிரகம்.

கிருஷ்ணபிள்ளை எழுதிய ராஜவிணிய யாத்திரீகத்தில் மிக அலங்காரமான ஒரு காட்சி உண்டு. பாதேசியாகிய கிறிஸ்தியானும் அவனுடைய தோழனுகிய நிதானியும் சர்வ கேடுகளுக்கும் அநியாயங்களுக்கும் பிறப்பிடமும் இருப்பிடமுமாகிய மாயாபுரிப்பட்டணத்துள் சென்றபோது, அந்நகரின் நிலையைக்கண்டு மனங்குன்றி, இந்திய பாக்கம் என்னும் பாகத்துக்குச் சென்று அங்கு நடக்கும் விக்கிரக ஆராதனையைக் கண்ணுற்று, அத்தேசே பட்டணத்தில் பவுல் ஆவியில் கலங்கினதுபோல கலங்கி அவர்களுக்கு நல்லுபதேசஞ்செய்து சர்வகுணசொரூபியாகிய இயேசுகிறிஸ்துவை ஹிருதய விக்கிரகமாக ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை நோக்கிப் பாடும் பாடல்கள் ஒன்றில் எம்பெருமானுடைய இவ்ய சொரூபலக்ஷணங்கள் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. அப்பாடலாவது :

அன்பு மயமாம் திருமேனி, அருளுக் குறைபுள் திருநயனம்,
இன்பு சரும்மெய்ச் சஞ்சீவி எழில்வாய் கனியும் திருவாக்கு,
மன்பூ உலகுக் ஈஞ்சென வழங்கும் அபய வரதாஸ்தம்,
சான்பேன் உமக்கு எம்பெருமான் தானேதான் தொழுமின் ஜெகத்தீரே.

(இதன் பொருள்)

'எம்பெருமானுடைய திருமேனி அன்புமயமானது' அவருடைய திருக்கண்கள் கிருபைக் குறைவிடம், அவரது அழகிய வாயினின்று வினிகின்ற அருமைத் திருவசனங்கள் சர்வத்திராளுக்கும் இன்

பத்தைத் தரக்கூடிய மெய்யான சஞ்சீவி. அபயாஸ்தம் வரதாஸ்த மாகிய அவருடைய இரண்டு கரங்களுமோ முறையே உலகத்தை அடைக்கலங்கொடுத்து, பக்தருக்கு ஈவன ஈந்து பாதுகாப்பவை. இப்படிப்பட்ட அருமையான தேவசொரூபம் உங்களால் ஹிருதய விக்கிரகமாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நிலைமையி லிருக்கும் பொழுது, உங்களுக்கு இனி என்ன கஷ்டமிருக்கிறது, எம்பெருமா னாகிய இவரையே உங்கள் ஹிருதய விக்கிரகமாக ஏற்றுக்கொண்டு இவருடைய திருவடிகளையே பூஜித்து வருவீர்களாக, உலகத்தீரே.'

தேவதற்சொரூபமாகிய இயேசுகிறிஸ்துநாத ஸ்வாமியே நம் அனைவராலும் நமது ஹிருதய விக்கிரகமாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவர்.


161979

C. L. S. PRESS, MADRAS—1919